

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்

2012–2013

சிறப்பு வெளியீடு எண். 46

தமிழரசு

இலவச வெளியீடு

மே 2015

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.



அறிமுகவுரை

“மக்களால் நான்
மக்களுக்காகவே நான்”

என்ற உன்னத இலட்சியத்துடன் தமிழக மக்கள் நலனுக்காகவே வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2011ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று 24.04.2012 முதல் 05.06.2013 வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டு **“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்”** என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில் கடந்த 2011ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற அரசு தற்போது நான்காண்டுகள் நிறைவடைவதையொட்டி, வெளியிடப்படும் இந்நூல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனைகளையும், அரிய கருத்துகளையும் பொதுமக்கள் அறிந்து பயன்பெற பெரிதும் உதவும்.

இந்நூலினை தொகுத்து வெளியிட்டுள்ள செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன் இஆப அவர்களையும், உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் பாராட்டுகிறேன்.

மூ. இராசாராம் இஆப
அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை



பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	திரைப்பட வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் அரசு (24.04.2012)	1
2.	கிராமங்களை சுகாதாரமயமாக்க அரசின் நிதியுதவி (26.04.2012)	3
3.	இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பவள விழா சிறப்பு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை (27.04.2012)	6
4.	ஓராண்டில் நூறாண்டு பேசும் சாதனைகளை படைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனைத்துக் கட்சித் தலைவர்களால் அளிக்கப்பட்ட வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் ஏற்று ஆற்றிய நன்றி உரை – (16.05.2012)	15
5.	திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் அருகில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்ற 1006 ஜோடி திருமணங்களை நடத்தி மணமக்களை வாழ்த்தி ஆற்றிய உரை – (18.06.2012)	25
6.	கோடநாடு காட்சிமுனை பேங்க் ஆப் இந்தியாவின் ஏ.டி.எம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஈளாடா கிளையினை திறந்து வைத்து ஆற்றிய உரை – (25.07.2012)	34
7.	தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திர தின உரை – (15.08.2012)	42

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
8.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் அரசு நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை – (13.09.2012)	52
9.	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களை வாழ்த்தி பாராட்டி ஆற்றிய உரை – (10.10.2012)	68
10.	காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் சீருடைப் பணியாளர்களுக்கான 'உங்கள் சொந்த இல்லம்' திட்ட வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – (26.10.2012)	75
11.	தமிழ்நாட்டின் மின்நிலைமை குறித்து தொலைக்காட்சியில் ஆற்றிய உரை – (26.10.2012)	84
12.	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களைப் பாராட்டி ஆற்றிய உரை – (29.10.2012)	92
13.	தமிழ்நாடு சட்டப்பேரவையில் தமிழ்நாட்டின் மின் நிலைமை குறித்து அளித்த விளக்கம் – (31.10.2012)	95
14.	சட்டமன்றப் பேரவையில் காவேரி நதிநீர் பங்கீடு குறித்துக் கொண்டு வரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை – (02.11.2012)	114
15.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி –(29.11.2012)	123

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
16.	ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை மற்றும் மாணவ, மாணவியருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை – (13.12.2012)	125
17.	மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட 343 அறிவிப்புகள் – (19.12.2012)	136
18.	நீலகிரி மாவட்டம், குந்தாவட்டம், எடக்காடு மட்டத்தில் நடைபெற்ற குந்தா தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலையின் பொன்விழாவில் ஆற்றிய உரை – (04.01.2013)	176
19.	நீலகிரி மாவட்டம், கோடநாடு கூட்டுறவு நியாய விலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்புப் பொங்கல் பரிசு தொகுப்புகளை வழங்கி ஆற்றிய உரை – (09.01.2013)	189
20.	தேனி மாவட்டம், லோயர் கேம்ப்பில் நடைபெற்ற விழாவில் கர்னல் ஜான் பென்னிகுயிக் நினைவு மணி மண்டபத்தை திறந்து வைத்து திருவள்ளுவர் திருநாள் விருதுகளை வழங்கி ஆற்றிய உரை – (15.01.2013)	193
21.	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை – (08.02.2013)	207
22.	சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி – (20.02.2013)	240
23.	சென்னை விவேகானந்தர் இல்லத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு விழாவினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை – (27.02.2013)	246

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
24.	காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து சாதனை படைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காவேரி பாசன விவசாயிகள் சார்பில் தஞ்சாவூரில் நடத்தப்பட்ட நன்றி தெரிவிக்கும் விழாவில் ஆற்றிய உரை – (09.03.2013)	256
25.	'கெயில்' திட்டம் தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் கொண்டுவரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அளித்த பதிலுரை – (25.03.2013)	275
26.	தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடித்து துன்புறுத்தப்படுவது தொடர்பாக சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு அளித்த பதிலுரை – (26.03.2013)	282
27.	இலங்கைத் தமிழர்கள் குறித்த பிரச்சினை மற்றும் இதன் தொடர்பாக மாணவ – மாணவியர் நடத்திவரும் போராட்டம் குறித்து சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பெற்ற சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்து அரசின் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை – (27.03.2013)	288
28.	விலைவாசி உயர்வு குறித்து சட்டமன்ற பேரவையில் கொண்டுவரப்பெற்ற சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்குப் பதில் அளித்து ஆற்றிய உரை – (02.04.2013)	299

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
29.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகாத்மா காந்தி அவர்களின் ஆதாரத்தை சுட்டிக்காட்டி தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆற்றிய உரை (02.04.2013)	309
30.	புதுடெல்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் மாநாட்டில் வாசிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரையின் தமிழாக்கம் (07.04.2013)	312
31.	தமிழக முன்னாள் முதலமைச்சர் மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை சென்னை உள்நாட்டு விமான முனையத்திற்கு சூட்ட வலியுறுத்தி இந்தியப் பேரரசை வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை (15.04.2013)	323
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 2013–2014ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கைகள் மீதான பதிலுரை (23.04.2013)	327
33.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் அவதூறு வழக்குகள் குறித்து ஆற்றிய பதிலுரை (23.04.2013)	378
34.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் ஆற்றிய பதிலுரை (23.04.2013)	382

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
35.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் ஆற்றிய பதிலுரை (23.04.2013)	384
36.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை குறித்து ஆற்றிய உரை (23.04.2013)	390
37.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாமல்லபுரம் சித்திரைத் திருவிழாவில் ஏற்பட்ட கலவரம் குறித்த சட்டமன்ற சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது ஆற்றிய பதிலுரை (29.04.2013)	392
38.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், கச்சத் தீவு ஒப்பந்தம் குறித்து அரசின் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை (03.05.2013)	409
39.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது ஆற்றிய பதிலுரை (13.05.2013)	418
40.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வட மாவட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்த சட்டமன்ற சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது ஆற்றிய பதிலுரை (13.05.2013)	423
41.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் ஈராண்டுச் சாதனைகளைப் பாராட்டி சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட வாழ்த்துகளுக்கு நன்றி கூறி ஆற்றிய ஏற்புரை (16.05.2013)	437

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
42.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைக் காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்து ஆற்றிய உரை. (29.05.2013)	451
43.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய விழாப் பேருரை. (03.06.2013)	455
44.	புதுடெல்லியில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டில் வாசிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரையின் தமிழாக்கம் (05.06.2013)	465

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் 24.04.2012 அன்று*
தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி
(Video Conferencing) மூலமாக தென்னிந்திய திரைப்பட வர்த்தக
சபையால் கட்டப்பட்டுள்ள சினிமா நூற்றாண்டு மாளிகையை
திறந்து வைத்து, மற்றொரு சினிமா நூற்றாண்டு மாளிகைக்கு
அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை





திரைப்பட வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் அரசு

அனைவருக்கும் வணக்கம்!

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையால் கட்டப்பட்டுள்ள சினிமா நூற்றாண்டு மாளிகையை, இந்திய திரைப்பட நூற்றாண்டு விழா தொடங்கும் வேளையில் திறந்து வைப்பதிலும், மற்றொரு சினிமா நூற்றாண்டு மாளிகைக்கு அடிக்கல் நாட்டுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்மை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களால் இந்த வர்த்தக சபையின் சொந்தக் கட்டடம் 15.6.1968 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இந்த வர்த்தக சபையின் திரையரங்குகளில் திரையிடப்பட்ட திரைப்படங்களை பார்த்து, அங்கே நடைபெற்ற விழாக்களில் பல்வேறு காலக் கட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பித்து உள்ளார்கள். நானும் இச்சபையில் நடைபெற்ற விழாக்களில் பங்கேற்று இருக்கின்றேன். குறிப்பாக, தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் பொன் விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட நிகழ்வுகளை நான் இன்றும் நினைத்து பெருமை கொள்கின்றேன்.

இச்சபை திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கும் மற்றும் இத்துறையைச் சார்ந்த அனைத்து பிரிவினரின் நலனுக்காகவும் பாடுபட்டு வரும் ஒரு சிறந்த அமைப்பாகும். இந்த தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை பல நூற்றாண்டுகளை கடந்து திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய அன்பர், இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட புதிய நூற்றாண்டு விழா மாளிகை கட்டப்பட்ட பின்னர், அதையும் நானே திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்தப் புதிய மாளிகை கட்டி முடிக்கப்பட்டதும், நானே நேரில் வந்து திறந்து வைக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் வீடியோ கான்பரன்சிங் மூலம் இந்தக் கட்டடத்தை திறந்து வைத்துள்ளேன். புதிய கட்டடத்தை திறந்து வைக்க நானே நேரில் வருகிறேன் என்பதை தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
26.04.2012 அன்று விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை*



கிராமங்களை சுகாதார மயமாக்க அரசின் நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தூய்மை என்பது உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றில் மட்டுமல்லாமல் மாசுமறுவற்ற காற்றும், தூய்மையான குடிநீரும் கிடைக்கும் வண்ணம் சுற்றுப்புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும். இந்த நிலையை அடைவதற்கான அடிப்படை தேவை நாட்டில் நல்ல சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்குவதே ஆகும்.

இந்த சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய தூய்மையான கிராம இயக்கம் என்ற ஒரு திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2003ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி, திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், மழைநீர் சேகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல், தனி நபர் இல்லங்கள் மற்றும் பள்ளிகளில் சுகாதார வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திறந்த வெளி மலம் கழித்தலை அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்தின் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாயின. ஆனால், பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக, இந்தத் திட்டம் 2006–2007ஆம் ஆண்டு முதல் தி.மு.க. அரசால் செயல்படுத்தப்படவில்லை.

நான் மீண்டும் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற திட்டத்தை மீண்டும் செயல்படுத்துமாறு நான் உத்தரவிட்டேன்.

மேலும், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மகளிர் பொது சுகாதார வளாகங்கள், 2006ஆம் ஆண்டுக்கு பின்னர் சரிவர பராமரிக்கப்படாததால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்ததை கருத்தில் கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 170 கோடி ரூபாய் செலவில், 12,793 மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைக்கப்பட்டன.

தற்போது இந்த மகளிர் வளாகங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.


சுகாதார கிராமங்களை உருவாக்கும் வண்ணம், ''முழு சுகாதாரத் திட்டத்தின்'' கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. தற்போது ஒரு இல்லத்திற்கான தனி நபர் கழிவறை கட்டும் பொருட்டு, மத்திய அரசின் சார்பில் 2,200 ரூபாயும், மாநில அரசின் சார்பில் 1,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதில் பயனாளியின் பங்குத் தொகை 300 ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 3,500 ரூபாய் செலவில் தனி நபர் இல்லக் கழிவறை கட்டப்படுகிறது.

தற்போது, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள 3,500 ரூபாய் என்பது போதுமானதாக இல்லையென்றும், இந்தத் தொகையை வைத்து, தனி நபர் இல்லக் கழிப்பறையை முழுமையாக அமைத்திட இயலாது என்றும், இந்தத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், சுகாதார கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், ஒவ்வொரு தனி நபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, மாநில அரசின் பங்கு 2,500 ரூபாய் எனவும், மத்திய அரசின் பங்கு 2,200 ரூபாய் எனவும், பயனாளியின் பங்கு 300 ரூபாய் எனவும் இருக்கும். இதன்படி, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தொகை 5,000 ரூபாய் என உயர்த்தப்படுகிறது. எனது அரசின் இந்த நடவடிக்கையின் மூலம், தமிழ்நாடு முழுவதும் சுகாதார கிராமங்கள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்,*
இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின்
பவள விழா சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு
ஆற்றிய உரை (27.04.2012)



தமிழ்நாடு பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டில் புதிய சகாப்தத்தை வங்கிகள் படைக்கும்!

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் 75ஆம் ஆண்டு விழாவில் நான் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டு டிசம்பர் திங்களில் நரேந்திரன் என்னை வந்து சந்தித்தபோது, தமிழ்நாட்டில் இந்த வங்கி 854 கிளை அலுவலகங்களைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். நரேந்திரனும் அவருடைய குழுவும் இணைந்து, தமிழ்நாட்டில் அவர்களுடைய 1,000–ஆவது கிளை அலுவலகத்தைத் திறப்பதற்குரிய அறைகூவலை ஏற்குமாறு நான் தெரிவித்தேன். நான் எதிர்பார்த்தவாறு இக்குறுகிய கால அவகாசத்தில் (6 மாதங்களுக்கும் குறைவான கால அவகாசத்தில்)

அவர்கள், இம்மாநிலத்தில் புதிதாக 150 கிளை அலுவலகங்களைத் திறந்திருக்கின்றனர். பாராட்டத்தக்க இத்தகைய சாதனைக்கு, நரேந்திராவுக்கும், அவருடைய குழுவிற்கும் என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தமிழர்கள் உள்நாட்டில் சேமிக்கும் பாரம்பரிய வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டு வணிகத்தில் விரிவாக ஈடுபடுகின்ற தொன்மைக்கால தமிழ்நாட்டு வணிக சமுதாயம், கடன் வழங்குதல், வட்டி வீதங்களை நிர்ணயித்தல் மற்றும் தொகை செலுத்தும் அடிப்படை ஏற்பாட்டு முறை போன்ற வங்கிச் செயல்பாடுகளை நன்கறிவார்கள். உள்நாட்டு வங்கி சேமிப்பு நடைமுறையைக் கொண்டுள்ள இந்தப் பாரம்பரிய முறையின் அடிப்படையில்தான், வரலாற்றில் ஓர் இடர்ப்பாடான கால கட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி 1937ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1930ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த பெரும் பின்னடைவுகளின் காரணமாக, இன்றியமையாப் பொருட்களின் விலை கணிசமான அளவிற்கு அதிகரித்து, அக்காலகட்டத்தில், இந்தியாவின் முக்கியமான ஏற்றுமதி தொழில் வெகுவாகக் குறைந்தது. இதன் தொடர்ச்சியாக, இந்தியாவின் தங்க சேமிப்பும் ஒட்டு மொத்தமாகக் கரையத் தொடங்கியது. பணியிருப்பின் நிலைத் தன்மையைப் பாதுகாப்பதற்கும், நாட்டின் நாணய மற்றும் வரவுக் கணக்கு ஏற்பாட்டு முறைகளைச் சீராக இருக்கச் செய்யவும், 1935ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்திய ரிசர்வ் வங்கி அமைக்கப்பட்டது. அமைப்பு ரீதியான வங்கி நிறுவப்பட்ட இக்கால அளவில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிதான் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட வங்கியாகும்.

உலக அளவில் சேவை புரியும் உன்னத வங்கி

மறைந்த எம்.சி.டி.எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தன்னுடைய 30–ஆவது வயதில் இதற்கான முயற்சியை எடுத்தவர் ஆவார். இத்தருணத்தில், அன்னாருடைய பெருமையை நினைவு கூறுவது சாலச் சிறந்ததாகும். அவரால் இவ்வாறு ஓர் சிறு வங்கியாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்த வங்கி, தற்போது உலக அளவில் நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பல்லாயிரம் இலட்ச இந்தியர்களுக்குச் சேவை புரியும் ஓர் உன்னத வங்கியாக வளர்ந்துள்ளது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எனக்கு அந்நியமானதல்ல. தேசிய மயமாக்கலுக்கு முன்னரும், பின்னரும் அது வளர்ந்து வருவதை நான் பார்க்கிறேன். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தமிழ்நாட்டில் பெருமளவிலான வங்கிக் கிளைகள் வாயிலாக அதனுடைய முதன்மை இடத்தையும், பத்து பெரிய மாவட்டங்களில் தலைமைப் பொறுப்பையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. தொலைதூர கிராமங்கள், மகளிர் குழுக்கள், சுயஉதவிக் குழுக்கள் நமது மாநிலத்திலுள்ள பழங்குடியினர் ஆகியோரை அணுகுவதற்கான வங்கி நடவடிக்கையிலும் இந்த வங்கி முன்னிலை வகிப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீலகிரியிலுள்ள பழங்குடியினரை, வங்கியில் கணக்கு வைப்பவராகச் சேர்ப்பதில் (வாடிக்கையாளர்) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேற்கொண்ட முயற்சிகளுக்காக இரண்டு தேசிய அளவிலான விருதுகளை ஏற்கெனவே பெற்றிருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் நிதி ஏற்பாட்டை விரிவுபடுத்தலாம்

2008ஆம் ஆண்டில் உலகளாவிய மந்தநிலை ஏற்பட்டபோது தொடங்கப்பட்ட வங்கி, மக்களைக் கவருகிற சில்லறை வங்கி நடவடிக்கை வாயிலாக மீண்டெழுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. நிலையாகவும், பாதுகாப்பாகவும் இருக்கக்கூடிய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி போன்ற ஒரு வங்கி சுறுசுறுப்பாகவும், புத்தாக்க முறையிலும் செயல்பட்டு, தமிழ்நாட்டில் அதனுடைய நிதி ஏற்பாட்டு முறையில் அதனுடைய வள வாய்ப்புகளை உண்மையிலேயே விரிவுபடுத்தப்படலாம்.

நிதி பொருளாதாரத்தின் இரத்த ஓட்டமாகவும் பொருளாதார வளர்ச்சி உள்ளடக்கிய நீடித்த தன்மையை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது.நிதிசேவைகளை எண்ணற்றகுடும்பங்கள்பயன்படுத்துவது அதிகரிப்பதற்கான முக்கியத் தேவையாகவும் நிதி பயன்படுகிறது. சேமிப்புத் தொகைகள், வைப்பீட்டுத் தொகைகள், கடன் கொடுத்தல் ஆகிய வழிகளில் வங்கி சேவை புரிகிறது. நிதி சேவைகளையும், வங்கிச் சேவைகளையும் பெரும்பாலான மக்கள் அதிக அளவில் பயன்படுத்துவதால் பொதுப் பயன்பாட்டுச் சேவையின் தன்மை அதிகரித்துள்ளதுடன் மின்சாரம், குடிநீர் வழங்குதல் அல்லது தொலைபேசிகள் ஆகியவற்றிலிருந்து பல்வேறு வகையிலும் மாறுபட்டதல்ல. பொருளாதார வளர்ச்சியிலிருந்து வள வாய்ப்புகள்

ஏற்படுவதுடன் அவற்றிற்கு சேமிப்பு முக்கியமானதாகவும், வங்கிகளில் செய்யப்படுகின்ற ஆக்கப்பூர்வமான முதலீடுகளில் உறுதியளிக்கப்படுகிறது. ஆக்கப்பூர்வமல்லாத பொறுப்புகளில் முதலீடு செய்யக் கூடாது. இந்தியாவில் தற்போது குடும்பத்திற்கான சேமிப்புகளில் 50 சதவீதம் நிதி பொறுப்புகளிலேயே முதலீடு செய்யப்படுகிறது. எஞ்சியுள்ளவை திட்டப் பொறுப்புகளாக அமைந்துள்ளன. வீட்டு உபயோகத்திற்கான நிதி சேமிப்புகளில் 42 சதவீதம் வணிக வங்கிகளில் வைப்பீடு செய்யப்படுகின்றன என்றும் 61 சதவீதம் சேமிப்புக் கணக்குகளில் வைப்பீடு செய்யப்படுகிறது என்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் 2010–2011ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வணிக வங்கிகளின் சேவைகள் நிதி சேமிப்பில் அதிகரித்துள்ளதை முக்கியமாகக் குறிப்பிடலாம். நிதி சேவை பரவலாக்கப்படுவது சேமிப்பு திட்டத் தேர்வுக்காக அன்று. சேமிப்பு கட்டாயத்தின் பேரிலேயே செய்யப்படுகிறது. வங்கிச் சேவையை பயன்படுத்தாத உரிய வயதடைந்தோர் உலகில் 2.5 பில்லியன் மக்களில் இந்தியாவில் 395 மில்லியன் அல்லது அதில் 6இல் ஒரு பகுதியினர் ஆவர்.

முன்னேற்றத்திற்கான அறைகூவல்

அனைத்து நாடுகளைப் பொறுத்தவரையில், மக்கள் தொகை அதிகமுள்ள நாடுகள் முறைப்படியான நிதி ஏற்பாட்டிலிருந்து விலகியிருப்பதால் வறுமை வீதம் அதிகரித்ததுடன் பெருமளவிற்கு சமமின்மையும் காணப்படுகிறது. இதற்கு முக்கியமாக, வேலை வாய்ப்பில் நீடித்த வளர்ச்சி ஏற்படுத்துவது அவசியமாகும். அதனுடன் சுயவேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்வதும் வறுமையைக் குறைப்பதற்கு வழி வகுக்கும். 9.9 சதவீதக் குடும்பங்கள் கடன் கணக்குகளிலேயே வாழுகின்றன. இத்தகைய கடன் தொடர்புகளைப் பெருமளவில் உருவாக்குவது அவசியமாகும். இந்தியாவில் உள்ள மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 33 சதவீதத்தினர் தனியார் கடன் வசதிகளைப் பெறுவது முன்னேறிய பல்வேறு நாடுகளைவிட மிகவும் தாழ்வான நிலையில் உள்ளது. இது 100 சதவீதத்தை விட மிகையானது ஆகும். வங்கி ஏற்பாட்டு முறைகள் இதற்குப் பெருமளவிலான வாய்ப்பைத் தருவதுடன், முன்னேற்றத்திற்கான அறைகூவலாகவும் அமைந்துள்ளது.

'நபார்டு' வங்கியின் ஆய்விற்கிணங்க, நிதி நிலையில் பன்மாநிலங்களை ஒப்பீடு செய்ததில், நிதிக்குறியீட்டு நிலையில் தமிழ்நாடு7–ஆவதுநிலையிலுள்ளது.இத்தகையசூழ்நிலையையைப் பொறுத்தவரையில், பொருளாதார உறுதிப்பாடோ அல்லது உத்தரவாதமோ அளிக்கப்படாமல் உறுதியான நெகிழ்வுத் தன்மைக்கேற்ப நிதி ஏற்பாட்டு முறையே அடிப்படையாக உள்ளது. இது வருமானம் பெருக்கும் திட்டங்களை உறுதிப்படுத்தக்கூடும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்குவது எனது கனவாகும். தமிழ்நாட்டை நிதி நிலையிலும் முதல் நிலை மாநிலமாக உயர்த்துயவதற்கதன இரட்டை முயற்சிகளைத் தற்போது அனைத்து வங்கிகளும் எடுக்கும்படி வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நுட்ப உத்திகள் பயன்பாட்டின் மூலமாக வங்கிச் சேவைகள் விரிவடைந்துள்ளன. இந்தியாவில் செல்லிடத் தொலைபேசிகள் மூலமாக பெருமளவிற்கு வங்கிச் சேவைகள், நடைபெறுவதுடன் ஏ.டி.எம். (ATM) சேவைகளும் பெருமளவில் மக்களைச் சென்றடைந்துள்ளன. வங்கித் தொடர்பான பணிகள் நிதி ஏற்பாட்டு முறைகள் முன்னேற்றமடைந்து விரிவாக்கப்பட்ட நிலையையே காட்டுகிறது. தமிழ்நாட்டிலுள்ள வங்கிகள் தொழில் நுட்பத்தை எளிதாக்குவதுடன் அதன் சேவைகள் பெரும்பாலான மக்களைச் சென்றடைய வேண்டுமென்று நான் விழைகிறேன்.

நிதித் தேவைகளின் தீர்மானமான பரிமாணம் தொகை செலுத்தும் செயற்பாடுகளில் வங்கிகளின் பங்காற்றுதலை அரசு மிகவும் வரவேற்கிறது.

ஒருவருக்கொருவர் உதவுகின்ற நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்

வங்கிகள் அரசின் சார்பில், நீண்ட காலமாக வரிகளை வசூலித்து வந்துள்ளன. தற்போது நாங்கள், வங்கிகள் வாயிலாகத் தொகையை வழங்கத் தொடங்கியுள்ளோம். அனைத்து சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களும் வங்கிகள் வாயிலாக வழங்கப்படுவதை, தமிழ்நாடு அரசு உறுதி செய்ய விழைகிறது.



இதற்கான இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. ஆனால், தொகை பெறுகிற அனைவரையும் பயனடையச் செய்வதற்கு விரைவில் நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அதைப் போன்றே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் ஊதியம் வழங்குவதும் வங்கி வாயிலாகவே நடைபெற வேண்டும். தமிழ்நாட்டில் பெருமளவில் ஓய்வூதியம், ஊதியம், படிப்புதவித் தொகை வழங்கப்படுவதால், வங்கிகளுக்குப் பெருமளவில் வணிக வாய்ப்புகள் கிடைக்கின்றன. எனவே, நாம் ஒருவருக்கொருவர் உதவுவதன் வாயிலாக முன்னேறுகிற வகையில் வங்கிகளும், அரசும் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் உதவுகிற நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று நான் கருத்து தெரிவிக்க விழைகிறேன். இடர்ப்பாடு எவையுமின்றி, அரசின் முக்கியமான சேவைகளை, சிந்தாமல், சிதறாமல் வழங்குகிற போது, வங்கிகளின் வணிக நடவடிக்கை விரிவடைகிறது.

2012–2013ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட உரையில், மாநில அரசு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை ஏற்பாட்டு முறை தொடங்கப்படவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏற்பாட்டு முறை செயலுக்கு வரத் தொடங்கியவுடன், அரசின் வரவு மற்றும் தொகை வழங்கல் ஏற்பாட்டு

முறையில் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் முயற்சி உட்பட வங்கிகள் வாயிலாக நடைபெறும் அரசின் அலுவல், முற்றிலுமாகத் தானியங்கி மயமாக்கப்படும்.

மாநில அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும்

கொடுக்கல் – வாங்கல் தொடர்பான வணிக நடவடிக்கைகளில் வசதியான முறையையும் வாடிக்கையாளர்களின் மனநிறைவையும் உறுதி செய்ய ஏதுவாக அரசு மற்றும் வங்கிகளின் மின்னணு ஏற்பாடு முறை ஒருங்கிணைக்கப்படும். இந்த ஏற்பாட்டு முறையைச் செயல்படுத்துவதில் வங்கிகள், மாநில அரசுடன் முழுவதுமாக ஒத்துழைக்க வேண்டும் என்று நான் வங்கிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் சமூகப் பொருளாதார மாற்றத்தின் முகவர்களாக உருவாகியுள்ள சுயஉதவிக் குழுக்களை அமைப்பதில் தமிழ்நாடு, ஏற்கெனவே சிறந்த அடித்தளத்தைப் பெற்றுள்ளது. இந்த இயக்கத்தை நாங்கள் விரைவுபடுத்த வேண்டும். வறுமை தணிப்புத் திட்ட உத்தியில், தமிழ்நாடு, ஏற்கெனவே முன்னணியில் உள்ளது. 2012–2013ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்பகுதி வாழ்வாதாரத் திட்டத்தைத் தொடங்குவதன் வாயிலாக நகர்ப் பகுதிகளையும் இந்த இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாங்கள் விரிவுபடுத்தியுள்ளோம்.

வேளாண் கடன் உயர்த்தப்பட வேண்டும்

எனது அரசு எப்போதுமே வேளாண்துறைக்கு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு அடிகோலுவதென நான் உறுதி எடுத்துள்ளேன். உற்பத்தியை உயர்த்தும் முதலீடுகள் வேளாண்துறைக்கு மிகவும் முக்கியம். வேளாண்துறைக்கு தடைபடாது நிதியுதவி தொடர்ந்தளிக்கப்பட்டு வருவதை வங்கிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என நான் வங்கிகளை வலியுறுத்துகிறேன். வேளாண்துறைக்கு ரூ.48,584/– கோடி என இலக்கிடப்பட்ட கடனுதவி ரூ.17,010/– கோடி தொகைக்கான குறித்த காலக் கடன் 2011–2012ஆம் ஆண்டின் இலக்கானரூ.31,017/–கோடி மற்றும் ரூ.7518/– கோடி

தொகைக்கான குறித்த காலக் கடன் ஆகியவற்றை விடக் கணிசமாக உயர்ந்துள்ளது. 2011–2012ஆம் ஆண்டுக்கான இலக்குகளும் மீறப்படும். இதற்கேற்றபடி 2012–2013ஆம் ஆண்டுகளில் வேளாண்துறைக்கான குறித்த காலக் கடன் உயர்த்தப்பட வேண்டுமென நான் வங்கிகளை வலியுறுத்துவேன்.

தமிழ்நாடு பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டில் ஒரு புதியச் சகாப்தத்தை படைக்க தொடங்கியுள்ளது. ஆனால், இது தானாக நிறைவேறாது. இது குறித்துக் கனவு காண வேண்டும். பெரிய அளவில் சிந்திக்க வேண்டும். சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள 2023 தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தில் நாம் எதிர்நோக்கியுள்ள வருங்காலத்தில் ஒரு வளர்ச்சியுடைய மற்றும் திறனான உள்ளமைப்பு கொண்ட சமுதாயம் தமிழ்நாட்டில் படைக்கப்படும் என எதிர்நோக்கியுள்ளேன்.

2023 தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் பேரார்வமுள்ள ஆனால், சாதிக்க முடியும் அளவிலான இலக்குகளை நம் முன் வைத்தது. எதிர் நோக்கப்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்புகளை சரியான விதத்தில் அமைப்பதுதான் முக்கிய சவாலாக உள்ளது. தொலைநோக்கு ஆவணங்கள் கட்டமைப்புக்கான தேவையென இனங் கண்டுள்ளது. அடுத்த 11 ஆண்டுகளில் அதற்கென ரூ.151 இலட்சம் கோடி தொகை தேவையென சுட்டிக் காட்டியுள்ளது.

தொலைநோக்குத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததற்குப் பாராட்டு

இந்தத் தனியார் துறையானது, எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டிற்கு மிவும் கணிசமான அளவிற்கு பங்களிப்பு செய்யும் என்பதே இத்திட்டத்தின் ஊகமாகும். இத்தருணத்தில், அத்தகைய முதலீட்டை திறம்பட திரட்டி நெறிப்படுத்துவதற்கு வங்கி அணிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன் முதலில் செயல்படுத்துவதற்கு அதன் ஆதரவை தெரிவித்ததற்கு நான் பாராட்டு தெரிவிக்கிறேன். இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை

மெய்ப்பிப்பதற்கு, இத்தகைய மதிப்பு வாய்ந்த பங்குதாரர்களின் ஒத்துழைப்பு முக்கியமானதாகும். முதலீட்டிற்கு நிதியளிப்பதில், குறிப்பாக மாநிலத்தின் கட்டமைப்பு திட்டப் பணிகளுக்கு போதுமான வகையில் விரைவாகவும், முனைப்பாகவும், சாதகமான வகையிலும் வங்கிகள் பங்காற்ற வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

அரசுடன் இணைந்து பங்காற்ற வேண்டும்

எனது அரசு, மோட்டார் வண்டிகள், மோட்டார் உதிரிபாகங்கள், உயிரி தொழில்நுட்பம், விண்வெளி மற்றும் சூரிய மின்சக்தி உற்பத்திக்கான தனிப்பட்ட கவனத்துடன் கூடிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு தொழிற்சாலைகளுக்கான தொழிலக – திட்டவட்டமான கொள்கைகளுக்கு தற்போது, இறுதி வடிவம் அளித்து வருகிறது. நாங்கள், தயாரிப்புத் துறையில் 14ரூ வளர்ச்சியை அடைவோம் என நம்புகிறோம். புதிய தொழிலக கொள்கையின் இலக்குகளை எய்துவதற்கு அரசுடன் ஒன்றிணைந்து பங்காற்றுமாறு வங்கிகளிடம் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையிலும் மாநிலம், வரலாற்றுப் பின்னணி கொண்ட அனுகூலங்களை பெற்றுள்ளது. ஆனால், பின்னர், இந்த முக்கியத் துறையின் வளர்ச்சி சரிவடைந்தது. இந்த அரசு, உருவாகி வருகின்ற தொழில் முனைவோருக்கு பயிற்சியளித்து, அவர்களின் புதிய முயற்சிகளை வெளிக் கொணர்வதன் வாயிலாக, அவர்களை தக்க வைத்து, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக, 2012–2013ஆம் ஆண்டிலிருந்து புதிய தொழில் முனைவோர் தொழில் நிறுவனம் மேம்பாட்டு திட்டத்தை (NEEDS) தொடங்குவதற்கு முடிவு செய்துள்ளது. இம்முயற்சி வெற்றியடைவதற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் ஏனைய வங்கிகளின் ஆதரவினை நான் நாடுகிறேன்.

* * *



*ஓராண்டில் நூறாண்டு பேசும் சாதனைகளை படைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனைத்துக் கட்சித் தலைவர்களால் அளிக்கப்பட்ட வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் ஏற்று ஆற்றிய நன்றி உரை – **(16.05.2012)***

ஓராண்டுச் சாதனைகள்...
இன்னும் பல சாதனைகளை
எட்டுவதற்கான அடித்தளம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியுடனும், தமிழக மக்களின் ஒருமித்த ஆதரவுடனும் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தனது முதலாவது ஆண்டிலேயே மக்கள் மன நிறைவு அடையும் வகையில், மன நிம்மதி அடையும் வகையில், மகிழ்ச்சி அடையும் வகையில், மகத்தான சாதனைகளைப் புரிந்து, இரண்டாம் ஆண்டில் இன்று அடியெடுத்து வைக்கிறது. ஒற்றை வரியிலே சொல்ல வேண்டுமென்றால், "கொடுங்கோன்மை" அகன்று "செங்கோன்மை" நிலை நாட்டப்பட்டு இருக்கிறது. இதனையொட்டி, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் இங்கே என்னை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினார்கள்.

இந்த மாமன்றத்திலே, இந்த அரசின் சாதனைகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கியவர் களுக்கும், அதைக் கேட்டு ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி என்றால் அரசின் செயல்பாடுகளைப் பாராட்டுவது மட்டுமல்லாமல், குறைகள் என தாங்கள் கருதுவதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில்பேசியவர்களுக்கும்,எதிர்க்கட்சிஎன்றால்அரசைப் பாராட்டவே கூடாது என்ற கொள்கை கொண்டவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு தனது 100ஆவது நாளை நிறைவு செய்தபோது, இங்கே பேசிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் முழு

மனதோடு அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி இந்த மன்றத்திலே பேசினார்கள். அப்பொழுதே நான் என் உள்ளம் திறந்து சில கருத்துகளை எடுத்துக் கூறினேன். இந்த அரசின் செயல்பாடுகள் தொடர்ந்து அனைவரும் பாராட்டும்படி அமைய வேண்டுமே என்ற எனது உணர்வினை வெளிப்படுத்தினேன். அவ்வாறு எல்லோரும் பாராட்டும்படியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுப்பது மிகப் பெரிய சவால் என்ற என் கருத்தையும் அப்போது தெரிவித்தேன். அந்தச் சவாலை இன்று வரை செம்மையாக சமாளித்து வந்துள்ளேன் என்பதையும், அதற்கேற்றாற்போல், இந்த அரசின் செயல்பாடுகள் அமைந்துள்ளன என்பதையும் உங்களின் பேச்சுக்களில் இருந்து நான் தெரிந்து கொண்டேன்.

ஜனநாயகம் என்பது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இரண்டும் சேர்ந்ததுதான். எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகத்தை நிலை நிறுத்த முடியாது என்பதுதான் எனது திடமான எண்ணமாகும். எந்த ஒரு பிரச்சினையிலும் பல்வேறு வகையான கருத்துகள் வெளிப்பட்டால் தான், அந்தக் கருத்துகளை சீர்தூக்கிப் பார்த்து பெரும்பான்மையோருக்கு பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க இயலும். இதைத் தான்,

John Stuart Mill, “The only way in which a human being can make some approach to knowing the whole of a subject, is by hearing what can be said about it by persons of every variety of opinion, and studying all modes in which it can be looked at by every character of mind” என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு மாறுபட்ட சிந்தனைகளை செவிமடுத்து, ஒரே பொருள் பற்றிய வேறு வேறு கருத்துகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் தான் பெரும்பான்மையான மக்களுக்கு நன்மை செய்ய இயலும். அப்பொழுதுதான், “It is the greatest good to the greatest number of people which is the measure of right and wrong” என்று Jeremy Bentham அவர்கள் கூறியது

போல், மிக அதிகமானவர்களுக்கு, மிக அதிகமான நன்மையை செய்யக்கூடிய ஜனநாயகம் தழைத்தோங்க இயலும்.

எதிர்க்கட்சி என்றால் அரசின் கொள்கைகளை, திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி என்ற பொருள் இல்லை. அரசுத் திட்டங்களின் நிறை குறைகளை எடுத்துச் சொல்லி, குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவது தான் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும்.

"ஆளுங்கட்சி கொதிக்கிற சோறு என்றால், எதிர்க்கட்சி பதம் பார்க்கிற அகப்பை" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவார்கள். அகப்பை இல்லாமல், சோற்றை கையை வைத்துப் பதம் பார்க்க முடியாது என்பது உண்மை தான். சோற்றைப் பதம் பார்க்க அகப்பை பயன்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப் படையில், ஆக்கப்பூர்வமான கருத்துகளை, ஆலோசனைகளை, அறிவுரைகளை எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும்போது, அதனை இந்த அரசு கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உள்துறை மானியக் கோரிக்கையின்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள Canteen வசதியை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் நீட்டித்துத் தர வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று, அதற்கான அறிவிப்பை அன்றே நான் வெளியிட்டேன்.

மேலும், காவலர்கள் ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு சொந்த வீடு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததை ஏற்று, அரசு அதற்கான ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்தும் என்று அன்றே அறிவித்தேன். அதன்படி, காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் சீருடைப் பணியாளர்களுக்கு 'உங்கள்

சொந்த இல்லம்' திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் நான் வெளியிட்டேன்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு சவுந்தரராசன், இந்தத் திட்டம் சிறைத் துறைக் காவலர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததின் பேரில், அந்தக் கோரிக்கையும் உடனடியாக என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதே போன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கையினை ஏற்று, சிறைத் துறையில் பணிபுரிபவர்களுக்கும் Canteen வசதியை விரிவுபடுத்தி அறிவித்தேன்.

உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்தினை ஏற்று, அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை இந்தப் பேரவையில் நான் வெளியிட்டேன்.

போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் போது, ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு ஓய்வுகாலப் பயன்கள் காலத்தே வழங்கப்படுவதில்லை என்றும், அதை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் கோரிக்கை விடுத்தார்கள்.

இதே போன்று, போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் மற்றும்

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் சுட்டிக்காட்டினார்கள்.

இவற்றை ஆராய்ந்து, 2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை வழங்குவதற்கும், காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குமான அறிவிப்பினை இந்தப் பேரவையில் நான் அறிவித்தேன்.

இவ்வாறு, எதிர்க்கட்சியினர் எடுத்துக் கூறும் ஆக்கப்பூர்வமான கருத்துகளுக்கு உரிய மதிப்பளித்து அவற்றை செயல்படுத்தும் அரசாக எனது தலைமையிலான அரசு விளங்கி வருகிறது.

இவ்வாறு எதிர்க்கட்சிகள் சோற்றை பதம் பார்க்கிற அகப்பையாக விளங்க வேண்டும். ஆனால், சோற்றை பதம் பார்க்கிறேன் என்று கூறி பானையை உடைக்கும் பணியில் அகப்பை ஈடுபடுமானால், அகப்பையைப் பதம் பார்க்க வேண்டிய நிலைமை தான் ஏற்படும் என்பதை பணிவன்புடன் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எவரெஸ்ட் சிகரத்தின் மீது முதன் முதலாக ஏறி சாதனை படைத்தவர்கள் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி (Edmund Hillary) மற்றும் நேபாள நாட்டைச் சேர்ந்த டென்சிங் நார்கே (Tenzing Norgay) ஆகியோர் ஆவர்.

இதே நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த மற்றொரு மலை ஏறும் வீரர் மார்க் இங்லிஸ் (Mark Inglis) நியூசிலாந்தில் உள்ள குக் (Cook) என்ற சிகரம் மீது ஏறிக் கொண்டு இருந்தார். அப்போது, தட்பவெட்ப நிலை மாறுதல் காரணமாக, மார்க் இங்லிஸ் ஏறிக்கொண்டிருந்த பகுதி பனியால் உறைந்துவிட்டது. இதன் காரணமாக அவர் மலையில் இருந்த ஒரு குகையில் தங்கும் நிலை ஏற்பட்டது. பின்னர் அவர் மீட்கப்பட்டாலும், இங்லிஸின் இரண்டு கால்களும் முழங்காலுக்குக் கீழே துண்டாகிவிட்டன. மலையேறும் வீரருக்குக் கால்கள் தான் முக்கியமானது.

இருந்தாலும், இங்லிஸ் மனம் தளரவில்லை. செயற்கைக் கால்களை பொருத்திக் கொண்டு மீண்டும் பயிற்சியில் ஈடுபட்டார். உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைய வேண்டும் என்று திட்டமிட்டார். அதன்படி, தீவிரப் பயிற்சிக்குப் பிறகு எவரெஸ்ட் சிகரத்தின்மீது ஏறிக்கொண்டிருந்த போது, 6,400 மீட்டர் உயரத்தில் இங்லிஸ்க்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அவர் அணிந்திருந்த இரண்டு செயற்கை கால்களில் ஒன்று சேதமடைந்தது. இருப்பினும், கைவசம் தயாராக வைத்திருந்த செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு தொடர்ந்து சிகரம் ஏறி, தான் நினைத்த சாதனையை எய்தினார் இங்லிஸ். இரண்டு கால்களையும் இழந்த ஒருவர் நடக்க நினைப்பதே அரிதான ஒன்று. ஆனால், தன் விடா முயற்சியாலும், பயிற்சியாலும் இந்த சாதனையை இங்லிஸ் படைத்தார்.

இங்லிஸ் எப்படி பல்வேறு தடைகளைத் தகர்த்தெறிந்து சாதனைப் படைத்தாரோ, அது போல் தான் இந்த அரசு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் விட்டுச் செல்லப்பட்ட கடன்கள், நிருவாகச் சீர்கேடு, நிதிச் சீர்கேடு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிதாபகரமான நிலைமை, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அவல நிலைமை, ஆவின் நிறுவனத்தின் அலங்கோல நிலைமை, மத்திய அரசின் பாராமுகம் என பல்வேறு சவால்களையும், சோதனைகளையும் எதிர்கொண்டு, தடைக் கற்களைப் படிக்கற்களாக்கி, முள் பாதையை மலர்ப் பாதையாக்கி மிகக் குறுகிய காலத்தில், அதாவது இந்த ஓராண்டிலேயே மகத்தான சாதனைகளைப் படைத்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடுகின்ற நதியில், பாய்கின்ற ஆற்றில் ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கும். அதற்குப் பெயர் தான் கரண்ட். அந்த ஆற்றில், நதியில் நீந்த வேண்டும் என்று நினைப்பவர் அந்த நீர் ஓடுகின்ற பாதையிலேயே, அந்த ஈர்ப்பு சக்தி, கரண்ட் பாய்கின்ற திசையிலேயே நீந்திச் சென்றால் நீந்துவது என்பது மிகவும் எளிதான காரியம். அவர் எந்த சிரமும்பட வேண்டிய அவசியம் இல்லை. அந்த கரண்டே அவரை ஈர்த்துச் சென்று அக்கரையில் சேர்த்துவிடும். ஆனால், அதற்கு

மாறாக ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலையால் அந்தக் கரண்டை எதிர்த்து எதிர் நீச்சல் போட வேண்டுமென்றால் அதைப் போன்ற ஒரு கடினமான காரியம் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது. அந்த ஈர்ப்பு சக்தி ஒரு திசையில் கொண்டு செல்லும், நீரைக் கொண்டு செல்லும். அந்த நீரில் எவ்வளவு பெரிய கனமான பொருள் விழுந்தாலும், அதையும் ஈர்த்துச் செல்லும். மிகப் பெரிய மரம் விழுந்தால் கூட அதையும் அந்தக் கரண்ட் இழுத்துச் செல்லும். அத்தகைய சக்தி வாய்ந்த கரண்டிற்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு வெற்றிகரமாக அக்கரைக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால் அது எவ்வளவு பெரிய சாதனை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தகைய சாதனையைத்தான் எனது தலைமையிலான அரசு இந்தக் கடந்த ஓராண்டு காலத்தில் செய்து காட்டியிருக்கிறது, வெற்றி படைத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற எனது எண்ணத்தின் அடிப்படையில் தான், வாழ்வாதாரம் ஏதுமில்லாத ஏழை, எளிய, அடித்தளத்து மக்களுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியம்; உணவுப் பாதுகாப்பை அனைவரும் பெற வேண்டும் என்ற அடிப்படையில் தான் விலையில்லா அரிசி; தாய்மார்களின் வேலைப் பளுவை குறைக்கும் வகையில், விலை ஏதுமின்றி மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்குதல்; ஏழை, எளிய மக்களுக்கு விலை ஏதுமில்லாமல் பசுமை வீடுகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மனித வள மேம்பாட்டிற்கென பல திட்டங்களை எனது அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி; இடை நிற்றலைத் தடுக்கும் வகையில், பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ–மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல்; விலையில்லா சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், காலணிகள், புத்தகப் பைகள், Geometry Box போன்ற உபகரணங்கள் வழங்குதல்; மேல்

கல்விக்கான உதவித் தொகை வழங்குதல்; விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ–மாணவியருக்கு உணவுப் படி அதிகரிப்பு; விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்; வளரிளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின் வழங்குதல்; பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், உயர்த்தப்பட்ட திருமண நிதி உதவியுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்குதல்; மகப்பேறு நிதி உதவியை உயர்த்தி வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்தும் வகையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விவசாயிகள், மீனவர்கள், கால்நடை பராமரிப்போர், என முதன்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. ஏழை, எளிய மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வழிவகை செய்யும் வண்ணம், அவர்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதே போன்று, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான பல்வேறு திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

நாட்டில் உள்ளோர், வாழ்வில் வளம் பெற வேண்டுமெனில் நாட்டின் பொருளாதாரம் மகத்தான வளர்ச்சி பெற வேண்டும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட வேண்டும். சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இருந்தால்தான் தொழில் முனைவோர் இங்கே தொழில் தொடங்க முன்வருவர். இதனைக் கருத்தில் கொண்டு, பலப்பல உட்கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தி வருகிறது. அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்கான

வழிமுறைகள் வகுக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 தயாரிக்கப்பட்டுள்ளது.

அளப்பறிய சாதனைகளை இந்த ஓர் ஆண்டில் எனது அரசு நிகழ்த்தியிருந்தாலும், மின் பற்றாக்குறை இன்னமும் நீக்கப்படவில்லை என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். மின் பற்றாக்குறையை நீக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது. விரைவில் தமிழகத்தில் உள்ள மின் பற்றாக்குறை நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஓராண்டில் எனது தலைமையிலான அரசு செய்துள்ள சாதனைகள் எண்ணற்றவை என்றாலும், மேன்மேலும் சாதனைகள் பல தொடர வேண்டும் என்பதே எனது விருப்பம். இந்த ஓராண்டு சாதனைகள் இன்னும் பல சாதனைகளை எட்டுவதற்கான அடித்தளமாக அமையும். மக்களின் கனவுகள் திட்டங்களாக உருப்பெறுகின்றன. இந்தத் திட்டங்கள் உடனடியாகச் செயல்வடிவம் பெற்று அதன் பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே எனது குறிக்கோள் ஆகும். அதற்கேற்ற நடவடிக்கைகளை நாள்தோறும் எனது அரசு எடுத்து வருகிறது.

வீணையின் நரம்புகள் தனித்தனியாக இருந்தாலும், அதை விரலாலே மீட்டுகின்ற போது, ஒரே இசையை எழுப்புவதைப் போல, அனைத்துக் கட்சியினருக்கும் பொதுவான நோக்கமாக விளங்கும் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் தமிழக மக்களின் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் எனது நடவடிக்கைகளுக்கும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் எனது முயற்சிக்கும், அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்துக் கட்சியினரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இந்த மாமன்றத்திலே அளிக்கப்பட்ட பாராட்டுரைகளை என்னை முதலமைச்சராக்கிய தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து அமைகிறேன்.

★ ★ ★

திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் அருகில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்ற 1006 ஜோடி திருமணங்களை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி ஆற்றிய உரை – (18.06.2012)



மணமக்கள் ஒற்றுமையுடன் துன்பத்தைத் தகர்த்தெறிந்தால் வாழ்க்கை சுவைக்கும்!

இந்த இனிய திருமண விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. D. ஜெயக்குமார் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. M.S.M. ஆனந்தன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! வரவேற்புரை நல்கிய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத்

சாரங்கி அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மூ. ராசாராம் அவர்களே! இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ஜெ. சந்திரகுமார் அவர்களே! மணமக்களே! மணமக்களின் பெற்றோர்களே! உற்றார், உறவினர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான, எனதருமை உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்பிறவியிலும் ஓடோடி வந்து உதவி புரியும் தாயாக, அருள் மழை பொழியும் அகில உலக அன்னையாக விளங்கும் திருவேற்காடு கருமாரியம்மனின் திருவருளால் திக்கெட்டும் வியக்கும் வண்ணம் 1006 இணைகளுக்கான திருமணங்கள் இன்று நடந்தேறியுள்ளன.

இந்த 1,006 திருமணங்களையும் ஒரு சேர நடத்தி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் திருவேற்காட்டிற்கு வந்து, திருமணம் புரிந்து கொண்டு, இல்லற வாழ்வில் இன்று அடியெடுத்து வைத்திருக்கும் மணமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இன்று 1006 குடும்பங்களில் விளக்கேற்றி வைத்திருக்கிறது. இந்த விளக்குகள் என்றென்றும் ஒளிவீசித் திகழ வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

கல்யாணம் பண்ணுவது என்பது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்த்தவே ''கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்'' என்ற பழமொழியை நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள். இதனை உணர்ந்த நமது இதயதெய்வம் புரட்சித்







சீர்வரிசைப் பொருட்கள்

1. பித்தளை காமாட்சி அம்மன் விளக்கு	1
2. எவர்சில்வர் குங்குமச் சிமிழ்	1
3. எவர்சில்வர் குடம்	1
4. எவர்சில்வர் டிபன் கேரியர்	1
5. எவர்சில்வர் அன்னக் கரண்டி	1
6. எவர்சில்வர் கரண்டி பெரியது	1
7. எவர்சில்வர் கரண்டி சிறியது	1
8. எவர்சில்வர் பால் பாத்திரம்	1
9. எவர்சில்வர் டம்ளர்	2
10. எவர்சில்வர் தட்டு	2
11. எவர்சில்வர் வாளி	1
12. எவர்சில்வர் சாப்பாட்டுத் தட்டு	2
13. எவர்சில்வர் கடாய்	1
14. எவர்சில்வர் அடுக்கு பெரியது	1
15. எவர்சில்வர் அடுக்கு சிறியது	1
16. எவர்சில்வர் அண்டி	1
17.எவர்சில்வர் ஜல்லி கரண்டி	1
18. எவர்சில்வர் தூக்குப் பாத்திரம்	1
19. பாய்	1
20. தலையணை	2
21. போர்வை	1

தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1982ஆம் ஆண்டு இலவசத் திருமணத் திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

1991 முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்த போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிதம்பரத்தில் 2,500 திருமணங்களையும், திருச்சியில் 5,004 திருமணங்களையும் நடத்திக் காட்டினோம்.

இரண்டாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, இந்துசமய அறநிலையத் துறையின் சார்பில் 2002ஆம் ஆண்டு 1,008 திருமணங்களையும்; 2003ஆம் ஆண்டு 1,053 திருமணங்களையும் இதே திருவேற்காட்டில் நான் நடத்தி வைத்தேன்.

மூன்றாவது முறையாக முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன், திருமண வயதை தாண்டியும் திருமணம் செய்ய முடியாமல் ஏழை, எளிய பெண்கள் வாடிக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, ஏழைப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதி உதவித் தொகையான 25,000 ரூபாயுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் வழங்க உத்தரவிட்டேன். பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், பட்டம் அல்லது பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையை 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கியதோடு, 4 கிராம் தங்கம் வழங்கவும், ஆணையிட்டேன். இது மட்டுமல்லாமல், மகப்பேறு காலத்தில் வழங்கப்படும் நிதி உதவியை 12,000 ரூபாய் என இரட்டிப்பாக்கி வழங்கியுள்ளேன்.

இன்று நடைபெற்ற திருமணங்கள் சாதி பேதமின்றி ஒரே இடத்தில் நடைபெற்ற சமத்துவ திருமணங்கள். இன்று, 11 மாற்றுத் திறனாளிகள் உட்பட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 611 ஜோடிகளுக்கும்; பழங்குடியினத்தைச் சார்ந்த 34 ஜோடிகளுக்கும்; மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 183 ஜோடிகளுக்கும்; பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 132 ஜோடிகளுக்கும்; இதர வகுப்பைச் சேர்ந்த 46 ஜோடிகளுக்கும் திருமணம் இனிதே நடந்தேறியுள்ளது.

இன்று திருமணம் நடந்தேறியுள்ள புதுமணத் தம்பதிகளுக்கு 4 கிராம் தங்க திருமாங்கல்யம்; 6 கிராம் எடையுள்ள 4 வெள்ளி

மெட்டிகள்; முகூர்த்தப் புடவை; ரவிக்கை; ஜரிகை வேட்டி; ஜரிகை துண்டு; சட்டை; உள்ளிட்ட 28 வகையான சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருமணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்துள்ளதோடு மட்டுமல்லாமல், வெளி மாவட்டங்களைச் சார்ந்த மணமக்கள் மற்றும் அவர்தம் உறவினர்களுக்கான போக்குவரத்து வசதி, மணமக்கள் மற்றும் உறவினர்களுக்கான தங்கும் வசதி; அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் ஆகியவையும் செய்து தரப்பட்டுள்ளன. கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய தொலைதூர மாவட்டங்களைச் சேர்ந்த மணமக்கள் மற்றும் அவர்தம் உறவினர்கள் இரவு பயணத்தை தவிர்த்திடும் வகையில் திருச்சியில் 16ஆம் தேதி இரவு தங்க வைக்கப்பட்டு, பின்னர் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

19 திருமண மண்டபங்களில் மணமக்கள் மற்றும் அவர்தம் உறவினர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இது மட்டுமல்லாமல், மணப்பந்தலில் அமர்ந்திருப்பவர்களும், பந்தலுக்கு வெளியே இருப்பவர்களும் நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் வகையில் தொலைக்காட்சி பெட்டிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

இந்தத் திருமண விழா முடிந்தவுடன், அவர்களுக்கு சிறப்பான திருமண விருந்து வழங்கிடவும், மணமக்கள் சீர்வரிசை பொருட்களுடன் அவர்கள் பயணித்து வந்த பேருந்துகள் மூலம் சொந்த ஊர்களுக்கு செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில், உங்கள் வீட்டு திருமணம் போல் அனைத்து வசதிகளையும் எனது தலைமையிலான அரசு செய்துள்ளது.

இல்லறம் என்பது அன்பு செலுத்துவதற்காகவே. அதனால் தான், இல்வாழ்க்கை பண்புடையதாகவும், பயனுடையதாகவும் இருப்பதற்கு அன்பும், அறமும் தேவை என்று வான்புகழ் வள்ளுவர் கூறியிருக்கிறார். அன்பை பண்பாகவும், அறத்தை பயனாகவும் கொண்ட இல்லற வாழ்க்கையில் இன்று 1006 இணைகள் இணைந்திருக்கின்றன.

இல்லற வாழ்வு என்பது இரு ஆன்மாக்களின், மனங்களின், உணர்வுகளின் முழுமையான இணைப்பு. இந்த இல்லற வாழ்வு இனிமையாக இருக்க வேண்டுமென்றால், சலனமில்லாத, விசாலமான மனம் வேண்டும். பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். இன்றைக்கு பல குடும்பங்களில் அர்த்தமில்லாத சண்டைகள் தான் அதிகம். அவ்வாறு சண்டை போடுபவர்கள் அடுத்தவரின் எண்ணத்திலிருந்து சிந்தித்துப் பார்த்தால், சச்சரவுக்கே இடமில்லாது போய்விடும்.

ஓர் ஊரில் வேலைவெட்டி இல்லாமல் ஒருவன் இருந்தான். அவனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். மனைவியும் வந்து சேர்ந்தாள்.

ஒரு நாள் மனைவி, தனது கணவனைப் பார்த்து, "சும்மாவே உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்களே ? சம்பாதிக்கிற வழியைப் பாருங்கள்" என்றாள்.

உடனே கணவன், "அது பற்றி தான் சிந்தித்து கொண்டிருந்தேன். ஒரு அருமையான திட்டம் எனது மனதில் உதித்துவிட்டது" என்று கூறினான்.

"என்ன திட்டம் ?" என்று ஆவலோடு வினவினாள் அவனது மனைவி.

"ஓர் ஆட்டுக்குட்டி வாங்கப் போகிறேன்" என்றான் கணவன். "சரி" என்றாள் மனைவி.

"அதற்கான பணத்தை நீ தான் உன் அப்பாவிடம் கடனாக வாங்கித் தர வேண்டும். நான் மானஸ்தன். எனக்கு ஒன்றும் இனாமாக வேண்டாம். கடன் கொடுத்தால் போதும்" என்றான்.

இந்தக் கதை நடந்த காலத்தில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இல்லை. இருந்திருந்தால், அவர்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 ஆடுகள் கிடைத்திருக்கும்.

"ஆட்டுக்குட்டியை வாங்கி என்ன செய்யப் போகிறீர்கள் ?" என்றாள் மனைவி.

அதற்கு கணவன், "அந்தக் குட்டி வளரும். பிறகு நிறைய குட்டிகள் போடும்" என்றான்.

"பிறகு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் மனைவி.

"அதையெல்லாம் சந்தையிலே கொண்டு போய் விற்றுவிட்டு, அந்தக் காசுக்கு ஒரு பசு மாடு வாங்குவேன்" என்றான் கணவன்.

"அது எதற்கு?" என்று கேட்டாள் மனைவி.

"பசு மாடு நிறைய பால் கொடுக்கும். அதைக் கொண்டு போய் பால் பண்ணையிலே கொடுத்தால் நிறைய காசு கிடைக்கும். பாலையும் விற்கலாம், நாமும் காபி சாப்பிடலாம்; உடல் நலம் இல்லாத எனது தந்தைக்கு குடிக்க பால் கொடுக்கலாம்" என்றான் கணவன்.

உடனே மனைவி, "அடுத்த தெருவில் இருக்கும் எங்க அம்மா வீட்டிற்கும் கொஞ்சம் பால் கொடுத்தனுப்பலாம்" என்றாள்.

உடனே, கணவனுக்கு கோபம் வந்துவிட்டது. "அது எப்படி? உங்க அம்மா வீட்டுக்கு எதற்காக கொடுக்கணும்? அதெல்லாம் முடியாது." என்றான்.

இந்த இடத்தில் சண்டை ஆரம்பமாகிவிட்டது. இரண்டு பேரும் சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

கடுமையாக சண்டை நடப்பதை அறிந்து, பக்கத்து வீட்டுக்காரன் ஓடி வந்தான். இவர்கள் இருவரும் வாங்காத மாட்டிற்காக சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

இருப்பினும், சண்டை போட்டுக் கொண்டிருக்கும் கணவன் – மனைவியைப் பார்த்து, "உன் மாடு என் தோட்டத்தில் மேய்ந்து பயிரை எல்லாம் நாசப்படுத்திவிட்டது. பத்தாயிரம் ரூபாய் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. நீ நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்." என்று கூறினான்.

இதைக் கேட்டு அரண்டு போன கணவன், பக்கத்து வீட்டுக்காரனைப் பார்த்து, "நான் இன்னும் மாடே வாங்கவில்லை. உனக்கு தோட்டமே இல்லை. மாடு எப்படி உன் தோட்டத்தில் மேயும்? என்ன உளர்றே?" என்று கேட்டான்.

உடனே பக்கத்து வீட்டுக்காரன், "நீ தான் உளறுகிறாய். மாடே வாங்காமல் எப்படி உன் மனைவி அவங்க அம்மா வீட்டுக்கு பால் கொடுத்தனுப்ப முடியுமோ; அதே போலத்தான் அந்த மாடு இல்லாத என் தோட்டத்திலும் மேய்ந்தது" என்றான்.

அப்போதுதான் கணவனுக்கு புத்தி வந்தது. அர்த்தமே இல்லாமல் சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறோமே, என்பதை உணர்ந்தான்.

இல்லாத விஷயத்திற்கு சண்டை போட்டுக் கொண்டு, இல்லறத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிற மனிதர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதைத் தான் இக்கதை நமக்கு உணர்த்துகிறது. இந்தக் கதையிலிருந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், கணவனும், மனைவியும் அன்பாக இருக்க வேண்டும்; ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்; விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை வேண்டும் என்பது தான். இது தான் நல்ல குடும்பத்திற்கு அழகு.

"திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர்"; "திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது", என்ற பழமொழிகள் திருமணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. திருமணம் என்பது இரு மனம் இணைவது மட்டுமல்ல; இரு வேறு குடும்பங்களின் சங்கமம்.

அமைதியான கடல் நல்ல மாலுமியை உருவாக்காது. ஆர்ப்பரிக்கும் அலைகள், மிரட்டிப் பார்க்கும் இடி, மின்னல், மழை, சூறாவளிக் காற்று ஆகியவற்றினைக் கொண்ட கடல் தான் ஒரு மாலுமிக்கு சவால். இந்தச் சவாலை மாலுமி வெற்றிகரமாக கடந்து விட்டால், அவர் சிறந்த, திறமை மிக்க மாலுமியாகி விடுவார்.

மண வாழ்க்கையும் இப்படித்தான். இன்பமும், துன்பமும் நிறைந்தது தான் இல்வாழ்க்கை. மணமக்கள் ஒற்றுமையுடன் துன்பத்தை எல்லாம் தகர்த்தெறிந்து விட்டால் வாழ்க்கை சுவையாக அமையும்.

வாழ்க்கையே ஒரு சவால் தான். அதுவும் திருமண வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்தது தான். இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் துணிவையும், தெளிவையும் நீங்கள் பெற வேண்டும். சவால்களை எதிர்கொள்வதிலிருந்து விலகி ஓடும்

மனிதர்களை விட எதிர்த்து நின்று போராடும் மனிதர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். சவால்களை கண்டு அஞ்சுபவர்களை சமூகம் கண்டு கொள்வதில்லை. சவால்களை துணிச்சலுடன் சந்திக்கும் நபரைத் தான் சமூகம் வரவேற்கும்.

ஆனால், காலையிலே மேடையில் சவால் விட்டுப் பேசி, மாலையிலே "ஜகா" வாங்குபவர்களை சவடால் பேர்வழிகள் என்று தான் உலகம் சொல்லும்.

சந்திக்க வேண்டிய சவால்களை அடையாளம் கண்டு, அவற்றை துணிவுடன் எதிர்கொள்ள நீங்கள் முடிவெடுத்துவிட்டால், அதற்கான வழிமுறைகள் தானாக தோன்றும். துன்பங்களை கண்டு துவண்டுவிடும் கோழைத்தனத்தை விட எதிர்த்துப் போராடும் துணிவே நம்மை வாழ வைக்கிறது. இதைப் புரிந்து கொண்டால் உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம் என்பதைத் தெரிவித்து;

இன்று இல்லற வாழ்வில் இணைந்துள்ள அனைவரும் கண்ணும் இமையும் போல், நகமும் சதையும் போல், நிலவும் வானும் போல், கடலும் அலையும் போல், எண்ணும் எழுத்தும் போல், மொழியும் கருத்தும் போல் ஒற்றுமையுடன் வாழ்ந்து, பதினாறு செல்வங்களையும் பெற்று, தேனின் இனிமை போலவும், தமிழின் சுவை போலவும், வீணையின் நாதம் போலவும், நாடும் வீடும் சிறக்க பல்லாண்டு வாழ்க! வாழ்க! என நெஞ்சார வாழ்த்தி;

இந்த 1,006 திருமணங்கள் சீரோடும், சிறப்போடும் நடந்தேற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும், செயலாளர் அவர்களையும், ஆணையர் அவர்களையும், துறை அலுவலர்களையும், அவர்களுக்கு ஒத்துழைப்புநல்கியஇதரதுறைஅலுவலர்களையும், காவல் துறையினரையும் மனதாரப் பாராட்டி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

கோடநாடு காட்சிமுனை பேங்க் ஆப் இந்தியாவின் ஏ.டி.எம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஈளாடா கிளையினை திறந்து வைத்து ஆற்றிய உரை – (25.07.2012)



மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் வண்ணம் வங்கியின் பணிகள் அமைய வேண்டும்

இயற்கை எழில் கொஞ்சும், இந்த நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட கோடநாட்டில், கண்ணுக்கு விருந்தளிக்கும் பனி மூட்டத்திற்கும், மழைச் சாரலுக்கும், அதன் ஊடே தவழ்ந்து வரும் யூகலிப்டஸ் மரங்களின் மணத்திற்கும் இடையே பாங்க் ஆப் இந்தியாவின் இந்த கோடநாடு காட்சி முனையின் ஏ.டி.எம். மையத்தையும், புதுப்பிக்கப்பட்ட ஈளாடா கிளையையும் திறந்து வைத்து, நலிந்தோருக்கு கடனுதவி வழங்கி, உங்களிடையே உரையாற்ற, ஒரு சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து

கொள்ள இன்று வாய்ப்பு கிடைத்தது குறித்து உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்திய நாட்டின் செல்வம் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், தனியார் வசம் இருந்த வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இதன் காரணமாக, ஏழை உழவர்களுக்கு, விவசாயத்திற்காக வங்கிகள் கடன் கொடுத்து உதவுகின்றன. வேலையின்றித் தவிக்கும் படித்த இளைஞர்கள் சுயதொழில் தொடங்க வங்கிகள் நிதி உதவி செய்கின்றன. ஆட்டோ மற்றும் வாகன ஓட்டுநர்கள் சொந்தமாக வாகனங்களைப் பெற்று தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வங்கிகள் கடன் உதவி புரிகின்றன. மக்களின் அன்றாட வாழ்வுக்குத் தேவையான இரு சக்கர வாகனம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை, குறைந்த வட்டியில், தவணை முறையில் பெற வங்கிகள் உதவுகின்றன. மாற்றுத் திறனாளிகள் வாழ்வு சிறக்க வங்கிகள் பெரிதும் உதவி புரிகின்றன. சிறிதும் வளர்ச்சி அடையாத சிற்றூர்களைத் தம் மேற்பார்வையில் கொணர்ந்து பல்வேறு நலத் திட்டங்களை, வங்கிகள் செயல்படுத்துகின்றன. இவ்வாறு, நாட்டின் பொருளாதாரம் செழிக்கவும், மக்களது வாழ்க்கைத் தரம் உயரவும், வங்கிகள் ஆற்றும் பணிகளில் முன்னிலையில் இருப்பது பாங்க் ஆப் இந்தியா என்று சொன்னால் அது மிகையாகாது.

1906ஆம் ஆண்டு, 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் 50 பணியாளர்களுடன் தனியாரால் துவங்கப்பட்ட பாங்க் ஆப் இந்தியா இன்று இந்தியாவில் 4,041 கிளைகளையும், வெளி நாடுகளில் 34 கிளைகளையும் கொண்டு மகத்தான மக்கள் பணி ஆற்றி வருகிறது. 1989ஆம் ஆண்டிலேயே ஏ.டி.எம். வசதியுடன் கூடிய கணினிமயம் ஆக்கப்பட்ட கிளையைத் துவக்கிய பெருமை இந்த பாங்க் ஆப் இந்தியாவிற்கு உண்டு. இந்திய நாட்டிற்கு வெளியே முதன் முதலாக 1946ஆம் ஆண்டு லண்டனில் வங்கிக் கிளையைத் துவக்கிய பெருமையும், 1974ஆம் ஆண்டு முதன் முதலாக ஐரோப்பிய நாட்டில் வங்கிக் கிளையைத் துவக்கிய பெருமையும் இந்த வங்கிக்கு உண்டு. மொத்தத்தில் அலுவல்

ரீதியாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளில் பாங்க் ஆப் இந்தியா பிரதான இடத்தை வகிக்கிறது.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்த வங்கி, மரங்களும், குன்றுகளும், ஏழை, எளிய, நடுத்தர மக்கள், குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்துள்ள, இந்தப் பின்தங்கிய பகுதியில், ஏ.டி.எம். மையத்தைத் திறந்திருப்பதும், இங்குள்ள கிளையைப் புதுப்பித்திருப்பதும், உண்மையிலேயே பாராட்டத்தக்கது.



இந்த ஏ.டி.எம். சேவையின் மூலம் இங்குள்ள மக்கள் தங்கள் கணக்கில் உள்ள பணத்தைத் தங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் தேவைக்கேற்ற அளவில் எளிதாக எடுத்துக் கொள்ள இயலும். மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை

வெகுதூரம் சென்று வாங்க ஏ.டி.எம். கார்டை பயன்படுத்துவதன் மூலம் பணம் களவு போவதும் தொலைந்து போவதும் தடுக்கப்படும்.

இந்த வங்கியின் மூலம் இங்குள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்குத் தேவையானவற்றைப் பெற வேண்டும், சிறுசேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பம் ஆகும்.

"சிறு துளி பெரு வெள்ளம்", "சிறுகக் கட்டி பெருக வாழ்" போன்றவை சிறுசேமிப்பின் இன்றியமையாமையை விளக்குகின்றன. "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது வள்ளுவரின் வாக்கு. பொருளைப் பெறாவிட்டால் பட்டறையில் இரும்பு படுவது போன்று துன்பப்பட வேண்டும் என்பதை உணர்ந்து இங்குள்ள மக்கள் எல்லாம் சேமிப்பில் ஈடுபட வேண்டும். ஒரு மலையிலிருந்து பெருக்கெடுத்தோடும் ஆறு, பயனில்லாத இடங்கள் வழியாகப் பாய்ந்து கடலில் கலப்பதால் யாருக்கும் எவ்விதப் பலனும் இல்லை. அந்நீர் அணைகளில் தேக்கப்பட்டு, வாய்க்கால் வழியாக, வயல்களுக்குப் பாய்ந்தால் பயிர் செழிக்கும், உயிர்கள் வாழ வழிவகை ஏற்படும். அது போல, ஒரு மனிதன் தன் உழைப்பினால் ஈட்டிய பணத்தைத் தனக்கும் தன் நாட்டிற்கும் பயன்பட சேமித்தல் அவசியம். சிறுசேமிப்பின் மூலம் பணம் வீணாகாமல் பெருகுவதோடு, வட்டியும் கிடைக்கிறது; பணம், பாதுகாப்பாகவும் இருக்கிறது. இந்தச் சேமிக்கும் பழக்கம் சிக்கனத்தை வளர்ப்பதோடு, எதிர்பாராச் செலவுகளுக்கும் கைகொடுக்கிறது. நாம் சேமிக்கும் பணம் நாட்டின் திட்டங்களுக்குப் பயன்படுத்தப் படுகிறது. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த சேமிப்பினை இப்பகுதி மக்கள் எல்லாம், வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வங்கியில் பணத்தைச் சேமித்து, அதன் பயன்களை, நீங்கள் அடைய வேண்டும். இது மட்டுமல்லாமல், விவசாயக் கடன், வணிகக் கடன், வாகனக் கடன், கல்விக் கடன், வீட்டு வசதிக் கடன் ஆகியவற்றையும், இந்த வங்கியிடமிருந்து பெற்று,

உங்களுடைய வாழ்க்கையை, நீங்கள் எல்லாம், வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில், பணம் மட்டுமே வாழ்க்கையாகி விடாது. பணத்தை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பெற்றுவிட இயலாது. பணத்தால் பெற இயலாதவையும் இந்த உலகத்திலே உண்டு. பணத்தால் நல்ல கட்டில், மெத்தை, தலையணை ஆகியவற்றை வாங்க இயலும். ஆனால், அவை மட்டுமே நமக்குத் தூக்கத்தைக் கொடுக்காது. பணத்தால் சிறந்த சத்தான உணவு வகைகளை வாங்க இயலும். ஆனால், பணம் பசியை ஏற்படுத்தாது. நோய்வாய்ப்பட்டால், அதனைச் சரி செய்வதற்கு மருந்து மாத்திரைகளைப் பணத்தால் வாங்க இயலும். அழகு சாதனைங்களைப் பணத்தால் வாங்க இயலும். ஆனால், பணத்தால் உடல் ஆரோக்கியத்தைப் பெற இயலாது. எனவே, பணத்துடன் கூடிய நல்ல மனமும் வேண்டும். அதுவே எப்பொழுதும் நமக்கு நல்ல மகிழ்ச்சியை தரும்.

ஓர் ஊரில் வசதி படைத்த பள்ளிச் சிறுமி ஒருத்தி தனது தந்தையுடன் விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடைக்குச் சென்றாள். அங்கு தனக்குப்பிடித்த விளையாட்டுப் பொம்மைகளை அவள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில், தனது அருகில் வசதி குறைந்த ஏழைச் சிறுமி ஒருத்தி, விலை குறைந்த பொம்மைகளை, ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து, தனது தந்தையை நோக்குவதையும்; அந்த பொம்மைக்குரிய பணம் தன்னிடம் இல்லை என அவளது தந்தை தலையாட்டுவதையும்; இதனால் அந்த ஏழைச் சிறுமியின் முகம் வாட்டம் அடைவதையும் கடைசியாக ஒரு சாதாரண பொம்மையை எடுத்துக் கொண்ட ஏழைச் சிறுமியின் முகத்தையும் கவனித்தாள் பணக்காரச் சிறுமி.

இதனைக் கண்டு மனம் நெகிழ்ந்த பணக்காரச் சிறுமி தனக்கு வேண்டிய விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கொண்டதுடன் அந்த ஏழைச் சிறுமி ஏக்கத்துடன் பார்த்துத் திருப்பி வைத்துவிட்ட பொம்மைகளையும் எடுத்துக் கொண்டாள். பின்னர், பணம் செலுத்தும் இடத்தில் அதற்கான பணத்தைக்

கொடுத்த பணக்காரச் சிறுமி, கடைக்காரரிடம் ஏதோ ரகசியமாகக் கூறினாள்.

ஒரு சாதாரண பொம்மைக்கான பணத்தை ஏழைச் சிறுமி கடைக்காரரிடம் செலுத்தியவுடன் கடைக்காரர் அந்தச் சிறுமியிடம், "இன்று 500ஆவது வாடிக்கையாளருக்கு, நாங்கள் பரிசு ஒன்றை தர முடிவு செய்திருக்கிறோம். நீ தான் அந்த 500ஆவது வாடிக்கையாளர்" எனக் கூறி, பணக்காரச் சிறுமி விலை கொடுத்திருந்த பொம்மைகளை ஏழைச் சிறுமிக்கு வழங்கினார்.

இதில் ஏழைச் சிறுமிக்கு, ஏற்பட்ட சந்தோஷத்தைப் பார்த்து மன மகிழ்ச்சியுடன், மன நிறைவுடன் அந்த பணக்காரச் சிறுமி கடையை விட்டுச் சென்று தனது காரில் ஏறிக் கொண்டாள். பணம் கொடுத்துத் தான் வாங்கிய விளையாட்டுப் பொருட்களினால் ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, அதிக மகிழ்ச்சியை அந்த ஏழைச் சிறுமியின் சிரிப்பில் கண்டாள் பணக்காரச் சிறுமி. பிறருக்குக் கொடுத்து உதவுவது தான், நமக்கு உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

இது போன்ற உண்மையான மகிழ்ச்சியை வாடிக்கையாளர்கள் மனதில் ஏற்படுத்தும் பணியில் வங்கிகள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வங்கி அதிகாரிகள், இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறும் வகையில் குறைந்த வட்டியில் அதிக தவணை முறையில் அவர்களுக்குத் தேவையான கடன் உதவிகளை வழங்க வேண்டும். இதே போன்று, கடன் பெறுவோரும், வாங்கிய கடனை, தவறாமல் திரும்பச் செலுத்தி, மேலும், பல பயன்களை வங்கி மூலம் பெற வேண்டும். இந்தக் கொடுக்கல் – வாங்கலில் இரு சாராரும் தங்கள் மனசாட்சிக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

ஒருத்தர், விமானம் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று விருப்பப்பட்டார். அதன்படி பயிற்சி எடுத்துக் கொண்டார். பயிற்சி முடிந்தவுடன் முதல் நாள் தனியாக விமானம் ஓட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, பறக்கும் போது ஏதாவது ஆபத்து

ஏற்பட்டால் என்ன செய்வது என்று யோசித்து, அதற்கேற்ப ஒரு பாரசூட் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார்.

அதனால் இவர் ஒரு கடைக்குப் போனார். "ஒரு நல்ல பாரசூட் கொடுங்க", என்று கடைக்காரரிடம் கேட்டார். கடைக்காரர் பாரசூட்டை அவரிடம் கொடுத்தார். அந்தப் பாரசூட்டை வாங்கி நன்றாகப் பார்த்தார். பின்னர் கடைக்காரரைப் பார்த்து, "ஐயா, நான் இதை வாங்கிக் கொண்டு போகிறேன். நல்லதாக இருக்கிறதா என்று ஒரு முறைக்கு இரு முறை பார்த்துத் தந்தால், நலமாக இருக்கும். ஒருக்கால் நான் மேலே இருந்து குதிக்கும் போது இந்தப் பாரசூட் வேலை செய்யவில்லை என்றால் பிரச்சினையாகி விடும் அல்லவா?" என்று கூறினார்.

உடனே அந்தக் கடைக்காரர், அவரைப் பார்த்து, "சார், அதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் கூட கவலைப்படாதீர்கள். அப்படி நீங்கள் குதிக்கிற போது, இந்த பாரசூட், சரியாக விரியவில்லை என்று சொன்னால் உடனே திருப்பி எடுத்துக் கொண்டு வாங்க நான் வேறு ஒன்றை மாற்றித் தருகிறேன்" என்று அலட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

இது எப்போர்பட்ட மன சாட்சி! பாரசூட் விரியவில்லை என்றால், அத்துடன் விமான ஓட்டியின் கதையே முடிந்துவிடும். உயிர் பிரிந்துவிடும். பின்னர் எப்படி அவர் கடைக்குச் சென்று வேறு பாரசூட்டை வாங்க முடியும்? இதுவா மனசாட்சி? இது போல் இல்லாமல் உண்மையான மனசாட்சியுடன் வங்கி அதிகாரிகளும், வங்கி வாடிக்கையாளர்களும் நடந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை ஆகியவை வங்கிகள் மூலமாகவே தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசுக்கு வரிகள் மற்றும் இதர இனங்கள் மூலம் வர வேண்டிய வருமானம் வங்கிகள் மூலமாகவே பெறப்படுகிறது. எனது அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் வங்கிகளில் பெருமளவில் வணிக நடவடிக்கைகள் நடைபெற்று

வருகின்றன. வங்கிகளும், ஏற்றத்தாழ்வற்ற, சமதர்ம சமுதாயம் அமைப்பதற்காகப் பாடுபடும் தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயம், தொழில், வணிகம், சிறுதொழில், பொருளாதாரம் முதலியன செழிக்கும் வண்ணமும், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் வண்ணமும், இந்த வங்கியின் பணிகள் அமைய வேண்டும் என்றும், ஈளாடா கிளை, இந்தியாவிலேயே சிறந்த கிளை என்ற நற்பெயரை எய்த வேண்டும் என்றும் வாழ்த்தி, இது போன்ற பல ஏ.டி.எம். மையங்களையும், புதுக் கிளைகளையும் தமிழ்நாட்டிலே பாங்க் ஆப் இந்தியா துவக்கி, மக்களுக்கு மேன்மேலும் நற்பணிகளை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு;

இந்த விழா, சீரும் சிறப்பும் மிக்க, நிகழ்ச்சியாக அமைந்திடப் பணியாற்றிய வங்கி அதிகாரிகளுக்கும், இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில்
தேசிய கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய
சுதந்திர தின உரை – (15.08.2012)



இந்தியாவை வல்லரசு நாடாக்கவும், தமிழகத்தை வளம் மிக்க மாநிலமாக்கவும் தொடர்ந்து அயராது பாடுபடுவேன்

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு உயர் அதிகாரிகளே, அலுவலர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின்

ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கத்தையும், சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் முதற்கண் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

66ஆவது சுதந்திர தின நன்னாளில் பன்னிரண்டாவது முறையாக இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

65 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர்களை இந்திய மண்ணில் இருந்து விரட்டி சுதந்திரத்தைப் பெற பாரதம் முழுவதும் தன்னலமற்ற தியாகிகள் பலர் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்து அரும்பாடுபட்டனர். ஆங்கிலேய அடிமைத்தளையைத் தகர்த்தெறிய நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு மகத்தானது.

ஆங்கிலேயருக்கு எதிராக வீர முழக்கமிட்ட நெற்கட்டும் செவல் பூலித்தேவன்; தூக்கு மேடை ஏறிய வீரபாண்டிய கட்டபொம்மன்; தாயின் மணிக்கொடி காக்க உயிர் துறந்த திருப்பூர் குமரன்; வீரத் தழும்புகளை விருதுகளாய் சுமந்த மருது சகோதரர்கள்; வீரமங்கை வேலுநாச்சியார்; மாவீரன் வாஞ்சிநாதன்; விடுதலைப் போராளி தில்லையாடி வள்ளியம்மை; செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார்; தம் கவிதைகள் மூலம் விடுதலை உணர்வினை ஊட்டிய மகாகவி பாரதி; நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வழிவந்த சுதந்திரப் போராட்டத் தியாகி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்; தீரர் சத்தியமூர்த்தி; சுப்ரமண்ய சிவா; தீரன் சின்னமலை; மாவீரன் அழகு முத்துக்கோன்; பெருந்தலைவர் காமராஜர், தந்தை பெரியார் என இந்திய விடுதலைக்காகப் போராடிய எண்ணற்ற தியாக சீலர்களைப் போற்றி வணங்குகிறேன்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா. ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதாக இருக்க வேண்டும். அரசின் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் மக்கள் நலன் கருதியே அமைய வேண்டும். இந்தக் குறிக்கோளை எய்தும் வண்ணம், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.



தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்குவது மட்டுமல்லாமல், விரைந்த வளர்ச்சி எய்தும் நடுத்தர வருவாய் நாடுகளுக்கு இணையாகத் தமிழகத்தின் வளர்ச்சி இருத்தல் வேண்டும் என்பதே எனது லட்சியம் ஆகும். இந்த லட்சியத்தை எய்தும் வண்ணமும்; தமிழ்நாட்டின் மொத்த வளர்ச்சி ஆண்டொன்றுக்கு 11 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும்; அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த வளர்ச்சியைக் காட்டிலும் 20 விழுக்காடு கூடுதல் வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையிலும் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 வகுக்கப்பட்டுள்ளது.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு பதவியேற்று 15 மாதங்கள் முடிவடைந்துள்ளன. இந்த 15 மாதங்களில் பல்வேறு சாதனைகளை எனது தலைமையிலான உங்கள் அரசு புரிந்துள்ளது.

வேளாண் துறையைப் பொறுத்தவரையில், 2010–2011ஆம் ஆண்டில் 76 இலட்சம் மெட்ரிக் டன்களாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 2011–2012ஆம் ஆண்டில் சாதனை அளவாக 106 இலட்சம் மெட்ரிக் டன்கள் என உயர்ந்துள்ளது காவேரியில் நமக்கு உரிய பங்கினை உரிய நேரத்தில்

கர்நாடகம் விடுவிக்காததால், குறுவை சாகுபடி பரப்பு இந்த ஆண்டு குறைந்துவிட்டது. எனினும், எனது தலைமையிலான அரசு டெல்டா விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரத்தை வழங்கிய காரணத்தால், 1 இலட்சத்து 37 ஆயிரம் ஏக்கர் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பா பயிர் சாகுபடி வழக்கமான பரப்பளவில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் தமிழகம் முன்னணி மாநிலமாக தொடர்ந்து திகழ வேண்டுமெனில் அதற்கு அடித்தளமாக அமைவது மனித வள மேம்பாடுதான். இந்த மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வில் எனது அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்குதல்; நான்கு சீருடைகள், காலணிகள், புத்தகப் பை, வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, பூகோள வரைபடம், பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை வழங்குதல்;

மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்குதல்;

மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டி வழங்குதல் ஆகியன சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உயர் கல்வியைப் பொறுத்த வரையில், தேனி மாவட்டம் போடிநாயக்கனூர், தர்மபுரி மாவட்டம் செட்டிக்கரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி ஆகிய இடங்களில் புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 22 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மக்கள் நல்வாழ்வைப் பொறுத்தவரையில், ஏழை, எளிய மக்கள் உயரிய சிகிச்சை பெற ஏதுவாக, ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை கிடைப்பதை உறுதி செய்யும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; கிராமப்புற வளர் இளம் பெண்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் திட்டம்; தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலம் பேணிப் பாதுகாக்கும் வகையில் நோய் தடுப்புச் சேவையுடன் இணைந்து 12,000 ரூபாய் நிதி உதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்; ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவை, சிறந்த மருத்துவ வசதிகள் ஆகியவை நோயற்ற சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்கின்றன.

கல்வி மேம்பாடு மற்றும் மக்கள் நல்வாழ்வுடன் தொழில் வளர்ச்சி ஏற்பட்டால் தான் கல்வி கற்றோர் வேலைவாய்ப்பினைப் பெறுவதுடன் தமிழகத்தின் பொருளாதாரம் மேம்படவும் வழிவகுக்கும் என்பதன் அடிப்படையில், 5,700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,530 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும்; 20,000–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு மறைமுக வேலை

வாய்ப்பினையும் உருவாக்கும் வகையில், 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டுள்ளன. இன்னும் பல தொழில் நிறுவனங்களுடன் விரைவில் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட உள்ளன. இதே போன்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கடந்த 15 மாதங்களில் மட்டும் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1,70,000 பணியிடங்களை நிரப்ப உத்தரவிடப்பட்டது. இதில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24,952 பணியிடங்களும்; வேலைவாய்ப்பகம் மூலம் 17,540 பணியிடங்களும்; 59,189 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களும்; 1,432 கல்லூரி ஆசிரியர் பணியிடங்களும்; 13,376 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களும்; 205 உதவி ஆய்வாளர் பணியிடங்களும்; 2,874 மருத்துவப் பணியிடங்களும்; 16,793 சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களும்; 11,803 அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களும்; தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 4,672 பணியிடங்களும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் 16,963 பணியிடங்களும் அடங்கும். இவற்றில் பெரும்பாலான பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள பணியிடங்கள் ஒரு சில மாதங்களில் நிரப்பப்பட்டுவிடும்.

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், வேளாண் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாக விளங்கும் மின்சாரம் தங்கு தடையின்றி கிடைக்கும் வண்ணம் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு திட்டங்கள் விரைந்து முடிக்கப்பட்டு, மின் தட்டுப்பாடு முழுவதும் நீங்கும் வகையிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏழை, எளிய, சாமானிய மக்களும் தங்களுக்கு உரிய பங்கைப் பெறும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு எடுத்து வருகிறது.



குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்குதல்;

ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம்;

கருவறை முதல் கல்லறை வரை பயனளிக்கும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்;

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் 1,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்; என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதே போன்று, அரிசி பெறத் தகுதியுள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா மின் விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012ஆம் ஆண்டில் 25 இலட்சம் மின் விசிறிகள், மிக்ஸி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 35 இலட்சம் பயனாளிகளுக்கு இவை வழங்கப்படும்.

மேலும், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளிய கிராம மக்கள் பயன்பெறும் வண்ணம், கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 17,000 பயனாளிகளுக்கு 17,000 கறவைப் பசுக்களும், 1 இலட்சத்து 70 ஆயிரம் பயனாளிகளுக்கு 6 இலட்சத்து 80 ஆயிரம் வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப்புற ஏழை மக்களின் வீட்டு வசதியை மேம்படுத்தும் வகையில், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 2011–2012ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 300 சதுர அடி கொண்ட 60,000 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இந்த ஆண்டும், 60,000 வீடுகள் கட்டப்படும். இதே போன்று தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் தேவைப்படும் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், தாய் திட்டத்தின் கீழ், 2011–2012ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளில் உள்ள 25,335 குக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 680 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன. நடப்பாண்டில் இத்திட்டப் பணிகளுக்கென 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரத் திருநாளை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், நம் உறவுகளாகிய இலங்கை முகாம்களில் வாழும் தமிழர்கள் அனைவரும் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்வதற்கும், சிங்களர்களுக்கு இணையான உரிமைகளைப் பெறுவதற்கும் வழிவகை ஏற்படுத்த இனிமேலாவது இலங்கை அரசை வலியுறுத்தி அவர்களின் துயரை நீக்க வேண்டும் என மத்திய அரசை இந்தத் தருணத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இனிய நாளில், சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தும் இந்த வேளையில், சுதந்திர போராட்ட தியாகிகளுக்கான ஓய்வூதியம் 5,000 ரூபாயிலிருந்து 7,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும்; அவர்களுக்கான மருத்துவப்படி 100 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும்; அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் 2,500 ரூபாயிலிருந்து 3,500 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரம் என்பது ஒவ்வொருவருக்கும் வேண்டும். ஆனால், அந்தச் சுதந்திரம் வரம்பை மீறாமல் இருக்க வேண்டும். எல்லா விதத்திலும் கண்ணியம் மற்றும் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டும். அது தான் உண்மையான சுதந்திரம். இந்த உண்மையான சுதந்திரம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்பட்டு வருகிறது. எனக்குச் சுதந்திரம் இருக்கிறது என்று அடுத்தவரின் சுதந்திரத்தை, உரிமையை, வாழ்வாதாரத்தைப் பறிக்கும் விதத்திலோ, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ எவரேனும் செயல்பட்டால், அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ''ஒரு தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்'' என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளை இந்தத் தருணத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நன்னாளில், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கவும்; இந்திய திருநாட்டை வல்லரசாக்கவும்; அதில் தமிழ்நாட்டை வளம் மிக்க மாநிலமாக ஆக்கவும் நான் தொடர்ந்து அயராது பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்து,

''உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல; உங்களால் நான்'' என்ற உணர்வோடு, நான் எனது கடமையை நிறைவேற்றிட




தமிழக மக்களாகிய நீங்கள் எல்லாம் எனக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

சுதந்திரக் காற்றைச் சுதந்திரமாகவும், பெருமையுடனும் சுவாசித்துக் கொண்டிருக்கும் அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, வெல்க பாரதம்! வாழ்க தமிழ்த் திருநாடு! அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில்
அரசு நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை – (13.09.2012)



மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமை – நன்றிக்கடன்!

இந்த இனிய விழாவில் முன்னிலை உரை ஆற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. என்.ஆர். சிவபதி அவர்களே,

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, வரவேற்புரை ஆற்றிய

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன் அவர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. தியாகராஜன் அவர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், காவேரி ஆற்றினால் சூழப்பட்டும், மிகப் பெரிய ராஜகோபுரத்தினை உடைய திவ்ய தேசங்களில் ஒன்றான அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளதுமான ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு, என் அருமைத் தொகுதி மக்களாகிய உங்களை எல்லாம் கண்டு, 27 கோடியே 13 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து; 82 கோடியே 63 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி; 34,000 பயனாளிகளுக்கு 50 கோடியே 62 இலட்சத்து 15 ஆயிரத்து 537 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, மொத்தத்தில் 160 கோடியே 39 இலட்சத்து 27 ஆயிரத்து 537 ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கி, உங்களிடையே உரையாற்றுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

என் மீதும், எனது அரசு மீதும் நீங்கள் பொழியும் பாசத்தை, நீங்கள் வைத்திருக்கும் அன்பை, அளவு கடந்த நம்பிக்கையை உங்கள் முகங்கள் தெளிவாக காட்டுகின்றன.

இது ஸ்ரீரங்கம் தொகுதியில் நடைபெறும் மூன்றாவது அரசு விழா. தமிழகத்தின் ஒவ்வொரு தொகுதியும் என்னுடைய தொகுதி தான் என்றாலும், இது என்னுடைய சொந்தத் தொகுதி. நான் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்தாலும், என்னுடைய எண்ணம் எல்லாம் மலைக் கோட்டையைச் சுற்றித்தான்.

என்னை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியவர்கள் நீங்கள். நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக்

கடமை, நன்றிக் கடன் என கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை. எனவே தான், முதன் முறையாக 19.06.2011 அன்றும்; இரண்டாவது முறையாக 13.02.2012 அன்றும் நான் உங்களை நேரில் சந்தித்து மொத்தம் 430 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினேன். தற்போது மூன்றாவது முறையாக இங்கு உங்களை நேரில் சந்தித்து 160 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

உங்களின் அமோக ஆதரவுடன் 2011ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மக்களுக்கு ஆற்றியுள்ள பணிகள் சிலவற்றை இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பசிப் பிணியை போக்கும் வகையில் விலையில்லா அரிசி வழங்குதல்; ஏழை, எளிய பெண்களுக்கு திருமண உதவித் தொகையுடன் தாலிக்கு தங்கம்; பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்கு தாலிக்கு தங்கத்துடன் இரு மடங்கு திருமண உதவித் தொகை; விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்; ஏழை, எளிய மக்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கும் வகையில் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; தாயையும், சேயையும் பாதுகாக்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்; விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் திட்டம்; ஏழை, எளியோருக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டம்; பசுமை வீடுகள் வழங்கும் திட்டம் என பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவை மட்டுமல்லாமல், அனைவருக்கும் கட்டணமில்லா கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடை நிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நான்கு சீருடைகள், காலணிகள், புத்தகப் பை, வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, பூகோள வரைபடம், பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை விலையில்லாமல் மாணவ–மாணவியருக்கு வழங்கப்பட்டு



வருகின்றன. மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு மடிக் கணினிகள் வழங்கப்படுகின்றன. மேல்நிலைப் படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. பயிலும் மாணவ–மாணவியருக்கு சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. உயர்கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம், 22 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. தருமபுரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மேலும் இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள், 10 பாலிடெக்னிக்குகள் மற்றும் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் 1,70,000க்கும் மேற்பட்ட வேலை

வாய்ப்புகளை வழங்கி இளைய சமுதாயத்தினருக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தற்போதுள்ள பொருளாதாரச் சூழலில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை மிகுந்த வளம் செழிக்கும் மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதையும்; மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளை அனைத்துத் துறைகளிலும் உருவாக்க வேண்டும் என்பதையும்; மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்க வேண்டும் என்பதையும்; வேளாண் மற்றும் தொழில் துறைகளில் மகத்தான வளர்ச்சியை எய்த வேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் – 2023 வகுக்கப்பட்டுள்ளது.

தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளை அளித்திட உத்தரவிட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது. இலங்கை அப்பாவித் தமிழர்கள் மீது போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும்; தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில்; அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்; மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் துணிச்சலுடன் தீர்மானம் நிறைவேற்றினேன். இலங்கை ராணுவத்தினருக்கு தமிழ்நாடு உட்பட இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் இன்னமும் கிடைக்கவில்லை என்பதால், அதற்கு நம் தமிழகத்தின் எதிர்ப்பை, உணர்வுகளை தெரிவிக்கும் வகையில் இலங்கையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப்பதை தடை செய்தேன். இவை காரணமாக, தமிழக மக்கள் மட்டுமல்லாமல், உலக வாழ் தமிழர்களும் எனது அரசின் நடவடிக்கைகளை பாராட்டி

வருகின்றனர். எனினும் இலங்கையிலிருந்து சுற்றுலா, ஆன்மீகப் பயணம் போன்றவற்றிற்காக தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சிங்களர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படக் கூடாது என்பதில் எனது அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

ஆனால், தன்னலம் காரணமாக தன்மானத்தை இழந்து இலங்கையில் தமிழினம் அழியக் காரணமாயிருந்தவர், இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது போல் நாடகமாடுகிறார்.

இலங்கையில் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்ட போது, இலங்கை அரசிற்கும், ராணுவத்திற்கும் ஆதரவாக மத்திய அரசு செயல்பட்டது. தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய இடங்களில் மீன் பிடிப்பதை தடுக்கும் வகையில் அவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிற நிலையில், அதற்கு ஒரு வலுவான எதிர்ப்பினை மத்திய அரசு தெரிவிக்கவில்லை. இருப்பினும், மத்திய அரசை எதிர்த்து கேள்வி கேட்க இயலாதவர், இலங்கைத் தமிழர்களுக்காக என கூட்டப்பட்ட கூட்டத்தின் பெயரையே மாற்றிவிட்டார். இவ்வாறு தமிழர் மானத்தை காப்பாற்றுபவர் தான் இலங்கைத் தமிழர் நலன் காக்கும் எனது அரசின் நடவடிக்கையை கண்டிக்கிறார்.

தன்மானம் பெரிது என்று வாழ்பவன் தான் தமிழன். அப்படிப்பட்ட ஒரு நிகழ்வை இந்தத் தருணத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சர். பிட்டி தியாகராயர் என்ற ஒரு மிகப் பெரிய அரசியல் தலைவர். பதவிக்காக எதையும் ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் இல்லாதவர். இவர் சென்னை மாநகராட்சியின் மேயராக சில காலம் இருந்தார். அந்த சமயத்தில், வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்திருந்தார். இளவரசரை வரவேற்பதற்காக பிரம்மாண்டமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்போதைய கவர்னரான லார்டு வெல்லிங்டன் சர் தியாகராயரைப் பார்த்து, " சென்னை மாநகரின் முதல் குடிமகன் என்ற முறையில் இளவரசரை முதலில் நீங்கள் தான் வரவேற்க வேண்டும்" என்று கூறினார்.

அதற்கு சர். தியாகராயரும் சம்மதம் தெரிவித்தார்.

பின்னர் கவர்னரிடமிருந்து வேறு ஒரு தகவல் வந்தது.



"இளவரசரை சந்திக்கும் போது நீங்கள் கோட், சூட் உடையில் தான் இளவரசரை வரவேற்க வேண்டும்" என்பது தான் அந்தத் தகவல்.

உடனே, சர்.பிட்டி தியாகராயர் அரசாங்கத்திற்கு ஒரு பதில் எழுதினார் .

அதில் "என்னுடைய வெள்ளை வேட்டி, வெள்ளைக் கோட்டு, வெள்ளைத் தலைப்பாகை இந்த ஆடைகளோடு என்னை இளவரசர் பார்க்க விரும்பினால் நான் அவரை உளமார வரவேற்கிறேன். இந்த ஆடையுடன் நான் அவரை பார்க்க முடியாது என்று நீங்கள் முடிவெடுத்தால், இளவரசரை வரவேற்கும் பாக்கியம் எனக்கு இல்லை என்று நினைத்து அமைதி பெறுவேன். இளவரசரை வரவேற்பதற்காக நான் என்னுடைய வழக்கமான ஆடைகளை மாற்றிக் கொள்வதற்கில்லை" என்று உறுதிபட தெரிவித்து இருந்தார்.

அப்புறம் என்ன நடந்தது தெரியுமா ?

அந்த ஆங்கிலேய அரசு பணிந்து வந்து, அவருடைய வழக்கமான உடையிலேயே இளவரசரை வரவேற்க அனுமதி அளித்தது.

சர். தியாகராயர் நடந்து கொண்ட விதம் தான் தமிழனின் தன்மானம். அதனால் தான் பிரிட்டிஷ் அரசாங்கம் அவருடைய கோரிக்கையை ஏற்றது.

இத்தகைய தன்மானம் உள்ளவர்கள் இலங்கைத் தமிழர்களைப் பற்றி பேசலாம். மற்றவர்கள் பேசாமல் இருப்பது நல்லது. தன்னலம் காரணமாக தன்மானத்தை இழந்தவர்கள் இலங்கைத் தமிழர்கள் நலனை சீர்குலைக்கும் இலங்கை அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எனது நடவடிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்.

ஒரு ஊரில் ஒரு பெரும் வியாபாரி இருந்தார். அந்த வியாபாரி சில காலம் வேறொரு சிறிய வியாபாரியுடன் இணக்கமாக இருந்து வியாபாரம் செய்து வந்தார். சில காலத்திற்கு பின் அவர்களிடையே பிணக்கு ஏற்பட்டது. உடனே, அந்த பெரும் வியாபாரி, இந்த சிறிய வியாபாரி தவறு செய்ததாகவும், தன்னை ஏமாற்றியதாகவும், அவரிடம் பணிபுரிபவர்களை கொத்தடிமைகளாக நடத்துவதாகவும் கூறி அவர் மீது புகார் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டினால் கவலையடைந்த அந்த சிறிய வியாபாரி, தனது நண்பன் மூலம் ஒரு பெரிய வழக்கறிஞரை அணுகினான். ஆனால் அந்த வழக்கறிஞர் தன்னால் இந்த வழக்கை ஏற்று நடத்த முடியாது என்று கூறிவிட்டார். இருப்பினும், அன்று மாலை அந்த சிறிய வியாபாரி வழக்கறிஞர் வீட்டிற்குச் சென்று காத்துக் கொண்டிருந்தார். வழக்கறிஞர் வந்தவுடன், தன் வழக்கிற்காக வாதாட வேண்டும் என்று அவரிடம் மீண்டும் மன்றாடினார் அந்த வியாபாரி. அந்த வியாபாரியின் மீது பரிதாபப்பட்டு, வழக்கினை ஏற்று நடத்த சம்மதம் தெரிவித்தார் அந்த வழக்கறிஞர். வழக்கு தொடர்பான ஆவணங்களை எடுத்து வருமாறு அந்த வியாபாரியிடம் தெரிவித்தார் வழக்கறிஞர்.

இதனையடுத்து, மறுநாள் வழக்கு தொடர்பான ஆவணங்களை வழக்கறிஞரிடம் ஒப்படைத்தார் அந்த வியாபாரி. ஆவணங்களைப் படித்துப் பார்த்த வழக்கறிஞர், இந்த வழக்கினை தன்னால் நடத்த முடியாது என்றும், நீங்கள் வேறொரு வழக்கறிஞரைப் பார்த்து கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

ஆனால் அந்த வியாபாரி, உங்களைத்தான் நம்பி வந்துள்ளேன். இந்த வழக்கினை நீங்கள் தான் வெற்றிகரமாக முடித்துத் தர வேண்டும் என்று வேண்டினான். வியாபாரியின் இந்த வேண்டுகோளினைக் கேட்ட வழக்கறிஞர், தனது பிற பணிகளை ரத்து செய்துவிட்டு வியாபாரியின் வழக்கை எடுத்துக் கொள்ள சம்மதம் தெரிவித்தார். வெகு விரைவில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கறிஞரின் வாதத்தால், அந்த சிறிய வியாபாரி வழக்கிலிருந்து விடுபட்டார். ஆனால் பிறகு அந்த வழக்கறிஞரை சந்திக்கவும் இல்லை; நன்றியும் கூறவில்லை. அந்த வியாபாரியின் நண்பன் வழக்கறிஞரின் வாதத் திறமையால் தான் இந்த வழக்கு வெற்றி பெற்றது என்றார். அதற்கு அந்த வியாபாரி என் மேல் தொடுக்கப்பட்ட வழக்கு உண்மையிலேயே பலவீனமானது. இதில் வழக்கறிஞரின் பங்கு ஒன்றும் இல்லை. பணத்திற்காகத் தான் இந்த வழக்கறிஞர் இதர பணிகளை விட்டு விட்டு வாதாடினார் என்று அந்த வியாபாரி கூறினான். கதையில் வரும் இந்த வியாபாரி கருப்பாக இருப்பார். அவர் நிறம் மட்டும் கருப்பாக இருந்தால் பரவாயில்லை. ஆனால், அவர் உள்ளமும் கருப்பு என்பதை அவர் நிரூபித்துவிட்டார்.

இது போன்று தான், ஒரு சிலர் காரியம் கைகூடும் வரை உடன் இருந்துவிட்டு, பின்பு நம் மீதே பழிச்சொற்களை நாள்தோறும் அள்ளி வீசி வருகிறார்கள்.

ஆனால், யார் என்ன பேசினாலும், என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற குறிக்கோளுடன் மக்கள் நலத் திட்டங்களை நான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

பதவியேற்றது முதல் நான் ஒவ்வொரு முறை உங்களைச் சந்திக்கும் போதும் வளர்ச்சித் திட்டங்களோடும், நலத் திட்ட உதவிகளோடும் தான் சந்தித்திருக்கிறேன். அந்த வகையில், இந்த முறையும் ஏராளமான திட்டங்களை உங்களுக்காக



அறிவிக்க இருக்கிறேன். எவ்வித சாதிபேதமின்றி கூடியிருந்து உண்ண வேண்டும் என்ற கோட்பாட்டிற்கிணங்க திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் நான் தொடங்கி வைத்தேன். இதன்படி, தற்போது தமிழகத்தில் 468 திருக்கோயில்களில் பகல் நேரத்தில் வரும் பக்தர்களின் பசிப்பிணியைப் போக்க அன்னதானத் திட்டம் சிறப்புற நடைபெற்று வருகிறது. இதனை மேலும் விரிவுபடுத்தும் வகையில், திருப்பதி திருமலையில் வழங்கப்படுவது போல் நாள் முழுவதும் அன்னதானம் திட்டத்தை நம் மாநிலத்தில் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதன் முதற்கட்டமாக, ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கும் நாள்தோறும் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அன்னதானம் வழங்கும் திட்டத்தினை இன்று நான் தொடங்கி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவிலே மொத்தம், 27 கோடியே 13 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய, பல்வேறு துறைகளைச் சார்ந்த, திட்டப் பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

'தாய்' திட்டத்தின் கீழ் ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட 120 குக்கிராமங்களில் 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட 390 குடிநீர் வசதி, சாலைப் பணிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகள்;

அந்தநல்லூர் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 7 கிராம ஊராட்சிகளில் 54 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய 100 தெருவிளக்குகள்;

ஒருங்கிணைந்த ஒதுக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின் கீழ் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களில் 3 கோடியே 4 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகள்;

13ஆவது நிதிக்குழு மானியத்தின் மூலம் 1 கோடியே 90 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் பழுது பார்க்கப்பட்ட 11 தார் சாலைப் பணிகள்;

நபார்டு சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் மணிகண்டம், மணப்பாறை மற்றும் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களில் 1 கோடியே 82 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பெற்ற 5 சாலைப் பணிகள்;

உள்கட்டமைப்பு இடை நிரவல் நிதித் திட்டத்தின் கீழ் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்ட 21 அத்தியாவசியப் பணிகள்;

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 50 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பள்ளி உட்கட்டமைப்பு, சிமெண்ட் சாலை, சிறுபாலப் பணிகள் உள்ளிட்ட 26 பணிகள்;

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட சிமெண்ட் சாலைப் பணிகள்;

ஊராட்சி ஒன்றிய பொது நிதி திட்டத்தின் கீழ் 60 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட 21 பணிகள்;

முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புகள்;

திருப்பராய்த்துறை ஊராட்சியில் 7 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட படித்துறை பணி;

ஆகியவற்றை இன்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், 3 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி – குழுமணி – ஜீயபுரம் சாலையில் கட்டி முடிக்கப்பட்ட தடுப்புச் சுவருடன் கூடிய 6 கிலோ மீட்டர் இரு வழித்தடப் பாதை;

மணப்பாறை – குளித்தலை சாலையும், சென்னை – திண்டுக்கல் சாலையும் இணையும் இடத்தில் காட்டாற்றின் குறுக்கே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சிறுபாலம்;

காவேரி இடது கரை சாலையில். அதாவது கும்பகோணத்தான் சாலையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட தடுப்புச் சுவருடன் கூடிய 2 கிலோ மீட்டர் நான்கு வழித்தடப் பாதை;

5 கோடியே 6 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டப் பணிகள்;

கலைப் பண்பாட்டுத் துறையின் சார்பில் 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்ட கலைப்பண்பாட்டுத் துறை வளாகம்;

திருச்சி மாநகராட்சி சார்பில் ஸ்ரீரங்கம், வடக்கு தேவித் தெரு நூலக வளாகம், அம்மா மண்டபம், ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகம் மற்றும் திருவானைக்காவல் ஆகிய இடங்களில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பறைகள்; 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பூக்கள் விற்பனை சந்தை; 23 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மாநகராட்சி பள்ளிக்கூட வளாகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள நூலகம்;

பேரூராட்சிகள் நிர்வாகத்தின் சார்பில் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பெட்டவாய்த்தலை பேருந்து நிலையத்தில் மாற்று திறனாளிகளுக்கான நவீன கழிப்பிடம்; 35 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பில் சிறுகமணி பகுதியில் அமைக்கப்பட்ட தார் சாலைகள்; 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறுகமணி பகுதியில் அமைக்கப்பட்ட 9 சிறுமின் விசை மோட்டார் மற்றும் போர்வெல் பணிகள்; பஜனை மடத் தெருவில் 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்;

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் பெட்டவாய்த் தலையில் 26 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட கால்நடை மருந்தகம்;

அகிலாண்டேஸ்வரி நகர் புதிய முழு நேர கூட்டுறவு நியாய விலைக் கடை மற்றும் அயிலாப்பேட்டை பகுதி நேர கூட்டுறவு நியாய விலைக் கடை ஆகியவற்றை மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்ததில் பெருமிதம் கொள்கிறேன்.

மேலும், ஸ்ரீரங்கத்தில் இருந்து, விழுப்புரம், மதுரை, பழனி, சிவகங்கை, மணப்பாறை, உப்பிலியப்பன் கோவில் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு செல்லும் ஏழு புதிய புறநகர வழித்தட பேருந்துகளை துவக்கி வைத்ததில் பெருமிதம் கொள்கிறேன்.

முதலமைச்சரின் சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 13 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 745 பசுமை வீடுகள் கட்டும் பணிகள்; 5 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 597 வீடுகள் கட்டும் பணிகள், பாலங்கள், சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், மகளிர் சுகாதார வளாகம் உட்பட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில் 32 கோடியே 19 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இதே போன்று, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் சார்பில் ஸ்ரீரங்கத்தில் விடுபட்ட பகுதிகள் மற்றும் ஸ்ரீ ரங்கநாதர்



ஆலய மதில் சுவர் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 24 கோடி ரூபாய் மதிப்பில் புதைவடிகால் வசதி அமைத்தல்; வனத் துறையின் சார்பில் 8 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம் அமைத்தல்; 3 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் அதவத்தூரில் 6,500 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள கிடங்கு அமைத்தல்; 69 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் முத்தப்புடையான்பட்டி கிராமத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள கிடங்கு அமைத்தல்; சுற்றுலாத் துறையின் சார்பில் 3 கோடியே 58 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் கோயிலை மேம்படுத்துதல்; நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருச்சி – குழுமணி – ஜீயபுரம் சாலையில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைத்தல்; 2 கோடியே 59 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்கள்; 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் பஞ்சக்கரை சாலையில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம்; 80 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் உதவி வணிக வரி ஆணையர் அலுவலகக் கட்டடம்; 56 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உத்தமர்சீலி மற்றும் அளுந்தூரில் புதிய கால்நடை மருந்தகங்கள்; 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்; 36 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நலத் திட்டங்கள்; 1 கோடியே 33 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவிலில் புதியதாக அன்னதானக் கூடம் கட்டும் பணி உட்பட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் என மொத்தம் 82 கோடியே 63 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட 619 வீடுகள்; இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட 631 வீடுகள்; வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம்; முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை, விலையில்லா மடிக்கணினி; விலையில்லா மிதிவண்டிகள்; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை; திருமண உதவித் திட்டங்களின் கீழ் நிதியுதவி மற்றும் தங்கக் காசு; விலையில்லா வெள்ளாடுகள்; விலையில்லா கறவை பசுக்கள்; மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பராமரிப்புத் தொகை; விலையில்லா மின் விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் என, 50 கோடியே 62 லட்சத்து 15 ஆயிரத்து 537 ரூபாய் மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை 34,000 பயனாளிகளுக்கு வழங்குவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இதன் அடையாளமாக 34 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நான் இந்த மேடையிலேயே வழங்க உள்ளேன். இதர பயனாளிகளுக்கு அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அந்தந்த பகுதிகளுக்கு நேரில் சென்று வழங்குவார்கள்.

ஸ்ரீரங்கம் வாழ் ஏழை, எளிய மக்களுக்கு சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில், எனது ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் பயிற்சி வகுப்புகளில் கணினி பயிற்சியில் 37 பெண்கள், தையல் பயிற்சியில் 66 பெண்கள் என 103 பெண்கள் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம் அளித்துள்ள சான்றிதழ்களை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவையன்றி, இளைய சமுதாயத்தினருக்கு அவர்களின் கல்வி தகுதிக்கு ஏற்ப தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தரும் வகையில் நான் எடுத்த நடவடிக்கையின் பலனாக, அதன் முதற்கட்டமாக டி.வி.எஸ். நிறுவனத்தின் சார்பாக வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் ஸ்ரீரங்கம் தொகுதியைச் சார்ந்த 43 நபர்கள், பிற தொகுதிகளைச் சார்ந்த 125 நபர்கள் என மொத்தம் 168 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்பு நியமன ஆணைகளை இன்று வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனைத் தொடர்ந்து பிற நிறுவனங்களின் சார்பிலும் வேலை வாய்ப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் நலத் திட்ட உதவிகளை பெற்ற பயனாளிகள்; கணினி மற்றும் தையல் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவர்கள்; தனியார் நிறுவனத்தில் வேலைவாய்ப்பினை பெற்றவர்கள் தங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும், நலங்களையும் பெற்று இன்புற வாழ வேண்டும் என்றும் வாழ்த்தி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக
ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு பேரவைத் தலைவர்
திரு. ப. தனபால் அவர்களை வாழ்த்தி பாராட்டி
ஆற்றிய உரை – (10.10.2012)



ஜனநாயகம் தழைத்தோங்கும் வகையில் சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகம் என்பது பண்பட்டதும், பயனுடையதும், ஆற்றல் மிகுந்ததும், அருமை வாய்ந்ததுமான ஆட்சி முறையாகும். ஆள்பவர், ஆளப்படுபவர் என்ற பேதம் இல்லாமல், நாட்டில் உள்ள அனைவரின் நன்மையையும், முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டதுதான் ஜனநாயகம் ஆகும். ஜனநாயகத்தில் மக்கள்தான் அரசின் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றனர். இப்படிப்பட்ட உயரிய ஜனநாயக ஆட்சியில்

சுதந்திரமாகக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் இடமாக இந்தச் சட்டமன்றம் திகழ்கின்றது.

வரலாற்றுச் சிறப்பும், பெருமையும் கொண்டு விளங்குகிற இந்தப் பேரவையின் தலைவராகத் தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு எனது பாராட்டினை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் உள்ள பல அரசியல் தலைவர்களும் பாராட்டும் அளவிற்கு சிறந்து விளங்கும் இந்தப் பேரவையில் தாங்கள் பேரவைத் தலைவராக வீற்றிருப்பது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பேரவை, வேற்றுமையில் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே தாங்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும், இந்த நிமிடம் முதல் அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சி வேறுபாடின்றி நியாயமான தீர்ப்பினை வழங்கக் கூடிய பொறுப்பினைத் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்கள் இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுவானவர். இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பாதுகாவலராகத் தாங்கள் விளங்குகின்றீர்கள்.

சட்டமன்ற வரலாற்றிலேயே சட்டமன்ற விதிகளையும், மரபுகளையும் கரைத்துக் குடித்தவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் என்று சொல்வார்கள். "மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது" என்ற பழமொழிக்கேற்ப, தோற்றத்திலே சிறியவராக இருந்தாலும், அவையை நடத்துவதிலும், ஆங்கிலத்தில் உரையாடுவதிலும் கைதேர்ந்தவர். மிகச் சிறந்த பேரவைத் தலைவர் என அனைத்துக் கட்சியினராலும் பாராட்டப் பெற்றவர்.

இவரைப் போன்றே, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும் நடுநிலையோடு செயல்பட்டார். 1957 முதல் 1962 வரை பேரவைத்



தலைவராக இருந்தார். அப்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவரைப் பாராட்டுகையில், "நான் அந்த ஐந்து வருடங்களில் – பெருமையோடு சொல்லிக் கொள்வேன் – எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தாலும், அப்பொழுது சட்டமன்றத் தலைவராக இருந்த, மறைந்த டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் யாரும் வருத்தப்படத் தக்க விதத்தில் ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை" என்று கூறினார். அந்த அளவுக்கு நடுநிலைமையுடன் செயல்பட்டவர் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள்.

இதைப் போன்றே, திரு. எஸ். செல்லபாண்டியன், திரு. என். கோபால மேனன் என பல முன்னாள் பேரவைத் தலைவர்கள் இந்தப் பேரவையை நடுநிலைமையுடன் நடத்தி, பேரவையின் கண்ணியத்தையும், புகழையும் நிலைநாட்டியுள்ளார்கள்.

சட்டமன்ற ஜனநாயகம் என்பது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றை முழு அளவில் உறுதிப்படுத்தும் ஒரு சீரிய அமைப்பாகும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களது ஜனநாயகக் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். உண்மையை உரைப்பவர்களாகவும்;உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களாகவும்; மாற்றாரை மதிக்கும் தன்மை கொண்டவர்களாகவும்; நியாயத்திற்குத் தலை வணங்குகிறவர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும். சட்டமன்ற ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகப் பண்புகளை எந்த ஒரு சூழ்நிலையிலும், எந்த ஒரு நெருக்கடியிலும் செம்மையாகக் கட்டிக்காக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக சட்டமன்றத்திலே பொதுப் பிரச்சினைகளான வறுமை ஒழித்தல்; வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்; குடிநீர் வசதிகள் செய்து தருதல்; உற்பத்தியைப் பெருக்குதல்; பொருளாதாரத்தை மேம்படுத்துதல்; தொழில் வளத்தைப் பெருக்குதல்; வாழ்வில் மக்கள் முன்னேற்றம் அடையச் செய்தல் ஆகியவற்றைப் பற்றி உறுப்பினர்களிடையே கருத்தொற்றுமை உண்டு. இந்தக் கொள்கைகளில் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் எந்தவித வேறுபாடும் இருக்க முடியாது. அதே சமயத்தில், அதை நிறைவேற்றுகின்ற முறையில், திட்டங்களின் வடிவமைப்பில் வேறுபாடுகள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறு ஒருமனதாக, அதாவது unanimous ஆக முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில், வேறுபாட்டினை ஒற்றுமையின் அடிப்படையில்; உடன்பாட்டின் அடிப்படையில்; அதாவது consensus-ன் அடிப்படையில் களைவதுதான் சிறந்த ஜனநாயக முறையாக இருக்கும். இல்லையெனில் ஜனநாயகம் செயலிழந்து, பேச்சு சுதந்திரம் மட்டுமே மிஞ்சி இருக்கும். எனவே, ஜனநாயகம் தழைத்தோங்கும் வகையில் உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆளுங்கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் ஒரு வாதத்தை முன்னிறுத்தும் போதும்; குற்றச்சாட்டை எழுப்பும் போதும்; அதற்கு ஆளும் கட்சி சார்பிலே மறுப்புத் தெரிவிக்கும் போதும்; விவாதத்தில் அனல் பறக்கும். அந்த சமயத்தில் ஆளும் கட்சியின் சார்பில் முதலமைச்சரும்; எதிர்க்கட்சிகளின் சார்பில் அனுபவம் வாய்ந்த மூத்த உறுப்பினர்களும் பதற்றத்தைத் தணிப்பதில் ஈடுபடுவார்கள். இது தேவை தான். அதே சமயத்தில், ஒரு செய்தியை, ஒரு நிகழ்வை வைத்துக் கொண்டு, மனம் போன போக்கில் பேசி, திட்டமிட்டு அவையில் அமளியை உருவாக்க நினைப்பது என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இதுபோன்றதருணங்களில்,உறுப்பினர்கள்உண்மையிலேயே தங்களுடைய கருத்தை எடுத்துரைத்து வாதாடுகிறார்களா; அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, குறை கூறி அமளியை ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் செயல்படுகிறார்களா என்பதை அறிந்து அதற்கேற்ப கண்டிப்புடன் செயல்பட வேண்டிய நிலையும் பேரவைத் தலைவராகிய உங்களுக்கு ஏற்படும்.

பேரவையின் விதிகளையும், மரபுகளையும், முன்னாள் பேரவைத் தலைவர்களின் நல்ல தீர்ப்புகளையும் கருத்தில் கொண்டு, இந்தப் பேரவையினை சட்டத்தின் அடிப்படையில் நடத்திச் செல்வதில் தாங்கள் அக்கறையும், ஆர்வத்தையும் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்லாமல் இங்குள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கின்றது. இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரின் உரிமையையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக் கூடிய தாங்கள் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில், பின்தங்கிய பகுதியில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த முதல் பேரவைத் தலைவர் தாங்கள் தான் என்பதிலும், முதன் முறையாக அருந்ததியர்

சமுதாயத்தைச் சார்ந்த தாங்கள் இந்தப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளீர்கள் என்பதிலும்; எனக்கு மிக்க மகிழ்ச்சி. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் தாங்கள் வரலாறு படைத்திருக்கிறீர்கள்.

மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1972இல் துவக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 1972ஆம் ஆண்டு முதலே தங்களை இணைத்துக் கொண்டு, அந்த இயக்கத்தின் கொள்கைகளுக்காகத் தாங்கள் சிறந்த முறையில் பாடுபட்டு இருக்கிறீர்கள். கட்சியில் பல்வேறு பொறுப்புகளைத் தாங்கள் வகித்து இருக்கிறீர்கள். பொதுமக்களோடு, குறிப்பாக ஏழை, எளிய மக்களோடு நெருக்கமான தொடர்பும், உறவும் கொண்டவராகத் தாங்கள் விளங்கியிருக்கிறீர்கள். 1977ஆம் ஆண்டிலிருந்து 1988ஆம் ஆண்டு வரை தொடர்ந்து மூன்று முறை சங்ககிரி தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம் திறம்படப் பணியாற்றி இருக்கிறீர்கள். 2001ஆம் ஆண்டு மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள், அமைச்சராகப் பொறுப்பேற்று ஆதிதிராவிடர் நலன், உணவு மற்றும் கூட்டுறவு இலாகாக்களைத் திறம்பட நிர்வகித்து இருக்கிறீர்கள். தற்போது ஐந்தாவது முறையாக ராசிபுரம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் கடந்த 16 மாத காலமாகப் பேரவைத் துணைத் தலைவராகப் பணியாற்றி இருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் தங்களுக்கு உண்டு.

அனைவரிடத்திலும் அன்புடன் பழகும் தன்மை; பொதுமக்களோடு நெருங்கிப் பழகும் விதம்; நீண்ட நாட்களாக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவம்; அமைச்சராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும்

பணியாற்றிய அனுபவம் ஆகியவற்றின் காரணமாகத் தற்போது ஏற்றுள்ள பொறுப்பினைத் தாங்கள் திறம்பட வகிப்பீர்கள்; அதன் மூலம் அனைவரது பாராட்டினையும் பெறுவீர்கள் என்பதில் இரு வேறு கருத்திற்கு இடமில்லை.

மாட்சிமை மிகுந்த இந்தச் சட்டப் பேரவையின் பெருமையையும், புகழையும் நிலை நிறுத்துவதிலே தங்களுடைய அறிவும், அனுபவமும், ஆற்றலும் நிச்சயம் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கேற்ற அத்தனைத் திறனையும் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

வீணையிலிருந்து சரியான இசை வர வேண்டும் என்றால், அதனுடைய தந்திகள், அதாவது வீணையின் நரம்புகள் இறுக்கமாகவும் இல்லாமல், தளர்வாகவும் இல்லாமல் நடுநிலைமையில் இருக்க வேண்டும். அது போல், இந்த அவை சீரோடும், சிறப்போடும் நடைபெற வேண்டுமென்றால் அதற்கு இன்றியமையாததாக விளங்குவது நடுநிலைமை. அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடுநிலைமை தங்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளதால், இந்த அவையைச் சீரோடும், சிறப்போடும் தாங்கள் நிச்சயம் நடத்துவீர்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொண்டு, தங்களுடைய தலைமையின் கீழ் இந்தப் பேரவையின் கண்ணியம் மேலும் சிறப்புறும் என்று சொல்லி, அனைவரின் பாராட்டுதல்களுக்கும் உரியவரான தங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில்
சீருடைப் பணியாளர்களுக்கான 'உங்கள் சொந்த இல்லம்'
திட்ட வீடுகளுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – (26.10.2012)



தலைக்கு மேல் கடன் என்பதற்கு பதிலாக தலைக்கு மேல் வீடு என்ற நிலை காவல் துறையினருக்கு உருவாகும்

சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதிலும், மக்களின் துன்பங்களைத் துடைப்பதிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வரும் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும், மற்றும் அனைத்துச் சீருடைப் பணியாளர்களுக்கும் சொந்த இல்லம் கட்டித் தரப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், முதற்கட்டமாக இன்று மேலக்கோட்டையூரில் 2,673 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, உங்களிடையே உரையாடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் பணி என்பது கடினமானப் பணி. சட்டம் ஒழுங்கினைப் திறம்படப் பராமரிப்பது; குற்றங்கள் நிகழாமல்

தடுப்பது; நிகழ்ந்துவிட்ட குற்றங்களைப் புலனாய்வு செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது; அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவது; போன்ற கடினமானப் பணிகளைக் காவல்துறை மேற்கொண்டு வருகிறது.

ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு இன்றியமையாததாக விளங்குவது காவல்துறையின் பணி ஆகும். மனித சமுதாயத்தை நெறிப்படுத்த வகுக்கப்படும் சட்டங்களை நிலைநாட்டுபவர்கள் காவல் துறையினர்.

ஒரு நாடு நல்லதொரு பொருளாதார வளர்ச்சியினை, சமுதாய மேம்பாட்டினை அடைய வேண்டுமானால் அங்கு அமைதி நிலவ வேண்டும். ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக வேண்டும். இந்த அரிய பணியினை ஆற்றி வரும் துறையாகக் காவல்துறை விளங்குகிறது.

பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளிப்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரமும், மன நிறைவும் அளிக்கும் மகத்தான பொறுப்பும் காவல்துறையிடம் தான் இருக்கிறது.

இதே போன்று, புயல், மழை, வெள்ளம், நில நடுக்கம், தீ விபத்துக்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் மக்கள் அல்லல்படும்போது அவர்களை அரவணைக்கும் கடமையினைத் தீயணைப்புத் துறையினர் ஆற்றி வருகின்றனர்.

குற்றவியல் நீதிமுறையின் அங்கமாக விளங்கும் சிறைத் துறைப் பணியாளர்கள் சிறைக் கைதிகளை சீர்திருத்துவது, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது, மீண்டும் குற்றம் இழைக்கா வண்ணம் அவர்களை நல்வழிப்படுத்துவது போன்றவற்றை இலட்சியமாகக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள்.

சீருடைப் பணியாளர்களின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், காவல் துறையினருக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற

நோக்கத்தில் 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தை ஏற்படுத்தினார். இந்தக் கழகம் காவல் துறையினருக்குப் பல வீடுகளைக் கட்டித் தந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினை அடுத்து தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூடப்பட்டது. பின்னர் 1991ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் இதற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தேன். இதனையடுத்து, காவல் துறைப் பணியாளர்களுக்கான வீட்டு வசதிப் பணிகள் மும்முரமாகச் செயல்படத் துவங்கின.

இது மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பணியினை மேற்கொண்டு வரும் சீருடைப் பணியாளர்களின் நலன்களைக் காக்கும் வகையில், அவர்களுக்கென மானிய விலையில்பொருட்களைவழங்கும்வகையில்சிறப்புஅங்காடிகளை அமைத்ததுடன், அவர்களுக்கு வழங்கப்படும் இடர்ப்படி, உணவுப்படி ஆகியவற்றையும் உயர்த்தி வழங்கியுள்ளேன். காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களின் மேற்படிப்பிற்கான கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்கியுள்ளேன். காவல் துறைப் பணியாளர்கள் பணியில் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கியுள்ளேன்.

இது தவிர, காவல் துறையை நவீனப்படுத்தும் வகையிலும்; வலிமைப்படுத்தும் வகையிலும்; அதி நவீன ஆயுதங்களை வாங்குதல்; காவல் நிலையங்களைப் புதுப்பித்தல்; புதிய வாகனங்களை வாங்குதல்; புதிய காவல் நிலையங்களைத் தொடங்குதல் போன்றவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறேன். தமிழகத்தில் மொத்தம் உள்ள 1,12,363 காவல் பணியாளர்களில் 50,424 பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், 7,526 பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அனைவருக்கும் குடியிருப்பு வசதி செய்து தருவதற்கான கொள்கை முடிவையும் எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதிகரித்து வரும் மக்கள் தொகை, அதனால் ஏற்படும் சிக்கல்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், நவீனத் தொழில்நுட்பம், ஆகியவை சீருடைப் பணியாளர்களுக்குக் கடுமையான பிரச்சினைகளை உருவாக்குகின்றன. தற்போது அவர்களின் பணி சிக்கலானதாகவும், சிரமமானதாகவும் மாறியிருக்கிறது.

இருப்பினும், தமிழகத்தில் "அமைதி" தொடர்ந்து நிலைநாட்டப்பட வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் காவல் துறையினர் பணியாற்றி வருகின்றனர். எந்த ஒரு குறிக்கோளினை அடைவதற்கும் இலட்சியம் மிகவும் அவசியம்.

"வாழ்க்கையில் இலட்சியம் கொண்டிருப்பவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஓர் ஊரில் ஓர் ஆசிரமம். அந்த ஆசிரமத்தைச் சுற்றி ஏராளமான செடி, கொடிகளும், மாமரங்களும் இருந்தன. அந்த ஆசிரமத்தைக் கடந்து சென்றால் அங்கே ஒரு பள்ளிக்கூடம்.



தினமும் அந்த ஆசிரமத்தின் வழியாகத்தான் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வார்கள். காலையில் மாணவர்கள் அந்த வழியாகப் பள்ளிக்குச் செல்வதையும்; மாலையில் வீடு திரும்புவதையும் ஒரு பெரியவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பெரியவருக்கு ஓர் ஆச்சரியம்!

மாணவர்கள் காலையில் அந்த வழியாகப் போகிற போது அங்கே இருக்கும் மாமரங்களைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் போவார்கள்.

ஆனால், மாலையில் திரும்புகிறபோது அப்படி இல்லை. அவர்களுடைய குணம் முற்றிலும் மாறிவிடும். ஆளுக்கொரு கல்லைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். மாம்பழங்களைக் குறி வைத்துக் கற்களை எறிவார்கள். பழங்கள் கீழே விழுந்ததும் அதை எடுத்துக் கொள்வார்கள். ஒரே ஆட்டமும், பாட்டமுமாக இருக்கும்.

காலையில் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகும் மாணவர்கள் மாலையில் மட்டும் ஏன் இப்படிக் குறும்பு செய்கிறார்கள் என்று யோசிக்க ஆரம்பித்தார் அந்தப் பெரியவர்.

ஒரு நாள் ஒரு மாணவனைக் கூப்பிட்டார்.

அந்த மாணவனிடம் "தம்பி, காலையில் ஒழுங்காக அமைதியாகப் போகிறீர்கள். மாலையில் மட்டும் இப்படிக் கல் எறிந்து குறும்பு செய்கிறீர்களே? ஏன்? என்று கேட்டார்" அந்தப் பெரியவர்.

அதற்கு அந்தச் சிறுவன், ‘‘காலையிலே நாங்கள் சரியான நேரத்திற்குப் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். பாடங்களைப் படிக்க வேண்டும். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். இல்லையென்றால், ஆசிரியரிடம் திட்டு வாங்க வேண்டும், உதை வாங்க வேண்டும். ஆனால், மாலையில் அப்படி இல்லை. வீட்டுக்கு எப்பொழுது வேண்டும் என்றாலும் செல்லலாம். அதனால் தான் குறும்புகள் செய்கிறோம்’’ என்றான்.

இதைக் கேட்ட பிறகுதான் அந்தப் பெரியவருக்கு ஓர் உண்மை தெரிய வந்தது. இந்த மாணவர்கள் காலையில் இந்த வழியாகப் போகிறபோது, ஒரு குறிக்கோளுடன் செல்கிறார்கள். அதனால் எந்தக் குறும்பும் செய்வதில்லை. ஆனால், மாலையில் திரும்புகிற போது அந்தக் குறிக்கோள் இல்லாததன் காரணமாக அவர்கள் குறும்பு செய்கிறார்கள் என்பது புரிந்தது.

காலையில் குறிக்கோளுடன் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் போல, அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் அனைத்து நேரங்களிலும் பணியாற்றுபவர்கள் நம்முடைய காவல் துறையினர். ஒரு மாநிலத்தின் காவல் துறை உயர்ந்த குறிக்கோளுடன் செவ்வனே பணியாற்றுவது என்பது அந்த நாட்டை ஆளும் தலைவரின் தலைமைப் பண்பைப் பொருத்தே அமையும். எனவேதான், தமிழகக் காவல் துறையினர் தற்போது உயர்ந்த குறிக்கோளுடன் செயல்பட்டு வருகின்றனர்.

அரசு ஊழியர்கள் அனைவருக்குமே 24 மணி நேரப் பணி என்பது பொருந்தும் என்றாலும், வழக்கமாக அலுவலக நேரத்திலேயே அவர்களுடைய பணிகளை அவர்களால் முடிக்க இயலும். மேலும், ஒரு சில மேம்பாட்டுப் பணிகளை, நிவாரணப் பணிகளை அவர்கள் செய்தால் அதற்குரிய பாராட்டு அரசு ஊழியருக்குக் கிடைக்கிறது. உதாரணமாக, வறுமையில் வாடும் முதியோருக்கு, குடும்ப ஓய்வூதியத்தை ஓர் அரசு ஊழியர் பெற்றுத் தருகிறார் என்றால் அதற்கான பாராட்டு அவருக்குக் கிடைக்கிறது. அந்தப் பலனைப் பெற்றவர் நன்றி தெரிவிக்கிறார்.

இதன் காரணமாகப் பணியில் திருப்தி ஏற்படுகிறது. பலன் பெற்றவரும் மகிழ்ச்சியடைகிறார். பலன் பெற்றுத்தரக் காரணமாக இருந்தவரும் மகிழ்ச்சியடைகிறார்.

ஆனால், காவல் துறையினரின் நிலை இதிலிருந்து முற்றிலும் மாறுபடுகிறது. காவல் துறையினரைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட மணி நேரப் பணி என்பது எட்டாக் கனியாகவே விளங்குகிறது. சட்டம் ஒழுங்கினைக் காக்கும் பொருட்டும், குற்றவாளிகளைத் தேடும் பொருட்டும் பணி நிமித்தமாகப் பல நாட்களில் தங்கள் குடும்பங்களை விட்டு வெளியூருக்குச் செல்லக் கூடிய நிலைமை காவல் துறையினருக்கு ஏற்படுகிறது. சில சமயங்களில் குடும்பத்தை நினைத்துப் பார்க்கக் கூட முடியாத சூழ்நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது. காவல் துறையினரால் பயனடைந்தவர் காவல் துறையின் பணியினைப் பாராட்டினால், அதனால் பாதிக்கப்படுபவர் வசை பாடுகிறார். எடுத்துக்காட்டாக, நில அபகரிப்பு வழக்கில், நிலத்தை அபகரித்தவர் மீது நடவடிக்கை எடுத்து, நிலத்தை உரிமையாளரிடம் மீட்டுக் கொடுத்தால், நிலத்தின் உரிமையாளர் காவல் துறையைப் பாராட்டுகிறார். அதே சமயத்தில், நிலத்தை அபகரித்தவர், காவல் துறை பொய் வழக்குப் போட்டுவிட்டதாகக் காவல் துறையைச் சாடுகிறார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நன்றி பாராட்டப்படாத பணியாக, அதாவது thankless job-ஆக காவல் துறை பணி விளங்குகிறது.

இப்படி குடும்பத்தைப் பிரிந்து, சட்டப்படி எடுக்கும் நியாயமான நடவடிக்கைக்குக்கூட வசைமாரிகளைப் பெற்றுக் கொண்டு, இரவு பகல் பாராமல், இலட்சியத்துடன் ஓய்வில்லாமல், பணியாற்றும் காவல் துறையினர், ஓய்வு பெற்ற பிறகு அமைதியான சூழலில் மன நிம்மதியுடன் வாழ வேண்டும் என்பதன் அடிப்படையில்தான், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று நான் அறிவித்தேன். அந்த அறிவிப்பிற்கிணங்க, அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் இன்று இங்கே 2,673 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டியதுடன் 36 சீருடைப் பணியாளர்களுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை இந்த மேடையிலேயே நான் வழங்க



உள்ளேன். மற்றவர்களுக்கும் இந்த ஒதுக்கீட்டு ஆணைகள் இன்றே வழங்கப்படும்.

"கல்யாணம் பண்ணிப் பார்! வீட்டைக் கட்டிப் பார்!" என்று சொல்வார்கள். அதாவது வீடு கட்டுவது என்பது சாதாரண காரியம் அல்ல.

சொந்தமாக ஒரு வீட்டை கட்டியே தீர வேண்டும் என்ற குறிக்கோளுடன் வீடு கட்டிக் கொண்டு இருந்தார் ஒரு பெரியவர்.

அந்தப் பெரியவரிடம் சென்று "வீடு கட்டும் வேலைகள் நன்றாக நடக்கிறதா ?" என்று கேட்டார் ஒரு விவசாயி.

அதற்கு அந்தப் பெரியவர், "ஏதோ கட்டிக் கொண்டிருக் கிறேன். ஆனால், ரொம்ப கஷ்டமாக இருக்கிறது" என்றார்.

உடனே அந்த விவசாயி, "அது தான் சொந்த வீடு கட்டிக்கிட்டு இருக்கீங்களே" என்றார்.

அதற்கு அந்தப் பெரியவர், "கடன் வாங்கித்தான் கட்டுகிறேன். முதலில் நிலம் வாங்கக் கடன் வாங்கினேன். அடுத்து, கொஞ்சம் கடன் வாங்கி அதில் அஸ்திவாரம் போட்டேன். அதற்குப் பிறகு கடன் வாங்கி இடுப்பளவு சுவர் எழுப்பினேன். அப்புறம் கொஞ்சம் கடன் வாங்கினேன். இப்போது கழுத்தளவுக்கு உயர்ந்துவிட்டது," என்று சொல்லிக் கொண்டே போனார்.

உடனே அந்த விவசாயி, "இப்ப எந்தளவுக்கு உயர்ந்தி ருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர், "தலைக்கு மேல் போய்விட்டது" என்றார்.

"வீடா?" என்று கேட்டார் அந்த விவசாயி.

"இல்லை, கடன்" என்றார், அந்தப் பெரியவர்.

எனது தலைமையிலான இந்த அரசின் நடவடிக்கை மூலம் சீருடைப் பணியாளர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியிருக்கிறது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் எந்தவித லாப நோக்கமும் இல்லாமல் குறைந்த செலவில் காவல் துறையினருக்கு இந்தப் பணியினை செய்ய இருக்கிறது. இதன் மூலம் "தலைக்கு மேல் கடன்" என்பதற்குப் பதிலாக "தலைக்கு மேல் வீடு" என்ற நிலை காவல் துறையினருக்கு உருவாகும்.

இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே செயல் படுத்தப்பட்டு அனைத்துச் சீருடைப் பணியாளர்களும் தங்கள் பணிக் காலத்திலோ அல்லது பணிக் காலத்திற்குப் பிறகோ சொந்த இல்லத்தில் வாழுகின்ற நிலை நிச்சயம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

தமிழ்நாட்டின் மின்நிலைமை குறித்து தொலைக்காட்சியில் ஆற்றிய உரை – (26.10.2012)



மின் உற்பத்தியில் உபரி மாநிலமாகத் தமிழ்நாடு மறுபடியும் திகழும்

அன்பார்ந்த தமிழக மக்களே,

உங்களுக்காக நான் என்பது மட்டுமல்லாமல், உங்களால் நான் என்ற உணர்வோடு உங்களின் அடிப்படைத் தேவைகளையும்; தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக விளங்குவது, மின்சாரம். மின்சாரத்தின் தேவை என்பது சுவாசிக்கும் காற்றைப் போல இன்றியமையாததாக விளங்குகிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மின்சாரத்தை, தட்டுப்பாடின்றிப் பெற முடியாமல் நீங்கள் எல்லாம் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இது மிகவும் வருந்தத்தக்கது. இதற்கு நானோ, எனது தலைமையிலான அரசோ, காரணமல்ல என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் நிலவும் மின் தட்டுப்பாட்டிற்கான காரணங்கள், மற்றும் அதைப் போக்குவதற்காக நான் எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பற்றி உங்களுடன் சில உண்மைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலங்களில், அதாவது 1991 முதல் 1996 வரையிலான ஆட்சிக் காலத்திலும்; மற்றும் 2001 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்திலும், மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமல், மின்சாரம் சீராக அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டு வந்தது.

2006ஆம் ஆண்டு நான் ஆட்சியை விட்டுச் சென்ற போது, தமிழ்நாடு மின்சாரத்தில் உபரி மாநிலமாகத்தான் இருந்தது. இது மட்டுமல்லாமல், உபரியாக உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் வேறு மாநிலங்களுக்கு விற்கப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டது.

2006இல் நாங்கள் ஆட்சியில் இருந்தவரை, தமிழ்நாடு மின்சாரத்தில் உபரி மாநிலமாக இருந்தாலும், எதிர்காலங்களில் மின்சாரத் தேவை அதிகரிக்கும் என்பதை உணர்ந்து, தொலைநோக்குப் பார்வையோடு, நான் ஆட்சியில் இருக்கும் போதே பல பெரிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டி, அவற்றிற்குத் தேவையான ஆயத்த பணிகளைச் செய்ய நான் நடவடிக்கை எடுத்தேன். அந்த நேரத்தில் தேர்தல் வந்தது; ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

2006இல் ஆட்சிக்கு வந்த திரு. கருணாநிதி தலைமையிலான மைனாரிட்டி தி.மு.க. அரசு, நாங்கள் ஆரம்பித்து வைத்த புதிய மின் உற்பத்தி திட்டங்களுக்கான பணிகளை, அதே உத்வேகத்துடன் தொடர்ந்திருந்தால், 2006–2011 வரையிலான காலகட்டத்தில்

பல புதிய மின் நிலையங்கள் செயல்படத் துவங்கியிருக்கும். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரம் தங்குதடையின்றிக் கிடைத்திருக்கும். ஆனால், இதைச் செய்ய முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு தவறிவிட்டது.

அதாவது, எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, நாங்கள் தொடங்கி வைத்த புதிய மின் திட்டங்களுக்கான பணிகளை அதே வேகத்துடன் தொடராமல், வேண்டுமென்றே, திரு.கருணாநிதி தலைமையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு மெத்தனமாக இருந்துவிட்டது. இது திரு. கருணாநிதியால் தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்ட முதல் துரோகமாகும்.

2006ஆம் ஆண்டு நான் ஆட்சியை விட்டுச் சென்ற போது, தமிழகத்தின் மின் நிறுவு திறன், 10,100 மெகாவாட்டாக இருந்தது. 1991 முதல் 1996 வரையிலான எனது முதல் ஆட்சிக் காலத்தில், ஒட்டுமொத்தமாக 1,302 மெகாவாட் மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான எனது 2ஆவது ஆட்சிக் காலத்தில் ஒட்டுமொத்தமாக 2,518 மெகாவாட் மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டது. ஆனால், 2006 முதல், 2011 வரையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கூடுதலாக, வெறும் 206 மெகாவாட் மின் நிறுவு திறன் மட்டுமே சேர்க்கப்பட்டது. எதிர்காலத்தில் மின் தேவை அதிகரிக்கும் என்பது தெரிந்து இருந்தும், ஒரு புதிய பெரிய மின் உற்பத்தித் திட்டத்தை நிறுவி அதை செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 3 அல்லது 4 ஆண்டுகாலம் பிடிக்கும் என்பது புரிந்து இருந்தும், புதிய மின் திட்டங்களைத் தொடங்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல், முந்தைய திரு. கருணாநிதி அரசு வெறும் 206 மெகாவாட் மின் நிறுவு திறனை மட்டுமே சேர்த்தது. அதே சமயத்தில், இயற்கையாகவே தமிழகத்தின் மின்சாரத் தேவை அதிகரித்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த மின்சாரத் தேவை 12,000 மெகாவாட் என்ற நிலை உருவாகியுள்ளது. சரியான பராமரிப்பு இல்லாததால், தமிழகத்தின் மின் உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்து, நிருவாகத் திறமையின்மையால் மின் உற்பத்தி குறைந்தது.

ஒட்டுமொத்தமாக 4,000 மெகாவாட் அளவுக்கு மின் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது.

இந்த மின் பற்றாக்குறையை ஈடு செய்ய, புதிய மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யவில்லை. மேலும், நீண்டகால அடிப்படையில் வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால், வாங்கப்படும் மின்சாரத்தின் விலை குறைவாக இருந்திருக்கும். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரம் இப்போதும் கிடைத்திருக்கும். ஆனால் அவ்வாறு, நீண்டகால அடிப்படையில் முந்தைய தி.மு.க. அரசு மின்சாரத்தை வாங்கவில்லை. குறுகிய கால அடிப்படையில், அதிக விலையில், மின்சாரம் வாங்கப்பட்டது. அதாவது, வேண்டுமென்றே, சுய நல நோக்கத்துடன் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்க வேண்டும் என்பதற்காகவே, தமிழ்நாட்டின் மின் உற்பத்தி திட்டமிட்டே குறைக்கப்பட்டது. இது திரு. கருணாநிதி செய்த இரண்டாவது துரோகம். இதனால் தமிழ்நாடே இருளில் மூழ்கியது.

இந்தத் தருணத்தில் தான், 2011இல் மீண்டும் சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. நீங்கள் எங்களுக்கு வாக்களித்தீர்கள். உங்கள் ஆதரவுடன் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை 2011ஆம் ஆண்டு ஏற்றது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமை அதல பாதாளத்தில் இருந்தது. இதுவரை தமிழக அரசின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு, 40,375 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பை ஏற்படுத்தி, கடும் கடன் சுமைக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு ஆளாக்கி விட்டுச் சென்றது. இதன் காரணமாக, இனிமேல் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, கடன் எதுவும் கொடுக்கக் கூடாது என வங்கிகளுக்கு பாரத ரிசர்வ் வங்கி உத்தரவிட்டது.

இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையில்தான் நான் மீண்டும் முதலமைச்சரானேன். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன்,

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமையைச் சீர் செய்வதற்கு ஏதுவாக, மிக இக்கட்டான பொருளாதார நெருக்கடியிலும் கூட, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிதியை தாராளமாக வழங்கி, தமிழ்நாட்டின் மின்சாரப் பற்றாக்குறையைச் சீர் செய்ய பகீரத முயற்சிகளை நான் மேற்கொண்டு வருகிறேன்.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி குறைவாக இருந்தால், வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்கி தமிழ்நாட்டில் நிலவும் மின் தட்டுப்பாட்டினைப் போக்கலாமே என்று பலரும் ஆலோசனை கூறுகிறார்கள். இதில் உள்ள நிலைமையை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், தமிழ்நாட்டில் மின் உற்பத்தி குறைந்து இருப்பதை அறிந்த நான், வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்கி தமிழகத்தில் உள்ள மின் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தேன். முதற்கட்டமாக, குஜராத் மாநிலத்திலிருந்து 500 மெகாவாட் மின்சாரம் வாங்க தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ஒப்பந்தம் போடப்பட்டது. இருப்பினும், மின் தொடரமைப்பில் உள்ள நெருக்கடி காரணமாக, மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கியும் தமிழகத்திற்குக் கொண்டு சேர்க்க வழியில்லாத நிலைதான் தற்போது உள்ளது. அரிசிப் பற்றாக்குறை என்றால், அரிசி மூட்டைகளை ரயில் மூலம் கொண்டு வரலாம். குடிநீர்ப் பற்றாக்குறை என்றால், குறிப்பிட்ட பகுதிகளுக்கு தண்ணீரை டேங்கர் லாரிகள் மூலம் கொண்டு சென்று விநியோகிக்கலாம். தேவைக்கேற்ப இவற்றை சேமித்தும் வைக்கலாம். ஆனால், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு மின்சாரத்தை கொண்டு வர வேண்டுமானால், அதற்கு transmission corridor எனப்படும் வழித்தடம், மின் தொடர் பாதை, அதாவது மின்சாரம் பாய்கின்ற பாதை தேவை. அந்தப் பாதை, அதாவது transmission corridor போதுமான அளவுக்கு இல்லை என்பதால், குஜராத் மாநிலத்திலிருந்து 500 மெகாவாட் வாங்க ஒப்பந்தம் போடப்பட்டு இருந்தாலும், வழித்தடம் சிறிதாக உள்ளதால், 235 மெகாவாட் மின்சாரம் தான் கொண்டுவர முடிந்தது. அனைவரும் இதை

சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த transmission corridor, அதாவது மின் வழித்தடத்தை அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் தான் இருக்கிறது. வட மாநிலங்களுக்கு எல்லாம் பெரிய அளவில், போதுமான அளவுக்கு transmission corridor-களை ஏற்படுத்திக் கொடுத்த மத்திய அரசு, அத்தகைய transmission corridor-I அமைக்காமல், தென் மாநிலங்களை, குறிப்பாக தமிழ்நாட்டைப் புறக்கணித்துவிட்டது. நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த பல பேர் மத்திய அமைச்சரவையில் இருந்து இருக்கிறார்கள். கடந்த 16 ஆண்டு காலமாக, இடையில் ஓர் ஆண்டைத் தவிர, தி.மு.க. தொடர்ந்து 15 ஆண்டுகளாக மத்திய அரசில் அங்கம் வகித்துள்ளது. தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள், தொடர்ந்து மத்திய அமைச்சர்களாக இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தமிழ்நாட்டிற்கு என்ன செய்தார்கள்? இத்தனை ஆண்டு காலமாக மத்திய அமைச்சர்களாக இருந்த தி.மு.க. மற்றும் காங்கிரஸ்காரர்கள், தென் மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்குப் பயனளிக்கக் கூடிய transmission corridor-ஐ அமைத்துத் தர முடியவில்லையா? அதற்கு வழியில்லையா? வகை இல்லையா? அவர்கள் நினைத்திருந்தால், எப்போதோ செய்து முடித்து இருக்கலாம். செய்ய மனமில்லை என்பதுதான் உண்மை.

கடந்த 2011 மே மாதம் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே, பாரதப் பிரதமரிடம் இங்கே இருக்கின்ற கடுமையான மின் பற்றாக்குறை நிலைமையை எடுத்துச் சொல்லி, ஓராண்டு காலத்திற்கு 1,000 மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். திரும்பத் திரும்ப இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கேட்டுப் பார்த்தேன். ஆனால், அதை மத்திய அரசு வழங்கவில்லை. காங்கிரஸ் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தி.மு.க. அமைச்சர்களோ அல்லது தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய காங்கிரஸ் அமைச்சர்களோ இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்து, பிரதமரிடம் பேசி, இந்த மின்சாரத்தை வழங்க ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா?

தமிழக மக்கள் வாக்களித்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மத்திய அமைச்சரவையில் கோலோச்சிக் கொண்டிருக்கும் தி.மு.க. மத்திய மந்திரிகள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் அமைச்சர்கள், தங்களுக்கு வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு, இதையாவது செய்தார்களா ? இதையாவது செய்யக் கூடாதா ? ஆனால் செய்யவில்லையே!

காவேரிப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, மண்ணெண்ணெய் பற்றாக்குறை பிரச்சினை போன்ற இன்னும் எத்தனையோ பிரச்சனைகளை ஒரு புறம் ஒதுக்கி வையுங்கள். இன்று தமிழகம் இருளில் மூழ்கிக் கிடக்கிறது என்று குற்றம்சாட்டும் தி.மு.க.–காரர்களும், காங்கிரஸ்காரர்களும், குறிப்பாக 15 ஆண்டு காலமாக, மத்திய ஆட்சி அதிகாரத்தை தங்கள் வசம் வைத்துக் கொண்டுள்ள தி.மு.க.வினர், தமிழ்நாட்டிற்காக மின்சாரத் துறையில், என்ன உதவி செய்தார்கள் ? எதுவும் செய்யவில்லையே! இதை தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இத்தனை ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருந்த தி.மு.க.வினர், இதை எப்போதோ செய்து முடித்து இருக்க முடியும். ஆனால், இதில் அவர்கள் துளியும் அக்கறை காட்டவில்லை. இதனால் தான், இன்று இந்த மின் பற்றாக்குறை நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலைக்கு யார் காரணம் ? காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசும் தான் இதற்கு முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

நாம் கோரிய 1,000 மெகாவாட் மின்சாரத்தை மத்திய அரசு வழங்கவில்லை. டெல்லி மாநிலம், தனக்குத் தேவையில்லை என்று ஒப்படைத்திருக்கும் 1,721 மெகாவாட் மின்சாரத்தைத் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு சில நாட்களுக்கு முன்பு கடிதம் எழுதி இருந்தேன். ஆனால் அதற்கும் இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை. சரி, நாமே நம் மக்களுக்காக வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை வாங்கலாம் என்று 1,100 மெகாவாட் அளவுக்கு, ஓர் ஒப்பந்தம் போட்டுள்ளோம். ஆனால், மின் தொடர் பாதை நெருக்கடி காரணமாக வெறும் 85 மெகாவாட் அளவுக்கு தான் மின்சாரம் பெற முடிகிறது. இந்த நிலைமைக்கு யார் காரணம் என்று உங்களுக்கு

இப்போது புரிகிறதா ?

இருப்பினும் இத்தனை சிரமங்கள், முட்டுக்கட்டைகள், சோதனைகள், தடைக்கற்கள் இருந்தாலும்; மத்திய அரசின் ஒத்துழைப்பு எந்த வகையிலும் இல்லை என்றாலும்; என் மீது நம்பிக்கை வைத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மீண்டும் ஆட்சியில் அமர்த்திய உங்களைக் காப்பாற்ற வேண்டும்; உங்களின் மின் தேவையை நிறைவு செய்ய வேண்டும்; உங்களின் சிரமத்தைப் போக்க வேண்டும் என்பதற்காக, நான் தொடர்ந்து தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

தற்போது, பல புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில், வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. நவம்பர் மாதம் முதல் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் ஒவ்வொன்றாக செயல்படத் துவங்கும். கடுமையான நிலையை எட்டியுள்ள மின்வெட்டு, இனி படிப்படியாகச் சீரடைந்து, நவம்பர் மாத இறுதிக்குள் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2013ஆம் ஆண்டு இறுதிக்குள், மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்ற வாக்குறுதியை உங்களுக்கு அளிக்கிறேன்.

எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும், உங்களின் துணையுடன், எல்லாம் வல்ல இறைவனின் அருளால், தமிழகத்தை இருள் சூழ்ந்த நிலையில் இருந்து மீட்டெடுப்பேன். ஒளிமயமான தமிழ்நாட்டை மீண்டும் காண்போம். மிக விரைவில் தமிழ்நாட்டு மக்களின் மின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு, மின் உற்பத்தியில் உபரி மாநிலமாகத் தமிழ்நாடு மறுபடியும் திகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா நாமம் வாழ்க! புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க!! என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களைப் பாராட்டி ஆற்றிய உரை – (29.10.2012)



பேரவைத் துணைத் தலைவர் பதவிக்குப் பொருத்தமானவர்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து முதுகலைப் பட்டம், இளம் ஆய்வு முனைவர் பட்டம் ஆகியவற்றைப் பெற்றவர். ஆரம்ப காலம் தொட்டு தன்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்

இணைத்துக் கொண்டவர். கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். சகோதரர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களைப் பொறுத்தவரையில் தொடக்கத்திலிருந்தே, அவர் பொது வாழ்விலே ஈடுபட்ட நாள் முதல் கொண்ட கொள்கையில் பிடிப்புடன் இருப்பவர். தனக்கிட்ட பணியைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கதர் கிராமத் தொழில் வாரிய உறுப்பினராக நீண்ட நாள் பணியாற்றியவர். தமிழ்நாடு துணிநூல் கழகத்தின் தலைவராகப் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. 2001ஆம் ஆண்டு முதன் முறையாகப் பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராகத் திறம்படப் பணியாற்றி இருக்கிறார். தொழில் துறை அமைச்சராகவும், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் பொள்ளாச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றியவர்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றி வருகிறார். ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றியதோடு மட்டுமல்லாமல்; எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. எனவே, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் மனநிலை அவருக்கு நன்கு தெரியும். இதன் காரணமாக, நடுநிலைமை என்பது அவருடன் ஒன்றிப் போய் இருக்கும். எனவே, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு அவர் மிகவும் பொருத்தமானவர்.

திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் அனைவரிடமும் அன்புடன் பழகும் தன்மை கொண்டவர். கட்சிப் பணிகள்

மட்டுமின்றி மக்கள் நலப் பணிகளையும் சிறப்புடன் ஆற்றும் திறமை கொண்டவர். ஏழை, எளிய மக்களுக்கு உதவும் பாங்கினைக் கொண்டவர். இந்த மாமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் பங்கு கொண்டு தனது தனித் தன்மையை வெளிப்படுத்தியவர் சகோதரர் ஜெயராமன் அவர்கள். இந்தப் பேரவையின் துணைத் தலைவராக இருப்பதற்குத் தேவையான குணங்களையும், பண்புகளையும் ஒருங்கே பெற்றவர். திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் நல்லவர், வல்லவர், படித்தவர், நல்ல அடக்க உணர்வுடன் எந்தப் பொருளையும் கூர்ந்து கவனித்து முடிவு எடுக்கும் தன்மை படைத்தவர். பேரவைத் தலைவருக்குத் துணையாக மட்டுமல்லாமல் இணையாகவும் செயல்படக் கூடியவர்.

அனைத்து உறுப்பினர்களுடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று, பேரவைத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாகத் திறம்பட பணியாற்றுவார் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவருக்கு முழு ஒத்துழைப்பினை நல்குவார்கள் என்ற எனது நம்பிக்கையைத் தெரிவித்து, மீண்டும் ஒரு முறை அவருக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டப்பேரவையில் தமிழ்நாட்டின் மின் நிலைமை குறித்து அளித்த விளக்கம் – (31.10.2012)



2013ஆம் ஆண்டின் இறுதிக்குள் தமிழ்நாட்டின் மின்தடை அறவே நீக்கப்படும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று இந்த அவையில், சற்று முன்பு மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் ஒரு நாடகத்தை அரங்கேற்றி நடத்தினார்கள். இன்று தமிழ்நாட்டில் நிலவுகின்ற மின் நிலைமை குறித்து அனைவருக்கும் கவலைதான். அனைவரும் இதைப்பற்றித்தான் பேசுகிறார்கள். ஆகவே, இன்று 'Zero Hour' நேரத்தில் இந்த மின்சார நிலைமை பற்றி பிரச்சினை எழுப்புவதற்குத் தங்களிடம் அனுமதி கேட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்களும் அனுமதி அளித்தீர்கள். இந்தப் பேரவையில் எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும் ஒரு பொதுப் பிரச்சினையை எழுப்புகின்றபோது அதன் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும், அந்தப் பிரச்சினை குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளவும், ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்து அரசின் விளக்கம் என்ன என்பதைக் கேட்டு, அரசின் பதிலைப் பெறவும்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பிரச்சினைகளை எழுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், பிரச்சினையை எழுப்பிவிட்டு, அதன் பின்னர் அதற்கு நான் பதில் சொல்ல எழுந்ததால் என்னைப் பேச விடாமல் அவர்கள் இங்கே ஒரு பெரிய நாடகத்தை நடத்தினார்கள். இறுதியில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வேறு வழியின்றி நடவடிக்கை எடுத்து, அவர்களை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலையை, ஒரு கட்டாயத்தை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு ஏற்படுத்திவிட்டார்கள். இதனுடைய நோக்கம் என்ன? இதற்குப் பின்னால் இருக்கின்ற உள் நோக்கம் என்ன? என்னைப் பேச அனுமதித்தால், எனது பதிலைக் கேட்டுவிட்டால் தவறு எங்கே இருக்கிறது தவறு யார்மீது இருக்கிறது என்பது தெரிந்துவிடும். இன்று தமிழகத்தில் அனைத்துத் தரப்பு மக்களையும் பாதித்திருக்கும் கடுமையான, மோசமான மின் வெட்டுக்குக் காரணமே முந்தைய தி.மு.க. அரசுதான் என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும். நான் தெரிவிக்கப் போகின்ற உண்மைகளுக்கு அவர்களால் பதில் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் இந்த அவையை விட்டு அவர்கள் வெளியேறிவிட்டார்கள். அதன்பிறகு மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதே பிரச்சினையைக் குறித்து இங்கே பேசினார்கள், அரசின் கவனத்தை ஈர்த்தார்கள். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் நோக்கம் bonafide ஆக இருக்கிறது; அதாவது உண்மையாக ஒரு பிரச்சினையை எழுப்பி, அரசினுடைய விளக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையான ஆர்வத்தோடு அவர்கள் இந்தக் கேள்வியை கேட்டு இருப்பதால் இப்போது நான் பதில் சொல்ல விழைகிறேன்.

தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற மின் பற்றாக்குறை குறித்து அனைவரும் மிகுந்த கவலை தெரிவித்து வருகின்றனர். இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கான காரணங்களையும், அவற்றையெல்லாம் சீர் செய்து தமிழகத்தை மீண்டும் மின் மிகை மாநிலமாக மாற்ற இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் நான் விரிவாக அண்மையில் தொலைக்காட்சி மூலம் தமிழக மக்களுக்கு விளக்கியிருக்கிறேன். நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, தற்போது தமிழகத்தில் நிலவி வரும் மின் பற்றாக்குறைக்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசும், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும்தான் காரணம். அவற்றையெல்லாம் நீக்கி மின் நிலைமையைச் சீர் செய்யும் மிகப் பெரும் பொறுப்பை எனது தலைமையிலான அரசு செய்து வரும் இந்த வேளையில், இந்த மின் தட்டுப்பாட்டு நிலைமைக்குக் காரணம் எனது அரசுதான் என்று ஒருசில எதிர்க்கட்சிகள் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

நான் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் மின் நிறுவு திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். 1991 முதல் 1996 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் புதியதாக 1,302 மெகாவாட் மின் நிறுவு திறனும், 2001 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்தில் புதியதாக 2,518 மெகாவாட் மின் நிறுவு திறனும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், திமுக ஆட்சிக் காலத்தில், 1996–2001இல் 561 மெகாவாட்டும், 2006–2011இல் வெறும் 206 மெகாவாட் மட்டுமே கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது.

2001 முதல் 2006 வரை எனது தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றபோது, மின்தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாத நிலைதான் நிலவியது. இன்னும் சொல்லப்போனால், மின் மிகை மாநிலமாகத் தமிழகம் விளங்கியது. கூடுதல் மின்சாரத்தைப் பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்ததன் மூலம் கூடுதல் வருவாயும் தமிழகத்திற்குக் கிடைத்தது.

2006இல் நான் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்ற போது தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத்தான் விளங்கியது. இதை, அடுத்து ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசே ஏற்றுக் கொண்டது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி, 03.04.2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2007–2008ஆம் ஆண்டிற்கான எரிசக்தி மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து பேசுகையில், ''நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம். பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம்....'' என்று பேசி இருக்கிறார் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதன் பின்னர், ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, எனது ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட புதிய மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்காததாலும், தொலைநோக்குப் பார்வையோடு மாநிலத்தின் மின் நிறுவு திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காததாலும், மின் நிலையங்களைச் சரிவர பராமரிக்காததாலும், 2006இல் மின் மிகை மாநிலமாக இருந்த தமிழகம் 2008இல் மின் குறை மாநிலமாக ஆகிவிட்டது. இது இன்றுவரை தொடர்ந்து வருகின்றது.

மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கான நிர்வாகத் திறமைதான் இல்லை. நீண்டகால அடிப்படையிலாவது மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருக்கலாம். அதாவது Case-1 என்கிற அடிப்படையில் ஒப்பந்தத்தை மேற்கொண்டு இருக்கலாம். அதையும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யவில்லை. மாறாக, குறுகிய கால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்தார்கள். அதாவது, அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டது. இதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.

2008ஆம் ஆண்டிலேயே நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருந்தால், மிகக் குறைந்த

விலையிலேயே மின்சாரத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க முடியும். இதனை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யத் தவறியதால், தற்போது கடுமையான மின் தட்டுப்பாடு நிலவுகிறது.

தென் மாநிலங்கள், மற்ற மாநிலங்களுடன் இணைக்கப்படுகின்ற வகையில், தேவைக்கேற்ப மின் வழித்தடங்களை, அதாவது transmission corridor–களை மத்திய அரசு ஏற்படுத்தாத காரணத்தால் மின்சாரத்தைக் கடத்தும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மின் கடத்தும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து, நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நீண்டகாலக் கொள்முதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தாததன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குப் போதுமான மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியாத நிலை உள்ளது. தற்போதும் கூட பிற மாநிலங்களிலிருந்து 1,100 மெகாவாட் மின்சாரம் பெறக்கூடிய ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஆனாலும், மின் வழித்தடத்தில் உள்ள நெருக்கடி காரணமாக 85 மெகாவாட் மட்டுமே பெற முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில் தான், 1,000 மெகாவாட் மின்சாரத்தை மையத் தொகுப்பிலிருந்து வழங்குமாறும், தென் மாநிலங்களை மற்ற மாநிலங்களோடு இணைக்கும் வகையில் உயர்திறன் கொண்ட மின் வழித்தடங்களை அமைக்கக் கோரியும் பாரதப் பிரதமருக்குப் பல கடிதங்கள் எழுதியிருந்தேன். நாம் கேட்ட 1,000 மெகாவாட்டிற்கு பதிலாக 100 மெகாவாட் மின்சாரத்தை மட்டுமே மத்திய அரசு அளித்தது. இருப்பினும், மின் வழித்தடத்தில் உள்ள நெருக்கடி காரணமாக, அதிலும் 78 மெகாவாட் மின்சாரம் மட்டுமே தற்போது கிடைக்கப் பெற்று வருகிறது.

01.11.2012 முதல் 31.03.2013 வரையிலான காலத்திற்கு டெல்லி மாநில அரசால் தனக்குத் தேவையில்லை என்று ஒப்படைக்கப்பட்ட 1,721 மெகாவாட் மின்சாரத்தைத் தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமருக்குக் கோரிக்கை விடுத்திருந்தேன். இதற்கும் மத்திய அரசு செவி சாய்க்காத காரணத்தால், இது தொடர்பாக மத்திய அரசுக்கு

உத்தரவு வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தை அணுக எனது தலைமையிலான அரசு முடிவெடுத்தது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் அலகில் உற்பத்தி செய்யப்படும் 1,000 மெகாவாட் மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நான் பாரதப் பிரதமருக்குக் கடிதங்கள் எழுதியுள்ளேன். நேரிலும் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளேன். இதற்கும் சாதகமான பதிலை மத்திய அரசு அளிக்கவில்லை.

எனவே, நீண்ட கால அடிப்படையில், அதாவது Case-ஐ அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முன்னுரிமை அளிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டும், இதன்மூலம் மலிவான விலையில் கணிசமான மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியும் என்பதாலும், நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும் வகையில் புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கான அனுமதி வேண்டி தமிழ்நாடு மின் ஒழுங்கு முறை ஆணையத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் அனுமதி பெற்றபின் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், புதிய மின் நிலையங்கள் அமைப்பதிலும் மத்திய அரசு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது. மாநிலங்கள் அமைக்க விரும்பும் புதிய மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைத் தருவதற்கான 'எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம்' (Fuel Supply Agreement) செய்ய மறுத்து வருவதோடு, ஏற்கெனவே இயக்கத்தில் உள்ள மின் நிலையங்களுக்கும் போதுமான நிலக்கரியை மத்திய அரசு வழங்குவதில்லை. தேவையில் 80 விழுக்காடு நிலக்கரியை மட்டுமே, ஒதுக்கீடு செய்து, Linkage அளித்து, அதிலும் மொத்தத் தேவையில் 70 விழுக்காட்டிற்கும் குறைவாகவே மத்திய அரசு நிறுவனமான இந்திய நிலக்கரி நிறுவனம் linkage அளித்து வருகிறது. இது மட்டுமல்லாமல், புதிய திட்டங்களுக்கான அனுமதியை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் காலவரையின்றி தாமதப்படுத்துகிறது.

2001–2006ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக விளங்கிய போதிலும், நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, புதிய மின் உற்பத்தித் திட்டங்களைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதில் நான் மிகுந்த கவனம் செலுத்தினேன். அவை, எனது அரசால் தொடங்கப்பட்டவை என்ற காரணத்தினாலோ அல்லது அலட்சியத்தினாலோ அல்லது நிருவாகத் திறமையின்மையினாலோ அல்லது கையாலாகாத்தனத்தாலோ பின்னர் பொறுப்பிற்கு வந்த மைனாரிட்டி திமுக அரசு, இவற்றைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை.

உண்மை நிலை இவ்வாறிருக்க, மின் துறையில் தான் ஏதோ மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்திவிட்டது போல், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அடங்கிய கடிதத்தினை தி.மு.க.வினருக்கு எழுதியுள்ளார் திரு. கருணாநிதி.

அந்தக் கடிதத்தின் ஆரம்பத்திலேயே சீருடைப் பணியாளர்களுக்கான வீடுகள் கட்டித் தரும் பணிக்கு அடிக்கல் நாட்டிய விழாவிலே மின்சாரத்தைப் பற்றி நான் பேசியதாகக் கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. மின்சாரத்தைப் பற்றி காவல் துறை விழாவிலே நான் ஒருவரி கூட பேசவில்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ''முதல் கோணல் முற்றும் கோணல்'' என்று சொல்வார்கள். அதுபோல, அந்தக் கடிதம் முழுவதும் உண்மைக்கு மாறான தகவல்களைக் கொண்டதாக உள்ளது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்னென்ன திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பதை நான் ஏன் தெரிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் திரு. கருணாநிதி. மின் பற்றாக்குறை நிலையைப் பற்றி சுருக்கமாக எடுத்துக்கூறிய ஒரு உரையில் பலமுறை தெரிவித்த விவரங்கள் தேவையில்லை என்பதால் தான் நான் அவற்றைக் குறிப்பிடவில்லை. இருப்பினும், திரு. கருணாநிதியின்

கடிதத்தில் உள்ள தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துரைப்பதும், அதே சமயத்தில் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளை இங்கே சுட்டிக்காட்டுவதும் எனது கடமை என்று கருதுகிறேன்.

எனது முந்தைய ஆட்சி காலமாகிய 2001–2006ஆம் ஆண்டுகளில் வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.7.2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் எனது முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.6.2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ 12.12.2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் 8.9.2005 அன்று துவக்கப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 29.9.2004 அன்று எரிவாயு வழங்குவதற்காக இந்திய எரிவாயு ஆணையத்தோடு ஒப்பந்தம் கையெழுத்தானது. மார்ச் 2006இல் ஒப்பந்தம் கோருவதற்கான பணிகள் முடிவடைந்தன. அதாவது 3,095 மெகாவாட் அளவுக்கான மின்சார உற்பத்தித் திட்டங்களை அப்போதே எனது ஆட்சிக் காலத்தில் தொடங்கினோம்.

திரு. கருணாநிதி தன்னுடைய கடிதத்தில், எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் 8.12.2006 அன்று முந்தைய மைனாரிட்டி

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டதாகவும், அதன் உற்பத்தி 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கும் என்றும் தெரிவித்திருக்கிறார். இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. உண்மை நிலை என்னவென்றால், நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழகத்தின் மின் நிலைமை குறித்து விரிவாக ஆய்வு நடத்திய போது, இந்தத் திட்டம் ஆரம்பகட்ட நிலையிலேயே உள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து, எண்ணூரில் 660 மெகாவாட் திறன் கொண்ட Super Critical மின் திட்டத்தை செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், 26.10.2012 அன்று சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

அடுத்தபடியாக, வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு மின் திட்டம் 26.6.2007 அன்று தொடங்கப்பட்டதாகவும், 2011 மே மாதம் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்றும், இதன் உற்பத்தி விரைவில் தொடங்க இருப்பதாகவும் திரு. கருணாநிதி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதிலும் பல உண்மைகளை மறைத்துள்ளார் திரு. கருணாநிதி. இந்த அனல் மின் திட்டத்தைத் துவங்குவதற்கு 12.12.2005 அன்று எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் திட்டம் 2011ஆம் ஆண்டு மே மாதம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்று தனது அறிக்கையிலேயே திரு. கருணாநிதியே கூறியிருக்கிறார். 2011ஆம் ஆண்டு மே மாதம் முதல் இரண்டு வாரங்கள் வரை முதலமைச்சராக திரு. கருணாநிதி தான் இருந்தார். எனவே, இந்தத் திட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்பதை திரு. கருணாநிதி தான் தெளிவுபடுத்த வேண்டும். உண்மை நிலை என்னவென்றால், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, இந்தத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே நடந்திருந்தன. பின்னர் நான் அந்தத் திட்டத்தை துரிதப்படுத்தியதன் காரணமாக, 2013 ஏப்ரலில் இருந்து 600 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்க

இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, உடன்குடியில் பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் அக்டோபர் 2007–இல் தொடங்கப்பட்டதாகவும், இவற்றிலிருந்து 2013ஆம் ஆண்டு முதல் மின்சாரம் பெறப்படும் என்றும் கூறியுள்ளார் திரு. கருணாநிதி. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை நிலை. உண்மை நிலை இவ்வாறிருக்க, 2013ஆம் ஆண்டு முதல் இங்கிருந்து மின்சாரம் கிடைக்கும் என்று திரு. கருணாநிதி கூறியிருப்பது நகைப்புக்குரியதாக உள்ளது. திரு. கருணாநிதியின் கற்பனைக்கு அளவே இல்லை. இந்தத் திட்டம் துவங்கப்படாததன் காரணமாக, இதனை விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் திட்டமாகச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இது இந்த மாமன்றத்திலும் என்னால் எடுத்துரைக்கப்பட்டது. தமிழக அரசே செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்றும், எனது தலைமையிலான அரசு விரைந்து நடவடிக்கை எடுக்காததால், மின் உற்பத்தி தாமதமாகிறது என்றும் தெரிவித்துள்ளார் திரு. கருணாநிதி. இதில் எள்ளளவும் உண்மை இல்லை. உண்மை நிலை என்னவென்றால், நான் 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, இந்தத் திட்டத்தில் 40 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிவடைந்திருந்தன. அப்படி இருக்கும்போது திரு. கருணாநிதி கூறுவதைப்போல் இந்தத் திட்டம் 2011 ஆகஸ்ட் மாதம் எப்படி நடைமுறைக்கு வந்திருக்க முடியும்? முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினரால் விட்டுச் செல்லப்பட்ட இந்தப் பணிகளை நான் தற்போது முடுக்கிவிட்டுள்ளேன். இதன் காரணமாக, 2013ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இந்தத் திட்டத்தின்மூலம் நமக்கு 600 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

600 மெகாவாட் மின்திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் 2011ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 2011ஆம் ஆண்டு மே மாதம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, சுமார் 55 விழுக்காடு பணிகளே முடிவடைந்திருந்தன. பின்னர் மீதமுள்ள பணிகளை நாங்கள் விரைவுபடுத்தியதன் காரணமாக, இந்த அனல் மின் நிலையம் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது உற்பத்தியைத் துவங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குஜராத்திலிருந்து மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போடும்போதே அதை தமிழகத்திற்கு கொண்டு செல்ல வழி இருக்கிறதா என்று கூடத் தெரியாமல் நான் ஒப்பந்தம் போட்டதாக திரு. கருணாநிதி தனது கடிதத்தில் கூறியிருக்கிறார். விவரம் புரியாதது எனக்கா அல்லது திரு. கருணாநிதிக்கா என்பதை இப்போது நான் விளக்கிக் கூற விரும்புகிறேன். மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் போட்ட பிறகு தான் வழித்தடத்தை ஒதுக்கீடு செய்ய மத்திய மின் தொடர் அமைப்பு நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதுகூட ஐந்து முறை முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிக்குத் தெரியவில்லையே என்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது. அதாவது தமிழ்நாடு வேறு ஒரு மாநிலத்தோடு மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் போட்ட பிறகுதான் நாம் மத்திய மின் தொடர் அமைப்பை அணுகி எங்களுக்கு வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று கேட்க முடியும். ஆனால், இவர் என்ன கேட்கிறார் திரு. கருணாநிதி? வழித்தடத்தில் நெருக்கடி இருக்கிறது, மின்சாரத்தைக் கொண்டுவர முடியவில்லை, குஜராத்துடன் போட்ட ஒப்பந்தப்படி மின்சாரத்தை இங்கே கொண்டுவர முடியவில்லை என்று சொன்னால், திரு. கருணாநிதி கேட்கிறார், ஏன் நீங்கள் ஒப்பந்தம் போடும்போதே இதற்கு வழி இருக்கிறதா? இல்லையா என்று நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்கிறார். மேலும், பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்குத் தற்போதுள்ள மின் வழித்தடங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. அதை மத்திய அரசு செய்ய தவறியுள்ளதால்தான், தற்போது நாங்கள் உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

நான் அளித்துள்ள இந்த விளக்கங்களிலிருந்து பல்வேறு மின் திட்டங்கள் மூலமாக 2014 வரை 7,798 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு வழி செய்ததாக திரு. கருணாநிதி கூறியிருப்பது வெறும் கற்பனைக் கதை என்பது மாமன்ற உறுப்பினர்களுக்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்திருக்கும்.

2011ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தல் சுற்றுப் பயணத்தின்போது, தமிழ்நாட்டின் மின்வெட்டு நிலைமையை மூன்றே மாதங்களில் சீர் செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்ததாக தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும், இன்னும் சிலரும் தவறான தகவல்களை மக்களிடையே பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது போன்ற எந்த வாக்குறுதியையும் நான் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மின்வெட்டு என்பது மிகவும் மோசமடைந்து, மக்களுக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத நிலை தமிழகத்தில் நிலவியது. மின் உற்பத்திக்கும், மின் தேவைக்கும் இடையே கிட்டத்தட்ட 4,000 மெகாவாட் இடைவெளி இருந்தது. திரு. கருணாநிதி தலைமையிலான ஆட்சி என்றாலே அனைத்தும் அதலபாதாளத்திற்குச் சென்றிருக்கும் என்பதும், அதைச் சீர்செய்ய பல ஆண்டுகள் ஆகும் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. இதை நானும் நன்கு அறிவேன். இந்தச் சூழ்நிலையில், மின்வெட்டை மூன்றே மாதங்களில் சீர்செய்வேன் என்ற வாக்குறுதியை நான் எப்படி கொடுத்திருக்க முடியும் ? இத்தகைய வாக்குறுதியை, நான் எந்த நேரத்திலும் அளிக்கவில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, புதிய மின்திட்டங்களை முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் காரணமாக 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் மற்றும் 500 மெகாவாட் மின்திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் முதல் அலகு டிசம்பர் 2012–லிருந்தும், 500 மெகாவாட் திறன் கொண்ட

வல்லூர் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மார்ச் 2013–லிருந்தும், 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013–லிருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. இவைகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு 1,900 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

அதுபோலவே, 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மே 2013–லிருந்தும், 500 மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு அக்டோபர் 2013–லிருந்தும், 1,000 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டு அலகுகள் டிசம்பர் 2013–லிருந்தும் முழுமையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட உள்ளன. இவைகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு 1,330 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். ஆக, மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் மூலம் 2013ஆம் ஆண்டில் 3,230 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும். இவைமட்டுமல்லாமல், கூடங்குளம் அணுமின் திட்டத்திலிருந்து 925 மெகாவாட் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்கத் திட்டத்திலிருந்து 230 மெகாவாட் கிடைக்கும். மொத்தத்தில், 2013ஆம் ஆண்டு இறுதியில் 4,385 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும்.

இதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு புதிய மின் திட்டங்களைத் தொடங்கவும் எனது தலைமையிலான அரசு ஏற்பாடுகளை செய்துள்ளது.

660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் நிறுவுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 26.10.2012 அன்று கோரப்பட்டுள்ளது.

1,600 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்கள் பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து உடன்குடியில் நிறுவ வகுக்கப்பட்ட திட்டம் நான்கு ஆண்டுகளாகியும், துவக்கப்படாமலேயே இருந்தது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்த இந்த மின் திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் வகையில், பாரத மிகுமின் நிறுவனத்துடனான கூட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, தமிழ்நாடு மின்வாரியமே,

மாநில அரசின் திட்டமாகச் செயல்படுத்த ஆணையிட்டேன். இதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் வெகு விரைவில் கோரப்பட உள்ளன.

அது போலவே, 800 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்களை வடசென்னையில் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்பட உள்ளன.

1,600 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் திட்டம், 800 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் விரிவாக்கத் திட்டம், 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் மாற்று மின் திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் பல்வேறு ஒப்புதல்கள் கோரப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதல்கள் கிடைக்கப் பெற்றவுடன் இவற்றை நிறுவும் பணிகள் துவங்கும்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் செயலற்ற தன்மையால், அக்கறையின்மையால், அலட்சியத்தால், சுயநலப் போக்கால், இன்று தமிழ்நாடு சந்தித்து வரும் மின்வெட்டு கடினமானது என்றாலும் தற்காலிகமானதே. நான் ஏற்கெனவே கூறியது போல், புதிய மின் திட்டங்கள், ஒன்றன்பின் ஒன்றாக முழுத் திறனுடன் இயக்கத்திற்கு வரவிருப்பதால், இனி வரும் மாதங்களில் மின் தடையின் தாக்கம் படிப்படியாகக் குறையும். 2013ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டில் மின் தடை அறவே நீக்கப்பட்டுவிடும் என்று உறுதி அளிக்கிறேன். மின்சாரத்தில் தமிழகம் விரைவில் தன்னிறைவு பெறும்; மின் மிகை மாநிலமாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் மின்வெட்டு காரணமாக சிறு தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன என்று கூறினார். சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில், சிறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் குறைந்தபட்சம் தொடர்ந்து 4 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பொறுத்தவரையில், டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேரம் மின்சாரம் வழங்க நான் ஆணையிட்டேன். இம்மாவட்டங்களில் குறைந்தபட்சம் 3 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரம் வரை மின் உற்பத்திக்கு ஏற்றவாறு மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் பிற பகுதிகளில் விவசாயத்திற்குக் குறைந்தபட்சம் 3 மணி நேரம் மும்முனை மின்சாரமும், மின்தடை இல்லாத நேரங்களில் இருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் நிலவுகின்ற மின் பற்றாக்குறை நிலைமை அனைவருக்கும் கவலை அளிப்பதாக இருக்கிறது. பொதுமக்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அனைத்துத் தரப்பினரும் எப்படிக் கவலைப்படுகிறார்களோ, அதைப் போலவே, அதைவிட ஆயிரம் மடங்கு இந்த அரசு கவலைப்படுகிறது. ஏனென்றால் எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. மின்சாரம் வழங்க வேண்டிய கடமையிருக்கிறது. எல்லோருக்கும் சீரான முறையில் மின்சாரத்தை விநியோகிக்க வேண்டிய கடமையிருக்கிறது. ஆகவே, மற்ற அனைவரையும்விட ஆயிரம் மடங்கு, ஒரு இலட்சம் முறை அதிகமாக நாங்கள் கவலைப்படுகிறோம்; நான் கவலைப்படுகிறேன்.

இந்த நேரத்தில் அனைவருக்கும் சில உண்மைகளை மட்டும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்; சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த மோசமான சூழ்நிலைக்கு நாங்கள் காரணம் அல்ல. நிச்சயமாக எனது தலைமையிலான அரசு காரணம் அல்ல. 2006ஆம் ஆண்டு நான் ஆட்சியைவிட்டு செல்கின்ற போது தமிழ்நாடு மின்சாரத்தில் உபரி மாநிலமாக இருந்தது; மின்மிகை மாநிலமாக இருந்தது. அதன்பிறகு கடந்த ஆண்டு 2011இல் நான் மீண்டும் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். திரும்பி வந்து பார்க்கின்ற போது, தமிழ்நாடு மின்குறை மாநிலமாக இருந்தது. மோசமான மின் பற்றாக்குறை சூழ்நிலை நிலவியது. ஆகவே, எங்களைப் பொறுத்தவரை இந்த நிலைமையைச் சீர்செய்ய வேண்டும். அனைவருக்கும் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆட்சிப்

பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்தே இந்த அரசு சிரத்தையோடு செயல்பட்டு கடமையாற்றி வருகிறது.

ஆனால், மின்சாரப் பற்றாக்குறை, மின் உற்பத்திக் குறைவு போன்ற பிரச்சினைகளைச் சரி செய்வது, சீர் செய்வது என்றால் அது ஒரு நாளில் முடியாது, ஒரு வாரத்தில் முடியாது, ஒரு மாதத்தில் முடியாது, ஓர் ஆண்டுக்காலத்திலும் முடியாது. அதற்குப் பல நாட்கள் தேவைப்படும். இதிலுள்ள சிரமங்களை நான் ஏற்கெனவே எடுத்துச்சொல்லியிருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நமக்கு ஏற்கெனவே மின் உற்பத்திக் குறைவாக இருந்தது. பலரும் எழுப்பிய கேள்வி, சரி, இங்கே மின் உற்பத்திக் குறைவாக இருந்தால் வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வாங்கலாமே ஏன் வாங்கக்கூடாது? நிச்சயமாக வாங்கலாம். அதற்காகத்தான் அந்த விளக்கத்தைச் சொன்னேன். நாங்கள் குஜராத் மாநிலத்தோடு ஒப்பந்தம் போட்டோம். 525 மெகாவாட் மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் போட்டோம். ஆனால், 230 மெகா வாட்தான் கொண்டுவர முடிந்தது. ஏன் என்றால் அந்த மின்வழித் தடத்தில் நெருக்கடி. அதற்குத்தான் இந்த விளக்கத்தை நான் அளித்தேன். மத்திய அரசுதான் மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும் இடையேயான மின்சாரம் பாய்வதற்கு வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்திற்குப் போதுமான அளவில் அந்த மின்வழித் தடம் இல்லையென்றால் அதற்கு என்ன காரணம், எந்த அடிப்படையில் மத்திய அரசு இந்த மின்வழித் தடத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நீண்டகாலக் கொள்முதல் ஒப்பந்தம் போட்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆக, நாங்கள் எப்போது ஆட்சிக்கு வந்தோம் 2011இல். ஆகவே, இந்த மின்வழித் தட நெருக்கடி ஏற்கெனவே இருந்த ஒன்று. ஏன் என்றால் 2006 முதல் 2011 வரை இருந்த முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்களைப் போடவில்லை. அவர்கள் சுயநல நோக்கத்துடன், சுய லாபம் கருதி வேண்டுமென்றே குறுகியகால ஒப்பந்தங்களைப் போட்டார்கள். அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கினார்கள். Case 1 binding அடிப்படை என்றால் என்ன? அதாவது, இன்று மின்சாரத்திற்கு யூனிட்டிற்கு இத்தனை ரூபாய் என்று என்ன விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ, இந்த Case 1

binding–படி அதே விலைக்கு நீண்டகால ஒப்பந்தத்தைப் போட்டால் ஒரு ஏழு ஆண்டுகள், 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தைப் போட்டால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு மின்சாரத்தின் விலை பல மடங்கு அதிகரித்திருந்தாலும்கூட இந்தக் குறைந்த விலைக்குத்தான் அவர்கள் மின்சாரத்தை வழங்கவேண்டும். அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் போடுகின்ற மாநிலங்களுக்குத்தான் மத்திய அரசின் வழித்தடத்தை ஏற்படுத்திக்கொடுக்கின்ற நிறுவனம் முன்னுரிமை அளித்து transmission corridor–களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அத்தகைய ஒரு ஒப்பந்தத்தைக்கூட முந்தைய தி.மு.க. அரசு போடவில்லை. அதனால், தமிழகத்திற்குத் தேவையான மின்வழித் தடம் கிடைக்கவில்லை. அதைத்தான் நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

நாங்கள் 2011ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபிறகு, சில ஒப்பந்தங்களைப் போட்டோம். ஆனால், எங்களுக்கு முன்னுரிமை இல்லை, இந்த அரசுக்கு முன்னுரிமை இல்லை, ஏன் என்றால் இவை புதியதாகப் போடப்பட்ட ஒப்பந்தங்கள். அதனால்தான், குஜராத் மாநிலத்தோடு ஒப்பந்தம் போட்டாலும், 500 மெகாவாட்டிற்கு ஒப்பந்தம் போட்டாலும், 200 மெகா வாட் அளவிற்குதான் கொண்டுவர முடிகிறது. மத்திய அரசிடம் நான் 1,000 மெகாவாட் கேட்டதற்கு 100 மெகாவாட்தான் கொடுத்தார்கள். அதில்கூட 78 மெகா வாட்தான் இங்கே கொண்டுவர முடிகிறது. இன்னும் சில ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக 1,100 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்குப் புதியதாக ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம். ஆனால், அவற்றில் வெறும் 85 மெகாவாட்தான் கொண்டுவர முடிகிறது. ஏன் என்றால், மின்வழித் தடத்தில் நெருக்கடி. மீண்டும் அதே பிரச்சினைக்கு வருகிறோம், அதே காரணத்திற்கு வருகிறோம். ஏன் தமிழகத்திற்குப் போதுமான மின்வழித் தடம் இல்லை. ஏன் என்றால் நமக்கு முன்னுரிமை இல்லை, ஏன் நமக்கு முன்னுரிமை இல்லை, ஏன் என்றால் நீண்டகால ஒப்பந்தங்களைப் பிற மாநிலங்களோடு போடவில்லை. அந்த நீண்டகால ஒப்பந்தங்களைப் போட தவறியது யார். முந்தைய தி.மு.க. அரசு. திரு. கருணாநிதி தலைமையிலான மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் இந்த நிலைமைக்குக் காரணம்.

சரி, மத்திய அரசாவது நமக்கு ஒத்துழைப்புத் தருகிறதா ? மத்திய அரசிடம் பலமுறை கேட்டுவிட்டோம். மின்சாரத்தை

வழங்குங்கள் என்று. ஆனால், அவர்கள் வழங்கவில்லை. எத்தனை அமைச்சர்கள் இங்கே தமிழகத்தில் இருந்து சென்றிருக்கிறார்கள். காங்கிரஸ் அமைச்சர்கள், தி.மு.க. அமைச்சர்கள், இன்றும் அமைச்சர்களாக இருக்கிறார்கள். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுத்தர அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா ?

அதுமட்டுமல்ல, தமிழகத்தை வஞ்சிக்கிறார்கள். நான் இப்போது குறிப்பிட்டுச் சொன்ன பல மின் திட்டங்களில் அனைவரும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். புதிய மின் திட்டங்களைத் தொடங்கவில்லை, தொடங்கவில்லை என்று சொன்னால் இது ஏதோ ஒரு மேஜிக் மாதிரி செய்கின்ற வேலை அல்ல. ஒரு புதிய மின் திட்டத்தை மின் உற்பத்தித் திட்டத்தைத் துவங்க வேண்டுமென்றால் மத்திய அரசிடமிருந்து பல ஒப்புதல்களைப் பெற வேண்டியுள்ளது. அதன்பிறகுதான் பணிகளைத் துவங்க முடியும். வேண்டுமென்றே தமிழ்நாட்டில் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கும் பல பெரிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்காமல் தேவையான அனுமதியை வழங்காமல் காலத்தைத் தாமதப்படுத்துகிறது. காலதாமதம் செய்து வருகிறது. இதற்கு யார் காரணம் ? இதற்கு இந்த அரசைக் குற்றம் சொன்னால் எப்படி ? அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் விரிவாகச் சொன்னேன். பல அனுமதிகளை மத்திய அரசு தர வேண்டியுள்ளது. ஆனால் தர மறுக்கிறது. புதிய திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கவில்லை. ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களுக்குப் போதுமான நிலக்கரியை வழங்குவது இல்லை. நமது மொத்தத் தேவையில் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் மின் நிலையங்களுக்குத் தேவைப்படுகின்ற நிலக்கரியில் 80 விழுக்காடுதான் கொடுக்கிறார்கள். ஆகவே ஒருபுறம் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு காட்டிய அலட்சியம், அக்கறையின்மை, நிர்வாகத் திறமையின்மை. இன்னொருபுறம் மத்திய அரசு வேண்டுமென்றே நம்மை வஞ்சிக்கிறது. இருப்பினும் இதனால் நாங்கள் சோர்ந்துவிடவில்லை. முந்தைய தி.மு.க. அரசு என்ன தவறு செய்திருந்தாலும் அதைச் சரி செய்தே தீருவோம் என்ற வைராக்கியத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும் வெற்றி பெற்றே தீருவோம். வாழ்ந்து காட்டுவோம் என்ற வைராக்கியத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னதான் மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும் நாம் இதில் தோல்வி அடையமாட்டோம். வெற்றி காண்போம். மீண்டும் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக ஆக்காமல் நான் ஓயமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இதனுடைய தொடர்ச்சியாக நான் அன்பார்ந்த தமிழக மக்களுக்கு இந்த மாமன்றம் மூலமாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள் என்னவென்றால், தமிழக மக்களே இன்றைக்கு நிலவுகின்ற மோசமான மின் வெட்டு நிலைமைக்கு இந்த அரசு காரணமில்லை என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்லி விட்டேன். இருப்பினும், நீங்கள் நம்பி எங்களிடம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருப்பதால் நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து, என் மீது நம்பிக்கை வைத்து ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்திருப்பதால் உங்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த இலக்கை நிச்சயமாக அடைந்தே தீருவோம். மோசமான மின் வெட்டு நிலைமையைக் கடந்து விட்டோம். அது முடிந்து விட்டது அது கடந்த காலத்தில் இருந்தது. என்னைப் பொறுத்தவரை தமிழக மக்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இத்தனைக் காலம் பொறுத்துவிட்டீர்கள். இன்னும் ஓராண்டுக் காலம். ஓராண்டுக் காலம். ஓராண்டுக்கு என்றுகூட சொல்ல மாட்டேன். அடுத்த ஜூன் மாதம் வரை சற்று பொறுத்துக் கொள்ளுங்கள். Bear with me என்று கேட்கிறேன். சற்று பொறுமை காட்டுங்கள். படிப்படியாக இனிமேல் விரைவில் மின் நிலைமை சீரடையும். மின் வெட்டு சீரடையும். நான் ஏற்கெனவே தெளிவாக எடுத்துரைத்தபடி 2013ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மின் வெட்டு நிலைமை அறவே நீக்கப்படும். தமிழ்நாடு மீண்டும் ஒளிமயமான மாநிலமாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

சட்டமன்றப் பேரவையில் காவேரி நதிநீர் பங்கீடு குறித்துக் கொண்டு வரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை – (02.11.2012)



உச்சநீதி மன்றத்தின் மூலம் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்குவது காவேரி நதிநீர்ப் பிரச்சினை. 1892ஆம் ஆண்டு மற்றும் 1924ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் காவேரியில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றாமல், 1960களின் பின் பகுதியிலும், 1970களின் தொடக்கத்திலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், காவேரி நதியில் உரிமையுள்ள மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்காமலும், தன்னிச்சையாகப் பல்வேறு அணைக்கட்டுகளைக் கருநாடக அரசு கட்டியது. ஆண்டுக்காண்டு விவசாய நிலங்களின் பரப்பினையும் கருநாடகா அதிகரித்துக் கொண்டே சென்றது.

இதனையடுத்து, 1956ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையே ஆன நதிநீர்த் தாவா சட்டத்தின்படி நடுவர் மன்றமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தினை அனுப்பியது. இந்தக் கடிதத்தின் மீதும் மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1986ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்காலம்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், உணர்வுப் பூர்வமான இந்தப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு 1990ஆம் ஆண்டு ஓர் உத்தரவினைப் பிறப்பித்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைத் தொடர்ந்து, 1986ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிர் ஊட்டும் வகையில், காவேரி நடுவர் மன்றத்தை ஜூன் 1990ஆம் ஆண்டு மத்திய அரசு உருவாக்கியது. இந்த காவேரி நடுவர் மன்றம், 25.6.1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையில், மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கருநாடகா தனது நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்றும், கருநாடகா தனது பாசனப் பரப்பை 11.20 இலட்சம் ஏக்கருக்கு

மேல் விரிவாக்கம் செய்யக்கூடாது என்றும், இடைக்கால ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் தமிழகத்திற்கு நீர் விடுவிக்க வேண்டும் என்றும், இந்த இடைக்கால ஆணை இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

காவேரி நடுவர் மன்றத்தால் அளிக்கப்பட்ட இந்த இடைக்கால ஆணை தமிழகத்திற்கு சாதகமாக இல்லை என்ற போதிலும், காவேரிப் பாசன விவசாயிகளின் உடனடி நலன் கருதியும், மாநிலங்களுக்கிடையே நல்லுறவு நிலவ வேண்டும் என்ற எண்ணத்தோடும், இறுதி ஆணையில் கூடுதலாக நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும், தமிழ்நாடு அரசு இடைக்காலத் தீர்ப்பினை ஏற்றுக்கொண்டது. ஆனால், கருநாடக அரசோ, காவேரி நடுவர் மன்ற ஆணை கருநாடகத்தைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவித்து, இடைக்கால ஆணையினை அவமதிக்கும் வகையில் ஓர் அவசரச் சட்டத்தினை இயற்றியது. அதனை எதிர்த்து, எனது தலைமையிலான தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், கருநாடக அரசின் அவசரச் சட்டம் செல்லாது என்றும் 22.11.1991 அன்று மத்திய அரசுக்குக் கருத்துரை வழங்கியது. பின்னர் எனது தலைமையிலான அரசின் உறுதியான நடவடிக்கை காரணமாக 10.12.1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசிதழில் மத்திய அரசு வெளியிட்டது.

இருப்பினும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி ஒருமுறை கூட கருநாடகா நமக்கு தண்ணீரை விட்டதில்லை. மாறாக, உபரி நீரை மட்டுமே கருநாடகா விடுவித்து வந்தது. கருநாடக அரசின் பிடிவாதப் போக்கு காரணமாக, மரபுரிமைப்படி இயல்பாக நமக்குக் காவேரி நதி நீரில் பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும், நீதிமன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகிற சூழ்நிலைக்கும் அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில், பயிர்களைக் காப்பாற்ற மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகிற சூழ்நிலைக்கும் தமிழ்நாடு பலமுறை தள்ளப்பட்டு இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், 5.2.2007 அன்று காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை வெளியிட்டதோடு, இந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்துள்ளது.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 14.06.2011 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது டெல்லியில் நேரில் சந்தித்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும், இந்த ஆணையை நடைமுறைப்படுத்த காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றினை அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இதனைக் கடிதங்கள் வாயிலாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடத் தடை இல்லாத சூழ்நிலையில், ''உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வந்தபிறகுதான் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட முடியும்'' என்று மத்திய அரசு தெரிவித்து இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஏற்படுத்தவும் மத்திய அரசுக்கு உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீட்டு மனுவை விசாரணைக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவேரி நடுவர் மன்றத்தில் காலியாக உள்ள தலைவர் பதவியை நிரப்ப வேண்டியதன் அவசியத்தைப் பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

இந்தச் சூழ்நிலையில், கருநாடகா தனது கோடைக்கால பாசனத்திற்காக கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹேமாவதி மற்றும் ஹாரங்கி நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்தி வருகிறது. கருநாடக அரசின் இந்த நடவடிக்கை

மூலம் தமிழகத்தின் குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காது என்பதைக் கருத்தில் கொண்டு, 21.03.2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினை எனது தலைமையிலான அரசு தாக்கல் செய்தது. இந்த மனுவில், கருநாடகா கோடைப் பாசனத்திற்கு தனது 4 அணைகளிலிருந்து தண்ணீர் விடுவிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும், இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி இந்த 4 நீர்த் தேக்கங்களிலிருந்து 103.24 டி.எம்.சி. அடி நீருக்கு மேல் கருநாடகா பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், கருநாடக அரசு அதன் கோடைக்காலப் பாசனத்திற்காக 01.02.2012 முதல் நீரை உபயோகித்துள்ளது என்றும், நீர்த்தேக்கங்களுக்கு வரக்கூடிய நீர்வரத்தினைத் தேக்கி வைத்துக் கொண்டு, நீர்தேக்கங்கள் நிரம்பும் நிலையில் மட்டுமே நீரை கர்நாடகா விடுவித்து வருவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரக்கூடிய நீர்வரத்து குறைந்து குறுவைச் சாகுபடி பாதிப்புக்கு உள்ளாகிறது என்றும் சுட்டிக்காட்டி, விரைந்து காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்டுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 18.05.2012 நாளிட்ட கடிதத்தின் மூலம் நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், மாண்புமிகு பாரதப் பிரதமர் இதற்கு செவி மடுக்கவில்லை.

இதனையடுத்து, தமிழ்நாட்டுடன் குறிப்பிட்ட விகிதாச்சாரப்படியான, அதாவது, Pro-rata sharing, அளவில் நீரைப் பகிர்ந்து கொள்ள கருநாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், காவேரி கண்காணிப்புக் குழுவினால் இறுதி செய்யப்பட்டுள்ள இடர்ப்பாடுப் பங்கீட்டு முறைக்கு ஒப்புதல் வழங்கும் வகையில் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்ட உத்தரவிட வேண்டியும் உச்ச நீதிமன்றத்தில் 21.07.2012 அன்று எனது தலைமையிலான அரசு ஓர் இடைக்கால மனுவினைத் தாக்கல் செய்தது.

தமிழகத்தில் நிலவும் இடர்ப்பாட்டினைச் சுட்டிக்காட்டி, குறுவைச் சாகுபடியைத் தமிழக விவசாயிகள் இழந்துவிட்ட நிலையில், குறைந்தபட்சமாக ஒரு போக சம்பா சாகுபடியையாவது

விவசாயிகள் மேற்கொள்ள ஏதுவாக, தமிழகத்திற்குரிய நீரைத் திறந்துவிடுமாறு கருநாடக அரசுக்கு அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரை 23.08.2012 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டேன்.

எனது தலைமையிலான அரசு எடுத்த உறுதியான தொடர் நடவடிக்கையினை அடுத்து, உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாகக் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டம் 19.09.2012 அன்று புது டெல்லியில் கூட்டப்பட்டது. 12.09.2012 முதல் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டம் நடைபெறும் வரை நாள்தோறும் வினாடிக்கு 10,000 கன அடி தண்ணீரைக் கருநாடகா தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் 10.09.2012 அன்று ஆணைப் பிறப்பித்தது.

19.09.2012 அன்று புது டெல்லியில் நடைபெற்ற காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தில், இடர்ப்பாடுக் காலத்தில் நீரைப் பகிர்ந்து கொள்ளுதல் கணக்கீட்டுப்படி, தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நீரில் குறைபாடான 48 டி.எம்.சி. அடி நீரை நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 24 நாட்களுக்கு உடனடியாகத் திறந்துவிட வேண்டுமென்றும், நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி கருநாடகா தொடர்ந்து நீரை விடுவிக்க ஆணை பிறப்பிக்குமாறும் நான் வலியுறுத்தினேன். கருநாடகா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினரிடையே ஒத்த கருத்து ஏற்படாத சூழ்நிலையில், 20.09.2012 முதல் 15.10.2012 வரை நாளொன்றிற்கு வினாடிக்கு 9,000 கன அடி வீதம் கருநாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டுமென்றும், அதன் பிறகு காவேரிக் கண்காணிப்புக் குழு 15.10.2012 அன்று கூடி சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்தாலோசித்து 15.10.2012–க்கு பிறகு நீர் விடுவிப்பது குறித்து முடிவெடுக்கலாம் என்றும் காவேரி நதிநீர் ஆணையத்தின் தலைவரான மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்தார். ஆனால், கருநாடக அரசு இதனை ஏற்க மறுத்தது. தமிழகத்திற்கு சாதகமான முடிவினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவிக்காததைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு

பாரதப் பிரதமர் அறிவித்த குறைந்தபட்சத் தண்ணீரைக் கூட விடுவிக்க முடியாது என்று கருநாடகா அறிவித்ததைக் கருத்தில் கொண்டும், எனது எதிர்ப்பினைத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று நான் அறிவித்தேன்.

இதனையடுத்து, நாளொன்றிற்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 48 டி.எம்.சி. அடி தண்ணீரை அடுத்த 24 நாட்களுக்கு கருநாடகா தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்றும், காவேரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி கருநாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையத்தின் தலைவர் பிறப்பித்த உத்தரவை கருநாடக அரசு செயல்படுத்த வேண்டும் என்று 28.09.2012 அன்று தீர்ப்பளித்தது. இதன்படி, 29.09.2012 முதல் நீரினை விடுவிக்கத் துவங்கிய கருநாடகா, திடீரென்று தன்னிச்சையாக 08.10.2012 அன்று தண்ணீர் விடுவிப்பதை நிறுத்திவிட்டது. இந்திய கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்ட கருநாடக அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை 10.10.2012 அன்று எனது தலைமையிலான அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

இந்தச் சூழ்நிலையில் 11.10.2012 அன்று காவேரி கண்காணிப்புக் குழுவின் கூட்டம் புது டெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில், நீர்விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரான 48 டி.எம்.சி. அடி நீரை நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 24 நாட்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்றும், கருநாடக அரசு உச்ச நீதிமன்ற ஆணையை மதிக்காததால், உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு ஏற்பட்டது என்றும், இடர்ப்பாடு ஆண்டிலும் கருநாடக அரசு

நீரை அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து தனது பயன்பாட்டிற்காக விடுவித்துள்ளது என்றும் தெரிவித்து, தமிழ்நாட்டின் சம்பா பாசனத்திற்காக 15.10.2012 முதல் 16.02.2013 வரை சுமார் 145 டி.எம்.சி. அடி நீர் தேவைப்படும் என்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. எனினும், கருநாடகத்தின் 4 அணைகளில் போதுமான நீர் இருப்பு இருந்தபோதிலும், தமிழகத்திற்கு மேலும் தண்ணீர் வழங்க இயலாது என கருநாடகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், 16.10.2012 முதல் 31.10.2012 வரையிலான காலத்திற்கு 8.85 டி.எம்.சி. அடி நீரை கருநாடகா தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று காவேரி கண்காணிப்புக் குழுவின் தலைவர் தனது முடிவினை அறிவித்தார். இந்த முடிவு தமிழகத்திற்கு எதிரானது என்றும், இடர்ப்பாடுக் காலத்தில் தமிழ்நாட்டிற்குரிய பங்கான 48 டி.எம்.சி. அடி குறைபாடு நீரைக் கணக்கில் கொள்ளாமல் 15 நாட்களுக்கு மட்டும் நீரை அளிக்க உத்தரவிட்டது சரியானது அல்ல என்றும் தமிழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்த குறைந்தபட்ச நீரைக் கூட கருநாடகா விடுவிக்க மறுத்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், கருநாடகத்தின் பிடிவாதப் போக்கை எதிர்த்து தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு 30.10.2012 அன்று விசாரணைக்கு வந்தபோது, இது தொடர்பான அனைத்து அம்சங்களையும் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டும் என காவேரி கண்காணிப்புக் குழுவிற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து, 31.10.2012 அன்று புது டெல்லியில் நடைபெற்ற காவேரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், 31.10.2012 வரை 8.85 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டும் என்று காவேரி கண்காணிப்புக் குழு 11.10.2012 அன்று உத்தரவிட்டதில், 2.15 டி.எம்.சி. அடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்றும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, 2012 நவம்பர் மாதம் முதல் 2013 பிப்ரவரி வரை தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டும் என்றும் தமிழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட காவேரி கண்காணிப்புக் குழு, 16.10.2012 முதல் 31.10.2012 வரை தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரில் உள்ள பற்றாக்குறையான 2.15 டி.எம்.சி. அடி தண்ணீரை 04.11.2012க்குள் விடுவிக்குமாறும், 01.11.2012 முதல் 15.11.2012 வரையிலான காலத்திற்கு 3.94 டி.எம்.சி. அடி தண்ணீரை விடுவிக்குமாறும், ஆக மொத்தம் 6.09 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழகத்திற்கு திறந்துவிடுமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தமிழ்நாடு, காவேரி கண்காணிப்புக் குழுவிற்கு அளிக்கவிருக்கும் கோரிக்கைகள் குறித்தும், தமிழகத்திற்கு மேற்கொண்டு தண்ணீர் விடுவிப்பது குறித்தும் 15.11.2012 அன்று நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று காவேரி கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், சம்பா சாகுபடியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில், காவேரியில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை எப்படியாவது பெற வேண்டும் என்பதன் அடிப்படையில் எனது அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நான் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியினாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும் கருநாடகா ஓரளவு தண்ணீரை விடுவிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டு, தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரை கருநாடகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்தின் மூலம் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்ற எனது நம்பிக்கையையும் தெரிவித்து அமர்கிறேன்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி – (29.11.2012)



நியாயம் கேட்டு
உச்சநீதிமன்றத்தில்
மீண்டும் முறையிடுவோம்

காவேரி நதிநீர்ப் பங்கீடுப் பிரச்சினை குறித்து பெங்களூருவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு கருநாடக மாநில முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் அவர்களுடன் 29.11.2012 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதனையடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது கூறியதாவது:–

தமிழகத்தில் 14.93 இலட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி பயிரிடப்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் 6.32 டி.எம்.சி அடி அளவு மட்டுமே தண்ணீர் இருப்பு உள்ளது.

குடிநீருக்கும், மற்றவைக்கும் போனது போக மீதம் 6.32 டி.எம்.சி. அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. இதுவும் இன்னும் 6 நாள் நீர்ப்பாசனத்திற்கு மட்டுமே போதுமானதாகத் தண்ணீர் இருப்பு உள்ளதால் தமிழக விவசாயிகள் மிகப்பெரிய இன்னலை எதிர்நோக்கி உள்ளனர்.

கருநாடகாவிலிருந்து நீர்வரத்து இல்லாவிட்டால் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் தர முடியாத நிலையில், சம்பாப் பயிர்கள் அழியும் நிலை ஏற்படும். தமிழ்நாட்டில் உள்ள விவசாயி களுக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கும். சம்பாப் பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமானால் 65 நாட்களுக்காவது தண்ணீர் வழங்க வேண்டும். இதைப்பற்றி கருநாடக முதலமைச்சரிடம் எடுத்துரைத்து 30 டி.எம்.சி. அடி தண்ணீரையாவது தமிழகத்திற்கு வழங்கி, சம்பாப் பயிரைக் காப்பாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தேன்.

எனது கோரிக்கையை நிராகரித்து விட்ட கருநாடக அரசு, ஒரு சொட்டுத் தண்ணீர் கூடத் தரமுடியாது எனப் பிடிவாதமாகத் தெரிவித்துவிட்டது. உச்சநீதின்றத்தின் அறிவுறுத்தல் காரணமாகவே இந்தச் சந்திப்பு இன்று (29.11.2012) நடைபெற்றது. 30.11.2012 அன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணை இருப்பதால் இது பற்றி உச்சநீதிமன்றத்தில் இந்தச் சந்திப்பின் முடிவு பற்றித் தெரிவிப்போம்.

✶ ✶ ✶

ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை மற்றும் மாணவ, மாணவியருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை – (13.12.2012)



மாணவ, மாணவியரின் ஆற்றலை வெளிக்கொணர வேண்டியது ஆசிரியர்களின் கடமை!

இந்த இனிய விழாவில் முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன், விளையாட்டு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே, வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி

அவர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி டி. சபிதா அவர்களே, எதிர்கால இந்தியாவின் தூண்களாகிய, மாணவச் செல்வங்களே, அந்தத் தூண்களை நிர்மாணிக்கும் ஆசிரியப் பெரு மக்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணை மற்றும் மாணவ, மாணவியருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கல்விக்கு சலுகைகள் வழங்கும் அரசு

கற்றவனைக் கண்ணுடையர் என்றும், கல்லாதவனைப் புண்ணுடையர் என்றும் கூறியிருக்கிறார் திருவள்ளுவர். மெய்யறிவைத் தரக் கூடியது கல்வி என்று சங்க கால நூல்கள் கூறுகின்றன. சங்க காலம் தொடங்கி இது நாள் வரை தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குவதால் ‘‘கல்வி சிறந்த தமிழ்நாடு’’ என்று தமிழ்நாட்டைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் மகாகவி பாரதியார். கற்றலால் சிறப்பும், கல்லாமையால் இழிவும் வந்தெய்தும் என்று புலவர் இளங்கீரனார் பாடியுள்ளார். ஒருவன் கல்வி கற்றால் அவனிடம் உள்ளத்தால் துணிவும், உடலளவில் பணிவும் வந்து சேரும் என்பது சான்றோர் வாக்கு. ‘‘கீர்த்தியும் பெருமையும் கிடைப்பது கல்வி’’ என்று கல்வியைப் பற்றி ஔவையார் எடுத்துரைத்துள்ளார். அனைத்து அணிகலனையும் விடக் கல்வி அழகே அழகு என நாலடியார் பாடல் தெளிவாக்குகிறது. நன்மையும், தீமையும் விளையக் கூடிய நிலமாக இருப்பது மனம். ஆதலால் ஒழுக்கத்தை வளர்க்கும் கல்வியையே மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்றார் அறிஞர் பிளாட்டோ.

‘‘பூசை அறை, சமையல் அறை, படுக்கை அறை வைத்துக்



கட்டும் நம் மக்கள் படிக்கும் அறை வைத்து வீடு கட்டும் காலம் என்று வருகிறதோ அன்று தான் நாம் எழுச்சி பெற்றவர்களாவோம்'' என்று கூறினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த கல்வியை அனைவரும் கற்க வேண்டும்; கல்லாதவர்களே இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டும் என்ற அடிப்படையில், கல்விக்காகப் பல்வேறு சலுகைகளை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்குக் கட்டணமில்லாக் கல்வி வழங்கப்படுகிறது.

மாணவ–மாணவியர் பசியின்றிக் கல்வி கற்க வசதியாக சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சத்துணவுத் திட்டத்தில் மாணவ–மாணவியரின் விருப்பத்திற்கேற்ப உணவு முறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

விலையில்லாப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், 4 ஜோடி சீருடை, காலணிகள், கணித உபகரணப் பெட்டி, வண்ணப்

பென்சில்கள், புத்தகப் பை, புவியியல் வரைபடம் ஆகியவை ஆண்டுதோறும் மாணவ–மாணவியருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புற மக்களின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. இது தவிர, ஆரம்பப் பள்ளிகள் இடைநிலைப் பள்ளிகளாகவும், இடைநிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு உள்ளன.

மேல் நிலை வகுப்புப் பயிலும் மாணவ–மாணவியருக்கு விலை ஏதுமின்றி மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேல் நிலைக் கல்வியில் இடை நிற்றலைத் தடுக்கும் வகையில், 10 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 5,000 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ–மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கணினி வழிக் கல்வி அளிக்கும் திட்டமும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

1,660 கோடி ரூபாய் செலவில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

முன் எப்போதும் இல்லாத உயர் அளவாக இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறைக்கென 14,553 கோடி ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு ஒதுக்கியுள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஒன்றரை ஆண்டுகளில் 26,220 ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



ஆசிரியர் நியமனத்துக்கான தகுதித் தேர்வு இரண்டு முறை நடத்தப்பட்டு, தகுதியின் அடிப்படையில் நீங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள். நியமன ஆணைகளை இன்று பெற்றுக் கொள்ள இருக்கிறீர்கள். உங்கள் எல்லோருக்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர் பணி என்பது அறப் பணி. ஆசிரியர் பணி என்பது தன்னலமற்ற சேவைப் பணி. ஆசிரியர் பணியை விடச் சீரிய பணி ஏதுமில்லை.

உன்னதமான ஆசிரியர் பணி

ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பதல்ல. ஒழுக்கத்தை, பண்பை, பொது அறிவை, ஆன்மீகத்தை மாணவ மாணவியரிடையே எடுத்துச் சொல்லும் பணி ஆசிரியர் பணி. வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் பணியை நீங்கள் மேற்கொள்ள இருக்கிறீர்கள். கரையாக் கல்விச் செல்வத்தை கற்றுக் கொடுக்க இருக்கிறீர்கள். எந்த ஒரு தொழிலிலும், தன்னிடம் வேலை செய்பவர் தன்னைவிட வளர்ச்சி பெறுவதை எந்த முதலாளியும் விரும்ப மாட்டார். ஆனால், தன்னிடம் பயிலும் மாணவர் புகழ் பெறுவதை, அறிஞர் ஆவதை ஆசிரியப்



பெருமக்கள் கண்டு இன்புறுவர். அப்படிப்பட்ட உன்னதமானப் பணி ஆசிரியர் பணி. மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் பணி ஆசிரியர் பணி. மாணவர்களின் ஆர்வத்தை ஊக்கப்படுத்தும் பணி ஆசிரியர் பணி. இப்படிப்பட்ட பொறுப்புள்ள பணியை நீங்கள் எல்லாம் திறம்பட மேற்கொண்டு அறிவுசார் சமுதாயத்தை உருவாக்க வேண்டும். எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய திறமையை மாணவர்களிடத்திலே உருவாக்க வேண்டும். மாணவ, மாணவியரிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

தன்னம்பிக்கையே முக்கியம்

ஏழை மனிதர் ஒருவர் தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். தெருவில் ஒரு பழங்கால நாணயம் கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அந்த நாணயத்தில் துளை இருந்தது. துளையிட்ட நாணயம் கிடைத்தால் அதிர்ஷ்டம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. எனவே, சந்தோஷமாக அதை எடுத்து தன்னுடைய சட்டைப் பையிலே பத்திரமாக வைத்துக் கொண்டார். வீட்டிற்குச் சென்ற பின் அதனை ஒரு பாலிதின் கவரில் போட்டு, அதை ஒரு துணிக் கவரில் சீல் வைத்து பத்திரப்படுத்திக் கொண்டார். தனக்கு வந்த அதிர்ஷ்டத்தைத் தன் மனைவியிடமும்

தெரிவித்தார். அதை எப்போதும் தனது சட்டைப் பையில் வைத்துக் கொண்டு அதைத் தொட்டுப் பார்த்துக் கொள்வார். ஆனால் அதனை வெளியில் எடுக்க மாட்டார்.

அந்த நாணயம் தனக்கு வாழ்வில் உயர்வைத் தரும் என்று நம்பி, தனது முழுத் திறனையும் பயன்படுத்தி உழைக்க ஆரம்பித்தார். பின்னர் வியாபாரம் செய்ய ஆரம்பித்து அதிலும் வெற்றி பெற்றார். அதன் பின்னர் பல வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு அனைத்திலும் வெற்றி பெற்றார். பணம், பதவி, புகழ் எல்லாம் அவரை வந்து சேர்ந்தது. அவரை எல்லோரும் பாராட்ட ஆரம்பித்தார்கள். அவர் எதைத் தொட்டாலும் வெற்றி என்ற நிலைமை. எல்லாம் அந்தத் துளையிட்ட காசோட மகிமை என்று நினைத்தார் அந்த மனிதர்.

இப்படியே பல ஆண்டுகள் கழிந்தன.

ஒரு நாள் அந்த நாணயத்தைக் கண்ணாலே பார்க்க வேண்டும் என்ற ஆசை அந்த மனிதருக்கு வந்தது.

அப்போது தன் மனைவியைக் கூப்பிட்டு, ''ரொம்ப நாளைக்குப் பிறகு என்னுடைய அதிர்ஷ்ட நாணயத்தை இன்றைக்கு வெளியே எடுத்துப் பார்க்கப் போகிறேன்'' என்று கூறினார் அந்த மனிதர்.

உடனே மனைவி, ''இப்ப அதைப் பார்க்க வேண்டாமே'' என்று மெதுவாகக் கூறினார்.

''இல்லை, இல்லை! பார்த்தே தீர வேண்டும்!'' என்று சொல்லி சட்டைப் பையில் கையை விட்டு கவரைத் திறந்து, நாணயத்தை வெளியே எடுத்தார் அந்த மனிதர். அவருக்கு ஒரே ஆச்சரியம். அந்த நாணயத்தில் துளையே இல்லை. அப்படியே குழம்பிப் போய் நின்றார்.

அப்பொழுது அவரது மனைவி, ''உங்க சட்டைப் பையில் காசு இருப்பது நினைவில்லாமல் நான் தான் ஒரு நாள் உங்க சட்டை தூசியாக இருக்கு என்று ஜன்னலுக்கு வெளியே உதறினேன். அது தெருவில் விழுந்துவிட்டது. எவ்வளவோ தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. அது இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்தால் வருத்தப்படுவீர்கள் என்பதற்காக வேறு ஒரு நாணயத்தை அதே போன்று கவரில் போட்டு சட்டைப் பையில் போட்டு வைத்தேன்'' என்று கூறினாள்.

"இது எப்ப நடந்தது?" என்று கேட்டார் அந்த மனிதர்.

"உங்களுக்குக் காசு கிடைத்த மறு நாளே இது நடந்தது" என்றாள் மனைவி.

இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

அந்த மனிதருக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுத்தது அந்த நாணயம் இல்லை. அவருடைய தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி. வாழ்க்கையிலே முன்னேற நினைக்கிறவர்களுக்கு தன்னம்பிக்கை மிகவும் முக்கியம். இந்தத் தன்னம்பிக்கையை மாணவ மாணவியருக்கு இளம் பருவத்திலேயே ஏற்படுத்தினால் அவர்களால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை.

ஆசிரியர்களாகிய நீங்களும் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு, மாணவ–மாணவியரிடையே படிக்கும் ஆர்வத்தை ஊக்குவித்தால், அவர்களது ஆற்றல் நிச்சயம் வெளிப்படும். ஒவ்வொருவருக்கும் ஒரு ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றலை வெளிக் கொணர வேண்டிய கடமை ஆசிரியர்களாகிய உங்களுக்கு இருக்கிறது.

ஓர் ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கும் விதம் மாணவ–மாணவியரை ஈர்க்கும் வகையில், அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் செய்முறை விளக்கத்துடன் கூடியதாக அமைய வேண்டும்.

"ஒரு பொருளின் வெப்பம் இழக்கும் வீதமானது, அப் பொருளின் வெப்ப நிலைக்கும், சுற்றுப்புறத்தின் வெப்ப நிலைக்கும் உள்ள வேறுபாட்டின் நேர்விகிதத்தில் இருக்கும்" என்பது நியூட்டனின் வெப்ப விதி. இதை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், நடைமுறை உதாரணத்துடன் ஓர் ஆசிரியர் எடுத்துரைத்தார். அதை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இரு நண்பர்கள் ஓர் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது பால், காபி டிக்காஷன், சர்க்கரை ஆகியவற்றைத் தனித்தனியாகக் கொண்டு வந்து வைத்தார்

பணியாளர். பால் கொதிநிலை சூட்டிலும், டிக்காஷன் அந்த அறையின் வெப்ப நிலையிலும் இருந்தது. அந்த சமயத்தில், அந்த நண்பர்களில் ஒருவருக்கு அவரது அலுவலக உயரதிகாரி கைபேசியில் தொடர்பு கொண்டு சில விவரங்களைக் கேட்டார். அந்த விவரங்களைத் தன்னிடம் உள்ள மடிக்கணினி மூலம் தேடி அந்த உயர் அதிகாரிக்கு உடனடியாக அனுப்ப வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக காபியை அருந்துவதில் தாமதம் ஏற்படும் சூழ்நிலை உருவானது. இந்தச் சூழ்நிலையில், பாலுடன் டிகாஷனைக் கலந்து வைத்தால் காபி சூடாக இருக்குமா? அல்லது காபியையும், டிகாஷனையும் தனித்தனியே குடுவையில் வைத்திருந்தால் சூடாக இருக்குமா? என்ற கேள்வியை மாணவர்களிடம் ஆசிரியர் கேட்டார். இதற்கு இரண்டு விதமான பதில்களும் மாணவர்களிடம் இருந்து வந்தன. ஆனால், காரணத்தை அவர்களால் விளக்க இயலவில்லை.

இதன் பின்னர், பால் அறையின் வெப்பநிலையை விட அதிக சூடாகவும், டிக்காஷன் அறையின் வெப்ப நிலையிலும் இருப்பதால், காபி சூடாக இருக்க வேண்டுமென்றால் பாலையும் டிக்காஷனையும் கலந்து காபியாக வைப்பது தான் சிறந்தது என்று ஆசிரியர் எடுத்துக் கூறி, நியூட்டனின் வெப்ப விதியை விளக்கினார். இவ்வாறு அன்றாட நிகழ்வுகளின் படி பாடத்தை விளக்கும் போது அது மாணாக்கரின் மனதில் எளிதில் பதிந்து விடும் என்பதோடு, வாழ்நாள் முழுமைக்கும் பயன் உள்ளதாகவும் அமைந்து விடும்.

இதைத் தான் William A. Ward என்ற அறிஞர் “The mediocre teacher tells. The good teacher explains. The superior teacher demonstrates. The great teacher inspires.” என்று கூறியிருக்கிறார்.

பெற்றோர் கடமை

ஆசிரியர், மாணவர், பெற்றோர் என்பது ஒரு முக்கோண வடிவம். இதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள் தான். அதே சமயத்தில் பெற்றோர்களும் பிள்ளைகளைப்

பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி விட்டதாலேயே தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது.

பெற்றோர்கள் பிள்ளைகளை உயர்த்த உறுதுணையாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் இந்தப் படிப்புதான் படிக்க வேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆர்வமாகப் படிக்க விரும்பும் படிப்பில் அடைகிற வெற்றியை ஆர்வமில்லாத படிப்பில் அடைய முடியாது.

பல்லாண்டுகளுக்கு முன்பு சாமிநாதன் என்கிற சிறுவன் மேல்படிப்பு படிப்பது குறித்து அவன் வீட்டில் ஒரு விவாதம் நடைபெற்றது. அந்தக் குடும்பத்துப் பெரியவர் அந்தச் சிறுவனைப் பார்த்து, ''ஒன்று சமஸ்கிருதம் படி அல்லது ஆங்கிலம் படி. ஆங்கிலம் படித்தால் இந்த உலகத்தில் ஆனந்தமாக வாழலாம். சமஸ்கிருதம் படித்தால் மேல் லோகத்திலே ஆனந்தமாக இருக்கலாம். நீ என்ன படிக்கப் போகிறாய்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன், ''நான் தமிழ் படிக்கப் போகிறேன்'' என்று கூறினான்.

சிறுவனின் பதிலைக் கேட்டதும் கோபப்பட்டார் அந்தப் பெரியவர்.

''ஆங்கிலம் படித்தால் இங்கு நன்றாக இருக்கலாம். சமஸ்கிருதம் படித்தால் அங்கு நன்றாக இருக்கலாம். தமிழ் படித்தால் இரண்டு இடத்திலும் நன்றாக இருக்கலாம்'' என்று தெளிவாக மீண்டும் எடுத்துரைத்தான் அந்தச் சிறுவன். அந்தச் சிறுவன் வேறு யாருமில்லை. அவர் தான் தமிழ்த் தாத்தா என்று நம்மால் அன்போடு அழைக்கப்படும் உ.வே. சாமிநாத அய்யர். பழந்தமிழ் இலக்கியங்களை நமக்கு அளித்தவர். அவர் தமிழ் படித்ததால் தான் இன்று தமிழே நன்றாக இருக்கிறது.

படிக்கும் ஆர்வத்தைப் பிள்ளைகளிடையே ஏற்படுத்தும் அதே சமயத்தில், அவர்களின் விருப்பத்திற்கேற்ற பாடத்தைப் படிக்க அனுமதித்தால் அனைத்து மாணவ – மாணவியருக்கும் வெற்றி உறுதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில், 92 இலட்சம் மாணவ–மாணவியர் பயன்பெறும் வகையில் விலையில்லாக் காலணிகள், சீருடைகள், கணித உபகரணப் பெட்டிகள், வண்ணப் பென்சில்கள், க்ரயான்கள், புத்தகப் பைகள், புவியியல் வரைபடங்கள் ஆகியவை வழங்கப்படுவதைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், 20,920 ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்குவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இதன் அடையாளமாக 16 மாணவ–மாணவியருக்கு நலத்திட்ட உதவிகளையும், 36 ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணைகளையும் நான் இந்த மேடையிலேயே வழங்க உள்ளேன்.

இதர ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்த விழாவிலேயே வழங்குவார்கள்.

அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறும் மாணவ–மாணவியர், மற்றும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியப் பெருமக்கள் தங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும், நலன்களையும் பெற்று இன்புற வாழ வேண்டும் என்றும் வாழ்த்தி,

ஏழ்மையும், கல்வியறிவின்மையும் தமிழ்நாட்டை விட்டு முற்றிலும் அகலும் வகையில் முழு ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்ற வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தினைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶


மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாடு 2012
நாள் : 19.12.2012
CHIEF MINISTER

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட 343 அறிவிப்புகள் – 19.12.2012

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு, ஒரு முக்கியமான நிருவாகச் செயல்பாடாகும். அதனை அரசு ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. நான் முழு ஈடுபாட்டுடனும் கவனமுடனும் இந்த மாநாடுகளை நடத்தி வந்துள்ளேன். இங்கு மாவட்ட ஆட்சியர்களாலும், காவல்துறை அதிகாரிகளாலும் தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு கருத்தின் மீது முடிவு எடுக்கப்பட்டது என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என நான் கருதுகிறேன். ஒரு குழுவாக, நாம் அனைவரும் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது நாம் செல்ல வேண்டிய பாதையைத் தெளிவுபடுத்தியது.

இங்குக் கூடியிருந்த ஒவ்வொருவரும், பெருமளவில் பயனடைந்தனர். மாநாட்டின் முதல் நாளில் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், சட்டம் ஒழுங்கு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை விரிவாக விவாதித்தனர். இரண்டாவது நாளில், சாதாரண மக்களுக்கான வசதிகளை உயர்த்துவதற்கான அரசின் வளர்ச்சித் திட்டம் தொடர்பான எண்ணற்ற பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. இன்று, மூத்த காவல்துறை அதிகாரிகள், தற்போதைய நிலையை எடுத்துரைத்து, காவல்துறை செயல்பாடு குறித்த பல்வேறு நடவடிக்கை தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து வழிகாட்டி நெறியையும், ஆதரவையும் கோரினர். இந்த விவாதங்கள், மாநிலத் தலைமையிட அதிகாரிகள், களப்பணி செயல்பாடுகளைச் சிறப்பான வகையில் மதிப்பீடு செய்ய உதவும். பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகள், அரசின் கொள்கை முன்னுரிமைகளை முழுவதும் அறிந்துகொள்ள இது வகை செய்துள்ளது.



கருத்துகள் தெரிவிக்கப்படுகின்ற போது, நிதித்தேவைகள், வட்டார மற்றும் சமூக சமவீதப்பங்கினை வகை செய்வதற்கான தேவை, விரைவான வகையில் செயல்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கான தேவை போன்ற பிரச்சினைகள் எழுகின்றன. இந்தப் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்வு காணப்பட்டு பொருள் பொதிந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை நான் தெரிவிக்க வேண்டும். மாநாட்டில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துகள், அனைவரும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு வழிநடத்திச் செல்வதுடன் சாதாரண மக்களின் தேவைகளை நிறைவேற்றும் என்று என் தரப்பில் நிறைவாகவும் திடமாகவும் உணருகிறேன்.

ஜனநாயகத்தில், மக்கள்தான் எஜமானர்கள் என்பதையும், சாதாரண மக்கள் கண்ணியம் நிறைந்த, தேவைகள் நிறைவேறிய, முழு வாய்ப்பு மற்றும் நம்பிக்கை கொண்ட வாழ்வினை வழிநடத்திச் செல்வதற்கு நாங்கள் அனைவரும் இங்கிருக்கிறோம். இதனை அடைவதற்கு, இங்கு விவாதிக்கப்பட்ட பல்வேறு கருத்துகள் திட்டங்களாக உருப்பெற்றுள்ளன. இந்த மாநாட்டில் இந்த அணுகுமுறையானது, சாதனையை முறியடிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்நிறைவுரையில், மூன்று நாட்கள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நடைபெற்ற விவாதங்களின் விளைவாக, 343 புதிய அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்புகளின் விவரம் வருமாறு :

திருவாரூர் மாவட்டம்

- திருவாரூர் மாவட்டத்தில் ரூ.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் 4,000 இடங்களில் மீண்டும் செறிவூட்டும் கம்பங்கள் நிறுவப்படும்.
- திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில், ''உயிரின வாழ்க்கைச் சூழல்–சுற்றுலா மையம்'' மேம்படுத்தப்படும்.
- திருவாரூர் மாவட்டத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலான பள்ளி வகுப்பறைகளில், மாவட்ட நில வரைபடங்கள், தமிழ்நாடு நில வரைபடம், இந்திய நில வரைபடம் ஒட்டப்பட்டுள்ளன. இது, அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- திருவாரூர் மாவட்டத்தில் இ.சி.ஆர். சாலையில் இரண்டு நெடுஞ்சாலை ரோந்து குழு அமைக்கப்படும்.
- திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டையில் விருந்தினர் மாளிகை கட்டப்படும்.
- திருவாரூர் மாவட்ட திட்ட அலுவலகக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு ரூ. 96.11 இலட்சம் கூடுதல் நிதி வழங்கப்படும்.
- திருவாரூர் மாவட்டத்தில் காவல்துறைக் கூடுதல் துணைக் கண்காணிப்பாளர் இருவருக்கும் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் நால்வருக்கும் குடியிருப்புக் கட்டித்தரப்படும்.

விழுப்புரம் மாவட்டம்

- விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலைப்பகுதிக்கு, பொது விநியோகத் திட்டத்திற்காக மேலும் இரண்டு நடமாடும் வேன்களுக்கு வகை செய்யப்படும்.

- விழுப்புரத்திலுள்ள கள்ளக்குறிச்சிக்கு மாவட்டக் கல்வி அதிகாரி பணியிடம் ஒன்றுக்கு அனுமதியளிக்கப்படும்.
- விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திண்டிவனத்தில் பேருந்து நிலையம் அமைக்க அனுமதியளிக்கப்படும்.
- விழுப்புரம் மாவட்டத்தில் போக்குவரத்து விதிகள் குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்கு பிரத்யேகமாக சாலைப் பாதுகாப்பு வண்டி வழங்கப்படும்.
- விழுப்புரம் மருத்துவக் கல்லூரியில் 24 மணி நேர விபத்து சிகிச்சை மையம் அமைக்கப்படும்.
- சங்கராபுரத்தில் SIDCO பிரிவு ஒன்று அமைக்கப்படும்.
- ஆரோவில் காவல் நிலையம், ஆய்வாளர் தலைமையின் கீழ் செயல்படும் காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்.
- விழுப்புரத்தில் சேமக் காவல்படைப் பிரிவு இரண்டு ஏற்படுத்தப்படும்.
- விழுப்புரத்தில் ஊர்க்காவல்படை அலுவலகத்திற்கு நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.
- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி திருக்கோவிலூரில் போக்குவரத்துக் காவல்நிலையங்கள் இரண்டு ஏற்படுத்தப் படும்.

நாகப்பட்டினம் மாவட்டம்

- நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள அரிச்சந்திரா ஆற்றின் உபரி நீரானது, ஆற்றை ஒட்டிய நிலத்தில், 1,000 ஏக்கரில் நீர் சேமிப்புக் கட்டமைப்பு கட்டுவதன் வாயிலாகத் தேக்கி வைக்கப்படும். இது, குடிநீர் ஆதாரமாகப் பயன்படும்.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொகைக்குள் கட்டி முடிக்கப் பெறாத 7 பள்ளிகளை, முடிப்பதற்காக கூடுதல் நிதிக்கு அனுமதியளிக்கப்படும்.
- சீர்காழி மற்றும் மயிலாடுதுறை பகுதிகளில் மேலும் இரண்டு மதுவிலக்கு சுங்கச் சாவடிகளுக்கும் ஒரு நடமாடும் சுங்கச் சாவடிக்கும் அனுமதி வழங்கப்படும்.



திருச்சி மாவட்டம்

- திருச்சி மாவட்டம் பச்சைமலையில் 'உயிரின வாழ்க்கைச் சூழல்–சுற்றுலா' மேம்படுத்தப்படும்.
- திருச்சி மாவட்டம், முசிறி, துறையூர், ஜீயபுரம், லால்குடி ஆகிய இடங்களில் நான்கு போக்குவரத்துக் காவல்நிலையங்கள் அமைக்கப்படும்.
- திருச்சி மாவட்டம், ஜீயபுரம் உட்கோட்டத்திற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.
- திருச்சி மாவட்டத்தில் 10 காவல் நிலையங்கள் பெரிய காவல் நிலையங்களாகவும், 7 காவல் நிலையங்கள், நடுத்தரக் காவல்நிலையங்களாகவும் நிலையுயர்த்தப்படும்.
- திருச்சி மாவட்டத்திற்கு 3 கூடுதல் ஆயுத சேம காலாட்படைப் பிரிவுகள் அனுமதிக்கப்படும்.
- திருச்சி மாவட்டத்தில், ஆயுத சேமக் காவலர்களுக்காக, 85 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

- திருச்சி மாவட்டத்தில், 3 கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் 5 மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.
- திருச்சி மாவட்டத்தில், காவல்துறைப் பணியாளர்களுக்காக, சமுதாயக் கூடம் ஒன்றும், சிற்றுண்டிச்சாலை ஒன்றும் கட்டப்படும்.
- திருச்சி, காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு முகாம் அலுவலகம் ஒன்று கட்டப்படும்.
- திருச்சி மாவட்டத்தில், கோயில் பாதுகாப்புப் படையில் ஊர்க்காவலர்களுடன், 97 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதியளிக்கப்படும்.
- திருச்சி நகரத்திற்கு 10 கூடுதல் கண்காணிப்பு வாகனங்கள் அனுமதிக்கப்படும்.
- திருச்சி நகரத்தில் சேமக்காவல் நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.
- திருச்சியிலிருக்கும் துணை ஆணையருக்கு இரண்டு குடியிருப்புகள் அனுமதிக்கப்படும்.
- திருச்சி நகரக் காவல்துறைக்கு இரண்டு குற்றவியல் ஆய்வாளர் பணியிடம் அனுமதிக்கப்படும்.

பெரம்பலூர் மாவட்டம்

- பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு, பெரம்பலூரில் பால்பண்ணை ஒன்று அமைக்கப்படும்.
- பெரம்பலூரில், தனி நெடுஞ்சாலைக் கோட்டம் ஒன்று அமைக்கப்படும்.
- பெரம்பலூர் மாவட்டத்தில், திருச்சி–சென்னை நெடுஞ்சாலையில் ஜவுளிப்பூங்கா அமைக்கப்படும்.

- பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் வட்டாரத்தில் மகளிருக்கான கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.
- பெரம்பலூர் மாவட்டம் மங்களமேட்டில் உட்கோட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும்.
- பெரம்பலூர் மாவட்டத்திற்கு 2 நெடுஞ்சாலை ரோந்து வண்டிகள் வாங்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டம்

- திருவள்ளூர் மாவட்டத்தில் குடிசைகளில் வசிக்கின்ற 6,730 குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்படும்.
- திருவள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைத் தரத்திற்கு மேம்படுத்தப்படும்
- திருவள்ளூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை 5இல் விபத்து சிகிச்சை மையம் ஒன்று அமைக்கப்படும்.
- திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்று சேமக்காவல் பிரிவு அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.
- திருவள்ளூர் மாவட்டத்தில் சோழவரம், வெள்ளவேடு, மீஞ்சூர், வெங்கல், செவ்வாய்ப்பேட்டை ஆகிய காவல் நிலையங்கள், தரம் உயர்ந்த காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்
- திருத்தணி நகரக் காவல் நிலையத்திற்கு மேலும் 50 காவல்துறைப் பணியாளர்களை நியமனம் செய்து அதன் பணியாளர் எண்ணிக்கை உயர்த்தப்படும்.
- திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணியில் காவல் குடியிருப்புகள் ஏற்படுத்தப்படும்.
- இரண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல்துறைப் பிரிவுகள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு அமைக்கப்படும்.
- ரூ.3 கோடி செலவில் புழல் வளாகத்தில் முன்னோடி சூரிய சக்தி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

வேலூர் மாவட்டம்

- ❖ வேலூர் மாவட்டத்தில், துணை வட்டாட்சியர் பதவித்தர வட்ட வழங்கல் அதிகாரிகளுக்கு வாகனங்கள் வழங்கப்படும்
- ❖ வேலூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.
- ❖ வேலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.
- ❖ வேலூரில் மேலும் இரண்டு சேமக் காவல்படைப் பிரிவு அமைக்கப்படும்.
- ❖ வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.
- ❖ வேலூரில் சேமக் காவல்படைப் பிரிவைச் சேர்ந்த 162 பணியாளர்களுக்குக் குடியிருப்புக் கட்டித்தரப்படும்.
- ❖ வேலூரில் காவல்துறைக் காவலர்களுக்கு மருத்துவமனைக்குக் கட்டடம் ஏற்படுத்தப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம்

- ❖ திருவண்ணாமலை கோயிலில் கிரிவலம் மற்றும் ஏனைய விழாக்கள் தொடர்பான செலவினம் அனைத்தும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையால் ஏற்கப்படும்.
- ❖ திருவண்ணாமலையில், பால் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும்.
- ❖ திருவண்ணாமலையில் தனி நெடுஞ்சாலைக் கோட்டம் ஒன்று அமைக்கப்படும்.
- ❖ திருவண்ணாமலையில் 14 கிலோ மீட்டர் கிரிவலப் பாதையானது விரிவாக்கம் செய்வதன் மூலமும் அவசர வழிகள் அமைப்பதன் மூலமாகவும் மேம்படுத்தப்படும். விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும்.
- ❖ திருவண்ணாமலை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடுகாட்டிற்குச் செல்வதற்குப் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு நிதி வழங்கப்படும்.



- திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம், தண்டாரம்பட்டு, வேட்டவலம் மற்றும் அவலாக்கோட்டை ஆகிய இடங்களில் நிரந்தரப் பேருந்துநிலையம் அமைக்க 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும்.
- இரண்டு சேமக் காவல் படைப் பிரிவு திருவண்ணாமலையில் அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

தேனி மாவட்டம்

- தேனியில், பேரூராட்சி உதவி இயக்குநர் பணியிடம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படும்
- தேனியில் விளையாட்டு விடுதி ஒன்று அமைக்கப்படும்.
- தேனி மருத்துவக் கல்லூரியில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்படும்.
- தேனி மாவட்டத்தில் சின்னமனூருக்கும் மேகமலைக்கும் இடையே சாலை அமைக்கப்படும்.

- தேனி மருத்துவக் கல்லூரிக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி செய்துத் தரப்படும்.
- கேரள எல்லையோரப் பகுதிகளிலுள்ள தமிழர்களின் குழந்தைகள் தேனி மாவட்ட விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
- பாதுகாப்புப் பணிக்காக ஓரிடத்திலிருந்து பணியிடமாற்றம் செய்யப்பட்ட காவல்துறைப் பணியாளர்களின் பயனுக்காக தேனி மாவட்டம் கண்ணகி கோயிலின் எல்லைப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டப்படும்.
- தேனி மாவட்டத்தில் இரண்டு சேமக் காவல்படைப் பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டம்

- ஈரோடு மாவட்டம் மணியாச்சிபள்ளத்தில் சாலை மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்படும்.
- ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையானது, படகுக் குழாம் மற்றும் பூங்கா அமைக்கப்பட்டு சுற்றுலாப் பகுதியாக மேம்படுத்தப்படும்.
- ஈரோடு மாவட்டத்தில், காங்கேயம் வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும்.
- இரண்டு சேமக் காவல் பிரிவு ஈரோடு மாவட்டத்தில் அமைக்கப்படும்.
- ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.
- சத்தியமங்கலத்தில் அதிரடிப்படை வளாகங்களுக்கு ரூ. 9 கோடி செலவில் கட்டடத்திற்கு வகை செய்யப்படும்.

கரூர் மாவட்டம்

- கரூரில் அமைக்கப்படவிருக்கின்ற சாயத் தொழிற்சாலைகள் பூங்காவிற்கு அரசுக் கடனும் உதவித் தொகையும் வழங்கப்படும்.

- குளித்தலை, தோகைமலைப் பகுதிகளில், காவிரியை ஆதாரமாகக் கொண்டு, ரூ.12.50 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படும்.
- கரூர் அரசு மருத்துவமனையானது, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மேம்படுத்தப்படும்.
- கரூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.
- கரூரில் வட்டச்சாலை அமைக்கப்படும்.
- கரூர் மாவட்டத்திலுள்ள 6 காவல் நிலையங்கள் நடுத்தர வகைக் காவல்நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.
- கரூர் மாவட்ட பசுபதிப்பாளைய காவல்நிலையம் மேம்பட்ட காவல் நிலையமாகத் (Heavy type) தரம் உயர்த்தப்படும்.
- கரூர் மாவட்டம் குளித்தலை நகராட்சியில் போக்குவரத்துக் காவல்நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம்

- கன்னியாகுமரியில் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு 14 கூடுதல் பணியாளருக்கு அனுமதி வழங்கப்படும்.
- குழித்துறை ஆற்றிலிருந்து நாகர்கோவில் நகராட்சிக்குத் தண்ணீர் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்படும்.
- கன்னியாகுமரியிலுள்ள புராதன அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்படும்.
- நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி ஆட்சியர் அலுவல கத்தில் ரூ.9 கோடி செலவில் கூடுதலாக 4 தளங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் சேமக் காவல்படைப் பிரிவுக்கு (AR Platoons) ஒப்புதல் வழங்கப்படும்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில், மாநிலங்களுக்கு இடையே யான 37 சுங்கச் சாவடிகளில் தனியாகக் காவல்துறைப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

❖ கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறை அலுவலகங் களுக்காக ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம்

❖ காஞ்சிபுரம் நகரிலுள்ள அனைத்துச் சாலைகளும் செப்பனிடப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோழிமேட்டிலும் உத்திர மேரூரிலும் சாலை மேம்பாலங்கள் அமைக்கப்படும்

❖ காஞ்சிபுரம் வட்டத்தில் அதிக எண்ணிக்கையில் தெரு விளக்குகளுக்கு வகை செய்யப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையை இணைக்கின்ற 56 சாலைகள் செப்பனிடப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் பம்மல், அனகாபுத்தூரில் சவ்வூடுபரவல் தளவாடத்துடன் கூடிய 15 துணைக் கிணறுகளுக்கு வகை செய்யப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று மருத்துவமனைகளுக்கு இரத்தப் பரிசோதனைக் கருவிகள் வாங்கப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மணிமங்கலம், செம்மங்கலம், ஓட்டேரி காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூன்று சேமக் காவல்படைப்பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

❖ செங்கல்பட்டிலுள்ள துணை சிறைச்சாலை மாவட்ட சிறைச்சாலைத் தரத்திற்குத் தரம் உயர்த்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம்

❖ கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாவட்டக் காவல்துறை அலுவலகக் கட்டடத்திற்கு அனுமதியளிக்கப்படும்



- கோயம்புத்தூரில் ஏ.ஆர். வளாகத்திற்கு அனுமதியளிக்கப் படும்.
- காவல்துறைப் பணியாளருக்கென மேட்டுப்பாளையத்தில், துயிற்கூடம் ஒன்று கட்டப்படும்.
- கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவில் குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக மின் உற்பத்திச் சாதனம் ஒன்று அனுமதிக்கப்படும்.
- கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள சில பழைய கட்டடங்களை இடித்த பின்னர் அந்த இடத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.
- கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நெல்லித்துறைச் சாலை மீண்டும் அமைக்கப்படும்.
- கோயம்புத்தூருக்கு இரண்டு ஆயுத சேம காலாட்படைப் பிரிவுகள் அனுமதிக்கப்படும்.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் துணை ஆணையர்களுக்கு இரண்டு குடியிருப்புகள் அமைக்க ஒப்புதலளிக்கப்படும். இரண்டு ஆய்வாளர்கள் குடியிருப்புகள் துணை ஆணையர்கள் குடியிருப்புகளாக சில மாற்றங்களுடன் மாற்றப்படுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூன்று காவல் நிலையங் களுக்கு கட்டடம் கட்ட அனுமதிக்கப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு இரண்டு கனரக கட்டி இழுத்துச் செல்லும் வண்டிகள் வாங்க அனுமதிக்கப்படும்.

- கோயம்புத்தூர் நகரத்தில் ஒரு போக்குவரத்துப் புலனாய்வுக் காவல் நிலையம் அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம்

- தூத்துக்குடி மாவட்டத்தில், திருச்செந்தூர் கோயிலுக்குச் செல்கின்ற சாலை செப்பனிடப்படும்.

- தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில், செயற்கை ஹாக்கி ஆடுகளம் அமைக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்குக் கணக்காளர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவியிடங்கள் அனுமதிக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோயில்பட்டிக்கு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றுக்கு அனுமதி யளிக்கப்படும்.

- வேம்பார், வீரபாண்டிப்பட்டினம், பெரியதாழை, கல்லாமொழி, கீழவைப்பார் முதலிய 5 இடங்களில் கடல் அரிப்புத் தடுப்பு அமைப்புகள் அமைக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு பகுதியில் நீர் விளையாட்டு மையம் அமைக்கப்படும்.

- தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டத்தில் தொழிற்சாலைகளுடன் இணைந்து PPP முறையில், கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை அமைக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டத்தில் நீரில் மூழ்குவதற்கு ஸ்கியூபா டைவிங் கருவி வாங்குவதற்கு மானியம் வழங்கப்படும்.
- இடர்நீக்குப் பணிக்காகத் தூத்துக்குடி மாவட்டத்தில் மூன்று கண்காணிப்புப் படகுகள் மீன் வளத்துறைக்கு வழங்கப்படும்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் சேமக் காவல்படைக்கு நிருவாகக் கட்டடம் கட்ட அனுமதிக்கப்படும்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் சேமநலப் படைப் பணியாளர் களுக்கு 458 குடியிருப்புகள் கட்டப்படும்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட சிறைச்சாலை அமைக்க அனுமதிக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம்

- புதுக்கோட்டை மாவட்டத்தில் குளத்தூர், கரம்பக்குடி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை வட்டங்கள் உள்ள டங்கிய பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதியளிக்கப்படும்.
- புதுக்கோட்டை பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும்
- கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும்
- புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக வருவாய் உட்கோட்டம் ஏற்படுத்தப்படும்.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவுரு அறைக்கட்டடம் கட்டப்படும்.
- புதுக்கோட்டையில் வட்டச்சாலையும், அறை வட்டச் சாலையும் அமைக்கப்படும்.
- கந்தவர்க்கோட்டை மற்றும் கரம்பக்குடியில் கலை, அறிவியல் கல்லூரி துவங்கப்படும்.

- புதுக்கோட்டையில் சேமக் காவல்படைப் பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

- புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மற்றும் பொன்னமரா வதியில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் இரண்டு அமைக்கப்படும்.

அரியலூர் மாவட்டம்

- அரியலூரிலுள்ள நிலை உயர்த்தப்பட்ட மாவட்ட மருத்துவமனைக்குத் தேவையான கட்டடங்களுக்கும் சாதனங்களுக்கும் வகை செய்யப்படும்.

- படிமங்களுக்கான அருங்காட்சியகம் ஒன்று அரியலூரில் அமைக்கப்படும்.

- அரியலூர் மாவட்டத்தில், சிமெண்ட் தொழிற்சாலை களிலிருந்து லாரிகள் சென்று வருவதால் 42 கி.மீ. நீளத்திற்கான சாலைகள் பழுதடைந்துள்ளது. அவை 40 டன் பளுவுடன் கூடிய வண்டிகள் சென்றுவரக்கூடிய அளவுக்குச் செப்பனிடப்படும்.

- அரியலூர் மாவட்டத்தில் 274 சிற்றூர்களுக்குக் குழாய்த் தொடர் பதிக்கப்படும்.

- அரியலூர் மாவட்டத்தில் மேலராமநல்லூரில் தரைப்பாலம் அமைக்கப்படும்.

- அரியலூரில் சிட்கோ தொழிற்பேட்டை வளாகம் அமைக்கப் படும்.

- அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் போக்கு வரத்துக் காவல்நிலையங்கள் அமைக்கப்படும்.

திருப்பூர் மாவட்டம்

- திருப்பூர் மாவட்டத்தில் துணைப் பதிவாளர் (பால்வளம்) கூடுதல் பணியிடம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்படும்.



- திருப்பூர் மாவட்டத்தில், பொது விநியோகத் திட்டத்திற்கென நடமாடும் பிரிவு ஒன்றுக்கு அனுமதி வழங்கப்படும்.

- மாவட்டக் காவல்துறை அதிகாரி, சேமக் காவல் அதிகாரி மற்றும் கண்காணிப்புக் காவல் அதிகாரி ஆகியோருக்குக் குடியிருப்புகள் திருப்பூர் பெருந்திட்ட வளாகத்தில் ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்படும்.

- இரண்டு சேமக் காவல்படைப் பிரிவு திருப்பூரில் அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

- திருப்பூருக்கு சிறப்புப் பிரிவுகளாக கைரேகை அச்சு, புகைப்படப் பிரிவுகள், மோப்பநாய்ப் பிரிவு, சுருக்கெழுத்து அலுவலகம், காவல்துறை சுற்றுலா பங்களா, எம்.எப்.எஸ்.எல் ஆகியவை அமைக்க ஒப்புதலளிக்கப்படும்.

சிவகங்கை மாவட்டம்

- சிவகங்கை மாவட்டத்தில், வைகை இடதுகரையில் அமைந்துள்ள மஞ்சள் பட்டினத்தில் இளையான்குடியையும், பரமக்குடியையும் இணைக்கின்ற மேம்பாலம் செப்பனிடப் படும்.

- சிவகங்கை மாவட்டத்திலுள்ள பிள்ளையார்பட்டியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

- சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டத்தில் பொட்டப் பாளையத்திலுள்ள துணை மின் நிலையமானது 110 KVA மின்திறன் கொண்டதாக மேம்படுத்தப்படும்.

- சிவகங்கைக்கு, DPO இணைப்புக் கட்டடம் ஒன்றுக்கு அனுமதியளிக்கப்படும்.

- பிள்ளையார்பட்டி, இராமேஸ்வரம் மற்றும் ஏர்வாடியில் கண்காணிப்பு டிவி கேமராக்கள் நிறுவப்படும்.

- தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைப் போன்று, சிவ கங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சிறப்பு சமூகப் பொருளாதார மேம்பாட்டு நிதி உருவாக்கப்படும்.

- சிவகங்கை மாவட்டத்தில் உணவுப் பதப்படுத்துதல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தப்படும்.

- சிவகங்கையில் சேமக் காவல்படைப் பிரிவுக்காக நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

- சிவகங்கையில் 2 சேமக் காவல்படைப் பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.

- தேவகோட்டை, இளையான்குடி, மானாமதுரை, சிங்கம் புணரியில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம்

- இராமநாதபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையானது, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

- MGNREGS–இன் கீழ் 1 மீட்டர் ஆழத்திற்குப் பண்ணைக் குட்டைகள் உருவாக்கப்படுகின்றன. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை வாயிலாக ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் மருத்துவமனையில் தொற்று நோய்களுக்கான பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே 4 தடுப்பணைகள் கட்டப்படும்.

- பார்த்திபனூரைச் சுற்றி புறவழிச்சாலை அமைக்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில், தற்போது, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற 35 துறைகளுக்காக, பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடியில் மனநல மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய வெப்ப எரிசக்திப் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில், கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் திருவாடானை ஆகியவற்றில் இரு பாலினருக்கான கல்லூரிகள் தொடங்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன் பதப்படுத்தும் தொழிற் பூங்காக்கள் அமைக்கப்படும்.

- இராமநாதபுரம் – தூத்துக்குடி சாலை, நான்கு வழிச்சாலையாக மாற்றப்படும். தொழிலகப் பெருவழி ஒன்று அமைக்கப்படும்

- இராமநாதபுரம் மாவட்டத்தில், ஒரு மாபெரும் நவீன மின்சக்தி நிலையம் நிறுவப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுச்சுவருடன் கூடிய நிருவாகக் கட்டடம் சேமக் காவல்படைக்குக் கட்டப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் (Repeater) அடுத்தடுத்த காவல் நிலையம் திருவாடானை மற்றும் கமுதியில் அமைக்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு நெடுஞ்சாலைக் கண்காணிப்பு வாகனங்கள் ஏற்படுத்தப்படும்.

விருதுநகர் மாவட்டம்

- விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் நகராட்சியில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

- விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படும்.

- விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகரத்தில் தனி போக்குவரத்துப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் தனியாக தேசிய நெடுஞ்சாலைப் போக்குவரத்துப் பிரிவு அமைக்கப்படும்.

- விருதுநகரில் A.R. நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

- சிவகாசி நகரில் வெளிவட்டச் சாலை அமைக்கப்படும்.

- ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள வத்திராயிருப்பில் சேமக் காவல் படைப் பிரிவு (AR Company) ஏற்படுத்தப்படும்.



- விருதுநகர் மாவட்டத்திலுள்ள W. புதுப்பட்டி மற்றும் கடமாப்பட்டி காவல் நிலையங்கள், ஆய்வாளர் தலை மையிலான காவல்நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

தருமபுரி மாவட்டம்

- தருமபுரி மாவட்டம் சித்தேரி பகுதியில், சிறுவர் சிறுமியருக் கென தனித்தனி மாணவர் இல்லங்கள் அமைக்கப்படும்.

- தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் மற்றும் மொரப்பூர் வட்டாரங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்.

- தருமபுரி மாவட்டத்தில் தற்போது ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள நாற்றுப்பண்ணை தோட்டக்கலைத் துறைக்கு மாற்றப்படும்.

- தருமபுரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கிருபானந்தவாரியார் மேனிலைப் பள்ளி, பள்ளிக் கல்வித்துறையால் ஏற்றெடுத்துக் கொள்ளப்படும்.

- தருமபுரி மாவட்டத்திலுள்ள கரியமங்கலத்தில், பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைக்கப்படும்.

- தருமபுரியில் சாதிக்கலவரத்தில் முழுமையாக அழிந்துபோன வீடுகளுக்கு மாற்றாக 99 வீடுகள் கட்டப்படும்

- தருமபுரி மாவட்டத்தில் நக்சல்களால் பாதிக்கப்பட்ட 32 கிராமங்களுடைய மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.7 கோடியிலிருந்து ரூ.20 கோடியாக அதிகரிக்கப்படும்.

- தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை ஏற்படுத்தப் படும்.

- தருமபுரி மாவட்டத்திலுள்ள பெண்ணாகரம் மற்றும் அரூர் வட்டங்களில் சிப்காட் தொழிற்பேட்டைகள் உருவாக்கப் படும்.

நீலகிரி மாவட்டம்

- நீலகிரி மற்றும் ஏனைய மலைப்பகுதிகளில் உள்ள குழந்தை களுக்காக, அவர்களுடைய சீருடையின் ஒரு பகுதியாக கம்பளி ஆடைகள் வழங்கப்படும்.

- உதகமண்டலத்திலுள்ள மாவட்ட மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தரத்திற்கு நிலையுயர்த்தப் படும்.

- நீலகிரி மாவட்டத்தில் உள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கிவருகிற 28 அலுவலகங்களுக்கு இடவசதி அளிப் பதற்காகக் கட்டடம் ஒன்று கட்டப்படும்.

- நீலகிரி மாவட்டத்திலுள்ள அருங்காட்சியகம், ''பழைய கல் வீட்டிற்கு'' மாற்றப்படும்.

- வாகனங்கள் நிறுத்தும் இடவசதி ஊட்டியில் ஏற்படுத்தப் படும்.

- ❖ ஊட்டியில் போக்குவரத்துக் காவலர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்த்தப்படும்.
- ❖ கூடலூர் மற்றும் கோத்தகிரியில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஏற்படுத்தப்படும்.
- ❖ ஊட்டியில் காவல்துறைப் பணியாளர்களுக்கு தங்கும் அறை கட்டப்படும்.
- ❖ நீலகிரி மாவட்டத்தில் நான்குக்கு மேற்பட்ட நெடுஞ்சாலை ரோந்துப் பணி மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்படும்.
- ❖ நீலகிரிமாவட்டத்தில்உள்ளசாலைகள்குறுகலானவைகளாக உள்ளதால் நான்கு பிரிவு அழைத்து செல்லும் வேன்கள் சாதனங்களுடன் தீ மற்றும் இடர்நீக்குப் பணித்துறைக்கு வழங்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டம்

- ❖ கொடைக்கானலில் வண்டி நிறுத்தும் வசதியைச் செய்து கொடுப்பதற்காக, போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலம், நகராட்சிக்கு மாற்றப்படும்.
- ❖ பழனியில் அடிவேதனைப் படுகாய மையம் ஒன்று அமைக்கப் படும்.
- ❖ திண்டுக்கல் மருத்துவமனைக்காகக் கூடுதலாகக் கட்டடங்கள் கட்டப்படும்.
- ❖ திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் பகுதியில் குடிநீர் வழங்கலுக்கான பழைய குழாய்த் தொடர்களுக்குப் பதிலாகப் புதிய குழாய்த் தொடர்கள் அமைக்கப்படும்.
- ❖ குடிநீர்வழங்கலைப்பெருக்குவதற்காகக்கொடைக்கானலில் உள்ள கீழ்க்குந்தாறில் தடுப்பணை ஒன்று கட்டப்படும்
- ❖ கொடைக்கானலில் உள்ள மலைப்பாதைகள் அகலப்படுத்தப் படும்.

- கொடைக்கானலில் உள்ள மனவனூரில் பெரும் சுற்றுலாத் திட்டம் ஏற்படுத்தப்படும்.
- பழனி கோவிலுக்குக் கூடுதலாக ஒரு ரோப் கார் வழங்கப்படும்.
- திண்டுக்கல் மாவட்டத்தில் சேமக்காவல் படைப் பிரிவுக்கான நிருவாகக் கட்டடத்திற்கு ஒப்புதல் வழங்கப்படும்.
- திண்டுக்கல், தேனி ஆகிய இடங்களில் காவல்துறைப் பணியாளர்களின் நலனுக்காகச் சமுதாயக்கூடம் கட்டப்படும்.

மதுரை மாவட்டம்

- போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மதுரை மாநகரில் மேம்பாலங்கள் கட்டப்படும்.
- மதுரையில் கூடுதலாக ஒரு படைப்பிரிவு ஏற்படுத்த அனுமதி அளிக்கப்படும்.
- மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சோழவந்தான், மேலூர் ஆகிய பகுதிகளில் ரிப்பீட்டர் ஸ்டேஷன் (Repeater station) மற்றும் 100 வாக்கிடாக்கிகள் வழங்கப்படும்.
- மதுரை மாவட்டத்தில் வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களுக்குக் கம்பியில்லாத் தொடர்பு சாதனம்/ ஒயர்லெஸ் வழங்க அனுமதியளிக்கப்படும்.
- மதுரை மாவட்டம், மேலூர், ஒத்தக்கடை, ஊமச்சிக்குளம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
- மதுரையில் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளருக் காகக் (A.R) குடியிருப்புகளும், A.R-க்காக நிருவாகக் கட்டடங்களும் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப் படும்.
- மதுரையில், ஏழு காவல் நிலையங்களுக்காக ஒவ்வொன் றிற்கும் 2 மோட்டார் சைக்கிள் ரோந்து வண்டிகள் வழங்கப் படும்.

- மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை நீதிமன்றத்திற்கு அருகே காவல்துறைப் பணியாளர் களுக்கென விடுதி கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்படும்.

- மதுரை மாநகரக் காவல்துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

- மதுரை மாநகராட்சியில், மாநகரக் காவல்துறை அதிகார எல்லையில் கூட்டு முனையம் உருவாக்கப்படும்.

- மதுரையில், காலவாசல் சந்திப்பு மற்றும் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலங்கள் கட்டப்படும்.

- மதுரை மற்றும் கடலூரிலுள்ள மத்திய சிறைச்சாலைகளுக்கு தமிழ்நாடு சிறப்புக்காவல் துறைக் குழுக்கள் அமைக்கப் படும்.

நாமக்கல் மாவட்டம்

- நாமக்கல் மாவட்டத்தில் போக்குவரத்துக் காவல் பிரிவு அமைக்கப்படும்.

- நாமக்கல் மாவட்டத்தில் செயினேஜ் 90/2 இல் SH79–இல் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

- நாமக்கல் மாவட்டத்தில் காவல்துறைப் பணியாளர்களுக் கென சமுதாயக்கூடம் அமைக்கப்படும்.

சேலம் மாவட்டம்

- சேலம் மாவட்டத்தில் AVR ரவுண்டானா, ஐந்து ரோடு சந்திப்பு, குரங்குச் சாவடியில் மூன்று மேம்பாலங்கள் கட்டப்படும்.

- சேலம் மாவட்டம், மேச்சேரி, நங்கவள்ளி வட்டாரங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும்.

- சேலம் மாநகருக்கு அருகிலுள்ள கொண்டாலம்பட்டி இரும்பு ஆலை , வீராணம் காவல் நிலையம், 14 முதன்மைக் கிராமங்கள் சேலம் மாநகருடன் இணைக்கப்படும்.

- சேலம் மாவட்டத்திற்கு 56 சிசி டிவி கேமராக்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும்.
- சேலம், காவல்துறை தலைமை ஆய்வாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டித்தரப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம்

- தஞ்சாவூர் மாவட்டம், பள்ளி அக்ரஹாரத்தில் போக்கு வரத்து மேம்பாட்டு வசதியும், நான்குவழிச் சந்திப்பும் ஏற்படுத்தப்படும்.
- தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு சி.டி. ஸ்கேன் வசதி செய்து தரப்படும்.
- தஞ்சாவூர் பாலக்கரை பாலம் புதுப்பிக்கப்படும்.
- தஞ்சாவூரில் கூடுதலாக இரண்டு சேமக் காவல்படைப் பிரிவு (AR Platoons) ஏற்படுத்தப்படும்.
- தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்தில் 100 சிசி டிவி கேமராக்களுடன் கூடிய நவீன கட்டுப்பாட்டு அறைகள் இரண்டு ஏற்படுத்தப்படும்.
- தஞ்சாவூருக்கு இரண்டு நெடுஞ்சாலை ரோந்துப்பணி வண்டிகள் கூடுதலாக வழங்கப்படும்.
- தஞ்சாவூரில் சேமக் காவல்படைப் பணியாளர்களுக்காகக் கூடுதலாக 200 குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.
- தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் திருவிடைமருதூரில் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் அமைக்கப்படும்.
- தஞ்சாவூர் மாவட்டக் காவல்துறைத் துணைக் கண் காணிப்பாளர் அலுவலகத்திற்குத் தனி பணியாளர்களுக்கு வகை செய்யப்படும்.
- தஞ்சாவூரில் 5 காவல் நிலையங்கள் ஆய்வாளர் அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.



சென்னை மாவட்டம்

- சென்னை நகரின் எல்லைப்பகுதியில் உள்ள 12 காவல் நிலையங்கள் படைக்கல வகையில் பாரம்மிக்க காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.
- சென்னையில் 2,500 சேமக் காவல்துறைப் பணியாளர் களுக்கு நிலையான படைக்குடியிருப்பு கட்டப்படும்.
- தற்காலிக முன் கட்டமைப்புப் படைக் குடியிருப்பு சென்னையில் தமிழ்நாடு சிறப்புக் காவல்துறைப் படைப்பிரிவுக்கு அமைக்கப்படும்.
- நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாகச் சென்னை எழும்பூர் காவல்துறை மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்
- காவல்துறையினருக்காகவே சிறப்பு கேன்டீன் சென்னை நகரக் காவல்துறைக்கு எழும்பூரில் அமைக்கப்படும்
- சேமக் காவல்படைக்கு சென்னையில் நிருவாகக் கட்டடம் அமைக்கப்படும்.

- சென்னை மாநகர குதிரைப் படைப்பிரிவுக்கு 16 குதிரைகள் வாங்கப்படும்.
- சென்னை மத்திய குற்றப் பிரிவுக்கு சட்ட ஆலோசகர் பதவி ஒன்று அனுமதிக்கப்படும்.
- வீட்டுவசதி வாரிய அடுக்குமாடி வீடுகள் சென்னை மாவட்ட, மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் அதிகாரியின் குடியிருப்புகளாக ஒதுக்கீடு செய்யப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

- தற்காலிகமான மூன்று சுங்கச்சாவடிகள் நிரந்தரமான சுங்கச்சாவடிகளாகக் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாற்றப்பட்டு அதற்கான அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவின் பணியாளர் எண்ணிக்கையை உயர்த்த ஒரு சார் ஆய்வாளர் மற்றும் 10 காவல்துறைத் தலைமைக் காவலர்கள் சேர்க்கப்படுவார்கள்.
- காவல்துறைக் கண்காணிப்பாளர் குடியிருப்பு கிருஷ்ண கிரியில் கட்டப்படும்.
- கிருஷ்ணகிரியிலுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குச் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒரு முறை அளிக்கப்படும் மானியமான 50 இலட்சம் ரூபாய் 1 கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும்.

கடலூர் மாவட்டம்

- கடலூர் மாவட்டத்தில் சேமக் காவல்படைக்கு நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.
- கடலூரில் காவல்துறை காவலர்களுக்கு மருத்துவமனைக் கட்டடம் கட்டப்படும்.

காவல்துறை

- முக்கியமான தலைவர்களின் சிலைகளைப் பராமரிப்பது குறித்து அரசின் முந்தைய உத்தரவுகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். சிலைகள், இரும்புக் கம்பி வேலி, பூட்டு, சாவி ஆகியவை மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனுடைய சாவி, மாவட்ட ஆட்சியரிடம் / காவல்துறைக் கண்காணிப்பாளரிடம் இருக்க வேண்டும்.

- சோதனைச் சாவடிகளில் களவுபோன பொருட்களைச் சோதனை செய்வதற்காக, உண்மையான நேர அடிப் படையில், போக்குவரத்துத் துறையிடம் உள்ள தகவல், காவல்துறைக்கு அளிக்கப்படும்.

- காவல்துறைப்பணியாளர் மீது பதிவு செய்யப்படும் தனிநபர் வழக்குகளில் வழக்குரைஞர்கள் வாதாடுவதற்காக மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு நிதி வழங்கப்படும்.

- காவல்துறைப் பணியாளர்களில், தனிநபர் முயற்சிக்காக தற்போது வழங்கப்பட்டுவரும் ரொக்க வெகுமதி ரூ.300/– லிருந்து ரூ.600/– ஆகவும், குழுவின் கூட்டு முயற்சிக்காக வழங்கப்பட்டுவரும் ரொக்க வெகுமதி ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

- குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் முன் அறிவிப்புச் செய்யாத சாலை மறியலுக்குத் தடை விதிக்கப்படும்.

- விபத்து நிவாரண நிதியின் கீழ், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி ஒப்புதல் CMPRF வழக்குகளில் உள்ளதைப் போன்று எளிமையாக்கப்படும்.

- நாடகங்கள் மூலம் சாதியற்ற சமுதாயம் என்ற கொள்கையைப் பரப்புவதற்காக சிறந்த கொள்கை பரப்பாளர் மூலமாகக் கல்வி மற்றும் காவல் துறையின் மூலம் கூட்டு இயக்கம் ஏற்படுத்தப்படும்.

- போக்குவரத்து அபராதங்களாக வசூலிக்கப்பட்ட நிதியில் 25% ஐ சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து போக்குவரத்து எதிர்பாராத நிதியாக மாவட்டங்களுக்கு வழங்கப்படும்.

- காவல்துறை அதிகாரிகளுக்கான காணொளிக் கூட்ட வசதிகளுக்குப் புத்துயிர் அளிக்கப்படும்.

- பந்தோபஸ்து/பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறைப் பணியாளர்களுக்கென மாவட்டத்திற்கு ஐந்து நடமாடும் கழிப்பறைகள் அமைத்துத்தரப்படும்.

- சிறு கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதற்காகக் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகாரம் ரூ. 10,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்படும்.

- நக்சல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 இலட்சம் தொடர் மானியத்துடன் கூடுதலாக ஒரே முறை வழங்கக்கூடிய மானியமாக ரூ. 1 கோடி வழங்கப்படும்.

- குண்டர் சட்டத்தில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப் படும்.

  (1) குற்றமே செய்வதை வழக்கமாகக் கொண்டவர்களுக்குப் பதிலாக, ஒரு குற்றம் மட்டுமே செய்யும் குணம் கொண்டவர்கள் கூட பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவர்.

  (2) சைபர் குற்றம்

  (3) வாகனத்தைப் பறிமுதல் செய்தல்.

- குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குகள் தயாரிப்பதற்கான தொகை ரூ. 3,000 லிருந்து ரூ. 8,000 ஆக அதிகரிக்கப்படும்.

- குற்றம் தொடர்பான பிரச்சினைகளுடன் தடுப்பு நடவடிக்கை களை மாவட்ட அளவில் மேற்கொள்வதற்கு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும்.

- 35 அம்பாசிடர் வாகனங்கள் முக்கியமானவர்களுக்கும் மற்றும் அவர்களுடன் செல்லும் படைப்பிரிவு வாகனங்கள் உயர்வேக வாகனங்களாகவும் மாற்றப்படும்.

- காவல்துறைக் கட்டுமான நிறுவனத்தில் கூடுதல் பணியிடங்களாகத் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும்

உதவிப் பொறியாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்கப்படும்.

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கழகத்தின் பணியாளர் பலத்தை உயர்த்த ஒரு காவல்துறைத் தலைவர், ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர், மூன்று காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள், இரண்டு துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் நான்கு ஆய்வாளர்கள் ஆகிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு தோற்றுவிக்கப்படும்.

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கழகத்திற்கு ஒரு துணை சட்ட ஆலோசகர் பணியிடம் ஏற்படுத்தப்படும்.

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் கழகத்திற்கு அச்சுக் கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் 25 கணினிப் பொறிகளும் வாங்க ஒப்புதலளிக்கப்படும்.

- முதுநிலை சட்ட ஆலோசகர் பணியிடங்கள் சிபிசிஐடியில் நிரப்பப்படும்.

- தமிழ்நாடு காவல் அகாடமிக்கு சுழல்நிதி ரூ.30 இலட்சம் ஏற்படுத்தப்படும்.

- பழைய காவல்துறைத் தேர்வுப் பள்ளிகளுக்குப் புதிய காவல்துறைத் தேர்வுப் பள்ளிகளின் பணியாளர்களுக்கு சமமாகப் பணியாளர்கள் அளிக்கப்படும்.

- காவல்துறைத் தேர்வுப் பள்ளிக்கு 8,900 இருக்கைகள் வாங்க அனுமதிக்கப்படும்.

- காவல்துறைத் தேர்வுப் பள்ளிகளில் ரூ.10.14 இலட்சம் பீங்கான் பொருட்கள் வாங்க ஒதுக்கப்படும்.

- காவல்துறைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிக் கோப்பை பெறுபவர்களுக்கு ரூ.10,000 ஒவ்வொரு உறுப்பினருக்கும் அளிக்கப்படும்.

- மருதம் வளாகத்திற்கு நீர் வழங்கலுக்காகக் குழாய்கள் பொருத்தப்படும்.

- காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு உதவி புரிய ஒரு சட்ட ஆலோசகர் பணியிடம் எல்லா மாவட்டத்திலும் ஏற்படுத்தப் படும்.

- காவலர்கள் குறிப்பிட்ட கைதிகளின் புகைப்படங்களைத் தேவைப்படும் சிறைக் கண்காணிப்பாளருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

- காவல்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறைத் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டுக் கூட்டங்கள் நடத்துவது கட்டாயமாக்கப்படும்.

- தலைமையிடத்திலுள்ள பொருளாதாரக் குற்றங்களுக்கான பிரிவுக்கு ஒரு சட்ட ஆலோசகர் பதவியிடம் அனுமதிக்கப் படும்.

- இரயில்வே பாதுகாப்புப் படை கட்டுப்பாட்டு அறையை நிறுவுவதற்காக ரூ. 2 இலட்சம் அனுமதிக்கப்படும். தொடரினச் செலவாக ரூ. 24,000/– அனுமதிக்கப்படும்.

- மதுவிலக்கு ஆயப் பிரிவுக்கு, 14 கூடுதல் சோதனைச் சாவடிகள் அனுமதிக்கப்படும். இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு சார் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், நான்கு காவலர்கள் வீதம் அனுமதிக்கப்படும்.

- தற்போதுள்ள 29 சோதனைச் சாவடிகளுக்கு முன்னரே தயாரிக்கப்பட்ட அமைப்புகள் வழங்கப்படும். அவற்றுக்கு, படிப்படியாக நிரந்தரமான கட்டடங்களுக்கு வகை செய்யப்படும்.

- மதுவிலக்கு தொடர்புடைய 'தொலைபேசி உதவி இணைப்பு' ஒன்று அனுமதிக்கப்படும்.

- காவல்துறையின் கட்டடப் பராமரிப்புக்காக ஒவ்வோராண்டும் ரூ.25 கோடி அனுமதிக்கப்படும்.

- புலனாய்விற்கான செலவுகள், ரூ. 1.5 கோடியாக அதிகரிக்கப் படும்.

- இந்த ஆண்டில் வண்டிகளின் வாடகை வகையில் கூடுதலாக ரூ. 75 இலட்சம் வழங்கப்படும்.

- செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதில் அனைத்துக் காவல்துறைப் பணியாளர்களும் 'ஒரே குழும எண்ணிக்கை' (Closed user group) படிவ முறையின் கீழ் கொண்டு வரப்படுவர்.

- காவல்துறையின் பயன்பாட்டுக்காக, அண்ணா பல்கலைக் கழகத்திடமிருந்து ரூ. 95 இலட்சம் செலவில் மூன்று பணியாளர்களற்ற கம்பியில்லாத் தந்தி வண்டிகள் வாங்கப்படும்.

- காவல்துறைக்குப் போதுமான மீ உயரலை சாதனங்களுக்கு வகை செய்யப்படும்.

- அதிரடிப்படைப் பணியாளர்களுக்கான இடர் ஏற்புப் படியானது, 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

- குற்றப்புலனாய்வுத் துறையின் உணவுப் பிரிவுக்குக் கூடுதல் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்படும். அப்போதுதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரிவு செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

- தடுப்புக்காவலுக்கான ஆவணப் பணித் தொகையானது 3,000 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

- உணவுப் பிரிவிலுள்ள காவல்துறைப் பணியாளருக்கு மிகைப்பணி ஊதியம் வழங்கப்படும்.

- மருதம் வளாகத்திலுள்ள பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகத்தில் ரூ.81.8 இலட்சம் செலவில் தற்போதுள்ள தரைத்தளத்திற்கு மேல் கூடுதல் தளம் ஒன்று கட்டப்படும்.

- வெடிமருந்து வழக்குகளைக் கையாளுவதற்காக ரூ.42 இலட்சம் செலவில், தற்போதுள்ள எண்ணிக்கையுடன்,

பத்து வெடிமருந்து கண்டறியும் மோப்ப நாய்கள் சேர்க்கப்படும்.

- சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கு மேலும் நான்கு சிறப்பு அரசு வழக்கு நடத்துனர் பதவியிடங்கள் அனுமதிக்கப்படும்.

- 11 மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பு அலுவலகங்களின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கு அறைகலன், கணினி மற்றும் நிகரி சாதனங்கள் வழங்கப்படும்.

- 'இனோவா' வண்டிகள், மாவட்டக் காவல்துறைக் கண் காணிப்பாளர், துணை ஆணையர்கள், சரக காவல்துறைத் துணைத்தலைவர்கள், துணை ஆணையாளர்கள், காவல்துறைக் கூடுதல் ஆணையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும்.

- மாவட்டங்களிலுள்ள கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் (குற்றம்) சிறப்புப் பிரிவுகளிலுள்ள கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் கூடுதல் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளராக (தலைமையிடங்கள்) நியமிக்கப்படுவர். பதவி நியமனம், பதவி உயர்வு, தண்டனை மற்றும் விருதுகள் ஆகியவை நீங்கலாக அனைத்து நிருவாக அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்படும். மேற்சொன்னவற்றை காவல்துறைக் கண்காணிப்பாளர்களே தொடர்ந்து கவனிப்பர்.

- தற்போது காவல்துறை தலைமை இயக்குநரிடம் நிலை பெற்றுள்ள நிருவாக அதிகாரங்கள், கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர்களுக்கும், காவல் துறைத் தலைவர்களுக்கும் உரியவாறு மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

மாவட்ட ஆட்சியர்கள்

- தற்போது, விலையில்லாக் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இனிமேல், மூன்று நாட்களுக்கு விரிவான பயிற்சி அளிக்கப்படும்

- ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதிகள் ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப் படும்.

- மாவட்ட ஆட்சியர்களுக்கான விருப்புரிமை நிதிகள் ரூ.10 இலட்சமாக உயர்த்தப்படும்.

- பொது விநியோகத் திட்ட பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துவதில் ஈடுபடுகின்ற வண்டிகளைப் பறிமுதல் செய்வது குறித்த சட்டரீதியான நிலையை விளக்குவதற்கு, உணவுச் செயலாளர், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் எழுதுவார்.

- தற்போதுள்ள வட்டங்களை இரண்டாகப் பிரிக்குமாறு பல மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். சட்டமன்றப் பேரவையில் நான் செய்த அறிவிப்பின்படி, வட்டங்களை இரண்டாகப் பிரிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்குக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிடமிருந்து பரிந்துரைகள் வரப்பெற்றவுடன், வட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்.

- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் பயில்கின்ற மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிறப்பு உதவித் தொகைகளை வரவு வைப்பதற்காக ஜீரோ இருப்பு உள்ள வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

- மாவட்ட ஆட்சியர்கள், ஜீரோ இருப்பு உள்ள வங்கிக் கணக்குத் தொடங்கப்படுவதையும், படிப்பு உதவித் தொகை மாணவர்களின் இந்தக் கணக்கில் வரவு வைக்கப்படுவதையும் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்.

- பள்ளி மாணவர்களுக்கு, பள்ளிப் பைகளும், கல்வி உபகரணங்களும் 2013ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து வழங்கப்படும். வழங்கப்படுகிற பொருளின் தரத்தையும் அவை 2013ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்கு முன்னர்

உரிய காலத்தில் முறையாக வழங்கப்படுவதையும் மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

❖ பொதுமக்களுக்கு உதவுவதற்காக நிகழ்ச்சி நிரலிலுள்ள திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டங்களை சிறந்த முறையில் கண்காணிப்பதற்காக முதுநிலை அதிகாரிகள் மாதம் ஒரு முறையாவது நேரடியாகப் பார்வையிடுவது பயனளிக்கும். இதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மாதாந்திரக் கண்காணிப்பு முறை பெரும்பாலும் நிறுத்தப்பட்டுள்ளது. இது மீண்டும் தொடங்கப்படும். சென்னையைச் சேர்ந்த முதுநிலை அதிகாரி ஒருவரும், மாவட்ட ஆட்சியரும் தலைமை வகிக்கின்ற இந்த மாதாந்திரக் கூட்டத்தில் அனைத்துத் துறைத் தலைவர்களும் பதிலளிக்க கடமைப்பட்டவர்கள் என்பதால் மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்தை மீண்டும் உறுதி செய்வதற்கும் இது உதவும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கு உயர் தூக்கிகள் (Skylift) (101 மீ. உயரம்) இரண்டு வாங்கப்படும்.

❖ தீ மற்றும் இடர் நீக்கும் பணித்துறையில் இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள் இணை இயக்குநர் பணியிட அளவிற்குத் தரம் உயர்த்தப்படும்.

❖ பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீ விபத்தின் போது திறம்படத் தீயணைப்பதற்குப் பட்டாசுத் தொழிற்சாலைகளின் மேற்கூரைகளில் தெளிப்பான்களை அமைப்பது கட்டாய மாக்கப்படும்.

சிறைத்துறை

❖ கைதியைப் பாதுகாப்போடு அழைத்துச் செல்பவர்களுக்கான உணவுக் கட்டணம் ஒருவருக்கு ரூ.35லிருந்து ரூ.100 ஆக அதிகரிக்கப்படும்.

❖ 7 மத்திய சிறைச்சாலைகளும் மற்றும் துணை சிறைச் சாலைகளும் முழுமையாகப் பராமரிக்க நிதி அனுமதிக்கப் படும்.

- ரூ.25 இலட்சம் செலவில் பெட்டிகள் மற்றும் பைகளைச் சோதனையிடும் கருவிகள் புழல், வேலூர், கடலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைச் சாலைகளில் அமைக்கப்படும்.

- ரூ.1.8 கோடியில் 918 குடியிருப்புகள் சிறைச்சாலைப் பணியாளர்களுக்காகப் பழுதுபார்க்கப்படும்.

- காணொலிக் காட்சிக் கூட வசதி 60க்கு மேற்பட்ட இடங்களில் அமைக்கப்படும். ஏற்கெனவே 11 இடங்களில் இருக்கும் வசதிகள் பழுதுபார்க்கப்படும். எல்லா சிறைச் சாலைகள் மற்றும் நீதிமன்றங்களிலும் காணொலிக் காட்சிக் கூட வசதி ஏற்படுத்தப்படும்.

- சிறைத்துறைக் கையேட்டில் உள்ள அறிவுரைகள் கைதிகளின் பிரிவுகளைத் தெரிவிக்க சிறைக் கண்காணிப்பாளருக்குக் காவல்துறை நிலையாணைகளில் சேர்க்கப்படும்.

பொது

- 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில், தற்காலிக மஸ்தூர்களைப் பணியமர்த்துவதற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் மற்றும் ஏனைய தொற்று நோய்களை முனைப்புடன் கட்டுப் படுத்துவதற்கு மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்கப்படும்.

- பல்வேறு துறைகளின் கீழ், பள்ளிகளில் பயில்கின்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற சீருடைகள் ஒரே மாதிரியாக இருக்கும்.

- ஹெச்ஐவி, புற்றுநோய், காசநோய் காரணமாக ஏற்பட்ட தற்காலிகமான ஏலாமை நிலைக்காக ''உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்'' கீழ், நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. டயாலிசிஸ் செய்துகொள்பவருக்கும் இத்தொகை நீட்டிக்கப்படும்.

- நிலப் பதிவுருக்கள் குறித்த பல்வேறு மென்பொருட்கள் இணைக்கப்படும்.

- குழந்தைகளைப் பள்ளிக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்று திரும்ப அழைத்து வருகிற நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

- உணவுப்பட்டியலில் அண்மையில் சேர்க்கப்பட்ட பல்வேறு வகை அரிசி உணவு மற்றும் உணவு வகைகளைத் தயாரிப்ப தற்காக அனைத்து மதிய உணவு மையங்களுக்கும் மிகப் பெரிய வாணலி மற்றும் கரண்டி ஆகியவை வழங்கப்படும்.

- உழவர்களுக்குப் பயனுள்ள முறையில் பாசனம் அளிப்பதற் காகப் படுகை அளவை மீட்க இயலும் வகையில் ரூ. 68.55 கோடி மதிப்பீட்டுச் செலவில் காவேரி ஆற்றின் கிளை ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால் ஆகியவற்றில் 25 படிநிலைச் சாய்வு அமைப்புகள் கட்டப்படும்.

- பெற்றோர்கள் ஹெச்.ஐ.வி. நோயினால் மரணமடைந்தால் அனாதைகளான குழந்தைகளுக்கு மாதாந்திர மானியம் அளிக்கப்படும்.

- சாதியற்ற சமுதாயம் பற்றிய பாடங்கள் உருவாக்கப்பட்டு தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

- பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக் காலங்களில் விரைவான மீட்புப் பணிக்கு ஏதுவாக முதன்மைச் சாலையிலிருந்து பட்டாசுத் தொழிற்சாலை வரையிலான பகுதிகள் வரை நன்கு சாலை வசதிகள் பராமரிக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும்.

- கூட்டுறவு வங்கிகளில் சிசி டிவி கேமராக்களும், burglar அலாரங்களும் நிறுவப்படும்.

- மீன்பிடிப் படகுகளின் அடித்தளத்தை மாற்றுவதற்கு மானியம் 50% ஆக அதிகரிக்கப்படும்.

- கெயில் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கு நில உடமையாளர்களுக்கு இழப்பீடு அங்காடி மதிப்புடன் இணைந்த படி வழங்கப்படும்.

- ரூ.98 இலட்சங்கள் மாநில பேரிடர் காப்புப் படைக்குத் தேவையான சாதனங்கள் வாங்க ஒப்புதலளிக்கப்படும்.

- ரூ.1.75 கோடியில் உயர்ந்த விளையாட்டுக் கருவிகள் மற்றும் வசதிகள் வாங்கப்படும்.

- மருந்துகள் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டறிய 100 அதிவேகக் கண்டுபிடிக்கும் பணிமனை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படும்.

- ஒரு கூடுதல் மாவட்ட வருவாய் அதிகாரிப் பணியிடம் ஆறு மாதத்திற்கு அனுமதிக்கப்படும். அவர்கள் சிறப்பு நீதிமன்றங்களில் அரசாணையின்படி O.A மனு தாக்கல் செய்ய பயன்படுத்தப்படுவார்கள்.

- பள்ளிப் பாடத்திட்டத்தில் கணினி இணையப் பாதுகாப்பு நடைமுறைகள் சேர்க்கப்படும்.

- ரிபீடர் நிலையங்கள் அமைந்திருக்கின்ற வனத்துறைக்கான குத்தகையானது குறைந்த அளவிற்குக் குறைக்கப்படும்.

✶ ✶ ✶

நீலகிரி மாவட்டம், குந்தாவட்டம், எடக்காடு மட்டத்தில் நடைபெற்ற குந்தா தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலையின் பொன்விழாவில் ஆற்றிய உரை – *(04.01.2013)*



தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும்,
ஒற்றுமையுடனும் செயல்பட்டால்
வாழ்வில் வெற்றி நிச்சயம்!

இந்த இனிய விழாவில் முன்னிலை உரை ஆற்றி அமர்ந்துள்ள மாண்புமிகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்களே,

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

முன்னிலை உரை ஆற்றிய தலைமைச் செயலாளர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. நிரஞ்சன் மார்டி அவர்களே, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை செயலாளர் திரு. கி. தனவேல் அவர்களே, வரவேற்புரை ஆற்றிய தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு. ஹர்மந்தர் சிங் அவர்களே, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் அவர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் தனி அலுவலர் திரு. த. உதயசந்திரன் அவர்களே,

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே,

இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இமை கொட்டாமல் ரசிக்கும் இயற்கை அழகைக் கொண்ட, இந்த நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட குந்தாவில், உடலை வருடும் இதமான தென்றலுக்கும்; வானத்தைத் தொடும் அளவு வளர்ந்திருக்கும் மரங்களுக்கும்; காற்றோடு கலந்து வீசும் ரம்யமான யூகலிப்டஸின் நறுமணத்திற்குமிடையே குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையின் இந்த இனிய பொன்விழாவில் கலந்து கொண்டு, இண்ட்கோசர்வின் புதிய 250 கிராம் ஊட்டி டீ விற்பனை; ஆவின் விற்பனையகங்களில் ஊட்டி டீ விற்பனை ஆகியவற்றைத் துவக்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறு தேயிலைத் தொழில் துறையில், 1930–களிலிருந்து தொடர்ந்து வளர்ச்சி காணப்பட்டது என்றாலும், சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த தேயிலையைப் பெரும்பாலும் தனியார் தொழிற்சாலைகளுக்கு விற்று வந்தனர்.

இதன் காரணமாக, சிறு தேயிலை விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த தேயிலைக்குக் குறைந்த விலையையே பெற்று வந்தனர். இது மட்டுமல்லாமல், அதிக தள்ளுபடி, எண்ணிக்கையில் முறைகேடு என பல்வேறு பிரச்சினைகளுக்கும் சிறு தேயிலை விவசாயிகள் ஆளாக்கப்பட்டனர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தனியார் தொழிற்சாலைகளின் தயவில் சிறு தேயிலை விவசாயிகள் வாழ்ந்து வந்தனர்.

அறியாமை மற்றும் சமூக பொருளாதார நிலைமை காரணமாக, சிறு, குறு விவசாயிகள் ஏமாற்றப்பட்டு வந்தனர். ''கூட்டுறவே நாட்டுயர்வு'', ''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' என்ற பழமொழிகளுக்கு ஏற்பவும், ''தனி மனிதனுக்காக சமூகமும், சமுதாயத்திற்காகத் தனி மனிதனும்'', என்ற கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையிலும் சிறு, குறு தேயிலை விவசாயிகளின் சமூக பொருளாதார நிலைமைகளை மாற்றும் வகையில், நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட முதல் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை இந்த குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை. 1958ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இந்த குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை, தனது உற்பத்தியை 1962ஆம் ஆண்டு தொடங்கி இப்போது 50 ஆண்டுகளை நிறைவு செய்து தனது பொன் விழாவினைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. தற்போது, 15 கூட்டுறவுத் தொழிற்சாலைகள் நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

இந்த 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளையும் ஒருங்கிணைக்கும் வண்ணம் இண்ட்கோசர்வ் என்ற தலைமை கூட்டுறவு நிறுவனம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம், சிறு தேயிலை விவசாயிகளின் பாதுகாவலனாக செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இயங்குவது, தேயிலைக்கான கூடுதல் விலையைப் பெறுவதற்குரிய வலுவினை சிறு, குறு தேயிலை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது. இந்தத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டதிலிருந்து, சிறு, குறு தேயிலை விவசாயிகள் தேயிலைக்கான நியாயமான விலையைப் பெற்று வருவதுடன், சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்பட்டு இருக்கிறார்கள்.



புதிய தேயிலை மையம் – டீ சர்வ்

தனியார் தேயிலை ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை என்பதால், அரசே ஒரு தனி ஏல மையத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 2003ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், உலகிலேயே முதன் முறையாக கணினிமயமாக்கப்பட்ட "டீ சர்வ்", என்ற புதிய தேயிலை மையத்தை நான் தொடங்கி வைத்தேன். இந்த ஏல மையம், கடந்த 10 ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இது மட்டுமல்லாமல், சிறு தேயிலை விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு, "சிறு தேயிலை விவசாயிகள், பாதுகாப்புத் திட்டம்" என்ற திட்டம் 2005ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, ஜூலை 2005 முதல் மார்ச் 2006 வரை, ஒரு ஏக்கருக்கு, 4,200 ரூபாய் வீதம் 50,152 சிறு தேயிலை விவசாயிகளுக்கு 28 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது என்பதையும்; தேயிலைத் தொழிற்சாலைகளின் கோரிக்கையை ஏற்று, தேயிலைத் தூள் விற்பனை மீதான மதிப்புக் கூட்டு வரியை 4 விழுக்காட்டில்

இருந்து 1 விழுக்காடாகக் குறைத்து ஆணையிட்டேன் என்பதையும் இந்தத் தருணத்தில் நினைவு கூர விரும்புகிறேன்.

விற்பனையைப் பெருக்க புதிய உத்திகள்

இது மட்டுமல்லாமல், சிறு தேயிலை விவ சாயிகள், விலை நிலை நிறுத்துதல் நிதியம் திட்டத்தில் உறுப்பினராகச் சேரவும்; தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், புதிய இயந்திரங்களை வாங்கவும் மானியம் வழங்கினேன். தற்போது, மூன்றாவது முறையாக முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன் நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு கூடுதலாக 2 ரூபாய் உயர்த்தி வழங்கினேன். இதன் மூலம், 22,000 விவசாயிகளுக்கு 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் கூடுதலாக கிடைத்துள்ளது.

இது தவிர, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், 15 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மேம்பாடு மற்றும் நவீனப்படுத்தும் திட்டத்திற்காக, 5 கோடியே 46 இலட்சம் ரூபாய் மானியமாக எனது அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வந்தாலும், இந்த நிறுவனங்களின் விற்பனையைப் பெருக்குவதில் புது யுத்திகளை கையாள வேண்டும்.

கோ–ஆப்டெக்ஸ் சாதனை

என்னைப் பொறுத்தவரையில், நான் புதுமையை விரும்புபவள். அந்த வகையில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை அதிகரிக்கும் வகையில், ''இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்'' என்ற புதிய திட்டத்தினை நடப்பாண்டில் நான் அறிமுகப்படுத்தினேன். இத்திட்டம் வாடிக்கையாளர்கள் இடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றது. இதன் பலனாக, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 77 ஆண்டு கால வரலாற்றில்

இல்லாத அளவுக்கு 2011–2012ஆம் ஆண்டில், 220 கோடி ரூபாய்க்கு மேல் சில்லரை வணிகம் செய்து சாதனை படைத்தது.

இதே போன்று, இண்ட்கோசர்வ் தொழிற் சாலைகளின் விற்பனையை அதிகரிக்கும் வகையில், புதிய யுத்தியை 2001ஆம் ஆண்டு, நான் அறிமுகப்படுத்தினேன். இதன்படி, சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலும்; பொது மக்களுக்குத் தரமான தேயிலைத் தூள் குறைந்த விலையில் கிடைக்கும் வகையிலும்; தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் விற்பனையை அதிகரிக்கும் வகையிலும்; பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ''ஊட்டி டீ'' விற்பனை செய்யும் திட்டம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம், கடந்த 12 ஆண்டுகளில் 317 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் 280 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைத்த லாபத்திலிருந்து, 26 கோடி ரூபாய் இண்ட்கோசர்வ் தொழிற்சாலைகளின் சிறு தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஒரு நிறுவனம் மேன்மை அடையவேண்டும் என்றால்; அதன் விற்பனைத் திறன் அதிகரிக்கப்படவேண்டும் என்றால்; வழக்கத்திற்கு மாறாக சிந்திக்க வேண்டும். புதிய சிந்தனைகள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். வெற்றியை அளிக்கும்.

காலணிகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று தன்னுடைய காலணிகளுக்கான விற்பனை மையத்தை அமைக்க, ஒரு பகுதியைத் தேர்ந்தெடுக்கக் கருதியது. அப்போது, அந்த நிறுவனத்தின், இயக்குநர் குழுமத்தில் உள்ள பெரும்பாலானோர், ''இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் காலணிகளே போடுவதில்லை; எனவே, இங்கு காலணிகளுக்கான விற்பனை மையத்தை அமைப்பது பயனற்றது'' என்று கூறினர். ஆனால், ஒருவர் மட்டும், ''காலணிகளைப் பயன்படுத்தாத மக்கள் வசிக்கும் இடத்தில் விற்பனை மையத்தைத் துவங்குவது வியாபாரத்தைப் பெருக்கச் செய்யும்'' என்று கூறினார்.



இதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் விற்பனை மையம் அமைக்கப்பட்டு, நிறுவனத்தின் வியாபாரம் அதிகரித்தது. இது போன்ற அசாதாரண சிந்தனைகளைக் கடைபிடித்தால், தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் மேன்மை அடையும்.

அறிவும் – திறமையும்

வியாபாரத்தில் புது யுக்தியுடன் தன்னம்பிக்கையும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம். ஓர் ஊரில் தனியாருக்குச் சொந்தமான வழிபாட்டுத் தலத்தில் மணி அடிக்கும் பணியை ஒருவர் செய்து கொண்டிருந்தார். அந்த வழிபாட்டுத் தலத்தை நிருவகிப்பவர்கள் கூட்டம் ஒரு நாள் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், வழிபாட்டுத் தலத்தில் பணிபுரிபவர்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. படிக்காதவர்கள் யாராவது பணிபுரிந்தால், அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதனையடுத்து, மணி அடிக்கும் பணியை மேற்கொண்டிருந்தவர்

உட்பட படிக்காதவர்கள் அனைவரையும் ஆறு மாத காலத்திற்குள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளுமாறு நிருவாகம் அறிவுறுத்தியது. இருப்பினும், மணி அடிக்கும் பணியை மேற்கொண்டிருந்தவரால், எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள இயலவில்லை. இதனையடுத்து, நிருவாகம் அந்தப் பணியாளரை வேலையை விட்டு அகற்றியது. அந்தக் கவலையுடன் வீட்டிற்குப் புறப்பட்டவர், தலைவலி காரணமாக, "டீ" சாப்பிட நினைத்தார். வழியில் "டீ" விற்கும் கடை எதுவும் இல்லை. உடனே அவரது சிந்தனையில் இந்த இடத்தில் சைக்கிளில் "டீ" விற்கும் நடமாடும் டீக்கடை ஒன்றைத் துவக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. மறுநாளே அதனைச் செய்தார்.

இதனையடுத்து, அந்த நபர் தின்பண்டங்கள் விற்கும் கடையை அதே பகுதியில் துவக்கினார். வியாபாரம் பெருகியது. வியாபாரத்தின் மூலம் சம்பாதித்த பணத்தைச் சேமிக்கும் வகையில் வங்கிக் கணக்கு ஒன்றைத் துவக்கினார். வங்கியில் பணம் நிறைய சேர்ந்தது. இந்த நபரின் வங்கிக் கணக்கில் நிறைய பணம் இருப்பதை அறிந்த வங்கி மேலாளர், அந்த நபரை அழைத்து சேமிப்பு வங்கியில் உள்ள பணத்தை எடுத்து நிரந்தர வைப்புத் தொகைக் கணக்கில் போட்டால் வட்டி அதிகமாக வரும் என்று கூறினார். அதற்கு அந்த நபர் உடனே சம்மதித்தார். அதற்கான படிவத்தை வங்கி மேலாளரே பூர்த்தி செய்து கையொப்பம் இடுமாறு அந்த நபரிடம் கேட்டார். அதற்கு அந்த நபர், 'எனக்குக் கையெழுத்திடத் தெரியாது, நான் ஒரு கைநாட்டுப் பேர்வழி,' என்றார். உடனே வங்கி மேலாளர், 'படிக்காமலேயே இவ்வளவு பணம் சம்பாதிக்கிறாயே? படித்திருந்தால் நீ என்ன வேலை புரிந்திருப்பாய்?' என்று அந்த நபரிடம் வினவினார். அதற்கு அந்த நபர், படித்திருந்தால் வழிபாட்டுத் தலத்தில் மணி அடித்துக் கொண்டிருப்பேன் என்றார். இதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் படிப்பு மட்டும் இருந்தால் போதாது; கடுமையான உழைப்பும், தன்னம்பிக்கையும் தேவை. நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவும், திறமையும் தேவை.

சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் நீங்கள் எல்லாம் உழைப்பால் உயர்ந்தவர்கள். உழைப்பு மட்டுமே ஒருவரை உயர்த்த முடியும் என்பதற்கு இலக்கணமாக, நீங்கள் திகழ்கிறீர்கள். உழைப்பின் உன்னதத்தை உணர்த்த ஒரு சிறிய கதையை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

உழைப்பின் பெருமை

ஓர் ஊரில் மிகப் பெரிய பணக்காரர் ஒருவர் வசித்து வந்தார். நாட்டிலேயே, தான் ஒருவர் மட்டுமே சுகபோகத்தை ஏராளமாக அனுபவிப்பதாக அந்தப் பணக்காரருக்கு நினைப்பு.

ஒரு நாள் அந்தப் பணக்காரரைத் தேடி ஒரு துறவி வந்தார். அந்தத் துறவியை அந்தப் பணக்காரர் வணங்கி உபசரித்தார்.

பின்னர் அந்தத் துறவியைப் பார்த்து, "உலகம் முழுவதும் சுற்றிய அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. என்னைவிட சுகத்தை அனுபவிக்கிறவர்களைத் தாங்கள் பார்த்து இருக்கிறீர்களா?" என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

இலேசாகப் புன்னகைத்த துறவி, "உன்னைவிட சுகமாக வாழ்கிறவரை வேறு எங்கும் தேட வேண்டாம். அவர் உங்கள் நாட்டிலேயே இருக்கிறார்" என்று அந்தப் பணக்காரரைப் பார்த்துக் கூறினார்.

"என் நாட்டிலா? எங்கே?" என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

"வாருங்கள் நேரிலேயே அவரை நான் காட்டுகிறேன்", என்றார் துறவி.

பின்னர், அந்தப் பணக்காரரை வயல்வெளிக்கு அழைத்துச் சென்றார். அப்போது கடுமையான கோடை வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

அப்போது, அந்த வெய்யில் பற்றிய கவலையே இல்லாமல், வியர்வைக்கு அஞ்சாது, அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர்



ஓர் இளைஞனைப் போல் உழவுப் பணியை மேற்கொண்டு இருந்தார்.

அந்தப் பெரியவரை சுட்டிக்காட்டி, "உன்னை விட சுகம் அனுபவிக்கும் சுகபோகி", என்று பணக்காரரிடத்தில் கூறினார் அந்தத் துறவி.

"இந்தக் கிழவன் என்னைவிட சுகபோகியா? கேலி வேண்டாம்" என்றார், அந்தப் பணக்காரர் துறவியைப் பார்த்து.

துறவி அந்தப் பணக்காரரைப் பார்த்து, மீண்டும் புன்னகைத்தார்.

"செல்வந்தரே, இந்தத் தள்ளாத வயதிலும் அவர் உழைப்பைப் பாருங்கள். கடுமையான உழைப்பு. வெயிலுக்கு அஞ்சாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார். இந்த உழைப்பிற்குப் பின்னே அவருக்கு நன்றாகப் பசி எடுக்கும். கூழோ, கஞ்சியோ, எதுவானாலும், அவருக்கு அமிர்தம்தான். மீண்டும் பகல் முழுவதும் உழைப்பார். அந்த உழைப்பின் களைப்பில் இரவில் நிம்மதியாக உறங்குவார். சுகபோகம் என்பது, வெயிலையும், பனியையும், புயலையும், மழையையும் ஆனந்தமாய் எதிர்கொள்ளக் கூடியது. அதை எதிர்கொள்ள, அவர் எப்போதும் தயார்.

உழைப்புக்குப் பின் வரும் உறக்கம்தான் சொர்க்கம். உழைக்காமல் வரும் எதுவும் சுகபோகமாகாது. இப்போது கூறுங்கள் நீங்கள் சுகபோகியா ? அல்லது அந்த உழைப்பாளி சுகபோகியா ?'' என்று பணக்காரரைப் பார்த்து கேட்டார் அந்தப் பெரியவர்.

உடனே அந்தப் பணக்காரர், அந்தத் துறவியைப் பார்த்து வணங்கினார். ''என்னை மன்னித்து விடுங்கள், நான் உழைக்கத் தயாராகிவிட்டேன்'' என்று கூறினார்.

''நம்மால் முடியும்''

உழைப்பால் உயர்ந்து விளங்கும் நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு, இணைந்து பாடுபட்டால், இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் மேலும் நல்ல வளர்ச்சி அடையும். அதன் மூலம் உங்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

என்னால் வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023இல், சிறுதொழில் துறைக்கென இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அந்த இலக்கினைத் தமிழ்நாடு எய்தும் வகையில், இலட்சியத்துடனும், ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் நீங்கள் பாடுபட வேண்டும். உங்களால் முடியாதது எதுவுமில்லை.

''நம்மால் முடியும்'' என்ற தன்னம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும், ஒற்றுமையுடனும் பணிகளை மேற்கொண்டால், உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம், என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

தொழில்கள் வளர வேண்டும், தொழிலாளர்கள் வாழ வேண்டும் என்ற கோட்பாட்டிற்கிணங்க செயல்பட்டுக் கொண்டிருக்கும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கை களுக்கு, தேயிலை விவசாயிகளாகிய நீங்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தர எனது தலைமையிலான அரசு என்றென்றும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. இந்த இனிய தருணத்தில், குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையில், பணிபுரியும் தொழிலாளர் களுக்குப் பொன் விழா ஊக்கத் தொகையாக, ஒரு மாதச் சம்பளம், அதிகபட்சமாக 3,000 ரூபாயும், மற்றும் பணியாளர்களுக்கு 15 நாட்கள் சம்பளம், அதிகபட்சம் 10,000 ரூபாயும், வழங்கப்படும்.

2. நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு பகுதியில் வாழும், சிறு தேயிலை விவசாயிகளின் வசதிக்காக, நஞ்சநாடு பகுதியில், சுமார் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை தொடங்கப்படும்.

3. நீலகிரி மாவட்டத்தின், தேயிலைத் தொழில் வளர்ச்சியை, மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகில், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தேயிலைக் குழுமப் பொது வசதி மையம், அதாவது, Tea Cluster –Common Facilitation Centre ஒன்று, புதியதாக அமைக்கப்படும். இதில், பொது வசதி மையங்களாக, சேமிப்புக் கிடங்கு, தேயிலைத் தூள் கலத்தல், Packeting செய்தல், சோதனைக் கூடம் மற்றும், சந்தை மையம், ஆகியவை ஏற்படுத்தப்படும்.

இந்தக் குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை வெற்றிப் பாதையில் தொடர்ந்து பயணித்து, வைர விழா, பவள விழா, நூற்றாண்டு விழா என பல சாதனைகளைப் புரிய வேண்டும் என்று வாழ்த்தி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

நீலகிரி மாவட்டம், கோடநாடு கூட்டுறவு நியாய விலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்புப் பொங்கல் பரிசு தொகுப்புகளை வழங்கி ஆற்றிய உரை – (09.01.2013)



1.84 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுகள் – விலையில்லா சேலைகள், வேட்டிகள்!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே, அரசுத் துறைச் செயலாளர்களே, அரசு அதிகாரிகளே, வணக்கத்திற்குரிய

பெரியோர்களே, என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் இரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை உடன் பிறப்புகளே, அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்பதுதான் எனது தலைமையிலான கழக அரசின் கொள்கை. பொங்கல் நாள் நெருங்குகிறது, இன்றைய சூழ்நிலையில் தமிழக மக்களுக்கு எந்தவிதமான குறையும் இருக்கக்கூடாது என்பது தான் இந்த நிகழ்ச்சியின் நோக்கம். பருவமழை பொய்த்து விட்டது, ஆகவே, காவேரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் பயிர்கள் பிழைக்குமா, தப்புமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. நமக்குக் கிடைக்க வேண்டிய காவேரி நீரைக் கர்நாடக அரசு திறந்துவிட வில்லை. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று எவ்வளவு வற்புறுத்தினாலும் இன்னும் மத்திய அரசு அதனை மத்திய அரசிதழில் வெளியிடவில்லை. அதனால் நமக்குக் காவேரியில் கிடைக்க வேண்டிய உரிமை, காவேரி நீரில் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு உறுதி செய்யப்படவில்லை.

இருப்பினும் ஏற்கெனவே டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரண தொகுப்பினை அறிவித்திருக்கிறோம். அதன்படி, விவசாயப் பெருமக்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் அது முழுவதையும் தமிழக அரசு ஈடுசெய்யும் என்று ஏற்கெனவே உத்தரவாதம் அளித்திருக்கிறோம். மேலும் எந்தெந்த பகுதிகளில் வறட்சி பகுதிகளாக அறிவிக்க வேண்டும், இன்னும் எந்த அளவிற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதை எல்லாம் முடிவு செய்ய மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் தலைமையில் ஒரு



குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு தனது ஆய்வினை மேற்கொண்டு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முன்பே பொங்கல் திருநாள் வந்துவிடும். இந்தப் பொங்கல் திருநாளை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்பதற்காகத்தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொருட்களை பெறுகின்ற 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் விழாவை முன்னிட்டு அவர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 100 ரூபாய் ரொக்கம் ஆக மொத்தம் 160 ரூபாய் மதிப்புள்ள பொங்கல் பரிசுகள் விலையில்லா சேலையும் வேட்டியும் வழங்கப்படுகிறது.

இதனால் எனது அன்பார்ந்த தமிழக மக்கள் அனைவரும் எந்தக் குறையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் பொங்கலைக் கொண்டாட எனது தலைமையிலான அரசு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. இன்றைய தினம் இந்தக் கோடநாட்டில் உள்ள ரேஷன் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்தப் பொங்கல் சிறப்புத் தொகுப்பு வழங்கப்படுகிறது.

அதே நேரத்தில் தமிழகம் முழுவதும் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இதே சிறப்புப் பொங்கல் தொகுப்புப் பரிசு அளிக்கப்படும். வருகின்ற 13ந் தேதி ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் கூட அன்றைய தினம் கூட அனைத்து இடங்களிலும் நியாய விலைக் கடைகள் திறந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன்,

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

தேனி மாவட்டம், லோயர் கேம்ப்பில் நடைபெற்ற விழாவில் கர்னல் ஜான் பென்னிகுயிக் நினைவு மணி மண்டபத்தை திறந்து வைத்து திருவள்ளுவர் திருநாள் விருதுகளை வழங்கி ஆற்றிய உரை – (15.01.2013)



துணிச்சல் – மன உறுதி – தன்னம்பிக்கையால் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் கர்னல் ஜான் பென்னிகுயிக்!

இந்த இனிய விழாவில் வாழ்த்துரை வழங்கி அமர்ந்துள்ள மாண்புமிகு நிதி அமைச்சர், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், திரு. கே.வி. ராமலிங்கம் அவர்களே, மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு, இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைத் துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி அமைப்புகளின்

பிரதிநிதிகளே, தலைமைச் செயலாளர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, வரவேற்புரை நல்கிய பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு. எம். சாய்குமார் அவர்களே, நன்றியுரை நவிலவுள்ள தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. ராசாராம் அவர்களே,

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி அவர்களே, அரசு அதிகாரிகளே, காவல் துறை அதிகாரிகளே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் இரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் தமிழகத்தின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையைப் பல இடையூறுகளுக்கு இடையில் தனது சொந்தப் பணத்தையும் செலவு செய்து அமைத்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் மணிமண்டபத்தினை அவரது பிறந்த நாளான இன்று திறந்து வைத்து எனது அருமை தேனி மாவட்ட மக்களாகிய உங்களிடையே உரையாற்றுவதிலும்; திருவள்ளுவர் தினமான இன்று திருவள்ளுவர் விருது உட்பட பல்வேறு விருதுகளைத் தமிழறிஞர்களுக்கு வழங்குவதிலும்; அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வைகைப் படுகையில் வறட்சி ஏற்படுவதும்; இதன் காரணமாக அப்பகுதியில் பஞ்சம் ஏற்படுவதும்; வாடிக்கையாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தது. இந்த வைகைப் படுகைக்கு மேலே அமைந்துள்ள பெரியாறு நதியானது மேற்குத் தொடர்ச்சி மலையில் சிவகிரி மலையில் உற்பத்தியாகி, தெற்கு முகமாகச் சென்று கிளை நதியான முல்லையாற்றுடன் இணைந்து மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் வீணாகக் கலந்து வந்தது.

இதனையறிந்த அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம், வைகைப் படுகையில் வறட்சி ஏற்படுவதைத் தடுக்கும்

பொருட்டு, மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு நதி நீரை வைகைப் படுகைக்குத் திருப்பும் வகையில் ஒரு திட்டத்தை தயாரித்தது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், ஆய்வுப் பணியை மேற்கொள்ளவும்; விரிவான ஆய்விற்குப் பிறகு வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்து அறிக்கை அளிக்கவும்; திறமையான தன்னம்பிக்கையுடைய நபர் ஒருவர் தேவை எனக் கருதி, கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்தது.

இந்தப் பணியினை ஏற்றுக் கொண்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள், பெரியாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டி; அதிலிருந்து நீரைக் கிழக்கு முகமாக வைகைக்குத் திருப்பிவிடும் வகையில், 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஒரு திட்ட அறிக்கையைத் தயாரித்து 1882ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்பினார்.

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், அப்போதைய திருவாங்கூர் சமஸ்தானத்துடன் பேச்சுவார்த்தையை பிரிட்டிஷ் அரசாங்கம் நடத்தியது. இறுதியாக, 01.01.1886 முதல் 999 ஆண்டுகளுக்கான ஒரு குத்தகை உடன்படிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் இடையே 29.10.1886 அன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி, ஒரு ஏக்கர் நிலத்திற்கு 5 ரூபாய் ஆண்டு வாடகை என்ற அடிப்படையில், ஆற்றின் நீர் மட்டத்திற்கு மேல் 152 அடி வரையில் நீரைத் தேக்கி வைக்கும் வகையில், நீர்ப்பரப்புப் பகுதியான சுமார் 8,000 ஏக்கர் நிலமும்; அணை கட்டுமானப் பணிக்காக சுமார் 100 ஏக்கர் நிலமும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் குத்தகைக்கு அளிக்கப்பட்டது.

இதனையடுத்து, 1887ஆம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணைக் கட்டுவதற்கான பணிகள் துவக்கப்பட்டன. இந்தப் பணியினை மேற்கொள்ளும் பொறுப்பும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வன விலங்குகள், கடும் மழை, காட்டாற்று வெள்ளம் ஆகியவற்றினால் உருவாகும் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் மூன்று ஆண்டுகள் பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. அணை பாதியளவு கட்டி முடிக்கப்பட்ட சூழ்நிலையில், தொடர் மழை

காரணமாகக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில் தொய்வு ஏற்பட்டது.

இந்தத் திட்டத்தினைத் தொடர்வதற்கான நிதியினை குறிப்பிட்ட காலங்களில் அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் ஒதுக்கீடு செய்யவில்லை. நிதி கிடைக்காததை அறிந்த கர்னல் பென்னிகுயிக் அவர்கள் இங்கிலாந்து சென்று தனது குடும்பச் சொத்துகளை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி முடித்துள்ளார் என்று வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. இதனையடுத்து, இந்த அணை 1895ஆம் அண்டு அக்டோபர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்காக அப்போதைய சென்னை மாகாண கவர்னர் லார்டு வென்லாக் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதனால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 2.23 இலட்சம் ஏக்கர் நிலங்கள் தற்போது பாசன வசதி பெற்று வருகின்றன.

நில அதிர்வுகளைத் தாங்கும் அணை

எத்தகைய தடைகள் வந்தாலும், இந்த அணையை எப்படியாவது கட்டி முடிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை யுடனும், மன உறுதியுடனும், விடா முயற்சியுடனும், துணிவுடனும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள் செயல்பட்டுள்ளார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

அந்தக் காலத்திலேயே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கட்டப்பட்ட அணைகளைப் போன்று சுண்ணாம்பு சுர்க்கி கருங்கல்லினால் புவி ஈர்ப்பு விசையின் அடிப்படையில் இந்த அணையை கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள் கட்டியிருக்கிறார். இதனால்தான், நில அதிர்வுகளினால் ஏற்படும் விசை போன்றவற்றை தாங்கிக் கொள்ளும் சக்தியோடு முல்லைப் பெரியாறு அணை இன்றும் உறுதியுடன் இருக்கிறது.

திரு. பென்னிகுயிக் அவர்களால் வலுவாகக் கட்டப்பட்டுள்ள இந்த முல்லைப் பெரியாறு அணை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும்; எனது ஆட்சிக் காலத்திலும்; அதாவது 1980 முதல் 1994 வரை, குறுகிய, நடுத்தர மற்றும்



நீண்ட கால அடிப்படையில் மேலும் வலுப்படுத்தப்பட்டது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அணையின் நீர்மட்டம், அதன் முழுக் கொள்ளளவான 152 அடிக்கும் மேலாக உயர்கையில், 10 மதகுகள் வழியாக ஒரு

வினாடிக்கு 86,000 கன அடி நீரை வெளியேற்ற அணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, கூடுதலாக 36,000 கன அடி நீரை வெளியேற்றும் வகையில் மூன்று மதகுகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தத்தில் தற்போது 1,22,000 கன அடி நீரினை வெளியேற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அணையின் பாதுகாப்பினை வலுப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் முன்பு நடைபெற்ற வழக்கில் தமிழக அரசின் சார்பில் வலுவான வாதங்களும் எடுத்து வைக்கப்பட்டன. இது குறித்து மத்திய நீர்வள அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவும் தனது அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இதன் அடிப்படையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும்; எஞ்சியுள்ள பணிகள் முடிவடைந்தவுடன் வல்லுநர்கள் ஆய்வு செய்த பின்னர், அணையின் முழு நீர் அளவான 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 27.2.2006 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினை முடக்கும் வகையில், ''கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006'' என்ற ஒரு சட்டத்தினை கேரள அரசு இயற்றியது. இதன்படி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடி என நிர்ணயிக்கப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனத் தெரிவித்து, 2006ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எனது உத்தரவின் பேரில் தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு அம்சங்களைப் பரிசீலிக்கும் பொருட்டு உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் அதிகாரம் படைத்த வல்லுநர் குழு ஒன்றை உச்ச நீதிமன்றம் 18.02.2010 அன்று நியமித்தது. இந்தக் குழுவில் தமிழ்நாடும், கேரளாவும் தங்கள் மாநிலங்களின் சார்பாக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர்களை நியமித்தன.

இந்த அதிகாரம் படைத்த குழு, முல்லைப் பெரியாறு அணைப் பகுதி மற்றும் பரிசோதனைக் கூடங்களில் பல்வேறு ஆய்வு மற்றும் சோதனைகளை மத்திய நீர் ஆணையம்; மத்திய நீர் மற்றும் மின்சார ஆராய்ச்சி நிலையம்; இந்திய புவியியல் அளவைத் துறை; மற்றும் மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் சேவைகளைப் பயன்படுத்தி; அவற்றின் அறிக்கைகளின் அடிப்படையில், தனது அறிக்கையை 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், முல்லைப் பெரியாறு அணை வலுவாக உள்ளது என்றும்; ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அனுமதித்தபடி அணையின் நீர் மட்டத்தை 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்றும்; எஞ்சிய பணிகளை முடித்த பின்னர் அணையின் முழு அளவான 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், உச்ச நீதிமன்றம் தமிழகத்திற்குச் சாதகமான தீர்ப்பினை வழங்கும் என நான் நம்புகிறேன்.

சட்டமன்றத்தில் தீர்மானம்

இது மட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை அந்தப் பகுதிக்கு உடனடியாக மத்திய அரசு அனுப்ப வேண்டும் என்றும்; உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக, 2006ஆம் ஆண்டு, கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தில் உரிய திருத்தங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்; அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசு, தமிழகத்திற்குத் தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றும்; எந்தச் சூழ்நிலையிலும், தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்றும், 15.12.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினேன்.

வழக்கம் போல இந்தத் தீர்மானத்தின் மீதும் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள கேரள அரசு தடை ஏற்படுத்திய காரணத்தால், உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசு மனுத் தாக்கல் செய்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் பராமரிப்புப் பணிகளைத் தமிழக அரசு மேற்கொள்ள தடை ஏற்படுத்தக் கூடாது எனத் தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினையடுத்து, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களிடம் இருந்த துணிச்சல், மன உறுதி மற்றும் தன்னம்பிக்கை காரணமாகத்தான் முல்லைப் பெரியாறு அணையை அவரால் கட்ட முடிந்தது.

தெளிவு பிறந்தது

திருமணமான பெண் ஒருத்தி தன் தாயாரைத் தேடி வந்தாள். அவளுடைய முகம் வருத்தமுற்றிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

தாயார் தன் மகளைப் பார்த்து, ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தார்.

மகள் தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் ஒவ்வொன்றாகத் தாயாரிடம் சொன்னாள். ''இவற்றிலிருந்து எப்படி விடுபடப் போகிறேன் என்று தெரியவில்லை'' என்று கூறி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மகள்.

இவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்ட தாயார், தன் மகளை சமையலறைக்கு அழைத்துச் சென்றார். மூன்று பாத்திரங்களில் தண்ணீரை ஊற்றி, எரியும் அடுப்பிலே அதையெல்லாம் எடுத்து வைத்தார். சிறிது நேரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. ஒரு பாத்திரத்திலே கேரட்டை எடுத்துப் போட்டார். மற்றொரு பாத்திரத்தில் முட்டையைப் போட்டார். இன்னொரு பாத்திரத்தில் கொஞ்சம் காப்பித்தூளைப் போட்டார்.

அந்தப் பெண்ணுக்கு எதுவும் புரியவில்லை. இருந்தாலும் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், அந்தப் பாத்திரங்களை கீழே இறக்கி வைத்தார் தாயார். கேரட்டையும், முட்டையையும் எடுத்து வெளியே வைத்தார். காபியையும் ஒரு கோப்பையிலே ஊற்றினார்.

"மகளே இதெல்லாம் என்ன என்று தெரிகிறதா?" என்று கேட்டார் தாயார்.

அதற்கு "அது கேரட், அடுத்தது முட்டை, இது காப்பி" என்று கூறினாள் மகள்.

"சரி, கேரட்டை தொட்டுப் பார் எப்படியிருக்கு?" என்று கேட்டார் தாயார். தொட்டுப் பார்த்து, "ரொம்ப மென்மையாக இருக்கு" என்று கூறினாள் மகள்.

"முட்டையைத் தொட்டுப் பார்த்து எப்படியிருக்கு என்று சொல்" என்று கூறினார் தாயார்.

"கொஞ்சம் கடினமாக இருக்கிறது" என்று சொன்னாள் மகள்.

அடுத்தபடியாக "காப்பியை எடுத்து குடி" என்றார் தாயார். காபியை குடித்துவிட்டு, "ரொம்ப சுவையாக இருக்கிறது" என்று கூறினாள் மகள்.

"எதற்கு இந்த வேடிக்கை?" என்று தாயிடம் வினவினாள் மகள்.

அதற்கு பதில் அளித்த தாய், "மகளே கொஞ்ச நேரத்திற்கு முன்பு இந்த மூன்று பொருள்களையும் ஒரே மாதிரி தண்ணீரில்தான் கொதிக்க வைத்தோம். ஒரே நேரத்தில் கீழே இறக்கி வைத்தோம். ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது.

"இந்தக் கேரட் ஆரம்பத்திலே எவ்வளவு கடினமாக இருந்தது? ஆனால், தண்ணீரில் கொதிக்க வைத்தவுடன் தன்னுடைய இயல்புக்கு நேர்மாறாக மென்மையானதாக மாறிவிட்டது".

"இந்த முட்டைக்குள்ளே திரவ நிலையிலே இருந்த கரு கொதிக்க வைத்ததும் கடினமாக ஆகிவிட்டது".



“காப்பியைப் பார். அது அந்தத் தண்ணீரையே சுவை மிக்க பானமாக மாற்றிவிட்டது”.

“மகளே, வாழ்க்கையில் கஷ்டங்கள் என்பது இப்படிக் கொதிக்க வைக்கிற மாதிரிதான். இதை நாம் எந்த ரூபத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதில்தான் விஷயமே இருக்கிறது” என்று கூறினார் தாய்.

உடனே மகள் முகத்தில் தெளிவு பிறந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். கவலை மறந்து போய்விட்டது. பறந்து போய்விட்டது. முகத்தில் தெளிவு பிறந்தது.

எந்த நிலைமையையும் சந்திப்பதற்கு, சமாளிப்பதற்கு உரிய துணிச்சல், மன உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

இதைத்தான் முல்லைப் பெரியாறு அணை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த முல்லைப் பெரியாறு அணையைவிட மிகவும் பழமை வாய்ந்த அணை கொள்ளிடம் ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள கல்லணை. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கரிகால் சோழனால் கட்டப்பட்டு இன்றளவும் கோடானு கோடி மக்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்கும் இந்த அணை ஒரு பொறியியல் அற்புதம் ஆகும். இந்தியாவில் தற்போது புழக்கத்தில் இருக்கும் அணைகளில் கல்லணையே மிகவும் பழமை வாய்ந்தது.

இப்படிப்பட்ட உறுதியான அணையை உருவாக்கிக் கொடுத்த கரிகால் சோழனின் சேவையை நினைவுகூர்ந்து போற்றும் வகையிலும்; கௌரவிக்கும் வகையிலும்; ஒரு மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்றல் படைத்த திருக்குறள்

இன்று திருவள்ளுவர் தினம். மனிதவாழ்வுக்குத் திருக்குறள் மூலம் நல்வழி காட்டியவர் திருவள்ளுவர். நாடு, மதம், மொழி கடந்து நல்வழி காட்டும் உலகப் பொதுமறை நூலாகத் திருக்குறள் விளங்குகிறது. அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வின் அடிப்படையான கருத்துகளுக்கு விளக்கம் அளிப்பதே திருக்குறள். இரண்டே வரிகளில் இருந்தாலும், அதனுள் உலகையே அடக்கி நிற்கும் ஆற்றல் படைத்தது திருக்குறள். திருக்குறளில் திருவள்ளுவர் கூறிய கருத்துகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக விளங்குகின்றன. இதனால் தான், ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாடினார் மகாகவி பாரதியார்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் தின நன்னாளில், எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள் என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, முல்லைப் பெரியாறு அணையினை உருவாக்கிய கர்னல் பென்னிகுயிக் அவர்களின் மணிமண்டபத்தைத் திறந்து வைத்ததில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இந்த விழாவிற்கு கர்னல் பென்னிகுயிக் அவர்களுடைய கொள்ளுப் பேரன் Thiru W. Stuart Sampson அழைக்கப்படுவார் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். அதன்படி இந்த விழாவில் மாநில அரசின் விருந்தினராகக் கலந்து கொள்ளுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும், தவிர்க்க முடியாத காரணங்களால் அவரால் இந்த விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜான் பென்னிகுயிக் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், தற்போது தேனி நகரில் புதிதாகக் கட்டப்பட்டு வரும்

பேருந்து நிலையத்திற்கு "கன்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம்" என்று பெயர் சூட்டப்படும் என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத திருக்குறளை அழித்து விட்டு, தன்னுடைய வாசகங்களை எழுத வைத்த திரு. கருணாநிதி, கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை சரியாகப் பராமரிக்கப்படவில்லை என இல்லாத ஒன்றைக் கூறி, அதற்காக போராட்டம் நடத்தப் போவதாகக் கூறி இருந்தார். நான் திரு. கருணாநிதிக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளுவருக்கு சிறப்பு செய்த அரசு

திருவள்ளுவர் பெயரில் விருதை அறிமுகப்படுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. திருக்குறளை தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானத்தை இயற்றியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. திருவள்ளுவர் பெயரில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான்.

இன்னும் சொல்லப்போனால், கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு அருகிலுள்ள பாறையில் திருவள்ளுவர் சிலை ஒன்றினை நிறுவ முடிவெடுத்து, அப்போதைய பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களால், அப்போதைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில் 15.4.1979 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர், பாறையின் தன்மை, சிலையின் வடிவமைப்பு, அதை நிறுவுவது பற்றிய திட்டங்கள், மதிப்பீடு போன்ற பல்வேறு அம்சங்களை விரிவாக ஆராய்ந்து ஓர் அறிக்கையினை சமர்ப்பிக்க நிபுணர் குழு அமைக்கப்பட்டதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான். எனது முதல் ஆட்சிக் காலத்தில் 1 கோடியே 28 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இந்த சிலை அமைக்கும் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டது. இதனை வைத்து, திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் ஓரளவு

பணிகளை அப்போதே மேற்கொண்டார். உண்மை நிலை இவ்வாறிருக்க, கன்னியா குமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பதற்கு தான் மட்டுமே காரணம் என்று திரு.கருணாநிதி கூறுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல் உள்ளது. இவ்வாறு அண்டப் புளுகு புளுகுவதற்கு, தன்னை விஞ்சியவர் வேறு யாருமில்லை என்பதை திரு கருணாநிதி மீண்டும் நிரூபித்திருக்கிறார்.

திருவள்ளுவர் சிலைக்கு ரசாயனக் கலவை பூசுவது என்பது நான்கைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுவதாகும். முதன் முதலாக, எனது ஆட்சிக் காலத்தில் 2004ஆம் ஆண்டு இப் பணி நடைபெற்றது. பின்னர் 2008ஆம் ஆண்டு ரசாயனக் கலவை பூசப்பட்டது. தற்போது இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. உண்மை நிலை இவ்வாறிருக்க, 2011ஆம் ஆண்டு ஆட்சி மாறிய பிறகு, ஒன்றரை ஆண்டுக் காலமாக இந்த ரசாயனக் கலவை பூசப்படவில்லை என்று திரு. கருணாநிதி கூறுவது விஷமத்தனமானது. திருவள்ளுவரைப் பற்றிய அக்கறை திரு. கருணாநிதியைவிட எனக்கு அதிகம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

> ‘‘பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
> எல்லாரும் எள்ளப் படும்’’.

அதாவது, பலரும் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்ந்துரைப்பார்கள் என்ற வள்ளுவரின் வாய்மொழியை திரு. கருணாநிதிக்கு இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இனிய நன்னாளில், கலைமாமணி முனைவர் ந. முருகன் அவர்களுக்கு திருவள்ளுவர் விருதினையும்; பாரதிக் காவலர் திரு. கு. இராமமூர்த்தி அவர்களுக்கு மகாகவி பாரதியார் விருதினையும்; பேராசிரியர் முனைவர் திரு. சோ.ந. கந்தசாமி அவர்களுக்குப் பாவேந்தர் பாரதிதாசன் விருதினையும்; முனைவர் திருமதி. பிரேமா நந்தகுமார் அவர்களுக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதினையும்; முனைவர் நா. இராசகோபாலன் அவர்களுக்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதினையும்; திரு.கே.ஆர்.பி மணிமொழியன் அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா விருதினையும்; முன்னாள் நாடாளுமன்ற



உறுப்பினர் திரு. சிங்காரவடிவேல் அவர்களுக்குப் பெருந்தலைவர் காமராசர் விருதினையும்; டாக்டர் கோ. சமரசம் அவர்களுக்கு தந்தை பெரியார் விருதினையும்; முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. பாண்டியன் அவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் விருதினையும், தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் தங்கப் பதக்கங்களையும் இந்த மேடையிலே நான் வழங்கியதிலும்; அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் விருதுகள் மற்றும் நிதியுதவி பெற்றவர்கள் தங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும், நலன்களையும் பெற்று, தேக ஆரோக்கியத்துடன் நீடூழி இன்புற வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து; தமிழ்ச் சமுதாயத்திற்குத் தங்களால் இயன்ற அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை – (08.02.2013)



உயரிய இலட்சியங்களை அடைய அயராது பாடுபட்டு வரும் மக்கள் நல அரசு!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள் சக்தியை உந்து சக்தியாகக் கொண்டு, ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்கிற குறிக்கோளின் அடிப்படையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய பாதையில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளை விளக்கி, பாரம்பரியம் மிக்க இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் கடந்த ஒன்றாம் தேதியன்று உரையாற்றினார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்

டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீது இந்த அவையில் கடந்த சில நாட்களாக விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்திலே கலந்து கொண்டு, எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களும், ஆளும்கட்சி வரிசையில் இடம்பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களின் மேலான கருத்துகளை எடுத்து வைத்துள்ளனர். அனைவருக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது அரசின் வியத்தகு சாதனைகளையும், நிறைவேற்றப் பட்ட வாக்குறுதிகளையும், மேற்கொள்ளவிருக்கும் மக்கள்நலப் பணிகளையும் கோடிட்டுக் காட்டும் விதமாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த விவாதத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், தங்களது அறிவார்ந்த கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நல்ல ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். எங்களது அரசின் கொள்கைகளுக்கு, செயல்பாடுகளுக்குப் பாராட்டும், வரவேற்பும் தந்திருக்கிறார்கள். அதே சமயத்தில், இந்த அவையிலே கண்டனக் கணைகளைத் தொடுத்தவர்களும், வசைமாரி பொழிந்தவர்களும் உண்டு.

வசைபாடுபவர்களை நினைக்கும் போது, எனக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது நண்பர்களோடு காரில் சென்று கொண்டிருந்தார். ஓர் ஊரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய அந்தப் பேச்சாளர், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எதிராக கண்டனக் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓர் ஓரத்தில் காரை நிறுத்தச் சொல்லி அந்தப் பேச்சு முழுவதையும் கேட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

காரில் இருந்த நண்பர் ஒருவர் பேரறிஞர் அண்ணாவிடம், "ஏன் அண்ணா அவர் உங்களை வசைபாடுகிறார்?" என்று கேட்டார். அண்ணா அவர்கள் பதில் ஏதும் சொல்லாமல் மவுனம் காத்தார். சிறிது தூரம் சென்றவுடன் ஒரு மாட்டு வண்டியை

பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்று கொண்டிருந்த கார் முந்திச் செல்ல வேண்டியிருந்தது. எனவே, சாலை ஓரமாக காரை செலுத்தி, மாட்டு வண்டியைக் கடந்து கார் சென்றது. அப்போது, அந்த மாட்டு வண்டியை ஓட்டியவர் காரின் ஓட்டுநரைப் பார்த்து வசைபாடினார். அப்போது, காருக்குள் இருந்த நண்பர்களிடம், ''பார்த்தீர்களா? கார் வேகமாகப் போகிறது. மாட்டு வண்டியால் இதற்கு ஈடாக வர முடியவில்லை. அந்தக் கோபம்தான் அவர் நம்மைத் திட்டுகிறார். அவருக்குச் சமமாக நாம் வசைபாடாமல் நம் வேகத்தை அதிகரித்து, போக வேண்டிய இடத்தை அடைய வேண்டும். இந்த மாட்டு வண்டிக்காரர் நிலைமையில்தான் அந்தப் பேச்சாளர் இருக்கிறார்'' என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா.

''நம் வளர்ச்சி அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் அவர் நம்மை கவனிக்கிறார். நம்மையொத்து வளர முடியவில்லை. அந்த இயலாமை நம் மேல் கோபமாக மாறுகிறது. கோபம், கடுஞ்சொல் பேச வைக்கிறது. இந்த அடிப்படைக் காரணத்தை அறிந்தால், அவர் மேல் இரக்கம் உண்டாகும். நமது வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய அளவுகோல் பிறரது நியாயமற்ற வசை'' என்றார் பேரறிஞர் அண்ணா.

எங்களைப் பொறுத்த வரையில், ''பிறர் ஏசும் ஏச்சை உரமாக்கிக் கொண்டு வளர வேண்டும்'' என்ற பேரறிஞர் அண்ணாவின் அமுதமொழிக்கு ஏற்ப நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மக்கள்நலன் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆளுநர் உரை உருவாக்கப்பட்டுள்ளதால், பலரால் பாராட்டப்படுகிற நல்வாய்ப்பினை இது பெற்று இருக்கிறது. இருப்பினும், திட்டங்களைச் சீரிய முறையில் நடைமுறைப்படுத்தும் வகையிலும், திட்டங்களின் பயன் மக்களைச் சென்றடையும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியுள்ள ஆக்கப்பூர்வமான அறிவுரைகளும், ஆலோசனைகளும் கட்சிப் பாகுபாடின்றி இந்த அரசால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கடந்த 20 மாதங்களில் தமிழக மக்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட

நலத் திட்டங்கள் குறித்தும், அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும், அரசின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் குறித்தும் எனது விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழகத்தில் நிலவும் மின்சாரப் பிரச்சினை குறித்து எடுத்துக் கூறினார்கள். தமிழகத்தில் தற்போது நிலவும் மின்சாரப் பற்றாக்குறைக்கான காரணம் என்ன என்பதைப் பற்றியும், அவற்றைச் சீர் செய்வதற்கு நான் எடுத்து வரும் முயற்சிகளைப் பற்றியும் இந்த அவையிலே பல முறை விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.

இருப்பினும், தற்போது நிலவும் மின்சாரப் பற்றாக்குறைக்குக் காரணம் எனது அரசுதான் என்று இங்கே பேசிய ஒரு சில உறுப்பினர்கள் கூறுவதால், இதில் உள்ள உண்மை நிலையை மீண்டும் எடுத்துக் கூறுவது எனது கடமையெனக் கருதுகிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001 முதல் 2006 வரை தமிழகம் மின் மிகை மாநிலமாகத்தான் இருந்து வந்தது. எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, 500 மெகாவாட் மின் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை வட சென்னையில் அமைக்கவும்; தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை வல்லூரில் அமைக்கவும்; நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை தூத்துக்குடியில் அமைக்கவும்; 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையத்தை அமைக்கவும்; இராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதாவது, 3,095 மெகாவாட் அளவுக்கான மின்சார உற்பத்தித் திட்டங்கள் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டன. இந்த மின் திட்டங்களை 2006 முதல் 2011 வரையிலான ஆண்டுகளில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க.

அரசு நிறைவேற்றியிருந்தாலே, தமிழ்நாட்டில் தற்போது மின் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்காது. எனவே, தற்போது நிலவும் மின் பற்றாக்குறைக்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் காரணம் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2011இல், 3ஆவது முறையாக நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தமிழகத்தின் மின் நிலைமை குறித்து விரிவாக ஆய்வு நடத்தினேன். அப்போது, 2005ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட, வட சென்னை அனல் மின் நிலையத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவானப் பணிகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான பணிகளை நான் துரிதப்படுத்தியதன் விளைவாக, 600 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நமக்குக் கிடைக்க இருக்கிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்து ஆண்டுகளில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே முடிக்கப்பட்ட நிலையில், இந்த 1¾ ஆண்டுகளில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட பணிகளை எனது அரசு செய்து முடித்துள்ளது.

வட சென்னை அனல் மின் நிலையத்தின் இரண்டாவது அலகினைப் பொறுத்த வரையில், 40 விழுக்காடு பணிகள் மட்டுமே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுகளில் முடிவடைந்திருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொய்வடைந்திருந்த இந்தப் பணிகளை முடுக்கிவிட்டதன் காரணமாக மீதமுள்ள 60 விழுக்காடு பணிகள் தற்போது முடிவடையும் நிலையில் உள்ளன. இதன் மூலம், இந்த ஆண்டு மே மாதம் முதல் நமக்கு 600 மெகாவாட் மின்சாரம் கிடைக்க இருக்கிறது.

இதே போன்று, 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணிகள் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தின் ஐந்து ஆண்டுகளில் 55 விழுக்காடு பணிகளே முடிவடைந்திருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தப் பணிகளை விரைவுபடுத்தியதன் காரணமாக, மீதமுள்ள 45 விழுக்காடு பணிகள் 1½ ஆண்டுகளில் முடிக்கப்பட்டன. இந்த அனல் மின் நிலையத்திலிருந்து, டிசம்பர் மாதம் 2012ஆம் ஆண்டு முதல் நமக்கு மின்சாரம் கிடைக்கும் என்று நான்

ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்திருந்தேன். அதன்படி, இந்த அனல் மின் நிலையம் 608 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து சோதனை ஓட்டத்தைத் தொடங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய அனல் மின் கழகத்துடன் கூட்டு முயற்சியில் எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வல்லூர் அனல் மின் திட்டப் பணிகளும், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மந்த கதியிலேயே நடைபெற்றன. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக, இந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. இதன் விளைவாக, நான் ஏற்கெனவே இந்த அவையில் அறிவித்தது போல், வல்லூர் அனல் மின் திட்டத்தின் முதல் அலகு 2012 டிசம்பர் மாதம் முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதிலிருந்து தமிழ்நாட்டிற்கு 375 மெகாவாட் மின்சாரம் தற்போது கிடைத்து வருகிறது. இதே போன்று நான் ஏற்கெனவே அறிவித்தபடி, 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு இந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்தும்; 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்தும் செயல்பாட்டிற்கு வர இருக்கிறது. இவற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு 750 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தூத்துக்குடி அனல் மின் திட்டப் பணிகளும், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆமை வேகத்திலேயே சென்றன. இந்தப் பணிகளை நான் துரிதப்படுத்தியதன் விளைவாக, தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டு அலகுகள் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் உற்பத்தியைத் துவங்க உள்ளன. இதன் மூலம், 387 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும்.

நான் மேலே சொன்ன அனல் மின் திட்டங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய 3,312 மெகாவாட் மின்சாரத்தில், 375 மெகாவாட் மின்சாரத்தை நாம் தற்போது பெற்று வருகிறோம். மீதமுள்ள 2,937 மெகாவாட் மின்சாரத்தில், இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் 2,175 மெகாவாட் மின்சாரம்

நமக்குக் கிடைக்க இருக்கிறது. எஞ்சியுள்ள, 762 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைத்துவிடும்.

மேலும், கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்தும்; நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்கத் திட்டத்திலிருந்தும் மின்சாரம் நமக்கு கிடைக்கும்.

இது மட்டுமல்லாமல், இந்த ஆண்டு, ஜூன் மாதத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள தனியார் மின் நிலையங்களிலிருந்து, 900 மெகாவாட் மின்சாரமும்; மூன்று ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் வெளி மாநிலங்களிலிருந்து 500 மெகாவாட் மின்சாரமும் பெற்றிட ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

தற்போது எடுக்கப்பட்டுவரும் போர்க்கால நடவடிக்கையின் காரணமாக, தற்போது தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை கணிசமான அளவு குறைந்து இருக்கிறது. ஜூன் மாதத்திலிருந்து மின் பற்றாக்குறை மேலும் குறைந்து, இந்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் மின் பற்றாக்குறையைத் தீர்ப்பது பற்றி எவ்வித உறுதிமொழியும் அளிக்கப்படவில்லை என கருத்துத் தெரிவித்தவர்கள் இந்த பதிலின் மூலம் திருப்தி அடைவார்கள் என நான் கருதுகிறேன்.

எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம்; 1,320 (2 x 660) மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் நிலையத் திட்டம்; 1,320 (2 x 660) மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையத் திட்டம் போன்ற புதிய மின் திட்டங்களுக்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் மார்ச் மாதம் கோரப்படும். இது மட்டுமல்லாமல், 3,000 மெகாவாட் சூரிய மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறனில் கிட்டத்தட்ட 30 விழுக்காடு மின் நிறுவு திறன் எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. 1991 முதல் 1996 வரையிலான எனது முதல் ஆட்சிக் காலத்தில் 1,330 மெகாவாட் அளவுக்கும்; 2001 முதல் 2006 வரையிலான எனது 2ஆவது ஆட்சிக் காலத்தில் 2,518 மெகாவாட் அளவுக்கும்

கூடுதலாக மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டது. அதே சமயத்தில், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 520 மெகாவாட் அளவுக்கும்; 2006 முதல் 2011 வரையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 206 மெகாவாட் அளவுக்கும் மட்டுமே கூடுதலாக மின்நிறுவு திறன் சேர்க்கப்பட்டுள்ளது.

உண்மை நிலை இவ்வாறிருக்க, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 11,700 கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்குச் செலவிடப்பட்டதாகவும்; எனது முந்தைய ஆட்சிக்காலத்தில் வெறும் 700 கோடி ரூபாய்க்கு மட்டுமே மின் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவித்து இருந்தார்.

உண்மைநிலை என்னவென்றால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக்காலத்தில், தமிழ்நாடு மின்சாரவாரியம் 35,000 கோடி ரூபாய் அளவுக்கு பல வழிகளில் கடன் பெற்று, அதில் 7,858 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே மின் திட்டங்களுக்குச் செலவழித்துள்ளது. மீதியுள்ள தொகை வெளிமாநிலங்களிலிருந்து மின் கொள்முதல் செய்வதற்காகவும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகவும் செலவழிக்கப்பட்டது.

ஆனால், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 3,654 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் பெறப்பட்டு; 907 கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல், 2001ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, மின்சார வாரியமே திவாலாகும் சூழ்நிலையில் இருந்தது என்பதையும், இதை சரி செய்வதற்கும், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு முந்தைய தி.மு.க. அரசு நிலுவையில் வைத்திருந்த பாக்கித் தொகைகளைத் திரும்பச் செலுத்துவதற்குமே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை எனது அரசு அப்போது செலவழித்தது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் எனது ஆட்சிக் காலத்திலேயே, 2,500 மெகாவாட் அளவுக்கு மின் திட்டங்கள் துவக்கப்பட்டிருந்ததால், 7,000 கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்குச் செலவழிக்க வேண்டிய

நிலை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுக்கு ஏற்பட்டது என்பதையும்; அதே சமயத்தில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது போல், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்த ஒரு மின் திட்டமும் துவக்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற போதும், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் சுமையில் சிக்கித் தவித்தது. 31.03.2011 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் குவிந்த இழப்பு 40,000 கோடி ரூபாயையும்; வங்கி மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் 44,000 கோடி ரூபாயையும் தாண்டியிருந்தது. இது தவிர, தனியார் மின் உற்பத்தியாளர் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை 5,000 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது.

இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில், கடந்த 20 மாத காலத்தில் 3,000 கோடி ரூபாய்க்கு மேல் மின் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 3,000 மெகாவாட் அளவுக்கு நமக்கு மின்சாரம் கிடைக்க இருக்கிறது என்பதையும் இந்தத் தருணத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சட்டம் ஒழுங்கைப் பொறுத்த வரையில் சமூக விரோதிகளின் ஆட்சி என்ற நிலை மாறி சட்டத்தின் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு நண்பனாகவும், சமூக விரோதிகளுக்குச் சிம்மச் சொப்பனமாகவும் காவல் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. சில சமூக விரோதிகளின் கையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த காவல் துறை, கடந்த 20 மாதங்களாகச் சுதந்திரமாக செயல்பட்டு வருகிறது. கொலை, கொள்ளை மற்றும் சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர், ஆட்களைக் கடத்தி பணம் பறிப்போர், மணல் மற்றும் ரேஷன் அரிசி கடத்துவோர், கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2012ஆம் ஆண்டு 2,173 நபர்கள் பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

கடந்த 2005ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மாநிலத்தில் 1,366 கொலை வழக்குகளும், 74 ஆதாயக் கொலை வழக்குகளும், 437 கொள்ளை வழக்குகளும், 3,738 கன்னக்களவு வழக்குகளும் தாக்கலாகியிருந்தன. ஆனால், கடந்த திமுக ஆட்சியின் இறுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு 1,715 கொலை வழக்குகளும், 153 ஆதாயக் கொலை வழக்குகளும், 1,817 கொள்ளை வழக்குகளும், 4,715 கன்னக்களவு வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. இந்த 5 ஆண்டு காலத்தில், திமுக ஆட்சியில் கொலை வழக்குகள் 25.5 சதவீதமும், ஆதாயக் கொலை 106.75 சதவீதமும், கொள்ளைகள் 315.8 சதவீதமும், கன்னக்களவு 26 சதவீதமும் அதிகரித்துள்ளது. அதாவது, கொலைகள் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 5.1 சதவீதம் கூடியுள்ளன. ஆதாயக் கொலைகள் சராசரியாக 21.4 சதவீதம் கூடியுள்ளன. கொள்ளைகள் சராசரியாக 63 சதவீதம் கூடியுள்ளன. கன்னக்களவு வழக்குகள் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 5.2 சதவீதம் கூடியுள்ளன.

திமுக ஆட்சியில் கொலைகளின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 5.1 சதவீதம் கூடியுள்ளது. ஆனால் 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2012இல் கொலைகளின் எண்ணிக்கை 3.37 சதவீதம்தான் உயர்ந்துள்ளது. கொலைகள் பொதுவாக, தனிப்பட்ட முன்விரோதம், சொத்துப் பிரச்சினை, அல்லது திடீர் கோபத்தினால் நடக்கும் தாக்குதல்களின் விளைவாக நிகழ்கின்றன. இவற்றை முற்றிலும் தடுப்பதென்பது இயலாத காரியம். மக்கள் தொகை கூடுதலுக்கேற்ப கொலைகளின் எண்ணிக்கை சற்று உயர்ந்து கொண்டு இருக்கும். இருந்த போதிலும், திமுக ஆட்சியுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டில் கொலைகளின் அதிகரிப்பு 2 சதவீதம் குறைவாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

காவல் துறையின் நடவடிக்கைகளால் ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியவை ஆதாயக் கொலைகள் ஆகும். 2010ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 153ஆக இருந்தது. இது 2012ஆம் ஆண்டு 137ஆக குறைந்துள்ளது. ஆனால், கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியின் போது ஆண்டிற்கு சராசரி 21.4 சதவீதம் ஆதாயக்

கொலைகள் கூடியுள்ளன என்பதுதான் உண்மை.

2010ஆம் ஆண்டு 4,715 கன்னக்களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஆனால் 2012ஆம் ஆண்டு, 4,457 கன்னக்களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012ஆம் ஆண்டு இது 5.8 சதவீதம் குறைந்துள்ளது. அதாவது, ஒரு வருடத்திற்கு 2.9 சதவீதம் குறைந்துள்ளது. ஆனால், திமுக ஆட்சியில் கன்னக்களவு வழக்குகள் சராசரியாக ஆண்டுதோறும் 5.1 சதவீதம் அதிகரித்துள்ளன.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, நமது மாநிலத்தில் 2011ஆம் ஆண்டு தாக்கலான குற்றங்களை மற்ற மாநிலங்களில் தாக்கலான குற்றங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் தாக்கலான குற்றங்களின் எண்ணிக்கை மற்றும் குற்றவிகிதம் குறைவாக உள்ளது தெரியவரும். உதாரணத்திற்கு, 2011ஆம் ஆண்டு கொலை வழக்குகள் ஆந்திராவில் 2,808–ம், பீகாரில் 3,198–ம், மகாராஷ்டிராவில் 2,818–ம், மத்திய பிரதேசத்தில் 2,511–ம், மேற்குவங்கத்தில் 2,109–ம் மற்றும் உத்திரப்பிரதேச மாநிலத்தில் 4,951–ம், தாக்கலாகியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் 1,877 கொலை வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன.

பொதுவாக, குற்ற நிகழ்வுகளை ஒப்பிடும்போது குற்ற விகிதம் என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படுகிறது. இது, 1இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பதன் குறியீடு ஆகும். 2011ஆம் ஆண்டு மாநில குற்ற விகிதம் 267.4 ஆகும். ஆனால், இது கேரளாவில் 515.6 ஆகவும், புதுச்சேரியில் 350.6 ஆகவும், புது டெல்லியில் 318.5 ஆகவும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் 299 ஆகவும் உள்ளது.

காவல் துறையினர் குற்ற வழக்குகளில் திறமையாகப் புலன் விசாரணை செய்து, பல முக்கிய கொலை, கொள்ளை வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து, களவு போன பொருட்களை மீட்டு வருவதுடன்; தொடர்ந்து குற்றம் புரியும் குற்றவாளிகளைத் தடுப்புக் காவலில் வைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு, 2,173 நபர்கள் பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். காவல்துறையினர் குற்றவாளிகளைக் கைது செய்து களவு போன சொத்துக்களை மீட்பதுடன்; குற்றவாளிகள் மீண்டும் பிணையில் வெளிவந்து குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள் என்பதே உண்மை.

குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் குறித்தும் மாநில உளவுத் துறையினர் முன்கூட்டியே அளிக்கும் தகவல்களின் அடிப்படையில், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை மாவட்டக் காவல்துறையினர் கைது செய்து வருவதுடன், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழ வாய்ப்புள்ள இடங்களில், காவல் துறையினர் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து அமைதிக் குழுக்களை ஏற்படுத்தி, பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி, காரணங்களைக் கண்டறிந்து, பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

காவல் துறையினரின் திறமையை மேலும் பலப்படுத்தும் வகையில், காவல்துறையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய பணியிடங்களைத் தோற்றுவித்தும், காவல் பணிகளுக்குத் தேவையான வாகன வசதி மற்றும் அதி நவீனக் கருவிகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து தந்தும், காவல்துறையை ஒரு ஆற்றல் மிக்க துறையாக மாற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்து வருகிறேன்.

சட்டம் – ஒழுங்குப் பராமரிப்பு குறித்த உண்மையான அளவுகோல் மாநிலத்தில் சட்டத்தின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பொறுத்தும்; பொதுமக்களிடையே தனி மனிதப் பாதுகாப்பு மற்றும் தங்களது சொத்துக்கள் மற்றும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்தும்; மற்றும் சட்டத்தை அமல்படுத்தும் காவல்துறையினரின் சுதந்திரமான செயல்பாட்டைப் பொறுத்தும்

மட்டுமே அமையும். ஆங்காங்கு நடைபெறும் ஒரு சில குற்ற நிகழ்வுகளை வைத்து, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமையை மதிப்பீடு செய்வது என்பது சரியான அணுகுமுறை அல்ல.

நான் அவ்வப்போது அளித்து வரும் அறிவுரைகளின் பேரிலும், ஊக்கத்தின் பேரிலும், காவல் துறையினர் சிறப்பாகச் செயல்பட்டு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரித்து வருவதோடு; குற்றத் தடுப்பு மற்றும் குற்றங்களைக் கண்டுபிடித்தல் போன்றவற்றிலும் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றனர். கடந்த 20 மாதங்களாக மக்களைப் பாதிக்கும் வகையில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏதுமின்றி, தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, பயங்கரவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளும்; இடதுசாரி தீவிரவாத செயல்களும்; தமிழகத்தில் வேரூன்றா வண்ணம் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

எனவே, மாநிலத்தில் குற்றங்கள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், நிலம் மற்றும் கட்டட உரிமையாளர்கள் சமூக விரோதக் கும்பல்களால் மிரட்டப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் அடிமாட்டு விலைக்கு சமூக விரோதக் கும்பல்களால் வாங்கப்பட்டன. போலி ஆவணங்கள் தயார் செய்து, அடாவடிச் செயல்கள் மூலமும் நிலங்கள் பறிக்கப்பட்டன. மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், இதற்கென காவல் துறையில் நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளை ஏற்படுத்தினேன். இந்தப் பிரிவுகள், நில அபகரிப்பாளர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகின்றன.

நில அபகரிப்பு தொடர்பாக, 28.01.2013 வரை பொது மக்களிடமிருந்து 53,777 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இவை குறித்து 1,673 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,943 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகளில் இதுவரை 1,137 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 2,711 ஏக்கர் நிலமும் மற்றும் 10,07,448 சதுர அடி வீட்டு மனைகளும் அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களிடம்

கொடுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில், காவல் துறைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, தக்க அறிவுரைகளை வழங்கி, குற்றங்கள் நிகழாவண்ணம் தடுப்பதிலும்; பொதுமக்களின் நலன்களைக் காப்பதிலும்; பொதுஅமைதியைப் பேணிக் காப்பதிலும் நான் தனிக் கவனமும், அக்கறையும் செலுத்தி வருகிறேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த ஆளுநர் உரையிலே புதுத் திட்டங்கள் எதுவும் இல்லை என்று சில உறுப்பினர்கள் குறைபட்டுக் கொண்டுள்ளனர். நான் அவர்களுக்கு ஒன்றினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான வாக்குறுதிகள், திட்டங்களாக இதற்கு முன்னர் இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு ஆளுநர் உரைகளில் இடம் பெற்றிருந்தன. அந்தத் திட்டங்களின் சாதனைகள், அவற்றின் மூலம் மக்கள் அடைந்துள்ள பயன்கள் போன்றவை இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டு இருக்கின்றன. இதுவன்றி, இந்த அரசு தொடர்ந்து கடைபிடிக்க உள்ள கொள்கைகளும் குறிப்பிடப்பட்டு உள்ளன.

முதன்மைத் துறையில், பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஐந்து விழுக்காடு வளர்ச்சியை எய்துதல்; கூட்டுறவுச் சங்கங்கள் வலிமையான ஜனநாயக அமைப்புகளாகச் செயல்படும் வகையில் தேர்தல் நடத்துதல்; புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான நிலம் கிடைப்பது பற்றிய கொள்கை; நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான கொள்கை எனப் பல்வேறு கொள்கை முடிவுகள் இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்பதையும்; இதற்கான திட்டங்களும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த ஆளுநர் உரையில் எந்தவிதக் கொள்கை முடிவுகளும் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது.

2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுத் தேர்தலின்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையிலே 177 வாக்குறுதிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிக்கும் வகையில், தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை என்னும் புதுத் துறை உருவாக்கப்பட்டது.

வாக்குறுதிகளாக தரப்பட்ட 177 சிறப்புத் திட்டங்களில், 140 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 21 திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 16 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் தொழிற் புரட்சியை உருவாக்கும் வகையில், 05.11.2012 அன்று ஒரே நாளில் நான்கு FORTUNE 500 நிறுவன0ங்கள் உட்பட 12 நிறுவனங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வுஒப்பந்தங்களில்கையெழுத்திட்டுள்ளது. இந்த நிறுவனங்கள், 20,925 கோடி ரூபாயைத் தமிழகத்தில் முதலீடு செய்ய உள்ளன. இதன் மூலம், 1,36,855 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக் கிடைக்கும். இதே போன்று, 14.05.2012 அன்று ஐந்து நிறுவனங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனங்கள் 5,700 கோடி ரூபாய்க்கு மேல் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய இருக்கின்றன. இதன் மூலம், சுமார் 9,500 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். மொத்தத்தில், மேற்படி 17 நிறுவனங்கள் 26,625 கோடி ரூபாயைத் தமிழகத்தில் முதலீடு செய்ய உள்ளன. இதன் மூலம் 1,46,355 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக் கிடைக்கும். தொழில் துறையில், தொலைநோக்குத் திட்டம் 2023இல் குறிப்பிட்டுள்ள குறிக்கோளினை அடையும் வண்ணம், உரிய நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அரசு

வேலைவாய்ப்பை பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பகங்கள் மூலம் அரசுத் துறைகளில் 54,420 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம், 13,376 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்கள் மற்றும் 205 உதவி ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரிகளில் 64,435 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களும்; 16,793 சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களும்; 11,803 அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

அரசு சார்பு நிறுவனங்கள் என்று எடுத்துக் கொண்டால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 16,963 பணியிடங்களும்; கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 6,307 பணியிடங்களும்; தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 5,489 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. மொத்தத்தில் கடந்த 20 மாதங்களில், கிட்டத்தட்ட 2 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி இருக்கிறோம்.

மேலும், 22,269 ஆசிரியர் பணியிடங்களும், 1,091 காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களும், அரசுத் துறைகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு 10,105 பணியிடங்களும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 4,042 பணியிடங்களும், கூட்டுறவு வங்கிகளில் 3,607 பணியிடங்களும் நிரப்பப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விலைவாசி உயர்வைப் பற்றி பேசினார்கள். அதிகரித்துக்கொண்டே வரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் மாநில அரசுக்கு ஓரளவு பங்கு உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், பெரும்பாலும் மத்திய அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளைச் சார்ந்தே பொருட்களின் விலை ஏறுகிறது. தற்போது ஏறிக்கொண்டே வரும் விலைவாசி உயர்விற்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் முக்கியக் காரணம் என்பதை இந்தத் தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, மத்திய அரசினால் அவ்வப்போது

அறிவிக்கப்படும் பெட்ரோல், டீசல் விலை உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விற்கு அடித்தளமாக விளங்குகிறது. அண்மையில், டீசல் விலையை நிர்ணயம் செய்யும் உரிமையை எண்ணெய் நிறுவனங்களுக்கே வழங்கி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. டீசல் விலை உயர்வு காரணமாக, வாகனக் கட்டணம் தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்து கொண்டு வருகிறது. இதன் விளைவாக, பொருட்களின் விலையும் ஏறிக் கொண்டே இருக்கிறது. பெட்ரோல், டீசல் விலைக் கொள்கையில், மத்திய அரசு மாற்றம் கொண்டு வந்து அதனைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியும்.

தற்போது, சர்வதேச பெட்ரோல் மற்றும் டீசல் விலைக்கேற்ப இந்தியாவின் பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த முறை தவறானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் நாட்டிற்குத் தேவையான கச்சா எண்ணெயில், கிட்டத்தட்ட 25 விழுக்காடு கச்சா எண்ணெய் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள 75 விழுக்காடு கச்சா எண்ணெய்தான் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இவ்வாறு கிடைக்கப்படும் கச்சா எண்ணெயைச் சுத்திகரித்து, பெட்ரோல் மற்றும் டீசலாக எண்ணெய் நிறுவனங்கள் விற்கின்றன. ஆனால், இதன் அடிப்படையில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கப்படவில்லை.

தற்போதைய டீசல் இறக்குமதி சமநிலை விலை, அதாவது Import Parity Price என்னவாக இருக்கும் என்பதையும்; ஏற்றுமதி சமநிலை விலை, அதாவது Export Parity Price என்னவாக இருக்கும் என்பதையும் கணக்கிட்டு; இந்த இரண்டுக்குமான குறிப்பிட்ட சதவிகித அடிப்படையில், தொழில் சமநிலை விலை, அதாவது Trade Parity Price கணக்கிடப்பட்டு; அதன் அடிப்படையில், இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கப்படுகிறது. எனவேதான், அதற்குக் குறைவாக விற்கப்படும் விலையை நஷ்டம் என்று சொல்லாமல், குறை பலன், அதாவது under recovery என்று கூறுகின்றனர்.

இந்த முறையை ரத்து செய்துவிட்டு, இந்தியாவில்

கச்சா எண்ணெயை எடுப்பதற்கு ஆகும் செலவு; அதை டீசலாகவும், பெட்ரோலாகவும் சுத்திகரிக்க ஆகும் செலவு; வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அதை சுத்திகரிக்க ஆகும் செலவு; நிலையான அன்னியச் செலாவணி மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை நிர்ணயம் செய்தால், குறைவான விலையில் பெட்ரோல் மற்றும் டீசல் மக்களுக்குக் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், அத்தியாவசியப் பொருட்களின் விலையும் கட்டுக்குள் இருக்கும். எனவே, தற்போது ஏறிக் கொண்டே வரும் விலைவாசி உயர்விற்குக் காரணம் மத்திய அரசின் தவறான கொள்கைதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு வாரத்திற்கு முன்பு கூட டீசல் விலை மாதம் 50 பைசா வீதம் உயர்த்தப்படும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தெரிவித்து இருக்கிறார். இதற்குக் காரணம், எண்ணெய் நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதுதான் என்றும் கூறியிருக்கிறார். எண்ணெய் நிறுவனங்களின் ஆண்டு நிதிக் கணக்குகளைப் பார்த்தாலே, இவை அனைத்தும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் லாபத்தில் இயங்கி வருகின்றன என்பது தெரிய வரும். இதனுடைய பங்குகளும் நல்ல விலையில் தான் இருக்கின்றன.

உண்மை நிலை இவ்வாறிருக்க, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், ஆகியவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்திக் கொண்டே இருக்கிறது. இதில் உள்ள மற்றுமொரு அநியாயம் என்னவென்றால், மொத்தமாக டீசல் வாங்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான டீசல் விலை 11 ரூபாய் 81 காசு அளவிற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதாவது, லாப நோக்கமின்றி, சேவை மனப்பான்மையுடன் செயல்படும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான டீசல் விலையை ஒரேயடியாக 11 ரூபாய் 81 காசு என்று மத்திய அரசு உயர்த்தியிருப்பதில் என்ன நியாயம்? எண்ணெய் நிறுவனங்கள் டீசலுக்கான விலையை சந்தை நிலவரப்படி நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற முடிவு தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியின் மகனும், மத்திய அமைச்சருமான திரு. மு.க. அழகிரி உறுப்பினராக இருக்கும் அரசியல்

விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்த டீசல் விலை உயர்வுக்கான முடிவை எடுத்த அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், தனது எதிர்ப்பைத் தி.மு.க. தெரிவிக்காமல் டீசல் விலை உயர்ந்த பிறகு, இந்த உயர்வை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒப்புக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டார் திரு. கருணாநிதி.

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசின் இந்த இரட்டை டீசல் விலைக் கொள்கை காரணமாக 1,000 கோடி ரூபாய் அளவுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, சில்லரை விலையில் பெட்ரோல் பங்குகளில் அரசுப் பேருந்துகளுக்கு டீசல் நிரப்பப்படுகிறது. இதிலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 1 லிட்டர் டீசலுக்குக் கூடுதலாக கிட்டத்தட்ட 1 ரூபாய் செலுத்த வேண்டி உள்ளது.

ஆனால், மத்திய அமைச்சர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில், மொத்தமாக டீசல் கொள்முதல் செய்பவர்களுக்கு மானியம் அளிக்காததன் நோக்கம், இவைகள் வியாபார நோக்குடன் செயல்படும் நிறுவனங்கள் என்றும்; சந்தை விலையைத் தாங்கக்கூடிய வலிமை அவைகளிடம் உள்ளது என்றும்; இல்லையென்றாலும், அந்தச் சுமையை வாடிக்கையாளர் மீது சுமத்திவிடலாம் என்றும் கூறியிருக்கிறார். அதாவது, பேருந்துக் கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்று கூறியுள்ளார் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லி அவர்கள்.

வேளாண் உற்பத்தி செய்யப் பயன்படும் இடு பொருட்களின் விலையை அடிப்படையாகக் கொண்டே, விளை பொருட்களின் கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது. மத்திய அரசின் தவறான உர மானியக் கொள்கை காரணமாக, இடு பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்துவிட்டது. உதாரணமாக, 2010ஆம் ஆண்டு 486 ரூபாய் என்றிருந்த 50 கிலோ டி.ஏ.பி. உரத்தின் விலை, 2012ஆம் ஆண்டு 1,200 ரூபாயாகவும்; 50 கிலோ எம்.ஓ.பி. உரத்தின் விலை 231 ரூபாயிலிருந்து 840 ரூபாயாகவும்; 50 கிலோ காம்ப்ளக்ஸ் உரத்தின் விலை

374 ரூபாயிலிருந்து 1,110 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது. இந்த தவறான உர மானியக் கொள்கைக்கேற்ப கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவது, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை, வட்டிவீதக் கொள்கை ஆகியவைதான். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே விலைவாசி உயர்விற்கு வழி வகுக்கின்றன என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, குறிப்பாக தி.மு.க. உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அரசைப் பொறுத்த வரையில், விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொருட்கள் கடத்தப்படுவதையும், பதுக்கப்படுவதையும் தடுத்து வருகிறது. இது மட்டுமல்லாமல், நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களான உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா, சர்க்கரை போன்ற பொருட்கள் குறைந்த விலையில் அளிக்கப்பட்டு வருகின்றன. விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, வெளிச் சந்தையில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், விலை நிலைநிறுத்தல் நிதி, அதாவது, Price Stabilisation Fund ஒன்றினை ஏற்படுத்தி, சன்ன ரக அரிசி ஒரு கிலோ 25 ரூபாய்க்கும், மிக சன்ன ரக அரிசி ஒரு கிலோ 31 ரூபாய்க்கும் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், இடம் பெயர்ந்து இலங்கை முகாம்களில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும்; அவர்கள் சிங்களர்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளுடன் வாழவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. இந்த நிலை ஏற்படும் வரை இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும்; இலங்கையில் இனப் படுகொலையை நிகழ்த்தி போர்க்குற்றம் புரிந்தவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த, ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். இது தொடர்பாக,

ஏற்கெனவே இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் மீது, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு வலுவான தீர்மானத்தைக் கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக, மத்திய அரசு வாக்களிக்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரை தொடர்ந்து வலியுறுத்தினேன். முதலில், அதை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசாங்கம், பின்னர் எனது தொடர் வலியுறுத்தல் காரணமாக அந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. இருப்பினும், அந்தத் தீர்மானத்தின் வலுவை இழக்கச் செய்தவர் பாரதப் பிரதமர் அவர்கள். இது குறித்து பாரதப் பிரதமர் இலங்கை அதிபருக்கு எழுதிய கடித்தில், "… Your Excellency would be aware that we spared no effort and were successful in introducing an element of balance in the language of the resolution." என்று கூறி இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நீர்த்துப் போன தீர்மானம் மீதே இலங்கை அரசு இன்னமும் நடவடிக்கை எடுக்காத சூழ்நிலையில், மீண்டும் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவில் அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டு வர உள்ளது என்ற செய்தி வந்துள்ளது. இது போன்றதொரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில், அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டு வருவது ஒரு புறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மத்திய அரசை நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இதே போன்று, இலங்கைக் கடற்படையினரின் கொடூரச் செயல்களாலும், கொடும் தாக்குதல்களாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பாவித் தமிழக மீனவர்களைப்

பாதுகாப்பதில், மத்திய அரசு தொடர்ந்து அலட்சியப் போக்கினைக் காட்டி வருகிறது. இந்திய மீனவர்களின் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறும், அவர்களிடம் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறும் இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாக விளங்கும் காவேரி நதிநீர்ப் பிரச்சினை பற்றி எடுத்துரைத்தார்கள். இந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்துள்ளேன்.

2012ஆம் ஆண்டு துவக்கத்தில், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கங்களிலிருந்து கர்நாடகம் தனது கோடைப் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிட்டவுடன், இந்தச் செயல் தமிழகத்தின் குறுவைச் சாகுபடியை கடுமையாகப் பாதிக்கும் எனத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் 21.03.2012 அன்று எனது உத்தரவின் பேரில், தமிழக அரசால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கை காரணமாக, தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய தண்ணீரின் அளவு கணிசமாகக் குறையும் என்று சுட்டிக்காட்டி, காவேரி நதிநீர் ஆணையத்தை விரைந்து கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாரதப் பிரதமரைத் தொடர்ந்து வலியுறுத்தினேன்.

பாரதப் பிரதமர் வழக்கம் போல் மவுனம் சாதித்ததன் காரணமாக, காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தினைக் கூட்ட உத்தரவிடக் கோரி, தமிழகத்தின் சார்பில் 21.07.2012 அன்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனையடுத்து, வேறு வழியின்றி கிட்டத்தட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு, 19.09.2012 அன்று காவேரி நதிநீர் ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டது. காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தினைக் கூட்டுவதற்கே மத்திய அரசு தயக்கம் காட்டுகின்ற நிலைமை தான் தற்போது நிலவுகிறது. இப்படிப்பட்ட ஒரு மத்திய அரசைத் தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்சியான தி.மு.க. தாங்கிப் பிடித்துக்

கொண்டிருக்கிறது.

9 ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டப்பட்ட காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில், இடர்ப்பாடுப் பங்கீட்டு முறையின்படி ஏற்பட்ட குறைபாட்டு நீரான 48 டி.எம்.சி. அடி தண்ணீரை, ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி தண்ணீர் வீதம் 24 நாட்களுக்கு திறந்துவிடவும்; அதன் பின்னர், காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, சம்பா சாகுபடிக்குத் தண்ணீரைத் தொடர்ந்து திறந்துவிடவும் கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு நான் வலியுறுத்தினேன். கர்நாடகத்தின் சார்பில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனது தொடர் வலியுறுத்தல் காரணமாக, 20.09.2012 முதல் 15.10.2012 வரை, நாள் ஒன்றிற்கு 9,000 கன அடி நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று பாரதப் பிரதமர் உத்தரவிட்டார். ஆனால், கர்நாடகம் இதனை ஏற்க மறுத்துவிட்டது. இதனையடுத்து, ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி வீதம், 24 நாட்களுக்கு 48 டி.எம்.சி. அடி நீரினை திறந்துவிடுமாறு எனது உத்தரவின் பேரில் தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 25.09.2012 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம் பிறப்பித்த உத்தரவினைச் செயல்படுத்துமாறு உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி 29.09.2012 அன்று தண்ணீரை விடுவித்த கர்நாடகம், 08.10.2012 அன்று தன்னிச்சையாக தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்திவிட்டது. இதனை அடுத்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 10.10.2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் விடுவிக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம், தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய தண்ணீர் குறித்து முடிவெடுக்குமாறு, காவேரிக் கண்காணிப்புக் குழுவிற்கு அவ்வப்போது உத்தரவிட்டது. இதனையடுத்து, காவேரிக் கண்காணிப்புக் குழு கூட்டப்பட்டு தமிழகத்திற்கு அளிக்க வேண்டிய நீரின் அளவை அவ்வப்போது அறிவித்தது.

பின்னர், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி, இது குறித்து பெங்களூர் சென்று, கர்நாடக முதலமைச்சருடன் 29.11.2012 அன்று நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். இந்தப் பேச்சுவார்த்தையின் போது, இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி மேட்டூர் அணைக்கு வந்து சேர வேண்டிய நீரில், 53.4 டி.எம்.சி. அடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்று தெரிவித்து, சம்பா பயிரைக் காப்பாற்றும் வகையில், ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 15 நாட்களுக்கு, 30 டி.எம்.சி. அடி தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்றும், மீதமுள்ள 23.4 டி.எம்.சி. அடி தண்ணீரை 2012 டிசம்பர் மாத இறுதிக்குள் திறந்துவிட வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். ஆனால், கர்நாடக முதலமைச்சர் ஒரு சொட்டு நீர் கூட விட முடியாது என்று அறிவித்துவிட்டார். முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியோ, இங்கிருந்து கொண்டு "தமிழக முதலமைச்சர் என்ன கேட்டார்? அவர்கள் என்ன சொன்னார்கள்? மறுத்து விட்டார்களா? அல்லது இயலவில்லை என்று சொன்னார்களா?" என்று விதண்டாவாதம் செய்து கொண்டிருந்தார்.

கர்நாடக அரசு தண்ணீர் தர மறுத்ததையடுத்து, மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு, 05.12.2012 முதல் 09.12.2012 வரையில், நாளொன்றுக்கு, 10,000 கன அடி தண்ணீர் திறந்துவிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டால்தான், அதற்கு ஒரு சட்ட அங்கீகாரம் கிடைக்க வழிவகை ஏற்படும். அதன் பின்னர், இறுதி ஆணை தெரிவித்துள்ள காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், காவேரியில் நமக்குள்ள உரிமையை நிலைநாட்ட இயலும். காவேரி நீர்ப் பிடிப்பு பகுதியில் போதிய மழை

இல்லாவிட்டாலும், இடர்ப்பாட்டுக் காலப் பங்கீட்டு முறைப்படி, நமக்கு உரிய தண்ணீர் கிடைக்கப் பெறும். கர்நாடகம், தனது கோடைக்கால பாசனத்திற்கு, தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்துவிட இயலாது. எனவேதான், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டதிலிருந்து, அதனை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

காவேரி நடுவர் மன்றம், தனது இடைக்கால ஆணையை 25.06.1991 அன்று வழங்கியபோது, அதனை ஏற்க கர்நாடக அரசு மறுத்தது. அப்போது நான், கடிதங்கள் வாயிலாக மத்திய அரசை வற்புறுத்தியதை அடுத்து, உச்ச நீதிமன்றக் கருத்தின் அடிப்படையில், கர்நாடக அரசு தாக்கல் செய்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோதிலும், 10.12.1991 அன்று காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை எனது இடைவிடா முயற்சிகளால் மத்திய அரசு அதன் அரசிதழில் வெளியிட்டது.

இதேபோன்று, காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை கர்நாடகம் மதித்துச் செயல்படுத்த ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று 14.05.1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது நடைபெற்ற வாதத்தில் இடைக்கால ஆணையை செயல்படுத்த ஒரு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மத்திய அரசால் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தான், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரிக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டன.

காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதற்கும், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரிக் கண்காணிப்புக் குழு ஆகியவை அமைக்கப்பட்டதற்கும் எனது தலைமையிலான அப்போதைய தமிழக அரசின் பகீரத முயற்சிகளும், நடவடிக்கைகளும் தான் காரணம் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

2007ஆம் ஆண்டு காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளிவந்தபோது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வந்தது. மத்தியிலும், தி.மு.க. அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கூட்டணி அரசு தான் ஆட்சியில் இருந்தது. ஆனால், காவேரியிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்கோ அல்லது காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கோ எவ்வித நடவடிக்கையையும் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி எடுக்கவில்லை.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இதுகுறித்து பாரதப் பிரதமரிடம் கோரிக்கை வைத்தேன். பின்னர், தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது. காவேரி நதிநீர்ப் பிரச்சினையை விசாரித்து வரும் உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடாதது குறித்து கேள்வி எழுப்பியது. காவேரி கண்காணிப்புக் குழுவும் மத்திய அரசிதழில் வெளியிட பரிந்துரை செய்தது. மத்திய சட்ட அமைச்சகமும் ஒப்புதல் அளித்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்தது. இருப்பினும், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்படவில்லை.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட கேட்டுக் கொள்ள, 17.12.2012 அன்று பாரதப் பிரதமரை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனது அறிவுரையின் பேரில் சந்தித்ததாகத் தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியே தெரிவித்துஇருந்தார். ஆனால்,இவர்கள்பிரதமரைசந்தித்துஎன்ன சொன்னார்கள் என்பது தெரியவில்லை. எழுத்துபூர்வமாகவும், எதையும் தெரிவித்ததாகத் தெரியவில்லை. எந்த விதக் கடிதமும் இதுகுறித்து தி.மு.க. தரப்பிலிருந்து பாரதப் பிரதமருக்கு எழுதப்பட்டதாகவும் தெரியவில்லை. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, தாமதத்திற்குக் காரணமே தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாரதப் பிரதமருடனான சந்திப்பு தானோ என்ற ஐயம் அனைவர் மத்தியிலும் எழுந்தது.

இந்தச் சூழ்நிலையில், 04.02.2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் காவேரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணைக்கு

வந்தபோது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை 20.02.2013–க்குள் மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 05.02.2007 அன்று வழங்கப்பட்ட இறுதி ஆணை சரியாக 6 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளியிடப்பட உள்ளது. இது எனது தலைமையிலான அரசின் தொடர் வலியுறுத்தலுக்கும், தீவிர, இடைவிடாத, அயராத முயற்சிக்கும் கிடைத்த வெற்றி ஆகும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில், மிகப் பெரிய போராட்டங்களுக்குப் பிறகு ஜனவரி 2013 வரையில், 63 டி.எம்.சி. அடி அளவுக்குத் தண்ணீர் பில்லிகுண்டுலு நீரளவு நிலையத்திலிருந்து தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த வழக்கு 04.02.2013 அன்று உச்ச நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வந்தபோது, சம்பந்தப்பட்ட டெல்டா மாவட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் வகையில் ஒரு வல்லுநர் குழுவை அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மத்திய நீர் ஆணையத்திற்கு உத்தரவிட்டது. மேலும், 2 டி.எம்.சி. அடி தண்ணீரை சம்பா பாசனத்திற்காக மேட்டூரிலிருந்து தமிழகம் விடுவிக்க வேண்டும் என்றும், இதனை கர்நாடகம் தமிழகத்திற்கு ஈடுசெய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவிற்கிணங்க, 05.02.2013 அன்று ஆய்வினை மேற்கொண்ட வல்லுநர் குழு, தனது அறிக்கையினை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

இந்த வழக்கு 07.02.2013 அன்று விசாரணைக்கு வந்தபோது, வல்லுநர் குழுவின் பரிந்துரைக்கேற்ப, 2.44 டி.எம்.சி. அடி தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடையும் வகையில் கர்நாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் மூலம் 1 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் காப்பாற்றப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், நமக்குத் தர வேண்டிய தண்ணீரை முறைப்படி

கர்நாடகம் விடுவிக்காததாலும்; தமிழகத்தில், பருவமழை பொய்த்துவிட்டதாலும்; வேளாண் உற்பத்தியில், நாம் நினைத்த அளவுக்கு, சாதனையை எய்த முடியவில்லை.

2011–2012ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி முன் எப்போது இல்லாத அளவாக 101.51 இலட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கை எய்தி சாதனை படைத்தது. இதற்காக, மத்திய அரசின் விருதும் நமக்குக் கிடைத்துள்ளது. நிச்சயமாக வரும் ஆண்டு, இயற்கையின் கருணையோடு உணவு தானிய உற்பத்தியில் மீண்டும் ஒரு சாதனையைத் தமிழகம் நிச்சயம் படைக்கும்.

காவேரி நடுவர் மன்ற ஆணைகளின்படி தமிழகத்திற்குரிய நீரினை கர்நாடகம் விடுவிக்காததைக் கருத்தில் கொண்டும், கர்நாடக அரசு உரிய நீரைத் தமிழகத்திற்கு வழங்கவில்லை என காவேரி கண்காணிப்புக் குழு பதிவு செய்துள்ளதன் அடிப்படையிலும், தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை கர்நாடகம் ஈடுசெய்யும் வகையில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிவில் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானதுதான் என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளதால், தமிழகத்திற்குச் சாதகமான தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினையிலும் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், நமக்குரிய தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிட மறுத்ததன் காரணமாகவும், பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும் பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் விரைவில் அறிவிக்கப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, இதனை விரைந்து வழங்கிட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

காவேரிப் பாசன பகுதியில் 12 மணி நேர, தடையில்லா மும்முனை மின்சாரம்; சம்பாப் பயிர்களுக்காக 107 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் அறிவிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள்; மற்றும் தொடர் சட்டப் போராட்டங்களின் மூலம் கர்நாடகத்திலிருந்து பெறப்பட்ட காவேரி நீர் ஆகியவை சம்பா நெற் பயிர்களை ஓரளவு காத்திட உதவி புரிந்தன.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை அரசே ஏற்கும் என்று நான் ஏற்கெனவே தெரிவித்ததற்கு இணங்க, டெல்டா பகுதிகளில் உள்ள 5 இலட்சத்து 45 ஆயிரம் விவசாயிகளுக்கான 27 கோடியே 67 இலட்சம் ரூபாய் பயிர்க் காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தியுள்ளது. பயிரிழப்பை அளவிட்டு, விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய நிவாரணம் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் நான் பின் வருவனவற்றை இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கின்றேன்.

1) மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைபடி, நெற்பயிரை இழந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். மாநிலப் பேரிடர் நிவாரண வரையறைபடி, ஏக்கர் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், இந்த 4,000 ரூபாய் நிவாரணத் தொகை, 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இதுவன்றி, பயிர் இழப்புக்காக காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு, 8,692 ரூபாய் வரை பெற இயலும் என்றும் தெரிவித்து இருந்தேன். இங்கே பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளபடி, காப்பீட்டு நிறுவனம், Firka அடிப்படையில், 5 கிராமங்களைத் தெரிந்தெடுத்து, ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு அறுவடை சோதனைகளை மேற்கொண்டு, அந்த சோதனை முடிவுகளின்

அடிப்படையிலும்; கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற சராசரி விளைச்சலின் அடிப்படையிலும்; காப்பீட்டு நிவாரணத் தொகையை நிர்ணயிக்கும். இவ்வாறு, காப்பீட்டு நிவாரணத் தொகையை நிர்ணயம் செய்யும் போது 100 விழுக்காடு மகசூல் இழப்பு ஏற்பட்டால்தான், ஒரு ஏக்கருக்கு முழுக் காப்பீட்டுத் தொகையான 8,692 ரூபாய் கிடைக்கும். 50 விழுக்காடு மகசூல் இழப்பு ஏற்பட்டால், ஒரு ஏக்கருக்கு சுமார் 4,350 ரூபாய் தான் காப்பீட்டு நிவாரணத் தொகையாக கிடைக்கும்.

மேலும், சோதனை அறுவடை செய்து முடிக்கப்பட்டு, காப்பீட்டு நிவாரணத் தொகை பெறுவதற்கு தாமதம் ஏற்படும். இதனைத் தவிர்க்கும் வகையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு முழுக் காப்பீட்டு நிவாரணத் தொகையை முன் கூட்டியே தமிழக அரசு வழங்கும். இதன்படி, 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் பாதித்துள்ள 1 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளின் 3.61 இலட்சம் ஏக்கர் பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, 15,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். அதாவது, பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீடு, மற்றும் சிறப்புக் கூடுதல் நிவாரணம் என மொத்தமாக, ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு எனது தலைமையிலான அரசால் வழங்கப்படும். இதனால், அரசுக்கு 541 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2) காவேரி டெல்டா விவசாயிகள் அனைவருக்கும் தமிழக அரசே பயிர்க் காப்பீட்டுத் தொகையைச் செலுத்தியுள்ளதால், 50 விழுக்காட்டிற்கும் குறைவாக பயிரிழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கும், அந்தந்தப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிரிழப்புக்கு ஏற்ப, காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும். காப்பீட்டு நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன், இந்த நிவாரணம் வழங்கப்படும்.

3) தேசிய ஊரக, வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள்

பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்படும்.

4) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக, 181 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15,000 பண்ணைக் குட்டைகள் டெல்டா மாவட்டங்களில் அமைக்கப்படும்.

5) இதர வேலைவாய்ப்புப் பணிகள், 1,336 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மொத்தத்தில், காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், இந்தப் பணிகள் மூலம் 1,517 கோடி ரூபாய் அளவுக்கு ஊதியம் பெறுவர்.

6) வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக 5 கோடி ரூபாய்க்குப் பசுந்தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு அடர் தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு உலர் தீவனம் மற்றும் 12 கோடியே 35 இலட்சம் ரூபாய்க்குப் பண்ணைக் குட்டைகளில் உள்நாட்டு மீன் வளர்ப்பு என 47 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

7) வறட்சி காரணமாக டெல்டா பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 7 கோடியே 2 இலட்சம் ரூபாய்க்கு நீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துதல்; 18 கோடியே 3 இலட்சம் ரூபாய்க்கு பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல்; மற்றும் 12 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் என 37 கோடியே 25 இலட்சம் ரூபாய், மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

8) தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண உதவிகள் மூலம், தமிழக அரசுக்கு 2,143 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

9) இதுவன்றி, பொதுப்பணித் துறை மூலம் ஏரிகள் தூர்

வாருதல்; குளங்கள் சீரமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

10) தமிழ்நாட்டின் ஏனையப் பகுதிகளிலும் மழை குறைவாக பெய்துள்ளதால், சென்னை நீங்கலாக ஏனைய 31 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்படும்.

11) இதனையடுத்து, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரி தள்ளுபடி செய்யப்படும்.

12) வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்பச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தினைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் மாற்றி அமைக்கப்படும். அதாவது, reschedule செய்யப்படும்.

13) டெல்டா மாவட்டங்கள் நீங்கலாக, பிற மாவட்டங்களில் உள்ள 3 இலட்சத்து 34 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 100 நாட்கள் பணி வரம்பு என்பது, 150 நாட்களாக உயர்த்தப்படும்.

14) மாநிலம் முழுவதற்குமான வறட்சி கோரிக்கை மனு, அதாவது Drought Memorandum தயார் செய்யப்பட்டு, நிவாரணம் கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

15) விவசாயிகள் இறப்பு பற்றி இந்த அவையில் பல உறுப்பினர்கள் பேசி உள்ளனர்.

விவசாயிகள் 9 பேர் தற்கொலை செய்து கொண்டு இருந்தாலும் அதற்குப் பயிரிழப்பு காரணமில்லை. இருப்பினும், பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொண்டுள்ள விவசாயிகளின் உயிரிழப்பினால் துயரம் அடைந்துள்ள அவர்தம் குடும்பத்தினரின் வறிய நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த 9 குடும்பத்தினருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

மேற்கண்ட அறிவிப்புகள் விவசாயிகள் துயர் துடைக்க

வழிவகை செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தப் பதிலுரையின் மூலம் மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது தங்களது மேலான கருத்துகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் போதுமான விளக்கங்கள் கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

எனது அரசின் செயல்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டிய குறைபாடுகளின் தன்மைகளைக் கண்டறிந்து; அவற்றில் உண்மை இருப்பின், உரிய நடவடிக்கைகளை எனது அரசு எடுத்திடும் என்ற உறுதியினை நான் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க வேண்டும்; அண்டை மாநிலங்கள் உடனான நதிநீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டும்; தமிழகத்தை மின் மிகை மாநிலமாக்க வேண்டும் போன்ற உயரிய இலட்சியங்களை அடையும் வண்ணம் அயராது பாடுபட்டு வரும் இந்த மக்கள் நல அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கு நான் அளித்த விளக்கங்களை, பதிலுரையை ஏற்றுக் கொண்டு, திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அனைவரையும் கேட்டுக்கொண்டு இத்துடன் எனது உரையை நிறைவு செய்து அமைகிறேன்.

வணக்கம்.

✶ ✶ ✶

சென்னை தலைமைச் செயலகத்தில்
செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி – (20.02.2013)



22 ஆண்டுக் கால இடைவிடாத – அயராத போராட்டத்திற்கு எனக்கும், எனது அரசுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி!

இன்று நீதிமன்றங்களிலிருந்து மிக மகிழ்ச்சிகரமான இரண்டு செய்திகள் வந்துள்ளன. ஒன்று, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை, இறுதித் தீர்ப்பு இன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 22 ஆண்டுக்காலம் நான் நடத்திய இடைவிடாத, அயராத போராட்டத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றி இது. இந்தச் செய்தி எனக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சியை அளிக்கிறது. 1991ஆம் ஆண்டில் ஜூன் 24ஆம் தேதி நான் முதன் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றேன்.

அடுத்த நாள் 1991 ஜூன் 25ஆம் தேதி காவேரி நடுவர் மன்றம் தனது இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது. இடைக்கால ஆணையை வழங்கியது. அப்போதே கர்நாடகா அதை எதிர்த்தது. அதைச் செயல்படுத்த முடியாத அளவிற்குச் செயலற்றுப் போக வேண்டுமென்ற எண்ணத்துடன் கர்நாடக சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

எனது ஆணையின் பேரில் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அதன் பின்னர் உச்ச நீதிமன்றம் அந்தச் சட்டமே செல்லாது. இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பு வழங்கியது. அதன் பின்னர் இந்த இடைக்கால ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட அப்போது உள்ள மத்திய அரசு சுணக்கம் காட்டி வந்தது. அவர்கள் அதை வெளியிட விரும்பவில்லை.

இரண்டு மாநிலங்களுக்கிடையேயான ஒரு நதி நீர் தாவாவை விசாரிக்க ஒரு நடுவர் மன்றத்தை அமைக்கின்ற போது அந்த நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பை வழங்கினாலும் சரி, இறுதித் தீர்ப்பை வழங்கினாலும் சரி, அதைச் செயல்படுத்த வேண்டுமென்றால், அது செயல்பாட்டுக்கு வரவேண்டுமென்றால், அதை மத்திய அரசு தனது அரசிதழில் – மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும். 1991ஆம் ஆண்டும் அதை மத்திய அரசு வெளியிட விரும்பவில்லை. மீண்டும் எனது ஆணையின் பேரில் தமிழக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, இடைவிடாத முயற்சிகளுக்குப் பிறகுதான் 1991 டிசம்பர் மாதம் இறுதியில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. அதன் பின்னரும் கர்நாடக அரசு அதை மதிக்கவில்லை. தொடர்ந்து கர்நாடகம் தமிழகத்திற்கு உரிய காலத்தில் வழங்க வேண்டிய தண்ணீரை, காவேரி நீரைத் தர மறுத்துக் கொண்டே வந்தது.

எண்ணற்ற முறை தமிழக அரசு எனது ஆணையின் பேரில் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளது. ஆனால், தொடர்ந்து கர்நாடகம் நமக்கு வழங்க வேண்டிய தண்ணீரை

வழங்கவில்லை. அந்த இடைக்கால ஆணையை, செயல்படுத்த மத்திய அரசு எந்தவிதமான ஒரு ஏற்பாட்டையும் செய்யவில்லை. அதற்காகத்தான் 1993ஆம் ஆண்டு இங்கே சென்னையில், மெரீனா கடற்கரையில், சாகும்வரை உண்ணாவிரதமொன்று நான் இருந்தேன். 4 நாட்கள் என்னுடைய உண்ணாவிரதம் நீடித்தது. 4ஆவது நாள் மாலையில் மத்திய அமைச்சர், அப்போதைய நீர்வளத்துறை அமைச்சராக இருந்த சுக்லா அவர்கள் இங்கே சென்னைக்கு வந்தார்கள். அப்போது என்னைச் சந்தித்து காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த மத்திய அரசு தேவையான குழுக்களை அமைக்கும் என்ற உத்தரவாதத்தைத் தந்த பிறகுதான் எனது உண்ணாவிரதத்தை நான் கைவிட்டேன்.

தொடர்ந்து கர்நாடகம் இந்த இடைக்கால ஆணையின்படி ஒருமுறைகூடத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய காவேரி நீரை வழங்கவில்லை. இயற்கையின் கருணையால் மழை பெய்தபோது இங்கே விவசாயம் செய்ய முடிந்தது. மற்ற நேரங்களில் கர்நாடகத்தில் பலத்த மழை பெய்து அவர்களுடைய 4 அணைகளும் நிரம்பி அதற்குமேல் அங்கே தண்ணீரைத் தேக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்ட பிறகு பாய்ந்து வந்த உபரி நீர்தான் தமிழகத்திற்குக் கிடைக்கும். இப்படித்தான் ஒரு நிலைமை நீடித்து வந்தது. எனவே, திரும்பத் திரும்ப உச்சநீதிமன்றத்தை அணுகிப் பல்வேறு வழக்குகளை எனது ஆணையின் பேரில் தமிழக அரசு தொடுத்து அதனுடைய விளைவாகத்தான் காவேரி ஆணையம், Cauvery River Authority மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு – Monitoring Committee ஆகியவை அமைக்கப்பட்டன. அதற்கு முழுக் காரணம் எனது முயற்சிகளும், எனது அரசின் முயற்சிகளும்தான்.

உங்களுக்கெல்லாம் அண்மையில் நடைபெற்ற நடப்புகள், நிகழ்வுகளெல்லாம் தெரியும். கடந்த 9 ஆண்டு காலமாக இந்தக் காவேரி நதி நீர் ஆணையத்தைக் கூட்டவே மத்திய அரசுக்கு விருப்பமில்லை. 9 ஆண்டுகளாக அதைக் கூட்டவில்லை. மீண்டும் 2011இல் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது அந்தக்

காவேரி நதிநீர் ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்று திரும்பத் திரும்ப மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. கடைசியில் வேறு வழியின்றி இந்தக் காவேரி நதி நீர் ஆணையக் கூட்டத்தைக் கூட்டுவதற்காக ஆணையிடவேண்டி உச்ச நீதிமன்றத்திற்கு எனது ஆணையின்பேரில் தமிழக அரசு சென்று ஒரு வழக்குத் தொடுத்தது.

உச்ச நீதிமன்றம் ஆணையிட்ட பிறகுதான், 9 ஆண்டுக்கால இடைவெளிக்குப் பிறகு காவேரி நதி நீர் ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டது. ஆனால், கர்நாடகம் நதி நீர் ஆணையம் வழங்கிய ஆணைகளையும் பின்பற்றவில்லை. அதன்படி நடக்கவில்லை. கர்நாடகம் என்ன வாதத்தை முன்வைத்தது என்றால், நாங்கள் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தரவேண்டிய அவசியமில்லை என்றார்கள். இடைக்கால ஆணை இப்போது இல்லை என்பது அவர்களுடைய வாதம். இடைக்கால ஆணை இல்லை, அதன்படி தண்ணீர் விடவேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். சரி அது இல்லையென்றால் இப்போது இறுதி ஆணை வந்துவிட்டதே அதன்படி நீங்கள் தண்ணீரை விடுங்கள் என்று கேட்டால், இறுதி ஆணை இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை அதை இன்னும் மத்திய அரசிதழில் வெளியிடவில்லை. எனவே, அதன்படியும் முடியாது என்றார்கள். இடைக்கால ஆணை இல்லையென்றார்கள், இறுதி ஆணை இன்னும் வெளியிடப்படவில்லை மத்திய அரசிதழில் என்றார்கள்.

அதனால்தான் விடாமுயற்சி மேற்கொண்டு, அயராத முயற்சி மேற்கொண்டு, போராடிப் போராடி, போராடி, திரும்பத் திரும்ப உச்சநீதிமன்றம் சென்று இறுதியில் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. மத்திய அரசிதழில் அதாவது பிப்ரவரி 19, 2013 தேதியிட்ட மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இது இன்றுதான் அறிவிக்கப்பட்டது. இன்றுதான் எங்களுக்கு இதனுடைய பிரதி கொடுக்கப்பட்டது. ஆகவே, என்னைப் பொருத்தவரையில்

தனிப்பட்ட முறையில் என்னுடைய வாழ்க்கையில் இது ஒரு மிக மகத்தான பிரம்மாண்டமான வெற்றியென்று நான் சொல்வேன். 30 ஆண்டுக்காலமாக நான் அரசியலில் ஈடுபட்டிருக்கிறேன். இந்த 30 ஆண்டுக்காலத்தில் உண்மையாகவே இன்றுதான் ஒரு சாதனை புரிந்ததாகவும், ஒரு நிறைவும் மன நிறைவும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இத்தனை காலமாக எவ்வளவோ பேர் பாராட்டிப் புகழ்ந்தாலும் ஏதோ ஒரு சாதனை செய்ததாக நான் கருதவில்லை. இன்று நிச்சயமாக இது ஒரு மகத்தான சாதனையென்று நான் கூறுவேன். இன்றுதான் இத்தனை ஆண்டுக்காலம் பொது வாழ்வில் இருந்ததற்கும், கஷ்டப்பட்டதற்கும், ஒரு மன நிறைவு எனக்குக் கிடைத்திருக்கிறது. இது எனக்கும், எனது அரசுக்கும் கிடைத்த வெற்றி.

இது காவேரி டெல்டா மாவட்டங்களிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றி. இனிமேல் காவேரி டெல்டா பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எதிர்காலத்திற்கு ஒரு உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இனி காலாகாலத்திற்கும் கர்நாடகம் இந்தக் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பின்படி இவ்வளவு தண்ணீர் விட்டாகவேண்டும் என்ற ஒரு கட்டாயம் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.

இதைக் கர்நாடகம் மறுக்க முடியாது! ஏனென்றால் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதனால் இது கர்நாடகாவை கட்டுப்படுத்தும். இந்த இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதால் அது இனிமேல் கர்நாடக அரசை கட்டுப்படுத்தும். ஆகவே, கர்நாடகம் இவ்வளவு தண்ணீரை ஒவ்வொரு ஆண்டும் விடுவித்தாக வேண்டும். ஆகவே, இனிமேல் காவேரி டெல்டா பகுதி வாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் எதிர் காலத்திற்கு ஒரு உத்தரவாதம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் நாம் நம்புவோம். நிச்சயமாக நல்ல மழை பெய்கின்றபோது, நிறைய தண்ணீர் இருக்கும்போது இந்த இறுதி ஆணையின்படி கர்நாடகம் ஒவ்வொரு ஆண்டும் தண்ணீரை விடுவிக்கும். நாம் பெறுவோம் என்று நம்புவோம்.

மழை சரியாக பெய்யவில்லையென்றால் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி எப்படி அந்த டிஸ்ட்ரஸ்ஸை பங்கிட்டுக் கொள்ள வேண்டுமோ அதையும் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மீண்டும் ஒரு முறை தமிழ்நாட்டிலுள்ள காவேரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே என் வாழ்க்கையில் இது மிக மிக மிக மகிழ்ச்சிகரமான ஒரு நாள்.

அடுத்தபடியாக தி கிரீன் டிரிபூனல் முன்னால் ஓமந்தூராரார் எஸ்டேட்டில் உள்ள புதிய கட்டடத்தை மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாகத் தமிழக அரசு மாற்றக்கூடாது என்ற ஒரு வழக்கு இருந்தது. இன்று அந்த வழக்கிலும் தமிழக அரசு வெற்றி பெற்றுவிட்டது. இனிமேல் ஓமந்தூராரார் எஸ்டேட்டில் உள்ள புதிய கட்டடத்தில் மருத்துவமனை அமைக்கலாம் என்று தி கிரீன் டிரிபூனல் உத்தரவிட்டுவிட்டது. இதுவும் ஒரு மகத்தான வெற்றி. இன்று பிற்பகலிலேயே அந்த மருத்துவமனை அமைப்பதற்கான பணிகள் தொடரும். மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Qn: Madam, you have charged the DMK not did anything to get the Cauvery final Award published?

CM : I hold the same charge against them and what has compelled the Central Government to notify the Award is the Supreme Court. So we are grateful to the Supreme Court for giving us justice.

✶ ✶ ✶

சென்னை விவேகானந்தர் இல்லத்தில்
சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு விழாவினைத்
தொடங்கி வைத்து ஆற்றிய உரை – (27.02.2013)



சுவாமி விவேகானந்தர் பண்பாட்டு மையத்திற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.2 கோடி!

வரவேற்புரை ஆற்றி அமர்ந்துள்ள சென்னை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் மேலாளர் சுவாமி ஆசுதோஷானந்தர் அவர்களே, வாழ்த்து மடல் வாசித்த சுவாமி விமூர்த்தானந்தர் அவர்களே, ஆசியுரை வழங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் அவர்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, நன்றியுரை நவிலவுள்ள சுவாமி தர்மிஷ்டானந்தர் அவர்களே, சகோதர – சகோதரிகளே, மாணவ – மாணவிகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லம் இந்த விவேகானந்தர் இல்லம். ராமகிருஷ்ணா மடம் துவங்கியதிலிருந்து முதல் ஒன்பது ஆண்டுக் காலம் இந்த இல்லத்தில் தான் இயங்கியது. இந்த இல்லத்தில் ஒன்பது நாட்கள் தங்கி வீர உரைகளை ஆற்றியுள்ளார் சுவாமி விவேகானந்தர்.

இப்படிப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த இல்லத்திலிருந்து, சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழாவினைத் துவக்கி வைத்து; ''விவேக ஜோதி'' தீபம் ஏற்றி வைத்து; பண்பாட்டு மையத்திற்கு அடிக்கல் நாட்டி; சுவாமி விவேகானந்தரின் புகைப்படத் தொகுப்பு நூலை வெளியிட்டு உங்கள் முன் உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதை எனக்குக் கிடைத்த பாக்கியமாக நான் கருதுகிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவருக்கும், அதன் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர் விவேகானந்தர். சுவாமி விவேகானந்தர் மற்றும் அவரது குரு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் கொள்கைகளின்பால், எனக்குச் சிறு வயது முதலே மிகுந்த ஈடுபாடு உண்டு. என்னுடைய இல்லத்தில் உள்ள நூலகத்தில் சுவாமி விவேகானந்தர் மற்றும் அவரது ஆசான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் புத்தகங்கள் நிறைய உள்ளன. அவற்றை நான் அடிக்கடி படிப்பது உண்டு.

இந்து சமயத்தின் பெருமையை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் எத்தகைய வழியில் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதை இந்த உலகிற்கு உணர்த்தியவர் சுவாமி விவேகானந்தர். அனைவரிடத்திலும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமத்துவமாக வாழ்வதே சிறந்தது என்கிறார் சுவாமி விவேகானந்தர். அளவு கடந்த அறிவையும், மன வலிமையையும் கொண்ட சுவாமி விவேகானந்தர், ஈகை குணத்திற்கும், தலைமைப் பண்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு சிறந்த தேச பக்தர். ''இளைஞர்களே! தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக்



கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்!'' என்று உபதேசித்தவர் சுவாமி விவேகானந்தர்.

''இறைவனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நான் பார்க்க முடியுமா?'' என்று தன்னுடைய குருவான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் வினா எழுப்பினார் சுவாமி விவேகானந்தர். அதற்கு பதில் அளித்த ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''இறைவனை நானும் கண்டுள்ளேன். உனக்கும் காட்டுவேன்'' என்று கூறினார். ஆறாண்டுகள் பயிற்சி பெற்ற சுவாமி விவேகானந்தருக்கு, ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பதை உணர்த்தியவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மறைவிற்குப் பின் மக்களுக்குத் தொண்டு செய்யுங்கள் என மன்னர்களை வற்புறுத்தியவர் சுவாமி விவேகானந்தர். 1893ஆம் ஆண்டு, சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வ மத மாநாட்டில், ''சகோதர, சகோதரிகளே'' என்று துவங்கி அவர் பேசிய பேச்சு உலக மக்களைக் கவர்ந்தது.

1897ஆம் ஆண்டு, உலக நன்மைக்காகத் தொண்டும், துறவும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், ''ராமகிருஷ்ண மிஷன்'' சுவாமி விவேகானந்தர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. ''சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்'' என்று உபதேசித்தவர் சுவாமி விவேகானந்தர். ஏனென்றால், சுயநலம் இல்லாத இடத்தில்தான் தியாக மனப்பான்மை இருக்கும். தியாக மனப்பான்மை இருந்தால்தான் மக்களுக்குத் தொண்டாற்ற

முடியும். இந்தத் தருணத்தில், சுவாமி விவேகானந்தரின் இளமைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இளமைப் பருவத்தில் நரேந்திரனாக இருக்கும் போதே, துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவா சுவாமி விவேகானந்தரிடம் இருந்தது. தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தனது தாயாரிடம், தனது துறவு விருப்பத்தைத் தெரிவிப்பார் சுவாமி விவேகானந்தர்.

ஒருமுறை தன் தாயாரிடம் துறவறம் மேற்கொள்ள விவேகானந்தர் அனுமதி கேட்டபோது, "சமையலறைக்குப் போய் அங்கிருந்து கத்தியை எடுத்து வா" என்றார் அவரது அன்னை. விவேகானந்தரும் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்தார். உடனே, "கொஞ்ச நாட்கள் கழியட்டும். பின்பு நீ துறவறம் மேற்கொள்ளலாம்" என்று தெரிவித்தார் விவேகானந்தரின் அன்னை. எப்போதெல்லாம் தன்னுடைய துறவு விருப்பத்தை சுவாமி விவேகானந்தர் தன் தாயிடம் தெரிவித்தாலும், இதையேதான் அவருடைய தாயார் சொல்லி வந்தார். துறவுக்கும், கத்திக்கும் என்ன தொடர்பு என்று விவேகானந்தருக்குப் புரியவில்லை.

ஒரு முறை இவ்வாறு சுவாமி விவேகானந்தர் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்ததும், "இனி நீ துறவு மேற்கொள்ளலாம்" என்று கூறினார் சுவாமி விவேகானந்தரின் அன்னை.

உடனே சுவாமி விவேகானந்தர், "கத்திக்கும், துறவுக்கும் உள்ள தொடர்பு என்ன ?" என்று தன் அன்னையிடம் வினவினார்.

விவேகானந்தரின் அன்னை "முன்பு ஒவ்வொரு முறை நான் கத்தியைக் கொண்டு வா என்று சொன்ன போதும், பாதுகாப்பான கைப்பிடியை நீ பிடித்துக் கொண்டு, ஆபத்தான கூர்மைப் பகுதியை என் பக்கம் நீட்டுவாய். ஆபத்து பிறருக்கு, பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு அது. ஆனால் இப்போது ஆபத்தான கூர்மைப் பகுதியை நீ பிடித்துக் கொண்டு, பாதுகாப்பான கைப்பிடியை என் பக்கம் நீட்டினாய். அதாவது, பிறரைப் பாதுகாக்க வேண்டும் என்ற தியாக உணர்வு உன்னிடம் ஏற்பட்டுவிட்டது. அதனால்தான், துறவறம் மேற்கொள்ள நான் சம்மதித்தேன்" என்று கூறினார்.



இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், தியாக மனப்பான்மையே துறவின் அடிப்படை, அஸ்திவாரம் என்பதாகும். தியாக மனப்பான்மை இருந்தால்தான் பிறருக்குத் தொண்டாற்ற முடியும்; மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தொண்டு என்பது சுயநலமின்றி, பிறர் நலத்திற்காக உழைப்பது. அனைத்து மதங்களும் பிறருக்கு உதவுவதைப் போதிக்கின்றன. இதனால் தான், நம் நாட்டில் பல தொண்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன. தொண்டுகளிலே பல வகை உண்டு. நாட்டுக்குச் செய்யும் சேவை "தேசத் தொண்டு". மக்களுக்குச் செய்யும் சேவை "மக்கள் தொண்டு". இறைவனுக்குச் செய்யும் சேவை "திருத்தொண்டு". ஒவ்வொரு தொண்டு நிறுவனமும் ஒவ்வொரு விதமான சேவையைச் செய்கின்றது. ஆனால், இந்த மூன்று தொண்டினையும் செய்கின்ற நிறுவனமாக இந்த ராமகிருஷ்ண மடம் விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தக் காலத்திலே, இலாப நோக்குடன் செயல்படும் மிகப் பெரிய வணிக நிறுவனங்கள் கூட, இலாபத்தின் ஒரு பகுதியைக்



கல்வி, மருத்துவம் போன்ற பொதுநலத் தொண்டிற்காக, சமூக சேவைக்காக ஒதுக்குகின்றன.

அதே சமயத்தில், ‘‘பொதுத் தொண்டு’’, ‘‘பொது வாழ்வு’’ என்று சொல்லி தன்னலத்திற்காக அதையே தொழிலாக மாற்றிக் கொண்டவர்களும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். தொழில் தொண்டாகலாம். தொண்டு தொழிலாகக் கூடாது.

என்னைப்பொறுத்தவரையில்,நான் அரசியலுக்குவருவதற்கு சுவாமி விவேகானந்தர் ஒரு மிகப் பெரிய தூண்டுகோலாக விளங்கினார் என்று சொன்னால் அது மிகையாகாது.

1982ஆம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்து வைத்த போதே, சுவாமி விவேகானந்தரைப் பற்றி ஒரு பேட்டியிலே குறிப்பிட்டு இருக்கிறேன்.

சுவாமி விவேகானந்தர் துறவியாக இருந்து மக்கள் சேவையைப் புரிந்தார். நானும் அவர் வழியில், அரசியலில் துறவறம் பூண்டு மக்கள் சேவையைச் செய்து வருகிறேன். எனக்குச் சுயநலம் என்பது அறவே கிடையாது. எனக்கென்று எதுவும் தேவையில்லை. எனக்கென்று யாருமே கிடையாது.

எனக்கு எல்லாமே தமிழக மக்கள் தான். தமிழக மக்களால் நான்; தமிழக மக்களுக்காகவே நான்.

தொழிலிலே வெற்றி, தோல்வியுண்டு. ஆனால், தொண்டிலே தோல்வி என்பது கிடையாது. சுயநலமின்றி எந்தவிதப் பலனையும் எதிர்பாராமல், எந்தப் பணியைச் செய்தாலும் அதில் வெற்றி நிச்சயம்.

சுவாமி விவேகானந்தரால் துவக்கப்பட்ட ராமகிருஷ்ண மிஷன், எந்த நோக்கத்திற்காக, எந்தக் குறிக்கோளுக்காக, எந்த இலட்சியத்திற்காக துவக்கப்பட்டதோ; அதிலிருந்து சிறிதும் நழுவாமல் அவருடைய வழியில் சுயநலமின்றி, தன்னலமின்றி, மன உறுதியுடன் மிகச் சிறந்த மக்கள் சேவையை, நாட்டுப் பணியை, ஆன்மீகப் பணியைப் புரிந்து வருகிறது.

சமூகச் சேவைகளான மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகள், ஊரக வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றை இந்தியா முழுவதிலும் இயக்கி வருவதோடு மட்டுமல்லாமல்; நில நடுக்கம், புயல், வெள்ளம் மற்றும், இதர இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளையும் உலகெங்கும் இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

ராமகிருஷ்ண மடத்தின் மக்கள் சேவையையும், சமூகப் பணிகளையும் நான் நன்கு அறிந்தவள். அதனால்தான் ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகிகள் அரசுக்குச் சொந்தமான இந்த விவேகானந்தர் இல்லம் அமைந்துள்ள இடத்தினையும்; அதன் அருகில் காலியாக உள்ள நிலத்தையும் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் அளிக்குமாறு விடுத்த வேண்டுகோளினை உடனடியாக ஏற்று, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன். அதன் அடிப்படையில், 99 ஆண்டுக் கால குத்தகை அடிப்படையில், மிகக் குறைந்த வாடகையில் இந்த விவேகானந்தர் இல்லமும்; அதை ஒட்டியுள்ள காலி நிலமும் ராமகிருஷ்ண மடத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரைப் பற்றிக் குறிப்பிட்ட திரு. கி.வா. ஜகன்னாதன் அவர்கள், ‘‘விவேகானந்தரின் உபதேசங்களில் வீணையின் மெல்லிசை இல்லை. வீர முரசே ஒலிக்கிறது’’ என்றார். அந்த அளவுக்கு மன உறுதி படைத்தவர் சுவாமி விவேகானந்தர்.

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு இயற்கை எழில் மிகுந்த அவரது நண்பரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் அவரது நண்பரும், நண்பரின் மனைவியும் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அந்த மாட்டின் சீற்றத்தைக் கண்டு நடுங்கிப் போன நண்பரின் மனைவி அப்படியே மயங்கி விழுந்துவிட்டார். மனைவியைத் தூக்க நண்பர் முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கி விட்டது. நண்பருக்கு கை, கால் ஓடவில்லை.

இன்னும் சில நொடிகள் அங்கிருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்று நினைத்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடித்தார். ஆனால், சுவாமி விவேகானந்தரோ அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

சீறி வந்த மாடு சுவாமி விவேகானந்தரையும், கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது.

மாடு தன்னைத் துரத்துகிறது என்பதை அறிந்த நண்பர் இன்னும் வேகமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார். மாடும் விடாமல் நண்பரைத் துரத்தியது.

என்ன செய்வது என்பதறியாமல் திகைத்த நண்பர், சட்டென்று ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார். பின்னர், பண்ணை

ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர்.

விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

அப்போது அவரது நண்பரும் அங்கு வந்து சேர்ந்தார். நண்பருக்கோ ஒரே திகைப்பு. அந்தச் சமயத்தில், நண்பரின் மனைவிக்கும் மயக்கம் தெளிந்தது.

"ஆபத்தான நேரத்திலும் துளி கூட பயமே இல்லாமல் எப்படி உங்களால் உறுதியாக நிற்க முடிந்தது?" என்று சுவாமி விவேகானந்தரைப் பார்த்து கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு புன்னகை புரிந்த சுவாமி விவேகானந்தர், "நான் எதையும் வித்தியாசமாகச் செய்யவில்லை. வருவது வரட்டும் சமாளிப்போம் என்ற மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால்தான் மாடு, என்னை விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது" என்று கூறினார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு அஞ்சி ஓடாமல், வருவது வரட்டும் சந்திப்போம், என்ற மன உறுதியுடன் தன் வாழ்நாள் முழுவதும் விளங்கியவர் சுவாமி விவேகானந்தர்.

என்னைப் பொறுத்தவரையில், எனக்கு வருகின்ற சோதனைகளை, முட்டுக்கட்டைகளை, தடைகளை சுவாமி விவேகானந்தர் வழியில்தான் நான் தகர்த்து வருகிறேன்.

விவேகானந்தரின் கருத்துகள் அனைத்துமே என்றைக்கும், எல்லாக் காலகட்டத்திற்கும், பொருத்தமானவை நமக்கெல்லாம் ஒரு மிகப்பெரும் வழிகாட்டி சுவாமி விவேகானந்தர். தீயைப் போன்ற சூடான அவரது கருத்துகளை, தன்னலமற்ற சேவையை, திடமான மன உறுதியை இளைஞர்களாகிய நீங்கள் எல்லாம் பின்பற்றினால் நீங்களும் சிறந்து விளங்கலாம்; இந்த நாடும் சிறந்து விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரால் துவங்கப்பட்ட இந்த ராமகிருஷ்ண மிஷன், பழமை மாறாமல் எந்த நோக்கத்திற்காகத்

துவங்கப்பட்டதோ அதே நோக்கத்திற்காக, 100 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து சிறப்புற செயலாற்றி வருவது; மக்கள் பணியாற்றி வருவது பாராட்டுதலுக்குரியது; போற்றுதலுக்குரியது. இது போன்ற நிறுவனங்கள் தான் இளைய சமுதாயத்தினரின் நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்குகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு விழாவை நடத்திக் கொண்டிருக்கும் ராமகிருஷ்ண மடத்தினரின் நாட்டுப் பணி, சமுதாயப் பணி, ஆன்மீகப் பணி ஆகியவை மேன்மேலும் சிறந்து விளங்க வேண்டும்; இளைய சமுதாயத்தினர் இடையே மன உறுதியையும், தன்னலமற்ற சேவை மனப்பான்மையையும் உருவாக்குவதற்கான செயல் திட்டங்களை வகுத்து; அதனை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகிகளை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டினை ஓராண்டு முழுவதும் சீரோடும், சிறப்போடும், கொண்டாடிக் கொண்டிருக்கும் ராமகிருஷ்ண மடத்திற்கு எனது பாராட்டு களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு;

லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து (Lokah Samastha Sukhino Bhavanthu), அதாவது, உலகத்தில் உள்ள அனைவரும் எல்லா வளங்களும், நலங்களும் பெற்று இன்புற வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து;

இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் எழுப்பியுள்ள சுவாமி விவேகானந்தர் பண்பாட்டு மையத்திற்குத் தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில்
வெளியிடச் செய்து சாதனை படைத்த
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு
காவேரி பாசன விவசாயிகள் சார்பில் தஞ்சாவூரில் நடத்தப்பட்ட
நன்றி தெரிவிக்கும் விழாவில் ஆற்றிய உரை – (09.03.2013)



தமிழர்களின் உரிமைகளைப் பொறுத்த வரையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை

இந்த இனிய விழாவில் தலைமை உரை ஆற்றிய தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன பராமரிப்பு விளை பொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பெரியவர் திரு. காவேரி எஸ். ரெங்கநாதன் அவர்களே,

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்டத் தலைவர் திரு. பயரி எஸ். கிருஷ்ணமணி அவர்களே,

வாழ்த்துரை வழங்கி அமர்ந்துள்ள மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. இரா. காமராஜ் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. கே.வி. ராமலிங்கம் அவர்களே, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. கே.ஏ. ஜெயபால் அவர்களே,

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மரியாதைக்குரிய மாநிலச் செயலாளர் அன்புச் சகோதரர் திரு. தா.பாண்டியன் அவர்களே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிங்கார வடிவேல் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் விவசாயப் பிரிவுத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு.துரை கோவிந்தராஜன் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் விவசாயப் பிரிவு செயலாளர் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு. கே. தங்கமுத்து அவர்களே, தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன பராமரிப்பு விளை பொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. ராஜாராம் அவர்களே, திரு. திருவையாறு நவரோஜி சோழகர் அவர்களே, காவேரி டெல்டா விவசாயிகள் குழுமத்தின் பொதுச் செயலாளர் திரு. வெ. சத்தியநாராயணன் அவர்களே, தமிழ்நாடு உழவர் பேரியக்கத்தின் தலைவர் திரு. உழவர் இரா. பாண்டுரங்கன் அவர்களே, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த திரு. எம். ராஜேந்திரன் அவர்களே, நன்றியுரை நவிலவுள்ள தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன பராமரிப்பு விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கத்தின் இணைச் செயலாளர் திரு. பி.காந்திபித்தன் அவர்களே,

தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் வகையில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட நான் எடுத்த அயராத முயற்சிக்கு உறுதுணையாக இருந்த எனதருமை விவசாயப் பெருங்குடி மக்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்கும், சொல்லுக்கும், கலைக்கும், திருத்தலங் களுக்கும் களஞ்சியமாக விளங்கும் இந்தத் தஞ்சை மாநகரில் அன்பு நெஞ்சங்களாகிய உங்கள் முன்பு பேசுவதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டியதற்காக எனக்கு நன்றி தெரிவிக்கும் விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தாலும்; இதைத் தமிழக மக்களுக்கு கிடைத்த வெற்றியாகவே; தமிழக விவசாயிகளுக்கு, குறிப்பாக டெல்டா விவசாயிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே நான் கருதுகிறேன். இதில் எனக்கிருக்கும் மகிழ்ச்சியை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காகவும்; உங்களையெல்லாம் நேரில் சந்திப்பதற்காகவும் தான், இந்த நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்து கொள்ள நான் சம்மதம் தெரிவித்தேன்.

தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்கி வரும் பல்வேறு நதிநீர் பிரச்சினைகளில் காவேரி நதிநீர்ப் பிரச்சனை மிக முக்கியமானதாகும். சென்னை மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள், காவேரியில் தமிழ்நாட்டிற்குள்ள உரிமையை தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

காவேரியில் நமக்குள்ள உரிமையை நிலை நாட்டுவதற்காக அமைக்கப்பட்ட காவேரி நடுவர் மன்றம், தனது இறுதி ஆணையை 5.2.2007 அன்று வழங்கியது. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் திரு. மு. கருணாநிதி. மத்தியிலும் தி.மு.க. அங்கம் வகிக்கும்

காங்கிரஸ் கூட்டணி அரசு தான். ஆனால், இந்த இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட எவ்வித நடவடிக்கையையும் அந்நாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி எடுக்கவில்லை.

ஆனால், இந்த இறுதி ஆணை வழங்கப்பட்டது முதல் இதனை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும்; தமிழகத்திற்குப் பாதகமாக உள்ள ஒரு சில அம்சங்களை உச்ச நீதிமன்றத்தில் முறையிட வேண்டும் என்றும் நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன்.

மூன்றாவது முறையாக 2011இல் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்பட்டதால், உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் எனது உத்தரவின் பேரில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. காவேரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக எனது தலைமையில் பல ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழக அரசின் சார்பில் எடுத்து வைக்க வேண்டிய வாதங்கள் குறித்து, பல முறை வழக்கறிஞர்களுடன் நான் விவாதித்தேன். தமிழக அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்களும் தங்கள் பணியைத் திறம்பட செய்தனர். இவற்றின் விளைவாக, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையினை 20.02.2013க்குள் மத்திய அரசிதழில் வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து, 19.02.2013 தேதியிட்ட மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை வெளியிடப்பட்டது. இது மட்டுமல்லாமல், தமிழகத்திற்குரிய நீரை கர்நாடகம் வழங்காத சூழ்நிலையில், தொடர்ந்து உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு ஆகியவற்றை வலியுறுத்தியதன் பேரில் சுமார் 68 டி.எம்.சி. அடி நீரை கர்நாடக அரசை கட்டாயப்படுத்தி நாம் பெற முடிந்தது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை, மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட உடன் 20.02.2013 அன்று நான் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தேன். இது நமக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்றேன். தமிழகத்திற்கு கிடைத்த இந்த



வெற்றியை, எதிர்க்கட்சி நண்பர்கள், நடுநிலையாளர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் மனமுவந்து பாராட்டினர்.

ஆனால், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியோ, "வென்றவர் சொல்வதெல்லாம் வேதம் ஆகுமா?" என்ற தலைப்பிலே ஓர் அறிக்கையை விடுத்தார். அந்த அறிக்கையிலே பல உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லியிருந்தாலும்; இந்தப் பிரச்சினையில் நான் எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை அவர் தன்னையும் அறியாமல் "தலைப்பின்" மூலம் ஒப்புக் கொண்டிருக்கிறார். "வென்றவர்" என்று என்னைக் குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா? அதற்கு என் நன்றியினை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அறிக்கையிலே, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு பாதகமானது என்று கூறி நான் அறிக்கை வெளியிட்டதாகவும்; அந்தப் பாதகமான தீர்ப்பு தற்போது மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதைத்தான் மகத்தான வெற்றி என்று நான் கூறுவதாகவும் தெரிவித்து இது இரட்டை நிலை இல்லையா? என்றும் வினவி இருக்கிறார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில், ஒரு சில பாதகமான அம்சங்கள் உள்ளன என நான் கூறியது உண்மைதான். ஆனால், அதே சமயத்தில், இந்த இறுதி

ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும்; ஒரு சில பாதகமான அம்சங்களை உச்ச நீதிமன்றத்தில் முறையிட வேண்டும் என்றும், தெளிவாக பல அறிக்கைகளின் வாயிலாக, ஆரம்பம் முதலே, பல்வேறு தருணங்களில் நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

அப்போது நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலும் இந்த நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டு, தெளிவாக்கப்பட்டு இருக்கிறது. அப்போது நான் எதிர்க்கட்சியில் இருந்தாலும், இந்த நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்பதற்காக நான் உண்ணாநோன்பு இருந்தேன். எனவே, இந்த விஷயத்தில் ஒரே நிலையைத்தான் நான் கடைபிடித்து வந்திருக்கிறேன் என்பதை, எல்லாவற்றிலும் "இரட்டை நிலை"யைக் கடைபிடிக்கும் திரு. கருணாநிதிக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு.கருணாநிதி தன்னுடைய அறிக்கையிலே, "நடுவர் மன்றம் என்ற அமைப்பு உருவாவதற்கும்; அந்த அமைப்பு இடைக்காலத் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு என்றெல்லாம் அறிவித்ததற்கும், இடைக்காலத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் உண்மையாகப் பாடுபட்டது யார் என்பதைப் பத்திரிகைகள் மறைத்தாலும், நடுநிலையாளர்கள் ஒரு சிலராவது எண்ணிப்பார்க்க மாட்டார்களா?" என்று புலம்பியிருக்கிறார். இது குறித்து எனது விளக்கத்தினை இங்கே அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவேரி டெல்டா பகுதிகளில் இரண்டு போக சாகுபடி என்று இருந்த நிலைமை மாறி, ஒரு போக சாகுபடிக்கே அல்லல்படும் நிலைக்குத் தமிழகம் தள்ளப்பட்டது. இதனையடுத்து, மிகவும் காலதாமதமாக 4.8.1971இல் அசல் தாவா எண். 1/1971 என்ற ஒரு வழக்கு தமிழக அரசால் இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 131–ன் கீழ், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இருப்பினும், அப்போதைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் வற்புறுத்தலாலும்; அப்போது தமிழகத்தில் இருந்த அரசியல் சூழ்நிலைகளாலும்; அந்த வழக்கு 28.8.1972 அன்று தமிழக அரசால் திரும்பப் பெறப்பட்டுவிட்டது. அன்று தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர் யார்? சாட்சாத் திரு.கருணாநிதியேதான்! அன்றைய முதல்வர்

திரு.கருணாநிதியின் உத்தரவின் பேரில்தான் அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டது. இதன் காரணமாக காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டிற்குப் பெருத்த பின்னடைவு ஏற்பட்டது.

என்னென்னவோ காரணங்கள் சொல்லி கர்நாடக அரசும், மத்திய அரசும் காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் எவ்வித முனைப்பையும் காட்டவில்லை.

எனவே, இறுதியாக 14 ஆண்டுகால காத்திருத்தலுக்குப் பின், நதிநீர் ஆணையம் தேவை, இது ஒன்றே வழி என்று, 6.7.1986இல், 1956ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினை சட்டம், பிரிவு 3–ன் கீழ், ஒரு நடுவர் மன்றத்தை உருவாக்க வேண்டும் என்று ஒரு கடிதம் மத்திய நீர்வளத் துறை அமைச்சகத்துக்கு, அன்றைய முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான தமிழக அரசால் அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்தின் மீது, பல ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் இல்லாமல் மத்திய அரசு இதனைக் கிடப்பில் போட்டது. தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன விளை பொருள்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கம் என்ற ஓர் அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில், இந்திய அரசமைப்புச் சட்டம் 32–ன் கீழ் ரிட் மனு ஒன்றினை தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்தது. அதனைத் தாக்கல் செய்தவர்கள் பெரியவர் ரங்கநாதன் உட்பட மற்றவர்கள் இந்த மேடையிலேயே வீற்றிருக்கிறார்கள்.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், உடனடியாக நடுவர் மன்றத்தை அமைக்குமாறு மத்திய அரசுக்கு 4.5.1990 அன்று உத்தரவிட்டது. இதன் பின்னர், 6.7.1986 அன்று புரட்சித் தலைவர் MGR தலைமையிலான தமிழக அரசால் நடுவர் மன்றம் உடனடியாக அமைத்தே தீர வேண்டும் என்ற கடிதத்திற்கு உயிர் ஊட்டப்பட்டு; 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டம், பிரிவு 4–ன் கீழ் ஒரு நடுவர் மன்றத்தை உருவாக்கி, மத்திய அரசின் நீர்வளத் துறை அமைச்சகம் 02.06.1990 அன்று உத்தரவு பிறப்பித்தது. இது தான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டதற்கான உண்மையான வரலாறு ஆகும். இதில் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் பங்கு ஏதுமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் MGR 1986இல் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தால்தான்

காவேரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அது அமைக்கப்பட்ட 1990ஆம் ஆண்டில் திரு. கருணாநிதி தமிழகத்தின் முதல்வராக இருந்தாரே தவிர அவருக்கு அதில் எவ்விதப் பங்கும் இல்லை.

இதே போன்று, காவேரி நடுவர் மன்றம் 25.6.1991 அன்று இடைக்கால ஆணையை வழங்கியபோது, எனது ஆட்சிக் காலத்தில் நான் எடுத்த முயற்சிகளின் பயனாக அந்தத் தீர்ப்பு 10.12.1991 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து, காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்தும் வகையில் ஒரு திட்டத்தினை வரையறுக்குமாறு, மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று வலியுறுத்தி 14.05.1992 அன்று எனது தலைமையிலான தமிழக அரசின் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதற்காக, 1993ஆம் ஆண்டு நான் 4 நாட்கள் உண்ணாநோன்பு மேற்கொண்டேன்.

இது மட்டுமல்லாமல் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்த கண்காணிப்புக் குழுவையும், நடைமுறைப்படுத்தும் குழுவையும் அமைக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி, 28.12.1995 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் எனது அரசால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனது தலைமையிலான தமிழக அரசால், 1992ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றம் முன்பு 09.04.1997 அன்று விசாரணைக்கு வந்த போது, இடைக்கால தீர்ப்பினை நடைமுறைப்படுத்த ஒரு திட்டத்தினை வகுக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டிருப்பதாக, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்ததையடுத்து, இதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய இந்தத் திட்டத்தினை வலுவிழக்கச் செய்து, பாரதப் பிரதமரை தலைவராகவும், காவேரி படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட காவேரி நதிநீர் ஆணையத்தை மத்திய அரசு ஏற்படுத்தியபோது அதனை ஏற்றுக் கொண்டவர் திரு. கருணாநிதி.

அப்போதைய BJP தலைமையிலான மத்திய அரசுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

ஆதரவு அளித்து வந்தது. மத்திய அமைச்சரவையிலும் நாங்கள் அங்கம் வகித்தோம். பாரதப் பிரதமரை தலைவராகவும், சம்பந்தப்பட்ட காவேரிப் படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட காவேரி நதிநீர் ஆணையம் அமைப்பதற்கு பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு எனது ஆதரவைக் கோரியது.

அப்போதைய பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களும், இது குறித்து என்னிடம் விவாதித்தார். காவேரி நதிநீர் ஆணையத்தின் அதிகாரத்தை குறைக்கும் நோக்கில், அப்போதைய மத்திய அரசின் செயல்பாடு இருந்ததால், இதனை ஏற்க முடியாது என்று திட்டவட்டமாக நான் மறுத்தேன். காவேரி நடுவர் மன்ற தீர்ப்பினைச் செயல்படுத்தக் கூடிய அதிகாரம் மிக்க ஆணையம் அமைக்கப்பட வேண்டும்; கர்நாடகாவில் உள்ள அணைகளை இயக்கும் அதிகாரம் படைத்த அதிகாரிகளைக் கொண்ட ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் நான் பிடிவாதமாக இருந்தேன். அதில் உறுதியாக நின்றேன்.

தமிழகத்திற்கு அநீதி இழைக்கும் மத்திய அரசின் செயலுக்கு நான் செவி சாய்க்கவில்லை. அதே சமயத்தில், இந்த விஷயத்தில் மத்திய அரசின் நடவடிக்கையைக் கூர்ந்து கவனித்து வந்தேன்.

மத்திய அரசோ, 'துரோகம்' என்ற வார்த்தையை தன்னகத்தே கொண்டுள்ள திரு. கருணாநிதியுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. அப்போது திரு. கருணாநிதிதான் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். அதன் விளைவு, செயலற்ற, வலுவற்ற, பயனற்ற காவேரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டது.

இதனையடுத்து, பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அளித்து வந்த ஆதரவை நாங்கள் திரும்பப் பெற்றோம். மத்திய அமைச்சர் பதவிகளைத் தூக்கி எறிந்தோம்.

தன் நலன், தன் குடும்ப நலன், தன் குடும்ப வியாபார நலன் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும் என்ற ஒரே லட்சியத்துடன் செயல்பட்டு வந்த திரு. கருணாநிதி, கர்நாடகத்திற்கு சாதகமாகச் செயல்பட நினைத்த அப்போதைய மத்திய அரசுடன்



இணைந்து செயல்பட்டார். தன் உறவுகள் கொழிக்க வேண்டும் என்பதற்காக, மத்திய அரசோடு உறவாடினார். அந்த உறவு இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதாவது, மத்திய அரசு யாருடைய தலைமையில் அமைந்தாலும், அந்த மத்திய அரசுடன் எப்படியாவது கையை பிடித்து, காலைப் பிடித்தாவது திரு. கருணாநிதி உறவை ஏற்படுத்திக் கொள்வார். எந்தக் கொள்கையும் இல்லாமல் அதிகாரம் ஒன்றே குறிக்கோள் என்பதால் அவரால் அப்படிச் செயல்பட முடிகிறது.

என்னைப் பொறுத்த வரையில், எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது என் விருப்பம் அல்ல. மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென்றால் அதற்கு ஆட்சி அதிகாரம் முக்கியம். அதற்காகத்தான், இந்த முதலமைச்சர் பதவியை நான் வகித்துக் கொண்டிருக்கிறேன். தமிழர்களின் உரிமைகளுக்காக மத்திய அரசுடன் தொடர்ந்து நான் போராடிக் கொண்டிருக்கிறேன். தமிழர்களின் உரிமைகளைப் பொறுத்த வரையில், சமரசம் என்ற பேச்சுக்கே

இடமில்லை என்ற உறுதியுடன் நான் செயல்பட்டு வருகிறேன்.

தமிழர்களின் உரிமைக்காக, மத்திய அரசிலிருந்து வெளியேறி மிகப் பெரிய தியாகம் செய்த இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். இது போன்ற ஒரு தியாகத்தை திரு. கருணாநிதி செய்திருக்கிறாரா? செய்ய அவருக்கு மனம்தான் வருமா?

இப்படிப்பட்ட காவேரி நதிநீர் ஆணையத்தை 07.08.1998 அன்று ஏற்படுத்தியதற்காகத் தான் பத்திரிகைகள் தன்னை பாராட்டியதாக கூறியுள்ளார் திரு. கருணாநிதி. இந்தக் காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டம்தான், 2003 முதல் 2012 வரை 9 ஆண்டுகளாக நடைபெறவே இல்லை என்பதை திரு. கருணாநிதிக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 05.02.2007 அன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக திரு. கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். இந்த இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா? இல்லை! நிச்சயமாக இல்லை! மாறாக, இதை வெளியிடாமல் இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொண்டிருந்தார். முதலில் 90 நாட்கள் கழித்துத்தான் வெளியிட முடியும் என்று கூறினார். பின்னர், 1956ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டத்திற்கு 2002இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட்டுவிட்டால் தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய முடியாது என்று கூறினார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், கர்நாடக அரசின் வழக்கறிஞர்போல திரு. கருணாநிதி செயல்பட்டார். தமிழகத்திற்குச் சாதகமாக எந்த நடவடிக்கையையும் திரு. கருணாநிதி எடுக்கவில்லை என்பதை நான் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2009ஆம் ஆண்டில் கர்நாடகம் உரிய தண்ணீரைத் திறந்து விடாமல் இருந்தபோது, காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தை கூட்டுமாறு தமிழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

2010ஆம் ஆண்டிலும் காவேரியில் கர்நாடகம் உரிய தண்ணீரைத் திறந்துவிடாத சூழ்நிலையில், அன்றைய முதலமைச்சர் என்ற முறையில் காவேரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டுமாறு பாரதப் பிரதமருக்கு, திரு. கருணாநிதி கடிதம் எழுதினார். இருப்பினும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில், காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணை காலாவதியாகிவிட்டது என்றும்; இறுதி ஆணை இன்னமும் மத்திய அரசிதழில் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவித்து; எனவே சட்டப்படி கர்நாடகம் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டிய அவசியம் இல்லை என்று கர்நாடக அரசின் தலைமைச் செயலாளர், தமிழக அரசிற்கு 15.10.2010 அன்று கடிதம் எழுதினார். இந்தத் தருணத்திலும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி வலியுறுத்தவில்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், திரு. கருணாநிதி பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் இருந்து இன்று வரை கர்நாடகத்திற்குச் சாதகமாகவே நடந்து கொண்டிருக்கிறார். மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்தும், தமிழக விவசாயிகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற மனம் திரு. கருணாநிதியிடம் இல்லை.

வாரி வழங்குவதிலே கர்ணனுக்கு நிகர் யாருமில்லை என்பார்கள். இதன் காரணமாக யாருக்கும் இல்லாத புகழ் கர்ணனுக்கு இருந்தது.

கர்ணனின் புகழ் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே சென்றது. ஒரு நாள் துரியோதனனின் அமைச்சர், துரியோதனனிடம், ‘‘கர்ணன் ஒரு சிறிய நாட்டைத்தான் ஆள்கிறார். அந்த நாட்டைக் கொடுத்ததும் நீங்கள்தான். ஆனால், கர்ணனின் புகழ்தான் ஓங்கி இருக்கிறது – இது சரிதானா?’’ என்று குதர்க்கமாகக் கேள்வி கேட்டார்.

துரியோதனனுக்கு, அமைச்சர் கூறுவது சரி என்று தோன்றியது. துரியோதனன் உடனே அமைச்சரைப் பார்த்து, ‘‘நானும் கர்ணன் மாதிரி புகழ் பெற ஏதாவது ஒரு யோசனையைச் சொல்’’ என்று கேட்டார்.

"மகா பிரபுவே தாங்களும் கர்ணனைப் போல் கொடை கொடுக்கத் துவங்கிவிடுங்கள். பின்னர் தங்களுக்குக் 'கொடை வள்ளல்' என்ற பெயர் கிடைக்கும்", என்றார் அமைச்சர்.

துரியோதனும் "சரி, அப்படியே செய்கிறேன்" என்றார்.

உடனே அமைச்சர், "அருமையான யோசனை சொன்ன எனக்கு ஏதாவது பரிசு தரக் கூடாதா ?" என்று கேட்டார். அதற்கு துரியோதனன், "அதற்குத்தான் சம்பளம் தருகிறேனே" என்று கூறினார்.

மறுநாள், "துரியோதன மகாராசாவும் கொடை கொடுப்பார்", என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைக் கேள்விப்பட்டவுடன், பகவான் கிருஷ்ணர் தள்ளாத முதியவர் வேடத்தில், துரியோதனனிடம் வந்து, "அய்யா, எனக்கு ஒரு பொருள் தானமாக வேண்டும்" என்று கேட்டார்.

உடனே துரியோதனன், "என்ன வேண்டும் ? கேளுங்கள் தருகிறேன்" என்று கூறினார்.

அதற்கு அந்த முதியவர், "இன்னும் ஒரு மாதம் கழித்து இதே நாளில் வந்து நான் விரும்பும் பொருளைப் பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார்.

பின்னர் பகவான் கிருஷ்ணர், வருண பகவானை அழைத்து, "இன்னும் ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து மழை பெய்ய வேண்டும்" என்று அறிவுறுத்தினார். ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து அடைமழை பெய்தது.

மீண்டும் கிருஷ்ணர், முதியவர் வேடத்தில் துரியோதனனைப் பார்த்து, "நான் உங்களை முன்பே சந்தித்து எனக்குக் கொடையாக ஒரு பொருளைத் தர வேண்டும் என்று கேட்டிருந்தேன். தாங்களும், தருவதாகச் சொன்னீர்கள். நினைவு இருக்கிறதா ?" என்று கேட்டார்.

அதற்குத் துரியோதனன், "நினைவு இருக்கிறது. தங்களுக்கு என்ன வேண்டும் ? கேளுங்கள்" என்று கேட்டார்.

கிருஷ்ணர், "கொடை வள்ளலே என் மகளின் திருமணத்திற்காக எனக்கு ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகு வேண்டும்" என்று கேட்டார்.

இதற்கு துரியோதனன், "ஒரு மாதமாக மழை பெய்து கொண்டே இருக்கிறது. நாங்களே விறகு இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். விறகு மட்டும் கேட்காதீர். வேறு ஏதாவது வேண்டும் என்றால் கேளுங்கள்," என்று சினத்துடன் கூறினார்.

இதற்குப் பதிலளித்த கிருஷ்ணர், "தாங்கள் எனக்கு கொடுத்த வாக்கு என்னாவது?" என்று கேட்டார். அதற்குத் துரியோதனன், "வாக்காவது, போக்காவது" என்று கூறினார்.

முதியவர் வேடத்தில் கிருஷ்ணர் அங்கிருந்து புறப்பட்டு கர்ண மகாராசாவின் அரண்மனைக்குச் சென்றார்.

முதியவரைப் பார்த்த கர்ணன், முதியவருக்கு உடுத்திக் கொள்ள மாற்று உடையும்; துவட்டிக் கொள்ள துண்டும் அளிக்குமாறு உத்தரவிட்டார். முதியவரும் உலர்ந்த ஆடைகளை உடுத்திக் கொண்டார். அவருக்குச் சூடான பாலும் கொடுக்கப்பட்டது.

சற்று இளைப்பாறிய முதியவர், "அய்யா, என் மகளின் திருமணத்தை முன்னிட்டு எனக்கு ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகு வேண்டும். அதைக் கொடையாக கேட்கவே நான் இங்கு வந்துள்ளேன்." என்றார்.

உடனே கர்ணன், "நம் நாட்டில் உள்ள பாழடைந்த அரண்மனையில் நிறைய தூண்களும் உத்திரங்களும் உள்ளன. அவை மழையில் நனையாமல் காய்ந்த நிலையில் உள்ளன. அவற்றை வண்டியில் ஏற்றி, அவை நனையாமல் இருக்க, அவற்றின் மேல் ஓலைகளைக் கூரை போல் வேய்ந்து, முதியவரின் ஊருக்கு அனுப்பி வையுங்கள்" என்று அரண்மனை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கர்ண மகாராசாவின் உத்தரவுப்படி விறகினைப் பெற்றுக் கொண்ட முதியவர், துரியோதனன் மாளிகை வழியாகச் சென்றார்.

"பெரியவரே காய்ந்த விறகு கிடைத்து விட்டதா?" என்று வினவினார் அமைச்சர். அதற்கு, "கொடை வள்ளல் கர்ண மகாராசாதான் கொடுத்தார்" என்று கூறினார் அந்த முதியவர்.

கொடை கொடுக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது. கொடை உள்ளமும், கூர்த்த அறிவும் வேண்டும் என்னும் உண்மை துரியோதனனுடைய அமைச்சருக்குப் புரிந்தது.

கொடை கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும். பிறவிக் குணம் இல்லாமல் கொடை கொடுக்கிற மனம் தானாக வராது. அதேபோல்தான், தமிழர்களுக்குக் காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும் என்பதற்கும் மனம் வேண்டும். தன்னலத்தைக் கொண்டிருப்பவர்களுக்குத் தமிழகத்தின் உரிமையை பெற்றுத் தரக் கூடிய மனம் தானாக வராது.

என்னைப் பொறுத்த வரையில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்; காவேரி நீரை தமிழக மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்ற மனம் என்னிடத்தில் இருக்கிறது. தமிழகத்தின் உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணம் என்னுடைய ரத்தத்தில் ஊறிய ஒன்று.

இதனால்தான், சுயநலமின்றி, தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் நான் செயல்பட்டேன். அதில் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

நாம் எவ்வளவு மன்றாடிக் கேட்டும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை அரசிதழில் வெளியிட மத்திய அரசு முன்வரவில்லை. எனவே, இதனை வெளியிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றினைத் தாக்கல் செய்ய நான் உத்தரவிட்டேன். இவ்வாறு பல விஷயங்களில், கர்நாடகம் மற்றும் மத்திய அரசுக்கு எதிராக வழக்குகள் தொடுக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

நமது உரிமைகளை, நீதிமன்றங்கள் மூலம் நிலைநாட்ட வேண்டிய கட்டாயத்தில் நாம் இன்று இருக்கிறோம். இந்த நிலைமை விரைவில் மாறும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. மத்தியிலும், மாநிலத்திலும், ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருந்தபோது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட திரு. கருணாநிதி நடவடிக்கை எடுத்திருந்தால், இன்றைக்கு காவேரி மேலாண்மை

வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை அமைக்கப்பட்டிருக்கும். நமக்கு உரிய நீரை நாம் பெற்றிருக்க முடியும்.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் வெற்றி பெறும் நிலை இருந்தபோது, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமரை இது குறித்து சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது, இறுதி ஆணையை அரசிதழில் வெளியிட வேண்டும் என்று சொன்னார்களா? அல்லது வெளியிட வேண்டாம் என்று சொன்னார்களா? என்பது தெரியவில்லை. ஆனால், எழுத்துப் பூர்வமாக எதையும் அளிக்கவில்லை. இந்தச் சந்திப்பின் மர்மம் என்ன என்பதைத் திரு. கருணாநிதி தான் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும். இவர்கள் சந்தித்ததாலோ என்னவோ, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது.

பின்னர், மீண்டும் உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டால் தான், மத்திய அரசு வேறு வழியில்லாமல் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட்டது. ஆனால், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியோ, "உச்ச நீதிமன்றமே, தானே முன் வந்து பிறப்பித்த உத்தரவுக்காக ஜெயலலிதாவுக்கு பாராட்டு என்கிறார்கள்...", என்று தனக்குள் இருக்கும் பொறாமை உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறார். காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான தமிழக அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரத்தை இந்தத் தருணத்தில் திரு. கருணாநிதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவேரியில் போதிய அளவு தண்ணீரை கர்நாடகம் திறந்து விடாததன் காரணமாகவும்; பருவமழை பொய்த்ததன் காரணமாகவும் பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் நிவாரணம் வழங்கி இருக்கிறோம். 50 விழுக்காட்டிற்கு மேல் பயிர் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, இந்தத் தொகை அவரவர் வங்கிக் கணக்குகளில்

செலுத்தப்பட்டுள்ளது. 3,06,794 விவசாயிகளுக்கு, 524 கோடியே 36 லட்சம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

50 விழுக்காட்டிற்கு மேல் பயிர் பாதிப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு, 15,000 ரூபாய் இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்றால், இதில் தமிழக அரசு வழங்கியது எவ்வளவு? பேரிடர் நிவாரணத் தொகை எவ்வளவு? காப்பீட்டு நிறுவனம் வழங்கியது எவ்வளவு? என்றெல்லாம் திரு. கருணாநிதி வினா எழுப்பியுள்ளார். நிவாரண உதவிகளை நான் 08.02.2013 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தபோதே, இது பற்றி தெளிவாகக் கூறியுள்ளேன். இருப்பினும், அதனை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

50 விழுக்காடு பயிர் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அவர்களுக்குக் காப்பீட்டு நிறுவனம் 4,346 ரூபாய் மட்டுமே அளிக்கும். இந்தத் தொகையும் பயிர் அறுவடை சோதனைகள் முடிந்த பின்னரே கிடைக்கும். காப்பீட்டிற்கான முழுத் தொகையையும் விவசாயிகள் சார்பாக தமிழக அரசே செலுத்தியுள்ளது. அரசு காப்பீட்டுத் தொகையைச் செலுத்தியதால்தான், காப்பீட்டு நிறுவனங்கள் நிவாரணம் அளிக்க உள்ளன. மேலும், வழங்கப்பட வேண்டிய காப்பீட்டு நிவாரணம், வசூலிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகையைவிடக் கூடுதலாக வழங்க நேரிட்டால், காப்பீட்டு நிறுவனம், செலுத்தப்பட்ட காப்பீட்டுத் தொகையில், நிர்வாக செலவு நீங்கலாக உள்ள வசூலிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகையை மட்டுமே இழப்பீடாக வழங்கும். மீதமுள்ள இழப்பீட்டுத் தொகையில், 50 விழுக்காட்டு தொகையினை மத்திய அரசும்; 50 விழுக்காட்டு தொகையினை மாநில அரசும் வழங்க வேண்டும்.

தேசிய பேரிடர் நிவாரணத் தொகை, ஐந்து ஆண்டு திட்டக் காலத்தில், ஐந்து ஆண்டுகளுக்கு மாநில அரசுக்கு வழங்கப்படுகிறது. மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள தொகைக்கு அதிகமான செலவினத்தை மாநில அரசு தான் மேற்கொள்ள வேண்டும். எனவே, 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, வழங்கப்படும் முழு நிவாரணத் தொகையான 15,000 ரூபாயையும் மாநில

அரசே தற்போது வழங்குகிறது. 51 விழுக்காடு இழப்பிற்கு, ஏக்கர் ஒன்றுக்கு, மத்திய அரசிடமிருந்தும், பயிர் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்தும் பெறக்கூடிய தொகை 2,304 ரூபாய். இதிலிருந்து, மாநில அரசு செலுத்தியுள்ள காப்பீட்டுத் தொகையைக் கழித்துவிட்டால், அரசு பெறக்கூடிய தொகை 2,130 ரூபாய் தான். இந்தக் கணக்கின்படி பார்த்தால், 50 விழுக்காட்டிற்கு மேல் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, இழப்பீட்டிற்குத் தக்கவாறு ஏக்கருக்கு 11,000 ரூபாயிலிருந்து 13,000 ரூபாய் வரையிலான இழப்பீட்டை தமிழக அரசு வழங்குகிறது.

விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், ஏக்கருக்கு 15,000 ரூபாயினை விவசாயிகளுக்கு அளித்து இருக்கிறோம். பயிர்க் காப்பீட்டுத் தொகைக் கட்டணத்தையும் விவசாயிகள் சார்பில் எனது தலைமையிலான தமிழக அரசே செலுத்தி இருக்கிறது. நான் இந்த அறிவிப்பை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்த போது, இதனை எதிர்கட்சிகள், குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் மனதாரப் பாராட்டினர். வறட்சி காலங்களில் இது போன்ற நிவாரணம் கொடுப்பது இதுவே முதல் முறை என்றும் தெரிவித்தனர். ஆனால், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியோ, வெளியில் இருந்து கொண்டு பொறாமையால், அறியாமையால், குழப்பத்தால் ஏதேதோ கூறிக் கொண்டிருக்கிறார்.

நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, பாரதப் பிரதமரை நான் கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைப்பது மத்திய அரசின் கடமை என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்து இருக்கிறது. எனவே, சட்டப்படி காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

இல்லையெனில், உங்களின் ஆதரவுடன் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை சட்டப்படி மேற்கொள்வேன். காவேரியில் நமக்குள்ள உரிமையை நிலைநாட்டி, தமிழகத்திற்குரிய பங்கினைப் பெற்றுத் தருவேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

இந்த நன்றி தெரிவிக்கும் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்த விவசாய சங்கங்கள் அனைத்திற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பொது வாழ்விற்கு வந்து 31 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 31 ஆண்டுகளில் உண்மையான மன நிறைவை அளிக்கும் விழா இன்று நடைபெற்றுக் கொண்டு இருக்கும் இந்த விழா என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த மேடையில் எனக்குப் பாராட்டு தெரிவித்து என்னை வாழ்த்திப் பேசிய பெரியவர்கள் குறிப்பாக அன்புச் சகோதரர் திரு. தா. பாண்டியன் அவர்கள் பேசியதையும், பெரியவர் திரு. காவேரி சீ. ரெங்கநாதன் பேசியதையும், திரு. எம். ராஜேந்திரன், திரு. சத்யநாராயணன், திரு. பயரி கிருஷ்ணமணி, உழவர் திரு. பாண்டுரங்கன், திரு. ராஜாராம், திரு. திருவையாறு நவரோஜி சோழகர் ஆகியோர் பேசிய வார்த்தைகளையும் என்னால் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது. எத்தனையோ பேர் பாராட்டுத் தெரிவிப்பார்கள். அவையெல்லாம் உதட்டளவிலான பாராட்டுக்கள். இன்று என்னை வாழ்த்தியவர்களின் வார்த்தைகள் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து வந்தது என்பதை என்னால் உணர முடிந்தது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நான் நடந்து கொள்வேன் என்ற உத்தரவாதத்தினை அளித்து அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

'கெயில்' திட்டம் தொடர்பாக
தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் கொண்டுவரப்பட்ட
சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு
அளித்த பதிலுரை – (25.03.2013)



திட்டத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நமது அரசியல் சட்டம் நிலையானது அல்ல. ஏனென்றால், ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் சட்டத்தைத் திருத்த அந்த மக்களுக்கு எப்போதும் எல்லா உரிமையும் உண்டு" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் வழியில் ஆட்சி நடத்தி வரும் எனது தலைமையிலான அரசு, மக்களுக்காக இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் வகுக்கப்படும் திட்டங்களால்

மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

கேரள மாநிலம், கொச்சி திரவ எரிவாயு முனையத்திலிருந்து பெங்களூர் வரை, தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களின் விவசாய நிலங்களின் ஊடே 310 கிலோ மீட்டர் தூரத்திற்கு எரிவாயுக் கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள கெயில் நிறுவனம் அதாவது Gas Authority of India Limited திட்டமிட்டது.

மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில் 310 கிலோ மீட்டர் நீளத்திற்கும், 20 மீட்டர் அகலத்திற்கும் எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்படுவதற்காக Petroleum and Minerals Pipeline Act, 1962 என்ற சட்டத்தின் கீழ் 5,842 பட்டாதாரர்களுக்குக் சொந்தமான சுமார் 1,491 ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டு உரிமையை, அதாவது Right of Use-I பெறுவதற்கு கெயில் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை நிலத்தின் சந்தை மதிப்பில் 10 சதவீதம் ஆகும்.

இந்தத் திட்டம் விவசாயிகளின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்படுத்தப்படுகிறது என்றும்; தற்போது கெயில் வகுத்துள்ள திட்டப்படி இது செயல்படுத்தப்பட்டால் விவசாயிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்படும் என்றும் தெரிவித்து; இந்தத் திட்டத்திற்கு ஏழு மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். விவசாயிகளின் கவலை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் 28.02.2013 அன்று மாண்புமிகு அமைச்சர்களுடனும், அரசு உயர் அதிகாரிகளுடனும் நான் ஆலோசனை நடத்தினேன்.

இக்கூட்டத்தில் விவசாயிகளின் கருத்துகளை முதலில் கேட்டறிவது அவசியம் என்று நான் எடுத்துக் கூறியதுடன், சென்னை உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவின் அடிப்படையில் அரசுத் தலைமைச் செயலாளரால் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டேன்.

எனது ஆணைப்படி கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டம் தொடர்பாக கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களுக்காகப் பொதுக் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் 2013 மார்ச்சு திங்கள், 6, 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னை–ராஜா அண்ணாமலைபுரம்,பி.எஸ்.குமாரசாமிராஜா சாலையிலுள்ள, அண்ணா மேலாண்மை நிலையக் கூட்டரங்கத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்பட்டன. இந்தப் பொதுக் கருத்துக் கேட்புக் கூட்டங்களில் மேற்குறிப்பிடப்பட்ட ஏழு மாவட்டங்களின் 134 கிராமங்களைச் சார்ந்த 2,428 விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டங்களில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளும்,

1. கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய் அமைப்பதனால் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும்;

2. கெயில் நிறுவனம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் விவசாய நிலத்தின் பெரும்பகுதியின் நிலப் பயன்பாட்டு உரிமையினைப் பெறுவதால் விவசாயிகள் தங்களது நிலத்தில் உரிய விவசாயம் செய்ய இயலாமல் நிலத்தின் பெரும்பகுதியினை இழக்க நேரிடுவதுடன், எதிர்காலத்தில் நில மேம்பாட்டிற்குத் தேவையான எதையும் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படும் என்றும்;

3. சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் நிலங்களின் வழியாக கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய்கள் பதிப்பதனால் அந்த விவசாயிகளின் பொருளாதார நிலைமை மிகக் கடுமையாகப் பாதிப்படைவதுடன், அவர்கள் எரிவாயுக் குழாய் பதிக்கப்படும் நிலத்தில் தேவையான விவசாயப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் என்றும்;

4. விவசாய நிலங்களின் வழியாக கெயில் நிறுவனம் எரிவாயுக் குழாய்கள் பதிப்பதனால் அந்நிலங்களின் மதிப்பு மிகக் கடுமையாக வீழ்ச்சியடையும் என்றும்;

5. கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய்த் திட்டத்தில் கவரப்படும் விவசாய நிலங்களுக்கு வங்கிகள் கடன் தர முன்வருவதில்லை என்றும்;

6. கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் திட்டத்தை மாற்றுப் பாதையில் கொண்டு செல்ல சாத்தியப்படக் கூடிய பகுதிகளிலும் விவசாயிகளின் கோரிக்கைகள் கெயில் நிறுவனத்தால் கருத்தில் கொள்ளப்படாமல், விவசாய நிலங்களின் வழியாகவே எரிவாயுக் குழாய் பதிக்க கெயில் நிறுவனம் முனைந்துள்ளது என்றும்;

7. இத்திட்டம் விவசாயிகளின் முழு மனதான ஒப்புதல் பெறாமலும், விவசாயிகளுக்கும் நில உரிமையாளர்களுக்கும் முறையான தகவல் அளிக்காமலும், கெயில் நிறுவனத்தினால் செயலாக்கம் செய்யப்பட்டது என்றும்;

8. இக்குழாய்கள் பதிப்பதனால் விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்கள் வாழ்நாள் முழுவதும் சிரமப்பட்டு உருவாக்கிய அவர்களின் வீடுகள், கோழிப்பண்ணைகள், கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் தண்ணீர்த் தொட்டிகள் கடுமையான சேதத்திற்கு உள்ளாகும் என்றும்;

9. விவசாயிகளின் நிலங்களில் எரிவாயுக் குழாய் பதிக்கப்படும் பகுதியில் ஆழமாக வேரூன்றும் மரங்கள் வளர்க்கக் கூடாது என கெயில் நிறுவனம் தடை செய்வதால் தென்னை மரம் மற்றும் பழவகை மரங்களைச் சார்ந்துள்ள இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும்;

10. கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய்த் தடம் சில இடங்களில் அனுமதி பெறப்பட்ட வீட்டுமனைப் பிரிவுகள், கல்வி நிறுவனங்கள் வழியாகச் செல்வதால் அவ்விடங்களில்

எரிவாயுக் கசிவு அல்லது பெரும் விபத்து ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, 08.03.2013 அன்று கெயில் நிறுவனம், தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்ப் பதிக்கும் பணியை மேற்கொண்டால் அந்தப் பணிகள் முடியும் வரை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துப் பாதிப்புகள் ஏற்படும் என்றும், தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்கள் பதிக்கும் பணிகளுக்குத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பொதுவாக அனுமதி வழங்காது என்றும், எதிர்கால விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்ப் பதிப்பு மேற்கொள்ள இயலாது என்றும், ஒவ்வொரு எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்குக் கூடுதல் வால்வு நிலையம் அமைக்க வேண்டியிருப்பதால் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பிரச்சினைகள் ஏற்படும் என்றும், தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பகுதிகளில் குழாய்கள் பதிக்கும் போது பாறைகள் உள்ள இடங்களில் பாறைகளை வெடிக்கச் செய்யும் போது இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குப் போக்குவரத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஏற்கெனவே வாங்கப்பட்ட பொருட்கள், குழாய்கள் மற்றும் திட்ட வடிவமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களின் ஆட்சேபணைகள் மற்றும் கெயில் நிறுவனத்தின் கருத்துகள் ஆகியவற்றை எனது தலைமையிலான அரசு கவனமாகப் பரிசீலித்தது. தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்ப் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியாததற்கு வலுவான தொழில் நுட்பக் காரணங்கள் எதையும் கெயில் நிறுவனம் தெரிவிக்கவில்லை. மாறாக, விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரம் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

விவசாயிகளின் வீழ்ச்சியில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதை நியாயஉணர்வுகொண்டயாரும்ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.ஒரு

திட்டத்தால் பாதிப்பு ஏற்படுமெனில், அதனால் யாருக்கு, எவ்வளவு பாதிப்பு என்பதையும், தேச நலன் எவ்வளவு என்பதையும் கருத்தில் கொண்டே முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில், இந்தத் திட்டத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து தேசிய நெடுஞ்சாலை வழியாக குழாய்கள் பதிக்கும் பணிகளை மேற்கொண்டால் திரவ எரிவாயுத் தொழிற்சாலைகளுக்கும், பொதுமக்களுக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு எனது தலைமையிலான அரசு கீழ்க்காணும் முடிவுகளை எடுத்துள்ளது.

1. கெயில் நிறுவனம் விவசாய விளை நிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் தற்போதைய திட்டத்தினை உடனடியாகக் கைவிடவேண்டும்.

2. இத்திட்டத்திற்கான குழாய்களைத் தமிழக விவசாயிகளின் வேளாண்நிலங்கள்பாதிக்காதவகையில்நெடுஞ்சாலைகளின் ஓரமாகப் பதிப்பதற்குக் கெயில் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. கெயில் நிறுவனம் ஏற்கெனவே நிலங்களில் குழாய்களைப் பதிக்கத் தோண்டியுள்ள குழிகளை உடனடியாகச் சமன்படுத்தி அந்நிலங்களை அதன் முந்தைய நிலையில் விவசாயிகளிடமும் நில உரிமையாளர்களிடமும், ஒப்படைக்க வேண்டும்.

4. விவசாயிகள் தங்களது விவசாயப் பணிகளைத் தொடரும் வகையில் ஏற்கெனவே பதிக்கப்பட்ட குழாய்களை கெயில் நிறுவனம் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

5. இந்தத் திட்டத்தினால் பழவகை மரங்களையும் மற்றும் பிற கட்டுமானங்களையும் இழந்து, தற்போது வரை இழப்பீடு அளிக்கப்படாத விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் உடனடியாக கெயில் நிறுவனம் உரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும்.

மேற்கண்ட தமிழக அரசின் முடிவுகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலை வழியாகக் குழாய்ப் பதிப்பு நடவடிக்கைகளை கெயில் நிறுவனம் மேற்கொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக, தமிழகத்திற்குத் திரவ எரிவாயு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் கெயில் நிறுவனம் மேற்கொள்ள வேண்டும்.

"கெயில்" திட்டம் தொடர்பாக விவசாயிகள் மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

திட்டத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம் என்பதில் எனது தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது என்பதையும், மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் எந்தத் திட்டத்திற்கும் எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு என்றைக்கும் உடந்தையாக இருக்காது என்பதையும் தங்கள் வாயிலாக, இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்து அமர்கிறேன்.

✶ ✶ ✶

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால்
அடித்து துன்புறுத்தப்படுவது தொடர்பாக
சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்ட
சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு
அளித்த பதிலுரை – (26.03.2013)



இந்தியா–இலங்கை இடையேயான கச்சத்தீவு உடன்படிக்கையை இந்தியா திரும்பப் பெறவேண்டும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் அடித்துத் துன்புறுத்தப்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தங்களது கருத்துகளை எடுத்துரைத்து இருக்கிறார்கள். இந்தப்

பிரச்சினை குறித்த எனது விரிவான விளக்கத்தை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தியாவின் ஒரு பகுதியாக கச்சத்தீவு இருந்த போது இந்தப் பிரச்சினை எழவில்லை. தமிழக மீனவர்கள் கச்சத்தீவின் அருகில் மீன் பிடித்து தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். 1974ஆம் ஆண்டு, இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது. அப்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் திரு. கருணாநிதி தான். அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி, இரு நாடுகளும் பரம்பரை பரம்பரையாக, தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதையெல்லாம் இலங்கை அரசு மதிப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

1991ஆம் ஆண்டு நான் முதன் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையிடம் இருந்து காப்பாற்ற கச்சத்தீவினை மீட்பதைத் தவிர வேறு வழி இல்லை என்று முடிவெடுத்து, இதனை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாரதப் பிரதமரை நேரிலும், கடிதம் மூலமாகவும் வற்புறுத்தினேன். குறைந்தபட்சம் நிரந்தரமான குத்தகை, அதாவது, Lease in perpetuity என்ற முறையிலாவது, தமிழக மீனவர்கள் கச்சத்தீவிற்குச் சென்று மீன் பிடிக்கும் உரிமையையாவது பெற்றுத் தர வேண்டும் என்று பாரதப் பிரதமரை பல முறை வற்புறுத்தி இருக்கிறேன். இருப்பினும், மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

2006 முதல் 2011 வரை தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர் திரு. மு. கருணாநிதி. திரு. கருணாநிதி தயவில் தான் மத்திய அரசும் இருந்தது. தன் நலத்திற்காகப் பல மிரட்டல்களை

மத்திய அரசுக்கு விடுத்த திரு. கருணாநிதி, தான் செய்த பாவத்திற்குப் பரிகாரமாகக் கச்சத்தீவினை மீட்டுத் தருமாறு மத்திய அரசை வலியுறுத்தி இருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் கச்சத்தீவு பற்றிய எண்ணமே திரு. கருணாநிதிக்கு இல்லாமல் போய்விட்டது.

ஆனால், 12.08.2012இல் நடைபெற்ற புத்துயிரூட்டப்பட்ட 'டெசோ' மாநாட்டில், ''கச்சத்தீவை இந்தியா மீண்டும் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வருவதோடு; தனுஷ்கோடி அல்லது மண்டபம் முகாமில் இந்தியக் கடற்படைத் தளம் ஒன்றை இந்திய அரசு நிறுவ வேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

1974ஆம் ஆண்டு கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட போது, அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அதைத் தடுக்கத் தவறிவிட்டார். மேற்கு வங்காளத்தில் உள்ள பெருபாரி பகுதியை 1960–க்கு முன்பு கிழக்குப் பாகிஸ்தானுக்கு இந்திய அரசு தாரைவார்க்க முயன்ற போது, அதனை எதிர்த்து அப்போதைய மேற்கு வங்க அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், ''இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்'' என 1960ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. மேற்கு வங்க அரசின் இந்த நடவடிக்கையை 1974ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் திரு. கருணாநிதி பின்பற்றி இருப்பாரேயானால், கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டு இருக்காது. ஆனால் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த திரு மு. கருணாநிதி இதைச் செய்யத் தவறி விட்டார்.

கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டதன் காரணமாக, தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் இன்றளவும் தொடர்கிறது. தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்தெறிவதையும்; அவர்களை ஆயுதங்களால்

துன்புறுத்துவதையும்; இலங்கைக் கடற்படையினர் வாடிக்கையாக கொண்டு இருக்கிறார்கள். தமிழக மீனவர்களுடைய வாழ்வாதாரமே கேள்விக்குறியாகியுள்ளது. தங்களது உயிரைப் பணயம் வைத்து மீன் பிடித் தொழிலைத் தமிழக மீனவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழக மீனவர்கள் ஒவ்வொரு முறையும் இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்படும் போதும்; பாரதப் பிரதமரை வலியுறுத்தியும்; தமிழக அரசு அதிகாரிகள் மூலம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டும் அவர்களை மீட்டெடுத்து இருக்கிறேன். தமிழக மீனவர்களும் இந்திய நாட்டுக் குடிமக்கள்தான் என்பதை பாரதப் பிரதமருக்கு உணர்த்தி; வலுவான, உறுதியான, ஆக்கப்பூர்வமான, ராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பல முறை வலியுறுத்தி இருக்கிறேன். பரம்பரை பரம்பரையாக, மீன்பிடித்து வரும் அப்பாவித் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள இலங்கை அரசுக்கு அறிவுரை கூற வேண்டும் என்றும் வற்புறுத்தி இருக்கிறேன். ஆனால், மத்திய அரசோ தமிழக மீனவர்கள் என்றால் இந்திய நாட்டிற்கு அப்பாற்பட்டவர்கள் என்று நினைத்தோ என்னவோ, தொடர்ந்து மவுனம் சாதித்து வருகிறது. மத்திய அரசின் கையாலாகாத்தனம் காரணமாக தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதல், கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நான்கு முறை நடைபெற்று இருக்கிறது. இது உண்மையிலேயே கவலை அளிக்கக் கூடியது.

தமிழக மீனவர்களின் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் எனில், கச்சத்தீவு மீண்டும் நமது நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். கச்சத்தீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்குக் கிடைத்திட வேண்டும். எனவே தான், நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம், உச்ச

நீதிமன்றத் தீர்ப்பிற்கிணங்க, கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி; இது குறித்த இந்தியா – இலங்கை உடன்படிக்கை செல்லாது என தீர்ப்பளிக்க வேண்டும் என்று 2008ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடுத்துள்ளேன். இந்த வழக்கில், தமிழக அரசின் வருவாய்த் துறையும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இந்த வழக்கை விரைவில் எடுத்து விசாரிக்கும் வகையில், உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் நமக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இது மட்டுமல்லாமல், இந்திய அரசின் ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் நான் நடவடிக்கை எடுத்து வருகிறேன். அப்பாவி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படும் போது, அவர்களை மீட்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது. மீனவர்களின் இன்னல்களை உணர்ந்து, அவர்களுக்கென பல்வேறு சலுகைகளை எனது அரசு அளித்து வருகிறது.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, போதைப் பொருள் கடத்தியதாக கூறி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு; சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த ஐந்து மீனவர்கள் சார்பாக இலங்கை நீதிமன்றத்தில் வாதாடி, அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கான நடவடிக்கையை எனது அரசு எடுத்துள்ளது. அந்த வழக்கிற்கான செலவுகளையும் எனது தலைமையிலான அரசு ஏற்றுள்ளது. இந்த ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக, தலா இரண்டு இலட்சம் ரூபாய் எனது தலைமையிலான தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், அவர்களது குடும்பங்கள் அன்றாட வாழ்க்கை நடத்திடும் வகையில், மாதந்தோறும் 7,500 ரூபாய் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

இவர்கள் தவிர, அண்மையில் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 19 தமிழக மீனவர்கள் இலங்கை சிறைச்சாலைகளில் உள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதல்களை இந்திய அரசு கடுமையாகக் கண்டிக்க வேண்டும் என்றும்; தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதற்கும்; கொடூரமாக துன்புறுத்தப்படுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், வலுவான நடவடிக்கைகளை ராஜதந்திர முறையில் இனிமேலாவது மேற்கொள்ள வேண்டும் என்றும்; டெல்லியில் உள்ள இலங்கை நாட்டு தூதரக அதிகாரியை நேரில் வரவழைத்து, இந்தியாவின் வலுவான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்றும், இந்தத் தருணத்தில் மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட இந்தியா – இலங்கை நாடுகளுக்கு இடையேயான கச்சத்தீவு உடன்படிக்கையை இந்தியா திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

இல்லையெனில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்ய உச்ச நீதிமன்றத்தை அணுகி வெற்றி பெற்றதைப் போல்; கச்சத்தீவு பிரச்சினையிலும் என்னால் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கு வரும் போது, வலுவான வாதங்களை முன் வைத்துச் சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

இலங்கைத் தமிழர்கள் குறித்த பிரச்சினை மற்றும் இதன் தொடர்பாக மாணவ – மாணவியர் நடத்திவரும் போராட்டம் குறித்து சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பெற்ற சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்து அரசின் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை – (27.03.2013)



தனி ஈழம் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தி, ஐக்கிய நாடுகள் அவையில் தீர்மானம் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை குறித்தும், இந்தப் பிரச்சனை தொடர்பாக மாணவ–மாணவியர் நடத்தி வரும் போராட்டம் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்து தங்களது கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தப் பிரச்சனை தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்

குறித்து எனது விளக்கத்தினை தங்களின் வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்படுவதை எதிர்த்தும், இலங்கை அரசின் இன வெறிக் கொள்கையை எதிர்த்தும் அங்குள்ள தமிழர்கள் 1980ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே குரல் எழுப்பி வருகிறார்கள். இந்த நீண்ட நெடிய உரிமைப் போராட்டத்தை நசுக்கும் வண்ணம், ஒட்டுமொத்த தமிழினத்தையே அழிக்க வேண்டும் என்ற நோக்கில் 2007ஆம் ஆண்டிலிருந்து திட்டம் தீட்டி, அதனை வெற்றிகரமாக 2009ஆம் ஆண்டு நிறைவேற்றியது இலங்கை அரசு. தமிழினத்தை அழித்த சிங்கள வெறிபிடித்த இலங்கை அரசுக்கு அனைத்துவிதமான உதவிகளையும் செய்தது தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு.

இலங்கை ராணுவத்தினருக்கு இந்திய மண்ணில் இந்திய ராணுவம் ரகசியமான முறையில் போர் பயிற்சி அளித்தது, இலங்கை ராணுவத்திற்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது, மிக நவீன ராணுவ ரேடார் கருவிகளை வழங்கியது, இந்திய ராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இந்திய அரசின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி சென்றது, எனப் பல செய்திகளை அப்போது ஊடகங்கள் படம் பிடித்துக் காண்பித்தன. நானும் இது குறித்து அறிக்கைகள் வெளியிட்டு, இந்திய அரசின் தமிழின விரோதச் செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தேன். இந்தச் செய்திகளுக்கு எல்லாம் மத்திய அரசு எவ்வித மறுப்பையும் தெரிவிக்கவில்லை. தமிழர் நலனை முன்னிட்டு மத்திய காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டும் என்றும் அப்போதே நான் தெரிவித்து இருந்தேன். ஆனால், அப்போது மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியோ, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, 'இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்துக்கு மத்திய அரசு முன்வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா' என்ற அளவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் ராஜினாமா கடிதங்கள் யாரிடம் கொடுக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். சில நாட்கள் கழித்து,

அப்போதைய மத்திய அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் திரு. கருணாநிதியை சந்தித்த பிறகு, "மத்திய அரசின் நடவடிக்கை திருப்தி அளிப்பதாக இருக்கிறது" என்று தெரிவித்து ராஜினாமா நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் திரு. கருணாநிதி.

இதனையடுத்து, டெல்லி வந்த இலங்கை அதிபர் பாரதப் பிரதமரை சந்தித்த பிறகு "போர் நிறுத்தம் கிடையாது" என்று அறிவித்தார். பின்னர், "இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைப் போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்ற அளவில் 12.11.2008 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'அனைத்துக் கட்சிக் கூட்டம்', 'சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்', 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்', 'மனிதச் சங்கிலி போராட்டம்', 'நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல் கடிதங்களை திரு. கருணாநிதியே பெற்றுக் கொள்ளுதல்', 'எல்லோரும் பிரதமருக்குத் தந்தி அனுப்புங்கள்' என்ற அறிவிப்பு, 'டெல்லியில் பிரதமருடன் சந்திப்பு', 'வேலை நிறுத்தம்', 'பேரணி' என பல்வேறு கண்துடைப்பு நாடகங்கள் தான் நடந்தனவே தவிர ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் நடந்த வரலாற்று உண்மைகள். வரலாற்றை மறுக்க முடியாது, மறைக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இலங்கையில் போரை நிறுத்த ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லி போரைத் தீவிரப்படுத்தியது தான் மிச்சம். கடைசியாக நடைபெற்ற திரு. கருணாநிதியின் மூன்று மணி நேர உண்ணாவிரத நாடகத்தின் மூலம் லட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்கள் ஒரே நாளில் இலங்கை ராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

ஆனால், இந்த மூன்று மணி நேர உண்ணாவிரதத்தைப் பற்றி புது விளக்கங்களை சமீப காலமாகக் கூறி வருகிறார் திரு. கருணாநிதி. இலங்கையில் தமிழர்கள் மீதான போரை நிறுத்திவிட்டதாக இலங்கை அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்ததாகவும், அதனை மத்திய அரசு நம்பி தனக்கு

தெரியப்படுத்தியதாகவும், அதனைத் தான் நம்பி இலங்கையில் போர் முடிந்து விட்டது என்று அறிவித்ததாகவும், இலங்கை அரசு அவ்வாறு ஏமாற்றிவிட்டதாகவும் சமீப காலமாக திரு. கருணாநிதி கூறி வருகிறார். இதனை எந்தத் தமிழரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

"போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது" என்று கூறி தனது உண்ணாவிரத நாடகத்தை மூன்று மணி நேரத்தில் முடித்துக் கொண்டதற்கு அடுத்தநாள், "கனரக ஆயுதங்களைப்பயன்படுத்தி தாக்குதல் நடைபெறுவதாக செய்திகள் வந்திருக்கிறதே" என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, "மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பார்களே, அதைப்போலத்தான்..." என்று பதில் அளித்தார் திரு. கருணாநிதி. அதாவது போர் நிறுத்தம் ஏற்படவில்லை என்பதை நன்கு உணர்ந்துதான் இது போன்ற பேட்டியை அளித்துள்ளார் திரு. கருணாநிதி.

இலங்கையில் உச்சக்கட்டப் போர் முடிவுக்கு வந்த பிறகு, 3.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் எவ்வித அடிப்படை வசதியுமின்றி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இலங்கை அரசால் கொடுமைப்படுத்தப்படுகின்றனர், இதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பலமுறை வலியுறுத்தினேன். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் இருந்த திரு. கருணாநிதியோ, தன் மகள் கனிமொழி உட்பட தி.மு.க. மற்றும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பி, இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த இலங்கை அதிபரைச் சந்திக்க வைத்து, கை குலுக்கி, விருந்துண்டு, பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளச் செய்தார். பரிசு பொருட்களைப் பெற்று வந்த அவர்களை தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார். பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த திரு. கருணாநிதி, "முகாம்களில் தமிழர்கள் யாரும் சித்திரவதை செய்யப்படவில்லை" என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது, தானும், தன் குடும்பத்தினரும் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக இலங்கைத் தமிழர்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதலுக்கு உறுதுணையாக, ஆதரவாக இருந்து, அவர்கள் அழிவதற்கு மறைமுகக் காரணமாக விளங்கிய தி.மு.க.

தலைவர் திரு. கருணாநிதி, தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தை இழந்த பின், டெசோ அமைப்பை மீண்டும் புதுப்பித்துள்ளார். திடீரென்று ஞானோதயம் பிறந்தது போல் இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் அதிக அக்கறை செலுத்துவது போல் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி.

மத்திய அமைச்சரவையிலிருந்து வெளி வந்ததை இலங்கை தமிழர்களுக்காக தான் செய்த மிகப் பெரிய தியாகம் என்று சித்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார் திரு. கருணாநிதி. மத்திய அரசுக்கும் தி.மு.க.வுக்கும் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று காட்டிக் கொள்ளும் திரு. கருணாநிதி, ரயில்வே குழுத் தலைவர் பதவியில் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர், திரு. டி.ஆர். பாலு இன்று வரை தொடருவதுகுறித்துவாய்திறக்கவில்லையே!மத்தியஅமைச்சராக இருந்த தனது மகன் திரு. அழகிரி காங்கிரஸ் தலைவரையும், பாரதப் பிரதமரையும், மத்திய அமைச்சர் திரு. சிதம்பரத்தையும் சந்தித்து இருக்கிறார். ராஜினாமா செய்த பின் உங்கள் மன நிலை என்ன ? என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, ''அலுவலகத்திற்குப் போக முடியவில்லை, மக்களுக்குச் சேவை செய்ய முடியவில்லை'' என்று கூறி இருக்கிறார் திரு. அழகிரி. இலங்கைத் தமிழர்கள் அழியக் காரணமாக இருந்த மத்திய அரசுக்கு உறுதுணையாக இருந்ததையும், பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கும் அதிகாரத்தை எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு வழங்கி விலைவாசி உயர்விற்கு வித்திட்டதற்கு உறுதுணையாக இருந்ததையும் ''மக்கள் சேவை'' என்று குறிப்பிடுகிறார் போலும்! இது குறித்து திரு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கவில்லையே! தி.மு.க. செயற்குழுவில் பேசிய தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன், மத்தியில் ஆட்சியைக் கவிழ்க்க தி.மு.க. துணை போகாது என்று பேசியிருக்கிறார். இதை திரு. கருணாநிதி கேட்டுக் கொண்டு வாய்மூடி மவுனியாகத்தான் இருந்தார். இந்த விஷயங்களில் எல்லாம் திரு. கருணாநிதி மவுனம் சாதிப்பதைப் பார்த்தால், மத்திய அரசுடனான தொடர்பை எவ்விதத்திலும் துண்டிக்க திரு. கருணாநிதிக்கு விருப்பமில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. மறைமுக உறவைத் தொடர்ந்து கொண்டுத் தியாகம் செய்து விட்டது போல் வெளி வேடம் காட்டி தமிழக மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். இதைவிட தமிழக மக்களுக்குச் செய்யும் துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது.

இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான கொடூர நடவடிக்கைகளினால், தமிழ்நாட்டில் வாழும் மக்கள் இயற்கையாகவே வெறுப்பும், கோபமும் அடைந்துள்ள சூழ்நிலையில், இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்படக்கூடாது என்று பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன். தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்று ஐ.பி.எல். அமைப்பாளர்களை வற்புறுத்துமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மத்திய அரசு அறிவுரை வழங்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளேன். இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை ஐ.பி.எல். அமைப்பாளர்கள் அளித்தால் மட்டுமே ஐ.பி.எல். விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடைபெற தமிழக அரசு அனுமதிக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தேன். எனது வேண்டுகோளினைப் பரிசீலித்த ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு, சென்னையில் நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று முடிவெடுத்து, இது குறித்த ஆலோசனையை அணிகளின் உரிமையாளர்களுக்குத் தெரிவிப்பதென தீர்மானித்துள்ளது. இது, இலங்கைத் தமிழர்களின் பால் எனது தலைமையிலான அரசு கொண்டுள்ள உணர்வுப்பூர்வமான ஈடுபாட்டிற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

இருப்பினும், இந்த ஐ.பி.எல். போட்டிகளில், பங்கேற்க உள்ள அணிகளில், திரு. கருணாநிதியின் பேரன் திரு. கலாநிதி மாறனுக்குச் சொந்தமான சன் குழுமத்தின் சன் ரைசர்ஸ் (Sun Risers) கிரிக்கெட் அணியும் ஒன்று என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அணியின் தலைவரே இலங்கை நாட்டைச் சேர்ந்த திரு. குமார் சங்ககாரா (Kumar Sangakara). இவரைத்தான் அணியின் தலைவராகவே திரு. கருணாநிதியின் பேரனுக்குச் சொந்தமான சன் குழுமம் தேர்ந்தெடுத்துள்ளது. இலங்கை நாட்டைச் சேர்ந்த திரு. திசாரா

பெரேரா (Thisara Perera) என்ற மற்றொரு வீரரும் இந்த அணியில் இடம் பெற்றிருக்கிறார். இதை எப்படி திரு. கருணாநிதி அனுமதிக்கிறார்? ஒரு பக்கம் இலங்கைத் தமிழர்களுக்காக உருகுவது போல் தோற்றத்தை உருவாக்குவது; மறுபக்கம் தமிழர்களை அழித்த இலங்கை அரசுக்கு உறுதுணையாக இருந்த மத்திய காங்கிரஸ் அரசுடனும் உறவைத் தொடர்வது! டெசோ அமைப்பிற்குப் புத்துயிரூட்டியுள்ள திரு. கருணாநிதி, இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்று கூறும் திரு. கருணாநிதி, தன் குடும்ப கிரிக்கெட் அணியில் இலங்கை வீரர்கள் இடம் பெற்றிருப்பது குறித்து வாய் திறக்காமல் இருப்பது சுயநலத்தின் உச்சகட்டம்.

ஏன் இந்த இரட்டை வேடம்? ஏன் இந்த இரட்டை முகம்? திரு. கருணாநிதியின் இந்த இரட்டை வேடத்தை மக்கள் நன்கு புரிந்துதான் வைத்துள்ளார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப் போரை ஆரம்பத்தில் இருந்து எதிர்த்து வந்திருக்கிறோம். இந்திய அரசு இலங்கைத் தமிழர்களை அழிக்க ஆயுதங்களை அளித்ததிலிருந்து, பயிற்சிகளை அளித்ததிலிருந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கிறோம். நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இலங்கையில் போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும்; இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாகக் கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில்; அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்; மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தேன். ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகக்கூடிய நிலையிலும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது மட்டுமல்லாமல், இலங்கை ராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதைத் தடுத்து நிறுத்தினேன். இந்தியாவில் எங்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடாது என்று பாரதப் பிரதமரை வலியுறுத்தினேன். இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவிட்டேன். இலங்கை நாடு பங்கேற்கும் ஆசியத் தடகளப் போட்டிகளைத் தமிழகத்தில் நடத்த அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து, அந்தப் போட்டியை நடத்துவதையே தமிழகம் கைவிட்டுவிட்டது.

மேலும், இலங்கையில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

சென்ற ஆண்டு, இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தினேன். அமெரிக்கா கொண்டு வந்த ஓரளவு வலுவான தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்து, அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய காங்கிரஸ் அரசு வாக்களித்தது.

இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வந்தபோது, அதற்கு வலுவூட்டும் விதமாக இந்தியா என்னென்ன திருத்தங்களை அளிக்க வேண்டும் என்று பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தேன். இந்தத் திருத்தங்களை எல்லாம் 19.03.2013 அன்று இறுதி வரைவுத் தீர்மானம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்து, மனித உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் நாடாக இந்திய நாடு விளங்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் பாரதப் பிரதமருக்குக் கடிதம் வாயிலாக கேட்டுக் கொண்டேன்.

இது மட்டுமல்லாமல், இந்த ஆண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசியபோது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித

உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இந்த ஆண்டு கொண்டு வருவது ஒருபுறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், இதையெல்லாம் தி.மு.க. அங்கம் வகித்த மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை.

இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற, ஈவுஇரக்கமற்ற, மனிதநேயமற்ற செயல்களை, போர்க் குற்றங்களை, இனப் படுகொலையைக் கண்டித்து, கல்லூரி மாணவ–மாணவியர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் சுமார் 100–க்கும் அதிகமான கல்லூரிகளில் மாணவ – மாணவியர் வகுப்புகளைப் புறக்கணித்து நூற்றுக்கணக்கான மாணவ–மாணவியர் பல்வேறு இடங்களில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மேலும், மாணவ–மாணவியர் 210 இடங்களில் ஆர்ப்பாட்டம், 110 இடங்களில் ஊர்வலம், 68 இடங்களில் சாலை மறியல், 31 இடங்களில் ரயில் மறியல், 24 இடங்களில் உருவபொம்மையை எரித்தல் ஆகிய போராட்டங்களிலும் ஈடுபட்டனர். எனது தலைமையிலான அரசால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை தொடர்பாக மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாரதப் பிரதமரை வலியுறுத்தி நான் எழுதியுள்ள கடிதங்கள் மற்றும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் விதமாகத்தான் மாணவ–மாணவியரின் போராட்டம் அமைந்துள்ளது. ஒட்டுமொத்தத் தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதுதான் இந்தப் போராட்டம். அரசியலுக்கு சிறிதும் இடமளிக்காமல் இலங்கை தமிழர் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு, உன்னதமான குறிக்கோளுக்காக அறவழியில் நடத்தப்படும் இந்தப் போராட்டம் இலங்கைத் தமிழர் நலனுக்கான அர்ப்பணிப்பின் வெளிப்பாடு.

இவ்வளவு உணர்வுப்பூர்வமான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகள் தமிழகத்தில் தொடர்ந்து

நடைபெற்று வருகின்ற சூழ்நிலையிலும், இலங்கை அரசு இலங்கைத் தமிழர்களைத் தொடர்ந்து இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தி வருகிறது. போரினால் இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள், முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். தங்களுடைய சொந்த நாட்டிலேயே இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வரும் அவல நிலைமை நீடிக்கிறது. இது மட்டுமல்லாமல், தமிழர்கள் வசித்த பகுதிகளில் சிங்களர்களை இலங்கை அரசு குடியமர்த்தி வருகிறது. தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்படுகின்றன. மொத்தத்தில் ஒரு இனவெறி இலங்கையில் தாண்டவமாடிக் கொண்டு இருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய மத்திய அரசு, தமிழர்களின் உணர்வுகளுக்கு, தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு சற்றும் மதிப்பளிக்காமல் பாராமுகமாக இருந்து வருவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இந்தச் சூழ்நிலையில், ஒட்டுமொத்தத் தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசுக்கு மீண்டும் எடுத்துரைக்கும் வகையில் கீழ்க்காணும் தீர்மானத்தினைத் தமிழக அரசின் சார்பில் நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம்

"தமிழன் யாருக்கும் தாழாமல் - யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் - எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானனாக இல்லாமல் - உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாயக் கொள்கை" என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு,

- இலங்கை நாட்டை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும்;

- இலங்கை இனப் போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும்; இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில், போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு

அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும்; தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும்; ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு "தனி ஈழம்" குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இலங்கைத் தமிழர்களின் பால் எனது தலைமையிலான தமிழக அரசு எடுத்து வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டும், நமது கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் நாள் விரைவில் மலர இருக்கிறது என்பதை மனதில் வைத்தும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ–மாணவியர் தங்களுடைய அறப் போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொண்டு, எனது இந்த வேண்டுகோளிற்கு அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

★ ★ ★

விலைவாசி உயர்வு குறித்து சட்டமன்ற பேரவையில் கொண்டுவரப்பெற்ற சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்குப் பதில் அளித்து ஆற்றிய உரை – **(02.04.2013)**



விலைவாசி ஏற்றத்திலிருந்து ஏழை மக்களைக் காத்திடும் அரசின் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விலைவாசி உயர்வு குறித்து தாங்கள் எடுத்துக் கொண்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பேசிய, மாண்புமிகு உறுப்பினர்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தங்கள் கருத்துகளை இங்கே எடுத்துரைத்தார்கள்.

விலைவாசி ஏற்றம் என்பது நாட்டின் பொருளாதாரக் கொள்கை, நிதிக் கொள்கை, ஏற்றுமதி – இறக்குமதிக் கொள்கை, உரக் கொள்கை, பாரத ரிசர்வ் வங்கி, நிர்ணயிக்கும் வட்டி வீதங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் பெரும்பாலான கொள்கைகளை வகுக்கும் அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிந்து கிடக்கின்றன. எனவே, மத்திய அரசின் தவறான கொள்கைகளே தற்போதைய விலைவாசி உயர்விற்கான காரணம் என்று சொன்னால் அது நூற்றுக்கு நூறு உண்மை.

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக கோடை வெயில் மக்களின் உடலைச் சுட்டெரிப்பது போல் விலைவாசி ஏற்றம் மக்களின் வாழ்க்கையைச் சுட்டெரித்துக் கொண்டு இருக்கிறது.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட வேளாண் தொழிலுக்கு அதிக மானியம் அளிக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில்

இந்திய நாட்டில் இதற்கு முற்றிலும் எதிரான கொள்கைதான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

உதாரணமாக, மத்திய அரசின் ஊட்டச்சத்து அடிப்படையில் உர மானியம் வழங்கும் கொள்கை காரணமாக 2010ஆம் ஆண்டு 486 ரூபாய் என்றிருந்த 50 கிலோ டி.ஏ.பி. உரத்தின் விலை 2012ஆம் ஆண்டு 1,200 ரூபாயாகவும் 50 கிலோ எம்.ஓ.பி. உரத்தின் விலை, 231 ரூபாயிலிருந்து 840 ரூபாயாகவும், 50 கிலோ காம்ப்ளக்ஸ் உரத்தின் விலை 374 ரூபாயிலிருந்து 1,110 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது. இருப்பினும், விலைவாசியை ஓரளவு கட்டுப்படுத்தும் வகையில் உரத்தின் மீதான மதிப்புக் கூட்டு வரியை எனது தலைமையிலான தமிழக அரசு முழுவதுமாக நீக்கியுள்ளது. மாநில அரசின் இந்த நடவடிக்கை, விவசாயிகளுக்கு ஓரளவு ஆறுதலைத் தருமே தவிர, விலைவாசி ஏற்றத்தை முற்றிலும் தடுத்து நிறுத்த இயலாது.

வேளாண் வளர்ச்சிக்குத் தேவையான இடுபொருட்களின் விலைகள் மத்திய அரசின் தவறான கொள்கைகளினால் ஏறிக் கொண்டே செல்வதால், வேளாண் விளை பொருட்களுக்கான கொள்முதல் விலையும் உயர்ந்து கொண்டே செல்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

2009–2010ஆம் ஆண்டு, சாதாரண ரக நெல்லுக்கான கொள்முதல் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு, 950 ரூபாய் என்றும், சன்ன ரக நெல்லுக்கான கொள்முதல் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு 980 ரூபாய் என்றும், மத்திய அரசு நிர்ணயித்தது. 2012–2013ஆம் ஆண்டுக்கான சாதாரண நெல் கொள்முதல் விலையை 1,250 ரூபாய் என்றும், சன்ன ரக நெல் கொள்முதல் விலையை 1,280 ரூபாய் என்றும், மத்திய அரசு நிர்ணயித்தது. இந்த அதிகப்படியான 300 ரூபாய் விவசாயிகளுக்கு அதிக வருவாயாக ஏற்பட்டிருக்குமானால் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர் என்று நாம் ஆறுதல் அடையலாம். ஆனால், இடுபொருட்களின் விலை உயர்வு மற்றும் அதிகரித்து வரும் உற்பத்திச் செலவு ஆகியவற்றின் காரணமாகவே கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளதால், இந்த கொள்முதல் விலை உயர்வின் மூலம் எவரும் பயனடைய வழியில்லை. கொள்முதல் விலை உயர்வும் அரிசி விலை உயர்வுக்கு ஒரு காரணம் ஆகும்.

இதே போன்று பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், ஆகியவற்றின் விலையும் உயர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்கு முக்கியக் காரணமாக விளங்குவது, தொடர் டீசல் விலை உயர்வு. 2004ஆம் ஆண்டு, 21 ரூபாய் 74 பைசாவாக இருந்த ஒரு லிட்டர் டீசல் விலை தற்போது, 51 ரூபாய் 78 காசாக உயர்ந்துள்ளது. ஆறு மாதத்திற்கு ஒரு முறை உயர்ந்து கொண்டிருந்தது டீசல் விலை. டீசல் விலை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை மத்திய அரசு, எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளதால், தற்போது டீசல் விலை மாதா மாதம் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இது ஒரு முடிவுறாத் தன்மை கொண்ட தொடர் துயரம். இந்த டீசல் விலை உயர்வு காரணமாக காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பல்வேறு இடங்களுக்கு ஏற்றிச் செல்லும் வாகனக் கட்டணம் உயர்கிறது. இதன் விளைவாக, காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், ஆகியவற்றின் விலையும் உயர்ந்து கொண்டே செல்கின்றது.

எனவே, மத்திய அரசு பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணயக் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்தால் மட்டுமே விலைவாசி உயர்வினை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

உதாரணமாக, டீசல் விலை நிர்ணயத்தை எடுத்துக் கொண்டால் டீசல் இறக்குமதி சமநிலை விலை அதாவது, Import Parity Price, என்னவாக இருக்கும் என்பதையும், ஏற்றுமதி சமநிலை விலை, அதாவது, Export Parity Price, என்னவாக இருக்கும் என்பதையும் கணக்கிட்டு, இந்த இரண்டையும் குறிப்பிட்ட சதவிகித அடிப்படையில், கணக்கிட்டு, தொழில் சமநிலை விலை அதாவது, Trade Parity Price, கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில், இந்தியாவில் டீசல் விலை, நிர்ணயிக்கப்படுகிறது. இதே முறைதான், அனைத்து பெட்ரோலியப் பொருட்களுக்கும், கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆனால், இந்த விலை நிர்ணய முறை தவறானது என்பதை நான் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறேன். நம் நாட்டிற்குத் தேவையான கச்சா எண்ணெயில் கிட்டத்தட்ட 25 விழுக்காடு கச்சா எண்ணெய் இந்தியாவிலேயே கிடைக்கின்றது. இதனை, சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் பெட்ரோலாகவும், டீசலாகவும் மாற்றி எண்ணெய் நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன. மீதமுள்ள, 75 விழுக்காடு கச்சா எண்ணெய் வெளி

நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அதனைச் சுத்திகரித்து பெட்ரோல் மற்றும் டீசலாக எண்ணெய் நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன. ஆனால், விலை நிர்ணயமோ கச்சா எண்ணெய் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, சமநிலை விலையில் கூட இல்லாமல் டீசல் மற்றும் பெட்ரோல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சமநிலை விலையை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கப்படுகின்றன. இவ்வாறு, செயற்கையாக நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் குறைவாக உள்ள விலையைத்தான் எண்ணெய் நிறுவனங்கள் குறை பலன் அதாவது under recovery என்று சொல்கின்றன.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் தற்போது, சென்னை மாநகராட்சி மூலம், ஒரு ரூபாய்க்கு இட்லி வழங்கும் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். இந்தத் திட்டத்திற்காக தமிழக அரசு, சென்னை மாநகராட்சிக்கு, ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய் என்ற விலைக்கு கொடுக்கிறது. இட்லி மற்றும் சாம்பார் தயாரிப்பதற்குத் தேவையான இதர பொருட்களை சென்னை மாநகராட்சி வெளிச் சந்தையில் வாங்கிக் கொள்கிறது. இது தவிர, நிருவாகச் செலவும் சென்னை மாநகராட்சிக்கு ஏற்படுகிறது. இதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சிக்கு, ஒரு இட்லிக்கு ஏற்படும் செலவு 1 ரூபாய் 86 காசு ஆகும். எனவே, சென்னை மாநகராட்சிக்கு ஒரு இட்லிக்கு 86 காசு இழப்பு ஏற்படுகிறது. இதுதான் உண்மையான இழப்பு. இவ்வாறு கணக்கிடாமல் தனியார் உணவகங்களில் விற்கப்படும் ஒரு இட்லியின் விலையான 10 ரூபாயோடு ஒப்பிட்டு சென்னை மாநகராட்சிக்கு 9 ரூபாய் இழப்பு என்று சொன்னால் யாராவது ஏற்றுக் கொள்வார்களா ? இவ்வாறு ஒப்பீடு செய்து தான் எண்ணெய் நிறுவனங்கள் தங்களுக்குக் குறை பலன் under recovery என்று சொல்கின்றன. பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணயக் கொள்கையும் தவறு, எண்ணெய் நிறுவனங்கள் குறை பலன் என்று சொல்வதும் தவறு என்பதை நான் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த விலைக் கொள்கை, தவறானது என்பதால்தான் மத்திய நிதி அமைச்சகத்திற்கும், பெட்ரோலியத்துறை அமைச்சகத்திற்கும் இடையே பிரச்சினை எழுந்துள்ளது. மத்திய நிதி அமைச்சகம் ஏற்றுமதி சமநிலை விலை அதாவது, Export Parity Price அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று கூறி வருகிறது. அவ்வாறு செய்யப்பட்டால், எண்ணெய்

நிறுவனங்களுக்கு மத்திய அரசு லிட்டர் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 2 ரூபாய் அளவுக்கு மானியத்தைக் குறைக்க முடியும் என்றும் சொல்லி வருகிறது. ஆனால், பெட்ரோலியத் துறை அமைச்சகம் அவ்வாறு செய்தால் சுத்திகரிப்பு நிலையங்கள் பாதிக்கப்படும் என்று தெரிவித்து, பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணயம் தொடர்பாக வல்லுநர் குழு அமைக்கப்பட வேண்டும் என்று பாரதப் பிரதமருக்கு பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. வீரப்ப மொய்லி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த டீசல் விலை நிர்ணயத்திலும் இரட்டை விலைக் கொள்கையை மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன. அதாவது, மொத்தமாக டீசலைக் கொள்முதல் செய்யும் போக்குவரத்துக் கழகங்கள், ரயில்வே போன்றவற்றிற்கு ஒரு விலையும், சில்லரை விலையில் வாங்குபவர்களுக்கு ஒரு விலையும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கொள்கையை எதிர்த்து தமிழ்நாடு அரசு, போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கினை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்தக் கொள்கைக்கு இடைக்காலத் தடை விதித்தது. இதனை எதிர்த்து மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் சென்னை உயர் நீதிமன்ற அமர்வு முன்பு மேல்முறையீடு செய்துள்ளது. இந்த மேல் முறையீட்டு மனுவில் மொத்தமாக டீசல் கொள்முதல் செய்பவர்களுக்கு மானியமில்லாமல் டீசல் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு மத்திய அரசின் கொள்கை முடிவு என்றும், இது குறித்து மத்திய அரசுக்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட மாநில அரசு மத்திய அரசிடம், முறையிட வேண்டும் என்றும்; இது குறித்து, மத்திய அரசை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிடாமல் சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிட்டு எண்ணெய் நிறுவனங்களை இந்த வழக்கில் பிரதிவாதியாகச் சேர்த்திருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

அதாவது, எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையின்படி அவை பெட்ரோலியப் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்கின்றன என்று மத்திய அரசு ஒரு புறம் கூறிக் கொண்டிருந்தாலும், இந்த மனுவில் இந்த டீசல்

விலைக் கொள்கை மத்திய அரசின் கொள்கை என்பதைப் பட்டவர்த்தனமாக தெரிவித்துள்ளது. இது போன்ற மக்கள் விரோதக் கொள்கையை வகுத்த மத்திய காங்கிரஸ் அரசில் தான் சமீப காலம் வரை தி.மு.க. அங்கம் வகித்தது. அது மட்டுமல்ல. இந்த மக்கள் விரோதக் கொள்கை முடிவினை எடுத்த அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழுவில் தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியின் மகன் திரு. மு.க. அழகிரியும் உறுப்பினராக இருந்தார் என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தியாவில், கச்சா எண்ணெய்யை எடுப்பதற்கு ஆகும் செலவு; அதை டீசலாகவும் பெட்ரோலாகவும் சுத்திகரிக்க ஆகும் செலவு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அதை சுத்திகரிக்க ஆகும் செலவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெட்ரோல் மற்றும் டீசல் விலை, நிர்ணயம் செய்யப்பட்டால் குறைவான விலையில் பெட்ரோல் மற்றும் டீசல் மக்களுக்கு நிச்சயம் கிடைக்கும். இதன் மூலம், விலைவாசியும் கட்டுக்குள் இருப்பது, உறுதி செய்யப்படும்.

இதே போன்று, சமையல் எரிவாயு விநியோகத்திலும் ஆண்டு ஒன்றுக்கு ஒன்பது உருளைகள் மட்டுமே மானிய விலையில் வழங்கப்படும் என்ற கட்டுப்பாட்டினை மத்திய அரசு விதித்துள்ளது. காய்கறிகள் மற்றும், பழங்களின் விலைகள் தமிழ்நாடு மற்றும், வெளிமாநில விளைச்சல்களின் அடிப்படையிலும், டீசல் விலை உயர்வால் உயர்ந்து கொண்டே செல்லும் வாகனக் கட்டணத்தின் அடிப்படையிலும்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது. மொத்தத்தில் விலைவாசி ஏற்றம் என்பது மத்திய அரசின் தவறான கொள்கைகளால் ஏற்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் மக்கள் வாங்கும் திறனுக்கு ஏற்ப பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்யவும்; இன்றியமையாப் பொருட்களைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்கவும், அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்துப் பற்றாக்குறை ஏற்படுத்தி பொருட்களின் விலை ஏற்றத்திற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதிலும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதிலும், எனது தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது. இந்த அடிப்படையில், கீழ்க்காணும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

1. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு, 20 கிலோ, விலையில்லா அரிசி முழுமையாகவும் தட்டுப்பாடு இன்றியும் வழங்கப்படுகிறது.

2. தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை ஆகியன பொய்த்ததாலும், கர்நாடகம், காவேரியில் தண்ணீர் திறந்து விடாததாலும், எதிர்பார்த்த அளவு நெல் மகசூல் இல்லை. எனவே, வெளிச் சந்தையில் அரிசி விலை உயர்ந்துள்ளது. வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், விலை நிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து, 25 கோடி ரூபாய் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, ஒதுக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம், ஒப்பந்தப் புள்ளிகள் வழியாக வெளிச் சந்தையில் 10,000 மெட்ரிக் டன் சன்னரக அரிசி கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அரிசி அனைத்தும் வெளிச் சந்தையில் நுகர்வோருக்கு அடக்க விலையில் வழங்கப்படும்.

4. அரிசி விலையை, உடனடியாக கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றிற்கு 20 ரூபாய் என்ற விலையில் வெளிச் சந்தையில் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெகு விரைவில் இந்த விற்பனை துவக்கப்படும்.

5. வெளிச்சந்தையில் 57 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு லிட்டர் பாமாயில் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், ஒரு லிட்டர் 25 ரூபாய்க்கும், வெளிச்சந்தையில் 76 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு கிலோ துவரம் பருப்பு, 30 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்கப்படும் உளுத்தம்பருப்பு, 30 ரூபாய்க்கும்,

குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 1,006 கோடி ரூபாய் அளவுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இந்தத் திட்டம் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்படுகிறது.

6. 2012–2013ஆம் ஆண்டிற்கான நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதார விலை சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,250 ரூபாய் எனவும், சன்ன ரகத்திற்கு 1,280 ரூபாய் எனவும், மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டது. எனது தலைமையிலான அரசு, விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு கூடுதலாக 50 ரூபாயும், சன்னரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்குக் கூடுதலாக 70 ரூபாயும், ஊக்க தொகையாக 01.10.2012 முதல் வழங்கி வருகிறது. இதுவரை விவசாயிகளுக்கு, ஊக்கத் தொகையாக 73 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளின் வாங்கும் சக்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

7. அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம் காணும் போது, சந்தைத் தலையீடு மேற்கொண்டு அவற்றை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி கூட்டுறவு சில்லறை அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக, கூடுதல் அங்காடிகள் மூலம் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பதற்கு ஏதுவாக வட்டியில்லா நிதியுதவி அளிப்பதற்கு 50 கோடி ரூபாய் அளவில் விலை நிலைப்படுத்தும் நிதி ஒன்று ஏற்கெனவே எனது தலைமையிலான அரசால், ஏற்படுத்தப்பட்டு உள்ளது. தற்போது, அதிக அளவில் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக இந்த நிதியின் அளவு 100 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

8. காய்கறி விலையைக் கட்டுப்படுத்த நகர்ப்புரப் பகுதிகளில், கூட்டுறவு அமைப்புகள் மூலமும் தோட்டக்கலைத் துறை மூலமும் விவசாயிகளையும், நுகர்வோரையும், நேரடியாக இணைக்கக் கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் அதாவது Farm Fresh Consumer Outlets திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. பருப்பு வகைகளையும் உற்பத்தி செய்யும் இடங்களில் இருந்து, கொள்முதல் செய்து அவற்றைக் கூட்டுறவு சில்லறை அங்காடிகள் மூலம் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10. ஏழை, எளிய தாய்மார்களின் நலனைக் கருத்தில் கொண்டு சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி 01.07.2011 முதல் எனது தலைமையிலான அரசால் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

11. ஏழை, எளியோர், நலன் காக்கும் வகையில் சென்னை மாநகராட்சி மூலம் 73 மலிவு விலை உணவகங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. இந்த உணவகங்கள் மூலம் இட்லி ஒரு ரூபாய்க்கும் சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும், விற்பனை செய்யப்படுகிறது. மேலும், 127 உணவகங்களை இன்று திறந்து வைத்துள்ளேன். ஆக மொத்தம், 200 மலிவு விலை உணவகங்கள் தற்போது சென்னையில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் இதர மாநகராட்சிகளுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த மக்கள் நல நடவடிக்கைகள் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் விலைவாசி ஏற்றம் என்ற கொடிய தாக்கத்திலிருந்து ஓரளவு மீள வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,*
02.04.2013 அன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையில்
ஆற்றிய உரை



காங்கிரசைக் கலைத்து விடலாம்!
மகாத்மா காந்தி அவர்களின்
கருத்து ஆதாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நேற்று இந்த அவையில் உள்ளாட்சித் துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி விஜயதாரணி அவர்கள் பேசுகின்றபோது சில கருத்துக்களைத் தெரிவித்தார். அப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்

குறுக்கிட்டு " இந்திய நாடு விடுதலை அடைந்த பிறகு, மகாத்மா காந்தி அவர்கள் காங்கிரஸ் கட்சியையே கலைத்து விட வேண்டுமென்று கூறினார்" என்று சொன்னார்.

அப்போது மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய செல்லத் தம்பி திரு. பிரின்ஸ் அவர்கள் குறுக்கிட்டு, மகாத்மா காந்தி அப்படி சொல்லவே இல்லை என்றார். கூடவே, திருமதி விஜயதாரணி அவர்களும் ஆமாம் மகாத்மா காந்தி அப்படி சொல்லவே இல்லை என்றார். வேறு சில மாண்புமிகு உறுப்பினர்கள் அப்போது குறுக்கிட்டு இது வரலாறு, வரலாற்று உண்மை என்றார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பிரின்ஸ் அவர்களும், திருமதி விஜயதாரணி அவர்களும், மகாத்மா காந்தி இப்படி சொன்னதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றார்கள். ஆதாரம் இருக்கிறது. அந்த ஆதாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு பேச வேண்டும் என்பதற்காகத்தான் நேற்று நான் பேசாமல் இருந்தேன்.

மகாத்மா காந்தி அவர்கள் 30.01.1948 அன்று கொலை செய்யப்பட்டார். மகாத்மா காந்தி அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு நாள் முன்பு, அதாவது 29.01.1948 அன்று காங்கிரஸ் கட்சிக்கான ஒரு draft constitution–ஐ எழுதி அனுப்பினார். அதாவது காங்கிரஸ் கட்சிக்கான ஒரு வரைவு சட்டத் திட்ட விதிகளை எழுதி அவர் அனுப்பினார். இது மகாத்மா காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட பிறகு, 7.02.1948 அன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் ஆச்சார்யா ஜுகல் கிஷோர் என்பவரால் வெளியிடப்பட்டது. "The Collected Works of Mahatma Gandhi - Volume 90" என்ற புத்தகம் இதோ இருக்கிறது. "The Collected Works of Mahatma Gandhi - Volume 90" என்ற நூல் மத்திய அரசின் Ministry of Information and Broadcasting உடைய Publication Division ஆல் 1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகத்திற்கு முன்னாள் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அன்னாள் பாரதப் பிரதமருமான அன்னை இந்திரா காந்தி அவர்களே முன்னுரை (foreword) எழுதி இருக்கிறார்.

மகாத்மா காந்தி அவர்கள் எழுதிய காங்கிரஸ் கட்சிக்கான சட்டத் திட்ட விதிகளில் (Draft Constitution) என்ன சொல்லி இருக்கிறார்? ஆங்கிலத்தில்தான் எழுதி இருக்கிறார். அதாவது அதற்குத் தலைப்பு Draft Constitution of Congress.

"Though split into two, India having attained political independence through means devised by the Indian National Congress, the Congress in its present shape and form, i.e. as a propaganda vehicle and parliamentary machine, has outlived its use."

அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம்? காங்கிரஸ் காலாவதியாகிவிட்டது என்று மகாத்மா காந்தி அவர்களே எழுதி இருக்கிறார். மேலும் மகாத்மா காந்தி அவர்கள் எழுதி இருக்கிறார்.

"India has still to attain social, moral and economic independence in terms of its seven hundred thousand villages as distinguished from its cities and towns. The struggle for the ascendancy of civil over military power is bound to take place in India's progress towards its democratic goal. It must be kept out of unhealthy competition with political parties and communal bodies. For these and other similar reasons, the AICC resolves to disband the existing Congress organization ..."

அதாவது மகாத்மா காந்தி அவர்களே தன் கைப்பட எழுதிய காங்கிரஸ் கட்சிக்கான வரைவு சட்டத் திட்ட விதிகளில் அவர் பல காரணங்களுக்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, இந்த காங்கிரஸ் அமைப்பையே கலைத்துவிடுவது என்று முடிவு செய்கிறது என்று எழுதி இருக்கிறார். ஆகவே, காங்கிரஸ் கட்சியிலே உள்ள பலருக்கு காங்கிரஸ் பற்றிய வரலாறே தெரியாமல் அவர்கள் இங்கே பேசிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு இதுதான் தக்க ஆதாரம் என்பதைக் கூறி அமர்கிறேன்.

✶ ✶ ✶

*புதுடெல்லியில் 07.04.2013 அன்று நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆங்கில உரையை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் வாசித்தார். அதன் தமிழாக்கம்.*



சென்னை உயர்நீதிமன்ற அலுவல் மொழியாக தமிழ் மொழியைப் பயன்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

நமது ஜனநாயக அரசுக்கு அடித்தளமாகத் திகழும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த நமது அரும்பெரும் தலைவர்களின் தொலைநோக்கு மற்றும் வளர்ச்சிக்கு வழிகாட்டும் கண்ணோட்டம் காரணமாக, துடிதுடிப்பு மிக்க ஆற்றல் வாய்ந்த ஒரு ஜனநாயக நாடாக இன்று இந்தியா செயல்பட்டு வருகிறது.

சட்டமன்றம், நிருவாகம் மற்றும் நீதித்துறை ஆகிய 3 தூண்களின் மீது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஒவ்வொரு தூணும் தனித்து இயங்காமல் ஒன்றிணைந்து செயல்படுகின்றது. இந்த ஒன்றிணைந்த செயல்பாடு, அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படையிலான, நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் கிடைக்கச் செய்வதை உறுதி செய்கிறது.

கடந்த 65 ஆண்டுக்கால நமது ஜனநாயகப் பயணத்தின் போது, நீதித்துறை அமைப்பில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை, பல திருப்புமுனைத் தீர்ப்புகள் மூலம் நமக்கு சிறந்த பலன்களை அளித்துள்ளன. தமிழக மக்கள் இதை நன்கு அறிந்துள்ளனர். காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், உச்சநீதிமன்றம் மூலம், தமிழக மக்களுக்கு நான் பெற்றுத் தந்த வெற்றி குறிப்பிடத்தக்கது.

பொது இலக்கு

காவிரி நதிநீரில், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட, 20 ஆண்டுகளுக்கும் மேலாக நான் நடத்திய ஓயாத போராட்டத்தின் பலனாக, காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில், மத்திய அரசு வெளியிட வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததை நினைவு கூர்கிறேன்.

மக்களின், குறிப்பாக ஏழை–எளிய, நலிவடைந்த மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்ப, நீதி கிடைக்கச் செய்வதற்கான, பல்வேறு இன்றியமையாத அம்சங்கள் குறித்து பரிசீலனை செய்வதற்கு முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளின் இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

வழக்கு விசாரணையை விரைவாக நடத்துவதையும், சச்சரவுகளுக்குத் தீர்வு காண உரிய சட்ட உதவியை ஏழை மக்களுக்கு அதிக செலவில்லாமல் கிடைக்கச் செய்வதையும் உறுதிப்படுத்துவது நமது பொது இலக்காக அமைய வேண்டும். நம்பகத்தன்மை, ஒளிவுமறைவற்றதன்மை, உரிய நேரத்தில்

நீதிகிடைப்பது என்ற அடிப்படையில், நமது நீதித்துறை அமைப்பு, உலகின் வேறு எந்த நாட்டுக்கும் சளைத்தது அல்ல என்பதை உறுதிப்படுத்துவது, நமது புனிதமான கடமையாகும்.

நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக் கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் அதிக பட்சமாக நீதித்துறைக்கு வழங்குவதில் எனது தலைமையிலான தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. 2013–2014ஆம் ஆண்டிற்கான தமிழக நிதிநிலை அறிக்கையில் நீதித்துறைக்காக 695 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல், குடியிருப்பு வசதிகள் உட்பட நீதித்துறைக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, கடந்த 2 ஆண்டுகளில் 162 கோடியே 13 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இயங்கி வரும் 857 சார்பு நீதிமன்றங்களில் சுமார் 87.28 சதவீத சார்பு நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன என்பதில் தமிழகம் பெருமிதம் கொள்கிறது. 12.72 சதவீதம் சார்பு நீதிமன்றங்கள் மட்டுமே வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நீதிமன்றங்களுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு தமிழக அரசு போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வரும் நிலையில், மத்திய அரசிடமிருந்து மிகமிகக் குறைந்த நிதியுதவிதான் கிடைக்கிறது. நீதித்துறை உள்கட்டமைப்பு வசதிக்காக மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2010–2011, 2011–2012 ஆகிய 2 ஆண்டுகளில், மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு எந்த நிதியுதவியும் கிடைக்கவில்லை. திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் பேரில், 2012–2013ஆம் ஆண்டில் 19 கோடியே 53இலட்சம்ரூபாய்மட்டுமேமத்தியஅரசிடமிருந்துகிடைத்துள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் 2016ஆம் ஆண்டுக்குள் சொந்தக் கட்டடங்கள் கட்ட, 2013–2014ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் 70 கோடி ரூபாய் அளவுக்கு

நிதி ஒதுக்கீடு செய்ய, மத்திய அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நீதிபதிகள் நியமனம்

பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அதிக நீதிமன்றங்களை அமைக்க வேண்டியுள்ளது. கடந்த 2 நிதியாண்டுகளில் 105 புதிய நீதிமன்றங்களை அமைக்க எனது தலைமையிலான அரசு உத்தரவிட்டுள்ளது. இவற்றில், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழங்குதல் தொடர்பான வழக்குகளுக்காக 60 சிறப்பு நீதிமன்றங்கள், 33 குடும்ப மற்றும் மகளிர் நீதிமன்றங்கள், 12 நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகியவை அடங்கும்.

ஏற்கெனவே, தமிழகத்தில் 56 மாலைநேர நீதிமன்றங்கள் செயல்பட்டுவரும் நிலையில், கூடுதலாக மேலும், 90 மாலைநேர நீதிமன்றங்கள் அமைக்க அனுமதியளித்து எனது தலைமையிலான அரசு உத்தரவிட்டுள்ளது. தேவைக்கேற்ப மேலும் அதிக நீதிமன்றங்கள் அமைக்க எனது தலைமையிலான அரசு ஒருபோதும் தயங்காது.

அதிக எண்ணிக்கையில் நீதிமன்றங்களை அமைக்கும்போது, நீதிபதிகளையும் அதிக அளவில் பணியமர்த்த வேண்டியுள்ளது. கீழ்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் 10 சதவீதம் அதிகப்படுத்த வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. இதன்படி, 2012ஆம் ஆண்டில் தமிழகத்தில் 167 சிவில் நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். இதனால் கீழ் நீதிமன்றங்களில் காலிப்பணியிடங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன. இதேபோன்று, 2013ஆம் ஆண்டிலும் நீதிபதிகள் நியமனம் செய்யப்படுவார்கள்.

சார்பு நீதிமன்றங்களில் நீதிபதிப் பணியிடங்களை அதிகப்படுத்தினால் மட்டும் போதாது. அவர்களுக்குத் தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்கி அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவது

முக்கியமானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு, தேசிய நீதி நிருவாக அமைப்புக்கு உதவும் வகையில், 35 நீதிமன்ற நிருவாகிகள் பணியிடங்களுக்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, அடுத்த மாதத்திற்குள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தேசிய நீதித்துறைத் தகவல் தொகுப்பு அமைப்பு செயல்பட உள்ளது. மேலும், E&Courts Mission Mode Project எனப்படும் இணையவழி நீதிமன்றத் திட்டத்திற்காக 799 நீதிமன்றங்களுக்கு கணினிகள், Server-கள் UPS, Mono Laser Printer-கள், Dot Matrix Printer-கள், Scanner-கள் முதலியவை வழங்கப்பட்டுள்ளன.

சென்னை உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் கணினிகள் மற்றும் மென்பொருளை பராமரிப்பதற்காக, 2012–2013ஆம் ஆண்டில் மொத்தம் 53 கோடியே 84 இலட்சம் ரூபாய்நிதிக்கு தமிழக அரசு அனுமதி அளித்துஉத்தரவிட்டுள்ளது. ரிமாண்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளிடம் நடத்தப்படும் விசாரணையின் போது, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகள் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் காணொலிக் காட்சி (Video Conferencing) வசதி ஏற்படுத்தப்படும் என நான் அறிவித்துள்ளேன்.

பாலின சமத்துவம்

12 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளதாக, சென்னை உயர்நீதிமன்றத் தலைமைப் பதிவாளர் குறிப்பிட்டுள்ளார். விரைவாகவும், திறம்படவும், வழக்கு விசாரணையை நடத்துவதற்குத் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் வழங்க எனது அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தமிழகத்தில் உண்மையான பாலின சமத்துவம் என்ற குறிக்கோளை எட்டுவதில் நான் எப்போதுமே மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன். எனது முனைப்பான நடவடிக்கைகளின் பலனாக, சட்டத்தின்முன், ஆண், பெண் பாகுபாடின்றி அனைவரும் சமமானவர்கள் என்ற இலக்கை எட்டுவதில் இன்று நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக முத்திரைபதித்து,

பெண்கள் பாதுகாப்பு உணர்வுடன் அச்சமின்றி வாழும் மாநிலமாகவும் திகழ்கிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பு 1992இல், நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைக்க நான் நடவடிக்கை எடுத்ததை நினைவு கூர்கிறேன். தற்போது ஒவ்வொரு காவல்துறை உட்கோட்டத்திலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கும் வகையில், கடந்த ஆண்டில், தமிழக சட்டமன்றத்தில், நான் தனிச் சட்டம் ஒன்றை கொண்டுவந்து அதை நிறைவேற்றியுள்ளேன்.

பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுவோரை மிகக் கடுமையாகத் தண்டிக்க இந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமை காரணமாக ஒருபெண் மரணமடைந்தாலோ அல்லது தற்கொலை செய்து கொண்டாலோ, இதில் தொடர்புள்ள குற்றவாளி தான், குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ளது என இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டெல்லியில் அண்மையில் ஓர் இளம்பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டு மரணமடைந்ததால் நாடே பெரும் அதிர்ச்சியில் உறைந்த துயரச் சம்பவம், பெண்களைப் பாதுகாப்பதற்கான, கடுமையான நடவடிக்கைகளை என்னை அறிவிக்க வைத்தது. நான் துணிச்சலான 13 அம்ச செயல்திட்டத்தை அறிவித்தேன். அவையாவன:–

1. பாலியல் வன்முறை வழக்குகள் கொடுங் குற்றங்களாகக் (grave crimes) கருதப்பட்டு, புலன் விசாரணை காவல் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு, காவல் துணைக் கண்காணிப்பாளர்களால் நேரடியாக மேற்பார்வை செய்யப்படும். இயன்றவரை இவ்வழக்குகளில் பெண் காவல் ஆய்வாளர்கள் விசாரணை மேற்கொள்ளவும், இயலாத சூழ்நிலையில் பெண் காவல் உதவி ஆய்வாளர்கள் உதவியுடன் விசாரணை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. இது தவிர, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், சரகக் காவல்துறைத் துணைத் தலைவர்கள் ஆகியோர் இவ்வழக்குகளின் விசாரணையை ஆய்வு செய்யவும் உத்தரவிட்டுள்ளேன். இத்தகைய வழக்குகளில், வழக்குப் பதிவு செய்யப்பட்டதுமுதல் வழக்கு முடியும் வரை மாதந்தோறும் அவர்கள் ஆய்வு செய்வார்கள்.

3. தற்சமயம் புலன் விசாரணையிலும், நீதிமன்றங்களிலும் நிலுவையில் உள்ள அனைத்து பாலியல் வன்முறை வழக்குகளையும் மண்டலக் காவல்துறைத் தலைவர்கள் தீவிர ஆய்வு செய்து சட்டம், ஒழுங்கு கூடுதல் காவல்துறை இயக்குநருக்கு 15 நாட்களுக்குள் அறிக்கை அனுப்பவும், இவ்வழக்குகளை விரைந்து முடிப்பதில் தீவிரம் காட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. பாலியல் பலாத்காரம் போன்ற கொடிய குற்றங்கள் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் காரணத்தினால், குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யும் வண்ணம் குண்டர் தடுப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்படும்.

5. பாலியல் வன்முறை வழக்குகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகள் ஆகியவற்றை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Mahila Courts) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6. இந்த நீதிமன்றங்களுக்கு அரசு வழக்குரைஞர்களாகப் பெண் வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவார்கள்.

7. பாலியல் வன்முறைக் குற்ற வழக்குகளில் விரைவில் தீர்ப்புகளைப் பெற்றுக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் வகையில், விசாரணை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக தினசரி வழக்குகளை நடத்தி, சாட்சி விசாரணைகள், வழக்கறிஞர்களின் வாதங்கள் ஆகியவற்றை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8. பாலியல் குற்ற வழக்குகளில் கைது செய்யப்படும் நபர்கள் காவலுக்கு உட்படுத்தப்படும் காலம் ஒவ்வொரு தருணத்திலும் 15 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்பதை 30 நாட்களாக சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் இருப்பதைப் போன்று உயர்த்துவது; இது போன்ற வழக்குகளில் குற்றவாளிகள் முன் ஜாமீன் பெறாமல் இருக்க வழிவகை செய்வது; இவ்வழக்குகளில் ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டால், வழக்கு விசாரணை முடியும் வரை அவரைப் பிணையில் விடுவதைத் தடை செய்வது; பாலியல் வன்முறைக் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு Chemical Castration எனப்படும் "வேதியியல் முறையில் ஆண்மை நீக்கம்" செய்யப்படுவது; பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுபவர்களுக்கு அதிக பட்சமாக மரண தண்டனை அளிப்பது ஆகியவை குறித்து சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்படும்.

9. பாலியல் வன்முறை வழக்குகள், பெண்கள் இன்னல் தடுத்தல் சட்டம் மற்றும் குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாத்தல் சட்டம் 2012 (Protection of Children from Sexual Offences Act 2012) ஆகியன குறித்துக் காவல் உயர் பயிற்சியகம் (Tamil Nadu Police Academy), காவலர் பயிற்சிப் பள்ளிகள் (Police Recruit Schools) மற்றும் பணியிடைப் பயிற்சி மையங்கள் (In-service Training Centres) ஆகியவற்றில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இந்தப் பயிற்சி வகுப்புகளில், பாலியல் வழக்குகளில் சரியான விசாரணை நடத்துவது பற்றி மட்டுமின்றி, இக்குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களைக் கனிவுடனும், கண்ணியத்துடனும் நடத்துவது குறித்தும் போதிக்கப்படும்.

10. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்களுடைய மருத்துவச் சிகிச்சைக்கான மொத்தச் செலவையும் தமிழக அரசே ஏற்றுக் கொள்வதுடன், அவர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான உதவிகளையும் செய்யும்.

11. பாதுகாப்பு மற்றும் கவனிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு 24 மணி நேரமும் உதவி செய்யும் வகையில் இலவசத் தொலைபேசி அழைப்பு சேவை (Childline) இயங்கி வருவது போல், ஆங்காங்கு தனித்தனியே இயங்கும் பெண்கள் உதவித் தொலைபேசி சேவை (Women Helpline), ஒருங்கிணைந்த சேவையாகத் தொண்டுள்ளம் கொண்டவர்களையும், பெண்களின் பாதுகாப்பில் அக்கறை உள்ளவர்களையும், அல்லாடும் மகளிருக்கு ஆலோசனை அளிக்கும் பயிற்சிப் பெற்றவர்களையும் உள்ளடக்கிய அமைப்பாக நிறுவப்படும்.

12. சென்ற ஆண்டு நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், 14.12.2012 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினால் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் பொதுக் கட்டடங்கள் அனைத்திலும் கண்காணிப்புக் கேமிராக்கள் (CCTV) நிறுவப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை முழுமையாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பெண்களுக்கு இன்னல் தரும் நபர்கள் அல்லது அவர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அடையாளம் காணப்படுவார்கள்.

13. மேலும், பொதுமக்கள் அதிகமாக நடமாடும் வணிக மையங்கள், பெண்கள் கல்வி நிறுவனங்கள் போன்ற இடங்களில் பெண்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடியவர்களின் நடமாட்டத்தைச் சீருடை அணியாத காவல்துறையினர் கண்காணித்து, இத்தகையக் குற்றங்களில் ஈடுபடுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பர்.

அதிக மகளிர் நீதிமன்றங்களை அமைத்த தமிழகம்

தமிழகத்தின் மொத்த 32 மாவட்டங்களில், 42 மகளிர் நீதிமன்றங்களை அமைக்க உத்தரவிட்டதன் மூலம், நாட்டிலேயே அதிக மகளிர் நீதிமன்றங்களை அமைக்கும் மாநிலமாகவும் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. சிறார்கள் நீதித்துறை தற்போது உரிய முக்கியத்துவம் பெற்று வருவது குறித்து

மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். 2012ஆம் ஆண்டில் எனது தலைமையிலான அரசில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சிறார்கள் நீதித்துறை வாரியத்தை அமைத்துள்ளது. மேலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 507 குழந்தைப் பராமரிப்பு மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை எனது தலைமையிலான அரசு அமைத்துள்ளது.

சமுதாயத்தில் பரவலாகக் காணப்படும் பதற்றமான சூழலையும், சகிப்புத்தன்மையற்ற நிலவரத்தையும் கட்டுப்படுத்தும் வகையில், சச்சரவுகள் மற்றும் குழப்பங்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு மாற்று வழிமுறையை உருவாக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 4கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், மாற்று சச்சரவுத் தீர்வு மையத்தைக் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது. Lok Adalats எனப்படும் மக்கள் நீதிமன்றங்கள் தமிழகத்தில் மிகச் சிறந்த முறையில் வலுப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் இந்த மக்கள் நீதிமன்றங்கள் மூலம் 78 ஆயிரத்து 291 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 701 கோடியே 34 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நீதிமன்ற அமைப்பை மேலும் செம்மைப்படுத்தும் வகையில், தமிழக அரசு கடந்த 2 நிதியாண்டுகளில் மட்டும் 41 கோடியே 41 இலட்சம் ரூபாய் நிதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள மாநில சட்டசேவை அதிகாரிகளின் அனைத்திந்தியக் கூட்டத்திற்குச் சென்னையைத் தேர்வு செய்ததற்காக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழியை அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 348ஆவது பிரிவின் 2ஆவது உட்பிரிவில், அலுவல் மொழிகள் சட்டம் 1963இன் 7ஆவது பிரிவு உயர்நீதிமன்றத் தீர்ப்புகள், உத்தரவுகள் மற்றும் நடவடிக்கைகளில் மாநில அலுவல் மொழியை குடியரசுத் தலைவரின் முன் அனுமதியுடன் பயன்படுத்துவது குறித்து தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்துள்ளது. இந்த நடைமுறை 4 மாநிலங்களில் ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாகப் பயன்படுத்த அனுமதியளிக்கும்படி, திரும்பத் திரும்ப கோரிக்கை விடுத்தும், இதுவரை தமிழகத்திற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. மத்திய உள்துறை அமைச்சகத்தின் அலுவல்மொழித் துறையிடமிருந்து கடந்த ஜனவரி மாதம் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்ட தகவலில், தமிழக அரசின் இந்தக் கோரிக்கை உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறை நிருவாகத்தின் பலன்கள் உண்மையிலேயே மக்களுக்குச் சுலபமாக கிடைக்க வேண்டும் என்றால், உயர்நீதிமன்றத்தில் மாநில மொழிதான் பயன்படுத்தப்பட வேண்டும். மாநில அரசிலும், மாநில சட்டமன்றப் பேரவையிலும் இந்த மொழிதான் பயன்படுத்தப்படுகிறது. எனவே, சென்னை உயர்நீதிமன்ற அலுவல் மொழியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையை உச்சநீதிமன்றம் நிறைவேற்ற மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களால்
15.04.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
முன்மொழியப்பட்ட அரசினர் தீர்மானம்.



நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் சூட்ட வேண்டும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரும்; உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயர்

சூட்டப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

விமானப் போக்குவரத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும் 2,015 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையம் மற்றும் விரிவாக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்தினை, மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் அவர்கள் 31.1.2013 அன்று துவக்கி வைக்க உள்ளார்கள் என்று தெரிவித்து, இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு எனக்கு மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்கள். மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சரின் அழைப்பினை ஏற்று, இந்த விழாவில் கலந்து கொள்வதாக நான் தெரிவித்து இருந்தேன்.

இது மட்டுமல்லாமல், "நீ முகம் காட்டினால் முப்பது இலட்சம் வாக்குகள் நிச்சயம்" என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றப்பட்டவரும்; பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், இலட்சியங்களையும் பட்டிதொட்டியெங்கும் பரப்பி தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயக்கனியாக விளங்கியவரும்; தமிழகத்தின் முதலமைச்சராக தொடர்ந்து மூன்று முறை பதவி வகித்து, முதலமைச்சராகவே மறைந்தவருமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு வைக்க வேண்டும் என்றும், இது குறித்த அறிவிப்பினை விமான நிலைய துவக்க விழாவிற்கு முன்பே வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தி; மாண்புமிகு மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதமும் எழுதியிருந்தேன். ஆனால், இது குறித்து எந்த அறிவிப்பும் மத்திய அரசால் வெளியிடப்படவில்லை.

நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் சூட்டுவது குறித்து சாதகமான பதில் வராதது எனக்கும், கோடிக்கணக்கான தமிழக மக்களுக்கும் மிகுந்த வேதனையை அளித்ததால்; சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனைய விழாவினைத் துவக்கி வைக்க வருகை புரிந்த மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் அவர்களை முதலமைச்சர் என்ற முறையில் மரபுப்படி வரவேற்றுவிட்டு; அந்த விழாவில் கலந்து கொள்ளாததற்கான காரணத்தை அறிக்கையின் வாயிலாகத் தெரிவித்து இருந்தேன்.

இந்தச் சூழ்நிலையில், மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்மையில் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்குப் பெயர் வைக்க வேண்டுமென்றால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலுடன் கூடிய வேண்டுகோள் மாநில அரசிடமிருந்து வரப்பெற வேண்டும் என்றும்; இதன் பிறகு மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுடன் இந்தக் கருத்துரு பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து கீழ்க்காணும் தீர்மானத்தினை நான் முன்மொழிய விரும்புகிறேன்.

தீர்மானம்

"சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை சூட்டியது போல்; உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரை சூட்டியது போல், மண்ணுலகத்தை விட்டு மறைந்தாலும் மக்களின் மனங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்பவரும், மக்களின் மகத்தான

சக்தி பெற்றவரும்; வள்ளல் என அனைவராலும் போற்றப்பட்டவரும்; தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்தவரும்; அன்புக்கு அடிமையாய்; ஆணவத்திற்கு அடிபணியாதவராய் விளங்கியவருமான மக்கள் திலகம், பொன்மனச் செம்மல், பாரத் ரத்னா, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு சூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது''

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றம் ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் 23.04.2013 அன்று*
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
2013–2014ஆம் ஆண்டிற்கான காவல் மற்றும் தீயணைப்பு மற்றும்
மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில்
கலந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த
கருத்துகளுக்குப் பதிலளித்து ஆற்றிய உரை



தமிழக காவல்துறை சுதந்திரமாகவும், நியாயமாகவும் செயல்படுகிறது! குறைகள் குறையவேண்டும்; நிறைகள் நிறைய வேண்டும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசின் நடவடிக்கைகளை, திட்டங்களை ஆதரித்தும், விமர்சித்தும் பேசியிருக்கிறார்கள். காவல் துறை மானியத்தில் 69 வெட்டுத் தீர்மானங்களும், தீயணைப்பு மற்றும்

மீட்புப் பணிகள் துறை மானியத்தில் 48 வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள். இந்தக் கருத்துகளின் அடிப்படையிலும், வெட்டுத் தீர்மானங்களில் உள்ள சாராம்சங்களின் அடிப்படையிலும் நான் எனது கருத்துகளை இந்த மாமன்றத்திற்கு எனது பதிலுரையின் மூலம் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! குணங்களையும், குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதை அறிந்து அதன் அடிப்படையில் ஒரு தெளிவான முடிவுக்கு வர வேண்டும் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

"குறைகள் குறைய வேண்டும்; நிறைகள் நிறைய வேண்டும்" என்ற அடிப்படையிலேயே எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. குறைகள் இல்லை என்று சொல்லவில்லை; அதே சமயத்தில் குறைகள் மிகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கு இல்லை. எந்த திட்டமாக இருந்தாலும் சரி, எந்த துறையின் நடவடிக்கையாக இருந்தாலும் சரி, செயல்பாடாக இருந்தாலும் சரி, நிறை, குறை இரண்டும் இருக்கத்தான் செய்யும். இது காவல் துறைக்கும் பொருத்தமானது தான். திட்டத்தினால் பயன் பெற்றவர்கள் அரசை, அரசின் துறைகளை, திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரிகளை பாராட்டுவார்கள். திட்டங்களினால் பயன் அடையாதவர்கள் திட்டங்களையும் அரசையும் விமர்சனம் செய்வார்கள். இது தான் மனித இயல்பு. அரசின் பிற துறைகளைப் பொறுத்தவரை திட்டங்களினால் மக்கள் நேரிடையாகப் பயன் பெறும் நிலை உள்ளது. எனவே, இதற்காக திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பாராட்டு பெறுவது என்பது இயற்கையானதுதான். ஆனால், காவல் துறையைப் பொறுத்த மட்டில், திட்டங்களால், செயல்பாடுகளால் கிடைக்கப் பெறும் பயன்களை சாதாரணமாக நேரடியாக உணர இயலாது. எனவேதான், பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள்,

திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளில், அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து, அவர்களின் உடைமைகள் கள்வர்களால் களவாடப் படாமல் காக்கும் காவல் துறையினரின் பாதுகாப்புப் பணி மக்களுக்கு நன்மை செய்யும் பணியாக பெரும்பாலும் உணரப்படுவதில்லை. இது போன்ற நிகழ்வுகளில் ஒன்றிரண்டு திருட்டு சம்பவங்கள் நிகழ்ந்தால் கூட காவல் துறையின் பணி விமர்சனத்திற்கு உள்ளாகிறது. இதே போன்று, போராட்டம், ஆர்ப்பாட்டம் போன்றவை மேற்கொள்ளப்படும் போது, இவற்றின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள் மற்றும் போராட்டம் நடத்துவோர் என இரு சாராரும் காவல் துறையினரை சாடுகின்றனர். எனவே தான், வேறு எந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போதும் இல்லாத வகையில், காவல் துறை மானியக் கோரிக்கையின் போது விமர்சனங்கள் அதிகம் வைக்கப்படுகின்றன. பாராட்டுகள் என்பது அநேகமாக இல்லை என்றே சொல்லலாம்.

நிறை, குறைகள் மிகைபடாமல் மக்கள் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு தூய நோக்கத்துடன் எடுத்துரைக்கும் ஆக்கப்பூர்வமான விமர்சனத்தை நான் வரவேற்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும் என்னிடம் உண்டு. அதே சமயத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, உண்மைக்குப் புறம்பானவற்றை சொல்வது, சிறிய விஷயத்தைக் கூட பூதாகரமாக்கிச் சொல்வது, நிறைகளை இருட்டடிப்புச் செய்வது போன்ற விமர்சனங்களை நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாது.

மற்றவர்கள் மீது அவதூறு பேசுவதையே தொழிலாகக் கொண்ட ஒருவர் சாக்ரடீஸைப் பார்த்து, "உங்களுக்கு ஒரு சேதி தெரியுமா?" என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சாக்ரடீஸ், "நீங்கள் சொல்ல வரும் செய்தி முற்றிலும் உண்மை என்று உங்களால் கூற முடியுமா?" என்று கேட்டார்.

அவதூறு பேசும் மனிதரின் பேச்சில் இருந்த வேகம் குறைந்தது.

"நீங்கள் சொல்லப் போவது சமூகத்திற்குப் பயன் அளிக்கக் கூடியதா?" என்று அந்த மனிதரைப் பார்த்து மீண்டும் ஒரு கேள்வி கேட்டார் சாக்ரடீஸ்.

அதற்கு அந்த மனிதர் "இல்லை" என்று சொன்னார்.

உடனே சாக்ரடீஸ், "இதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்கோ, சமூகத்திற்கோ இழப்பு உண்டா ?"என்று வினவினார்.

அதற்கு அந்த மனிதர், "அப்படிக் கூற முடியாது" என்று கூறினார்.

"எதை உண்மை என்று உறுதியாகக் கூற முடியாதோ, அதனால் நம் சமூகத்திற்கு எவ்விதப் பயனும் இல்லையோ, அதை அறிந்து கொள்ளாததால் நமக்கு இழப்பில்லையோ, அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை" என்றார் சாக்ரடீஸ்.

இது போன்று, விமர்சிக்க வேண்டும், இந்த அரசின் மீது குற்றம் சாட்ட வேண்டும், குறை கூற வேண்டும், அவதூறு பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் உண்மைக்குப் புறம்பாக இங்கே இந்த அவையிலும், அவைக்கு வெளியே பொதுமக்களின் மத்தியிலேயும் தெரிவிக்கப்பட்ட கருத்துகளைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஏனெனில் இவர்கள் எல்லாம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த அரசின் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்ற அடிப்படையில் தங்கள் வாதத்தை – இல்லை, இல்லை – விதண்டாவாதத்தை, முன் வைப்பவர்கள். குறைகளைச் சுற்றியே வட்டமிடுபவர்கள். நிறைகளை குறைத்து மதிப்பிடக் கூடியவர்கள். குறைகளை ஊதி ஊதி பெரிதாக்கக் கூடியவர்கள்.

அதே சமயத்தில் அவர்கள் கூறும் குறைகளில், குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமானால், அவற்றை களைய இந்த அரசு முனைப்புடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வசவுகள் நீடித்து நிலைக்காதவை. விருப்பு, வெறுப்பற்ற கருத்துகளே வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்பதை நன்கு அறிந்தவர்கள் நாங்கள். ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை தெரிவித்தவர்களின் கருத்துகள், அவர்கள் சுட்டிக் காட்டிய குறைகள் நிச்சயம் இந்த அரசால் பரிசீலிக்கப்பட்டு அவற்றை போக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எங்களைப் பொறுத்த வரையில், தடுக்கப்படக் கூடிய குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும், குற்றங்கள் குறைக்கப்பட வேண்டும், குற்றம் புரிந்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இங்கே பேசிய ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள், குற்றங்கள் அதிகரித்து விட்டதாக குறிப்பிட்டார்கள். ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கு சீரழிந்துவிட்டது; கொலைகள், குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது; என்றெல்லாம் அவைக்கு வெளியே அவதூறு பரப்பி வருகிறார்கள்.

நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு பதவியேற்றது முதல், தமிழகக் காவல்துறையினர் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்ற நிகழ்வுகளைத் தடுத்து வருகின்றனர். மேலும் குற்ற நிகழ்வுகளில் உடனடியாக குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கைது செய்து, அவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து, தண்டனைப் பெற்றுத் தருவதிலும் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக, குற்ற விகிதம் அதாவது, ஒரு இலட்சம் மக்களுக்கு நடக்கும் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

2008ஆம் ஆண்டு காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், ''குற்றங்களை பொதுவாகப் பரந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு, இந்த ஆண்டு என்று குறுகிய நோக்கத்தோடு பார்த்தால் அதிலே பயன் இல்லை, 4, 5 ஆண்டுகளில் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கிடவேண்டும்'' என்று குறிப்பிட்டு பேசியிருந்தார்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு குற்ற விகிதம் குறைந்ததோடு மட்டுமல்லாமல் பல வகைப்பாட்டில் குற்றங்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும், பல ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் குறைந்துள்ளது.

உதாரணமாக, எனது முந்தைய ஆட்சியின் இறுதியில், 2005இல், கொலைகளின் எண்ணிக்கை 1,366 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியின் இறுதியில், 2010இல் 1,715 ஆக உயர்ந்தது. இதே போல், ஆதாயக் கொலைகள் 74–இல் இருந்து 153 ஆக உயர்ந்தது. அந்த ஐந்தாண்டு காலங்களில், திமுக ஆட்சியில் கொலை வழக்குகள் 25.5 விழுக்காடும், ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 106.75 விழுக்காடும் அதிகரித்துள்ளது. அதாவது, முந்தைய தி.மு.க. ஆட்சியில் கொலைகளின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 5.1 விழுக்காடு கூடியுள்ளது.

ஆனால், எனது தலைமையிலான ஆட்சியில் 2011ஆம் ஆண்டு 1,747 கொலைகளும், 2012ஆம் ஆண்டு 1,806 கொலைகளும் நடந்துள்ளன. இதை முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டில் கொலைகளின் அதிகரிப்பு 2 விழுக்காடு குறைவாகவே உள்ளது.

ஆதாயக் கொலைகள் என்பது மிகக் கொடியவை ஆகும். 2010ஆம் ஆண்டு 153 என்று இருந்த ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை, 2011ஆம் ஆண்டு 123 ஆகவும், 2012ஆம் ஆண்டு 137 ஆகவும் இருந்தது. 2010ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடும் போது, 2012ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 10.45 விழுக்காடு குறைந்துள்ளது. எனது தலைமையிலான ஆட்சியில் ஆண்டிற்கு 5.2 விழுக்காடு என்ற அளவுக்கு ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்கு நேர் மாறாக, திமுக ஆட்சியின் போது, ஆண்டிற்கு சராசரி 21.3 விழுக்காடு ஆதாயக் கொலைகள் அதிகரித்து இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற 123 ஆதாயக் கொலைச் சம்பவங்களில் 96 சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, களவுபோன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. 2012ஆம் ஆண்டு நடைபெற்ற 137 சம்பவங்களில், 112 சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு களவு போன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இதுவரை

நடைபெற்ற 37 சம்பவங்களில், 30 சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். களவுபோன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொலை சம்பவங்களில், பெரும்பாலானவை குடும்பப் பிரச்சனைகள், காதல் விவகாரங்கள், வாய்த் தகராறு, நிலப் பிரச்சனைகள் ஆகியவற்றின் காரணமாக நடைபெற்றுள்ளன. திடீரென ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் காரணமாகவே, இது போன்ற கொலை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

உதாரணமாக, சமீபத்தில் நடந்த ஒரு கொலை குற்ற நிகழ்வை எடுத்துக் கூற விரும்புகிறேன். பி.எஸ்.என்.எல். அலுவலகத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற 70 வயது நபர் பி.எஸ்.என்.எல் அலுவலகத்தில் மேற்பார்வையாளராக வேலை பார்த்து வந்த தனது மனைவியைக் கத்தியால் குத்தி படுகொலை செய்துவிட்டார். தனது மனைவிக்கும் வேறு ஒருவருக்கும் கள்ளத் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டி அதனால் ஏற்பட்ட சண்டையில் காய் நறுக்கும் கத்தியை எடுத்து மனைவியைக் குத்தியதன் மூலம் இந்த கொலை நிகழ்ந்துள்ளது. இதே போன்று, ராசிபுரத்தில் தண்ணீர் குடிப்பதில், இன்ஜினியரிங் பயிலும் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு கொலையில் சென்று முடிந்தது. இது போன்று வாய்த் தகராறுகள் காரணமாக உணர்ச்சி வசப்பட்டு ஏற்படும் கொலைகளை முன்கூட்டியே யூகித்து காவல் துறையினரால் தடுப்பது என்பது இயலாத காரியம்.

இது தவிர, பணம் கொடுக்கல் வாங்கல், தனிப்பட்ட முன் விரோதம், அரசியல் விரோதம் போன்ற காரணங்களினாலும் கொலைகள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அந்த நேரத்தில் எழும் ஆத்திர உணர்வின் காரணமாக நிகழ்த்தப்படுவதால் காவல் துறையினரால் இவற்றைத் தடுப்பது என்பது இயலாததாகும்.

கூலிப் படையினரால் நிகழ்த்தப்படும் கொலை சம்பவங்கள் காவல் துறையினரால் கட்டுப்படுத்த இயலும். 2011ஆம் ஆண்டு கூலிப் படையினரால் நிகழ்த்தப்பட்ட கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை 6 என இருந்தது. இந்த எண்ணிக்கை 2012ஆம் ஆண்டு 3 என குறைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றங்களின் எண்ணிக்கை பற்றி எடுத்துக் கூறினார்கள். ஒரு சில வகைக் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருந்தாலும் குற்ற விகிதம் குறைந்துள்ளது என்பதை நான் இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குற்ற விகிதம் என்பது ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பது ஆகும். இதன் அடிப்படையில் பார்த்தால், 2010ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தாக்கலான வழக்குகளின் குற்ற விகிதம் 277.08 ஆகும். இந்த குற்றவிகிதம் 2012ஆம் ஆண்டு 239.57 ஆக குறைந்துள்ளது. அதாவது 37.51 விகிதம் அளவிற்கு குறைந்துள்ளது.

குற்ற விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், கூட்டுக் கொள்ளை வழக்குகள், கொள்ளை வழக்குகள், கன்னக் களவு வழக்குகள், திருட்டு வழக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் குறைந்துள்ளன.

எனது முந்தைய ஆட்சியின் இறுதியில், 2005இல் கூட்டுக் கொள்ளைகளின் எண்ணிக்கை 73 ஆக இருந்தது. இது முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியின் இறுதியில், 2010இல் 85 ஆக உயர்ந்தது. கொள்ளைகள் 437இல் இருந்து 1,817 ஆகவும், கன்னக் களவுகள் 3,738இல் இருந்து 4,715 ஆகவும் உயர்ந்தன. திமுக ஆட்சி நடைபெற்ற ஐந்தாண்டு காலத்தில், கூட்டுக் கொள்ளை வழக்குகள் 16.44 சதவீதமும், கொள்ளைகள் 315.8 சதவீதமும், கன்னக் களவு வழக்குகள் 26 சதவீதமும் அதிகரித்தன. அதாவது, கூட்டுக் கொள்ளைகள் சராசரியாக 3.3 சதவீதம் அதிகரித்தன. கொள்ளை வழக்குகள் சராசரியாக 63 சதவீதம் அதிகரித்தன. கன்னக் களவு வழக்குகள் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 5.2 சதவீதம் அதிகரித்தன.

2011ஆம் ஆண்டு 101 கூட்டுக் கொள்ளை வழக்குகளும், 2,066 கொள்ளை வழக்குகளும், 4,848 கன்னக்களவு வழக்குகளும், 13,924 திருட்டு வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. 2011ஆம் ஆண்டில் வழக்குகளின் எண்ணிக்கை சற்றுக் கூடுதல் என்றாலும், முதல் 4½ மாதங்கள் தி.மு.க. ஆட்சி நடைபெற்றது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட

விரும்புகிறேன். 2011ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், 2012ஆம் ஆண்டு கூட்டுக்கொள்ளை வழக்குகள் 97ம், கொள்ளை வழக்குகள் 1,898ம், கன்னக் களவு வழக்குகள் 4,457ம், திருட்டு வழக்குகள் 11,996ம் தாக்கலாகியுள்ளன. அதாவது குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. 2013ஆம் ஆண்டு இதுவரையில், கூட்டுக் கொள்ளை வழக்குகள் 27ம், கொள்ளை வழக்குகள் 551ம், கன்னக் களவு வழக்குகள் 1,199ம், திருட்டு வழக்குகள் 3,099ம் தாக்கலாகியுள்ளன.

கூட்டுக் கொள்ளை வழக்குகள் 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012ஆம் ஆண்டு 3.96 சதவீதம் குறைந்துள்ளன.

கொள்ளை வழக்குகளை 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012ஆம் ஆண்டு 8.13 சதவீதம் குறைந்துள்ளன.

கன்னக் களவு வழக்குகளை 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012ஆம் ஆண்டு 8.07 சதவீதம் குறைந்துள்ளன.

திருட்டு வழக்குகளைப் பொறுத்த வரையில், 2010ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியில் 14,583 ஆக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை, 2011ஆம் ஆண்டு 13,924 எனவும், 2012ஆம் ஆண்டு 11,996 ஆகவும் குறைந்துள்ளது. 2010ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியில் தாக்கலான திருட்டு வழக்குகளோடு ஒப்பிடும் போது இது 17.73 சதவீதம் குறைவாகும்.

2010ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியில் சொத்து தொடர்பாக 21,353 வழக்குகள் தாக்கலாகி உள்ளன. 2011ஆம் ஆண்டு, இது 21,062 எனவும், 2012ஆம் ஆண்டு 18,585 என்றும் குறைந்துள்ளது. காவல் துறையினர் எடுத்து வரும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளினால், சொத்து சம்பந்தமான குற்றங்கள் 12.96 சதவீதம் குறைந்துள்ளன.

தற்போது குற்றங்கள் அதிகரித்துள்ளன என்ற ஒரு உண்மைக்கு மாறான அவதூறு ஒருசில எதிர்கட்சிகளால் பரப்பப்படுவதால், இத்தனை புள்ளி விவரங்களை நான் இங்கே எடுத்துக் கூறியுள்ளேன். இதைத் தான் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த John F Kennedy “The great enemy of the truth is very often not the lie - deliberate, contrived and dishonest – but the myth – persistent, persuasive

and unrealistic" என்று கூறினார். அதாவது, உண்மையின் மிகப் பெரிய பகைவன் என்பது பெரும்பாலும் வேண்டுமென்றே, செயற்கையான மற்றும் நேர்மையற்ற முறையில் சொல்லப்படும் பொய் அல்ல; மாறாக, தொடர்ந்து, நம்பச் செய்யும் வகையில் சொல்லப்படும் உண்மைக்குப் புறம்பான கற்பனை ஆகும் என்றார் கென்னடி.

காவல் துறையினர் முனைப்புடன் செயல்படுவதால் தான், குற்றங்கள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன. திருட்டு, கொள்ளை போன்ற குற்றங்களில் ஈடுபடுவோரை கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுப்பதில் காவல்துறையினர் புதிய சவால்களைச் சந்தித்து வருகின்றனர். ஒரு சில இடங்களில் இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் குறைந்த வருவாயில் பணிபுரிந்து வருவோர், தங்கள் ஆடம்பரச் செலவிற்காக வழிப்பறி சம்பவங்களில் ஈடுபடுவதும் நடைபெறுகிறது. இவர்கள் புதிய குற்றவாளிகளாக இருப்பதால், இவர்களைக் கண்டறிந்து கைது செய்வது காவல் துறையினருக்குப் பெரும் சவாலாக அமைந்து விடுகிறது.

உதாரணமாக, சென்னை, கவரப்பேட்டையில் பொறியியல் பட்டம் பெற்று தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணி புரிந்து வந்த நபர் மற்றும் பட்டயப் படிப்பு முடித்து வேலையில்லாமல் இருந்த அவரது நண்பர் ஆகியோர் திருமங்கலம், முகப்பேர், அம்பத்தூர், கொரட்டூர், ரெட்டேரி ஆகிய பகுதிகளில் சுமார் 20 சங்கிலி பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே போன்று, திருச்சியில் கல்லூரி ஒன்றில் படிக்கும் மூன்று மாணவர்கள் ஒரு கொள்ளை வழக்கிலும், பெரம்பலூரில் கல்லூரியில் பயிலும் இரு மாணவர்கள் கொலை மற்றும் கொள்ளை வழக்கிலும், வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் மூன்று மாணவர்கள் சங்கிலி பறிப்பு வழக்குகளிலும், திருப்பூரில் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவர் சங்கிலி பறிப்பு வழக்கு ஒன்றிலும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில், அறிமுகம் இல்லாத புதிய நபர்களை வீட்டிற்குள் அனுமதிக்கக் கூடாது என்றும், வீட்டு வேலைக்குப் புதிய நபர்களை நியமிக்கும் போது

அவர்களின் பின்னணியை நன்கு விசாரிக்க வேண்டும் என்றும், வீட்டில் தனியாக இருப்பவர்கள் காவல் நிலையத்திற்குத் தகவல் தர வேண்டும் என்றும் பொதுமக்களிடையே காவல் துறையினர் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

மேலும், குற்றங்கள் நடக்காமல் தடுக்க விழிப்புணர்வு குழுவினர், காவல் நண்பர்கள் குழுவினர், ஊர்க்காவல் படையினர் ஆகியோரைக் கொண்டு ரோந்துகள் எண்ணிக்கை அதிகப்படுத்துதல்; பொதுமக்களிடையே குற்றங்கள் நடக்கும் முறை குறித்தும், அவற்றைத் தவிர்ப்பதற்கு உண்டான வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்; மக்கள் அதிகமாகக் கூடும் பொது இடங்கள் மற்றும் வியாபர ஸ்தலங்கள், பணியிடங்கள் போன்றவற்றில் கண்காணிப்புக் கேமரா பொருத்துதல்; வழக்கமான குற்றவாளிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்தல்; சொத்து சம்பந்தமான குற்ற வழக்குகளில் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து, களவு போன பொருட்களை மீட்டு குற்றவாளிகளைத் தடுப்பு காவலில் வைத்தல் போன்ற குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எனது தலைமையிலான ஆட்சியில் பொதுமக்களால் அளிக்கப்படும் புகார்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு காவல் துறையினரால் விசாரிக்கப்படுகின்றன. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பல புகார்கள் பதிவு செய்யப்படவே இல்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவர், தனக்கு சொந்தமான சரக்கு லாரி கடந்த 4.7.2010 அன்று அரியானா மாநிலம் அம்பாலாவில் இருந்து 770 ஹார்லிக்ஸ் பெட்டிகளை ஏற்றிக் கொண்டு, மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகில் உள்ள திருவாலய நல்லூரில் உள்ள கிடங்கிற்கு 12.7.2010 அன்று வந்ததாகவும், காலையில் எழுந்து பார்த்த போது, 135 ஹார்லிக்ஸ் பெட்டிகள், அதாவது 3,240 ஹார்லிக்ஸ் பாக்கெட்டுகள் கொள்ளை போயிருப்பது தெரிய வந்ததாகவும் தெரிவித்து ஒரு புகார் மனுவினை சோழவந்தான் காவல் நிலைய அதிகாரியிடம் அளித்து

இருக்கிறார். ஆனால், அந்தப் புகாரினை காவல் துறை அதிகாரி பதிவு செய்ய மறுத்துவிட்டார். உடனே அந்த நிறுவனம் இது குறித்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை முன்பு மனுத் தாக்கல் செய்தது.

இதனை 19.07.2010 அன்று விசாரித்த சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை, இரண்டு மணி நேரத்திற்குள் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. 20.07.2010 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, 17.07.2010 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டதாகக் காவல் ஆய்வாளர் தெரிவித்தார்.

ஆவணங்களை பரிசீலித்த உயர் நீதிமன்றம், இந்த வழக்கில் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன என்றும், 17.07.2010 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டதாக ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்தாலும், 20.07.2010 அன்று தான் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிவதாகவும் கருத்து தெரிவித்துள்ளது.

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் மகன் திரு. மு.க. அழகிரியால் ஆண்டிபட்டி தொகுதிக்கு உட்பட்ட கடமலைக்குண்டு பகுதியில் 18.07.2010 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட திரு. கருணாநிதியின் 87ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சிக்காக பொதுமக்களுக்கு வழங்க இந்த ஹார்லிக்ஸ் பெட்டிகள் கடத்தப்பட்டன என்பதால் தான் காவல்துறை ஆய்வாளர் புகாரை வாங்க மறுத்துள்ளார் என அப்போது மக்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டது.

இவ்வழக்கில் காவல்துறையினர், ஆக்கபூர்வமான விசாரணை எதுவும் மேற்கொள்ளாததால், அந்த நிறுவனத்தின் சார்பாக திரு. செல்வரத்தினம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் இவ்வழக்கின் விசாரணையை மாநிலக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்தார். அம்மனுவினை விசாரித்த உயர் நீதிமன்றம் மேற்படி வழக்கின் விசாரணையை அருகில் உள்ள திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கீழ் பணிபுரியும் காவல் துணை கண்காணிப்பாளர் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும், வழக்குக் கோப்பினை பெற்ற தினத்திலிருந்து

60 நாட்களுக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டது.

இதனையடுத்து, இவ்வழக்கில் 07.09.2010 அன்று திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை மேற்கொண்டார். பின்னர், அவர் இவ்வழக்கை கண்டுபிடிக்க முடியாத வழக்கு என முடிவு செய்து 29.12.2010 அன்று நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார்.

இது போன்று பல்வேறு புகார்களைக் காவல் துறையினர் வாங்க மறுத்த சம்பவங்கள் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன.

ஆனால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, காவல் துறையினர் பொதுமக்களால் கொடுக்கப்படுகின்ற அனைத்துப் புகார்களையும் பெற்று, பதிவு செய்து, சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கொலை வழக்கை விபத்தாக மாற்றிய சம்பவங்களும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தபால் துறையில் பணியாற்றி வந்த திரு. லட்சுமணன் என்பவர் மீது விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி சாலையில் வாகனம் ஏறி, அதனால் அவர் இறந்ததாக 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த மரணம் வாகன விபத்தினால் ஏற்பட்டதல்ல என்றும், பந்தல்குடி தி.மு.க. ஒன்றிய செயலாளர் திரு. சாகுல் அமீது என்பவர், இறந்தவரின் மனைவியுடன் இணைந்து சதித் திட்டம் தீட்டி லட்சுமணனை கொலை செய்து அதனை வாகன விபத்தாக மாற்றியது தெரிய வந்தது. இந்த வழக்கில், இந்த இரு குற்றவாளிகள் தவிர இந்த வழக்கை மூடி மறைக்க உதவிய முன்னாள் அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனும் மற்றும் முறையாக புலன் விசாரணை செய்யாத காவல் துறை அதிகாரிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

ஆனால், தற்போது எனது தலைமையிலான ஆட்சியில் புகார்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு, குற்றம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று எடுத்த கடுமையான நடவடிக்கையின் காரணமாக, நில அபகரிப்பு புகார்கள் வெகுவாக குறைந்துள்ளன. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் போது, வீடுகள், மனைகள், நிலங்கள் வைத்திருப்பவர்கள் தங்கள் சொத்து பறிபோய்விடுமோ என்ற கவலையுடன் வாழ்ந்தனர். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தனியார் சொத்துக்கள் நிலஅபகரிப்பு கும்பலால் போலி ஆவணங்கள் மூலமும், மிரட்டியும் பறிக்கப்பட்டன. மக்கள் நடமாட்டம் மிகுந்த நகரப் பகுதிகளில், பிரதான சாலைகளில் வீடோ, மனையோ வைத்திருந்தால், அதை தான் விரும்பும் நபருக்கு உரிய விலைக்கு விற்க முடியாத சூழ்நிலை இருந்தது.. அதிகார மையத்தில் இருந்த நபர்கள் கை காட்டும் நபர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்க நில உரிமையாளர்கள் நிர்பந்திக்கப்பட்டனர். பெரிய அளவில் சொத்துக்களை வாங்கவோ, விற்கவோ ஒருவர் விரும்பினால் அந்தந்தப் பகுதிகளில் உள்ள அதிகார மையத்திற்குத் தொடர்புடைய பிரமுகர்களைச் சந்தித்து அவர்களுடைய அனுமதியைப் பெற்ற பின்பு தான் பத்திரத்தை பதிவு செய்ய முடியும் என்ற நிலை இருந்தது.

2011ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்த நிலைமை தலைகீழாக மாறியது. பொதுமக்கள் தங்கள் விருப்பம் போல அசையா சொத்துக்களைச் சுதந்திரமாக வாங்குவதற்கும், விற்பதற்கும் ஏற்ற சூழ்நிலை உருவாகியது. இது மட்டுமல்லாமல், நில அபகரிப்புப் புகார்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நில அபகரிப்புப்புகார்களுக்கென தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, நில அபகரிப்பாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நில அபகரிப்பு தொடர்பாக, இதுவரை 1,778 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,034 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகளில் இதுவரையில் 1,156 கோடி ரூபாய் மதிப்புள்ள 3,070 ஏக்கர் நிலமும், 14,77,424

சதுர அடி வீட்டு மனைகளும் அபகரிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டு பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு உள்ளன. இவ்வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களில் 32 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். புகார்கள் உண்மைக்கு புறம்பானதாக இருக்கும் பட்சத்திலும், நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ள புகார்களிலும் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டு, நீதிமன்றங்களில் நிவாரணம் தேடிக் கொள்ளும்படி புகார்தாரர்கள் காவல் துறையினரால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனது தலைமையிலான அரசின் கடும் நடவடிக்கை காரணமாக புகார்தாரர்களுக்கும் நில அபகரிப்பாளர்களுக்கும் இடையே பல்வேறு வழக்குகளில் சமரசம் ஏற்பட்டு புகார்தாரர்களுக்கு சேர வேண்டிய பணம் வழங்கப்பட்டுள்ளது; அல்லது நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒன்றிரண்டு வழக்கு விவரங்களை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னை, நொளம்பூர் காவல் நிலைய சரகம், அண்ணாமலை அவன்யூவில் 150 கோடி ரூபாய் மதிப்புள்ள 20 ஏக்கர் நிலப்பரப்பில் வசித்து வந்த 120 குடும்பங்களின் நிலத்தை திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன் உள்ளிட்டோர் போலியான ஆவணங்கள் தயார் செய்து அபகரித்துக் கொண்டதாக செல்வமணி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், நொளம்பூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, ரங்கநாதன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இதே போன்று, கோயம்புத்தூரைச் சேர்ந்த மல்லிகா உள்ளிட்டோர், தங்களது 63 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 48 சென்ட் நிலத்தை கோயம்புத்தூர் மாவட்ட திமுக துணைச் செயலாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் அபகரித்தது தொடர்பாக கொடுத்த புகாரின் பேரிலும்; திருவண்ணாமலை மாவட்டம், துளசிராம் பாகவதர் என்பவர் தனது 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீட்டை திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவானந்தம் உள்ளிட்டோர் மிரட்டி, குறைந்த விலைக்கு பதிவு செய்து கொண்டதாக கொடுத்த புகாரின் பேரிலும்; மற்றும் மதுரை மாவட்டம், புதுப்பட்டியைச் சேர்ந்த வாசிமலை தனக்குச்

சொந்தமான 38 சென்ட் நிலத்தை திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினரான மின்னல்கொடி உள்ளிட்டோர் அபகரித்துக் கொண்டதாக கொடுத்த புகாரின் பேரிலும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, எதிரிகள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகார்களின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் புகார்தாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சொத்துக்கள் அல்லது அதற்கு ஈடாக பணத்தைத் திருப்பி கொடுத்தல் உள்ளிட்ட சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் காரணமாக, சம்பந்தப்பட்ட புகார்தாரர்கள் எதிரிகள் மீது கொடுத்த வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்தனர். இதனையடுத்து அவ்வழக்குகள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன. இது போன்ற சமாதான நடவடிக்கை மூலம் வழக்கு முடித்துக் கொள்ளப்பட்டதால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் மீதான புகாரும் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ! முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காவல் துறையின் நடவடிக்கைகளில் பல்வேறு சட்ட விரோதமான அதிகார மையங்களின் ஆதிக்கம் கொடிகட்டி பறந்தது. பணியிட மாற்றம், பதவி உயர்வு என அனைத்திலும் அதிகார மையங்களின் தலையீடு அதிகமாக இருந்தது. காவல் துறையினருக்குப் பல்வேறு அதிகார மையங்கள் பல்வேறு கட்டளைகளை இட்டன. இதில் எந்தக் கட்டளையைப் பின்பற்றுவது என்று தெரியாமல் காவல் துறையினர் விழி பிதுங்கினர்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல் நடைபெற்ற சமயத்தில் அன்றைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் மகனும், மத்திய அமைச்சராக இருந்தவரும் ஆன திரு. மு.க. அழகிரிக்கு கூடுதலாக அளிக்கப்பட்டு இருந்த பாதுகாப்பினை காவல் துறை திரும்பப் பெற்றது. தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டதால், காவல் துறையினர் மீது அதிகார மையங்கள் ஆதிக்கம் செலுத்த

இயலாது என்பதால், மத்திய அமைச்சருக்கு வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு காவலர்கள் தவிர, மிகுதியாக அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பினை, காவல் துறை திரும்பப் பெற்றது. ஆனால், சட்டப்படி செயல்பட்ட காவல் துறையினர் மீது கோபம் கொண்ட அப்போதைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, பொதுக் கூட்டம் ஒன்றிலே தான் இன்னமும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தானா எனக் கேட்டு காவல் துறையை மறைமுகமாக அச்சுறுத்தினார்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக, கட்சி மாச்சரியங்களுக்காக வழக்குகள் போடப்படுவதும், திரும்பப் பெறுவதும், முந்தைய திமுக ஆட்சியில் நடைபெற்று வந்தன. ஒரு அரசியல் கட்சியின் மாவட்டச் செயலாளர், மாவட்ட ஆட்சியாளரின் உத்தரவின்படி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 2008ஆம் ஆண்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அந்த உத்தரவை அனுமதித்து அப்போதைய அரசும் உத்தரவிட்டது. பின்னர், அறிவுரைக் குழுமம், அதாவது Advisory Board அதனைப் பரிசீலித்து உறுதி செய்தது. பின்னர், சம்பந்தப்பட்ட நபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவும் உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனாலும், அதற்குப் பின்னர், ஒரு வார காலத்தில் அவரை விடுவித்து அப்போதைய அரசு ஆணை பிறப்பித்தது.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசில், தி.மு.கவைச் சேர்ந்த அரசியல்வாதிகள் காவல் நிலையத்திற்கே சென்று, காவலர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும் கட்டளை இடுவது வாடிக்கையான நிகழ்வாக இருந்தது. அதனைக் கட்டுப்படுத்த அன்றைய அரசு எந்த முயற்சியையும் எடுக்காதது மட்டுமல்லாமல், அதற்கு ஆதரவும் தெரிவித்து வந்தது.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு காவல் ஆணையம், அரசியல்வாதிகள் காவல் நிலையத்திற்குள் செல்வதை தவிர்க்கும் நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும்; அரசியல்வாதிகள் ஏதேனும் கோரிக்கைகள் அளிக்க வேண்டும் என்றால், அதனை துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவருக்கு மேல் உள்ள அதிகாரிகளைச் சந்தித்து வழங்க வேண்டும் என்றும்

பரிந்துரை செய்தது. இதனை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியல்வாதிகள் காவல் நிலையங்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும், அதனை நடைமுறைப்படுத்தவும் இயலாது என்றும் தெரிவித்து அந்தப் பரிந்துரை ஏற்கப்படவில்லை என்று ஓர் அரசாணையையும் பிறப்பித்தது. காவல் துறையில் அதிகார மையங்கள் செயல்படுவதை தி.மு.க. ஆதரித்தது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

ஆனால் நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சீரழிந்திருந்த தமிழக காவல் துறையை சீர்படுத்தினேன். தற்போது தமிழகக் காவல் துறை சுதந்திரமாகவும், நியாயமாகவும் செயல்படுகிறது. காவல் துறை செயல்பாட்டில் யாரும் தலையிட முடியாத நிலை தற்போது நிலவுகிறது. காவல் துறையினர் தங்கள் பணிகளை சட்டப்படியும், நியாயப்படியும் செய்து வருகின்றனர். குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும், எவ்வித விருப்பு வெறுப்புமின்றி, வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி, ஒரு தலை சார்பு எதுவுமில்லாமல், நியாயமான நடவடிக்கையை காவல் துறையினர் எடுத்து வருகின்றனர். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் நில அபகரிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில் இருந்தே காவல் துறை எந்த அளவுக்கு நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்படுகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நான் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து காவல் துறையை நவீனப்படுத்தவும், மேம்படுத்தவும், காவல் துறையினரின் நலன் காக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். அவற்றில் ஒரு சிலவற்றை இங்குக் கோடிட்டு காட்ட விழைகிறேன்.

2010–2011ஆம் ஆண்டு 3,184 கோடியே, 48 இலட்சம் ரூபாயாக இருந்த காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு, 2011–2012ஆம் ஆண்டு 3,588 கோடியே 51 இலட்சம் ரூபாயாகவும், 2012–2013ஆம் ஆண்டு 4,096 கோடியே 73 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில், அதாவது 2013–2014ஆம் ஆண்டு 4,706 கோடி ரூபாயாக இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு பராமரிப்பைச் செவ்வனே செய்ய காவலர்களின் எண்ணிக்கை போதிய அளவு இருக்க வேண்டும் என்பதால் காலிப் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்படுகின்றன. இதுவரை 12,162 காவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், 12,918 இரண்டாம் நிலைக் காவலர்கள், 896 உதவி ஆய்வாளர்கள், 234 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள் மற்றும் 195 விரல் ரேகை பதிவு உதவி ஆய்வாளர்கள் என மொத்தம் 14,243 காலிப் பணியிடங்கள் கண்டறியப்பட்டு விரைவில் அவற்றை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் காவல் துறையினருக்குக் காவல் பணிகளில் உதவியாக இருக்கும் வகையில், "தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை" அதாவது, Tamil Nadu Special Police Youth Brigade ஒன்றை அமைத்திட உத்தரவிடப்பட்டு, அதனை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காவல் துறையினர் சட்டம் ஒழுங்கு பிரச்சினை, குற்றத் தடுப்பு புலன் விசாரணை, பாதுகாப்பு போன்ற பணிகளை எவ்விதத் தாமதமும் இல்லாமல் செவ்வனே செய்ய ஏதுவாக, கடந்த 22 மாதங்களில் இரு சக்கர வாகனங்கள் உட்பட 1,102 புதிய வாகனங்களையும், 1,429 பழைய வாகனங்களுக்குத் பதிலாக புதிய வாகனங்களையும் எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது.

"குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலை பின்னல் முறை" அதாவது, Crime and Criminals Tracking Network System - CCTNS என்ற தேசிய மின்னாளுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1,482 காவல் நிலையங்கள், 479 மேனிலை அலுவலகங்கள் மற்றும் 938 சிறப்புப் பிரிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2,899 மையங்கள் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம், திருவள்ளூர், அரியலூர், சிவகங்கை மாவட்டங்களிலும் மற்றும் கோயம்புத்தூர் நகரிலும் மாதிரி திட்டமாகத் துவக்கப்பட்டு, தற்போது மற்ற மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென தனித் தன்மை வாய்ந்த பொது ஒருங்கிணைந்த காவல் பதிவுருக்கள் புதுப்பிக்கும் முறைமை, அதாவது, Common Integrated Police Record Updated System – CIPRUS என்ற உள்ளகப் பயன்பாட்டு மென்பொருள்,

அதாவது Core Application Software தேசிய தகவல் மையத்தால் தயாரிக்கப்பட்டு, என்னால் 13.03.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், காவல் துறையினரின் திறன் மேம்பாடு, பயிற்சி, தொலைத் தொடர்பு, கட்டட வசதிகள் போன்றவை மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், காவல் துறையினருக்குத் தேவையான நவீன ஆயுதங்கள், உபகரணங்கள், தற்காப்புக் கவசங்கள் போன்றவை வாங்கப்பட்டு வருகின்றன.

சாலைகளில் ஏற்பட்டுள்ள வாகனப் பெருக்கம், அதிவேக வாகனங்கள் மற்றும் வாகனங்கள் விரைவாக செல்ல ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள வழித் தடங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் விபத்துகள் அதிகமாக நடப்பதை கவனத்தில் கொண்டு, விபத்துக்களைத் தடுக்க ஏற்கெனவே இருந்த 122 ரோந்து வாகனங்களோடு, புதியதாக 138 வாகனங்கள் வாங்க நான் உத்தரவிட்டதன் பேரில், தற்போது 149 வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலைகளிலும், 111 ரோந்து வாகனங்கள் மாநில நெடுஞ்சாலைகளிலும் ரோந்து பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், கோயம்புத்தூர், ஈரோடு, அரியலூர், திருச்சி, சிவகங்கை, மதுரை, தூத்துக்குடி உள்ளிட்ட சில மாவட்டங்களில் சுமார் 465 கோடி ரூபாய் மதிப்பில் 21 காவல் நிலையங்கள், 7 மகளிர் காவல் நிலையங்கள், 480 காவலர் குடியிருப்புகள், சிறைத் துறையினருக்கான 67 குடியிருப்புகள் மற்றும் 6 காவல் அலுவலக கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 1,695 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10,704 குடியிருப்புகள், 223 காவல் நிலையங்கள், 63 இதர கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனது தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், கடந்த 22 மாதங்களில் காவல் துறையில் 5,408 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் நிலைக் காவலர்களாகவும், 10,551 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 10,100

தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகவும்; 1,468 தலைமைக் காவலர்கள் உதவி ஆய்வாளர்களாகவும், 478 உதவி ஆய்வாளர்கள் ஆய்வாளர்களாகவும், 108 ஆயுதப்படை உதவி ஆய்வாளர்கள் ஆயுதப்படை ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மேலும், 110 காவல் ஆய்வாளர்கள் காவல் துணை கண்காணிப்பாளர்களாகவும், 23 ஆயுதப்படை ஆய்வாளர்கள் ஆயுதப்படை துணை கண்காணிப்பாளர்களாகவும், 23 சிறப்பு காவல்படை ஆய்வாளர்கள் உதவித் தளவாய்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு முக்கிய வழக்குகளில் அறிவியல் சம்பந்தமான குறிப்புகளை ஆராய்ந்து அளிக்கும் வகையில், அத்துறையில் அறிவியல் பிரிவு ஒன்றை துவக்க உத்தரவிடப்பட்டுள்ளது. திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் மாநில குற்றப் புலனாய்வுத் துறையின் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைக் காவலர்கள், காவல்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் பணியாற்ற ஏதுவாக அவர்களுக்கு நுட்பமான பயிற்சி அளிக்க, இடையில் குறைக்கப்பட்ட பயிற்சி காலத்தை மீண்டும் உயர்த்தி காவலர்களுக்கு உயர் ரக பயிற்சி பள்ளியில் ஏழு மாதங்கள் பயிற்சி அளிப்பதற்கு எனது அரசு உத்தரவிட்டுள்ளது.

குற்றங்களைத் தடுக்க முக்கிய நடவடிக்கையாக கூட்ட நெரிசல் அதிகமான பகுதிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் முக்கிய பொது இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டதை அடுத்து, காவல்துறையினர் அனைத்து மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் உள்ள வணிகர்கள், வங்கி அலுவலர்கள் மற்றும் வணிக வளாக உரிமையாளர்களுடன் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தி, பொது இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தியுள்ளனர். இதன் காரணமாக குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக கிராம கண்காணிப்பு குழுக்கள் Village

Vigilance Committees, காவல் துறையினருடன் இணைந்து செயல்படுவதை ஊக்குவிக்கும் வகையில், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் அமர்வதற்கு வசதியாக அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தலா 10 நாற்காலிகள் வாங்க ஒரு கோடி ரூபாயையும் மற்றும் அனைத்துக் காவல் நிலையங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு 1000 கணினிகள் வாங்க ஐந்து கோடி ரூபாயையும் அரசு வழங்கியுள்ளது.

மேலும், அலுவலின் போது விபத்து காரணமாக இறக்க நேரிடும் காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மேலும், காவலர்கள், பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. காவலர் மற்றும் காவலர் குடும்பங்கள் மருத்துவ சிகிச்சைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கென பிரத்யேகமாக 12 காவலர் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுடன் கூடுதலாக 26 ஆயுதப்படை தலைமை இடங்களிலும், 10 சிறப்பு காவல் படை தலைமை அகங்களிலும், புறநோயாளி சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் காவலர் குடும்பங்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியிலேயே சிகிச்சை பெற்றுக் கொள்ள இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறையைப் போன்றே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையும் சிறப்பான பணியினை செய்து வருகிறது. தீ விபத்துகளை முன்கூட்டியே தடுப்பது, தீ விபத்துகளின் போது அதில் சிக்குண்ட உயிர்களையும், உடைமைகளையும் காப்பது என இரு பெரும் தலையாய கடமைகளை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆற்றி வருகிறது. இது மட்டுமல்லாமல், இயற்கை சீற்றங்களான புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற சமயங்களிலும் இத்துறை மீட்புப் பணிகளை மேற்கொள்கிறது. இத்துறையின் பணிகள், இத்துறைக்கு தற்போதுள்ள வசதிகள், இத்துறை பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள், விபத்துகளின் போது தீயணைப்பு பணியாளர்கள் ஆற்றிய சாதனைகள் ஆகியவை

கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையிலும், தங்களுடைய அனுபவத்தை வைத்தும் இந்தத் துறை மீதான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்துள்ளார்கள்.

இங்கே பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் பல இடங்களில் புதிதாக தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்; தீயணைப்பு நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டும்; தீயணைப்புப் பணியாளர்களுக்கு போதுமான வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்துள்ளார்கள். இவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது மாநிலக் குற்றப் பிரிவினை வலுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்துவதற்காக 3 கோடி ரூபாய் செலவில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கவும், தேவையான உபகரணங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பீமராவ் அவர்களும் பேசும்போது கதிரவன் இறப்புப் பற்றி தெரிவித்தார். இது பற்றிய விவரத்தினை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மாநகரம், மதுரவாயல் காவல் சரகம், ஆலப்பாக்கத்தைச் சேர்ந்த பொன்னி என்பவர் தனது கணவரை பிரிந்து மூன்று பெண் குழந்தைகளுடன் தனியே வசித்து வந்துள்ளார். இவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக மேட்டுக்குப்பத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் கதிரவன் என்பவருடன் குடும்பம் நடத்தி வந்துள்ளார். இந்நிலையில், கதிரவன் பொன்னியை விட்டுப் பிரிந்து சென்று, வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்ள, பொன்னியின் சம்மதம் கேட்டு குடித்துவிட்டு வந்து அடிக்கடி தகராறு செய்து அடித்துத் துன்புறுத்தி வந்துள்ளார். இந்நிலையில் 31.03.2013

அன்று மாலை, கதிரவன் குடிபோதையில், பொன்னியின் வீட்டிற்குச் சென்று தகராறு செய்து கூச்சலிட்டுள்ளார். அப்போது, அப்பகுதியில் ரோந்து பணியிலிருந்த தலைமைக் காவலர் ரவீந்தரன், பொன்னியையும், கதிரவனையும் காவல் நிலையம் அழைத்து வந்துள்ளார். கதிரவன் குடிபோதை அதிகமாகி மயங்கிவிடவே, காவல் துறையினர், பொன்னியுடன் கதிரவனை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவர் பரிந்துரைப்படி மேல் சிகிச்சைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அவரை பரிசோதித்த மருத்துவர் கதிரவன் ஏற்கெனவே இறந்துவிட்டதாக மாலை 7.30 மணியளவில் தெரிவித்துள்ளார்.

கதிரவன் இறந்து போனது குறித்து பொன்னி அளித்த புகாரின் பேரில், மதுரவாயல் காவல் நிலைய கு.எண்.469/2013 சட்டப் பிரிவு 176 குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்து, நீதித்துறை நடுவர்–II விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

பூவிருந்தவல்லி நீதித்துறை நடுவர்–II பிரேத விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து வருகிறார். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பீம்ராவ் அவர்கள் பேசும்போது அம்பாசமுத்திரம் தீயணைப்பு வாகனம் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்துள்ளதாகத் தெரிவித்தார். அவ்வாறு அது பழுதடைந்திருந்தால் அந்த தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய வாகனம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவாஹிருல்லா அவர்கள் பேசும்போது, பாஸ்போர்ட் விசாரணைக்கு பெண்கள்கூட காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்படுகின்றனர் என்று கூறினார். Cr.P.C. சட்டத்தின்படி பெண்களையும், குழந்தைகளையும் சாட்சியாக விசாரணை செய்யக்கூட காவல் நிலையத்திற்கு அழைக்கக் கூடாது. அவர்களை அவர்களது இருப்பிடத்திற்குச் சென்று தான் விசாரிக்க வேண்டும். எனவே, பாஸ்போர்ட் விசாரணைக்கு அவர்களை அழைக்கத் தேவையில்லை. அவ்வாறு நடைபெற்றிருந்தால், அது விசாரிக்கப்பட்டு இது

போன்று இனிமேல் நிகழாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், மாமன்ற உறுப்பினர்கள் வைத்துள்ள கோரிக்கைகளின் அடிப்படையிலும், கருத்துகளின் அடிப்படையிலும், இந்த ஆண்டிற்கான காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான அறிவிப்புகளை இந்த மாமன்றத்திற்கு அளிக்க விரும்புகிறேன்.

1. **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறைக்கு ஆண்டுதோறும் பணியாளர் நியமனம்**

Recruitment will be taken up as an annual exercise through Tamil Nadu Uniformed Services Recruitment Board for Police, Fire and Rescue Services and Prison Departments.

1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம், எனது அரசால் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தின் மூலம், இதுவரை 79,838 இரண்டாம் நிலை காவலர்களும், 2,431 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களும், 4,541 தீயணைப்பு பணியாளர்களும் 5,490 காவல் உதவி ஆய்வாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இருப்பினும், சீருடைப் பணியாளர்கள் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்படாததன் காரணமாக, எப்போதும் காலிப் பணியிடங்கள் இருக்கின்ற சூழ்நிலை நிலவுகிறது. இந்தத் துறைகளில் காலிப் பணியிடங்களை தாமதமின்றி நிரப்புவது அத்தியாவசியமான தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, இனி ஆண்டுதோறும் காவலர்கள், சிறைக் காவலர்கள், தீயணைப்பு பணியாளர்கள் மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் ஆகிய நிலைகளில் ஏற்படும் காலியிடங்களை முன்கூட்டியே கண்டறிந்து அவற்றை

நிரப்ப ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் 17,138 காவலர்கள், 1,091 காவல் உதவி ஆய்வாளர்கள், 1,005 தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் 292 சிறைக் காவலர்கள் ஆகியோர் தேர்வு செய்யப்படுவர்.

2. காவல் துறையினருக்கு 4,800 புதிய குடியிருப்புகள் கட்டுதல்

Construction of 4,800 quarters for Police Personnel.

காவலர்களின் சேவை எந்நேரமும் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே அவர்களின் குடியிருப்புத் தேவைகளை 100 விழுக்காடு பூர்த்தி செய்ய உறுதி பூண்டுள்ள எனது தலைமையிலான அரசு அதற்கான அரசாணையை 13.12.2011 அன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, குடியிருப்புகளுக்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு அனைத்துக் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து தரப்படும். தேசிய சராசரியை விட இரு மடங்கிற்கும் அதிகமாக தமிழ்நாட்டில் காவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தற்போது 49,863 குடியிருப்புகள் இருக்கின்றன. மேலும் 6,078 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் தற்போது நடைபெற்று வருகின்றன. 2013–2014ஆம் ஆண்டில் மேலும் 4,800 குடியிருப்புகள் 575 கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

3. காவல் துறை நிருவாகத்தை வலுப்படுத்த 30 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் நியமனம்.

30 Deputy Superintendents of Police will be recruited to strengthen Police management.

துணைக் கண்காணிப்பாளர் நிலையில் போதுமான அளவு அதிகாரிகள் இல்லாததால், அந்தப் பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில் 2013ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 30 துணைக்

கண்காணிப்பாளர்கள் பணி நியமனம் செய்யப்படுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. தமிழக சிறப்புக் காவல் இளைஞர் படைக்கு 10,500 இளைஞர்களை சேர்த்தல்.

Induction of 10,500 Youth into the Tamil Nadu Special Police Youth Brigade.

பயிற்சி அளிக்கப்பட்ட காவலர்கள் செய்து வரும் சில கீழ்மட்டப் பணிகளை செய்வதற்கும் மற்றும் காவல் படைக்கு உதவுவதற்கும் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை ஒன்று ஏற்படுத்தப்படும் என்று 29.10.2012 அன்று நான் அறிவித்தேன்.

இது தொடர்பான மசோதா 7.2.2013 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, சட்டமாக இயற்றப்பட்டு, 25.2.2013 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.

இந்தத் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையின் செயற்பணிகள் மற்றும் கடமைகள் பின்வருமாறு:–

(அ) காவல் துறையின் வாகனங்களை ஓட்டுதல்

(ஆ) தபால் விநியோகம் மற்றும் கணினிப் பதிவுகளை மேற்கொள்ளுதல்

(இ) காவல் குடியிருப்புகளைப் பராமரித்தல் மற்றும்

(ஈ) விபத்திற்குள்ளான நபர்களின் உயிரிழப்பைத் தடுப்பதில் காவல் துறைக்கு உதவுதல்

இந்த ஆண்டு, முதல் கட்டமாக 10,500 இளைஞர்கள் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைக்கென தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. வாகன விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டு 100 புதிய நவீன உயிர் காக்கும் ஊர்திகளை காவல் துறைக்கு வழங்குதல்.

Procurement of 100 New Advance Life Support Ambulances for providing immediate medical assistance to accident victims.

விபத்தில் சிக்கியவர்களை "பொன்னான நேரம்" என்று சொல்லப்படுகின்ற நேரத்திற்குள் அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்று மேல் சிகிச்சை வழங்கும் நோக்கத்தில் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2002ஆம் ஆண்டில் அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள் தொடங்கப்பட்டன. 2002ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை 100 அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த 100 மையங்களில் 38 மையங்கள் மட்டுமே தற்போது செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 62 மையங்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2012ஆம் ஆண்டு 67,757 விபத்துகள் தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 15,072 உயிரிழப்பு விபத்துகள் ஏற்பட்டு, அதன் மூலம் 16,175 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது விபத்தினால் பாதிப்பு அடைபவர்கள் அவசர மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கீழ் தற்போது இயங்கி வரும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். விபத்துகள் ஏற்படும் நெடுஞ்சாலைப் பகுதிகளில் இதற்கென தனியே ஆம்புலன்ஸ் வாகனங்கள் இருந்தால் தான், காயமடைந்தவர்களை விரைந்து மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல இயலும். எனவே, இதற்கென 100 புதிய நவீன உயிர்காக்கும் ஊர்திகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பு குறைக்கப்படும்.

6. காவல் துறையினருக்கான பயிற்சி மையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

Upgradation of training infrastructure facilities in Police Training College, Police Training Centres and Recruit Schools.

காவலர் பயிற்சிப் பிரிவின் கீழ் காவலர் உயர் பயிற்சியகம், காவலர் பயிற்சிக் கல்லூரி, காவலர் தேர்வு பள்ளிகள் மற்றும் பணியிடைப் பயிற்சி மையங்கள் ஆகியவை

இயங்கி வருகின்றன. இரண்டாம் நிலை காவலர்களுக்கு காவல் பயிற்சிப் பள்ளியில் 22 வாரங்களுக்கு மட்டுமே அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. விரிவான பயிற்சித் திட்டத்திற்குக் குறைந்தது 7 மாத கால அளவு அடிப்படை பயிற்சியும், 1 மாத கால செயல்முறைப் பயிற்சியும் தேவைப்படுவதால் பயிற்சிக் காலத்தை நீட்டித்து 7.3.2012இல் அரசாணை வெளியிடப்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு, சென்னை, அசோக் நகரில் உள்ள காவலர் பயிற்சி கல்லூரி மற்றும் தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, வேலூர், கோயம்புத்தூர், ஆவடி, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் பரங்கிமலை, புதுப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள காவலர் பயிற்சி மையங்களின் கட்டுமான வசதிகள் 38 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

7. **உள்வட்ட உபயோகிப்பாளர் குழு** (CUG) **திட்டத்தை அனைத்துக் காவல் துறையினருக்கும் கட்டணம் ஏதுமில்லாமல் நீட்டிப்பதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கு சலுகைக் கட்டணத்தில் வழங்குதல்.**

Extension of Closed User Group Scheme to all Police Personnel and concession to their families

உதவி காவல் ஆய்வாளர் முதல் காவல் துறை தலைமை இயக்குநர் நிலை வரை கைபேசியை பயன்படுத்தும் 12,000 காவல் துறை பணியாளர்கள் தற்பொழுது உள்வட்ட உபயோகிப்பாளர் குழு அதாவது Closed User Group Scheme, என்னும் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு அதற்கான கட்டணத்தை தமிழக அரசே செலுத்தி வருகின்றது. காவல் துறையில் பணியாற்றும் அனைவரும் பணி நிமித்தம் காரணமாக ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளவும், ஒரு குடும்ப உணர்வுடன் பழகும் வகையிலும், அவர்களிடையே ஓர் இணக்கமான உறவை ஏற்படுத்தும் வகையிலும், தலைமைக் காவலர்கள் மற்றும்

காவலர்களுக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், காவல் துறை பணியாளர்களின் குடும்பங்களும் சலுகைக் கட்டண வசதி பெறும் வகையில் அவர்களும் இந்த உள்வட்ட உபயோகிப்பாளர் குழு திட்டத்தில் இணைய வழிவகை செய்யப்படும்.

8. காவல் பணியாளர்களுக்கு இடர்ப்படியை உயர்த்தி வழங்குதல்

Enhancement of Risk allowance to Police Officers and Personnel

தற்போது வழங்கப்படும் இடர்ப்படி காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் நிலை வரை 300 ரூபாயாகவும்; காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு 350 ரூபாயாகவும் உள்ளது.

சமூக விரோத செயல் மற்றும் கொடுங்குற்றங்களில் ஈடுபடுபவர்களை கண்காணிக்கும் காவல் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணி நேரத்தில் தங்களுடைய உயிரைத் துச்சமென கருதி பணி செய்யும் நிலை உள்ளதால், காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் நிலை வரை தற்போது வழங்கப்படும் இடர்ப்படி, மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும்; காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் இடர்ப்படி 350 ரூபாயிலிருந்து 450 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

9. போக்குவரத்து காவலர்களுக்கு சீருடைப் படியை உயர்த்தி வழங்குதல்.

Enhancement of Uniform Allowance for Traffic Police Personnel.

கடந்த ஆண்டு போக்குவரத்து காவல் துறையினருக்கு சீருடைப்படி மாதமொன்றுக்கு 200 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. இந்தச் சீருடைப்படி நடப்பு ஆண்டு முதல் மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தப்படும்.

10. வீர தீர செயல்களுக்கான பதக்கம் பெறும் சாதனையாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்குதல்.

Cash prize of Rs 5 lakhs for winners of Gallantry Medals.

வீரதீர செயல்களுக்கான விருதுகள் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று காவல் துறை பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த விருதுகள் துணிச்சலான வீரதீர செயல்கள் புரிந்து, உயிர்கள் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றி அல்லது குற்றங்களைத் தடுத்து, குற்றவாளிகளை கைது செய்வோரை கௌரவிக்கும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசால் வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் காவல் துறைக்கும், மாநிலத்திற்கும், விருது பெறும் காவல் துறை அதிகாரிகளுக்கும் பெருமை சேர்க்கின்றது. மத்திய அரசால் வழங்கப்படும் குடியரசு தலைவரின் வீரதீர செயலுக்கான பதக்கம் அதாவது, President's Police Medal for Gallantry பெறும் காவல் அதிகாரிகளுக்கு மாதாந்திர பதக்கப் படியாக 1500 ரூபாயும், மத்திய அரசால் வழங்கப்படும் வீரதீர செயலுக்கான பதக்கம் அதாவது Police Medal for Gallantry பெறும் காவல் அதிகாரிகளுக்கு மாதாந்திர பதக்கப் படியாக 900 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதே போல், மாநில அரசால் வழங்கப்படும் தமிழக முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம் பெறும் காவல் அதிகாரிகளுக்கு மாதாந்திர பதக்கப் படியாக 300 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. இனி வருங்காலங்களில் வீரதீர செயல்களுக்காகப் பதக்கம் பெறும் சாதனையாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு தமிழக அரசால் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. காவல் சிறப்பு அங்காடித் திட்டம் வனத் துறை சீருடைப் பணியாளர்களுக்கும் நீட்டிப்பு

Extension of Police Special Canteen Scheme to the Uniformed Personnel of Forest Department

நாட்டில் இயற்கை வளங்கள் பெருகுவதற்கும், வன விலங்குகள் பாதுகாக்கப்படுவதற்கும் இன்றியமையாததாக விளங்கும் காடுகளைப் பராமரிக்கும் பணியினை இயற்கை இடர்பாடுகளுக்கு இடையில் வனப் பகுதிகளில் மேற்கொள்பவர்கள் வனத் துறையில் பணியாற்றும் சீருடைப் பணியாளர்கள். காவல் துறையினரைப் போல் கடினமானப் பணிகளை வனத் துறை சீருடைப் பணியாளர்கள் மேற்கொள்வதைக் கருத்தில் கொண்டு, அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும் சலுகை விலையில் காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மற்றும் சிறைத் துறையினருக்கு வழங்குவது போல், வனத் துறை சீருடைப் பணியாளர்களுக்கும் வழங்கிட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, காவல் சிறப்பு அங்காடித் திட்டம் வனத் துறை சீருடைப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்படும்.

12. காவல் சிறப்பு அங்காடிகளை 45 இடங்களில் அமைத்தல்.
Establishment of 45 Police Special Canteens

காவலர் நலன் கருதி இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழ்நாட்டில் காவல் துறையினருக்குச் சிறப்பு அங்காடிகள் 28.3.2012 அன்று எனது அரசால் தொடங்கப்பட்டன. இவை ஆவடி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களும் சலுகை விலையில் இந்த அங்காடிகளில் கிடைப்பதால் காவல் துறையினருக்கு இத்திட்டம் பெரிதும் பயன் அளிக்கின்றது. காவல் துறையினர் தாம் பணிபுரியும் இடங்களிலேயே இவ்வசதியைப் பெற இந்த ஆண்டு மேலும் 45 காவல் சிறப்பு அங்காடிகள் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் 13 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

13. காவல் பணியாளர்களுக்கான சீருடை தையல் கட்டணத்தை உயர்த்தி வழங்குதல்

Enhancement of Uniform Stitching Charges for Police Personnel

காவல் பணியாளர்களுக்கான சீருடை தையல் கட்டணம் ஜோடி ஒன்றுக்கு 250 ரூபாயிலிருந்து 450 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

14. கடலோர காவல் படையை வலுப்படுத்த 30 கடல் சார் காவல் நிலையங்கள் அமைத்தல்

Coastal Security Group will be strengthened by establishing 30 Marine Police Stations

தமிழ்நாட்டில் உள்ள 1,076 கிலோ மீட்டர் நீளமான கடற்கரையின் பாதுகாப்பை உறுதி செய்ய எனது அரசால் முன்னோடி திட்டமாக 1994ஆம் ஆண்டில் கடலோரக் காவல் படை உருவாக்கப்பட்டது. தற்போது 12 கடல் சார் காவல் நிலையங்கள் மட்டுமே உள்ளன. இந்த கடல் சார் காவல் நிலையங்கள் கடலோரப் பகுதிகளில் நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து உள்ளூர் காவல் துறை, மீன் வளத்துறை, சுங்கத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றன.

கடலோரக் காவல் படைக்கு மேலும் வலுவூட்டும் வகையில், 2013ஆம் ஆண்டில் 30 கடல்சார் காவல் நிலையங்கள் 21 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

15. மோப்ப நாய்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்துதல்

Enhancement of Feeding Charges for Sniffer and Tracker Dogs

தமிழ்நாட்டில், குற்றம் புரிந்தோரின் தடயங்களைக் கண்டுபிடிக்கும் 85 மோப்ப நாய்களும், வெடிமருந்துப்

பொருட்களைக் கண்டுபிடிக்கும் 98 மோப்ப நாய்களும், போதை பொருட்களைக் கண்டறியும் 12 மோப்ப நாய்களும் உள்ளன. 2011–2012ஆம் ஆண்டில், இந்த மோப்ப நாய்களுக்கான உணவுக் கட்டணம் நாள் ஒன்றுக்கு 85 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு முதல் மோப்ப நாய்களுக்குத் தற்போது வழங்கப்படும் உணவுப்படி 85 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

16. புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக தரம் உயர்த்துதல்

Upgradation of outposts into Police Stations

தற்போது மாநிலத்தில் 60 புறக்காவல் நிலையங்கள் உள்ளன. கடந்த 2011–2012ஆம் நிதியாண்டில் 12 புறக்காவல் நிலையங்கள் 13 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் முழு அளவிலான காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டன. மேலும், 2012–2013ஆம் நிதியாண்டில் 12 புறக்காவல் நிலையங்கள் 12 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் முழு அளவிலான காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டன. அதே போல் இந்த ஆண்டில் 13 கோடி ரூபாய் செலவில், 12 புறக் காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

17. உங்கள் சொந்த இல்ல திட்ட பயனாளிகள் மற்றும் பிற காவல் பணியாளர்களின் நலனுக்காக மேலக்கோட்டையூரில் உறைவிடப்பள்ளி அமைத்தல்.

A residential school will be started at Melakottaiyur for the benefit of “Own Your House” Scheme allottees and Police Personnel.

காவல் துறை பணியாளர்களுக்கென ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ எனும் திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு தாலுக்கா மேலகோட்டையூரில் 47.6 ஏக்கர் நிலப்பரப்பில் 2,673 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டத்திற்கு 26.10.2012 அன்று நான் அடிக்கல் நாட்டினேன்.

இந்தத் திட்டப் பயனாளிகளின் நலன் கருதியும், மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பணிபுரியும் காவல் துறையினரின் நலன் கருதியும், மேலக்கோட்டையூரில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் உயர் தரம் பொருந்திய உறைவிடப் பள்ளி ஒன்று தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

18. 200 ஊரக காவல் நிலையங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைத்தல்

Gymnasium facilities will be provided in 200 Rural Police Stations

காவல் துறை பணியாளர்கள் ஆரோக்கியத்துடனும், உடல் வலிமையுடனும் இருப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, காவல் துறையினரின் உடலுறுதியை மேம்படுத்த உதவும் உடற் பயிற்சிக் கூடங்களை அனைத்துக் காவல் நிலையங்களிலும் அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக, நடப்பாண்டில் 200 ஊரக காவல் நிலையங்களில் உடற் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

19. காவல் துறையில் தொலைத் தொடர்பு வசதிகளை மேம்படுத்துதல்.

Improved Communication Facilities will be provided to the Police Force.

காவல் துறையின் தகவல் பரிமாற்றத்திற்கென தற்போது 4758 மிக உயர் அலை கைபேசி கருவிகள், அதாவது VHF Mobile Sets, 2826 மிக உயர் அலை நிலை கருவிகள், அதாவது VHF Static Sets, 11850 மிக உயர் அலை கையடக்கக் கருவிகள், அதாவது VHF Handheld Sets மற்றும் 268 மிக உயர் அலை திருப்பி வானொலி கருவிகள், அதாவது VHF Repeater Sets என மொத்தம் 19702 கருவிகள் பயன்பாட்டில் உள்ளன. கடந்த ஆண்டில் மேலும் 1210 கருவிகள் வழங்க ஆணையிடப்பட்டது.

காவல் துறையில் தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்திட 3 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 350

மிக உயர் அலை கைபேசி கருவிகள், அதாவது VHF Mobile Sets, 250 மிக உயர் அலை நிலைக் கருவிகள், அதாவது VHF Static Sets, 550 மிக உயர் அலை கையடக்கக் கருவிகள், அதாவது VHF Handheld sets மற்றும் 250 மிக உயர் அலை கையடக்க வானொலிப் பெட்டிகள், அதாவது VHF Walkie Talkie Sets ஆகியவை வழங்கப்படும். இது விரைவான தகவல் பரிமாற்றத்திற்கும், துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் உதவியாக அமையும்.

20. உள்சுற்று இணைப்பு தொலைக்காட்சி (CCTV) **வசதியை 251 காவல் நிலையங்களில் அமைத்தல்**

Closed Circuit Television facilities will be installed in 251 Police Stations

காவல் துறையின் அடிப்படை அலகுகள் காவல் நிலையங்களாகும். இந்தக் காவல் நிலையங்களிலிருந்து தான், பொது மக்களிடமிருந்து புகார்களைப் பெறுவது, அவர்களின் குறைகளைத் தீர்ப்பது போன்ற அத்தியாவசியப் பணிகளை காவல் துறையினர் மேற்கொள்கின்றனர்.

இந்தக் காவல் நிலையங்களில் நடக்கும் நிகழ்வுகளை கண்காணிக்கும் வகையில், முதற்கட்டமாக 251 காவல் நிலையங்களில் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் உள் சுற்று இணைப்பு தொலைக்காட்சி வசதிகள், அதாவது Closed Circuit TV அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கை ஒரு வெளிப்படையான, ஒளிவு மறைவில்லாத நிருவாகம் ஏற்பட வழி வகுக்கும்.

21. பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் காவல் துறையினருக்கு துயில்கூடங்கள் அமைத்தல்

Dormitory facilities will be created for Police Personnel on bandobust duty

பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் சிறப்புப் பணி காவல் படையினருக்கும், ஆயுதப் படையினருக்கும் தக்க தங்கும் வசதி வழங்குதல் அவசியமாகும்.

இந்தத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம், மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஐந்து துயில் கூடங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

22. திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள ஆயுதப்படை வளாகத்தில் காவலர் படைக் குடியிருப்புகள் கட்டுதல்

Construction of barracks for Palayamkottai Armed Reserve Police Unit in Tirunelveli District

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை யிலுள்ள ஆயுதப்படை வளாகத்தில் இந்த ஆண்டு 2 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் காவலர் படைக் குடியிருப்புகள் கட்டப்படும்.

23. அனைத்துக் காவல் ஆணையரகங்கள் மற்றும் மாவட்ட ஆயுதப்படை பிரிவுகளில் காவல் உணவகம் அமைத்தல்.

Police Mess will be set up in all Police Commissionerates and District Armed Reserve Units.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஒவ்வொரு நிறுமத்திலும் ஒவ்வொரு காவல் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உணவகம் Bandobust பணியில் ஈடுபடும் காவலர்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்கிறது. இது போன்ற வசதிகள் காவல் ஆணையரகங்களிலும், மாவட்ட ஆயுதப்படை பிரிவுகளிலும் இல்லை.

வேலை நிறுத்தம், கடை அடைப்பு போன்ற நேரங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் காவல் துறையினருக்கு உணவு வசதிகளை ஏற்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு காவல் ஆணையரகத்திலும், மாவட்ட ஆயுதப்படை பிரிவிலும் ஒரு காவல் உணவகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

24. காவல் துறையினரின் பயன்பாட்டிற்காக 10 மாவட்டங்களில் தங்கும் விடுதிகள் அமைத்தல்.

Rest Houses for Police Personnel will be set up in 10 Districts.

காவல் துறையினர் பணி நிமித்தமாக மாவட்ட தலைநகரங்களுக்கு செல்லும் போது, தங்கும் விடுதிகள் இன்றி சிரமப்படுகின்றனர். இதற்குத் தீர்வு காணும் வண்ணம், ஒவ்வொரு மாவட்டத்திலும் தங்கும் விடுதிகளை அமைக்க எனது தலைமையிலான அரசு உத்தேசித்துள்ளது. முதற்கட்டமாக இந்த ஆண்டு 10 மாவட்டத் தலைநகரங்களில் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தங்கும் விடுதிகள் ஏற்படுத்தப்படும்.

25. 500 காவல் நிலையங்களில் தடையில்லா மின்சாரம் வழங்க சூரிய சக்தியால் இயங்கும் அமைப்புகளை நிறுவுதல்.

Installation of Solar Powered Units for uninterrupted power supply in 500 Police Stations.

தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012இல், அனைத்து அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு கட்டடங்களின் மேற்கூரைகளில் படிப்படியாக சூரிய சக்தி அமைப்புகள் பொருத்தப்படும் என்பதற்கேற்பவும், குற்றம் மற்றும் குற்றவாளிகள் வலைப்பின்னல் திட்டத்தினை செயல்படுத்தும் காவல் நிலையங்களுக்குத் தடையில்லா மின்சக்தி வழங்குவது அவசியம் என்பதன் அடிப்படையிலும், அனைத்துக் காவல் நிலையங்களிலும் சூரிய சக்தியால் இயங்கக் கூடிய மின்சார அமைப்புகளை ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக, 500 காவல் நிலையங்களில் 20 கோடி ரூபாய் மதிப்பில் சூரிய சக்தியால் இயங்கக் கூடிய மின்சார அமைப்புகள் பொருத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

26. நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறும் போது கைதிகளை பாதுகாப்பாகக் காவலில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

Creation of facilities for custodial safety of Prisoners during Court trials.

வழக்குகள் நடைபெறும் போது கைதிகள் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுகிறார்கள். அந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை அவர்களை நீதிமன்ற வளாகத்திலேயே பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியுள்ளது. இது போன்ற தருணங்களில், கைதிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில், நீதிமன்ற வளாகங்களில் கைதிகளை பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் கைதி அறைகள் உருவாக்கப்படும். மேலும், இரண்டு உயர் நீதிமன்ற வளாகங்கள் ஒவ்வொன்றிலும் 75 இலட்சம் ரூபாய் செலவில் கைதிகள் அறை வசதி ஏற்படுத்தப்படும். உயர் நீதிமன்றத்தின் அனுமதியோடு இத்திட்டம் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

27. குற்றவியல் நடைமுறை சட்டத்தின் சில பிரிவுகளில் செயலாக்க நீதிபதியாக செயல்படும் அதிகாரத்தை சென்னை காவல் துணை ஆணையாளர்களுக்கு வழங்குதல்.

Powers under Preventive Sections of Criminal Procedure Code will be conferred on the Deputy Commissioners of Police, Chennai.

24.8.2011 முதல் சென்னைப் பெருநகர காவல் ஆணையரக எல்லைகளானது வடக்கே எண்ணூர் மற்றும் செங்குன்றம் வரையிலும், தெற்கே கானத்தூர் மற்றும் பீர்க்கன்கரணை வரையிலும், மேற்கே பூந்தமல்லி மற்றும் திருநின்றவூர் வரையிலும் சுமார் 726 சதுர கிலோ மீட்டர் பரந்து விரிந்து, 12 காவல் மாவட்டங்களின் கீழ் அமைந்துள்ளது. சட்டம் ஒழுங்கினை பராமரிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் மற்றும் குற்ற நிகழ்வுகளை தடுக்கவும் கீழ்க்கண்ட குற்றவியல் நடைமுறைச் சட்டத் தடுப்புப் பிரிவுகளான 107, அதாவது அமைதியான நிலைமையை பாதுகாத்தல்; 108, அதாவது அரசுக்கு எதிரான செயல்களை பரப்பும் நபர்களிடையே நல்லொழுக்கத்தை ஏற்படுத்தி பாதுகாத்தல்; 109, அதாவது சந்தேகத்திற்கிடமான நபர்களிடமிருந்து நல்லொழுக்கத்தை ஏற்படுத்தி பாதுகாத்தல்; 110, அதாவது வழக்கமான

குற்றவாளிகளிடையே நல்லொழுக்கத்தை ஏற்படுத்தி பாதுகாத்தல் ஆகியவற்றின்படி செயலாக்க நீதிபதியாக செயல்படும் அதிகாரங்கள் மேற்கண்ட 12 மாவட்டங்களை நிருவகிக்கும் காவல் துணை ஆணையாளர்களுக்கு வழங்கப்படும்.

28. குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கண்காணிக்க சென்னை காவல் ஆணையரகத்திற்கு 100 மூச்சு பகுப்பாய்விகள் வழங்குதல்

100 Breath Analysers will be provided to Chennai Police Commissionerate to check drunken driving

சென்னை போக்குவரத்து காவல் சார்பில் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தவும், நடைமுறைப்படுத்தவும், 66 போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் மற்றும் 320 போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். விபத்துக்களை தடுக்கும் வகையில், குடிபோதையில் வாகனம் ஓட்டியதற்காக, சென்னை போக்குவரத்து காவல் துறை மூலமாக 2012ஆம் ஆண்டில் 19,436 வழக்குகளும், நடப்பு ஆண்டில் 9,858 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது நாள் வரையில், சென்னை போக்குவரத்து காவல்துறையில், அச்சுப்பொறியுடன் கூடிய 84 மூச்சுப் பகுப்பாய்விகள் மட்டுமே உள்ளன. குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை மேலும் தீவிரமாகக் கண்காணித்து சாலை விபத்துக்களை தடுக்க அச்சுப் பொறியுடன் கூடிய மூச்சுப் பகுப்பாய்விகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன. இதற்கென மேலும் அச்சுப்பொறியுடன் கூடிய 100 மூச்சுப் பகுப்பாய்விகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

29. சென்னை மாநகரத்தில் கூட்ட நெரிசல், மக்கள் புழக்கம் அதிகமுள்ள பகுதிகளை கண்காணிக்க 2700 இடங்களில் உள் சுற்று இணைப்புத் தொலைக்காட்சி வசதிகள் (CCTV) **பொருத்துதல்**

Closed Circuit Television Cameras will be installed in 2700 locations across Chennai City for surveillance of sensitive areas.

இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் சென்னை மாநகரமும் ஒன்றாகும். பாரம்பரியமும், பொருளாதார வளர்ச்சியும் உள்ள சென்னை மாநகரத்தில் ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மேலும் உயர் படிப்பிற்காகவும், வேலை வாய்ப்புகளை நாடியும், மருத்துவ வசதிகளுக்காகவும், சென்னை மாநகரத்திற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து மக்கள் வந்த வண்ணம் உள்ளனர். ஆகவே, குற்ற நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். கூட்ட நெரிசல் அதிகமாக உள்ள பகுதிகளில் காவல் துறையினரின் ரோந்துப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இருப்பினும், அங்காடிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் சமூக விரோத சக்திகளின் நடமாட்டத்தினைத் தொடர்ந்து கண்காணிக்க கண்காணிப்புக் காமிராக்கள் நிறுவப்படுவது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, சென்னை ஆணையரகத்திலுள்ள 135 காவல் நிலையங்களிலும், ஒரு காவல் நிலையத்திற்கு 20 CCTV–க்கள் என்ற விகிதத்தில், மொத்தம் 2700 இடங்களில் CCTV–க்கள் பொருத்தப்படும். இதனால், சென்னை மாநகரத்தில் மக்கள் புழக்கம் அதிகமுள்ள அனைத்துப் பகுதிகளும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.

30. சென்னையில் மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதிகளில் ரோந்துப் பணிக்கென குறுகிய சக்கர அமைப்பு கொண்ட 135 வாகனங்கள் வழங்குதல்.

135 Narrow Wheel Based Vehicles will be provided for patrolling densely populated areas in Chennai City.

நகர்ப்புற, கிராமப்புற மக்களை உள்ளடக்கிய 85 இலட்சம் மக்களைக் கொண்ட 726 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் சென்னை மாநகர காவல் தனது காவல் பணியை மேற்கொண்டு வருகிறது. வண்ணாரப்பேட்டை,

புளியந்தோப்பு, திருவல்லிக்கேணி, தி. நகர், அடையாறு, மயிலாப்பூர் போன்ற பகுதிகள் மக்கள் நெருக்கடி மிகுந்தவையாகும். இந்தப் பகுதிகளில் தற்போதைய ரோந்துக் காவல் வாகனங்கள் மூலமாக ரோந்துப் பணிகளை மேற்கொள்வது கடினமாக உள்ளது. எனவே, 135 காவல் நிலையங்களுக்கு 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் குறுகிய சக்கர அமைப்பு கொண்ட வாகனங்கள் வழங்கப்படும்.

இதன் மூலம் காவல் பாதுகாப்பு அதிகரித்து, குற்றங்கள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஆகியவை நிகழாமல் தவிர்க்கப்படும்.

31. **200 சென்னை மாநகர ரோந்து காவல் வாகனங்களில் கண்காணிப்புக் காமிராக்கள் பொருத்துதல்.**

Mobile CCTVs will be installed in 200 Patrol Vehicles for supervision and monitoring.

சென்னை மாநகரக் காவல் துறையானது பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், மாணவர்கள் மற்றும் பிற குழுவினரால் நடத்தப்படும் போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள், தர்னாக்கள் மற்றும் மறியல் போன்ற பல்வேறு வகையான போராட்டங்களைக் கையாண்டு வருகிறது. இவ்வகையான போராட்டங்கள் மூலம் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படா வண்ணம் காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும் அனைத்துப் போராட்டங்களையும் உயர் அதிகாரிகள் மேற்பார்வையிட இயலாது. எனவே, இவ்வகையான போராட்டங்களின் போது, களத்தில் நிகழும் பிரச்சினைகளை உயர் அதிகாரிகள் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில், 200 ரோந்துக் காவல் வாகனங்களில் தேவையான இணைப்புச் சாதனங்களுடன் கூடிய நடமாடும் கண்காணிப்புக் காமிராக்கள் 2 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

32. **சமூக விழாக்கள் மற்றும் பயிற்சிகள் நடத்துவதற்காக சென்னை மாநகரக் காவலர் குடியிருப்புப் பகுதிகளில் சமூக நல கூடங்கள் அமைத்தல்.**

Community Halls for Chennai Police will be constructed for organising social functions and training.

சென்னைநகரகாவல்துறையில்,64இடங்களில்காவலர் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இந்தக் குடியிருப்புகளில், சமூக விழாக்களை நடத்துவதற்கு பயன்படக் கூடிய சமூக நலக் கூடங்களை அமைப்பது அவசியம் ஆகும். இந்த சமூக நலக் கூடங்கள், சமூக விழாக்கள் நடத்துவதற்கு மட்டுமல்லாமல், காவலர் குடும்பத்தினருக்கு திறன் பயிற்சி அளிப்பதற்கும் உதவிகரமாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, கீழ்ப்பாக்கம், புதுப்பேட்டை, புதுவண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர், நரியங்காடு, புனித தோமையார் மலை, ஆலந்தூர், T.P. சத்திரம், மேன்ஷன் சைட், இராயபுரம், தண்டையார்ப்பேட்டை ஆகிய குடியிருப்புகளில் 5 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் சமூக நலக் கூடங்கள் அமைக்கப்படும்.

33. குற்ற நிகழ்வுகளைத் தடுக்க மற்றும் சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த ஒலி ஒளி சாதன வசதி பொருத்திய வாகனங்கள் வழங்குதல்.

Vehicles fitted with Audio-Visual equipment will be provided for creation of awareness among public on crime prevention and observance of traffic rules.

சென்னை மாநகரில் காணப்படும் பொருளாதார வளர்ச்சியை மனதில் கொண்டும், வளர்ந்து வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டும், குற்ற நிகழ்வுகளைத் தடுக்கும் வண்ணம் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்களுக்கு ஒலி–ஒளி சாதனங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியம். அதே போல், மது போதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்தல் போன்றவற்றால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அவசியமாகிறது. எனவே, குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே

ஏற்படுத்தவும் ஒலி–ஒளி சாதன வசதிகளுடன் பொருந்திய 12 வாகனங்கள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

34. **சென்னை மாநகரக் காவல் இணை ஆணையர் மண்டல அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்.**

Construction of Zonal Administrative Office buildings for Joint Commissioners of Chennai Police Commissionerate.

விரிவாக்கப்பட்ட சென்னை காவல் ஆணையரகத்தில் காவல் துறை ஆணையர் மற்றும் இரண்டு கூடுதல் ஆணையர்களின் கீழ் நான்கு மண்டலங்களை மேற்பார்வையிடும்இணை ஆணையர்கள்பணிபுரிகின்றனர். அவர்களது மண்டல அலுவலகங்களுக்கு நிருவாக நலன் கருதி புனித தோமையார் மலை, திருவொற்றியூர், எழும்பூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் 8 கோடி ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

35. **எழும்பூரில் உள்ள காவலர் மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல் மற்றும் கோயம்புத்தூர், ஆவடியில் உள்ள காவல் மருத்துவமனைகளை மேம்படுத்துதல்.**

Upgradation of Egmore Police Hospital and improvement of Police Hospitals at Coimbatore and Avadi.

சென்னை மாநகர ஆணையரகத்தில் 22350 காவல் பணியாளர்கள் உள்ளனர். இதைத் தவிர காவல் துறையின் பல்வேறு சிறப்புப் பிரிவுகளும் சென்னையை மையமாகக் கொண்டு செயல்படுகின்றன. எழும்பூரில் தற்போதுள்ள காவல் துறை மருத்துவமனை மிகப் பழமையானதாகவும், குறைந்த மருத்துவ வசதிகளைக் கொண்டதாகவும் உள்ளது. எனவே, 100 படுக்கைகள் கொண்ட நவீன காவல் துறை மருத்துவமனை ஒன்று 25 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதே போன்று, கோயம்புத்தூரில் உள்ள காவல் துறை மருத்துவமனையும், ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக்

காவல் மருத்துவமனையும் 8 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

36. **அனைத்து மாவட்டங்கள் மற்றும் காவல்படை தலைமையகங்களில் மகளிர் காவலர்களின் வசதிக்காக குழந்தைகள் நலக் காப்பகங்கள் அமைத்தல்.**

Creches will be started in all District and Battalion Headquarters for the benefit of Women Police.

காவல் துறையில் மகளிருக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மகளிர் காவலர்கள் தமது தலைமையிடத்தை விட்டு வேறு இடங்களுக்குப் பணி நிமித்தமாகச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதால் அவர்களின் குழந்தைகளை சரிவர பராமரிக்க அனைத்து மாவட்டங்களிலும், காவல் படை தலைமையகங்களிலும் குழந்தைகள் நலக் காப்பகங்கள் அமைக்கப்படும்.

37. **இராஜபாளையத்திலுள்ள தமிழக சிறப்புக் காவல் படை ஒன்பதாம் அணியின் தலைமையகத்திற்கு அணுகு சாலை அமைத்தல்.**

Better access facilities will be provided to TSP-XI Battalion Headquarters at Rajapalayam.

இராஜபாளையத்திலுள்ள தமிழக சிறப்புக் காவல் படை ஒன்பதாம் அணியின் தலைமையகத்திற்கு நல்ல வழி வசதிகள் உருவாக்கும் வகையில், 15 இலட்சம் ரூபாய் செலவில் அணுகு சாலை அமைக்கப்பட்டு ஆலங்குளம் முதன்மைச் சாலையுடன் இணைக்கப்படும்.

38. **அனைத்து ஆணையரகங்களிலும் காவல் இசைக் குழுக்களுக்குப் புதிய இசைக் கருவிகள் வழங்குதல்.**

New Musical instruments will be provided to Police Bands in all Commissionerates.

அனைத்துக் காவல் ஆணையரகங்களிலும் உள்ள காவல் இசைக் குழுக்களுக்கு புதிய இசைக் கருவிகள் 15 இலட்சம் ரூபாய் செலவில் இந்நிதியாண்டில் வழங்கப்படும்.

39. காவலர்களுக்கு உணவுப் படியை உயர்த்தி வழங்குதல்.

Enhancement of daily feeding charges for Police Personnel.

சென்னை பெருநகர் ஆணையரகத்தில் காவல் துறையினருக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி நாள் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக இரு மடங்கு உயர்த்தி வழங்கப்படும். அதே போல், சென்னை அல்லாத பிற இடங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி நாள் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக இரு மடங்கு உயர்த்தி வழங்கப்படும்.

40. ஊர்க்காவல் படையினரின் விளையாட்டுப் போட்டிகளுக்கான நிதியுதவியை உயர்த்தி வழங்குதல்.

Enhancement of annual grant for the Home Guards Sports Meet.

ஊர்க்காவல் படையில் பணிபுரிவோருக்கென ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கென வழங்கப்படும் நிதியுதவி 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

41. காவலர் மருத்துவ உதவி சிறப்பு நிதியத்திற்கான அரசு மானிய உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்

Enhancement of Government Grant to the Tamil Nadu Police Health Fund

அறுவை சிகிச்சை மற்றும் சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் முதலியவற்றை பெறும் காவல் துறையினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நிதி உதவி வழங்குவதற்கென 'காவலர் மருத்துவ உதவி சிறப்பு நிதியம்' என்னால் 1994ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அந்த நிதியத்திற்கு வழங்கப்படும் அரசின் மானிய உதவித் தொகை இந்நிதியாண்டிலிருந்து 2 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

42. **ஆவடியில் உள்ள படை நுணுக்கத் திறன் மேம்பாட்டு மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும், வசதிகளை மேம்படுத்தவும் நிதி உதவி வழங்குதல்.**

Provision of New buildings and upgradation of facilities for Regimental Centre at Avadi.

தமிழ்நாடு சிறப்புக்காவல் படைக்கென தேர்ந்தெடுக்கப்படும் காவலர்களுக்கு சூழ்வினைத் திறன் மற்றும் தொழில் நுட்பத் திறன் முதலியவற்றில் ஆவடியில் உள்ள படை நுணுக்கத் திறன் மேம்பாட்டு மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மையம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் அனைத்து பயிற்சி பெறுவோருக்கும் தேவைப்படும் படுக்கை மற்றும் வகுப்பறை வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. 7 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டும் பணி மற்றும் வசதிகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

43. **ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணி இரண்டில் உள்ள அணிவகுப்பு மைதானத்தை சீரமைத்தல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்.**

Improving the parade ground and construction of a compound wall for TSP II Battalion in Avadi.

ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணி இரண்டில் தற்போதுள்ள அணிவகுப்பு மைதானம் சரிவர அமைக்கப்படாததால் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. இதனை சீர் செய்வது அவசியம். மேலும், பணியாளர் குடியிருப்பிற்கென சுற்றுச்சுவரும், நிருவாக அலுவலகமும் மற்றும் மருத்துவமனைக்குச் செல்வதற்கென கான்கிரீட் சாலையும் அவசியமெனக் கருதப்படுகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் 20 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

44. **தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நான்காவது அகில இந்தியக் காவல் அதிரடிப்படை போட்டிகளை நடத்துவதற்காக மேம்படுத்துதல்.**

Infrastructural facilities will be improved at the Tamil Nadu Police Academy for hosting the 4th All India Police Commando competition.

2013ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், நான்காவது அகில இந்தியக் காவல் அதிரடிப்படை போட்டிகள் நடத்தப்பட இருப்பதால், இப்போட்டியினை முன்னிட்டு, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

45. **மகளிர் காவல் நிலைங்களில் உள்ள நடமாடும் ஆலோசனை வழங்கும் மையங்களை மேம்படுத்துதல்**

Mobile Counselling Centres in All Women Police Stations will be strengthened.

2003ஆம் ஆண்டில் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் ஆணையரகங்களில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் கீழ் மகளிருக்கான நடமாடும் ஆலோசனை மையங்கள் என்னால் தொடங்கப்பட்டன. துயரத்தில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளை களையவும், குடும்பப் பிரச்சினைகளை அறிவுரை வழங்கித் தீர்க்கவும் இந்த நடமாடும் ஆலோசனை மையங்கள் உதவுகின்றன. குடும்பத் தகராறுகளில் இருந்து மீண்டு இணக்கமோடு வாழ விரும்பும் குடும்பங்களில் மேலும் பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் அவர்களுடன் பேசி தீர்வு காண்பதும் இவர்களது முக்கிய பொறுப்பாகும். நடமாடும் ஆலோசனை மையங்கள் பல்வேறு சட்டங்களின் கீழ் பெண்களுக்குள்ள உரிமைகள் மற்றும் அதிகாரங்களை பற்றியும் விழிப்புணர்வு முகாம்களை நடத்துகின்றன. இத்தகைய முக்கிய பொறுப்புகளை நிறைவேற்றும் நடமாடும் ஆலோசனை மையங்களுக்கு வாகனங்கள் மற்றும் இதர சாதனங்கள் வழங்கி அவற்றை வலுப்படுத்துவதற்கென இந்த நிதியாண்டில் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

46. **நுண்ணறிவுப் பிரிவின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் காவல் ஆய்வாளர்களுக்கு விணைத்திறமிக்க கைப்பேசிகள்** (Smart Phones) **வழங்குதல்**

Smart phones will be provided to all Inspectors in the various units of the Intelligence Wing

சிறப்புப்புலனாய்வுப்பிரிவு, 'க்யூ' பிரிவுகுற்றப்புலனாய்வுத் துறை, திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு, தனிப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை ஆகிய மாநில நுண்ணறிவுப் பிரிவுகளின் கீழ் பணிபுரிந்து வரும் 250 காவல் ஆய்வாளர்கள் பொது அமைதிக்குக் கேடு விளைவிக்கக் கூடிய நிகழ்வுகள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களை முன்கூட்டியே சேகரித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். இக்களப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் பயன்படுத்திவரும் கைப்பேசிகள் பழமையாகிவிட்ட நிலையில் அவற்றிற்குப் பதிலாக வினைத்திறமிக்க கைப்பேசிகளை அதாவது Smart Phones-ஐ வழங்க 30 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்படும்.

47. **மாநில நுண்ணறிவு சிறப்புப் பிரிவுகளுக்கு 50 புதிய தலைமுறைக் கணினிகள் வழங்குதல்**

Special units of the State Intelligence Wing will be provided 50 New Generation Computers

இரகசிய மையம் உள்ளிட்ட மாநில நுண்ணறிவுப் பிரிவின் சிறப்புப் பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் பழமை ஆகிவிட்டபடியால் அவற்றிற்குப் பதிலாக உயர் சேமிப்பு திறன் கொண்ட கணினி வன்வட்டு அதாவது Hard disk மற்றும் உயர் நினைவாற்றல் கொண்ட சமீபத்திய இயக்கு தளத்துடன் அதாவது Operating System–உடன் கூடிய 50 புதிய தலைமுறை கணினிகள் New Generation Computers, 22 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

48. **வீராபுரத்தில் 1995–1996ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட துப்பாக்கிச் சுடும் பயிற்சி தளத்தை புணரமைத்தல்**

Veerapuram Shooting Range constructed in 1995-96 will be re-operationalized.

வீராபுரத்தில் அமைந்துள்ள உள் துப்பாக்கிச் சுடும் பயிற்சித் தளம் பல ஆண்டுகளாகப் பயனிழந்து காணப்படுகிறது. 1995–1996ஆம் ஆண்டில்

சென்னையில் நடைபெற்ற தெற்கு ஆசிய கூட்டமைப்பு விளையாட்டுகளுக்காக இந்தத் துப்பாக்கிச் சுடும் பயிற்சித் தளம் எனது அரசால் உருவாக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சுடும் பயிற்சித் தளம் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

49. **காவல் துறையின் 15 இரகசிய மையங்களுக்கு** (Crypto Centres) **34 நவீனக் கணினிகள் வழங்குதல்**

34 Modern Computers will be provided to 15 Crypto Centres.

மாநிலத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் தமிழ்நாடு காவல் துறைக்கென 15 இரகசிய மையங்கள் Crypto Centres அமைக்கப்பட்டுள்ளன. மிக மிக முக்கிய பிரமுகர்களின் நடமாட்டம், படைக்கலம் மற்றும் படைத் தளவாடங்கள் கொண்டு செல்லுதல் மற்றும் இன்னும் பிற பாதுகாப்பு தொடர்புடைய விஷயங்கள் குறித்த இரகசிய தகவல்கள் பூஜ்ஜியக் குறியீடு Cipher Mode மூலம் கைமுறை மறைமுக அமைப்பை Manual Cipher Systemஐ பயன்படுத்தி இந்த இரகசிய மையங்களின் மூலமாக அனுப்பப்படுகின்றன. இந்த ரகசிய மையங்களில் உள்ள கணினிகள் பழமை ஆகிவிட்டபடியால் அவற்றுக்குப் பதிலாக 20 இலட்சம் ரூபாய் செலவில் 34 நவீனக் கணினிகள் வாங்கி வழங்கப்படும்.

50. **600 கோடி ரூபாய் அளவிலான பணிகளை கையாள ஏதுவாக தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் தொழில் நுட்பப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

Technical staff strength of Tamil Nadu Police Housing Corporation will be increased to handle works worth about 600 Crores.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் தற்போது ஆண்டொன்றிற்கு 300 கோடி ரூபாய் அளவிலான பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு 600 கோடி ரூபாய் அளவில் பணிகளை மேற்கொள்ளும் வகையில்,

இவ்வாரியத்தின் தொழில் நுட்பப் பணியாளர்களின் எண்ணிக்கை 2013–2014ஆம் ஆண்டில் அதிகரிக்கப்படும்.

51. **துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்குக் காப்பீட்டுத் தொகை உயர்த்துதல்**

Enhancement of Risk Insurance for Deputy Superintendents of Police and Additional Superintendents of Police

துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு காவல் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

52. **காவல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உயர்மட்டக் கல்விக்கான ஒரு பல்கலைக்கழகம் தோற்றுவித்தல்.**

Establishment of a University for Police and Internal Security

தமிழ்நாடு காவல் துறை ஒரு பாரம்பரியம் மிக்க அமைப்பாகும். மேலும், இந்தியாவிற்கே வழிகாட்டக் கூடிய பல்வேறு திட்டங்கள் என்னால் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. காவல் பணிகளில் கருத்தாற்றலிலும், செயல் திறமையிலும் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ் நாடு காவல்துறைப் பற்றிய உயர் கல்வியைச் சீராக வடிவமைத்து வழங்கிட, சென்னைக்கு அருகே காவல் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உயர்மட்டக் கல்விக்கான ஒரு பல்கலைக்கழகம் இந்த நிதியாண்டில் தோற்றுவிக்கப்படும்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.04.2013 அன்று
காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக்
கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு
எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன்
அவதூறு வழக்குகள் குறித்து பேசியதற்கு பதில் அளித்து
ஆற்றிய உரை

பொது வாழ்வில் நிதானம், ஒழுங்கு, கட்டுப்பாடு இருக்க வேண்டும்!

திரு.பண்ருட்டி ச.இராமச்சந்திரன்: இன்று பத்திரிகையானாலும், ஊடகங்களானாலும், முன்னாள் முதல்வர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர் என்று அவர்கள் மீதெல்லாம் அவதூறு வழக்குகள் என்ற வகையிலே வழக்குகள் நிறைய தொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளை முதல்வர் அவர்கள் ஆராய்ந்து மிகவும் மோசமானவை என்கின்ற நிலைமை இருக்குமேயானால் அவற்றை தக்க வைத்துக்கொண்டு பெரும்பாலான வழக்குகளைத் திரும்பப் பெறுவதன் மூலம் தமிழ்நாட்டிலேயே ஒரு நல்ல, அரசியல் ஆரோக்கியமான சூழ்நிலையை வருகின்ற காலத்திலே உருவாக்க முடியும். அதைப்பற்றி இப்போது அல்ல பொறுமையாகவே பரிசீலித்துத் தக்க முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலில் ஒரு பற்றற்ற துறவியைப் போல் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சிலர் மீது தொடுக்கப்பட்டுள்ள மானநஷ்ட வழக்குகள், அவதூறு வழக்குகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மிகவும்

மோசமாக பேசியிருந்தால் அந்த வழக்குகளை தக்க வைத்துக் கொள்ளலாம் என்றார். அப்படிப்பட்ட மோசமாகப் பேசப்பட்ட அவதூறுகள் பற்றித் தான் வழக்குகள் தொடுக்கப்பட்டு இருக்கின்றன. பொதுவாகப் பொதுவாழ்வில் உள்ளவர்கள், அரசியலில் ஈடுபடுபவர்கள், அதுவும் ஒரு கட்சிக்குத் தலைவர் என்ற மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் நா காக்க வேண்டும். எங்கே பேசினாலும், எப்போது பேசினாலும், என்ன பேசுகிறோம் என்பதை அளந்து ஒவ்வொரு வார்த்தையையும் பேச வேண்டும். வருவதை எல்லாம், நாவிலே வருவதை எல்லாம் கொட்டிவிட்டால் இப்படி அவதூறு வழக்குகளைச் சந்திக்கத்தான் வேண்டும். காரணம், என்னைப் பற்றி இழிவாகப் பேசினாலோ, எனது அமைச்சரவையில் இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களைப் பற்றி இழிவாக பேசினாலோ, இந்த அரசு பற்றி இழிவாக பேசினாலோ, இது தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினை அல்ல. என்னை நம்பி கோடிக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். நான் தலைமையேற்றிருக்கும் கட்சியிலேயே ஒன்றரைக் கோடிக்கு மேல் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 7.28 கோடி மக்களும் இந்த அரசை நம்பித்தான் இருக்கிறார்கள். ஆகவே 7.28 கோடி மக்களுக்குப் பொறுப்பேற்றிருக்கும் இந்த முதலமைச்சர் மீது, இந்த அரசு மீது அவதூறுகளைப் பரப்பினால், அவற்றிற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டால் கூறப்பட்ட அவதூறுகள் உண்மை என்று ஆகிவிடும். பொது வாழ்வில் ஒரு நிதானம் இருக்க வேண்டும், ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும், ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும், அந்த ஒழுங்கும், நிதானமும், கட்டுப்பாடும், இயற்கையாக இல்லை என்றால் வரவழைப்பதற்காகத்தான் இந்த வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இது என்னுடைய தனிப்பட்ட வேண்டுகோள் என்று ஆகையினாலே நான் வேறு யாருக்காகவும் இங்கே வாதாடுவதாக அர்த்தமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அதற்கான

விளக்கத்தினை தந்தார்கள். இருப்பினும் இதுபற்றி அவர்கள் இன்னும் யோசிப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் வயதில் மூத்தவர். பழுத்த அனுபவஸ்தர். அவர் எனக்கு ஆலோசனைக் கூறுவதை விட்டுவிட்டு, யார் இப்படியெல்லாம் அவதூறுகளைப் பேசுகிறார்களோ அவர்களுக்கு அறிவுரை கூறி இப்படியெல்லாம் பேச வேண்டாம் என்று யோசனை சொன்னால் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆலோசனை சொல்லவில்லை. வேண்டுகோள்தான். Request, not advise.

மாண்புமிகு முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே வேண்டுகோளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கட்டும். என்றுதான் கூறுகிறேன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்திலே பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது.

திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன்: ஒருவேளை அது எலியைப் பார்த்திருக்கும்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: அவர் யாரைப் பார்த்து எலி என்று சொன்னார் என்று தெரியவில்லை. நாங்கள் நிச்சயமாக எலி இல்லை. நாங்கள் புலி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பண்ருட்டி ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பின்னால்தான் மாண்புமிகு உறுப்பினர் அருண் சுப்ரமண்யம் அவர்கள் இருப்பார்கள். அவரை கொஞ்ச நாளாகக் காணோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர் மீண்டும் இங்கே வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு என் உரை முடித்து அமர்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருண் சுப்ரமணியம் அவர்கள்மீது நிலஅபகரிப்புப் புகார் கொடுக்கப்பட்டு, அதன்மீது காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்து அதனால் தான் அவர் சிறையில் இருக்கிறார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நிலஅபகரிப்பு வழக்குகளில், நிலஅபகரிப்புப் புகார்களில் யார் சிக்கினாலும், காவல் துறையினர் விசாரித்து அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது நில அபகரிப்பு வழக்குகளில் சிக்கிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது கூட நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள்கூட சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.04.2013 அன்று காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் ஆகியோர் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளித்து ஆற்றிய உரை

மதநல்லிணக்கம் தொடர தேவையான நடவடிக்கைகள்!

கோயம்புத்தூரில் மதச் சம்பந்தமான பதற்றம் நிலவுவதாக திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேசியதற்கு பதில் அளித்து பேசிய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கோயம்புத்தூரில் மத சம்பந்தமான பூசல்கள் ஏதுமில்லை. இரு மதத்தினரிடையே அவ்வப்போது எழும் சிறு சிறு பிரச்சினைகள் குறித்து காவல்துறையினர் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் ஆணையாளர் இரு மதத்தினரையும் அழைத்து அமைதிக் கூட்டங்கள் நடத்தி அமைதிக் குழுக்களை ஏற்படுத்தி மதநல்லிணக்கம் தொடரத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். மதப் பூசல்களைத் தூண்டிவிடுவோர் மீதும், ஈடுபடுவோர் மீதும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பைன் பியூச்சர் கம்பெனி மோசடி குறித்து திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேசியதற்கு பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இது சம்பந்தமாக பொருளாதாரக் குற்றப்பிரிவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இதன் நிருவாகிகள் செந்தில்குமார், விவேக்

மற்றும் நித்யானந்தம் ஆகியோர் கைது செய்யப்பட்டு இதுவரை 65 கோடி மதிப்புள்ள மோசடி சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

எட்வின்ராஜ் கொலை வழக்கு குறித்து திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள் பேசியதற்கு பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநில குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினர் புலன்விசாரணையை முடித்து, மாதிரி இறுதி அறிக்கையைத் தயார் செய்துள்ளனர். அரசு வழக்கறிஞரின் கருத்துரு பெற்று காவல்துறையினர் இவ்வழக்கில் எதிரிகள் மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவுள்ளனர்.

காவல் துறையினர் மாற்றம் குறித்து திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள் பேசியதற்கு பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பொதுவாக காவலர்கள், தலைமைக் காவலர்கள் சொந்த மாவட்டங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படுகின்றனர். சொந்த ஊர் இருக்கும் காவல் நிலையத்தில் பணிபுரிய அனுமதிக்கப்படுவதில்லை. உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் சொந்த மாவட்டம் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் நியமிக்கப்படுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் சொந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பணிபுரிந்து வந்தால், அவர்கள் நடவடிக்கைகள் கண்காணித்து, பாரபட்சமாக நடப்பதாகத் தெரியவந்தால் அவர்களை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.04.2013 அன்று காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் தருமபுரி நிகழ்வு குறித்து எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்து ஆற்றிய உரை

நாயக்கன் கொட்டாயில் அசம்பாவிதச் சம்பவங்கள் ஏதும் நடைபெறாத வண்ணம் தேவையான காவல் பாதுகாப்பு!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், நத்தம் காலனியைச் சேர்ந்த இளவரசன் (ஆதிதிராவிடர்) என்பவர் செல்லன்கொட்டாயைச் சேர்ந்த நாகராஜன் (வன்னியர்) என்பவரது மகள் திவ்யாவை காதலித்து, 08.10.2012 அன்று திருமணம் செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து, அவர்கள் 15.10.2012 அன்று சேலம் சரக காவல்துறைத் துணைத்தலைவர் முன்பு சரணடைந்தனர். இது குறித்து, காவல்துறையினர் இரு தரப்பினரையும் விசாரணைக்கு அழைத்தபோது, திவ்யாவின் பெற்றோர் விசாரணைக்கு வரவில்லை. இத்திருமணத்தை எதிர்த்த வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த உள்ளூர் தலைவர்கள், 04.11.2012 மற்றும் 05.11.2012 அன்று நாயக்கன்கொட்டாயில் கூட்டம் நடத்தி, காலனியைச் சேர்ந்த பெரியவர்களிடம் திவ்யாவை அவரது பெற்றோரிடம் அனுப்பிவைக்க வேண்டுமென வற்புறுத்தினர். ஆனால், திவ்யா அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து நாயக்கன்கொட்டாயில் அசம்பாவிதச் சம்பவங்கள் ஏதும் நடைபெறாவண்ணம், 06.11.2012 அன்று காவல் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், திவ்யாவின் திருமணத்தால் மனமுடைந்த அவரது தந்தை நாகராஜ் 07.11.2012 அன்று அவரது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இதனால் ஆத்திரமடைந்த வன்னியர்கள் நத்தம் காலனி, அண்ணா நகர் மற்றும் கொண்டாம்பட்டி பகுதிகளைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களின் வீடுகள், வீட்டுப் பொருட்கள், வாகனங்கள் போன்றவற்றை சேதப்படுத்தியதுடன், தீயிட்டும் கொளுத்தினர். வன்னியர்களில் ஒரு பிரிவினர் நாகராஜனின் உடலை நாயக்கன்கொட்டாயில் தருமபுரி–திருப்பத்தூர் பிரதான சாலையில் வைத்துத் தர்ணாவில் ஈடுபட்டனர்.

தகவலறிந்தவுடன், கிருஷ்ணகிரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு தருமபுரி) தலைமையில் காவல்துறையினர் சம்பவ இடம் சென்று நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். மேற்கு மண்டலக் காவல்துறை தலைவர் மற்றும் காவல்துறைத் துணைத் தலைவர் ஆகியோரும் போதுமான காவலர்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான காவல் பாதுகாப்பு அளித்து, மேலும் அப்பகுதியில் சம்பவங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக் கொண்டனர். இச்சம்பவங்கள் தொடர்பாக, வன்னியர் உட்பட இதர இனத்தைச் சேர்ந்தவர்கள் மீது கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் 7 வழக்குகளும், ஆதிதிராவிடர்கள் மீது 4 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. இவ்வழக்குகளில் வன்னியர் மற்றும் இதர சாதியைச் சேர்ந்த மொத்தம் 142 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் ஆதிதிராவிட அமைப்புகள் இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவ்வமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் SC/ ST தேசிய ஆணையத் தலைவர் ஆகியோர் பாதிக்கப்பட்ட மேற்படி காலனி மக்களை சந்தித்தனர்.

இவ்வழக்குகள் அனைத்தும் 18.11.2012 அன்று மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட்டு, அத்துறையினர் தீவிர புலன் விசாரணை

மேற்கொண்டு மேலும் 37 எதிரிகளைக் கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பினர். இவ்வழக்குகளில் 179 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இதுவரை 149 பேர் நீதிமன்ற பிணையில் வெளி வந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 42 கிராமத்தினைச் சேர்ந்த வன்னியர் மற்றும் இதர இனத்தவர்கள் அம்மாவட்டத்தில் அமலிலுள்ள தடை உத்தரவை நீக்கக்கோரி, தங்கள் வீடுகளிலும் (2,900) பொது இடங்களிலும் 13.01.2013 மற்றும் 14.01.2013 ஆகிய தினங்களில் கருப்புக் கொடிகளை ஏற்றினர்.

இச்சம்பவத்தையடுத்து, அம்மாவட்டத்திலுள்ள ஐந்து தாலுக்காக்களைச் சேர்ந்த 88 கிராமங்களில் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 144(1)இன் கீழ் மாவட்ட ஆட்சியர் 13.12.2012 முதல் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தார். பின்னர், மாவட்ட நிருவாகம் 25.01.2013 அன்று, 80 கிராமங்களில் மேற்படி தடை உத்தரவு விலக்கிக்கொண்டதையடுத்து, 8 கிராமங்களில் மட்டும் தற்போது தடை உத்தரவு அமலில் உள்ளது.

இதற்கிடையில், நத்தம் காலனியைச் சேர்ந்த மங்கை (எ) மங்கம்மாள் என்பவர், 29.11.2012 அன்று உடல்நிலை சரியில்லாமல் சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர், 03.12.2012 அன்று உயிரிழந்தார். அவரது தந்தை அன்பு, தனது மகள், நத்தம் காலனி சம்பவத்தால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டு இறந்தவிட்டதாக புகார் தெரிவித்தார். இதனையடுத்து விடுதலை சிறுத்தைகள் கட்சி உட்பட பல்வேறு ஆதிதிராவிட அமைப்புகள் இச்சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரியும், உரிய நிவாரணம் வழங்கக்கோரியும் போராட்டங்கள் நடத்தினர். பின்னர் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆதிதிராவிட அமைப்பு தலைவர்களோடு 07.12.2012 அன்று, நடத்திய பேச்சு வார்த்தையையடுத்து, அவர்கள் 08.12.2012 அன்று இறந்து போன மங்கையின் உடலை மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொண்டனர்.

- 07.11.2012 அன்று நடைபெற்ற நிகழ்வில் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.
- பாதிக்கப்பட்ட மக்கள் கோவிலிலும், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும் தங்க வைக்கப்பட்டனர்.
- 07.11.2012 இரவு முதல் 17.01.2013 வரை ரூ.16,27,061/– மதிப்பில் தினசரி உணவு வழங்கப்பட்டது.
- தற்காலிக தங்குமிடம் 08.11.2012 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் நிரந்தர நிவாரண தங்குமிடம் ரூ.21,50,000/– செலவில் கட்டப்பட்டது. கூடுதலாக ஒரு நிரந்தர தங்குமிடம் ரூ.4,50,000/– செலவில் கட்டப்பபட்டது.
- 08.11.2012 அன்று 3.29 இலட்சம் செலவில் 1 செட் உடைகளும், சமையல் பாத்திரங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.
- பாய், சால்வைகள் மற்றும் போர்வைகள் வழங்கப்பட்டன.
- குடிநீர் வசதிக்காக மாவட்ட நிருவாகத்தால் ரூ.8,45,000 செலவில் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் குழாய் வசதிகள் செய்யப்பட்டது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடமாடும் மருத்துவ வாகனம் மூலம் மருத்துவ அலுவலர், செவிலியர் மற்றும் கிராம சுகாதார செவிலியர் குழு அமைக்கப்பட்டன.
- பாதிக்கப்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு புதிய நோட்டு, புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டன.
- புதிய வழித்தடம் வழியாக பேருந்துகள் விடப்பட்டது.

இத்தனை நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு 326 குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000/– வீதம் ரூபாய் ஒரு கோடியே அறுபத்து மூன்று இலட்சம்

09.11.2012, 23.11.2012 மற்றும் 03.12.2012 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டது.

07.11.2012 அன்று ஆதிதிராவிட மக்களின் வீடுகளை சேதப்படுத்தியதற்காகக் கூடுதலாக 99 பசுமை வீடுகள் கட்ட இரண்டு கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாயை (Rs.2,67,30,000/–) அனுமதித்து 22.01.2013இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், தருமபுரி மாவட்டம் நத்தம் காலனி உள்ளிட்ட நான்கு கிராமங்களில் 07.11.2012 அன்று ஆதிதிராவிடர் மக்களின் மீதான வன்முறைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட 1200 ஆதிதிராவிட மக்களுக்குக் கூடுதல் நிவாரணம் அளிக்க ஏதுவாக ரூபாய் ஏழு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து எழுநூற்று பதினைந்து (ரூ.7,32,07,715/–) நிதி ஒப்பளிப்பு செய்து 24.01.2013இல் ஆணைகள் வெளியிடப்பட்டது.

அரசு உத்தரவின்பேரில், மாவட்ட நிருவாகம், பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை, வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் துணி வகைகள் வழங்கியுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிதியிலிருந்து வீடுகட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநிலப் பொதுச் செயலாளர் சாமுவேல் ராஜ் என்பவரும், வழக்கறிஞர் செங்கொடி மற்றும் சிலர் நத்தம் காலனி சம்பவம் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை விசாரணை கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல மனுக்களை தாக்கல் செய்தனர்.

இவ்வழக்குகளைப் பல்வேறு நாட்களில் விசாரித்த உயர்நீதிமன்றம் 18.03.2013 அன்று இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர், இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை குறித்த விரிவான அறிக்கை

தாக்கல் செய்யுமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டு, மனுக்களின் மீதான விசாரணையை 27.03.2013க்கு ஒத்தி வைத்தது.

இதனையடுத்து, தருமபுரி மாவட்ட ஆட்சியர், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை குறித்த அறிக்கையை 27.03.2013 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். பின்னர், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, 5.4.2013 அன்று, உள்துறை செயலாளர், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் தனித்தனியே பதில் மனு தாக்கல் செய்தனர். அன்றைய தினம் நீதிமன்றம் வழக்கை மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றக் கோருவது தொடர்பாக, பதில் மனு தாக்கல் செய்யுமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை 22.04.2013க்கு ஒத்தி வைத்துள்ளது.

நத்தம் காலனி சம்பவம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தற்போது மாநில குற்றப் பிரிவு புலனாய்வுத் துறையில் சில எதிரிகளை கைது செய்வதற்காகவும், ஆவணங்கள் சேகரிப்பதற்காகவும், நிபுணர்களின் அறிக்கை பெறவும் வேண்டி புலன் விசாரணையில் உள்ளன.

✶ ✶ ✶

*23.04.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியதற்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை*



காவல் துறையினரின் சிறப்பான பணியால் ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை குறைவு!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொலை குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டார். எனது முந்தைய ஆட்சிக் காலத்தை எடுத்துக் கொண்டால், 2003ஆம் ஆண்டு 1487 என்று இருந்த கொலை சம்பவங்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு குறைந்து 2006ஆம் ஆண்டு

1274 என்ற அளவிலே இருந்தது. ஆனால், கடந்த ஐந்து ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொலை சம்பவங்களின் எண்ணிக்கை 25.5 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதாவது ஆண்டொன்றுக்கு, சராசரியாக 5.1 விழுக்காடு அதிகரித்துள்ளது.

நான் 2011ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கொலைச் சம்பவங்களின் உயர்வு சதவீதம் குறைந்துள்ளது. அதாவது, 2011ஆம் ஆண்டு கொலைச் சம்பவங்களின் உயர்வு சதவீதம் 1.86 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இந்த எண்ணிக்கை 2012ஆம் ஆண்டு 3.38 சதவீதம் அதிகரித்துள்ளது என்றாலும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடும்போது, கொலைச் சம்பவங்களின் அதிகரிப்பு சதவிகிதம் 2 விழுக்காடு குறைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொலைகள் திடீரென ஏற்படும் உணர்ச்சி கொந்தளிப்புகளின் காரணமாக நிகழ்பவை என்பதால், காவல் துறையினரால் அதனைத் தடுப்பது இயலாத காரியமாகும். எனவே, ஒட்டுமொத்த கொலைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, காவல் துறையின் செயல்பாட்டை மதிப்பிடுவது பொருத்தமாக இருக்காது. காவல் துறையின் செயல்பாட்டை மதிப்பிட வேண்டுமென்றால், ஒட்டுமொத்த கொலைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ஆதாயக் கொலைகள் எண்ணிக்கையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில், 2010ஆம் ஆண்டு 153 என இருந்த ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 2012ஆம் ஆண்டு 137 ஆக குறைந்துள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளில் ஆதாயக் கொலைகள் 10.45 சதவீதம் குறைந்திருப்பது காவல் துறையினர் சிறப்பாக பணியாற்றுவதையே எடுத்துக் காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

✶ ✶ ✶

*பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாமல்லபுரத்தில் நடைபெற்ற சித்திரைத் திருவிழாவின் போது மரக்காணம் பகுதியில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட கலவரம் குறித்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பல்வேறு கட்சியினர் தெரிவித்த கருத்துகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் பதிலுரை – 29.04.2013*



சட்டம் ஒழுங்கிற்கு ஊறுவிளைப்போர் யாராக இருந்தாலும் கருணை இன்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

25.4.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட சித்திரை முழு நிலவு வன்னியர் இளைஞர் பெருவிழாவில் பங்கேற்க விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதி வழியாக வாகனங்களில் வந்தவர்களுக்கும், மரக்காணம் காலனியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே

நடைபெற்ற மோதல் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை எடுத்துரைத்து இருக்கிறார்கள். இது குறித்து விரிவான பதிலினை இந்த மாமன்றத்திற்கு நான் அளிக்க விரும்புகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில், 25.04.2013 அன்று, வன்னியர் சங்கம் அதாவது பாட்டாளி மக்கள் கட்சி,"சித்திரை முழுநிலவு வன்னியர் இளைஞர் பெருவிழா" ஒன்றை நடத்த அறிவித்திருந்தது. இவ்விழாவிற்குப் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பெருந்திரளாக உறுப்பினர்கள் பங்கேற்க வருமாறு அழைப்பு விடுத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தது. இதில் பங்கேற்கும்படி வன்னியர் சங்கத்தின் சார்பாக, தொலைக்காட்சிகள் மற்றும் நாளிதழ்களில் விளம்பரங்கள் செய்யப்பட்டன. "வங்கக் கடலா, வன்னிய கடலா, ஒரு கோடி வன்னியர்கள் சித்திரை பெருவிழாவிற்கு அலைகடலென திரண்டு வாரீர்" எனவும், "கடல் நீரை அள்ள முடியாது, வன்னியரை வெல்ல முடியாது" எனவும், "நாங்க உறைய விட்டு வாள் எடுத்தா இரத்த ருசி காட்டி வைக்கும் வழக்கம் எங்கக் குல வழக்கமடா" எனவும், "சோழர் வம்சம் இது சோறு போடும் வம்சம் இது, எதிரிகள் யாரும் வந்தால் கூறு போடும் வம்சம் இது" எனவும் சுவரொட்டிகள் வாயிலாக விளம்பரங்கள் செய்யப்பட்டன.

இவ்விழாவிற்கு அனுமதி வழங்கக்கூடாது என உத்தரவிடக் கோரி, இந்தியன் மக்கள் மன்றத்தின் தலைவர் மற்றும் பத்திரிகையாளர் திரு. வராகி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அம்மனுவை 16.4.2013 அன்று விசாரித்த உயர் நீதிமன்றம், அம்மனு மீது காவல் துறையினர் 19.4.2013க்குள் விழா அமைப்பாளர்களுக்கு விளக்கம் கோரும் குறிப்பாணை ஒன்றை சார்வு செய்து, அதற்கு அளிக்கப்படும் பதில் விளக்கத்தின் அடிப்படையில் விழாவிற்கு அனுமதி வழங்குவது குறித்துத் தீர்மானிக்குமாறு உத்தரவிட்டு மனுவை முடித்து வைத்தது.

இதனையடுத்து, காஞ்சிபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், மேற்படி விழா அமைப்பாளர்களுக்கு இவ்விழா நடக்கும் போது இரு சமுதாயத்தினர் இடையே சட்டம் ஒழுங்கு

பிரச்சனைகள் ஏற்பட்டதையும்; குறிப்பாக கடந்த 2000 மற்றும் 2010ஆம் ஆண்டு இவ்விழாவின் போது நடந்த கலவரத்தை சுட்டிக் காட்டியும்; இவ்விழாவிற்கு வந்த தொண்டர்கள் வாயிலாக விழுப்புரம், கடலூர், திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்பட்டதையும்; இவ்விழாவில் தலைவர்கள் பேசும் போது சாதி உணர்வைத் தூண்டும் விதத்தில் பேசி இருந்ததையும்; அப்பேச்சுக்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியதோடு, இரு சமுதாயத்தினர் இடையே மனக் கசப்பை ஏற்படுத்தியதையும்; இவ்விழா சம்பந்தமாக காவல் துறையினர் அளித்த நிபந்தனைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதையும்; கால அவகாசத்தை மீறி இவ்விழாவை நடத்துவதை வாடிக்கையாகக் கொண்டிருப்பதையும்; இதற்கு முன்பு இவ்விழாக்களின் போது நடந்த சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளையடுத்து பதிவு செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் இருந்து வருவதையும்; விழாவின் போது அதிகப்படியான கூட்டத்தை கூட்டுவதற்கு போதிய முன்னேற்பாடுகள் எதுவும் செய்யப்படாததையும்; ஒவ்வொரு ஆண்டும் கிழக்குக் கடற்கரை சாலையில் பல மணி நேரக் கடும் வாகனப் போக்குவரத்து நெரிசல் காரணமாக பொதுமக்கள் இன்னலுக்கு ஆளானதையும்; மேற்படி விழா நடத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் கடற்கரை ஒழுங்கு முறைப் பகுதி, அதாவது Coastal Regulatory Zone என்பதால், அதற்குரிய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, மாசுக் கட்டுப்பாட்டுத் துறை ஆகிய துறையினரிடமிருந்து முன் அனுமதி பெறாததையும்; விழா நடக்கும் இடம், தொல்லியல் துறை பராமரித்து வரும் கடற்கரைக் கோவிலுக்கு மிக அருகில் அமைந்துள்ளதையும்; அத்துறையினரிடமிருந்து அனுமதி பெறாததையும் விவரமாகக் குறிப்பிட்டு, விழாவிற்கு ஏன் அனுமதி மறுக்கக் கூடாது எனக் கேட்டு இதற்கான விளக்கத்தை அளிக்குமாறு விழாவிற்கு அனுமதி கோரியிருந்த திரு. திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்களுக்குக் குறிப்பாணை வழங்கப்பட்டது.

இதற்கான பதில் கடிதம், திரு. திருக்கச்சூர் ஆறுமுகத்திடமிருந்து காஞ்சிபுரம் காவல் துறையினரால் 18.4.2013 அன்று பெறப்பட்டது. அக்கடிதத்தில்,

இவ்விழாவினால் எந்தவித சட்டம் ஒழுங்கு பிரச்சினையும் ஏற்படாது எனவும்; திரு. ஜெ.குரு உள்ளிட்ட தலைவர்கள் எவரும் சட்டம் மற்றும் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையிலும், பிற சமூகத்தினர் இடையே பிரிவினையைத் தூண்டும் வகையிலும் எந்தக் கருத்தையும் தெரிவிக்க மாட்டார்கள் எனவும்; திட்டமிட்டபடி நிகழ்ச்சியைத் தொடங்கி, காவல் துறையினர் குறிப்பிடும் நேரத்திற்கு முன்பாக எந்த விதமான காலதாமதமும் இன்றி நிகழ்ச்சி முடித்துக் கொள்ளப்படும் எனவும்; இந்த விழாவின் மூலம் எந்த விதமான சாதி பிரச்சனை மற்றும் சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் விழாவில் கலந்து கொள்பவர்களால் ஏற்படாது எனவும்; விழாவில் கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் எனவும்; போக்குவரத்து பாதிக்காத வகையில் பொதுமக்களின் மருத்துவ சேவை மற்றும் அவசர அவசியக் காரியங்களுக்கு சென்று வர வழி அமைத்துத் தரப்படும் எனவும்; விழா நடத்தும் பகுதி முழுவதும் சுற்றுசூழலுக்கு பாதிப்பு இல்லாமல் சுத்தம் செய்து தரப்படும் எனவும்; காவல் துறையினர் விதிக்கும் நிபந்தனைகள் அனைத்தையும் முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும்; காவல் துறையினர் வழிகாட்டுதல்படி அமைதியாகவும், கட்டுப்பாட்டுடனும் விழா நடத்தப்படும் என்றும் திரு. திருக்கச்சூர் ஆறுமுகம் அந்தக் கடிதத்தில் உறுதியளித்து இருந்தார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினருக்கு சென்னையில் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்ட போது, அனுமதிவழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதையும், அதை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டதையும் கருத்தில் கொண்டு, இதனைக் காவல் துறையினர் பரிசீலித்தனர். விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடத்திட அனுமதி வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

14.04.2013 அன்று "மக்கள் ஒற்றுமைப் பேரணி" என்ற பெயரில் அம்பேத்கர் பிறந்த நாள் விழாவை சென்னையில் கொண்டாடும் வகையில், எழும்பூரில் ஊர்வலம் மேற்கொள்ளவும், மற்றும் அன்றைய தினம் மாலை மயிலை மாங்கொல்லையில்

பொதுக்கூட்டம் நடத்தவும் அனுமதி கோரி சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சில நாட்களுக்கு முன்பு மனு அளிக்கப்பட்டது.

இந்த மனுவினை பரிசீலனை செய்த காவல் துறை, இந்தப் பேரணியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 25,000 பேர் கலந்து கொள்வார்கள் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் தெரிவித்ததன் அடிப்படையில், இந்தப் பேரணியினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், போக்குவரத்திற்கும் மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதன் அடிப்படையிலும், தருமபுரி நத்தம் காலனியில் நடந்த சம்பவங்களை அடுத்து வட மாவட்டங்களில் சாதி ரீதியாக இருந்து வரும் நிலைமையைக் கருத்தில் கொண்டும், இந்நிகழ்ச்சிக்கு அனுமதி மறுத்தது.

காவல் துறையின் மறுப்பினைத் தொடர்ந்து, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி அளிக்க காவல் துறையினருக்கு உத்தரவிடுமாறு மனு ஒன்றை தாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், ஊர்வலத்திற்கும் பொதுக் கூட்டத்திற்கும் அனுமதி அளித்தது. இதை எதிர்த்துக் காவல் துறையினர் செய்த மேல்முறையீட்டை 13.4.2013 அன்று நிராகரித்த சென்னை உயர் நீதிமன்ற அமர்வு, எந்த நேரத்தில் பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் என்று நிர்ணயித்தும் உத்தரவிட்டது.

இது போன்ற கூட்டங்களுக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்படாத இனங்களில், சம்பந்தப்பட்டவர்கள் உயர் நீதிமன்றம் சென்று தங்களுக்கு சாதகமான உத்தரவுகளை பெற்றுள்ள நிகழ்வுகளை கருத்தில் கொண்டு, வன்னியர் சங்கத்தினருக்கு 25.4.2013 அன்று மேற்படி விழா நடத்துவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் காவல்துறை அனுமதி வழங்கியது.

1) விழாவின்போதோ அல்லது அதற்கு முந்தைய கூட்டங்களிலோ வன்முறையைத் தூண்டும் விதமாகவோ அல்லது பிற வகுப்பினர் மனம் புண்படும்படியாகவோ எவரும் பேசக் கூடாது.

2) விழாவின் போது வன்முறையைத் தூண்டும் கோஷங்களை எழுப்பவோ, வன்முறையை தூண்டும் விதமான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி வரவோ கூடாது.

3) மாநாட்டிற்கு வருபவர்கள் திறந்த வகை வாகனங்களை பயன்படுத்தக் கூடாது.

4) வாகனங்களின் மேல்கூரையின் மேல் அமர்ந்து வரக்கூடாது. வாகனங்களில் வருபவர்கள் வரும் வழிகளில் கோஷங்கள் எழுப்பக் கூடாது. வாகனங்களில் ஒலி பெருக்கிகள், அதாவது speakers கட்டாயமாக பொருத்தி வரக் கூடாது.

5) பிரச்சினைக்குரிய பேச்சுகளை பேசும் பேச்சாளர்களை பேச அழைக்கக் கூடாது.

6) விழா நடக்கும் இடத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடவசதிகள், கழிப்பிட வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் வரும் தொண்டர்களின் இதர வசதிகள் குறித்து விழா அமைப்பாளர்கள் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மேலும், விழா முடிந்தவுடன் அந்த இடம் சுற்றுப்புற சூழல் பாதிப்பின்றி சுத்தப்படுத்தப்பட வேண்டும்.

7) வாகனங்கள் நிறுத்துமிடங்களில் தகுந்த விளக்கு வசதிகள், தற்காலிக பாதுகாப்புத் தடைகள், ஒலிபெருக்கி வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

8) மாமல்லபுரத்தில் உள்ள தொல்லியல் துறை சம்பந்தப்பட்ட புராதன சின்னங்களுக்கு சேதம் விளைவிக்கும் எந்தச் செயலையும் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் எந்தச் செயலையும் செய்யக் கூடாது.

9) விழா தொடர்பான flex போர்டுகளை காவல் துறையினரின் அனுமதியுடன் பிரச்சனை இல்லாத இடங்களில் அமைத்து, கட்சித் தொண்டர்களை நியமித்து அவற்றிற்குச் சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

10) விழா சம்பந்தமாக பிற மாவட்டங்களில் இருந்து வரும் ஒவ்வொரு வாகனமும் அதில் வரும் தொண்டர்கள் பற்றிய விவரங்களை ஒரு நாள் முன்பு, அதாவது 24.4.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டக் காவல் துறையினருக்கு தெரிவிக்க வேண்டும்.

11) ஒலி பெருக்கிகள் நிகழ்ச்சி நடத்தும் பகுதிகளில் மட்டுமே அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். பெட்டி வடிவ ஒலி பெருக்கியினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

12) ஜோதி எடுத்துக் கொண்டு தொடர் ஓட்டமாக வருவதற்கு அனுமதியில்லை.

13) விழாவானது 25.4.2013 அன்று மாலை ஐந்து மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அன்று இரவு பத்து மணிக்குள் கண்டிப்பாக முடிக்கப்பட வேண்டும்.

14) பொது சொத்துக்களுக்கோ, இதர சொத்துக்களுக்கோ ஏதேனும் சேதம் ஏற்பட்டால் விழா அமைப்பாளர்களே முழு பொறுப்பாளர்கள். அதற்குரிய நிவாரண தொகையை வழங்க வேண்டும். இது தவிர சட்டப்படியாக எடுக்கப்படும் குற்றவியல் நடவடிக்கைக்கும் கட்டுப்பட வேண்டும்.

15) சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கக் காவல் துறையினரால் அவ்வப்போது வழங்கப்படும் அனைத்து அறிவுரைகளையும் ஏற்று கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

16) மேற்கூறிய நிபந்தனைகளை மீறினால் அதற்கு விழா அமைப்பாளர்களே முழு பொறுப்பாளர்கள்.

இந்த நிபந்தனைகள் அடங்கிய கடிதத்தை திரு. திருக்கச்சூர் ஆறுமுகம் 19.04.2013 அன்று ஒப்புதல் கையொப்பமிட்டுப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மேலும், 20.04.2013 அன்று, காஞ்சிபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், இவ்விழா அமைப்பாளர்களை அழைத்து, ஒரு கூட்டம் நடத்தி, அதில் விழா எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது குறித்த உறுதி மொழியையும், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனைகள் எதுவும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தினையும் அமைப்பாளர்களான திருக்கச்சூர் ஆறுமுகம் மற்றும் சிலரிடமிருந்து பெற்றுள்ளார்.

மேலும், இச்சங்கத்தின் தலைவர்கள் காவல் துறை இயக்குநர் மற்றும் காவல் துறை கூடுதல் இயக்குநர் – சட்டம் மற்றும் ஒழுங்கு, ஆகியோரை நேரில் சந்தித்து காவல் துறையினர் விதிக்கும் நிபந்தனைகளை கடைபிடித்து விழாவின் போது சட்டம்

ஒழுங்கு பிரச்சனை ஏதுமில்லாமல் பார்த்துக் கொள்கிறோம் என உத்தரவாதம் அளித்தனர்.

காவல் துறையில் உள்ள சுமார் 90 ஆயிரம் காவல் ஆளிநர்களை வைத்து எப்பொழுதும் உள்ள பாதுகாப்பு மற்றும் இதர முக்கிய பணிகளுக்கு உண்டான காவலர்கள் போக மீதமுள்ள காவலர்களைக் கொண்டு, ஒரே நேரத்தில் அடிக்கடி மாநிலத்தில் பல்வேறு இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு பாதுகாப்பு அளிப்பது என்பது சிரமமான காரியமாகும்.

கடந்த 25.04.2013 அன்று மாமல்லபுரத்தில் சித்திரைப் பெருவிழா நடைபெற்றது மட்டுமல்லாமல், மாநிலத்தில், திருவண்ணாமலையில் சித்திரா பவுர்ணமியை முன்னிட்டு சுமார் 15 இலட்சம் பக்தர்கள் கூடிய நிகழ்ச்சிக்கும், மதுரையில் சுமார் ஐந்து இலட்சம் பேர் பங்கேற்ற கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கிய நிகழ்ச்சிக்கும், சென்னை, சேப்பாக்கத்தில் நடைபெற்ற ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிக்கும், பெருமளவில் காவல் துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது.

இருப்பினும், சித்திரை முழு நிலவு விழாவையொட்டி ஏற்படக்கூடிய சட்டம் – ஒழுங்கு பிரச்சனைகளை கருத்தில் கொண்டு, மாமல்லபுரத்தில், 25.04.2013 அன்று, காஞ்சிபுரம் சரக காவல்துறை துணைத் தலைவர் தலைமையில், மூன்று காவல் கண்காணிப்பாளர்கள், நான்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், ஒரு காவல் உதவி கண்காணிப்பாளர், 25 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 47 காவல் ஆய்வாளர்கள், 99 காவல் உதவி ஆய்வாளர்கள், 935 இதர காவல் ஆளிநர்கள், 10 சிறப்பு காவல் படை நிறுமங்கள் மற்றும் ஆயுதப்படை பிரிவுகளைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் என மொத்தம் 1,910 பேர் விழா பாதுகாப்பு அலுவல்களை மேற்கொள்ளுதல், விழாவின் போது போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், விழாவிற்கு வரும் வாகனங்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தி வைக்கச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இத்துடன், இந்த விழாவிற்கு வரும் வாகனங்கள் வரும் சாலைகளிலும், பிரச்சனைக்குரிய பகுதிகளிலும், குறிப்பாக காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், திருவள்ளூர் மற்றும்

வேலூர் மாவட்டங்களில் மொத்தம் 2,724 காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் நியமிக்கப்பட்டிருந்தனர். வடக்கு மண்டல காவல்துறைத் தலைவர் அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்பார்வையிட்டு வந்தார்.

சித்திரை விழாவை முன்னிட்டு, 25.04.2013 அன்று பிற்பகல், வன்னியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வாகனங்கள் மூலம் பிரதான சாலைகளில் மாமல்லபுரம் நோக்கி சென்று கொண்டிருந்தனர். காவல் துறையினர் அனைத்துச் சாலைகளிலும் தக்க பாதுகாப்பு அளித்து வந்தனர். இந்நிலையில் அன்று பிற்பகல் 1.30 மணியளவில், புதுச்சேரியில் இருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக வாகனங்களில் தொண்டர்கள் வந்து கொண்டிருந்த போது, விழுப்புரம் மாவட்டம், மரக்காணம், கடையம் தெரு காலனி பேருந்து நிறுத்தம் அருகில் சாலையோரம் மரம் ஒன்றின் கீழ் வாகனத்தை நிறுத்தி சுமார் 30 பேர் உணவருந்திக் கொண்டு இருந்துள்ளனர். அதில் சிலர் மது அருந்திக் கொண்டு இருந்துள்ளனர். அப்போது, அக்காலனியைச் சேர்ந்த சிலர் ஏற்கெனவே தகராறு நடந்த இடத்தில் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்க, வாகனத்தில் வந்தவர்கள் அவர்களை அடித்துத் துரத்தியுள்ளனர். அவர்கள் காலனிக்கு சென்று தகவல் தெரிவித்ததின் பேரில், அக்காலனியைச் சேர்ந்த சுமார் 200 பேர் மரக்காணம் கிழக்கு கடற்கரைச் சாலைக்கு வந்து சாலையில் கற்களையும், கட்டைகளையும் போட்டு மறியலில் ஈடுபட்டனர்.

மரக்காணத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடந்ததையடுத்து, மரக்காணத்திற்கு மேல் மாமல்லபுரம் நோக்கி பாட்டாளி மக்கள் கட்சியினர் வாகனங்கள் சென்றால் வழியில் உள்ள காலனிகளில் பிரச்சனை ஏற்படும் என ஆதி திராவிட இனத்தவர் தெரிவித்தனர். மாற்று வழியில் செல்லுமாறு காவல் துறையினர் அறிவுறுத்தியதைக் கேட்காமல் விழாவிற்கு வந்தவர்கள் வாகனங்களை சாலையில் நிறுத்தி, வாகனங்களில் இருந்து இறங்க ஆரம்பித்தனர்.

இதனால், அவ்வழியாக வாகனங்களில் வந்தவர்களுக்கும், காலனியைச் சேர்ந்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் கற்களை வீசித் தாக்கிக் கொண்டனர். வாகனங்களில்

வந்தவர்கள் காலனிக்குள் சென்று எட்டுக் குடிசை வீடுகள் மற்றும் மாட்டுக் கொட்டகை ஆகியவற்றிற்கு தீ வைத்ததுடன், அவ்வழியே வந்த மூன்று அரசு பேருந்துகள், ஒரு கார் மற்றும் ஒரு இரு சக்கர வாகனம் ஆகியவற்றையும் தீயிட்டு கொளுத்தினர்.

இது பற்றி தகவலறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று, ''வருண்'' வாகன உதவியுடன் தீயை அணைத்துள்ளனர். காவல் துறையினர் அங்கு கூடியிருந்தவர்களைக் கலைந்து செல்லுமாறு கூறியும் அதற்கு செவி மடுக்காமல், அவர்கள் தொடர்ந்து கற்களை வீசியதால் பணியில் இருந்த காவல் ஆளிநர்கள் மூன்று பேர் காயமுற்றனர். சம்பவம் குறித்து அறிந்தவுடன், அங்கு விரைந்த விழுப்புரம் காவல் கண்காணிப்பாளரின் வாகனத்தையும் கல் வீசி தாக்கியுள்ளனர். அந்தக் கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி பல முறை எச்சரித்தும், அவர்கள் கலைந்து செல்லாமல் தொடர்ந்து கற்கள் வீசி தாக்கியதால், காவல் துறையினர் கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசி அக்கூட்டத்தைக் கலைக்க முயன்றுள்ளனர்.

அதன் பின்னரும் அவர்கள் கலைந்து செல்லாமல் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டதால், மேலும் கலவரம் பரவாமல் தடுக்கவும், உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதம் ஏற்படுவதைத் தடுக்கவும், காவல் துறையினர் உரிய எச்சரிக்கைக்குப் பின்பு லேசான பலப்பிரயோகம் செய்த போதும், கலைந்து செல்லாமல் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியினர், வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் வேறுவழியின்றி, காவல் துறையினர் உரிய எச்சரிக்கைக்கு பின்னர், துப்பாக்கியால் வானத்தை நோக்கி மூன்று ரவுண்டுகள் சுட்டும், ரப்பர் குண்டுகளைப் பயன்படுத்தியும் கூட்டத்தைக் கலைத்தனர்.

மேலும், விழாவிற்குச் சென்றவர்கள் அனுமந்தை சுங்கச் சாவடியில் தகராறு செய்து, கண்ணாடிகள், கேமரா, ஏணி, அறிவிப்புவிளக்குகள்,பூந்தொட்டிகள்,கம்பிவேலி ஆகியவற்றைச் சேதப்படுத்தியுள்ளனர். சுங்கச் சாவடி ஊழியர்களும் தாக்கப்பட்டனர். விழுப்புரம் மாவட்டம், கூனிமேடு பகுதியில் ஒரு கடையையும் சேதப்படுத்தியுள்ளனர். மேலும், மாமல்லபுரத்தில்

காவல் பாதுகாப்புப் பணியில் இருந்த காவல்துறை வாகனம் ஒன்றையும் சேதப்படுத்தினர்.

விழாவிற்குச் சென்றவர்கள் பல்வேறு இடங்களில் ஆறு அரசு பேருந்துகள், மூன்று காவல் வாகனங்கள் உள்ளிட்ட 11 வாகனங்களை கல் வீசி சேதப்படுத்தினர். இது தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தவிர, இவ்விழாவில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு இடங்களில் கல் வீச்சில் ஈடுபட்டதால், பல வாகனங்கள் சேதம் அடைந்தன. ஆனால் இது குறித்து வாகன உரிமையாளர்கள் புகார்கள் எதையும் இதுவரை அளிக்கவில்லை.

இந்த விழாவில் கலந்து கொள்ள வந்தவர்கள் பயணம் செய்த வாகனங்களின் பதிவு எண்களை காவல் துறையினர் பின்னர் ஆய்வு செய்து சரிபார்த்த போது, சில வேன்களின் பதிவு எண்கள் போலியானவை எனத் தெரிய வந்துள்ளது. இரு சக்கர வாகனங்களுக்கு வழங்கப்பட்ட பதிவு எண்களை சில வேன்களுக்கு போலியாக பயன்படுத்தி உள்ளனர். எனவே, வேண்டுமென்றே சட்ட ஒழுங்கு பிரச்சினைகளை எற்படுத்துவதற்காக திட்டமிட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

மேலும், இவ்விழாவினால், கிழக்கு கடற்கரை சாலையில் பல மணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனால் பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும், வெளியூர் செல்லும் பயணிகளும் பெரும் சிரமத்திற்கு ஆளாயினர். மேலும் அவசர கால சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் வாகனங்கள் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டு நோயாளிகள் அல்லலுற்றனர்.

விழா முடித்து திரும்பிச் சென்றவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அருகில் சாலை மறியலில் ஈடுபட்டு இரண்டு மணி நேரம் போக்குவரத்தைத் தடை செய்ததால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

மேலும், மரக்காணம் அருகில் தீ வைப்பு, வாகனங்கள் மீது தாக்குதல் ஆகிய சம்பவங்கள் நடந்த போது, சாலையில் நிறுத்தப்பட்டிருந்த 300 வாகனங்கள் புதுச்சேரி நோக்கித் திருப்பி அனுப்பப்பட்டன. அந்த இடத்தில் கழிக்குப்பம் என்ற ஊரை ஒட்டிய சாலையின் ஒரு பக்கத்தில் தலையில் காயங்களுடன்

அடையாளம் தெரியாத ஒரு நபரின் உடல் கிடந்தது. வாகனத்தின் மேலிருந்து விழுந்தோ அல்லது வாகனம் மோதியோ மரணம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் அந்தப் பிரேதத்தில் இருந்ததால், இந்திய தண்டனைச் சட்டம் 304(A)–ன்கீழ் வாகன விபத்து வழக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் நடைபெற்ற விசாரணையில், இறந்தவர் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த திரு. செல்வராஜ் என்று தெரிய வந்துள்ளது. இந்த மரணம் குறித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஐயமும் கருத்தில் கொள்ளப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும்.

மற்றொரு சம்பவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. விவேக் என்பவரும் வாகன விபத்தில் இறந்துள்ளார். மரக்காணத்தில் பிரச்சனை உருவாகி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட நிலையில், வாகனங்கள் புதுச்சேரி நோக்கி திருப்பிச் சென்ற போது, ஒரு வாகனத்தில் விவேக் என்பவர் ஏற முயன்ற போது, கவனக் குறைவாக ஓட்டி வரப்பட்ட தனியார் பேருந்து ஒன்று அவர் மீது மோதியுள்ளது. இதன் காரணமாக அந்த நபரின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக அவரது உறவினர் திரு. பிரசன்னா கொடுத்த புகாரின் பேரில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304 (A)–ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவில் பங்கேற்றவர்கள் மரக்காணத்தில் வன்முறையில் ஈடுபட்ட போதும், காவல் துறையினர் மிகுந்த பொறுமையுடன், பொதுமக்கள் நலன் கருதி அச்சம்பவங்களைக் கையாண்டதோடு, காவல் துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் யாரும் காயம் அடையவில்லை.

இவ்விழா அமைப்பாளர்கள், விழா சம்பந்தமாக காவல் துறையினர் விதித்த நிபந்தனைகளைத் தவறாமல் கடைபிடிப்பதாக எழுத்து மூலமாகவும், உயர் அதிகாரிகளிடம் நேரடியாகவும் உத்தரவாதம் அளித்துவிட்டு, அவற்றையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, அந்த நிபந்தனைகளை கடைபிடிக்க எந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை. வழக்கம் போல பெரும்பாலான நிபந்தனைகளை மீறியதோடு, சட்ட மீறல்களிலும்

ஈடுபட்டனர். உதாரணமாக கீழ்கண்ட நிபந்தனைகள் விழா அமைப்பாளர்களால் மீறப்பட்டுள்ளன.

விழாவில் பங்கேற்ற தலைவர்கள், விழாவை முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நேரமான இரவு 10 மணியைக் கடந்து கூட்டத்தைத் தொடர்ந்து 11.35 மணி வரை நடத்தினர்.

இவ்விழாவில் கலந்துகொண்ட பெரும்பாலானவர்கள் குடி போதையில் இருந்ததோடு, ஒழுங்கற்ற முறையில் நடந்து கொண்டுள்ளனர்.

விழாவிற்குச் சென்றவர்கள் மரக்காணம் உள்ளிட்ட பல இடங்களில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டதோடு, பொது சொத்துக்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் பலத்த சேதத்தை விளைவித்தனர்.

மேலும், மாமல்லபுரம் அருகே குழிப்பாந் தண்டலம், அம்மாள் நகர், பூஞ்சேரி, நந்தி மாநகர், காரணை மற்றும் சில இடங்களில் சாலையோரத்தில் இருந்த மற்றொரு கட்சியினரின் கொடி கம்பங்களை உடைத்தும், தேசிய தலைவர் படங்களின் முகத்தில் சாயம் பூசியும், சாதி மோதலை தூண்டும் விதத்தில் நடந்து கொண்டனர்.

விழாவிற்கு வந்தவர்கள் திறந்த வாகனங்களிலும் சரக்கு வாகனங்களிலும், வாகனங்களின் மேற்கூரையில் ஏறி நடனம் ஆடியும், ஆபாசமான வார்த்தைகளை பேசியும் பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தனர்.

விழா முடிந்தவுடன் சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அப்பகுதி முழுவதையும் சுத்தம் செய்து தரவில்லை.

புராதனச் சின்னமான கடற்கரை கோவில் மேல் ஏறி அதில் அவர்கள் கட்சிக் கொடியை கட்டி புராதன சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்க முற்பட்டனர். இது சம்பந்தமாக தொல்லியல் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில், “Lakhs of people have swarmed inside the monument damaging the fencing, lawn, garden and climbed the historical shore temple and hoisted flags and are sitting on the monument as per the reports received from our officials at 6 p.m. today. They have been subjected to virtual

harassment by the local groups and public and have gained forceful entry into the monuments" என்றும், மேலும், "The monument has been exposed to vandalism and destruction" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்து மணிக்குள் கூட்டத்தை முடித்துக் கொள்வதாக விழா அமைப்பாளர்கள் உறுதி அளித்திருந்த போதும், இவ்விழாவில் பங்கேற்ற பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் பேசும் போது, "11½ மணிக்குப் பேசறேன் – போடு வழக்க. அதெல்லாம் நமக்குக் கவல கிடையாது" என்று கூறியுள்ளார்.

பத்து மணிக்குள் விழாவை முடித்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை உதாசீனப்படுத்திய ராமதாஸ் அவர்கள் மீது 'வழக்குப் போடுங்கள்' என்ற அவரது கோரிக்கைக்கு ஏற்ப வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றத்தை ஒப்புக் கொண்டு, நீதிமன்றம் அளிக்கும் தண்டனையை அவர் ஏற்றுக் கொள்வார் என்று நான் நம்புகிறேன்.

இளைஞர் பெருவிழா என்று நடத்தப்பட்ட இந்த விழாவிற்கான விளம்பரச் சுவரொட்டிகளில் சந்தன மரக் கடத்தல் வீரப்பனின் புகைப்படத்தைப் பயன்படுத்தி உள்ளனர். இளைஞர்களை நல்வழிப் படுத்துவதாகக் கூறும் திரு. ராமதாஸ், சந்தன மரக் கடத்தல் வீரப்பனை இளைஞர்கள் பின்பற்றி நடக்க வேண்டும் என்று சொல்கிறாரா? இல்லையென்றால் எதற்காக சந்தன மரக் கடத்தல் வீரப்பனின் புகைப்படம் சுவரொட்டிகளில் பயன்படுத்தப்பட்டது?

தமிழ்நாட்டில், பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று கூறும் திரு. ராமதாஸ், முன்னின்று நடத்திய இந்த விழாவில், பெரும்பாலான இளைஞர்கள் மது குடித்து விட்டுத்தான் வந்து இருந்தார்கள். இப்படித்தான், திரு. ராமதாஸ் இளைஞர்களை நல்வழிப்படுத்துகிறாரா?

கடந்த 28.04.2000 அன்று நடந்த விழாவில் பங்கேற்றவர்கள், மாமல்லபுரம், புதுப்பட்டினம், வாயலூர் காலனி ஆகிய இடங்களில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு, பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்துள்ளனர். 26.04.2002 அன்று நடைபெற்ற விழாவின்போதும், மரக்காணத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டுள்ளது. 28.04.2010 அன்று நடந்த

விழாவின் போது பூஞ்சேரி, வாயலூர் காலனி ஆகிய இடங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன. இதே போன்று 05.05.2012 அன்று நடந்த விழாவின்போது வன்னியர் சங்கத்தின் தலைவர் சாதி உணர்வைத் தூண்டும் விதத்தில் பேசியதற்காக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் 17.08.2008 அன்று சென்னையில் நடைபெற்ற வெள்ளி விழா மாநாட்டிற்கு வந்தபோது, புதுப்பட்டினம், கல்பாக்கம் ஆகிய இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இதனால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டது. மேலும், 14.04.2010 அன்று, மறைமலை நகரில் நடந்த அம்பேத்கரின் 119ஆவது பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு வந்த இக்கட்சியின் தொண்டர்கள் மறைமலை நகர், மாமண்டூர், வேடந்தாங்கல் ஆகிய இடங்களில் சச்சரவுகளில் ஈடுபட்டு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர்.

பொதுவாக, பல்வேறு அரசியல் மற்றும் சாதி ரீதியான அமைப்புகள் சில காரணங்களுக்காகத் தங்கள் பலத்தை காட்டும் விதத்தில், ஊர்வலம், பொதுக்கூட்டம், மாநாடு, நினைவு தின நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்தும் போது, அந்நிகழ்ச்சிகளுக்குப் பெருமளவில் வாகனங்களில் வந்து செல்பவர்கள் குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட சாலை வழியே வந்து செல்லும்போது, காவல் துறையினர் விதிக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமல் திறந்த வாகனங்களில் ஒழுங்கீனமான முறையில் நடந்து கொள்ளும்போதும், வழி நெடுக சாலையோர உணவகங்களில் சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் தகராறுகளில் ஈடுபடும்போதும், மாற்றுக்கட்சி மற்றும் பிற அமைப்புகளின் கொடி மற்றும் அடையாளச் சின்னங்களைச் சேதப்படுத்தும் போதும், அவர்களைக் கட்டுப்படுத்துவது என்பது காவல் துறையினருக்கு மிகப் பெரிய சவாலாக இருந்து வருகிறது. அதிகமான எண்ணிக்கையில் வாகனங்களில் செல்லும்போது, காவல் துறையினரின் அறிவுரைகளுக்கு அவர்கள் செவி சாய்ப்பதில்லை.

இதுபோன்ற விழாக்களுக்குக் காவல் துறையினர் அனுமதி தர மறுத்தால், விழா அமைப்பாளர்கள் உயர் நீதிமன்றத்தை

அணுகி, அங்கே சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் நடக்க மாட்டோம், காவல் துறையினருக்குக் கட்டுப்படுவோம், அமைதிக்கு ஊறு விளைவிக்க மாட்டோம் எனப் பல்வேறு உத்தரவாதங்களை உயர் நீதிமன்றம் முன்பு அளிக்கின்றனர். உயர் நீதிமன்றமும், இவர்களின் உத்தரவாதங்களை ஏற்றுக் கொண்டு, அவர்களுடைய பின்னணியைப் புரிந்து கொள்ளாமல், கடந்த காலங்களில் இது போன்ற விழா எப்படி நடத்தப்பட்டது என்பதை பார்க்காமல், சில நிபந்தனைகளின் அடிப்படையில் விழாவிற்கு அனுமதி வழங்குகிறது. ஆனால், விழா நடைபெறும் போது சென்னை உயர் நீதிமன்றம் விதிக்கும் எந்த நிபந்தனைகளையும் இவர்கள் கடைபிடிப்பதில்லை. இதுவே, இது போன்ற கூட்டங்களின் போது பிரச்சனைகள் ஏற்படக் காரணமாகிறது.

மேலும், அவர்கள் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் போது, காவல் துறையினர் தலையிட்டு நடவடிக்கை எடுத்துத் தடுக்கின்றனர். இது போன்ற சமயங்களில் ஒரு தரப்பினர், காவல் துறையினர் அத்துமீறி நடந்து கொண்டதாகக் குறை கூறுவதும், மற்றொரு தரப்பினர் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறை கூறுவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது.

இந்த அரசு, ஒரு போதும் வன்முறைகளை சகித்துக் கொள்ளாது. தங்கள் சுய லாபத்திற்காக அப்பாவிப் பொதுமக்களை சாதி ரீதியாகவும், மத ரீதியாகவும் தூண்டிவிட்டு வன்முறைச் செயல்களுக்கு காரணமாக இருப்பவர்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு ஊறு விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது எந்தவித கருணையும் இன்றி சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வன்முறையில் ஈடுபடுவோர் மீதும், பொது அமைதிக்கு ஊறு விளைவிப்போர் மீதும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் இவ்வரசு தயங்காது எனவும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சம்பவங்கள் தொடர்பாக, விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இதுவரையில் 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் குற்றவாளிகள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் மரக்காணத்தில், இரண்டு நாட்கள் முகாமிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து, சுமூகநிலை ஏற்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் பால் ஆகியவை வழங்கப்பட்டன.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 9 நபர்களின் கூரை வீடுகள் முழுவதுமாகவும், ஒரு நபரின் கூரைவீடு பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. மாட்டுக் கொட்டகை, பெட்டிக் கடை, வைக்கோல் போர் என 7 நபர்களின் உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இதர வகுப்பைச் சேர்ந்த ஒருவரின் குடிசை வீடு மற்றும் இருவரின் கடைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் அனைவருக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000 ரூபாய் வழங்கப்படும்.

இதுவன்றி, கூரை வீடுகளை இழந்த அனைவருக்கும் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித் தரப்படும். இந்தச் சம்பவத்தில் பலத்த காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று பேருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25,000 ரூபாயும், புறநோயாளிகளாக சிகிச்சைப் பெற்று இல்லங்கள் திரும்பியுள்ள 17 நபர்களுக்கு தலா 10,000 ரூபாயும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
03.05.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,
இந்திய நாட்டிற்குச் சொந்தமான கச்சத் தீவு மற்றும்
அதைச் சுற்றியுள்ள பகுதிகளை 1974ஆம் ஆண்டைய
இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி இலங்கை நாட்டிற்கு
ஒப்படைக்கப்பட்டதை திரும்பப் பெற விரைந்து நடவடிக்கை
எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி
அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை



தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள ராமேஸ்வரத்திலிருந்து 10 மைல் தொலைவில் 285 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தீவு கச்சத் தீவு. இருபதாம் நூற்றாண்டில் ராமநாதபுரம் சமஸ்தானத்தைச்

சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவர் இந்தத் தீவில் புனித அந்தோணியர் தேவாலயத்தை அமைத்தார். இங்கு ஆண்டு தோறும் திருவிழா நடைபெறுவது வழக்கமாக உள்ளது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை ராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக கச்சத் தீவு இருந்ததற்கான வரலாற்று ஆவணங்கள் உள்ளன. சுதந்திரம் அடைந்த பின்பு, ஜமீன் முறை ஒழிக்கப்பட்டு ராமநாதபுரம் சமஸ்தானத்தில் இருந்த கச்சத் தீவு இந்திய நாட்டுடன் இணைக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்படும் வரை, தமிழக மீனவர்கள் பாக் ஜலசந்தி பகுதியில், கச்சத் தீவு பகுதியில் மீன் பிடித்து வந்தனர். வலைகளை உலர்த்தவும், ஓய்வெடுக்கவும் கச்சத் தீவினைப் பயன்படுத்தி வந்தனர். 1974ஆம் ஆண்டு இந்தியா இலங்கை ஒப்பந்தத்திலும் பாரம்பரிய மீன் பிடி உரிமைகள் இந்திய மீனவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. இருப்பினும், இந்திய மீனவர்கள் பாக் ஜலசந்தி பகுதியில் கச்சத் தீவு பகுதியில் மீன் பிடிக்கவோ, கச்சத் தீவில் ஓய்வெடுக்கவோ, இலங்கை அரசாங்கம் அனுமதிப்பதில்லை. எல்லை மீறினார்கள் எனத் தெரிவித்து இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பல சமயங்களில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல நேர்வுகளில் கைதும் செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரின் அத்து மீறல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வருகிறது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வு கச்சத்தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை இலங்கை நாட்டிடம் இருந்து திரும்பப் பெறுவதே என்பதால், இது குறித்த முக்கிய தீர்மானத்தை நான் இப்பேரவையில் முன்மொழிய விழைகிறேன்.

தீர்மானம்

“தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினரின் கொடூரத் தாக்குதல்களும், துன்புறுத்துதல்களும், சிறை பிடிக்கும் நிகழ்வுகளும் தொடர்வதைக் கருத்தில் கொண்டும், பெருபாரி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பின் அடிப்படையில்

கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்பதாலும், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் வாழ்வாதார பாதிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்த பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை நாட்டிற்கு ஒப்படைக்கப்பட்ட கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்துகிறது'' என்னும் தீர்மானத்தினை முன்மொழிகிறேன்.

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், எனது கருத்துகளை நான் எடுத்துரைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கச்சத் தீவை மீட்க வேண்டும் என்று என்னால் முன்மொழியப்பட்ட அரசினர் தீர்மானத்தின் மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துகளை கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்களும் தங்களது மேலான கருத்துகளை தெரிவித்து இருக்கிறீர்கள்.

உலகில் பல்வேறு நாடுகளுக்கிடையே பல்வேறு பொருட்கள் குறித்து ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த சர்வதேச ஒப்பந்தங்கள் எல்லாம் இன்றளவும் நடைமுறையில் மதிக்கப்படுகின்றன; கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், 1974ஆம் ஆண்டு இந்தியா – இலங்கை ஒப்பந்தம் மட்டும் ஆரம்ப காலம் முதல் தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு தொடர்ந்து அவமதித்து வருகிறது. இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதன் காரணமாக பாதிக்கப்படுபவர்கள் இந்தியக் குடிமக்களாகிய தமிழக மீனவர்கள் மட்டுமே. இலங்கைவாழ் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. தமிழர்களுக்கு மேலும் வேதனை

அளிக்கக் கூடிய விஷயம் என்னவென்றால், இந்தியா – இலங்கை நாடுகளுக்கிடையே ஆன ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்களுக்குக் கச்சத் தீவு பகுதியில் மீன் பிடி உரிமை வழங்கப்படவில்லை என்று இலங்கைக்கு ஆதரவாக மத்திய அரசே கூறியுள்ளது தான்.

இலங்கை நாட்டிற்குத் கச்சத் தீவை காவு கொடுக்கும் இந்தியா – இலங்கை ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது என்றாலும், அதற்கு முன்பே இந்தப் பிரச்சனை குறித்து பேசப்பட்டு வந்தது. கச்சத் தீவு தாரைவார்ப்பு ஒப்பந்தம் இந்தியா – இலங்கை நாடுகளுக்கிடையே 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறுதியில் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பில் அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 26.06.1974 அன்றும், இலங்கையின் சார்பில் அன்றைய இலங்கை அதிபர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகே அவர்கள் 28.06.1974 அன்றும் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் பேசிய அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஸ்வரண் சிங் அவர்கள், இது குறித்து அப்போதைய தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியிடம் விரிவாக, குறைந்த பட்சம் இரண்டு முறை கலந்துரையாடப்பட்டது என்று தெரிவித்து இருக்கிறார்.

இதிலிருந்து, இந்தியா – இலங்கை நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே அப்போதைய தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளை இந்தியா, இலங்கை நாட்டிற்குத் தாரைவார்க்கப் போகிறது என்பது நன்கு தெரியும் என்ற உண்மை தெளிவாகிறது. இது போன்ற கருத்துரு மத்திய அரசிடம் இருப்பதை அறிந்த உடனேயே தமிழக மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாநிலம் தழுவிய போராட்டத்தை திரு. கருணாநிதி நடத்தியிருக்கலாம். போராட்டம் என்று நடத்தவில்லை என்றாலும், 1960க்கு முன்பு மேற்கு வங்க மாநிலம் பெருபாரி பகுதியை கிழக்கு பாகிஸ்தானுக்கு மத்திய அரசு அளிக்க முயன்ற போது, அதற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை சுட்டிக் காட்டி உச்ச நீதிமன்றத்திலே சட்ட ரீதியாக மனுத் தாக்கல் செய்திருக்கலாம்.

ஆனால், அவ்வாறு செய்ய திரு. கருணாநிதி விரும்பவில்லை. எனவே தான், 29.06.1974 அன்று செய்தியாளர்கள் அப்போது தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியிடம் "கச்சத் தீவை இந்திரா காந்தி இலங்கைக்குக் கொடுத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக ஜன சங்கத் தலைவர் திரு. வாஜ்பாய் அறிவித்துள்ளாரே, உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டதற்கு, "அது பற்றி நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை" என்று பதில் கூறியுள்ளார் திரு. கருணாநிதி. கச்சத் தீவு காவு கொடுக்கப்பட்டதைத் தடுக்க எதையுமே செய்யாமல் மவுனம் சாதித்துவிட்டு, கச்சத் தீவு தாரைவார்க்கப்பட்ட பிறகு, பெயரளவிலே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி கச்சத் தீவு பிரச்சனைக்கு மூடு விழா நடத்தினார் திரு. மு. கருணாநிதி.

அந்தத் தீர்மானத்தின் மீது பேசிய திரு. கருணாநிதி, "ஜூன் மாதம் 27ஆம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தது. இப்போதும் சொல்கிறேன். இது பற்றி எந்த விதமான சூசகமான தகவலையும் இந்த அரசுக்கு அறிவிக்கவில்லை. 27ஆம் தேதி பத்திரிகையில் பார்த்தவுடன் பதறிப்போய் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தந்தி கொடுத்தேன். ..." என்று கூறியிருக்கிறார்.

ஆனால், திரு. கருணாநிதியின் தலைமையில் "டெசோ" அமைப்பின் சார்பில் 15.04.2013 அன்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் கச்சத் தீவு குறித்த தீர்மானத்தில், "1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது, கழக அரசு முதல் நிலையிலேயே அதனைக் கடுமையாக எதிர்த்தது. அதையும் மீறி ஒப்பந்தம் கையெழுத்தான போது, குறைந்த பட்சம் தமிழக மீனவர்களுக்குக் கச்சத் தீவு பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையும், மீனவர்களின் வலைகளை அங்கே உலர்த்திக் கொள்வதற்கான உரிமையும் அந்த ஒப்பந்தத்தின் பிரிவுகளில் சேர்க்கப்பட வேண்டுமென்று கழக அரசு வலியுறுத்தி அந்த ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன. ..." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எது உண்மை என்பதை திரு. கருணாநிதிதான் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும். 1974இல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேசிய திரு.கருணாநிதி, "கச்சத் தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட செய்தியை, பத்திரிகைகளில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்; பதறிப் போனேன்" என்கிறார். ஆனால்

2013இல், கடந்த மாதம் நடைபெற்ற டெசோ கூட்டத்தில், ஒப்பந்தம் நிறைவேற்றப் படுவதற்கு முன்பே, இவர் சொல்லித்தான் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன என்கிறார்! இது என்ன பித்தலாட்டம்?

எப்படியிருந்தாலும், கச்சத் தீவு பிரச்சனையில் திரு. கருணாநிதியின் செயலற்ற தன்மை காரணமாக, இரட்டை நிலை காரணமாக, தனக்கே இயல்பான கபட வேடம் காரணமாக, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது.

நான் முதன் முறையாக 1991இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டு, "கச்சத் தீவை மீட்போம்" என்று அறிவித்தேன். கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பது தொடர்பான தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 03.10.1991 அன்று எனது அரசால் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கச்சத் தீவை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பாரதப் பிரதமரை நேரில் பல முறை வற்புறுத்திக் கூறினேன். கடிதம் மூலமும் வற்புறுத்தி இருக்கிறேன்.

"ஜெயலலிதா, கச்சத் தீவை மீட்டே தீருவேன் என்றாரே? ஏன் இன்னும் மீட்கவில்லை? அதை மீட்காமல் எதை மீட்டிக் கொண்டிருக்கிறார்?" என்று என்னை அடிக்கடி கேலி செய்து வந்துள்ளார் திரு. கருணாநிதி. பின்னர் 1996ஆம் ஆண்டு முதல் 2001 வரை மாநிலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தார் திரு. கருணாநிதி. நடுவில் ஓர் ஆண்டைத் தவிர, 1996 முதல் ஒரு மாதத்திற்கு முன்பு வரை, வெவ்வேறு மத்திய அரசுகளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு இருந்தார் திரு. கருணாநிதி. ஆனால் கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்காக ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை. மத்திய ஆட்சியில் பங்கு கொண்ட அத்தனை ஆண்டுகள், 16 ஆண்டுகளில், திரு.கருணாநிதி எதை மீட்டிக் கொண்டிருந்தார்? என்று அவர் தான் கூற வேண்டும்.

நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, "Lease in perpetuity" அதாவது, நிரந்தரமான குத்தகை என்ற முறையிலாவது, கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமையை

இந்திய மீனவர்களுக்கு மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும் என்று பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தினேன். கடிதங்கள் வாயிலாகவும் கேட்டுக் கொண்டேன். திரு. கருணாநிதியின் தயவில் மத்திய அரசு இருந்ததாலோ என்னவோ, எந்த விதமான நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

2006ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து தமிழகத்தின் முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி பொறுப்பேற்றுக் கொண்டார். மத்தியில், தி.மு.க. ஆதரவுடன் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்றது. எந்த மத்திய அரசும், மாநில தி.மு.க. அரசும், 1974ஆம் ஆண்டு கச்சத் தீவை இலங்கைக்குத் தாரைவார்த்துக் கொடுத்தனவோ, அதே அரசுகள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பை வகித்தன. ஆனால், கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே சென்றன.

இந்திய மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், பெருபாரி வழக்கினை மேற்கோள் காட்டி, கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்த 1974 மற்றும் 1976 ஆண்டைய ஒப்பந்தங்கள் 'சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல' என்று உத்தரவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் 2008ஆம் ஆண்டு ஒரு வழக்கினைத் தொடுத்தேன். இந்த வழக்கில் மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசையும் ஒரு பிரதிவாதியாக சேர்த்திருந்தேன். ஆனால், திரு.கருணாநிதி தலைமையிலான அன்றைய தமிழக அரசின் சார்பில் சாதகமான எதிர் உறுதி ஆவணம் ஏதும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில், 2011ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை இயற்றி தமிழக அரசின் வருவாய்த் துறையையும் இந்த வழக்கில் இணையச் செய்தேன்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தவரை கச்சத் தீவை மீட்பதற்காகச் சுண்டு விரலைக் கூட அசைக்காத

திரு. கருணாநிதி, பல்வேறு காரணங்களுக்காகப் புதுப்பிக்கப்பட்ட டெசோ அமைப்பு மூலம் "1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் கச்சத் தீவை விட்டுக் கொடுத்தது அரசியல் சட்ட ரீதியாக செல்லுபடியாகாது என்றும், அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும், கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதி தான் என்பதை பிரகடனப்படுத்த டெசோ அமைப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது" என்றும் ஒரு தீர்மானத்தினை 15.04.2013 அன்று நிறைவேற்றி இருக்கிறார்.

கச்சத் தீவு மீட்கப்பட வேண்டும்; தமிழக மீனவர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்ற அக்கறை திரு. கருணாநிதிக்கு உண்மையாகவே இருந்திருந்தால், இந்த ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என மத்திய அரசுக்கு எதிராக நான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போதே தமிழ்நாடு அரசையும் அதில் இணைத்துக் கொண்டு கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். இல்லையெனில், என்னுடைய கோரிக்கைக்கு வலு சேர்க்கும் விதமாகவாவது மாநில அரசின் சார்பில் எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் இப்படி எதையுமே செய்யாமல், மாநில அரசு ஒரு 'Proforma Respondent' தான் என்பதால், மத்திய அரசு எந்தவித எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்கிறது என்று பார்த்துவிட்டு பின்னர் மாநில அரசு எதிர் உறுதி ஆவணத்தை தாக்கல் செய்து கொள்ளலாம் என்ற மழுப்பலான முடிவை எடுத்தார் அப்போதைய தமிழக முதல்வர், திரு. கருணாநிதி. குறைந்த பட்சம், தான் தாங்கிப் பிடித்திருந்த மத்திய அரசை வலியுறுத்தி தமிழக மீனவர்களுக்குச் சாதகமான வகையில் மனுத் தாக்கல் செய்யச் சொல்லி இருக்கலாம். ஆனால், அவ்வாறு எதையும் திரு. கருணாநிதி செய்யவில்லை. மத்திய அரசுக்கு திரு. கருணாநிதி அழுத்தம் கொடுக்காததன் காரணமாக, 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டியது இல்லை என்று தெரிவித்து, என்னுடைய ரிட் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசு எதிர் உறுதி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது.

இதன் பின்னர், நான் மூன்றாவது முறையாக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 08.06.2011 அன்று இந்த மாமன்றத்தில் தமிழக அரசின் வருவாய்த் துறையையும் கச்சத் தீவு வழக்கில் இணைத்துக் கொள்ளும் வகையிலான தீர்மானத்தை நிறைவேற்றினேன். இந்த வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறை இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னராவது மத்திய அரசை திரு. கருணாநிதி வற்புறுத்தி இருக்கலாம் அல்லது இந்த வழக்கில் தி.மு.க.வை அப்போதே இணைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், இதில் எதையும் செய்யாமல், இப்போது 'டெசோ' மூலம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போவதாக அறிவித்து இருப்பது யாரை ஏமாற்ற என்பது தெரியவில்லை.

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. கச்சத் தீவு பிரச்சனையில் திரு. கருணாநிதி எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிய வேண்டும், இந்த மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றை எல்லாம் நான் இங்கே வேதனையுடன் குறிப்பிடுகிறேன்.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஏழு முறை இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர் இந்தச் சம்பவங்களில் தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் இலங்கைக் கடற்படையினரால் நாசம் ஆக்கப்பட்டன. இவர்களில் 30 மீனவர்கள் இன்னமும் இலங்கைச் சிறைகளில் இருந்து விடுவிக்கப்படவில்லை. இது தவிர, 5 தமிழக மீனவர்கள் கடந்த ஓராண்டுக்கும் மேலாக இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், தமிழக மீனவர்களைக் காக்க கச்சத் தீவினை மீட்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதால், கச்சத் தீவினை மீட்கும் தீர்மானத்தினை நான் முன்மொழிந்துள்ளேன்.

மீனவர்களின் நலன் காக்கும் இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

*கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய அலுவலகத்திற்குள் 05.04.2013 அன்று போலீசார் நுழைந்தது குறித்து சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் பதிலுரை – 13.05.2013*



பதிவு செய்யப்பட்ட வழக்குகள் விசாரணை அடிப்படையில் மேல் நடவடிக்கை!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய அலுவலகத்திற்குள் 05.04.2013 அன்று போலீசார் அத்து மீறி உள்ளே நுழைந்து அங்கிருந்த ஒன்றியச் செயலாளர் மற்றும் முன்னணி ஊழியர்களைக் கடுமையாகத் தாக்கி வழக்கு புனைந்து கைது செய்யப்பட்டிருப்பதால் உருவாகியுள்ள நிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பினைக் கொடுத்துள்ளனர். அந்த அறிவிப்பு தங்களால் அனுமதிக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் உண்மை நிலவரத்தை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை பேருந்து நிலையம் அருகில், ராஜா என்பவர் பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 05.04.2013 அன்று மாலை சுமார் 4 மணியளவில் ராஜாவும், அவரது தாயார் ராஜம் என்பவரும் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது, ராமன்பரம்பு பகுதியைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்களான சரவணன், கார்த்திக் மற்றும் அனில் குமார் ஆகியோர் மேற்படி கடையில் சில பொருட்களை வாங்கிக்கொண்டு பணம் கொடுக்க மறுத்ததால், அது குறித்து கேட்ட ராஜத்தை, சரவணன் ஆடையைப் பிடித்து இழுத்து, அவமரியாதை செய்துள்ளார். தனது தாயார் அவமதிக்கப்பட்டது குறித்துக் கேட்ட ராஜாவையும் மேற்படி நபர்கள் ஆயுதங்களால் தலையில் தாக்கியதுடன், அக்கடையிலிருந்த பொருட்களையும் சேதப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அறிந்த தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சங்கர், காவலர்களுடன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரித்தபோது, ராஜம் தன்னைத் தாக்கியவர்கள் பேருந்து நிலையம் அருகிலுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்திற்குள் இருப்பதாக தெரிவித்ததை அடுத்து, காவல் துறையினர் ராஜத்தை அழைத்துக் கொண்டு அக்கட்சி அலுவலகத்திற்குச் சென்று, இது குறித்து விசாரித்து, எதிரிகளைக் கைது செய்ய முற்பட்டுள்ளனர். அப்போது அக்கட்சி அலுவலகத்தில் இருந்த அரங்கசாமி, சைமன் சைலஸ், கணேசன் ஆகியோர் சரவணன், கார்த்திக், அனில் குமார் உள்ளிட்ட எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு, காவல் துறையினரை அரசு அலுவல் பணியை மேற்கொள்ள விடாமல் தடுத்துத்

தரக்குறைவான வார்த்தைகளால் திட்டி, உதவி ஆய்வாளர் சங்கரை தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் இழுத்துச் சென்று, கொடிய ஆயுதங்களால் அவரது கை மற்றும் கால் பகுதியில் கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பியோட முயன்றுள்ளனர். அப்போது அங்கிருந்தக் காவலர்கள் உடனடியாக உதவி ஆய்வாளரை மீட்டு, அரங்கசாமி, சைமன் சைலஸ் மற்றும் அனில்குமார் ஆகியோரைப் பிடித்து, காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயம் அடைந்த உதவி ஆய்வாளர் சங்கர், தக்கலை அரசு மருத்துவமனையிலும், ராஜா நாகர்கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பின்னர் ராஜா அளித்த புகாரின் பேரில் தக்கலை காவல் நிலையத்தில் குற்ற எண். 304/2013இல், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 294 (பி), 323, 324, 307; Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act, 1992இன் பிரிவு 3(1); மற்றும் Tamil Nadu Prohibition of Harassment of Women Act, 1998இன் பிரிவு 4 ஆகியவற்றின்படி ஒரு வழக்கும், உதவி ஆய்வாளர் சங்கர் அளித்த புகாரின் பேரில் குற்ற எண்.305/2013இல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 294 (பி), 342, 332, 324, 307 ஆகியவற்றின்படி மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டு, அரங்கசாமி உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

பின்னர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாதவன், காவல் துறையினர் தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் அத்து மீறி நுழைந்து, கட்சி உறுப்பினர்களை தாக்கியதாகக் கொடுத்த புகாரின் பேரில் தக்கலை காவல் நிலையத்தில், குற்ற எண். 306/2013இல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 448, 323, 427இன்படி உதவி ஆய்வாளர் சங்கர் உள்ளிட்ட காவலர்கள் மீது மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

சம்பவ தினத்தன்று இரவு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் லீமா ரோஸ், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் பெல்லார்மின் உள்ளிட்ட சுமார் 100 பேர்,

கைது செய்யப்பட்ட அரங்கசாமி உள்ளிட்டோரை விடுவிக்கக் கோரி, தக்கலை காவல் நிலையத்தை முற்றுகையிட்டு, காவல் துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, காவல் துறையினர் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து கலைந்து சென்றனர். காவல் நிலையத்தை முற்றுகையிட்டது தொடர்பாக, அக்காவல் நிலையப் பெண் உதவி ஆய்வாளர் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.307/2013இல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 143, 341, 354, 188இன்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

எதிரி கார்த்திக் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 06.05.2013 அன்று முன் பிணை பெற்று தக்கலை நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து நிபந்தனை பிணையில் இருந்து வருகிறார். எதிரி சரவணன் தலைமறைவாக இருந்து வருகிறார். எதிரிகள் கார்த்திக் மற்றும் சரவணன் ஆகியோர் கட்சிப் பொறுப்பு எதிலும் இல்லை. மேலும், இவர்கள் மீது தக்கலை காவல் நிலைய குற்ற எண்.945/12இல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 341, 294 (பி), 323, 324, 506(ii)இன்படி ஒரு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. எதிரி அனில் குமார் DYFI அமைப்பில் உறுப்பினராக உள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் ஒரு பெட்டிக் கடையில் வாங்கிய பொருட்களுக்குப் பணம் தராமல், கடையிலிருந்த பெண்மணியை மானபங்கப்படுத்தி, அதைத் தட்டிக் கேட்ட அவரது மகன் ராஜாவையும் ஆயுதங்களால் தாக்கி விட்டு, கட்சி அலுவலகத்துக்குள் சென்று ஒளிந்து கொண்டுள்ளனர். மேலும், இச்சம்பவம் குறித்துத் தகவல் அறிந்து எதிரிகளைக் கைது செய்ய முயன்ற உதவி ஆய்வாளரையும் அக்கட்சியினர் அரசுப் பணி செய்ய விடாமல் தடுத்ததோடு, கட்சி அலுவலகத்துக்குள் இழுத்துச் சென்று கொடிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

இச்சம்பவங்களில் படுகாயம் அடைந்த ராஜா நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 05.04.2013 முதல் 15.04.2013 வரையிலும், உதவி ஆய்வாளர் சங்கர் தக்கலை அரசு

மருத்துவமனையில் 05.04.2013 முதல் 12.04.2013 வரையிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரின் அத்துமீறல் நடவடிக்கைகளைக் கண்டித்தும், ராஜாவை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் கடந்த 08.04.2013 அன்று, தக்கலை நகர வர்த்தக சங்கத்தினர் அப்பகுதியில் ஒரு நாள் கடையடைப்பு நடத்தியுள்ளனர்.

காவல் துறையினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து அக்கட்சியினர் யாரையும் தாக்கவில்லை. யார் மீதும் பொய் வழக்கும் போடவில்லை. உண்மையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தான் எதிரிகளைக் கைது செய்யச் சென்ற காவல்துறை உதவி ஆய்வாளரை அலுவலகத்திற்குள் இழுத்துச் சென்று தாக்கியுள்ளனர். இச்சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் எந்த வித பதற்றமான சூழ்நிலையும் நிலவவில்லை.

இது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நான்கு வழக்குகளையும் காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். இவ்வழக்குகளில் விசாரணை அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ ✶ ✶

வட மாவட்டங்களில் நடைபெற்ற
வன்முறைச் சம்பவங்கள் குறித்து சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட
சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்களின் பதிலுரை* ***– 13.05.2013***



பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை குறைக்கும் வகையில் காவல்துறை செயல்பட்டு வருகிறது!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து வட மாவட்டங்களில் வன்முறை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது குறித்து எடுத்துக் கொள்ளப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்துரைத்து இருக்கிறார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி 25.04.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் நடத்திய 'சித்திரை முழு நிலவு வன்னியர் இளைஞர் பெருவிழா'வின் போது மரக்காணத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் 29.04.2013 அன்று சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

அதற்குப் பதில் அளித்து நான் பேசிய போது, சுய இலாபத்திற்காக அப்பாவி பொதுமக்களை சாதி ரீதியாகவும், மத ரீதியாகவும் தூண்டிவிட்டு வன்முறைச் செயல்களுக்கு காரணமாக இருப்பவர்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு ஊறு விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது எந்த வித கருணையும் இன்றி சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், வன்முறையில் ஈடுபடுவோர் மீதும், பொது அமைதிக்கு ஊறு விளைவிப்போர் மீதும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்றும் நான் தெரிவித்து இருந்தேன்.

இந்நிலையில், மரக்காணம் சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று கூறி, 30.04.2013 அன்று விழுப்புரத்தில் டாக்டர் ராமதாஸ் தலைமையில் மிகப் பெரிய அளவில் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெறும் என்றும், 01.05.2013 அன்று அனைத்து மாவட்ட மற்றும் வட்டத் தலை நகரங்களில் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெறும் என்றும் டாக்டர் ராமதாஸ் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

மரக்காணம் சம்பவத்தைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்துவது வன்முறைக்கு வழிகோலும் என்பதாலும், சாதி சச்சரவுகளுக்கு வித்திடும் என்பதாலும், இது சம்பந்தமான ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை என்ற முடிவை காவல் துறை எடுத்தது.

இதனை அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்த தொடர் முழக்கப் போராட்டத்திற்கு அனுமதி மறுத்து, அதற்கான ஆணை அக்கட்சியின் விழுப்புரம் நகரச் செயலாளருக்கு சார்வு செய்யப்பட்டது. காவல் துறையினர் முறையாக, பேராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறித்து தெரிவித்திருந்தும்

அக்கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அம்மாவட்டத்தில் அப்போது நிலவி வந்த சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளாது, காவல் துறையினர் சட்டம் ஒழுங்கினை பராமரிக்க ஒத்துழைப்பு அளிப்பதற்குப் பதிலாக, பொறுப்பில்லாமல் தடையை மீறி அனுமதி மறுக்கப்பட்ட போராட்டத்தைத் தலைமையேற்று நடத்த 30.04.2013 அன்று பிற்பகல் 12.15 மணியளவில், தங்கள் கட்சியினருடன் விழுப்புரம் ரயில் நிலையம் அருகே சட்ட விரோதமாகக் கூடியதால், வேறு வழியின்றி டாக்டர் ராமதாஸ், ஜி.கே.மணி உள்ளிட்ட 363 பா.ம.க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, பாட்டாளி மக்கள் கட்சியினர் பல இடங்களில் சாலைகளை மறித்து, போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு செய்து வருகின்றனர். வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில், கற்களை வீசி வாகனங்களைச் சேதப்படுத்தி வருகின்றனர். இது மட்டுமின்றி, இக்கட்சியினர் கும்பலாகச் சேர்ந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகளை வழி மறித்து, அப்பாவி பயணிகள் கண் எதிரிலேயே பீதியை ஏற்படுத்தும் வகையில் வாகனங்களைத் தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர். மேலும், சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்களையும் வழி மறித்து ஓட்டுநர்களைத் தாக்கி, அவ்வாகனங்களுக்கும் தீ வைத்துள்ளனர்.

இதற்கிடையில், அக்கட்சியின் இளைஞர் அணித் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் அன்புமணி ராமதாஸ், டாக்டர் ராமதாஸை அரசு கைது செய்து சிறையில் அடைத்து, அரசியல் பழிவாங்கும் படலத்தைத் தொடங்கிவிட்டதாகவும்; ராமதாஸ் கைது செய்யப்பட்ட பின்னர் அலைக்கழிக்கப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டதாகவும்; கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்றும் அறிக்கை வெளியிட்டார். டாக்டர் அன்புமணி ராமதாஸின் இந்த அறிக்கை ‘‘எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினார் போல்’’ என்ற பழமொழிக்கேற்ப வன்முறையைத் தூண்டும் விதமாக அமைந்தது.

இதனையடுத்து, அக்கட்சியினர் தொடர்ந்து பல்வேறு இடங்களில் சட்ட விரோதச் செயல்களிலும், வன்முறையிலும் ஈடுபட்டனர். குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை; காஞ்சிபுரம் மாவட்டம் தாமல், உவேரிசத்திரம், வதியூர்; வேலூர் மாவட்டம் மருதாலம், கோணலம், பெருங்களத்தூர்; திருவண்ணாமலை மாவட்டம் அய்யம்பாளையம், மேல்பூதேரி, சிந்தனைக்கால்; திருவள்ளூர் மாவட்டம் புஜ்ஜிரெட்டிப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அரசுப் பேருந்துகளுக்கும், தனியார் பேருந்துகளுக்கும், லாரிகளுக்கும் தீ வைத்ததில் வாகனங்கள் சேதமடைந்தன. இத்தகைய ஈவு இரக்கமற்ற சம்பவங்களால், ஓட்டுநர்களும் பயணிகளும் காயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர். சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்ட பாட்டாளி மக்கள் கட்சியினர் முதலில் வாகனங்களை நிறுத்தி பயணிகள் இறங்கிய பின் பெட்ரோல் ஊற்றித் தீ வைத்தனர். பின்னர் தீவிரவாத இயக்கங்களைப் போல ஓடும் வண்டிகள் மீது பெட்ரோல் குண்டுகள் வீசி பயணிகளைப் பெரும் பீதிக்கும் ஆபத்துக்கும் உள்ளாக்கினர்.

திருவண்ணாமலை மாவட்டம் அய்யம்பாளையம் கிராமம் அருகே இரு சக்கர வாகனங்களை ஏற்றிச் சென்ற வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சரக்கு லாரியையும், திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை அருகே இரும்பு ஏற்றிச் சென்ற லாரியையும் வழி மறித்துப் பெட்ரோல் எரியூட்டப்பட்ட பாட்டில்களை வீசியதில் அந்த லாரிகள் தீக்கிரையாகின. இச்சம்பவத்தில், வட மாநில லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் திரு. சர்கார் கான் என்பவர் பலத்த தீக்காயம் அடைந்து மருத்துவமனையில் பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும், இக்கட்சியினர் மாநிலம் முழுவதும் பல இடங்களில் பேருந்துகள் மீது கற்களை வீசியதில் நூற்றுக்கணக்கான அரசு மற்றும் தனியார் வாகனங்களின் கண்ணாடிகள் சேதமடைந்தன. இக் கல்வீச்சு சம்பவத்தில் பலர் காயம் அடைந்துள்ளது மட்டுமின்றி மரணங்களும் நடந்துள்ளன.

குறிப்பாக, விழுப்புரம் மாவட்டம் முருக்கேறி கிராமம் அருகே ஒரு லாரியை வழி மறித்து, கல் வீசி தாக்கிய சம்பவத்தில் மரக்காணத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம் என்ற ஓட்டுநர்

படுகாயம் அடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

அதுமட்டுமின்றி ஈரோடு மாவட்டம், புஞ்சைப் புளியாம்பட்டியைச் சேர்ந்த செல்வம் என்பவர் சிதம்பரத்தில் இருந்து சேலம் சென்ற அரசுப்பேருந்து ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது, அப்பேருந்தின் மீது கல் வீசியதில் அவருக்குத் தலையில் படுகாயம் ஏற்பட்டு, சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கிழக்குக் கடற்கரைச் சாலை கடும்பாடி அருகில் பாண்டிச்சேரியில் இருந்து சென்னை நோக்கி வந்த அரசுப் பேருந்து ஒன்றின் மீது கல் வீசியதில், அப்பேருந்தில் பயணம் செய்த சென்னை மணலியைச் சேர்ந்த சுதர்சனம் என்பவர் படுகாயம் அடைந்து, சுயநினைவின்றி சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தருமபுரி மாவட்டம், மோட்டான்குறிச்சி அருகே சென்னையிலிருந்து நாகர்கோவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் வண்டியின் மீது இக்கட்சியினர் எரியூட்டப்பட்ட மண்ணெண்ணெய் பாட்டிலை வீசியதில் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த சேலத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

வேலூர் மாவட்டம், வாலாஜாப்பேட்டை நகராட்சி திருமண மண்டபம் அருகே காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில், அங்கு பாதுகாப்புப் பணிக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல் பேருந்து ஒன்றின் மீது பாட்டாளி மக்கள் கட்சியினர் எரியும் தீப் பந்தத்தை வீசியுள்ளனர். இதில் ஓட்டுநர் காவலர் ராஜகணபதி என்பவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். காவல் வாகனமும் தீக்கிரையானது.

தருமபுரி மாவட்டம், கராத்தான் குளம் அருகில், உள்ள ஒரு பாலத்தை பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த இருவர் வெடி பொருட்களை வைத்து தகர்க்க முற்பட்டபோது காவல்

துறையினரால் கைது செய்யப்பட்டு, அவர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் ஒருவர் நாமக்கல் மாவட்டம், ஆத்தூர்–ராசிபுரம் சாலையில் ஒரு பாலத்தை வெடி பொருட்கள் வைத்து தகர்ப்பதற்காக இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, இது குறித்து தகவல் அறிந்த காவல் துறையினர் அவரைக் கைது செய்து, இரு சக்கர வாகனத்தையும், வாகனத்தில் இருந்த டெட்டோனேட்டர் உள்ளிட்ட வெடி பொருட்களையும் கைப்பற்றினர்.

விழுப்புரம் மாவட்டம், மோட்டான்குளம் அருகே உள்ள ஒரு வாய்க்கால் பாலத்தை வெடி பொருட்கள் வைத்தும்; காஞ்சிபுரம் மாவட்டம், ஓரத்தி தொழுப்பேடு சாலையில் மின்னல் சித்தாமூர் கிராமத்திற்கு அருகே பாலத்தில் இருந்த சிமெண்ட் பலகைகளைப் பெயர்த்தும் அப்பாலங்கள் சேதப்படுத்தப்பட்டன.

தருமபுரி மாவட்டம், கம்பைநல்லூர்–ஓடசல்பட்டி சாலையில் வேதரம்பட்டி கிராமம் அருகில் சிமெண்ட்டினால் ஆன குழாய் பாலம் ஒன்றை பாட்டாளி மக்கள் கட்சியினர் வெடிபொருட்கள் வைத்து வெடிக்கச் செய்து சேதப்படுத்தியுள்ளனர்.

சேலம் மாவட்டம் சாவடிபுதூர் கிராமத்தில் தண்ணீர் கொண்டு செல்லும் பிளாஸ்டிக் குழாயினையும் பாட்டாளி மக்கள் கட்சியினர் வெடி பொருட்கள் வைத்துத் தகர்த்துள்ளனர்.

தருமபுரி மாவட்டம், அன்னசாகரம் மற்றும் சேலம் மாவட்டம், சந்தைப்பேட்டை, கருங்காலூர் ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகளின் மீது பெட்ரோல் நிரப்பப்பட்ட பாட்டில்களை எறிந்ததில் ஏற்பட்ட தீயினால் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய வைக்கப்பட்டிருந்த அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், வேட்டி சேலைகள் ஆகியவை சேதம் அடைந்தன.

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் அருகே உள்ள ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு உரக் கிடங்கையும் பாட்டாளி மக்கள் கட்சியினர் தீ வைத்துச் சேதப்படுத்தினர். இச்சம்பவத்தில் பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உர மூட்டைகள் சேதம் அடைந்தன.

பாட்டாளி மக்கள் கட்சியினர் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச்

சிலைகளை நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலத்தில் தீ வைத்துக் கொளுத்தியதோடு வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை, கன்னிகாபுரத்தில் உள்ள சிலையை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர். விழுப்புரம் மாவட்டம், எண்டியூரில் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் திருவுருவ சிலைக்கு செருப்பு மாலை அணிவித்து அவமரியாதையை இழைத்துள்ளனர். தகவல் அறிந்ததும் காவல் துறையினர் விரைந்து சென்று செருப்பு மாலையை அகற்றியுள்ளனர்.

விழுப்புரம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், அரியலூர், சேலம், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் சுமார் 22 அரசு மதுபானக் கடைகள் மீது எரியூட்டப்பட்ட தீப்பந்தங்கள் மற்றும் பெட்ரோல் பாட்டில்களை ஜன்னல் வழியாக வீசியும், பெட்ரோல் ஊற்றி தீ வைத்தும் சேதப்படுத்தியுள்ளனர். சில மதுபானக் கடைகளின் பின் சுவற்றில் துளை போட்டு அதன் வழியாக எரியூட்டப்பட்ட பெட்ரோல் குண்டுகளை உள்ளே வீசி கடைகளுக்குத் தீவைத்துள்ளனர். இச்சம்பவங்களில் பல இலட்சம் மதிப்புள்ள அரசு சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டம், கொல்லஹள்ளி என்ற கிராமத்தில் இயங்கி வந்த கிராம நிருவாக அலுவலகத்திற்குள் பாட்டாளி மக்கள் கட்சியினர் தீப்பந்தத்தை எறிந்ததில் அலுவலகத்தில் இருந்த பல ஆவணங்கள், அலுவலகப் பொருட்கள் மற்றும் மரச் சாமான்கள் சேதம் அடைந்தன.

17 குடிசை வீடுகள், பெட்டிக் கடைகள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றையும் பாட்டாளி மக்கள் கட்சியினர் தீ வைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

வேலூர் மாவட்டம், நெமிலி அருகே கல் வீச்சு சம்பவம் தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு நபர்களை நெமிலி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் பிடித்து விசாரணை செய்தனர். அப்போது, காவல் துறையினரை முற்றுகையிட்டு சட்டவிரோதமாக நிறுத்தி வைத்து பாட்டாளி மக்கள் கட்சியினர் தகராறு செய்தனர். தகவல் கிடைத்த அரக்கோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய பெண் ஆய்வாளர் மற்றும் நெமிலி காவல் ஆய்வாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்ற போது, பாட்டாளி மக்கள் கட்சியினர்

காவல் வாகனங்களை கல் வீசி தாக்கிச் சேதப்படுத்தியதோடு, பெண் ஆய்வாளரையும் தாக்க முயன்றுள்ளனர்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் காவல் நிலைய சரகம், அண்ணா மடுவில் உள்ள அந்தியூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. எஸ்.எஸ்.ரமணிதரன் அவர்களது அலுவலகத்தின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து சைக்கிள் டயரில் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து விஷமிகள் உள்ளே வீசியதில், அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள், குளிர் சாதன இயந்திரம், மரப் பொருட்கள் ஆகியவை எரிந்து சேதம் அடைந்துள்ளன. இது தொடர்பாக, 05.05.2013 அன்று வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, அந்தியூர் பாட்டாளி மக்கள் கட்சியின் ஒன்றிய முன்னாள் அமைப்பாளர் திரு. குருசாமி உள்ளிட்ட ஒன்பது பேர் இத்தீ வைப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்டு இருந்தது தெரிய வந்து அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கில் திரு. குருசாமி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

03.05.2013 அன்று இரவு காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் காவல் நிலைய சரகம், பவுஞ்சூரில், செய்யூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.எஸ்.ராஜு அவர்களது வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த இன்னோவா காரின் மீது எரியூட்டப்பட்ட மண்ணெண்ணை நிரப்பிய பாட்டிலை வீசி காரை தீக்கிரையாக்க விஷமிகள் முயன்றுள்ளனர். விஷமிகள் வீசிய பாட்டில் காரின் பின்புறம் பட்டு கீழே விழுந்து உடைந்து நெருப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையில் உள்ளது.

தீ வைப்பு சம்பவங்கள் குறித்துத் தகவல் அறிந்து சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்ற தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் வாகனங்களை மறித்து, அவர்களைப் பணி செய்யவிடாமல் பாட்டாளி மக்கள் கட்சியினர் தடுத்துள்ளனர். இதனால், அத்துறையினர் உடனடியாக சம்பவ இடங்களுக்குச் சென்று தீயணைப்புப் பணிகளில் ஈடுபட இயலாத சூழ்நிலை ஏற்பட்டது.

30.04.2013 அன்று தொடர் முழக்கப் போராட்டம் நடத்த காவல் துறையினர் அனுமதி மறுத்த நிலையில், பாட்டாளி மக்கள்

கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் உள்ளிட்டோர் அன்று சட்டவிரோதமாக தடையை மீறிக்கூடியபோது அவர்களைக் காவல் துறையினர் கைது செய்த காரணத்திற்காக, அக்கட்சியினர் மாநிலத்தில் பல இடங்களில் தொடர்ந்து வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டு, பேருந்துகள் மற்றும் சரக்கு வாகனங்களுக்குத் தீ வைத்தல், பேருந்துகள் மீது கல் வீசி பயணிகளுக்கு காயம் விளைவித்தல், நெடுஞ்சாலைகளில் உள்ள பாலங்களை வெடி பொருட்கள் வைத்துச் சேதப்படுத்துதல், நெடுஞ்சாலைகளில் உள்ள மரங்களை வெட்டிச் சாய்த்து சாலைகளில் தடைகள் ஏற்படுத்துதல், மரங்களை தீ வைத்துக் கொளுத்துதல், ஓடுகிற ரயில் வண்டி மீது தீப் பந்தத்தை எறிதல், அரசு அலுவலகங்கள், அரசுக் கிடங்குகள், நியாய விலைக் கடைகள், பேருந்துப் பணிமனைகள் ஆகிவற்றைத் தீ வைத்து சேதப்படுத்துதல், காவல் துறை வாகனங்களைத் தாக்கியும், தீ வைத்தும் சேதப்படுத்துதல், பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாயைச் சேதப்படுத்துதல், இத்தகைய மக்கள் விரோத செயல்களைத் தடுக்க முயன்ற காவலர்களை அரசுப் பணி செய்யவிடாமல் தடுத்துத் தாக்குதல் போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாட்டாளி மக்கள் கட்சியினர் நிகழ்த்திய இவ்வன்முறை சம்பவங்கள் காரணமாக இரண்டு சரக்கு லாரிகள் மற்றும் 14 பேருந்துகள் உட்பட 16 வாகனங்கள் தீக்கிரை ஆகியுள்ளதுடன், ஒரு அப்பாவி ஓட்டுநர் தீக் காயம் அடைந்து இறந்துள்ளார். மேலும், வாகனங்கள் மீது கல் வீசி தாக்கிய சம்பவங்களில் ஒரு அப்பாவி லாரி ஓட்டுநர் மற்றும் அப்பாவி பயணி ஒருவர் இறந்துள்ளதுடன், 111 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். மேலும், அரசு பேருந்துகள் மற்றும் தனியார் வாகனங்கள் என மொத்தம் 853 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. பாட்டாளி மக்கள் கட்சியினரால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களின் மதிப்பு பல நூறு கோடி ரூபாய் ஆகும். இரண்டு பாலங்கள் வெடி வைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நெடுஞ்சாலைகளில் நிழல் தந்து வந்த 120 மரங்கள் சாலைகளில் வெட்டிச் சாய்க்கப்பட்டும், 45 மரங்கள் எரிக்கப்பட்டும், மொத்தம் 165 மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

ஒரு மரம் வளர பல ஆண்டுகள் பிடிக்கும். வளர்ந்த பின், நூற்றுக் கணக்கான ஆண்டுகள் தனது கிளைகளாலும், இலைகளாலும் நிழலைத் தந்து, காய் – கனிகளை வழங்கி, மழை தந்து, மனித இனத்திற்கு அளப்பரிய தொண்டாற்றுபவை மரங்கள். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மரங்களை வெட்டிச் சாய்ப்பது மனித இனத்தையே வெட்டிச் சாய்ப்பதற்குச் சமமாகும். பசுமைத் தாயகம் என்ற பெயரில் ஒரு புறம் மரங்களை நடுவதாகக் கூறிக் கொண்டு, மறு புறம் மரங்களை வெட்டி சாய்ப்பது தீ வைத்து எரிப்பது என்பது ''படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்'' என்ற பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது.

காவல் துறையினர், கடந்த பல நாட்களாக பாட்டாளி மக்கள் கட்சியினரின் வன்முறைச் செயல்களைத் தடுக்க முழு வீச்சில் தங்களது திறன் முழுவதையும் உபயோகித்து நெடுஞ்சாலைகளில் ரோந்துப் பணிகளை மேற்கொண்டும், முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தும், மேலும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டும் சட்டம் ஒழுங்கைப் பராமரித்து வருகின்றனர். மேலும், வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்து கைது செய்து வருகின்றனர். இதுவரை 5,720 நபர்கள் தடுப்பு நடவடிக்கைக்காக, 1,744 நபர்கள் வன்முறையில் ஈடுபட்டதற்காகவும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 20 நபர்கள் குண்டர் தடுப்புச் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சியினர், கடந்த சில நாட்களாக நிகழ்த்தி வரும் வன்முறைச் செயல்களினால், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் இரவு நேரங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

பகல் நேரங்களைப் பொறுத்த வரையில், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், வேலூர், காஞ்சிபுரம், நாமக்கல், தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், 01.05.2013

அன்று 1,601 தடப் பேருந்துகள் பாதுகாப்பு காரணங்களுக்காக இயக்கப்படவில்லை. பின்னர் அரசு மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக 10.5.2013 முதல் இது 219 ஆக குறைக்கப்பட்டது. இரவு நேரங்களைப் பொறுத்த வரையில், பயணிகளின் பாதுகாப்புக் கருதி நகரப் பேருந்துகள் மாலை 6 மணிக்கு மேலும், புறநகர் பேருந்துகள் இரவு 10 மணிக்கு மேலும் இந்த மாவட்டங்களில் இயக்கப்படுவதில்லை. மொத்தத்தில், 2,267 தடப் பேருந்துகள் இரவு நேரங்களில் இயக்கப்படவில்லை.

அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளினால் தமிழகத்தில் தொழிற்சாலைகளைத் தொடங்க பன்னாட்டு நிறுவனங்கள் போட்டிப் போட்டு வரும் நிலையில், மாநிலத்தின் மீது அவர்கள் வைத்துள்ள நல்ல அபிப்பிராயத்திற்குக் களங்கம் ஏற்படுத்தி, தொழில் முதலீட்டிற்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பாட்டாளி மக்கள் கட்சியினரின் வன்முறை அமைந்துள்ளது. பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கும் வகையிலும், பொதுமக்களை அச்சுறுத்தும் வகையிலும் அமைந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியினரின் வன்முறைகளை காவல் துறை மிகுந்த துணிவுடனும், நெஞ்சுரத்துடனும், பொறுமையுடனும் எதிர்கொண்டு வருகிறது. பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை குறைக்கும் வகையில் காவல் துறை செயல்பட்டு வருகிறது.

சிறையில் இருந்து பிணையில் வெளிவந்த டாக்டர் அன்புமணி ராமதாஸ் பத்திரிகையாளர்கள் இடையே பேசுகையில், பா.ம.க.வினர் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டித்து தொடர்ந்து போராட்டம் நடத்துவோம் என்று கூறியுள்ளார்.

11.05.2013 அன்று பிணையில் விடுவிக்கப்பட்ட டாக்டர் ராமதாஸ் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில், அனுமதி மறுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதை நியாயப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, ‘‘பிரதமர் வீட்டு முன்பும், சோனியா காந்தி வீட்டு முன்பும் அண்மையில்

கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதில் ஒரு அமைச்சரும் தாக்கப்பட்டார். அதற்கு அனுமதி வாங்கவில்லை. அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட்காரர்கள் ரயிலை மறித்தும், சாலைப் போக்குவரத்தை மறித்தும் மறியல் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். அதற்கு அனுமதியா வாங்குகின்றனர்? அவர்களை எல்லாம் அனுமதித்துவிட்டு, இந்த அரசு திட்டமிட்டு என்னைக் கைது செய்து, சிறையில் அடைத்து, பின்னர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினரைத் தூண்டிவிட்டு தமிழ்நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி, இது எல்லாவற்றையும் செய்வது பா.ம.க.வினர் என்று மக்களிடம் பழி கூற திட்டமிட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது ஏன் என்றால் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்கெனவே கம்யூனிஸ்ட்களும், ம.தி.மு.க.வும் அ.தி.மு.க. கூட்டணிக்கு வந்து கொண்டிருக்கின்றனர். மேலும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்த்துக் கொண்டு தலித் ஓட்டுகளையும் பெற்று 40 தொகுதிகளிலும் ஜெயலலிதா வெற்றி பெறலாம் என்று நினைத்திருக்கிறார்.'' என்று எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத விதண்டா வாதத்தினை டாக்டர் ராமதாஸ் முன் வைத்தது அபத்தத்தின் சிகரமாகவே உள்ளது.

அனுமதி வாங்காமல் போராட்டம் நடத்தப்பட்டு ஓர் அமைச்சர் புது டெல்லியில் தாக்கப்பட்டார் என்று சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியினரை டாக்டர் ராமதாஸ் தூண்டி விடுகிறாரா? பத்திரிகையாளர்களிடம் மேலும் கூறுகையில், ''தமிழ்நாட்டில் நடக்கும் கலவரங்கள் அனைத்திற்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழக அரசு, காவல் துறை இவை மூன்றும்தான் காரணம். பா.ம.க. எந்த வன்முறை செயலையும் செய்யாது'' என்று கூறுவதன் மூலம் பா.ம.க.வினர் நிகழ்த்திய வன்முறைகளிலிருந்து தப்பித்துவிடலாம் என்று டாக்டர் ராமதாஸ் நினைக்கிறார். இதைப் போன்று என் மீதும், தமிழக அரசின் மீதும், காவல் துறை மீதும் அவதூறுகளைப் பரப்பி வரும் டாக்டர் ராமதாஸ் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவர் மீது அரசின் சார்பில் அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்படும்.

"சிறையில் இருந்து வெளியே சென்ற உங்கள் தொண்டர்களுக்கு என்ன அறிவுரை சொல்லப் போகிறீர்கள்?" என்று பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, "இது போன்ற அடக்குமுறைகளைக் கண்டு நானும் எனது தொண்டர்களும் சோர்வடைய மாட்டோம். ஆகவே, நீங்கள் எல்லாம் அமைதி காக்க வேண்டும்" என்று சொல்லி உள்ளார் டாக்டர் ராமதாஸ். பெட்ரோல் குண்டுகளை வீசுவதிலும், கல் எறிவதிலும், பொதுச் சொத்துக்களையும், தனியார் சொத்துக்களையும் சேதப்படுத்துவதிலும், அப்பாவிகள் உயிர் இழக்கச் செய்வதிலும் பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்துவதிலும் சோர்வு அடைய மாட்டோம் என்கிறாரா?

டாக்டர் ராமதாஸ் மற்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் "போராட்டம் தொடரும்" என்று சொல்வதன் மூலம் தங்கள் கட்சியினரை மேலும் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபடவே தூண்டி விடுகிறார்கள்.

எனவே தான் டாக்டர் ராமதாஸ் பிணையில் வெளிவந்த பின்பும் பாட்டாளி மக்கள் கட்சியினரின் வன்முறை தொடர்ந்து நடைபெறுகிறது. நேற்றும் பேருந்துகள் மீது கல் வீசி உள்ளனர். வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அரசுப் போக்குவரத்து கழகப் பேருந்துகளின் கண்ணாடிகள் தாக்கப்படுவதால் பேருந்துகளின் முன் கண்ணாடி உடைந்து ஓட்டுனர்களுக்கு காயம் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால் பேருந்து ஓட்டுனர்களுக்குத் தலைகவசம், Helmet வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அனைத்து வகையிலும் பாடுபடக் கூடியதாகவும்,பொதுமக்களின் நலனை முன் வைத்துச் செயல்படக் கூடியதாகவும், மற்ற அமைப்புகளுக்கு முன்னுதாரணமாக விளங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு பொருள் குறித்து எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமெனில், அதனை ஜனநாயக ரீதியாக, அற வழியில் மட்டுமே தெரிவிக்க வேண்டும். எதிர்ப்பை வன்முறை மூலம் தெரிவிப்பது என்பது எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. மேலும், கட்சியினரைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதுடன்,

அவர்களைச் சமுதாயத்தின் முன்னேற்றப் பாதையில் அழைத்து சென்று, சட்ட விரோதச் செயல்கள் எதிலும் ஈடுபடாமல் பார்த்துக் கொள்வது கட்சித் தலைவர்களின் பொறுப்பும், கடமையும் ஆகும். அரசியல் கட்சிகளுக்கு உள்ள இந்தப் பொதுவான இலக்கணங்களுக்கு மாறாக, பாட்டாளி மக்கள் கட்சி கடந்த சில தினங்களாக வன்முறையில் ஈடுபட்டு வருகிறது. பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் ஊறு விளைவித்தல், சட்டம் ஒழுங்குப் பராமரிப்பிற்குக் குந்தகம் விளைவித்தல், அரசு அலுவலர்களைப் பணி செய்ய விடாமல் தடுத்தல் போன்ற சட்ட விரோதச் செயல்களில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஈடுபடுவதை எனது அரசு ஒரு போதும் சகித்துக் கொள்ளாது. வன்முறையில் ஈடுபடுபவர்கள் மற்றும் அவர்களைத் தூண்டுவோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிப்போர் மீது குண்டர் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு கணக்கிடப்பட்டு, அந்த இழப்பை 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டத்தின்படி பாட்டாளி மக்கள் கட்சியினரிடம் இருந்து நஷ்ட ஈடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையிலும், சட்டம் ஒழுங்கைச் சீரழிக்கும் வண்ணமும், வன்முறைச் செயல்களில் எந்தக் கட்சி ஈடுபட்டாலும், அந்தக் கட்சியை தடை செய்ய இந்த அரசு தயங்காது, நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ ✶ ✶

*தமிழ்நாடு அரசின் ஈராண்டுச் சாதனைகளைப் பாராட்டி சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட வாழ்த்துகளுக்கு நன்றி கூறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஏற்புரை – 16.05.2013*



தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டி இழந்த உரிமைகளை மீட்க தொடர்ந்து பாடுபடுவேன்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நமது அரசியல் சட்டம் நிலையானது அல்ல. ஏனென்றால் ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் சட்டத்தைத் திருத்த அந்த மக்களுக்கு எப்போதும் எல்லா உரிமையும் உண்டு" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின்

அமுதமொழிக்கேற்ப, மக்கள் நலன் ஒன்றையே மனதில் நிலை நிறுத்தி, அதற்கேற்றாற்போல் சட்டங்களை இயற்றி, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவரும் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

எனது தலைமையிலான அரசு இந்த ஈராண்டில் நிகழ்த்திய சாதனைகளை, மக்கள்நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களைப் பாராட்டி பல்வேறு சட்டமன்றக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் இங்கே உரையாற்றி இருக்கிறீர்கள்.

இந்த அரசைப் பாராட்ட மனம் இல்லாதவர்கள் வெளியில் இருந்துகொண்டு அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். சிலர் இந்த அரசுக்கு எதிராகப் பொதுக் கூட்டங்களில் பேசுகிறார்கள். இங்கே இந்த அரசின் சாதனைகளைப் போற்றியவர்களுக்கும், வெளியில் இருந்து கொண்டு இந்த அரசைத் தூற்றியவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நலன், தமிழ்நாட்டின் நலன் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு இருப்பவர்கள் இந்த அரசின் திட்டங்களை, சாதனைகளை நிச்சயம் பாராட்டுவார்கள். அந்த அளவுக்கு மக்களுக்காகப் பல்வேறு திட்டங்கள் இந்த அரசால் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னிலை மாநிலமாக விளங்க வேண்டும்; எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்; உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்; ஒதுக்கப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் பொருளாதார முன்னேற்றத்தில் உரிய பங்கினைப் பெற வேண்டும் என்ற வகையில் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அதிக அளவில் நிதி ஒதுக்கீடு

மனிதவள மேம்பாட்டிற்கு, நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமாக விளங்கும் துறைகளான கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற துறைகளுக்கு அதிக நிதியை எனது அரசு ஒதுக்கி இருக்கிறது.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், பலவிதமான உபகரணங்கள், புத்தகப்பை, காலணிகள், சீருடைகள், மடிக் கணினி, மிதி வண்டி, கட்டணமில்லாப் பேருந்து வசதி, மேல்நிலை வகுப்புகளில் இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், கல்வியில் தரத்தை மேம்படுத்த இரண்டே ஆண்டுகளில் 60,000க்கும் மேற்பட்ட ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் நிரப்பப்படுதல், கல்லூரிகளில் விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புதல், புதிய பல்கலைக் கழகங்களை உருவாக்குதல், புதிய பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளை உருவாக்குதல் என கல்வியில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியுள்ளது இந்த அரசு.

இதே போன்று சுகாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், புதிய மருத்துவமனைகளை உருவாக்குதல், நுண் அணுத் தொற்றுநோய் ஆய்வகங்களைத் தோற்றுவித்தல், மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளுக்கென, தனி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு, கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்களை நியமனம் செய்தல், மகப்பேறு நிதி உதவி வழங்குதல், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வண்ணம் விரிவாக்கப்பட்ட முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டம், என மருத்துவத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தியுள்ளது.

மலிவு விலை உணவகங்கள்

ஏழை, எளியோர் நலன் காக்கும் வகையிலும், விலைவாசியைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விலையில்லா அரிசி, மலிவு விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், சர்க்கரை ஆகிய பொருட்களை வழங்கும் சிறப்புத் திட்டம், சென்னை மாநகராட்சியின் சார்பில் மலிவு விலை உணவகங்கள், வெளிச் சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் வண்ணம் 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, சமையல் எரிவாயு மீதான மதிப்புக்

கூட்டு வரி முற்றிலும் நீக்கம் எனப் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

இது மட்டுமல்லாமல், ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில், விலையில்லாக் கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், திறன் வளர் பயிற்சிகள், தொழில் தொடங்க கடன் எனப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

ஏழை, எளிய பெண்களைப் பாதுகாக்கும் வகையில் திருமாங்கல்யத்துடன் கூடிய திருமண உதவித் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் இரட்டிப்பு, தாய்மார்களின் நலன் காக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி, பசுமை வீடுகள் என பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு மானியம்

விவசாயத் துறையைப் பொறுத்த வரையில், இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திடும் வண்ணம் பயிர்க் கடன் வழங்குதல், இந்தியாவிலேயே முதன் முறையாக வறட்சிக்கு நிவாரணம், தானே புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம், உற்பத்தியைப் பெருக்க புதிய உத்திகளைக் கையாளுதல், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை சிறு, குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும் வழங்குதல் என விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்த வரையில், டெல்டா மாவட்டங்களுக்காக 524 கோடியே 25 இலட்சம் ரூபாயும், டெல்டா அல்லாத மாவட்டங்களுக்காக 835 கோடியே 21 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 1,359 கோடியே 46 இலட்சம் ரூபாய் நிதி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்திற்கென வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2,521 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் இதர வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு உள்ளது. ஆக மொத்தம், 3,881 கோடியே 21 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணத்திற்கென அறிவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொழில் துறைக்கு ஊக்கம்

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் வகையில், இந்த இரண்டு ஆண்டுகளில், 26,000 கோடி ரூபாய் முதலீட்டுடன், ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இது மட்டுமல்லாமல், மக்களின் தேவையைக் கேட்டறிந்தும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு தெரிவிக்கும் கோரிக்கைகளின் அடிப்படையிலும், பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் என்னால் நாள்தோறும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பகவான் ராமகிருஷ்ணரின் விளக்கம்

இந்தத் திட்டங்களின் நன்மைகளை நன்கு அறிந்த மாமன்ற உறுப்பினர்கள், இந்தத் திட்டங்களின் பயனாளிகள், தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையை நோக்கிப் போகிறது என்பதை அறிந்த நல் உள்ளம் படைத்த பொதுமக்கள் இந்த அரசை, இந்த அரசின் சாதனைகளை மனமுவந்து பாராட்டுகிறார்கள். இந்த அரசின் திட்டங்கள் தமிழக மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் பயன் அளித்தாலும், தங்களுக்குப் பயன் அளிக்காது, தங்கள் அரசியல் எதிர்காலத்தை நிர்மூலமாக்கிவிடும் என்று நினைப்பவர்கள்தான் இந்த அறிவிப்புகளுக்காக அரசைக் குறை கூறிக்கொண்டு இருக்கிறார்கள், கேலி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இந்த அரசின் திட்டங்கள் எல்லாம் நல்லதா? கெட்டதா? என்பது காண்பவரின் தன்மையைப் பொறுத்தது.

ஒரு முறை "உலகம் நல்லதா, கெட்டதா?" என்ற கேள்வியைத் தன் குருவிடம் கேட்டான் ஒரு சிஷ்யன்.

உடனே, "பூனையின் பல் நல்லதா? கெட்டதா?" என்று திருப்பிக் கேட்டார் குரு.

சிஷ்யன் குழம்பினார்.

கேள்விக்குப் பதில், கேள்வி தான் என்பது ஞானிகள் கையாளும் முறை.

சிஷ்யன் சிந்திக்க ஆரம்பித்தான்.

பின்னர் குரு விளக்கினார்.

பூனைக் குட்டியிடம் போய், தாய்ப் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று கேட்டால், தாய்ப் பூனையின் பல், கருணையின் இருப்பிடம் என்று சொல்லும்.

ஏனென்றால், பூனைக் குட்டி தனது தாயை முற்றிலும் நம்பியிருக்கிறது. பல சமயங்களில், தாய்ப் பூனை, தன் குட்டியைப் பல்லால் கவ்விக் கொண்டு போய் பாதுகாப்பான இடத்தில் வைக்கிறது. அதற்குத் தேவையான உணவினை அளிக்கிறது. எனவே, பூனைக் குட்டிக்குப் பூனையின் பல், கருணையின் இருப்பிடமாக விளங்குகிறது.

அதே பூனையின் பல்லைப் பற்றி ஒரு எலியிடம் கேட்டால் அது என்ன சொல்லும் தெரியுமா? கடவுள், பூனைக்குக் குத்தூசியைப் போன்ற பற்களைப் படைத்திருக்கிறாரே? என்ன கொடுமை? என்று கவலையோடு சொல்லும்.

அது போல, உலகம் நல்லதா, கெட்டதா என்பதும் உலகத்தைக் காண்பவரின் தன்மையைப் பொறுத்தது என்று கூறினார் குரு. சிஷ்யன் சிந்திக்கத் தொடங்கினான்.

இது பகவான் ராமகிருஷ்ணர் சொல்லிய விளக்கம்.

தமிழக மக்களை, தமிழ்நாட்டைத் தாய் போல் அரவணைத்துக் காப்பாற்றும் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தமிழக மக்கள் எல்லோரும் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர், வயிற்றெரிச்சல் காரணமாக,

தங்களுடைய அரசியல் எதிர்காலம் அழிந்துபோய் விடுமே என்று அஞ்சி, இந்த அரசின் மீது சேற்றை வாரி இறைக்கிறார்கள். விதி 110இன் கீழ் அறிவிக்கும் திட்டங்களைப் பற்றி கேள்வி கேட்கிறார்கள், குறை கூறுகிறார்கள்.

2011–2012 மற்றும் 2012–2013 ஆகிய இரண்டாண்டுகளில் சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் 63 அறிக்கைகளை இந்த மாமன்றத்தில் நான் சமர்ப்பித்துள்ளேன். இந்த 63 அறிக்கைகளில் 136 அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. இவற்றில் 127 அறிவிப்புகள் மீது முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் கட்டுமானப் பணிகள் தொடர்புடைய பணிகள் நடைபெற்று வருகின்றன; எஞ்சியவை முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன. அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அரசு கேபிள் டிவி சேவை

30.08.2011 அன்று குறைந்த செலவில் நிறைவான சேவையைத் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக மக்களுக்கு 02.09.2011 முதல் வழங்கும் என்றும், சந்தாதாரர்களிடம் இருந்து 70 ரூபாய் மட்டுமே மாதச் சந்தாத் தொகையாக வசூலிக்கப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன். இதன்படி, 02.09.2011 முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது சேவையைத் தொடங்கி இன்று 61.63 இலட்சம் சந்தாதாரர்கள் அரசு கேபிள் டிவி இணைப்பைப் பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

100 அரசு மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் என்றும், இதற்கென 900 ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்படும் என்றும் 12.08.2011 அன்று நான் அறிவித்தேன். அதன்படி, 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

வன விலங்குகளால் ஏற்படும் உயிர் இழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்படும் என்று 17.08.2011 அன்று நான் அறிவித்ததற்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகைகள் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்குக் கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தும் வகையில் 1,166 சேமிப்புக் கிடங்குகள் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கட்டப்படும் என 25.08.2011 அன்று நான் அறிவித்தேன். இதில் 1,141 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ள 25 கிடங்குகள் இன்னும் ஒரு சில நாட்களில் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற விரிவுபடுத்தப்பட்ட புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என 10.09.2011 அன்று இந்த மாமன்றத்தில் அறிவித்தேன். இது நடைமுறைப்படுத்தப்பட்டு கடந்த நிதி ஆண்டு முடிய 1,508 கோடியே 60 இலட்சம் ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதே போன்று, மானசரோவர் – முக்திநாத் செல்லும் இந்துப் பயணிகளுக்கு அரசு மானியம், வருவாய்த் துறையில் 9 புதிய வட்டங்கள், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சத்துணவு அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களைத் தேர்வு செய்யத் தனி வாரியம், சத்துணவு உண்ணும் பள்ளிக் குழந்தைகளுக்கு 4 இணை சீருடைகள் ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நாள்தோறும் புதிய அறிவிப்புகள்

நாகப்பட்டினம் பகுதியில் மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என 13.09.2011 அன்று நான் அறிவித்ததற்கு இணங்க, தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு, துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பல்கலைக் கழகத்தின் சார்பில் தொடங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகளைக் காணொலி காட்சி மூலம் 20.02.2013 அன்று நான் தொடங்கி வைத்தேன்.

பொது மக்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகள், சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்து,

மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்களை வகுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் நான் நாள்தோறும் புதிய அறிவிப்புகளைத் தொகுத்து, அறிக்கை வெளியிட்டு வருகிறேன். இதற்குப் பொதுமக்கள் இடமிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்கள் இடமிருந்தும் மிகுந்த வரவேற்பும், பாராட்டும் கிடைத்து வருகிறது. இதனைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இவற்றை அறிக்கைகள் வாயிலாகவும், பொதுக் கூட்டங்கள் வாயிலாகவும் விமர்சித்து வருகின்றார்.

சட்டமன்றவிதி110இன்கீழ்நான்வெளியிடும்திட்டங்களுக்கு நிதி ஆதாரம் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் வருமா? அல்லது இதற்கெனத் தனியாக நிதி ஒதுக்கப்படுமா? என்று கேட்டுவிட்டு, ஏகடியமாக "வெறும் அறிவிப்பு" என்பதின் கீழ் வருமா? முதலமைச்சரை இந்த அறிவிப்புக்காகப் பேரவையில் பாராட்டுகிறார்களே அவர்களுக்குத் தான் வெளிச்சம் என்று திரு. கருணாநிதி தனது அறிக்கையில் கூறியுள்ளார். மேலும், கோடிக்கணக்கான ரூபாய்க்கான அறிவிப்புகள் அன்றாடம் முதலமைச்சரால் செய்யப்படுகிறது. இந்தத் திட்டங்களுக்கான அறிவிப்புக்களை எல்லாம் நிதிநிலை அறிக்கையிலேயே ஏன் செய்யவில்லை? துறைக்கான அமைச்சர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்த போது இந்த அறிவிப்புகளை எல்லாம் அமைச்சர்கள் ஏன் செய்யவில்லை? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐந்து முறை முதலமைச்சராகவும், நான்கு முறை நிதி அமைச்சராவும் பதவி வகித்த திரு. கருணாநிதி, திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வழிமுறைகள் தெரியாமலேயே அத்தனை ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாரா? நிதி ஒதுக்கம் பற்றி அறியாமலேயே கோப்புகளில் கையெழுத்து இட்டாரா? அல்லது தற்போது வேண்டுமென்றே இவ்வாறு கேட்கிறாரா? என்பது தெரியவில்லை.

நிதி ஒதுக்கீடு – பணிகள் நிறைவேற்றம்

ஒவ்வொரு நிதியாண்டிலும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது, தொடர் திட்டங்களுக்குத் தேவையான நிதி, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு

செய்யப்படும். இதே போன்று, பகுதி 2 திட்டங்களின் கீழ், புதிதாகச் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். வரவு செலவுத் திட்டத்தில் உள்ள அறிவிப்புகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். செலவு ஏற்படக் கூடும் என்று அனுமானிக்கக் கூடிய இனங்களுக்கு Token Provision ஆக, அடையாள ஒதுக்கீடாக, நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்ட பின் அறிவிக்கப்படும் புதிய திட்டங்களுக்கு, திட்ட நிதி தேவை முழுமையாக வரையறுக்கப்படாத நிலையில் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்ய இயலாது. எனவே தான், நிதி ஒதுக்கம் இல்லாத புதிய திட்டங்களுக்குத் தனியே அரசாணை பிறப்பிக்கப்பட்டு அவை "புதுப் பணிகளாகவும்", "புது துணைப் பணிகளாகவும்" கருதப்பட்டு திருத்திய மதிப்பீட்டில் தேவையான நிதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்படும். அவசரமாக அப்புதிய திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டிய நிலையில் எதிர்பாரா செலவு நிதி அதாவது Contingency Fund லிருந்து நிதி வழங்கப்பட்டு செலவு செய்யப்படும்.

பின்னர், இதற்கான நிதி, முதல் துணை மதிப்பீடு மற்றும் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டப் பேரவையின் அனுமதி பெறப்படும் என்பதைப் பேரவைக்கு வராமல் வெளியே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, சட்டப்பேரவை விதி 110இன் கீழ் நான் அறிவிக்கும் அறிவிப்புகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் எந்த விதமான சந்தேகமும் திரு.மு.கருணாநிதிக்கு எழ வேண்டியதில்லை என்பதால்தான், ஏற்கெனவே கடந்த இரண்டாண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும் நான் சுட்டிக் காட்டியுள்ளேன்.

வெறும் அறிவிப்பு என்பது திரு.கருணாநிதிக்குத் தான் கைவந்த கலை. 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்ற போது, "தமிழகத்தில்

மொத்தம் உள்ள சுமார் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி,நிலமற்ற ஒவ்வொரு ஏழைவிவசாயக் குடும்பத்திற்கும் குறைந்த பட்சம் இரண்டு ஏக்கர் நிலம் வீதம் வழங்குவோம்'' என்ற தேர்தல் வாக்குறுதி தி.மு.க.வினால் அளிக்கப்பட்டது. அரசின் வசம் மூன்றரை இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் மட்டுமே இருக்கின்ற நிலையில், இந்தத் திட்டம் மக்களை ஏமாற்றுகின்ற திட்டம் என்று தேர்தல் பிரச்சாரத்தின் போதே நான் எடுத்துக் கூறினேன். எனினும், 2006ஆம் ஆண்டு ஆளுநர் உரை மற்றும் 2006–2007ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆகியவற்றில் 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்று திமுக அரசால், தெரிவிக்கப்பட்டு இருந்தது.

27.05.2006 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தில் நான் கலந்துகொண்டு, இது குறித்து விரிவாக எடுத்துரைத்து, இல்லாத நிலத்தை எப்படி வழங்கப் போகிறீர்கள் ? எப்படி வழங்க முடியும் ? என்று வினவினேன்.

இதற்குப் பதில் அளித்த திரு. கருணாநிதி, கையகல நிலமாக இருந்தாலும், அது ஏழை விவசாயிகளுக்குத் தான் வழங்கப்படும் என்று கூறினார். கடைசி வரை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பத்திற்கு குறைந்த பட்சம் 2 ஏக்கர் நிலம் வழங்கப்படவில்லை. மாறாக, ஏழைகளிடமும், நில உரிமையாளர்களிடமும் இருந்த நிலங்கள் தி.மு.க.வினரால் அபகரிக்கப்பட்டன. எனவே, வெறும் அறிவிப்பு என்பது திரு. கருணாநிதிக்கு தான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2011ஆம் ஆண்டு வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நான் எடுத்த நடவடிக்கை காரணமாக உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன் என்ற அளவையும் கடந்து சாதனை படைத்தது என்று என்னை நானே பாராட்டிக் கொண்டதாகத் தெரிவித்து, 2011ஆம் ஆண்டு மே மாதம் வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் இருந்தது என்றும், எனவே வேளாண் உற்பத்திப் பெருக்கத்தில் திமுக–விற்கும் பெருமை உண்டு என்றும் திமுக தலைவர் திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார். 2011ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. ஏப்ரல், மே மாதங்களில் என்ன சாகுபடி செய்து,

வேளாண் உற்பத்தியை பெருக்க முடியும்? எனவே, தனக்கு உரிமை இல்லாத பெருமையில் பங்குகேட்கக் கூடாது என திரு. மு.கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எப்போதும் இல்லாத அளவாக 274 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நான் கூறியதாகவும், ஆனால் 2013–2014ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 115 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், கால்நடை மருத்துவமனைகளைச் சீரமைக்க 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது என்றும் கூறி, இதிலே எது உண்மை என்று அரசு தான் விளக்க வேண்டும் என்று கூறியுள்ளார் திரு கருணாநிதி. கடந்த இரண்டாண்டு காலத்தில் எனது தலைமையிலான அரசு, கால்நடைப் பராமரிப்புத் துறை சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 274 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2009–2010 மற்றும் 2010–2011 ஆகிய இரண்டாண்டு திமுக ஆட்சிக் காலத்தில் 12 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

2013–2014ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள். எனவே, இவை இரண்டுமே உண்மைதான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இதேபோன்று, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான சேமிப்புக் கிடங்குகளுக்கு நிதி ஆதாரம் பற்றி திரு. கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார். இத்திட்டங்களுக்காக நபார்டு மூலம் கடன் பெற்று புதிய திட்டப் பணியாகச் செயல்படுத்தப்படும்.

ஐந்து முறை முதலமைச்சராக இருந்த திரு. மு.கருணாநிதி மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்த எண்ணியிருந்தால், அவற்றுக்கான அறிவிப்புகளை சட்டமன்றத்திலே தெரிவித்துச் செயல்படுத்தி இருக்க முடியும். ஆனால், அவ்வாறு மக்கள் நலனுக்கான திட்டங்களைச் செயல்படுத்த அவருக்கு மனம் இல்லை என்பது தான் உண்மை.

புறநானூற்று வரிகள்

எனவே தான், மக்களுக்காக எனது தலைமையிலான அரசு செயல்படுத்த உள்ள திட்டங்களைக் குறை கூறும் முகத்தான், காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இது போன்ற அபத்தமான கேள்விகளை எழுப்பி வருகிறார். "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற புறநானூற்று வரிகளை திரு. கருணாநிதிக்கு இந்தத் தருணத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

சட்டமன்றத்திலே அந்தந்த துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் முடிந்ததும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரே இந்த அறிவிப்புகளை ஏன் செய்யவில்லை என்று திரு. கருணாநிதி கேட்டுள்ளார். இந்தப் புதிய அறிவிப்புகள் அறிவிப்பாகச் செய்யப்படப் வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுபவை அல்ல. மானியக் கோரிக்கை மீதான விவாதங்களின்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும் ஆலோசனைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை நிதித் துறையுடனும், உயர் அதிகாரிகளுடனும், அமைச்சர் பெருமக்களுடனும் கலந்தாலோசித்து அதன் பிறகே அறிவிப்புகள் வெளியிட இயலும். அந்த அடிப்படையில் தான், பல அறிவிப்புகள் இந்தப் பேரவையில் என்னால் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக, பல்வேறு குடிநீர்த் திட்டங்கள், சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கான சலுகைகள், நெசவாளர்களுக்கானப் பசுமை வீடுகள் திட்டம் போன்ற பல்வேறு அறிவிப்புகள் இந்த அடிப்படையில் தான் என்னால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அரசைக் குறை சொல்வதோடு திமுக–வினர் நிறுத்திக் கொள்ளவில்லை. இந்த சட்டப் பேரவையில் அறிவிக்கப்படும் திட்டங்களைப் பாராட்டும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கேலி செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், ஒரு பொதுக் கூட்டத்திலே "இது 110 சர்க்கார். நாள் தவறினாலும் சரி, 110 படிக்காமல் இருப்பதில்லை. அந்த 110 படித்து முடித்தவுடன், சட்டமன்றத்திலே சிறு குறு விவசாயிகள் இருக்காங்க அந்த ஓரத்திலே, ஒரு எம்.எல்.ஏ., இரண்டு எம்.எல்.ஏ., அரை எம்.எல்.ஏ., இவங்க பூராவும் எழுந்துகிறாங்க. உடனே, பாராட்டு பாராட்டு, பாராட்டு." என்று பேசியுள்ளார். இவ்வாறு

பேசியுள்ளதன் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களை மட்டும் திரு. துரைமுருகன் அவமானப்படுத்தவில்லை. சிறு, குறு விவசாயிகளையும் இழுக்காகப் பேசி அவமானப்படுத்தி உள்ளார். தங்களது ஆட்சிக் காலத்தில் மக்களுக்குச் செய்ய இயலாத நன்மையை எல்லாம் எனது தலைமையிலான அரசு செய்து வருகிறதே என்கிற ஆதங்கத்தில் பொறாமையில், கோபத்தில், வெறுப்பில், வார்த்தைகளை உதிர்த்து இருப்பது தி.மு.க.வினர் விரக்தியின் விளிம்பில் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

என் கடன் பணிசெய்து கிடப்பதே

யார் என்ன சொன்னாலும், ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதற்கேற்ப, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கவும், தமிழகத்தின் உரிமைகளை நிலை நாட்டவும், இழந்த உரிமைகளை மீட்கவும் நான் தொடர்ந்து பாடுபடுவேன். இந்த அரசின் சாதனைகளைப் பாராட்டி, வாழ்த்திப் பேசியவர்களின் பொன்மொழிகள் எனக்கு மேலும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்துள்ளன. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் இந்த அரசின் செயல்பாடுகளையும், திட்டங்களையும் பாராட்டி, வாழ்த்திப் பேசியதற்கு எனது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது வாழ்க்கையில், போராட்டங்கள் நிறைந்த வாழ்கையில், எத்தனையோ பட்டங்களையும், விருதுகளையும் பெற்றிருக்கிறேன். ஆனால் கிடைத்தற்கரிய பெரிய பேறாக நான் கருதுவது எல்லோரும் வாய் நிறைய ''அம்மா'' என்று அழைப்பதுதான். வயது என்னவாக இருந்தாலும், அனைவரும், பெரியவர்கள், இளையவர்கள், குழந்தைகள் அனைவருமே என்னை அம்மா என்று அழைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். எல்லோருக்கும் நல்ல அம்மாவாக இருந்து கடமை ஆற்ற வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அம்மாவின் அன்பு தன்னலமற்ற அன்பு, சுயநலம் இல்லாத அன்பு. தமிழக மக்கள் நலனே என் நலன் என்று கூறி, தமிழக மக்களுக்கும், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
சென்னை, தலைமைச் செயலகத்தில் 29.05.2013 அன்று
ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைக்
காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்து ஆற்றிய உரை



ரூ.1,928.80 கோடி செலவில் நிறைவேற்றப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்களே, உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பி. பழனியப்பன் அவர்களே, ஜப்பான் நாட்டின் துணைத் தூதர் Mr. Masanori Nakano அவர்களே, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் முதுநிலைப் பிரதிநிதி Mr. Tomohide Ichiguchi அவர்களே, தலைமைச் செயலாளர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசுச் செயலாளர் திரு. கே. பணீந்திர

ரெட்டி அவர்களே, அரசு அதிகாரிகளே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன் பிறப்புகளே,

எனது அன்பு கலந்த வணக்கத்தை அனைவருக்கும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவுத் திட்டம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இதனை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று துவக்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1986ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 120 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது.

நான் முதன் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 1994ஆம் ஆண்டு 350 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. போதிய நிதி உதவி கிடைக்காததன் காரணமாக, இத்திட்டத்தை அப்போது நிறைவேற்ற இயலவில்லை.

நான் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழக அரசால் திட்ட அறிக்கை திருத்தி அமைக்கப்பட்டு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களில் உள்ள 6,755 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஜப்பானியப் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் 1,005 கோடி ரூபாய் நிதி உதவியுடன் நிறைவேற்றுவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு 18.8.2005 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், நிதி உதவி பெறப்பட்டு 2008ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதற்கு கருநாடக பாரதிய ஜனதா கட்சி எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தியது. இதனைத் தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 27.3.2008 அன்று ஒகேனக்கல்லில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று 26.03.2008 அன்று நான் அறிவித்தேன். இதனைத் தொடர்ந்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கருநாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட மத்திய அரசின் ஒத்துழைப்பைக் கோரும் தீர்மானம் 27.03.2008 மற்றும் 01.04.2008 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், திடீரென்று 05.04.2008 அன்று சட்டப் பேரவைக்குத் தெரிவிக்காமலேயே ''கருநாடகத்தில் தேர்தல் முடியட்டும். பின்னர் நாம் கலந்து பேசி; தேவைப்பட்டால் களம் காண்போம்'' என்று கூறி அந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்தார் அன்றைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி.

கருநாடக சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறுத்தி வைத்த முன்னாள் முதலமைச்சர், திரு. கருணாநிதியின் செயலைத் தட்டிக் கேட்கும் வண்ணம் 08.04.2008 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நான் சென்று, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால், திமுக–வைச் சேர்ந்த, அன்றைய பேரவைத் தலைவர் அதனை அனுமதிக்கவில்லை.

அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து, பேரவைக்கு வெளியே பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த நான், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற துணிவில்லாத முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்றும், அரசியல் உறுதி மிக்க அரசுதான் மக்களுக்குத் தேவை என்றும், அத்தகைய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கும் என்றும் நான் தெரிவித்தேன்.

பின்னர், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2011ஆம் ஆண்டு நான் ஆட்சிப்

பொறுப்பேற்ற சமயத்தில், 50 விழுக்காடு பணிகள் முடிவுற்று இருந்து இருக்க வேண்டும். ஆனால், அன்றைய நிலையில், வெறும் 18 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிவடைந்து இருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தப் பணிகள் முடுக்கி விடப்பட்டதால், தற்போது இந்தத் திட்டம் இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், கிருஷ்ணகிரிக்குக் கடந்த பிப்ரவரி மாதம் சென்ற திரு. மு.க. ஸ்டாலின், 2012 டிசம்பர் மாதம் முடிவடைந்து இருக்க வேண்டிய இந்தத் திட்டம் என்னுடைய அரசால் கிடப்பில் போடப்பட்டதாக பொய்ப் பிரச்சாரம் செய்தார். பின்னர் இந்தத் திட்டம் முடிவடையும் தருவாயில் இருப்பதைத் தெரிந்து கொண்டதாலோ, என்னவோ, இந்தத் திட்டத்தை தன்னிடம் ஒப்படைத்தால் இரு மாதங்களில் திட்டத்தை நிறைவு செய்வதாக இந்த மாதம் தருமபுரிக்குச் சென்ற திரு. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தி.மு.க. ஆட்சியில் இருந்த போது, இரண்டாண்டு காலத்தில் செய்யாததை, ஆட்சியில் இல்லாதபோது இரண்டு மாதத்தில் நிறைவு செய்வதாக திரு. ஸ்டாலின் கூறுவது நகைப்புக்குரியதாக உள்ளது.

1,928 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய இந்தத் திட்டத்தை இன்று தொடங்கி வைத்ததில் நான் பெருமிதம் அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,*
03.06.2013 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில்
ஆற்றிய விழாப் பேருரை



தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்குவதே இலட்சியம்! மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே எனது தலையாய கடமை!

இந்த இனிய விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், அன்புச் சகோதரர் திரு. தனபால் அவர்களே! இந்த இனிய விழாவில் முன்னிலை உரை ஆற்றிய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பழனியப்பன் அவர்களே! மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. தங்கமணி அவர்களே! மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பூனாட்சி அவர்களே! அரசுத் தலைமைக் கொறடா அன்புச் சகோதரர் திரு. மனோகரன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! வரவேற்புரை ஆற்றிய திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர்

திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன் அவர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. கோ. இராதா அவர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் இரத்தத்தின் இரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். சிற்பக் கலையின் சிகரமாகவும்; வழிபாட்டுத் தலங்களின் இருப்பிடமாகவும்; அறிஞர்கள் மற்றும் சான்றோர்களின் பிறப்பிடமாகவும் திகழ்கின்ற திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு உட்பட்ட ஸ்ரீரங்கம் தொகுதியில் நடைபெறும் இந்த இனிய அரசு விழாவிலே பங்கேற்று; என் அன்பிற்குரிய மக்களாகிய உங்களைக் காணவும்; உங்களுடன் சில கருத்துகளைப் பரிமாறவும்; 41 கோடியே 98 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து; 1,752 கோடியே 69 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி; 59 கோடியே 76 இலட்சத்து 93 ஆயிரத்து 140 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 2 பயனாளிகளுக்கு வழங்கவும் இன்று வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அதாவது 1,854 கோடியே 45 இலட்சத்து 20 ஆயிரத்து 140 ரூபாய் மதிப்பிலான பணிகளும், நலத்திட்ட உதவிகளும் இன்று செயல்படுத்தப்படுகின்றன, வழங்கப்படுகின்றன.

தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை உருவாக வேண்டும் என்பதன் அடிப்படையிலும்; மனித வளம் சிறப்புற மேம்பாடு அடைய வேண்டும் என்ற அடிப்படையிலும்; உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலும்; தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் அனைத்துப்பிரிவினரும் உரிய பங்கினை பெறவேண்டும் என்ற அடிப்படையிலும்; பல்வேறு திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகள்; தொழில் துறை; சேவைத் துறை என அனைத்திலும் தமிழகம்

முதல் நிலை அடைவதற்கான புதிய திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது. குழந்தைகள், மாணவ–மாணவியர், தாய்மார்கள், பழங்குடியினர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், இளைஞர்கள், தொழில் முனைவோர், தொழிலாளர்கள், விவசாயிகள், முதியோர் என அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வண்ணம் பல்வேறு புதிய புதிய திட்டங்களை நான் அறிவித்து வருகிறேன்.

விதி 110–இல் மக்கள் நலத் திட்டங்கள்

இது மட்டுமன்றி, பொது மக்களின் வேண்டுகோள், சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் ஆகியவற்றைக் கவனமுடன் பரிசீலித்து சட்டமன்றம் நடைபெறும் போது, சட்டமன்ற விதி 110இன் கீழ் மக்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களை நான் அறிவித்து வருகிறேன். இதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத திமுக தலைவர் திரு. மு. கருணாநிதி, இவை எல்லாம் ''வெறும் அறிவிப்புகள்'' என்று குதர்க்கமாகத் தெரிவித்தார். சட்டமன்றத்திலேயே இதைப் பற்றி நான் விளக்கம் அளித்து, 2011, 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளில் சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் என்னால் செய்யப்பட்ட 136 அறிவிப்புகளில் 127 அறிவிப்புகள் மீது, முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனக் கூறி ஒரு சில உதாரணங்களையும் எடுத்துக் கூறினேன்.

அதன் பிறகு, திமுக தலைவர் திரு.கருணாநிதி தன் நிலையைத் தலை கீழாக மாற்றி, ''முதலமைச்சரோ, அமைச்சரோ பேரவையில் அறிவித்து விட்டால், அவைகளை நடைமுறைப்படுத்தித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால், 'உறுதிமொழிக் குழு' கேள்வி எழுப்பும்'' என்று கூறி, இவை எல்லாம் செயல்படுத்தப்படும் அறிவிப்புகள் தான் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அவரது மைந்தர், திரு.மு.க.ஸ்டாலின் இது 110 ஆட்சி என்று கூறி, இதில் ஐம்பது சதவீதமாவது நிறைவேற்ற முடியுமா என்று கேள்வி கேட்கிறார். இதில் எதையுமே நிறைவேற்ற முடியாது என்று பொருள்படவும் பேசி மக்களை ஏமாற்றி வருகிறார். விதி 110இன் கீழ் வெளியிடப்படும் அறிவிப்புகள் மக்களுக்கு மிகுந்த பயன் அளிப்பதாக இருப்பதால், அதைப் பற்றி முன்னுக்குப் பின் முரணாகப் பேசி இவர்கள் மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

ஒரு மகானின் சமாதி

இதை நினைக்கும்போது எனக்கு ஒரு இரஷ்யக் கதை நினைவிற்கு வருகிறது.

ஒரு பெரிய நினைவு மண்டபம் முன்பு தந்தையும் மகனும் நின்று கொண்டிருந்தார்கள். அந்த வழியாக சென்றவர்கள் அனைவரும் ''அது என்ன மண்டபம்?'' என்று விசாரித்தார்கள். ''இந்த இடத்தில் ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கார். அதை நினைவு மண்டபமாகக் கட்டி இருக்கிறோம். இந்த இடத்தில் உட்கார்ந்தாலே மன நிம்மதி கிடைக்கும்'' என்று சொன்னார்கள். அங்கு ஒரு உண்டியலையும் வைத்தார்கள். இதை உண்மை என்று நம்பி அந்த வழியாக செல்பவர்கள் அங்கு சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு அந்த உண்டியலில் காசையும் போட்டார்கள். பணம் நிறைய சேர்ந்தது. தந்தைக்கும், மகனுக்கும் தகராறு வந்தது.

தந்தை மகனைப் பார்த்து, ''நாம் சண்டை போட்டால் மற்றவர்கள் நம்மைத் தவறாக நினைப்பார்கள். எனவே, நான் உனக்கு ஒரு கழுதையையும், பணத்தையும் தருகிறேன். இதை வைத்து நீ தனியாகப் பிழைத்துக் கொள்'' என்றார்.

மகனும் அதற்குச் சம்மதம் தெரிவித்து, கழுதையை அழைத்துக் கொண்டு அடுத்த ஊருக்கு சென்றான். வழியிலேயே அந்தக் கழுதை இறந்து விட்டது. உடனே மகனுக்கு ஒரு யோசனை பிறந்தது. அந்தக் கழுதையை சாலை ஓரத்தில் புதைத்தான். கையிலே இருந்த பணத்தை வைத்து அந்த இடத்தில் ஒரு சிறிய மண்டபம் கட்டினான். அந்த வழியாக செல்பவர்களிடம் இது ஒரு பெரிய மகானின் சமாதி என்று வழக்கம் போலக் கூறினான். கூட்டம் சேர ஆரம்பித்தது. உண்டியலில் பணமும் சேர்ந்தது. தந்தையை விட மகன் பெரிய ஆளாகி விட்டான்.

மகனின் வளர்ச்சியைக் கேள்விப்பட்ட தந்தை, ஒரு நாள் மகனைப் பார்க்கச் சென்றார். மகனைப் பார்த்து, ''எப்படி இவ்வளவு பணம் சம்பாதித்தாய்?'' என்று வினவினார். அதற்கு மகன், ''எல்லாம் உங்க ஆசீர்வாதம்'' என்று கூறினான்.

'அது எப்படி?' என்று கேட்டார் தந்தை.

அதற்கு மகன், ''நீங்க கொடுத்த கழுதை இறந்து விட்டது.

அதை இங்கு புதைத்து, நீங்க கொடுத்த பணத்தை வைத்து மண்டபம் கட்டினேன். இது ஒரு பெரிய மகானின் சமாதி என்று அனைவரிடமும் கூறினேன். ஒரு உண்டியலையும் வைத்தேன். மக்களும் அதை உண்மை என்று நம்பி காசைக் கொட்ட ஆரம்பித்தார்கள். நான் பணக்காரனாகி விட்டேன்'' என்று தந்தையிடம் கூறினான்.

உடனே தந்தை, ''இப்ப தான்டா நீ என் பிள்ளை'' என்று மகனிடம் சொல்லி மகிழ்ச்சி அடைந்தார்.

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று மகன் தந்தையிடம் வினவினான்.

அதற்குத் தந்தை, ''நீ இப்ப கழுதைக் குட்டியைப் புதைத்து மண்டபம் கட்டியிருக்கே. நம்ம ஊரில் நாம் கட்டி இருக்கிறோமே அந்த மண்டபம் அது இந்தக் கழுதைக் குட்டியோட தாயை புதைத்த இடம். அது ஒரு மகானின் சமாதி என்று அப்பகுதி மக்களிடம் பொய் சொல்லித் தான் காசு சம்பாதித்து கொண்டு இருக்கிறேன்'' என்று மகனிடம் கூறினார்.

இதைப் போலத்தான் இந்த அரசைப்பற்றி, அரசின் திட்டங்களைப் பற்றி, முன்னாள் முதலமைச்சர் திரு.மு.கருணாநிதியும், அவரது மகன் திரு.மு.க.ஸ்டாலினும் மனம் போன போக்கில் அவதூறுகளைப் பேசி வருகின்றனர்.

என் தலையாயக் கடமை

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், நான் முனைப்புடன் செயல்பட்டு வந்தாலும்; என் மீது அளவு கடந்த பாசத்தைப் பொழியும் உங்களைச் சந்திப்பதும்; தேர்தல் நேரத்தில் உங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் தான் என் தலையாயக் கடமை என்று கருதி, நான் தற்போது நான்காவது முறையாக இன்று உங்கள் முன் உரையாற்றுகிறேன்.

19.06.2011 அன்று இங்கு நான் முதன் முதலாக வந்த போது, 190 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினேன். இதனைத் தொடர்ந்து 13.02.2012 அன்று 160 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கும்; 13.09.2012

அன்று 82 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கும் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இதுவரை என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள 433 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களில், 65 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஏற்கெனவே என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நான் இங்கு வந்தபோது, 25 ஏக்கர் பரப்பில் தேசிய சட்டப் பள்ளி அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டினேன். இந்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு, முதல் ஆண்டிற்கான வகுப்புகள் நடப்பு ஆண்டிலேயே தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

41 கோடியே 98 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

காவிரி நதியில் புனித நீராடி, ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமி கோயிலுக்கு நடைப் பயணமாக செல்லும் பக்தர்களின் வசதிக்காக, அம்மா மண்டபம் முதல் ரங்கநாதசுவாமி கோயில் வரை ஒரு கோடி ரூபாய் மதிப்பில் சாலை ஓரத்தில் மேற்கூரையுடன் கூடிய நடைபாதை;

சோமரசம்பேட்டை, மரவனூர், இனாம்குளத்தூர், நாகமங்கலம் மற்றும் அந்தநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சொந்தக் கட்டடங்கள்;

ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய பிரசவ வார்டு; பேறுகால நிலையம்; மற்றும் அறுவை சிகிச்சை அரங்கம்;

1 கோடியே 6 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் அந்தநல்லூர், அளுந்தூர், நவலூர் குட்டப்பட்டு மற்றும் குழுமணி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

ஸ்ரீரங்கம் தாலுக்காவில் அமைந்துள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும்; மகளிர் தோட்டக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும்; ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கம்;

ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகம்;

ஸ்ரீரங்கம், ஷிவானி தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 4 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள 50 தனி விசை மின் திட்டங்கள்; தடுப்பணைகள்; குடிநீர்த் திட்டங்கள்; சிறு மின் விசைத் திட்டம் மற்றும் மேல் நீர்த் தேக்கத் தொட்டி;

கிராமப்புறப் பகுதிகளில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த மேம்படுத்தப்பட்ட ஊரக வெளிப்பணி, அதாவது, Rural Business Process Outsourcing;

புதிய தொழிற்சாலைகள்

ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஊரகப் பகுதிகளில், 26 கோடியே 35 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வசதி; தார்ச் சாலைகள்; சிமெண்ட் சாலைகள்; தெரு விளக்குகள்; மயான மேம்பாட்டுப் பணிகள்; பொது விநியோகக் கடைகள்; பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு; புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் போன்ற 923 முடிவுற்ற பணிகள் உட்பட பல்வேறு திட்டங்கள் என்னால் இன்று மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த இனிய விழாவில் 1,752 கோடியே 69 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றில் முக்கியமான ஒரு சில பணிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகள் எங்கு ஏற்படுத்தப்படுகின்றனவோ; அந்தப் பகுதிகள் விரைந்த வளர்ச்சியை அடைகின்றன. தொழிற்சாலைகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அதனோடு இணைந்த உப தொழில்களைப் பெருக்குவதற்கும்; அந்தப் பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும்; உறுதுணையாக உள்ளன. எனவே, பெரிய தொழிற்சாலைகள் இல்லாத ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும். இதன் அடிப்படையில், மணப்பாறை வட்டத்தில் 1,077 ஏக்கர் நிலப்பரப்பில் 107 கோடி ரூபாய் மதிப்பில் புதியதாகத் தொழில் பூங்கா அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 3,000 கோடி ரூபாய்க்கான மூலதனம் ஈர்க்கப்பட்டு 25,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இங்கு தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கு அவை மேற்கொள்ளும் மூலதனத்தின் அடிப்படையில் 45 இலட்சம் ரூபாய் முதல் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் வரை மூலதன மானியம் வழங்கப்படும். இதுவன்றி, அரசுக்குச் செலுத்திய வரியைத் திருப்பி அளித்தல்; கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய ஊக்க உதவி; தொழிலாளர் பயிற்சிக்கான ஊக்க உதவிகள் ஆகியவையும் வழங்கப்படும். மேலும் தொழில் முனைவோருக்கு வெளிச் சந்தையை விட 3 சதவீதம் குறைந்த வட்டியில் TIIC மூலம் கடன் வழங்க வழிவகை செய்யப்படும்.

ஸ்ரீரங்கம் மற்றும் மணப்பாறை வட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலம் ஒரு மிகப்பெரும் தொழிற்சாலை துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குளித்தலை–மணப்பாறை மாநில நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள மொண்டிப்பட்டி, கே. பெரியப்பட்டி வடக்கு மற்றும் செட்டிசத்திரம் வருவாய் கிராமங்களில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட இரு புறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்குக் காகித அட்டை, அதாவது, Multi Layer double

coated board தயாரிக்கும் ஆலை சுமார் 1,200 கோடி ரூபாய் செலவில் நவீன இயந்திர வசதிகளுடன் நிறுவப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 2,000 பேர்களுக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாகும். மேலும் வறட்சியான இந்தப் பகுதியின் பொருளாதாரம் மேம்படும்.

மேலும், ஸ்ரீரங்கம் வட்டம், சேதுராப்பட்டி கிராமத்தில் 128 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தியத் தகவல் தொழில் நுட்பக் கழகம், 13.20 ஏக்கர் நிலப்பரப்பில் 60 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் அரசுப் பொறியியல் கல்லூரி; 5 ஏக்கர் நிலப்பரப்பில் 37 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றிற்கும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இவையன்றி, அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயிலின் ஏழு பிரகாரங்களில் 5, 6, மற்றும் 7–ஆம் பிரகாரங்களில் சிதிலம் அடைந்துள்ள 5,373 மீட்டர் நீளமுள்ள சுற்றுச் சுவரை 33 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கும் பணி;

ஸ்ரீரங்கம் மேல வாசலில் உள்ள வில்வ தீர்த்தக் குளம் உள்ளிட்ட 6 தீர்த்தக் குளங்களை 73 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பில் புனரமைக்கும் பணி;அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயிலின் நந்தவனத்தைச் சுற்றி 17 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி;

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் 5 கோடி ரூபாய் செலவில் நாலாயிரத் திவ்யப் பிரபந்த பாடல்கள் அடங்கிய கல்வெட்டு நந்தவனம்; 60 இலட்சம் ரூபாய் செலவில் அன்னதான காத்திருப்புக் கூடம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள்;

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 81 கோடி ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டுதல்; 16 கோடியே 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 763 பசுமை வீடுகள்; 6 கோடியே 45 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள 538 தொகுப்பு வீடுகள்;

ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஊரகப் பகுதிகளில் 58 கோடியே 81 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி; தெரு விளக்குகள் அமைத்தல்; சிமெண்ட் சாலைகள் அமைத்தல்; சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படைப் பணிகள் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மேலும், 59 கோடியே 76 இலட்சத்து 93 ஆயிரத்து 140 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 2 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்பட உள்ளன. இவர்களில் 16 பேருக்கான நலத்திட்ட உதவிகளை இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் நலத்திட்ட உதவிகளை இன்றே வழங்குவார்கள்.

நமது இலட்சியம் உயர்வானது! நமது பார்வை தெளிவானது! நமது வெற்றி முடிவானது! உங்கள் ஆதரவோடு நாளைய பாரதம் நமது கையில் என்று கூறி, சீரோடும் சிறப்போடும் நடந்தேறிய இந்த விழாவிற்கு வருகை தந்து, உற்சாகத்தோடு கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி, விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

புதுடெல்லியில் 05.06.2013 அன்று நடைபெற்ற
முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் உரையை*
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்
திரு. கே.பி. முனுசாமி அவர்கள் படித்தார்கள். அதன் தமிழாக்கம்

உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரிப்பதற்கு மாநிலங்களின் ஒருங்கிணைந்த உழைப்பும், மத்திய–மாநில அரசுகளுக்கிடையே புரிதலும் அவசியம்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே,
மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களே,
ஏனைய மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்கள்
மற்றும் ஏனைய அதிகாரிகளே,

உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த, முதலமைச்சர்களின் ஆண்டு மாநாட்டிற்காக இன்று நாம் அனைவரும் இங்குக் கூடியுள்ளோம். ஒவ்வொரு மாநிலத்தின் முதல் மற்றும் முக்கிய பணி யாதெனில், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும், சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதும் குடிமக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதுமே ஆகும். மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு, அந்நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பு, சூழலோடு இணைந்த ஒன்றாகும். அமைதியான சூழ்நிலை இருந்தாலன்றி, மற்றபடி, நாம் சமூகப்பொருளாதார வளர்ச்சியை எய்த இயலாது. இது, நாம் எல்லோரும் நன்கு அறிந்த ஒரு உண்மையாகும். இருப்பினும், இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த இக்கூட்டம், வெறும் ஆண்டுச் சடங்கினைப்போல் மத்திய அரசால் கருதப்படுவது பெரும் ஏமாற்றமும், வருத்தமும்

அளிக்கிறது. இக்கூட்டம், ஒவ்வோராண்டும் ஒரு வாலாயமான கூட்டமாக இருப்பதோடு, பெரும்பாலும் இதில், எந்தவித மாற்றமும் இல்லாத ஆய்வுக்குறிப்புகளைக் கொண்டுள்ளது. இதனால், இக்கூட்டத்தில் தற்போது தோன்றுகின்ற சூழலுக்கேற்ப எந்தவொரு விவாதமும் இருப்பதில்லை. சம்பந்தப்பட்ட பிரச்சினையின் தாக்கத்தை உண்மையிலேயே குறைப்பதற்கு எந்தவொரு தீர்வும் காண்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

நிதியை உயர்த்த வேண்டும்

மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்கள் அனைவரும், காவல்படையை நவீனப்படுத்த வேண்டியது, கடலோர மற்றும் எல்லைப்பாதுகாப்பை வலுப்படுத்துவது, புலனாய்வு முறைகளை வலுப்படுத்துவது, காவலர் பயிற்சி, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது ஆகிய இப்பணிகள் மிகவும் அவசியமானவை என நன்கு அறிந்துள்ளனர். ஆண்டாண்டுதோறும், ஒவ்வொரு முதலமைச்சரும், மாநிலத்தின் காவல்படையை நவீனப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டு அளவைக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்த்துமாறு மத்திய அரசிடம் கூக்குரலிட்டுக் கோரி வருகின்றனர். இருப்பினும், மத்திய அரசிடமிருந்து ஒதுக்கப்படும் நிதி மிக மிகக் குறைவாக இருப்பதுடன் போதிய அளவில் இல்லாமலும், ஆண்டிற்காண்டு குறைந்துகொண்டே வருகிறது. பெருகிக்கொண்டே வரும் குற்றங்கள், குற்றச்செயல்பாடுகள், தீவிரவாதம் மற்றும் தேச மேன்மைக்கு வருகின்ற ஏனைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு, நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தித் தான் முனைப்பான முறையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய சவால்களுக்குப் பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் இதற்கென நிதியை ஒதுக்கீடு செய்கையில், மத்திய அரசு தன்னுடைய பொறுப்பிலிருந்து நழுவாமல் இதற்கான நிதியைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்தி வழங்க வேண்டும்.

பொது அமைதி நிலவும் மாநிலம்

நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரிப்பதற்கு, மாநிலங்களின் ஒருங்கிணைந்த உழைப்பும், மத்திய மாநில

அரசுகளுக்கிடையே புரிதல் நிலையும் இருப்பது அவசியம் என்பதோடு, உள்நாட்டு சச்சரவுகளிலிருந்து தேசத்தைப் பாதுகாப்பதில், மத்திய அரசுடன் மாநிலங்களும் சமபங்கு வகிக்கும் கூட்டாளிகள் என்ற அடிப்படையில் ஒரு நல்லுறவு இருப்பதும் இன்றியமையாததாகும். இருப்பினும், மத்திய அரசின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் அதிகரித்து வருவதோடு, அமைப்புகளுக்கிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும் வகையில் மாநில அரசுகளின் அரசமைப்பின் எல்லை வரையறைகளை ஆக்கிரமிக்கும் வகையில், மத்திய அரசின் நடவடிக்கைகள் ஒருபோக்கான அதிகாரங்களாக உள்ளன. தவறான தகவல் மற்றும் பயனற்ற அணுகுமுறையின் அடிப்படையில் தேசிய தீவிரவாதத் தடுப்பு மையத்தை அமைக்கக் கருதும் மத்திய அரசின் திறனற்ற நடவடிக்கைக்கு இதுவொரு நல்ல உதாரணமாகும். இதுபற்றி பின்னர் என்னுடைய உரையில் தெரிவிக்கிறேன்.

நிகழ்ச்சி நிரலில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, உள்நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முக்கியப் பிரச்சினைகளை நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டம் ஒழுங்குப் பராமரிப்பைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு மாநிலம், சாதிப்பிரச்சினை, இடதுசாரித் தீவிரவாதம், மதவாத வன்முறைகள் ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக விடுபட்டுள்ளது என்பதை நான் இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல்படைக்கு முழுச்சுதந்திரமும், ஐயத்திற்கு இடமற்ற ஆதரவையும் நான் பெருமளவில் அளித்துவருவதே இதற்குக் காரணமாகும். எங்கள் மாநிலம் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஒரு புகலிடமாக விளங்குகின்ற வகையில் பொதுஅமைதி நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சிப்பது மற்றும் சாதி சமுதாயத்தினர் இடையே பதட்டத்தை உருவாக்க முயலும் எவரையும் என்னுடைய அரசு விட்டுவைக்காது என்பதில் தெளிவாக இருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்குக் காவல்படைக்கு நான் தெளிவான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளேன். முக்கியப் பிரச்சினைகளில் மாநிலத்திலுள்ள பொதுமக்களின் நேர்மையான, நியாயமான உணர்வுகளை அரசு நன்கு புரிந்து செயல்படும் திறன்

கொண்டிருப்பதே மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்படுவதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்றாகும்.

வன்முறைச் செயல்பாடுகள் முற்றிலும் இல்லை

மாநிலத்தில் தாக்குதல் நடத்த மாவோயிஸ்ட்டுகள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வந்தபோதிலும் அவர்கள் இங்கு கால்பதிய அனுமதிக்கப்படவில்லை மற்றும் நக்சலைட்டுகள் தங்களுடைய அமைப்பை இங்கு வேரூன்ற முயற்சிப்பதாகக் குறிப்பிட்டு ஒருசில உளவுத்தகவல்கள் வரப்பெற்ற, தமிழ்நாடு, கருநாடகம் மற்றும் கேரள மாநிலங்களுக்கிடையே குறிப்பாக முச்சந்திப்பு பகுதியில் இடைவிடாத கண்காணிப்பிற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோலவே, இடதுசாரித் தீவிரவாதக் கருத்துகளுக்கு ஆதரவளிக்கவும் உறுதியான அமைப்பாக விளங்க முயற்சிக்கும் ஒருசில முன்னிலை அமைப்புகளின் நடவடிக்கைகளையும் ஒடுக்குவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மதவாதிகளின் வன்முறைச் செயல்பாடுகளும் முற்றிலுமாக இல்லை.

இலங்கைக் கடற்படையின் தாக்குதல்

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிகள் பிரச்சினை ஓர் கடும் பிரச்சினையாக இல்லாதபோதிலும், இன்னும் இங்கு 110 முகாம்களில் சுமார் 67,000 இலங்கைத் தமிழ் அகதிகளும், முகாம் அல்லாத வெளியிடங்களில் சுமார் 35,000 இலங்கைத் தமிழர்களும் வசித்துவருகின்றனர். இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்திற்குப் பின்னர், இலங்கை வாழ் தமிழர்கள் அவர்களுடைய சொந்த மண்ணிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பதே அவர்களுடைய பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையை உணர்வுப் பூர்வமாக மத்திய அரசு அணுகாததோடு, இந்தியப் பெருங்கடலில் அன்றாடம் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிக்கச் செல்லும்போது, இலங்கைப் படையினரால் கொலை வெறித்தாக்குதலுக்கு உட்பட்டுவரும் இந்திய மீனவர்களைப் பாதுகாக்கவும் தவறியிருப்பது ஓர் கடும் பிரச்சினையாகும். இந்திய மீனவர்கள் தங்களுடைய மரபு வழியிலான வாழ்வாதாரத்திற்கு ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லுகையில் ஏதும் அறியாத

அத்தகைய தமிழ்நாடு மீனவர்களை எந்தவிதத் தூண்டுதலும் இன்றி கோழைத்தனமாகக் கொலைவெறித் தாக்குதலுக்கு உட்படுத்தி கைது செய்யும் இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து அவர்களைப் பாதுகாக்குமாறு மீண்டும் மீண்டும் நான் பாரதப்பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய தொடர் தாக்குதல்கள், இதுகுறித்து, உரிய நடவடிக்கை எடுக்காத மத்திய அரசின் போக்கு, தமிழ்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த மீனவ சமுதாயத்தினரை எதிர்ப்புக்குரல் எழுப்பச் செய்துள்ளது. இது மாநிலத்தின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சூழலுக்குக் கேடு விளைவிப்பதாக அமையும்.

கச்சத்தீவை மீட்க வேண்டும்

நாடாளுமன்றத்தின் முறையான ஒப்புதல் ஏதுமின்றி, 1974ஆம் ஆண்டில் கச்சத்தீவு அதன் சுற்றுப்பகுதி தொடர்பாக, இலங்கைக்கு நிரந்தரமாக விட்டுக்கொடுத்துள்ள உரிமையை மீட்டுப்பெறுவதன் வாயிலாக இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முயற்சிக்குமாறு மத்திய அரசிற்கு நான் தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறேன்.

எனவே, இது தொடர்பாக, தீவிர நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை மீண்டும் வலியுறுத்த நான் இந்த மாநாட்டைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

1. இலங்கைக் கடற்படையினரால் கொலைவெறித் தாக்குதலுக்கு உட்படும் இந்திய மீனவர்களைப் பாதுகாத்தல்.
2. வெறுப்பூட்டும் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, கச்சத்தீவு மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் உரிமையை மீட்டுப்பெறுதல்
3. அனைத்திந்திய எல்லை வரம்பு உரிமையைத் திரும்பப் பெறுவதற்கு வலியுறுத்தல்.

தொழில்முறை நடவடிக்கையாக, காவல்படைக்குள்ளேயே தனியாக ஒரு புலன்விசாரணைக் குழுவை அமைப்பது தொடர்பாக இந்த நிகழ்ச்சிநிரலில் உள்ள குறிப்பை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனித்தனி பதவித்தரத்திலான

அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் புலன்விசாரணை வாரியத்தின் கீழ், குற்றப்புலனாய்வுத் தனி முகவரமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு தவறான நிவாரணமாகும் மற்றும் இது நோய்த்தொற்றைக் காட்டிலும் மோசமானதாகும்.

புலன் விசாரணைக்குத் தனிக்குழு தேவையில்லை

தமிழ்நாட்டில், உச்சநீதிமன்றத்தின் ஆணைகளுக் கிணங்க ஒவ்வொரு காவல்நிலையத்திலும், தனியாக ஒரு குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், காவல்துறைக் கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் மாநிலக் காவல்துறைத் தலைமையிடங்களில், முறையே, மாவட்ட மற்றும் மாநில அளவில் இரு ஒருங்கிணைப்புப் பிரிவுகள் உள்ளன. தனித்தனிக்குழுக்களை உருவாக்குதன் மூலம் புலன்விசாரணையையும், காவல்துறைப் பணிகளையும் பிரிப்பது நடைமுறைக்கு சாத்தியமோ அல்லது உகந்த நடவடிக்கையோ அல்ல. காவல்துறையிலிருந்து ஓர் தனி அமைப்பாகச் செயல்படும் வகையில் புலன்விசாரணைக்குழு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இரண்டாம் நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்பை இதனால்தான், நான் வெகுவாக மறுப்பு தெரிவிக்கிறேன்.

பொருளாதாரக் குற்றப்பிரிவுகள், சிலைத் திருட்டுப்பிரிவு, வணிகக்குற்றங்கள் புலனாய்வுப்பிரிவு, நில அபகரிப்புத் தடுப்புப்பிரிவு, சைபர்குற்றங்கள் பிரிவு மற்றும் வீடியோத் திருட்டுப்பிரிவு உட்பட பலகுற்றப்புலனாய்வு விசாரணையை மேற்கொள்வதற்கு தமிழ்நாட்டில் தனிப்பட்ட முறையில் பல புலன்விசாரணைப் பிரிவுகள் இருக்கின்றன. முறையான பயிற்சி வாயிலாக மட்டுமே காவல்துறைப் பணியாளர்களின் திறமையை மேம்படுத்த இயலுமே தவிர, செயற்கையான முறையில் இவர்களுடைய செயல்திறனை மேம்படுத்த இயலாது. புலன் விசாரணையில் திறமைமிக்க காவல்துறை அதிகாரிகள் மேற்சொன்ன தனிப்பட்ட ஏதேனும் ஒரு புலன் விசாரணைப்பிரிவில் நன்கு பயிற்சி பெற்றிருந்தால், அவர்களுடைய வாலாயமான பணிக்காலத்தைக் கருத்தில் கொள்ளாமல் தேவையின் அடிப்படையில் அவர்களிடம் புலன் விசாரணைப் பணிகளை ஒப்படைக்கலாம். எனவே, புலன்விசாரணைக்குத் தனிக்குழு ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

மாநில அரசுகளுக்கு அதிகளவு நிதிச்சுமை

சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க முயற்சிக்கும் சமூக விரோதப்புள்ளிகளின் செயல்பாடுகளை சமாளிப்பதற்கு, வலுவான, திறமையான, அனைத்து வசதிகளும் கொண்ட ஒழுங்குமுறையான காவல்படை ஒன்றே ஒரு தீர்வாக அமையும். காவல்படையை நவீனப்படுத்தி அவர்களுடைய பணித்திறனை நிலையுயர்த்த மாநில அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பெரும்தடையாக இருப்பது நிதி இடர்ப்பாடே என்பதை இன்று இங்கு வந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். காவல்துறையை நவீனப்படுத்துவதற்கு வழங்கப்படும் நிதியுதவியின் அளவைக் கணிசமாக அதிகரிக்குமாறு மத்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். 2012–2013ஆம் ஆண்டில் காவல்படை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு அளித்துவரும் நிதி கணிசமாகக் குறைந்துள்ளது என்று சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். காவல்படையை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்கும் பங்குத்தொகை 75 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக குறைந்திருக்கிறது மற்றும் மாநில அரசுகளின் பங்குத்தொகையானது 40 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால் மாநில அரசுகளுக்கு அதிகளவு நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து நான் வருந்துகிறேன். இதற்குமாறான வகையில், காவல்படையின் உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் ஆயுதங்கள் ஆகிய முக்கியத்தேவைகளை மேம்படுத்துவதற்காக கடந்த நிதியாண்டில் என்னுடைய அரசு ரூ.619 கோடி வழங்கியுள்ளது. மாநிலங்களிலுள்ள காவல் படைகளை நவீனப்படுத்துவதற்குரிய மெருகேற்றப்பட்ட தேசியத் திட்டத்தை மத்திய அரசு, கொண்டுவர வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளைக் கணிசமான அளவிற்கு உயர்த்தவேண்டும் என்றும் நான் வலியுறுத்தி தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருநகரங்களில் தனிப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டினர், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தூதரகங்கள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநில மக்கள் கொண்ட வர்த்தகத் தலைநகரங்களாக அல்லது நிதிமையங்களாக அல்லது தகவல் தொழில்நுட்பத்

தலைநகரங்களாக விளங்குகின்றன. இது, தீவிரவாதத் தாக்குதல்களுக்கு இலக்காக்கின்றன. இந்த மாநகரங்களில் ஏனைய மாநகரங்களிலிருந்து மாறுபட்ட வகையில் காவல் துறையினர் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியிருக்கிறது. இதற்கு விரைவான செயல்நடவடிக்கை, உயர் தொழில்நுட்பத் தகவல் தொடர்பு, கண்காணிப்புக் காமிராக்கள் முதலியன தேவைப்படுகின்றன. சுருங்கச் சொல்வதெனில் இந்தச் செலவுகளை எதிர்கொள்ள சிறப்பு மத்திய நிதியுதவி தேவைப்படுகிறது. சென்னைக்கான ரூ.88.47 கோடி மத்திய ஒதுக்கீடானது 60:40 விகிதாசாரத்தில் மாநிலத்தால் பங்களிக்கப்பட வேண்டியுள்ளதால் இரண்டாண்டு காலத்திற்கு ரூ.58.98 கோடி செலவினம் ஏற்பட்டு மாநிலத்தின் ஆதாரங்களுக்குப் பெருஞ்சுமை ஏற்படுத்துகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசியக் கண்ணோட்டத்தில் பெருநகரங்களின் முக்கியத்துவத்தைக் கருதிப்பார்த்து, நவீனமயமாக்கலுக்கான முழுச்செலவையும் மத்திய அரசு ஏற்கவேண்டும் என நாங்கள் கருதுகிறோம்.

குற்ற வழக்குகள் முனைப்புடன் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கும் விஞ்ஞான ரீதியான புலன்விசாரணைக்கும் தடய அறிவியல் திறன்களை மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். தமிழ்நாட்டில், மாநிலம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் ஆய்வுக்கூடங்களுடன் கூடிய வலுவான தடய அறிவியல் நிலையங்கள் உள்ளன. இது தொடர்பாக, புலன் விசாரணை செய்கின்ற அதிகாரிகள் பயன்படுத்தும் வகையில் தேசிய அளவில் கைவிரல்ரேகைகள் குறித்த தரவுத்தளத்தை உருவாக்குவதில் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் என நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதிலும் கைவிரல்ரேகைத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் 1,000 வழக்குகள் மட்டுமே கண்டறியப்படுவது வருத்தமளிக்கிறது. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

டி என் ஏ தரவுத் தளங்கள்

தேசிய ஆன்லைன் கைவிரல்ரேகைகளுக்கான தரவுத் தளத்தை அமைத்ததன் பேரில் நான் மனநிறைவடைகிறேன்.

அனைத்து மாநிலங்களின் காவல்துறையினரிடமும் இது பகிர்ந்து கொள்ளப்படுவதால், குற்றங்களைத் துப்புதுலக்குவதில் முன்னேற்றம் காணப்படும். நவீனமயமாக்கப்பட்ட கைவிரல் ரேகைப் பயன்பாடுகள் குறித்து செயல்திட்ட முறையில் தேசியத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதே இப்போதைய தேவை ஆகும். டிஎன்ஏ (DNA) தரவுத்தளங்களை அமைப்பதற்கு வகை செய்வதற்குத் தேவையான சட்டதிருத்தம் கொண்டு வருவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல் தொழில்நுட்பப் பணிகள் பிரிவு, மாநிலத்திலுள்ள காவல் படையின் தகவல் தொடர்பு/மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பினைக் கவனித்து வருகிறது. தமிழ்நாடு தொழில்நுட்பப் பணிகள் பிரிவு, சேலம் மற்றும் திருநெல்வேலியில் TETRA அடிப்படையிலான நவீன கட்டுப்பாட்டு அறைகளை அமைத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதிக எண்ணிக்கையிலான காவல்நிலையங்கள் ஒரே நேரத்தில் தலைமைக் கணினியுடன் தகவல் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளச் செய்யும் வகையில், மாநிலத் தலைமையிடங்களில் தலைமைக் கணினியின் குத்தகை இணைப்புகள் 2mbps-லிருந்து 34mbpsஆக மேம்படுத்தப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள காவல்துறைப் பிரிவுகளுக்கு வழங்குவதற்கு ரூ.40 இலட்சம் செலவில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துக் காவல் நிலையங்களிலும் முக்கியக் காவல்துறை பிரிவுகளிலும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. குற்றவியல் மற்றும் கணினி வழிக் குற்றங்களைக் கண்டறிவதற்கான ஏற்பாட்டு முறையை ஏற்படுத்துவதற்காக அனைத்துக் காவல் நிலையங்களிலும் தனிப்பிரிவுகளிலும் உட்பட மாநிலம் முழுவதும் கட்டமைப்பு இணைப்பு ஆய்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. CCTNS டிராக்கர் மற்றும் SB CID DSR மென்பொருள் போன்ற இணையம் வழி பயன்பாட்டு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் மற்றும் கணினி வழிக் குற்றங்களைக் கண்டறிவதற்கான ஏற்பாட்டு முறையானது, மாநிலத்திலுள்ள நான்கு முன்னோடி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. மாநிலத்தில் இத்திட்டத்தை முன்னதாகவும் செயல்படுத்தியுள்ளதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குற்றவியல் மற்றும் கணினிவழிக் குற்றங்களைக் கண்டறிவதற்கான ஏற்பாட்டு முறையை நெகிழ்வுத் தன்மையுடன் செயல்படுத்த வேண்டும் என்றும் காவல் நிலையப் பதிவுருக்களையும் நடைமுறைகளையும் நிலைப்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக மத்திய அரசின் முயற்சி வாயிலாக மாநிலங்கள் தங்கள் சொந்த செயல்பாடுகளை மேம்படுத்தி அவர்களின் முன்னுரிமைகளை தீர்மானிப்பதற்கு ஊக்கமளிக்கப்படவேண்டும் என நான் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். தகவல் பரிமாற்றத்திற்கு அடிப்படை வரம்புகளை வகுத்துக் கொள்ளலாம். ஆனால், கணினித் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதை மாநிலங்களின் வசம் ஒப்படைத்துவிட வேண்டும்.

பொது அமைதிக்கு ஏற்படும் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு, எண்ணற்ற சிறப்புப் பிரிவுகளுடன் கூடிய நன்கு செயல்படக்கூடிய உளவுத் தகவல் சேகரிக்கின்ற சாதனங்களைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. தமிழ்நாடு மாநில உளவுத் தகவல் பிரிவானது ஒரு முனைப்பான மற்றும் தொழில் ரீதியான அமைப்பாகும். இந்தப் பிரிவு, தான் பெறுகின்ற தகவல் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, இந்த அமைப்பு வாயிலாக மத்திய முகவரமைப்புகளுடன் தொடர்புடைய தகவலைப் பரிமாறிக் கொள்வதன் பேரில், துணை பன்முக முகவரமைப்பு மையத்தில் பங்கேற்கிறது. மாநில உளவுத்தகவல் பிரிவின் தீவிரவாத எதிர்ப்பு மற்றும் போராளி எதிர்ப்புக் கட்டமைப்பின் தொழில்ரீதியான திறமைகளும் வலிமைகளும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

உளவுத் தகவல் பிரிவின் மேம்பாடு

குற்றவியல் புலன் விசாரணை குறித்த நேர்வில், உளவுத் தகவலுக்குத் தனிப்பிரிவு ஏற்படும் கருத்தை மத்திய அரசு தெரிவித்துள்ளது. அத்தகையதொரு நடவடிக்கையானது பிரிவினைக்கு வழிவகுத்து பயனற்ற விளைவை ஏற்படுத்தும் என நான் கருதுகிறேன். உளவுத் தகவல் சேகரிப்பதானது மிகவும் உணர்வுப் பூர்வமான செயல்பாடு ஆகும். உளவுத்

தகவல் பிரிவிற்குள்ளேயே, நேர்மையைக் கண்காணிப்பதற்கு, தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியிருக்கிறது. முதன்மைப் படைப்பிலிருந்து உளவுத் தகவல் பிரிவுக்கு அனுப்பப்படுகின்ற தற்போதுள்ள ஏற்பாட்டு முறையில் தங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், திறனையும் நேர்மையையும் கண்காணிப்பதற்கான வாய்ப்பையும் பெற்றுத் தந்துள்ளது. இத்தகைய நீக்குப்போக்குத் தன்மை, தனிப்பட்ட பிரிவில் கிடையாது. பணியாளரை ஊக்கப்படுத்துவதற்கு வண்டிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிக்கு வகை செய்வதற்கும் சிறப்புப் படிகள் வழங்குவதற்கும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற கணினிகள், கண்காணிப்புக் காமிராக்கள் முதலியன வாயிலாகத் தொழில்நுட்ப ரீதியான மேம்பாட்டிற்கு, மத்திய அரசு தாராளமாக நிதி வழங்க முன்வருமாயின் உளவுத் தகவல் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான நமது முயற்சிகள் மேலும் வலுப்பெறும். உளவுத் தகவல் பிரிவில் காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் பதவித்தரம் வரையில் சிறப்பாக பணியாற்றுபவர்களுக்கு அடிப்படை ஊதியத்துடன் 10% சிறப்பு ஊதியம் வழங்குவதன் வாயிலாக, நாங்கள் உளவுத் தகவல் பிரிவு பணிக்கு ஊக்கமளித்துள்ளோம். கடந்தாண்டு இந்த மாநாட்டில் மத்திய அரசிடம் நான் முன்வைத்த கோரிக்கை இதுவரையில் ஏற்கப்படவில்லை. மாநில அரசு, உளவுத் தகவல் பிரிவுக்கு வழங்கிய சிறப்பு ஊக்கத் தொகையை மத்திய அரசு ஈடுசெய்ய வேண்டும் என நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய தீவிரவாதத் தடுப்பு மையம் அமைக்கப்படும் என ஒருதலைபட்சமாக அறிவிப்பதற்கு முன்னர் ஒரு மாநில அரசுகளைகூட கலந்தாலோசிக்கவில்லை. இது மத்திய அரசுத் தரப்பில் முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாகும். கைது செய்வதற்கும், பறிமுதல் செய்வதற்கும், அதிகாரங்கள் கொண்ட உளவுத் தகவல் அமைப்பின் அதிகாரிகளால் முற்றிலும் செயல்படுத்தப்படும்மத்தியமுகவரமைப்பின்செயல்பாட்டுத்திறன் குறித்த ஐயப்பாடுகள் எழுகின்றன. அடிப்படை காரணங்களை முற்றிலும் அறியாமல், பெரியண்ணன் மனப்போக்கில், அனைத்து ஜனநாயக நெறிமுறைகளை நையாண்டி செய்தும், ஜனநாயகமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை சதுரங்கப் பலகையின் பகடைக்காய்கள் நிலைக்குத் தரம்

தாழ்த்த முயற்சிக்கப்பட்டதும் உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் செயற்குறிப்பிலிருந்து தெரியவந்தது. உளவுத் தகவல் சேகரிக்கும் பணியானது, மாநிலக் காவல்துறைக் கட்டமைப்புகளைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. தீவிரவாதக் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள குற்ற அமைப்புகள், சீர்குலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள எத்தனிக்திருக்கும் இத்தகைய குற்றச்செயல்களை உள்ளூர் மொழிகளைப் புரிந்துகொள்ள இயலாத யாதொரு பிரத்யேகமான மத்திய முகவரமைப்பில் தடுக்க இயலாது. உளவுத்தகவல் அமைப்புக்கும் R & AW தலைமை இராணுவ உளவுத் தகவல் இயக்ககம் போன்ற மத்திய அரசு முகவரமைப்புகளுக்குமிடையேயான கடும் சச்சரவு குறித்து நன்கு அறியப்பட்டதாகும். செயல்படாத கட்டமைப்பு வாயிலாக மேலும் முரண்பாடுகளை உருவாக்குவதில் பயன் ஏதுமில்லை. யாதொரு தேசிய தீவிரவாதத் தடுப்பு அமைப்பு, மாநிலக் காவல்படையின் உதவியின்றிச் செயல்படுவது உகந்ததன்று.

மாநிலக் காவல்படை உட்பட வேறு எவருமற்ற மத்திய அரசின் இந்த நடவடிக்கை ஏதுமறியா உள்ளூர் பொதுமக்களின் வாழ்விற்கு உத்தரவாதமளிக்குமா என்ற கேள்வியை நான் எழுப்பினேன். இத்தகைய பதிலளிக்கப்படாத வினாக்கள், ஒருதலைப்பட்டசமாக ஏற்படுத்தப்பட்ட, மத்திய அரசால் நிருவகிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்ட கட்டமைப்பின் சூட்சமத்திற்கு சவால்விட்டதுடன், மக்களின் வாழ்வு மற்றும் உரிமைகளில் தடையற்ற அதிகாரங்களுடன்கூடிய அத்தகைய தனிப்பட்ட படையின் திறனுக்கும் சவால்விட்டது. எனது நம்பகமான மற்றும் ஆணித்தரமான வாதங்கள் அடிப்படையிலும், மாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலான முதலமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததன் அடிப்படையிலும் முனைப்பான தீவிரவாதத் தடுப்பு உத்தியை உருவாக்குவதற்காக இந்த விவகாரத்தை மீண்டும் ஆய்வு செய்யும் வரையில் தேசிய தீவிரவாதத் தடுப்பு மையம் ஏற்படுத்துவதை நிறுத்தி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய அரசின் போக்கு

எனது 28.12.2012ஆம் நாளிட்ட கடிதத்தில், மாநிலங்களுடன் கலந்தாலோசிக்காமல் தேசிய தீவிரவாதத் தடுப்பு மையம்

அமைப்பதற்கு சாதகமான நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு தேசிய அளவில் அத்தகைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு யாதொரு கருத்துரு வரைவு தயாரிக்கப்பட்டிருப்பின் அது குறித்து மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்றும் பிரதமரிடம் தெரிவித்திருந்தேன். அனைத்து மாநிலங்களுடன் கலந்தாலோசிக்கும் ஜனநாயக அடிப்படையிலான நடைமுறையை முடித்த பின்னர்தான் அத்தகைய யாதொரு முயற்சியையும் இறுதி செய்ய வேண்டும்.

தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான அத்தகைய தேசிய அமைப்பின் முழு விவரங்கள் இதுவரையில் மாநில அரசுகளிடம் தெரிவிக்கப்படவில்லை. உளவுத் தகவல் அமைப்புக்கு அப்பாற்பட்டு தேசிய தீவிரவாதத் தடுப்பு மையம் தற்போது அமைக்கப்படும் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. மாநில அரசுகளுடன் கூட்டாகவும் ஒளிவுமறைவற்ற முறையில் ஒருங்கிணைந்து செயல்படாமல் தீவிரவாதத் தடுப்பு மையத்தை அமைக்கத் தொடர்ந்து முயற்சித்து வருவது மாநில அரசைக் கூட்டாண்மை அமைப்பாகக் கருதாமல், இத்தகைய உணர்ச்சிபூர்வ விவகாரங்கள் மத்திய அரசு ஏன் இவ்வாறு நடந்துகொள்கிறது என்பதை என்னால் அறிய இயலவில்லை. நம்முடையது போன்ற கூட்டாட்சி ஜனநாயகத்தில், ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளும், மத்திய அரசைப் போன்று நாட்டின் எல்லை மற்றும் பாதுகாப்பு குறித்த அக்கறை காட்டாமல் இருக்கமுடியுமா என நான் வினவுகிறேன். மத்திய அரசு, தீவிரவாதம் என்ற பொதுவான எதிரிக்கு எதிரான நமது போராட்டத்தில் ஐயப்பாடு என்ற விளக்கினை அனைத்து நம்பிக்கை ஒளியேற்றி அனைத்து மாநில அரசுகளையும் அதன் சமமான கூட்டாண்மை அமைப்புகளாகக் கருதி அவர்களின் முனைப்பான ஒத்துழைப்பினை பெற வேண்டும்.

ஒருங்கிணைப்பு மாநில முகவரமைப்பு

05.05.2012 அன்று தேசிய தீவிரவாதத் தடுப்பு மையம் குறித்து விவாதிப்பதற்கான மாநாட்டில் நான் ஏற்கெனவே தெரிவித்ததை வலியுறுத்திக் கூற விழைகிறேன். தீவிரவாதத்தை எதிர்த்து முனைப்புடன் போராட வேண்டுமாயின், மாநிலங்களிலுள்ள

ஒருங்கிணைப்பு அமைப்பு ஒன்று, தீவிரவாதத் தடுப்பு விவகாரங்களில் ஒருங்கிணைப்பு மத்திய முகவரமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும், துரித நடவடிக்கை தீவிரவாதத் தடுப்பு படை உருவாக்கப்பட வேண்டியிருக்கிறது.இது,ஒருங்கிணைப்புமாநிலமுகவரமைப்பின் கீழ் செயல்படும். தகவல் பெறப்பட்டதன் பேரில், ஒருங்கிணைப்பு மாநில முகவரமைப்பானது, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள காவல் படையை முடுக்கிவிடவேண்டும். நவீன ஆயுதங்கள் மற்றும் பயிற்சியுடன் கூடிய அத்தகைய படை ஒன்றை ஏற்படுத்துவதற்கு, மத்திய அரசு, மாநில அரசுகளுக்குத் தாராளமாக நிதியுதவி வழங்கவேண்டும். எனது பார்வையில், தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உரிய உத்தியாக இது இருக்கும். இங்குள்ள முதலமைச்சர்கள் அனைவரும், தீவிரவாதத்திலிருந்து இந்தியாவையும் இந்திய மக்கள் அனைவரையும் முனைப்புடன் பாதுகாக்கும் அத்தகைய நன்கு வடிவமைக்கப்பட்ட, முனைப்பான மற்றும் ஜனநாயகரீதியாக உருவாக்கப்பட்ட நடவடிக்கைக்கு தயக்கமின்றி ஆதரவளிப்பார்கள் என நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு 1,076 கி.மீ நீளம் கடலோர எல்லையைக் கொண்டதாகும். 2005ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே செயலுக்கு வந்துள்ள மத்திய அரசின் கடலோரப் பாதுகாப்புத்திட்டம் நன்கு வரையறுக்கப்படுவதற்கு முன்னர் 1994ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் கடலோரப் பாதுகாப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது. கடல் மார்க்கமாக ஊடுருவதை சாத்தியமானவற்றைத் தடை செய்யவும், கள்ளக்கடத்தல் பொருட்களைக் குறிப்பாக வெடிமருந்து பொருட்கள் கடத்துவதைத் தடை செய்யவும், தமிழ்நாட்டிலுள்ள கடலோரப் பாதுகாப்புக்குழு கடலோரப் பகுதி நெடுக சுற்றுக்காவல் புரிந்து வருகிறது. கடலோரக் கிராமக் கண்காணிப்புக் குழுக்களும் தமிழ்நாட்டின் கடலோரக் காவல்படையின் முக்கியமான ஆக்கக்கூறாக உள்ளது. இதுவரையில், 12 கடலோரக் காவல் நிலையங்கள், 12 புறக்காவல் நிலையங்கள், 40 சோதனைச் சாவடிகளையும் அமைத்துள்ளதுடன், 12 டன் படகுகள் பன்னிரண்டும், 5 டன் படகுகள் பன்னிரண்டும் நாங்கள் கொள்முதல் செய்துள்ளோம். 30 கடலோரக் காவல் நிலையங்கள், 12 படகுத் துறைகள் மற்றும் 12 டன் எடையுள்ள படகுகள் ஆகியவை வாங்குவதற்கு உத்தேசித்துள்ளோம்.

கடலோரப் பகுதிப் பாதுகாப்பு

மத்திய அரசு ஒதுக்கீடு செய்த ரூ.107.36 கோடியில், இதுவரை ரூ.23.79 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. கடல்சார்ந்த காவல் நிலையங்களுக்கு அனைத்துவகை நிலப்பகுதிகளுக்குமான வண்டிகளை வழங்கலாம் என நாங்கள் உத்தேசித்துள்ளோம். இருப்பினும், மத்திய அரசு ஒப்புக்கொள்ளாததால், நாங்களே முன்வந்து, ரூ.1.56 கோடி செலவில் அனைத்து நிலப்பகுதிகளுக்குமான 24 வண்டிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளோம். தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் உள்ள உணர்வுப்பூர்வமான தன்மையைக் கருதிப்பார்க்கையில் தமிழ்நாட்டின் கடலோரப்பகுதிப் பாதுகாப்புக் குழுவுக்காக, அனைத்து வகையான நிலப்பகுதிகளுக்குமான வண்டிகளை அதிக எண்ணிக்கையில் வாங்குவதற்கு ஒப்புதலளிக்க மத்திய அரசு முன்வரவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

தமிழ்நாட்டில் உண்மையான பாலினச் சமநிலை பாதுகாப்பு குறித்த நோக்கத்தின் மீது நான் எப்பொழுதுமே தனிக் கவனமும், தனி ஈடுபாடும் காட்டி வருகிறேன். எனது முயற்சியின் பயனாக, தமிழ்நாடு மகளிருக்கு மிகவும் பாதுகாப்பான மாநிலமாகவும், மகளிருக்கான சட்டத்தின் முன் சமம் என்ற குறிக்கோளை எய்துவதில் இன்று வழிகாட்டியாக உள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனது அரசு 20 ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது 1992ஆம் ஆண்டிலேயே அனைத்து மகளிர் காவல் நிலையத்தை அமைத்து முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். இன்று, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு காவல்துறை உட்கோட்டத்திலும், அனைத்து மகளிர் காவல் நிலையம் என மொத்தம் 200 அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் உள்ளன. நாட்டிலேயே, காவல் படையில் மகளிரின் விகிதாச்சாரம் 16.5 சதவீதம் என உயரளவாக உள்ளது. பாலினக் கொடுமைகள் / பாலின அச்சுறுத்தல்களைப் பொறுத்தவரையில், தண்டனை மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளதோடு, 2002ஆம் ஆண்டில் எனது அரசு தமிழ்நாடு சட்டமன்றத்தில், தமிழ்நாடு மகளிர் கொடுமைக்கெதிரான தடுப்புச் சட்டத்தில் செய்த திருத்தங்களின் கீழ், பாலினக் கொடுமையினால் ஏற்படும் இறப்பு மற்றும்

தற்கொலையைப் பொறுத்தவரையில், களங்கமற்றவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவருக்கு மாற்றப்பட்டது.

மகளிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

பாலினக் கொடுமைகளிலிருந்து மகளிரைப் பாதுகாப்பதற்காக கடும் நடவடிக்கைகள் அடங்கிய புதுமையான "பதின்மூன்று அம்சத்திட்டம்" ஒன்றை நான் சமீபத்தில் அறிவித்துள்ளேன். அதற்கிணங்க,

1. மகளிருக்கெதிரான பாலினக் கொடுமை தொடர்பான வழக்குகள் கடுமையான குற்றங்களாகக் கருதப்படுவதுடன், காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையில் இயன்ற வரையில் அவை மகளிர் காவல்துறைப் பணியாளர்களாலேயே புலனாய்வு மேற்கொள்ளப்படும்.

2. இக்குற்றங்களின் புலனாய்வு குறித்த மறுஆய்வுகள், வழக்குப் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து வழக்கு முடியும் வரையில், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறைத் துணைத் தலைவர்களால் (DIG) முறையாகத் தவறாமல் மேற்கொள்ளப்படும்.

3. புலனாய்வு செய்யப்பட்டுவருகின்ற, நீதிமன்றத்தின் முன் நிலுவையாக உள்ள பாலினக் கொடுமைகள் தொடர்பான இத்தகைய அனைத்து வழக்குகளும் மண்டலக் காவல்துறைத் தலைமை ஆய்வாளரால் (IG) மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு அறிக்கை அளிக்கப்படும்.

4. இத்தகைய குற்றங்களைப் புரிவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி, குண்டர் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்.

5. பாலினக்கொடுமைகள் தொடர்பான குற்றங்கள், மகளிருக்கெதிரான குற்றங்கள் ஆகியவற்றை விரைவாகத் தீர்வு செய்ய வேண்டி அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

6. இந்த நீதிமன்றங்களில் அரசு வழக்குரைஞர்களாகப் பெண் வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுவர்.

7. பெண்களுக்கெதிரான கொடுமைகள் தொடர்பான வழக்குகள் நாள்தோறும் கேட்டு உறுதிசெய்வதற்கும், அவற்றை விரைந்து தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

8. பாலினக் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கும் வகையில் சட்டத்தின் விதிகளில் உரிய திருத்தம் செய்ய வேண்டி மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப்படும்.

9. காவல்துறைப் பயிற்சி நிறுவனங்களில், மகளிர் பாதுகாப்பு சட்ட விதிகள் குறித்தும், பாலினக் குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கான உரிய முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

10. பாலினக் கொடுமைக்கு ஆளான மகளிருக்கான முழு மருத்துவச் செலவையும், தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்வதுடன் அவர்களுடைய மறுவாழ்வுக்குத் தேவையான உதவியையும் வழங்கும்.

11. மகளிருக்காக ஒருமுகப்படுத்தப்பட்ட / ஒரே மாதிரியான தொலைபேசி சேவை ஏற்படுத்தப்படும்.

12. பொதுக் கட்டடங்களில் CCTV – காமிராக்கள் பொருத்துவதை அரசு கட்டாயமாக்கியுள்ளது. மகளிருக்கெதிரான குற்றங்களில் ஈடுபடும் நபர்களை அடையாளம் கண்டறிய இதுவும் உதவியாக இருக்கும்.

13. மகளிர் வழக்கமாகப் பயன்படுத்தும் பொது இடங்களைக் கண்காணிப்பதற்கான, அத்தகைய இடங்களில் சாதாரண உடையணிந்த காவல்துறைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, மகளிருக்கெதிரான கொடுமைகள் கண்டறியப்பட்டு, அதற்குக் காரணமான நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மகளிர் நீதிமன்றங்கள்

மாநிலத்திலுள்ள அனைத்து 32 மாவட்டங்களிலும், 42 மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்துள்ள மாநிலம் அனேகமாக நாட்டிலேயே தமிழ்நாடு மாநிலம் மட்டுமே ஆகும்.

காவல்துறையில், ஒளிவுமறைவற்ற வெளிப்படையான பணிநியமனம், காவல்துறைப் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்குதல், காவல்துறையின் செயல்பாட்டில் எவ்விதத் தடங்கலுமின்றி அனுமதித்தல், உரிய ஆதரவு வழங்குதல் ஆகியவற்றின் மூலம் மட்டுமே, காவல்துறையின் தரத்தை மேம்படுத்த இயலும். இது, சட்டம்–ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைக் கண்டறிந்து தடைசெய்தல் போன்ற காவல் துறையின் முதன்மையான நடவடிக்கைகளில் காவல்துறை முனைப்புடன் கவனம் செலுத்துவதற்கு வகைசெய்யும்.

காவல் துறையின் சீர்திருத்தம் மற்றும் புதுமையான பாதையில் விரைந்து நிலையாக முன்னேறுவதற்கான வகையில் முன்னேறும் மாநிலமாக தமிழ்நாடு உருவாக்கப்பட்டுள்ளது. சிறந்த, உண்மையான, வெளிப்படையான மிகவும் உறுதிவாய்ந்த சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக பணியாளர் நியமனம் செய்யும் முறையைத் தமிழ்நாடு அரசு கொண்டுள்ளது. காவலர் முதல் காவல்துறைத் தலைவர் வரையிலான அனைத்துப் பதவித்தரத்தில் உள்ளவர்களுக்கும் பாலின நிகர்நிலைப் பயிலரங்குகள் போன்ற மாற்று நடத்தை முறைப் பயிற்சிகள், நீடித்த மாற்றம் மற்றும் தாக்கத்திற்கு ஆதாரமாக இருந்து உதவிபுரிகிறது. மாநிலத்தில் உள்ள பயிற்சிக் கட்டமைப்பில், மாநில அளவிலான நவீன / மாதிரிக் காவல் கழகம், மாநிலம் முழுவதுமுள்ள அதிக எண்ணிக்கையிலான தேர்வுப் பள்ளிகளும் அடங்கும்.

சிறப்பான சேவை புரிவதற்காக குழுமதிப்புணர்ச்சி மற்றும் உயர்ந்த கட்டுப்பாட்டமைதியையும் அளிப்பதற்காக, தமிழ்நாட்டில் உள்ள காவல்துறைப் பணியாளர்களுக்குப் பணிபுரிவதற்கேற்ற சிறந்த நிலைமைகள் மற்றும் வீட்டு வசதியை உறுதி செய்வதற்கு நான் பல்வேறு நலத்திட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். காவல்படைப்பணியாளர்களுக்கு,மருத்துவவசதி,காப்புறுதிவசதி, வீட்டுவசதி, உணவக வசதி ஆகியவை வழங்கப்பட்டுள்ளதுடன், போதுமான ஓய்வு, கூடுதலாகப் பணிபுரியும் நாட்களுக்குண்டான படி, முறையான குடியிருப்புகள், ஊர்க்காவல் படைத் தொகுதியினருக்கும் சட்டம் ஒழுங்கு இடையூறு ஏற்படும் காலங்களில் நீண்ட தொலைவில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கும் தங்குமிடவசதிகள் போன்றவற்றின் மூலம் பணிநிலைமைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் பாதுகாப்பு

காவல்துறைக்குப் பிறகு வழக்கு நடைபெறும், தீர்ப்பு வழங்கும் கால அளவில் குற்றவாளிகளைத் தங்கவைப்பதற்காக நீதி நிருவாகம் தொடர்புடைய, நீதிமன்றம், சிறைச்சாலைகள், வழக்கை மேற்கொண்டு நடத்தும் நடைமுறை என நான்கு முதன்மையான நிறுவனங்கள் உள்ளன. 3,000 கைதிகளுக்காக மிகப்பெரிய அளவிலும், மிகவும் பாதுகாப்புடன் கூடிய சிறைச்சாலை வளாகத்தைக் கட்டுவதற்காக 2003ஆம் ஆண்டில் நான் உத்தரவு பிறப்பித்திருந்தேன். எக்ஸ்ரே ஸ்கேனர்கள், நாசவேலைகளுக்கு எதிராக மோப்ப நாய்களைப் பயன்படுத்தி சோதனை மேற்கொள்ளுதல், மிக உயர்ந்த அளவு கண்காணிப்புப்பணி போன்றவற்றால் சிறைச்சாலைகளில் பாதுகாப்பை மேம்படுத்தி, நவீனப்படுத்தியுள்ளோம். சிறைச்சாலைகளுடன் நீதிமன்றத்தை இணைத்து காணொலிக் காட்சி வசதியை 2004ஆம் ஆண்டில் முதன்முதலாக நான் அமைத்தேன். தற்போது இந்த வசதி, மாநிலத்திலுள்ள அனைத்து மத்திய சிறைச்சாலைகள், தனி சிறைச்சாலைகளையும், 45 இடங்களை இணைக்கும் வகையில் 306 நீதிமன்றங்களையும் இணைத்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கைதிகளின் பயணத்திற்கான அவசியத்தைக் குறைப்பது, பாதுகாப்பை அதிகரிப்பது, செலவைக் குறைப்பது ஆகியவற்றிற்கான மாநிலத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகளைக் காணொலிக் காட்சி வசதி கொண்டதாக இணைப்பது எனது அரசின் நோக்கமாகும். கைதிகளின் நலனுக்காகவும், அவர்களுடைய மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியும் பல புதுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இறுதியாக, நவீன இந்திய சமுதாயத்தில், ஒன்றினுள் ஒன்று அடங்கியவாறு கொந்தளிப்பு நிலையும், சகிப்புத்தன்மையற்ற நிலையும் காணக்கூடியதாக உள்ளன. இவை அதிகளவில் சச்சரவுபுரிவோரையும், பகைமையையும், எதிர்ப்புணர்ச்சியையும் கொண்டவர்களை உருவாக்குவதாக அச்சுறுத்துவதுடன், தீவிரவாதத்தின் வெளிப்படையான நடவடிக்கை சுபாவமுள்ளவர்களாகவும் உருவாகக்கூடிய அச்சமடையும் நிலையை ஏற்படுத்துகிறது. இவை, சட்டம் – ஒழுங்கைப் பராமரிக்கும் காவல் படையினருக்குக் கடும் சவாலாக

இருப்பதுடன், மாநிலத்தின் உள் பாதுகாப்புச் சூழலையும் இடைநிலைப்பாடான ஒன்றாக உள்ளது. இத்தகைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் 1,000 நபர்களுக்கு உரிய காவலரின் எண்ணிக்கையைப் பெருமளவிற்கு அதிகரிப்பது மட்டுமின்றி, காவல்படையினரின் சாதனங்கள், இயக்கம், நுணுக்கமான கண்காணிப்புடன் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு உதிரியாக மிக உயர்ந்த தொழில்நுட்பத்துடன் கூடிய ஆயுதங்கள் கொள்முதல் செய்து காவல்படையை நவீனமயமாக்குவதற்கு அதிகளவில் முதலீடு செய்யவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்ட வரையறையின்படி சட்டம், ஒழுங்கு, காவல் ஆகியவற்றைப் பராமரிப்பது மாநில அரசின் பொருண்மைகள் என்பதை மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதும் அவசியம் ஆகும். குறுகிய அரசியல் நோக்கங்களைத் தவிர்த்து மத்திய–மாநில அரசுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைகளில் மாநில அரசை சம அளவுக் கூட்டாளியாக மத்திய அரசு கருத வேண்டும். நமது நாட்டின் ஆட்சிப் பகுதிகளுக்கிடையேயான ஒருமைப்பாடும் நாட்டின் ஒருமைப்பாடும் மிகவும் மதிப்புமிக்கவையாகும். எனவே, குறுகிய கால மாற்று அரசியல் காரணங்கள் கைவிடப்பட வேண்டும். புலனாய்வு, தகவல்கள் மற்றும் ஆதாரங்கள் ஆகியவை மத்திய அரசால், மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் தீவிரவாதம், அடிப்படைவாதம் ஆகியவற்றுக்கெதிராக இணைந்து போர் நடத்தி நாம் வெற்றியினை ஈட்ட இயலும்.

✶ ✶ ✶